மார்ச் [illegible]
ஏப்ரல் [illegible] } 1983

# தமிழரசு

௧

2110N83
N83.3
85341

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி - மாசி 17

-3-1983
காசு

...NER OF TAMILNADU
& HISTORICAL RESEARCH
7 MAR 1983
EGMORE MADRAS-8

423

55





மொரிஷியஸ் நாட்டின் மாண்புமிகு தலைமையமைச்சர் திரு அனிருத் ஜெகநாத் அவர்களை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சென்னை ராஜ் பவனி 11.2.83-ல் சந்தித்தார். மேத ஆளுநர் திரு எஸ்.எல். குரா அவர்களும் உடனிருந்தார்.



சென்னை கலைவாணர் அரங்கத் தில் 11.2.83-ல் நடைபெற்ற 19-வது அனைத்து இந்திய பால் பண்ணைத் தொழில் மாநாட்டில் பால்பண்ணை படிப்பில் முதன்மை ...ச்சி பெற்ற மாணவர் ... ...புமிகு முதல்வர் பரிசு ... வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிட 13.2.83-இல் சென்னை மாந மற்றும் தமிழ்நாடு ஹோட் உரிமையாளர் சங்கத்தின் சார் அதன் தலைவர் திரு புருஷோ தமன் முதல்வர் குழ சத்துணவுத் திட்டத்திற்கு ரூபா 10 இலட்சத்தை நன்கொடை வழங்கினார்.



# பால் வளம் பெருக்கி உடல் நலம் வளர்ப்போம்!

## மாண்புமிகு முதல்வர்

**அனைத்திந்திய பால் பண்ணைத் தொழிலின் 19-வது மாநாட்டை, சென்னையில் 11-2-'83-ல் தொடக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து...**

தேசிய பால் பண்ணைகள் வளர்ச்சி வாரியத் தலைவர் குரியன் அவர்கள் இங்கே பேசும் போது சிரிக்கவும் வைத்தார்; சிந்திக்கவும் வைத்தார். இந்தத் தொழிலில் சிக்கலும் உண்டு; அதே நேரத்தில் அதனைச் சீராகச் செய்ய வேண்டும் என்ற கருத்தையும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டைப் பாராட்டி விட்டு, குஜராத் மாநிலத்துக்கு இணையாக வளர்ச்சி பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். ஒரு மகாத்மாதான் தோன்ற முடியும். அதுவும் குஜராத்தில்தான் தோன்ற முடியும். அவருடைய உன்னதமான திட்டங்களை மறக்க முடியாது. எப்போதும் அவற்றைப் பின்பற்றுபவர்கள், பின்பற்றுபவர்கள்தான். வழிகாட்டிகள் வழிகாட்டிகள்தான்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில், எந்த அளவுக்குக் கடமைகள் ஆற்ற வேண்டும் என்று கருதுகிறோமோ அதற்கான முயற்சிகளில் நாங்கள் இறங்கி இருக்கிறோம். இதில் ஒருபடி. இரண்டு படி என நாங்கள் ஏறி விடவில்லை என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

பால்வளத்தைப் பெருக்கும் அதே நேரத்தில் மக்களுக்கு உடல் நலத்தையும் அளித்துத் தொழில் வளத்தையும் பெருக்குகிறோம். மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி பால் வளத்துறையின் பொறுப்பை ஏற்ற பிறகு தமிழ்நாட்டில் பால் வளத்துறை சீரோடும் சிறப்போடும் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதைச் சொல்வதில் பெருமை அடைகிறேன்.

பால் உற்பத்தியில் எத்தனை லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்த அளவுக்குப் பிரச்சினைகள் - சிக்கல்கள் உருவாகின்றன என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஒரு நிறுவனத்தைத் தொடங்கும்போது அதை எப்படி நடத்துவது என்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் தாண்டித்தான் ஒரு செயலை நாம் வெற்றிகரமாக முடிக்க வேண்டும்.



ஏழை பணக்காரன என்றும், தொழிலாளி முதலாளி என்றும் சொல்வதை - அரசியல்வாதிகள் பயன்படுத்துவதைப் போலப் பயன்படுத்தாமல் ஏழ்மையைப் போக்க - தொழில் வசதிகளைப் பெருக்க - உடல்வளத்தை மேம்படுத்த - வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற வகையில் நாம் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

பாலைக் காப்பது என்றால் அதற்கு என்னென்ன வசதிகள் வேண்டும் என்பதையும் கணக்கிட வேண்டி வருகிறது. பால் கறக்கும் பசுக்களை எத்தனை ஆண்டுக்குக் காப்பாற்றப் போகிறோம் என்று எண்ணிப் பார்த்தால் இதிலும் பிரச்சினை இருக்கிறது என்று தெரிகிறது.

சென்னை நகரில் மாடு வைத்திருப்பவர்கள் மாலை நேரத்தில் வெளியே விட்டு விடுகிறார்கள். அவை எங்கே போகின்றன? போஸ்டர்கள் எங்கே ஒட்டப்பட்டிருக்கின்றனவோ அங்கே போகின்றன! போஸ்டரில் உள்ள பசையிலிருந்து தம் பசியைத் தீர்த்துக் கொண்டு, காலையில் பாலைத் தருகின்றன. இப்படிப்பட்ட மாடுகள் தரும் பாலில் எவ்வளவு சத்து இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாடுகளுக்கு நல்ல தீவனங்கள் தரப்பட்டால்தானே நல்ல சத்துள்ள பால் கிடைக்கும்?

35 லட்சத்திற்குமேல் சென்னை நகரில் மக்கள் வாழ்கிறார்கள். அமுலாயினும், ஆனந்த் ஆயினும் ஆவின்பால் ஆயினும், இந்தியா முழுதும் எல்லாருக்கும் பால் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்ற வேண்டும்.

மொழி பற்றி, ஜாதி பற்றி, எல்லைக் கோடு பற்றிச் சிந்திக்காமல் அனைத்து மக்களும் வாழ—வேலைவாய்ப்புப் பெருக—வேளாண்மைக்கும் இத்துறைக்கும் உள்ள தொடர்பு மேலோங்க இந்தத் தொழிலில் வளத்தை அதிகப்படுத்த இம்மாநாடு வழி வகுக்கும் என நம்புகிறேன்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி — மாசி 17
மலர்: 13 இதழ்: 17
1-3-1983

Verified



# தமிழ்நாட்டில் வறட்சி நிலை

## அரசின் துயர் துடைப்புப் பணிகள்

1982-ஆம் ஆண்டு தொடக்கமே நல்ல முறையில் அமையவில்லை என்று சொல்ல வேண்டும். தென்மேற்கு பருவ மழை ஏறத்தாழ மாநிலம் முழுவதிலுமே பொய்த்து விட்டது. போதிய அளவு மழை பெய்யாததோடு உரிய பருவ காலத்திலும் மழை பெய்யவில்லை. வடகிழக்குப் பருவமழை 1982 அக்டோபர் 18-ஆம் நாள் அளவில் தமிழ்நாட்டில் தொடங்கியது; ஆனால், இம்மழை நீண்ட நாட்கள் நிலைத்திருக்கவில்லை. 1982 நவம்பர் முதல் வாரத்தில் இம்மாநிலத்தில் ஓரளவு மழை பெய்தது. அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அளவு மழை இல்லை. இம்மாநிலத்தில் ஆண்டுதோறும் சராசரி மழையின் அளவு 942.8 மி. மீட்டர் ஆகும். ஆனால்,, 1982-ஆம் ஆண்டில் 670.1 மி. மீட்டர் அளவே மழை பெய்தது. அதாவது, 29 சதவீதம் பற்றாக்குறை இருந்தது. உண்மையான நிலை என்னவென்றால் எல்லா மாவட்டங்களும் முழுமையாகவோ ஓரளவோ வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அடுத்தடுத்து தென்மேற்குப் பருவ மழையும் வடகிழக்குப் பருவ மழையும் சரிவரப் பெய்யாததினால் நிலத்தடி நீர் அளவு பாதிக்கப்பட்டது. பாசனக் கிணறுகளில் நீரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. பாசன ஏரிகளில் நீர் சேரவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இம்மாநிலத்தில் உள்ள பெரிய நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைந்துவிட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 1982-ஆம் ஆண்டில் எந்த மாதத்திலும் நீர் நிரம்பவில்லை. அதில் இப்பொழுது 4—6 டி. எம். சி. அளவே நீர் உள்ளது.

இதன் விளைவாகப் பல்வேறு பயிர்கள் விளையும் பரப்பளவு மிகவும் குறைந்துள்ளது. இதனால் உற்பத்தி கணிசமான அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையும் அது தொடர்பான ஏனைய பணிகளும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதனால் கிராம மக்களிடையே பரவலான வேலை வாய்ப்பு இன்மையும் அதன் காரணமாக விவசாயிகளுக்கு வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளன. சென்னை மாநகர் உட்பட கிராம, நகரப் பகுதிகள் அனைத்தும் வறட்சி நிலையினால் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாக குடிநீர் பற்றாக்குறை கடுமையாக ஏற்பட்டுள்ளது.



வறட்சி நிலைமை இம்மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் நிலவி வருகிறது. அதன் கடுமை இடத்திற்கு இடம் மாறுபடுகிறதே ஒழிய எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலைமை இருந்து வருகிறது. சாதாரணமாக வறட்சியின் பிடியிலிருந்து தஞ்சை மாவட்டம் தப்பித்துக் கொள்ளும். ஆனால் தென்னிந்தியாவின், தானியக் களஞ்சியம் என்றழைக்கப்படும் தஞ்சை மாவட்டமே இந்த ஆண்டு வறட்சியின் பிடியில் அகப்பட்டு தவிப்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும்.

மக்களின் துயர் தீர்க்க அரசு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது, பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு ரூ. 3.16 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. கடற்கரையோரப் பகுதிகளில் உறைக் கிணறுகள், சிறு கிணறுகள் ஆகியவற்றைக் கட்டுவதற்காக ரூ. 10 இலட்சங்கள் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. லாரிகளின் மூலமாக நீர் எடுத்துச் செல்வதற்காக ரூ. 5 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் பெரிய, சிறிய பாசன ஏரிகளை வெட்டவும் புதிய மண் சாலைகளை அமைக்கவும் பணிகள் தொடங்குவதற்காக ரூ. 8 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை பின்வரும் வகையில் மாவட்டங்களிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

| | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| செங்கல்பட்டு | 178 |
| வட ஆர்க்காடு | 171 |
| தென்ஆர்க்காடு | 98 |
| தருமபுரி | 40 |
| சேலம் | 61 |
| பெரியார் | 31 |
| கோயம்புத்தூர் | 31 |
| நீலகிரி | 4 |
| மதுரை | 87 |
| திருச்சிராப்பள்ளி | 102 |
| தஞ்சாவூர் (கழிமுகப் பகுதிகள் அல்லாதவை) | 17 |
| புதுக்கோட்டை | 92.85 |
| இராமநாதபுரம் | 125 |
| திருநெல்வேலி | 33.50 |
| கன்னியாகுமரி | 14 |
| | 1085.35 |
| மாவட்டங்களுக்கு இன்னும் ஒதுக்கப்பட வேண்டிய தொகை | 45.65 |
| மொத்தம் | 1131.00 |

தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க, நகராட்சிகள், பேரூராட்சிகள் ஊராட்சிகளின் குடிநீர் வழங்குதலைப் பணிகளுக்குத் தனியான கம்பி இணைப்புகள் ( Feeder Lines ) அமைப்பதற்காக, ரூ. 1.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வழங்கு- வடிகால் வாரியம், இதுவரை ரூ. 17.50 கோடி செலவில் 7529 துளைக் கிணறுகள் அமைத்துள்ளது. சென்னை மாநகரில் குடிநீர் பற்றாக் குறையைப் போக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு— கழிவுநீர் அகற்று வாரியம் ரூ. 2.03 கோடி செலவிட்டுள்ளது. தவிரவும், சம்பாப் பயிர்களைப் பாதுகாக்கவேண்டி தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளில் 1000 வடி முனைக் குழாய் கிணறுகள் தோண்டுவதற்காக அரசு உழவர்களுக்கு ரூ. 1.50 கோடி கடன் வழங்கியுள்ளது.

இதுவரை, அரசு, வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக, ரூ. 33.84 கோடி வரை செலவிட ஆணைகள் அனுமதி வழங்கியுள்ளது.

நிலவரி, உள்ளூர் தீர்வை, உள்ளூர் தீர்வை மேல்வரி, தண்ணீர் தீர்வை முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும். தேவையெனக் காணுமிடத்து, உள்ளூர் தீர்வை மற்றும் உள்ளூர் தீர்வை மேல்வரி முதலியவற்றையும் தள்ளுபடி செய்ய உள்ளாட்சி மன்றங்களுக்கு அறிவுரை வழங்கப்படும்.

மாவட்ட வாரியான நிலவரம் வருமாறு :—

**செங்கல்பட்டு மாவட்டம்**

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழை அளவு 1211 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில், 812 மி.மீ. மழையே பெய்தது. இம்மாவட்டம் பெரிதும் மழை நீர் பெறும் ஏரிப்பாசனத்தையே நம்பியிருக்கிறது. ஏரிகளில், நீர்மட்டம் 25 முதல் 35 சதவீதம் வரையே இருந்தது. வறட்சி காரணமாக 1974 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 4 இலட்சம் உழவுத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. வரும் மாதங்களில் 1291 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிநீர் பற்றாக்குறையைப் போக்கவும் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவும் அரசு பின்வரும் நிவாரணப் பணிகளுக்கு உத்தரவிட்டுள்ளது :—

(அ) ரூ. 38 இலட்சம் செலவில், பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதலும் லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்குதலும்

(ஆ) 1982-ஆம் ஆண்டில், 642 குழாய் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளது.

(இ) ரூ. 140 இலட்சம் செலவில், உள்ளூர் மக்களுக்கான வேலைவாய்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

திரு எஸ். டி. சோமசுந்தரம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையளவு 971.1 மி.மீ. 1982-ஆம் ஆண்டில், 679.0 மி.மீ. மழையே பெய்துள்ளது. பாலாறும் மற்றும் ஏரிகளும் இம்மாவட்டத்தின் பாசன வாயில்களாகும். மொத்தமுள்ள 2971 ஏரிகளில், 2884 ஏரிகள் முற்றிலும் வறண்டு போய்விட்டன. பாசனக்கிணறுகளிலும் தண்ணீர் வற்றிவிட்டது. வறட்சி நிலைமையினால் 1898 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பருவ மழை தவறியதாலும், நெல் விளைச்சல் குறைந்ததாலும் சுமார் 4 இலட்சம் குடும்பங்கள் அதாவது 50 சதவீத உழவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 30 இலட்சம் செலவில் பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்

(ஆ) ரூ. 140 இலட்சம் செலவில் அவ்வப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

(இ) ரூ. 1 இலட்சம் செலவில் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல்.

(ஈ) 1982-ம் ஆண்டில் 307 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

## தென் ஆர்க்காடு மாவட்டம்

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையின் அளவு 1188.9 மி.மீ. 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 656.9 மி.மீ. இம்மாவட்டம் பாசன வசதிக்கு வெலிங்டன், கோமுகி நதித் திட்டம், மணிமுக்தா நதித் திட்டம் போன்ற நீர்த் தேக்கங்களையும், வீராணம், வீடூர் முதலிய ஏரிகளையும் நம்பியுள்ளது. மாவட்டத்தின் எஞ்சிய பகுதிமழையையே நம்பி உள்ளது. மேற்சொன்ன பாசன வாயில்களில் உள்ள நீர் நிலைமை திருப்திகரமாக இல்லை. மழையினால் நீர் பெறும் 1778 ஏரிகளில் நீர் இல்லை. வறட்சி நிலைமையினால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 1954 ஆகும். எனவே, பயிற்சி பெறாத பெருமளவு உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் கடுமையாக உள்ளது. 4 நகராட்சிகள் 60 பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளிலும் குடிநீர் வாயில்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், வாடகை லாரிகள் மூலம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளது.

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும், அவ்வப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 18 இலட்சம் செலவில் பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தல்.



(ஆ) 1982-ஆம் ஆண்டில், 791 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 80 இலட்சம் செலவில் அவ்வப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

## தருமபுரி மாவட்டம்

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையின் அளவு 843. மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 537.8 மி.மீ. ஆகும். இம்மாவட்டம் முழுவதும் வறட்சிப் பாங்கான பகுதியாகும். கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், சின்னாறு நீர்த் தேக்கம் ஆகியவை தவிர கிணறுகள், ஏரிகள், குளங்கள் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. இந்நீர்த் தேக்கங்கள், ஏரிகள் முதலியவற்றில் உள்ள நீரின் அளவு திருப்திகரமாக இல்லை. வறட்சி நிலையால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 192 ஆகும். சுமார் 2.30 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை அளிக்க வேண்டியுள்ளது. பல குடிநீர்க் கிணறுகள் வறண்டு விட்டன. அவற்றை ஆழப்படுத்த வேண்டியுள்ளது.

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும், அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 20 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்;

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 644 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 20 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பளிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

## சேலம் மாவட்டம்

இம்மாவட்டத்தில் ஆண்டு மழை அளவு 842.4 மி.மீ. 1982-ம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 676. 1 மி.மீ. இம்மாவட்டத்திற்கு இங்குள்ள பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகளிலிருந்தும், மேட்டூர் கால்வாயிலிருந்தும் நீர் வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள 47 பெரிய பாசன ஏரிகளுக்கு நீர் வரப் பெறவில்லை. இந்த ஆண்டில் பாசனத்திற்காக மேட்டூர் கால்வாயிலிருந்து நீர் விடப்படவில்லை. இதனால் 759 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. கணிசமான அளவு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியிருக்கும். மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் பற்றாக் குறை நிலவி வருகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீரின் அளவு குறைவாக இருப்பதால் சேலம் நகரத்திலும் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது.

குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது

(அ) பொது குடிநீர்க் கிணறுகளை ரூ.32 இலட்சம் செலவில் ஆழப்படுத்துதல்

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)

# பிஞ்சுக் குழந்தைகளை வாழவைக்கும் பெருந்திட்டம்



மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்
திரு. இராம. வீரப்பன்

தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்காக சத்துணவுக் கூடம் அமைப்பதற்காக, புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியில் பணிபுரிகின்ற அலுவலர்கள் இணைந்து அச்சக அலுவலர்களும் சேர்ந்து 40,000 ரூபாய் காசோலையை வழங்கியதற்கு நான் தமிழ் மக்களின் சார்பில் இந்த வங்கியின் அலுவலர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த 40 ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவதோடு மாத்திரம் நிறுத்திவிடாமல் சுமார் 5 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை 201 பேர்களுக்கு-விவசாயிகளுக்கு சிறிய விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிற நிகழ்ச்சியையும், ஆதரவற்ற உடல் ஊனமுற்ற பெண்களுக்குக் கறவை மாடு வாங்குவதற்காக நிதி வழங்குகிற நிகழ்ச்சியையும், 12 வயது நிரம்பிய ஒரு சகோதரிக்கு 650 ரூபாய் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் காலுக்கு மருத்துவ வசதி செய்து கொள்வதற்காக உதவித் தொகை வழங்குவதையும் இந்த நிகழ்ச்சியோடு இணைத்து இதிலே கலந்து

இந்த வங்கியைப் பொறுத்தவரை கடன்கள் வழங்குவதிலேயும் முதலிலே யிருக்கிறது. அதைவிட எந்தவிதமான-கடுமையான நடவடிக்கைகளுமில்லாமல் அந்தக் கடனைத் திரும்ப வசூலிப்பதிலும் இந்த வங்கி முன்னணியிலேயிருக்கிறது. புதுக்கோட்டை போன்ற பிற்படுத்தப்பட்ட-பின்தங்கிய மாவட்டங்களில் இத்தகைய பொது நிறுவனங்களைக் கட்டிக்காத்து வளர்த்தால்தான் ஏழை, எளிய நடுத்தர விவசாயி, தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் பொருளாதாரத்தினாலே தாக்கப்படாத ஒரு சூழ்நிலைக்குத் தங்களை உள்ளாக்கிக் கொள்ள முடியுமென்பதை இந்தப் பகுதியிலேயிருக்கிறவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த வங்கியினுடைய வரவு செலவுக் கணக்கு நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. அதிலே கூட இந்த வங்கியின் வைப்புத் தொகையாகப் போடுகிற தொகை கடந்த ஆண்டிலேயே எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒரு

கொள்கின்ற வாய்ப்பை அளித்த இந்த வங்கியின் நிருவாகிகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தச் சத்துணவு வழங்குவதற்கான அந்தக் கட்டடம் அமைப்பதற்கு 40 ஆயிரம் ரூபாய் இங்கே இந்த அலுவலர்கள் அரசுக்கு வழங்குகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அரசின் சார்பிலே இந்த வங்கியின் மூலம் சுமார் 201 பேர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அப்படிக் கடன் வழங்குகிற தொகையிலே மூன்றிலே ஒரு பங்கிலேயிருந்து 25 சதவிகிதம் வரை பல்வேறு வகைகளில் அரசினாலேயே மானியமாகவும் வழங்கப்படுகின்றது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரு இடத்திலே நிகழ்வது ஒரு நல்ல பொருளுள்ளதாக இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தேவையானவர்களுக்கு நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அல்லது கடனை அளித்துக் கொண்டிருக்கின்ற ஒரு அரசு மக்களிடத்திலேயிருந்து நிதியைப் பெற்றுக் கொள்கிற ஒரு திட்டத்தை இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அதற்கு அடிப்படையாக அறிவித்திருக்கின்ற உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாண்டுக் காலத்தினுடைய கணக்கில் 37.66 லட்சமாக இருந்த இந்த வைப்புத் தொகை கடந்த ஆண்டிலே 517 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்கிற ஒரு கணக்கு, எப்படி ஒரு வறட்சியான அல்லது பின்தங்கிய மாவட்டத்திலே நடைபெறக்கூடும் என்கிற ஆச்சரியத்தை மற்றவர்களுக்கு உருவாக்குகிற வகையில் இந்தப்புள்ளி விவரம் நமக்குத் தந்துகொண்டு இருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதனுடைய அடிப்படைதான் ஒரு கூட்டுறவு இயக்கத்தை எந்தப் பகுதி மக்கள் ஒன்றாக இணைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்களோ அதன் மூலம் எவ்வளவு பெரிய நன்மையை அந்தப் பகுதி மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் இந்த வங்கியின் மூலம் மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசு பல்வேறு சலுகைகளை அளித்ததையொட்டி இந்த வங்கி 568 லட்சம் ரூபாயைச் சலுகையாக கடந்த ஆண்டுகளிலே வழங்கியிருக்கிறது. அதனாலே பயன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 1 லட்சத்து 61 ஆயிரத்து 747 பேர். அதிலே ஆதிதிராவிடர்கள் மிகப் பெரிய அளவிலே பங்கு பெற்றிருக்கிறார்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு இதற்கு இந்தக் கிளைகளுக்குப் பல



சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதர் அலுவலகத்தைச் சார்ந்த புதிய துணைத் தூதர் திரு தாமஸ் ஸ்டப்ஸ் அவர்கள் அரசுத் தலைமைச் செயலர் (கூடுதல் பொறுப்பு) திரு கே. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்களை 21-2-'83ல் சந்தித்துப் பேசினார்.

கட்டடங்களை இந்த வங்கி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இதிலே பணியாற்றுகிறவர்களுக்கு 20சதவிகிதம் போனஸ் வழங்குகிறது என்பதோடு இதிலே முதலீடு செய்திருக்கிற பங்குதாரர்களுக்கு சட்டுத் தொகையை வழங்குகின்ற ஒரு சிறப்பு நிலையையும் இந்த வங்கி பெற்றிருக்கிறது என்பதையும், கொடுத்த கடனைத் திருப்பி வாங்கிவிட்ட காரணத்தினாலே மீண்டும் ரிசர்வ் வங்கியில் கடன் வாங்குவதற்கு இந்த வங்கி தகுதியைப் பெற்றிருக்கிறது என்பதையெல்லாம்எண்ணிப் பார்க்கிறபொழுது இநதப் பகுதி மக்கள் மிகச் சிறந்த அடிப்படையைக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையிலே ஏழை, எளிய மக்கள் எந்த வழியிலே நடைபோட வேண்டும் என்பதைப் பற்றி மிகத் தெளிவான அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்று நான் இந்த வங்கி நிர்வாகிகளைப் பாராட்டுவதைவிட இந்த வங்கியோடு தொடர்பு கொண்டிருக்கின்ற ஏழைஎளிய விவசாயிகளைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இதுதான் இன்றைக்கு இந்த நாட்டிலே நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம்.

நாம் இன்றைக்குச் சந்தித்துக் கொண்டிருக்கிற வறட்சி என்பது மிகக் கடுமையான வறட்சி என்பதையும் நீங்கள் மனதிலே வைத்துக் கொண்டாக வேண்டும். தொடர்ந்து இரண்டாண்டுகள் மழை பொய்த்துப்போய் இருக்கிறது. அதன் விளைவாக நிலத்தடி நீரே நமக்குக் கிடைக்கிறதா என்கிற அளவுக்கு இன்றைக்குப் பல இடங்களிலே சங்கடங்கள் தோன்றி இருக்கின்றன. ஆகவே இயற்கையினுடைய ஒரு கடுமையான சோதனையையும் தாங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நாம் இந்த அளவுக்கு மக்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்கிறோம் என்பதை எண்ணி நாம் மனநிறைவு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படித்தான் இங்கே சொல்கிற இந்தக் கணக்கும்-புள்ளி விவரமும் இன்றைக்கு நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த மகிழ்ச்சி கொஞ்சம் சோதனைக்கு ஆட்பட்டாலும்கூட நாம் அதை எப்படியும் அந்தச் சோதனையை வென்று இந்தக் கஷ்டங்களிலே இருந்து மீண்டுவிடுவோம் என்பதிலே நாம் முழு நம்பிக்கையோடு இருக்கிறோம்.

இதிலே உறுப்பினர்களாக-சந்தாதாரர்களாக இருக்கிறவர்களெல்லாம் ஏழை, எளிய நடுத்தர, விவசாயிகள், வியாபாரிகள்; அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துப் போடுகிற பணத்தை அதிலே ஒன்றுமே இல்லாதவர்களுக்குக் கடன் கொடுத்து அவர்களிடத்திலே கொஞ்சம் வட்டியாகப் பெற்று அதிலே நீங்கள் போட்ட பணத்திற்கு வட்டியையும் கொடுத்து உங்களுடைய பங்கு முதலீட்டிற்கு லாபத் தொகையையும் தருகிறது என்கிற நேரத்தில் இதுதான் பொருளாதார அமைப்பு.

இன்றைக்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்கு நான் இங்கே முன்னாலே சொன்னதைப் போல இங்கே நூற்றுக்கணக்கானவர்களுக்கு வழங்குகிற அரசு உங்களிடத்திலே இருந்து இதற்கு நிதி வாங்கிக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தத் திட்டமென்பது சாதாரண திட்டமில்லை. ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் செலவாகிற திட்டம் தான். இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள் உண்மையிலேயே கேட்கிறவர்கள்; உண்மையிலேயே விவரம் தெரியாதவர்கள்.

ஆகவேதான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு சோதனைக்குட்படுத்தினாலும் இந்தத் திட்டத்தை நான் விட்டுவிடுவேன் என்று எதிர்பார்க்காதீர்களென்று அவர்கள் உறுதியோடு இருக்கிறார்கள் என்றால் அவருடைய தனி பலத்தை நம்பி அல்ல, இங்கே இன்றைக்கு இத்தனை அலுவலர்களும் சேர்ந்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு 40 ஆயிரம் ரூபாயை நாங்கள் தருகிறோம் என்று வருகிறார்கள்; இன்றைக்கு அரசினுடைய பல்வேறு துறைகளிலே பணிபுரிகின்றவர்கள் பத்து லட்சம், இருபது லட்சம், முப்பது லட்சம் என்று சேர்த்துத் தங்களுடைய காணிக்கையாகச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையிலேதான் இன்றைக்கு இந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்ற முனைந்திருக்கிறார்கள். இது யாருக்கும் தனிப்பட்ட மனிதனுக்குப்பெருமை சேர்க்கிறதிட்டமல்ல. 75லட்சம்குழந்தைகளை வாழவைக்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தை யாராவது மறுக்க முடியுமா என்றால் மறுக்க முடியாது. பிரதம அமைச்சரே ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இதை எப்படி நடத்துவது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை; உயிர்போய்க் கொண்டிருக்கிறது, காப்பாற்றியாக வேண்டும், அதற்கு இரத்தம் கொடுத்தாக வேண்டுமென்றால் எங்கேயிருந்தாவது இரத்தத்தைக் கொண்டு வந்து கொடுத்துப் பிழைக்க வைக்க வேண்டுமே தவிர, என்னாலே முடியாது, ஆகவே அவன் செத்தான் என்று சொன்னால், அவன் நல்ல வைத்தியனுமல்ல; அது நல்ல ஆஸ்பத்திரியுமல்ல. அதைப் போலத்தான் இன்றைக்கு நாட்டிலே செத்துக் கொண்டிருக்கிற குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு முனைந்திருக்கிறார் முதல்வர். இது எப்படி முடியும் என்று கேட்பதைவிட இதை எப்படி முடிக்க வைப்பது என்று கேட்பதுதான் அறிவாளிகள் - நல்லவர்கள் செய்கிற கடமை.



இன்றைக்கு இங்கே மாநிலப்பள்ளிக் குழந்தைகளுடைய - மாணவர்களுடைய விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதிலே மாணவிகள் 1500 பேருக்கு மேல் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்றைக்கு ஒரு ஆயிரத்து முந்நூறு பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பேர் மாநில அளவிலேயிருந்து வந்து கலந்து கொண்டு உடற் பயிற்சியிலே, விளையாட்டிலே அவர்கள் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களாக, மாணவிகளாக, இளைஞர்களாக வரவேண்டுமானால் இவர்களுடைய அந்த அமைப்பு அந்த இரண்டாவது வயதிலேயிருந்து ஆறாவது வயதிற்குள்ளே அவர்களுக்கெந்த் உணவு தரப்படுகிறதோ அதைவைத்துத்தான் அமைகிறது என்கிறார்கள் உடற்கூறு நிபுணர்கள். ஆறு வயதிலேயிருந்து பன்னிரண்டு வயதிற்குள்ளே அவர்களுக்கு எப்படிப்பட்ட உணவு தரப்படுகிறதோ அதை வைத்துத்தான் அவர்களுடைய மூளை பலமே அமைகிறது என்கிறார்கள். அதற்குப் பிறகு நீங்கள் தங்கமாகக் கொட்டிக் கொடுத்தாலும் சரி, தங்க பஸ்பத்தையே கரைத்துக் கொடுத்தாலும் சரி அவனை மாற்றவும் முடியாது; வேறு வளர்ச்சி அடையச் செய்யவும் முடியாது. பிறக்கிற குழந்தைக்கு 2 வயது வரை மூளைபலம் உருவாகிறது; அந்த 2 வயதிற்குள்ளேயிருந்து 6 வயதிற்குள்ளேதான் அந்த உடலுக்கான வலிவுகளே அடிப்படையில் சேருகிறது. 6 வயதிலேயிருந்து 12 வயதிற்குள்ளேதான் அந்த மூளை வலுவடைகிறது. இதற்குள்ளே அந்தக் குழந்தையை ஒரு வலுவுள்ள குழந்தையாக-நல்ல மூளை பலமுள்ள குழந்தையாக மாற்றவில்லையானால் இங்கே துரதிர்ஷ்டத்தோடு-இங்கே நாம் உதவி செய்வதற்காக ஒரு குழந்தை வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறதே, இப்படித்தான் நாம் பிறக்கிற குழந்தைகளையும் மாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்—தண்டனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று பொருள். அவர்களைச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம் என்று பொருள். இன்னும் ஒரு துரதிர்ஷ்டமான கணக்கு, பத்துக் குழந்தைகள் பிறந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே ஆறு குழந்தைகள் செத்துக் கொண்டிருக்கிற நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே பிறக்கிற குழந்தைகளை வாழவைப்பதற்கு ஒரு திட்டம்.

இந்தத் திட்டம் இந்த நாட்டிலே ஏழை எளிய மக்களுடைய குழந்தைகளை வாழவைக்கிற திட்டம். ஆகவே இந்தத் திட்டம் ஒரு தனிப்பட்ட மனிதருக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமல்ல. அல்லது ஒரு பெயருக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமல்ல. எதிர்காலச் சந்ததிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற திட்டத்தை இன்றைக்கு எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்று கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு மாநிலமும் யோசித்துக்கொண்டிருக்கிறது.

சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக்கு சென்னையில் 20 கிளைகள் இருக்கின்றன. மேலும் 30 கிளைகள் இரண்டு மாதத்திற்கு ஒன்று வீதம் திறக்கப் படும்.

தமிழ்நாடுதான் அதிக அளவில் கூட்டுறவுத் துறை மூலம் நியாயவிலைக் கடைகளைச் செயல்படுத்துகின்றது என்று மைய அரசு கூறியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு நாட்டு மக்கள் தம்முடைய முழு ஆதரவையும் அளிக்க முன்வந்திருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் சொன்னார்கள் ''பிச்சை எடுத்தாலும் நான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவேன்'' என்று, பிச்சை எடுப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதற்காகச் சொல்லப்பட்ட உதாரணம் இது.

2 நாள் பட்டினி கிடந்த அனுபவத்தை மூன்று வயதிலே, நான்கு வயதிலே அனுபவித்தவர் இன்றைக்கு முதலமைச்சராக வந்திருக்கிற காரணத்தினாலே ஏழைக் குழந்தையினுடைய வறுமை கொடிது, வறுமைகொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை என்று ஔவையார் பாடிய அந்த அனுபவத்திலே பார்த்தவர் முதலமைச்சராக வந்திருக்கிறார். சீமான் வீட்டிலே பிறந்த கோடீஸ்வரனாக இருந்தால், பட்டு மெத்தையிலே வளர்ந்த குழந்தையாக இருந்தால், வெள்ளிக் கிண்ணத்திலே பால் குடித்த குழந்தையாக இருந்தால் பசியைப் பற்றித் தெரியாமல் இருந்திருக்கலாம். பசியோடு -வறுமையோடு- இளமையிலேயே போராடிய காரணத்தினாலேயே அந்த வறுமையை-பசியை உணர்ந்தவர்-அப்படிக் குழந்தைகளுக்கு இந்த நாட்டிலே வரக்கூடாது என்பதற்கு இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்தத் திட்டத்தை ஒழித்து விடலாம், தடுத்து விடலாம் என்று யாராவது நினைத்தால் அவர்கள் தோல்வி அடைந்து விடுவார்கள். அதற்குச் சான்றுதான் இங்கே இந்த அலுவலர்களெல்லாம் இன்றைக்குச் சேர்ந்து 40 ஆயிரம் ரூபாயை எடுத்துத் தந்திருக்கிறார்கள்-வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்த நாட்டின் ஏழைக் குழந்தைகளின் சார்பிலே வணக்கத்தைத் தெரிவித்து இங்கே இன்றைக்கு உதவிகளைப் பெறுகின்றவர்களையெல்லாம் நீங்கள் எவ்வளவு கஷ்டங்கள் நமக்கு வந்தாலும் அந்தக் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்கிற மனத்திண்மையோடு பணியாற்ற வேண்டும்; காரியமாற்ற வேண்டும்; நாம் எப்பாடு பட்டாகிலும் இந்த மாநிலத்து மக்களைத் தொல்லைக்கு உட்படுத்த விடமாட்டோம் அல்லது மிகுந்த கஷ்டங்களுக்கு ஆட்படுத்த விடமாட்டோம். அந்த அளவிற்கு நாம் உறுதி பூண்டு நம்முடைய முயற்சிகளை மேற்கொள்வோம்!

(22.1.83ல் புதுக்கோட்டைமத்திய கூட்டுறவு வங்கி மற்றும் வங்கியுடன் இணைந்த கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய நிதிஅளிப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...)




# கூட்டுறவு என்னும் ஒளிவிளக்கு!

மாண்புமிகு கூட்டுறவு மற்றும்
சட்டத்துறை அமைச்சர்

திரு.சி.பொன்னையன்

உழவர் பெருமக்கள், எல்லாம், இந்த உழவர் திருநாளை மிக மகிழ்ச்சியோடும், நன்றிப் பெருக்கோடும் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரம் உயர, குறிப்பாக, நலிந்த பிரிவினர் நல்வாழ்வு பெற - தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் ஆற்றி வருகின்ற சீரிய பணிகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கூட்டுறவு எண்ணம் உலக அரங்கில் அரும்புவிட்டு ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. நமது நாட்டில் இவ்வியக்கம் தோன்றி ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. கூட்டுறவு இயக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு அடிப்படை நோக்கத்தில் உருவாகியிருந்தாலும், நமது நாட்டைப் பொறுத்தவரையில் கூட்டுறவு இயக்கம் உழவர்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாகி இருக்கிறது.

உழவர் பெருமக்களின் அடிப்படைத் தேவைகளை மட்டும் துவக்க காலத்தில், கவனிக்க முற்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள், இன்று உழவர்களுக்கு எல்லாவிதமான பணிகளையும் வழங்குகின்ற சேவை நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. உழவர்களுக்கு உதவுவதற்காக இந்தப் பணியில் சுமார் 4700 வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராம மட்டத்தில், குறுகிய கால மத்தியக் காலக் கடன்களை உழவர் பெருமக்களுக்கு வழங்கி வருகின்றன.

1981-82-ல் விவசாயத்திற்காகக் குறுகிய காலக் கடன் 72 கோடியும், நடப்பு ஆண்டில் 82 கோடியும் வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 100 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதைப் போலவே மத்திய காலக் கடன் வரும் ஆண்டில் 12 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களுக்குப் பயிர் செய்வதற்குக் கடன் தருவதோடு மட்டுமல்லாமல், உரம், பூச்சி மருந்து, உழவுக் கருவிகள், விதைகள் மற்றும் வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான இடுபொருள்களையும் கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் உள்ள மொத்த விவசாயக் குடும்பங்களில் 70 சதவிகித வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் சேர்ந்து பயன்பெற்று வருகின்றன. குறைந்த, நில உடைமைகள் உள்ள சிறிய, மிகச் சிறிய விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 64 சதவிகிதம் நலிந்த பிரிவினருள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் மற்றும் பிற வசதிகளைப் பெற்று முன்னேறி வருகிறார்கள்.



உழவர் பெருமக்களுக்குத் தேவையான கடன் வசதி, உரம், விற்பனை வசதிகள் போன்றவற்றை ஒரே இடத்தில் வழங்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், வேளாண்மைத் துறையின் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அளிக்க வேண்டிய கடன் வசதிகளைத் தமிழகத்தில் உள்ள 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கவனித்து வருகின்றன. சிறிய மற்றும் மிகச் சிறிய உழவர்களின் நலம் காக்கவும், நிலமற்ற குத்தகைக்காரர்களின் வருமானத்தைப் பெருக்கவும் தீவிரமாக அவர்களை உழவுத் தொழிலில் ஈடுபடுத்தவும், துணைத் தொழில்களை நடத்தி வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டம் பெருமளவு உதவி செய்து வருகிறது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் கடன் உதவி மற்றும் பிற உதவிகளும் செய்து வருகின்றன. சென்ற ஆண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த சுமார் 40,000 குடும்பங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டார்கள். 31-3-1985க்குள் தாழ்த்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மேலும் 60,000 வேளாண்மைக் குடும்பங்களைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக இதுவரை புரட்சித் தலைவரின் அரசு அங்கத்தினர்களுக்குப் பங்கு தொகை மானியமாக ரூ.60 இலட்சம் வழங்கியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் கருத்துப்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதவிகிதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கிய மொத்த கடன் தொகையில் சுமார் 60 சதவிகிதத்திற்கு மேல் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்டது ஒரு சாதனையாகும். இது நலிந்த பிரிவினரின் நலனில் கூட்டுறவு நிறுவனங்கள் காட்டி வருகின்ற அக்கறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றே சொல்லலாம்.

மேலும் உழவர்களின் நீண்ட காலக் கடன் வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கு 182 பிரதம நிலவள வங்கிகள் செயல் புரிந்து வருகின்றன. உழவர்களுடைய தேவை அறிந்து அவர்களுக்குப் பல கோடி ரூபாயைக் கடனாக கூட்டுறவு நிறுவனங்கள் கொடுத்து வந்தன.

இருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ஓரளவு குறைந்து விட்டது. வாங்கின கடனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுப்பினர்கள் கடமையுணர்ந்து காலத்தே திருப்பி செலுத்தாததால் ஏற்பட்ட சுணக்கம்தான் இதற்குக் காரணம். உடலில் ரத்த ஓட்டம் சுழன்று கொண்டே இருந்தால்தான் வாழ முடியும். சுவர் இருந்தால்தான் அழகாக சித்திரத்தை எழுத முடியும். கூட்டுறவுச் சங்கத்தின் கடன்களை உழவர் பெருமக்கள் குறிப்பிட்ட தவணையில் சீராகச் செலுத்தி வந்தால்தான் கூட்டுறவு நிறுவனங்கள் உழவர்களின் தேவையறிந்து தொடர்ந்து பணி புரிய முடியும். இந்த அடிப்படை உண்மையைத் தெரிந்தோ, தெரியாமலோ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மறந்த காரணத்தினால்தான் தொடர்ந்து தேவையான அளவு கடன்களை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் குறிப்பிட்டதைப் போல உழவர்களின் சிரமங்களை அறிந்து கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத உண்மை நிலையினை உணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் உள்ள இந்த அரசு, 120 கோடி ரூபாய் அளவுக்கு பல்வேறு வகைப்பட்ட கடன்களை ரத்து செய்து, உழவர் பெருமக்களுக்குச் சலுகைகளை வழங்கியுள்ளது. மேலும் உழவர்கள் சார்பில் வங்கிகளுக்கு 80 கோடி ரூபாய் வழிவகைக் கடனாகக் கொடுத்துள்ளது. ஆக மொத்தம் 200 கோடி ரூபாய் அளவிற்கு சலுகைகளை புரட்சித் தலைவர் அரசு இதுகாறும் வழங்கியுள்ளது.

இதுவேறு எந்த மாநிலத்திலும் நிகழாத அளவு தமிழக அரசு உழவர் பெருமக்களின் குறையறிந்து தாமே முன்வந்து செய்த பேருதவியாகும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு உழவர் பெருங்குடி மக்கள் தங்கள் கடமையுணர்ந்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டதன் காரணமாக, தனியாரிடமிருந்து கடன் வசதி கிடைக்காமல் இருந்த இடைவெளியை மாற்ற, நிறுவன ரீதியாக நகை ஈட்டுக் கடன் வழங்கும் பணியில் கூட்டுறவுச் சங்கங்கள் தீவிரமாக முனைந்துள்ளன. கடந்த ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய் அளவுக்கு நகையீட்டுக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்த வட்டியில் அதாவது 14 சதவிகிதத்தில் 5,000 ரூபாய் வரை ஒருவர் நகைக்கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## கொசு ஒழிப்பிற்கு ரூ. 25 இலட்சம்

சென்னை மாநகரில் ஓடும் கூவம்-பக்கிங்காம், ஓட்டேரி நல்லா போன்ற கால்வாய்களிலும் சாக்கடைப் பகுதிகளிலும் மற்றும் அசுத்தமான பகுதிகளிலும் குடிகொண்டிருக்கும் கொசுப் படையை ஒழித்துக் கட்டுவதில் மாநகராட்சி முனைப்புடன் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சென்னை மாநகரில் கொசு ஒழிப்புப் பணியைத் தினந்தோறும் மாநகராட்சி செய்து வந்தாலும் இந்தப் பணி முடிய இன்னும் ஆறு மாதம் பிடிக்கும். கொசு ஒழிப்பிற்கும் மலேரியா தடுப்பிற்குமாக ரூ. 25 இலட்சம் மாநகராட்சிக்காக தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியுள்ளது என்று சென்னை மாநகராட்சி தனி அதிகாரி திரு. டி. டி. சுந்தர்ராஜ். ஐ.ஏ.எஸ் அவர்களும் ஆணையாளர் திரு. எஸ். ஆர். கருப்பண்ணன் ஐ.ஏ.எஸ் அவர்களும் நிருபர்களிடம் தெரிவித்தனர்.



## மாணவர்கள் அமைத்த புதிய சாலை

சேலத்தை அடுத்த வேடுகததாம்பட்டி எனும் கிராமத்தில் 10.1.83 முதல் 19.1.83 வரை பலபள்ளி சுற்றுச் சூழல் நாட்டு நலப் பணித் திட்ட முகாம் நடைபெற்றது. அதில் 8 பள்ளிகளைச் சேர்ந்த 230 மாணவர்களும், 15 திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். முகாமின்போது வேடுகத்தாம்பட்டியில் இருந்து சேலத்தாம்பட்டிக்கு சாலையே இல்லாத முட்புதர்களும், முள் மரங்களும் நிறைந்த இடத்தை மாணவர்கள், சீர் செய்து 16 அடி அகலமும் 1½ கி. மீ. தூரமுமுள்ள சாலையை அமைத்தனர். முகாம் அமைப்பாளர் திரு எம். தேவராஜனும் திட்ட அலுவலர்களும் மாணவர்களுடன் சேர்ந்து முகாம் சிறப்பாக நடைபெற உதவினர்.

இந்த சாலையைப் போட, நல்ல உள்ளங்கொண்ட கிராமத்து மக்கள் சிலர் தங்கள் நிலங்களை நன்கொடையாகக் கொடுத்தனர். சில கிராமத்து இளைஞர்கள் மாணவர்களுக்கு உதவி புரிந்தனர். வனத்துறையில் இருந்து 200 மரங்களை மாணவர்கள் கொண்டுவந்து இந்தப் புதிய சாலையில் நட்டனர். இந்தப் புதிய சாலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு, இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்து மாணவர்களின் சேவையை பாராட்டினார்.

உழவர் பெருமக்களில், மலைப்பகுதியில் வாழ்கின்ற பழங்குடி மக்களில் பெருமளவு இடைத்தரகர்களின் கொள்ளை லாபத்திற்கு ஆட்பட்டு சிரமப்பட்டு வந்தார்கள். இருண்ட அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றும் வண்ணம் LAMP எனப்படும் 13 பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு மலைவாழ் மக்களுடைய துயர் தற்போது நீக்கப் பட்டுள்ளது.

உழவர் பெருமக்களுக்கு உற்பத்தி செய்வதற்குப் பல்வேறு உதவிகளை கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் உழவர்கள் பயனடைந்து வருகிறார்கள் என்பது உழவர் பெருமக்களுக்கு நன்கு தெரியும். அவர்களின் உற்பத்திக்கு ஆதாய விலை கிடைக்க வேண்டும் உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்கும் வரையில் பாதுகாப்பது உற்பத்திப் பொருட்களைப் பக்குவப்படுத்தி விற்பனை செய்வதன் மூலம் உழவர்களுக்கு நல்ல வருமானத்தை உருவாக்கித் தருவது, உரம், பூச்சி மருந்துகள் மற்றும் பிற வசதிகளை வழங்குதல் போன்ற இந்தப் பணிகளில் தமிழகத்தில் 115 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

உழவர்களுக்குக் கடனுதவி, இடுபொருட்கள் வழங்குதல், உபரி வருமானம் பெறுவதற்கு வசதிகள் ஆகிய உதவிகள் மட்டும் செய்வதோடு மட்டுமல்லாமல் கிராமங்களில் அவர்களுக்குத் தேவையான நுகர் பொருட்கள் நியாய விலையில் சரியான எடையில் தரமாக வழங்கும் பணியிலும் கிராம வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. நமக்கு உணவளிக்கும் உழவர் பெருமக்களுக்கு உதவும் வண்ணம் தமிழகத்தில் 11,100 கிராமக் கூட்டுறவு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

கிராமங்களில் உள்ள ஏழை எளியமக்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லாமல் வசதியாகவும் லாபகரமாகவும் செய்ய உதவியாக இருக்கும் பொருட்டு சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொண்டுள்ள நலிந்த பிரிவினருக்கு அரசு மானியத்துடன் 4 சதவிகிதம் வட்டிக்கு உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நகர வங்கிகள் கடன் வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

''நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். இதை நாம் எவ்வளவு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் இதைச் செய்ய முடியும். இதைத் தவிர வேறு அணுகு முறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை'' என்று கூட்டுறவு இயக்கத்தின்பால் ஆழமான பற்று கொண்ட பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பணியில் உழவர் பெருமக்கள்-தேவைகள் அறிந்து செயல் திட்டங்கள் பல தீட்டி ஆக்கப் பூர்வமான பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. திட்டத்தின் பலன்கள் அனைத்தும் பெற உழவர் பெருமக்கள் கூட்டுறவு நிறுவனங்களில் செயல் முறைகளை நன்கு பயன்படுத்த வேண்டும். அதற்காக வாங்கிய கடன்களைக் குறித்த தவணையில் காலத்தே திருப்பிச் செலுத்த கூட்டுறவு நிறுவனங்கள் வலிவோடும், பொலிவோடும் செயல்பட உறுதுணையாக இருக்க வேண்டும். நாணயத்தை அடித்தளமாகக் கொண்டு கூட்டுறவுக் கொள்கைகளில் நம்பிக்கையோடு பணியாற்றினால் மாபெரும் சாதனைகளை உருவாக்க முடியும். மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு நிறுவனங்கள் மலர்ந்து மணம் பரப்பி எல்லோருக்கும் எல்லாப் பலன்களும் கிடைக்க வழி செய்ய இந்தப் பொங்கல் திருநாளில் நாம் சிந்திக்க வேண்டும்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றார் நூற்றாண்டுக் கவிஞர் பாரதியார். அதைச் சற்று விரிவாக்கி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். நம் உயர்வுக்கும் கூட்டுறவு சிந்தனை செய்வோம்'' என்று நாம் செயல்படுவோம்.

கூட்டுறவுச் சங்கம் எளியவர்களால் இல்லந்தோறும் ஒளிவிட ஏற்றி வைத்த அகல் விளக்காகும். அந்த விளக்கு தொடர்ந்து ஒளி தர வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்முறைகளை ஊக்குவித்து அதைப் பாதுகாப்பது நமது தலையாய பொறுப்பாகும். கூட்டுறவு என்பது கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு ஒளி விளக்கு! அதை அணையாமல் காப்பது உழவர் பெருமக்களின் தலையாய பொறுப்பு!

[சென்னை வானொலியில் ஆற்றிய உரை]



# உமறுப் புலவருக்கு ஒரு கோடி வணக்கம்

மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்
திரு. கா. ராசாமுகமது

சில நேரங்களில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு நண்பர் ஒருவரைப் பார்க்கிறபோது ''எப்படி இருக்கிறாய் ? எப்போது திருமணம் செய்யப்போகிறாய்'' என்று கேட்போம். ஆனால் அவருக்கு ஏற்கெனவே திருமணமாகி இரண்டு மூன்று குழந்தைகள்கூட இருக்கலாம். அது நமக்குத் தெரியாமல் இருக்கும்.

அதேபோல், உமறுப்புலவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கின்ற கோரிக்கை இது, பழைய சம்பவத்தில் புதிதாகக் கொடுக்கின்ற கோரிக்கையே தவிர இதை அரசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டு, நானே வந்து இங்கு இந்த இடத்தைப் பார்த்து, ''இதற்குள்ளே என்ன செய்யலாம்?'' என்பதை ஆலோசித்து, முதலிலே ரூ. 5,40,000க்குப் போட்டிருந்த மதிப்பீட்டை மாற்றி ரூ 7 இலட்சம் செலவு செய்ய வேண்டுமென்ற அளவிற்கு, அரசு திட்டத்தைத் தயாரித்து, ஏற்றுக் கொண்ட நிலையிலே இந்த விழா நடந்து கொண்டிருக்கிறது.

### இஸ்லாமியரின் இலக்கிய சேவை!

தமிழ் கூறும் நல்லுலகில் சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நேசமனப்பான்மையை வளர்ப்பதில் இஸ்லாமியப் பெரும் புலவர்களுடைய பங்கு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. தமிழ் மண்ணிற்கே உரிய மிகச் சிறந்த பண்பாட்டை விளக்குகின்ற பல இலக்கியங்களை இந்த மண்ணிலே உருவாக்கியவர்கள் இஸ்லாமியப் புலவர்கள்.

இன்னும் சொல்லப்போனால் வள்ளலாருடைய படைப்பு அருட்பாவா? மருட்பாவா? என்று உலகமே விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில் அது மருட்பா அல்ல, அருட்பாதான் என்று வாதித்து வென்று காட்டியவரே செய்குத்தம்பிப் பாவலர் தான் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

### இலக்கிய ஆராய்ச்சி!

இலக்கிய உணர்வு என்று வருகிறபோது இங்கே சாதிக்கோ, மதங்களுக்கோ இடமில்லை என்பதைத் தமிழ்ச் சமுதாயம் நிலை நாட்டிக் காட்டியிருக்கிறது. அதையெல்லாம் எண்ணிப்பார்த்து அந்த அடிப்படையிலே 300-க்கும் மேற்பட்ட இலக்கியங்களை உருவாக்கிய பெரும்புலவர்களை நினைத்துப் பார்ப்பதும் அதன் மூலமாக இந்த நாட்டிலே சாதி-இனக் கலவரங்களைத் தவிர்க்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்கவும், அதற்கும் மேலாக, இந்த நாட்டின் ஒருமைப் பாட்டிற்கும் கிட்டத்தட்ட 400-500 ஆண்டுக்காலத்திற்கும் முன்பே வழி காட்டிய அந்தப் பெரும் புலவர்களின் இலக்கியப் படைப்புகள் எல்லாம் எதிர்கால இந்தியாவிற்கு அடித்தளத்தை உருவாக்கிடக் கூடியவையாக உள்ளன. அவைகளை ஆராய்ச்சி செய்ய அதுவும் அந்தப் பெரும் புலவர்களிலேயே அமுத கவியாக, அருட்கவியாக, உருவான உமறுப்புலவர் பெயராலே அந்த ஆராய்ச்சி நிலையம் இருக்க வேண்டுமென்று நம்முடைய சமுதாயம் வலி



றுத்தி வந்ததை நாம் மறந்துவிட முடியாது.

அரசை நடத்துவதிலே ஒரு பெரிய பிரச்சினை என்னவென்றால், ஒரு 10 பைசா கணக்கிலே குறைகிறது என்று சொன்னால் அதற்குக் காரணியமானவர்களிடம் விளக்கம் கேட்கப்படும். அவர் அவருக்குக் கீழே இருக்கிறவரிடம் உடனடியாக விளக்கத்தைத் தயார் செய்யச் சொல்வார். இப்படியாகச் சென்று அந்த கோப்பு திரும்பி வருகிறபோது

10 பைசா குறைவதற்கான விளக்கத்தைப் பெறுவதற்கு சுமார் 15 ரூபாய் செலவாகியிருக்கும். இது அரசாங்க நடைமுறை.

10 பைசா குறைந்ததற்கான காரணியம் கேட்டால் 15 ரூபாய் செலவு செய்தால்தான் பதில் பெற முடியும். இதுதான் அரசாங்க நடைமுறை; அப்படிப்பட்ட ஒரு அமைப்பினிடையே, சொன்னவுடனேயே மூன்று மாதத்திற்குள்ளாகவே உமறுப்புலவர் பெயராலே இருக்கை அமைந்து, இஸ்லாமிய இலக்கியங்களை ஆராய்ச்சி செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்த ஒரே அரசு நம்முடைய அரசு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**இறைவனுக்கு நன்றி**

இதைச் சுட்டிக்காட்டுவதன் காரணியம் பெருமை பாராட்டுவதற்காக அல்ல! இவ்வளவு பெரிய தொண்டினை-நல்ல காரியத்தைச் செய்யக்கூடிய பெரும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருப்பதற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நான் என்னுடைய நன்றியைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**ரூ. 2 லட்சம் போதாது!**

அந்த இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி இருக்கையிலே தலைவராக இருந்து வழி நடத்திச் செல்லக்கூடிய தகுதி யாருக்கு இருக்கிறது என்று பல்வேறு பெரும் புலவர்களை எண்ணிப்பார்த்தோம். அப்படி ஒவ்வொருவராகப் பரிசீலனை செய்தோம். அதற்கு சில டாக்டர் பட்டங்கள், அனுபவம் உள்ளவராகத் தேவைப்பட்டபோது பல நண்பர்கள் இலங்கையிலே இருந்த டாக்டர் ஒயிஸ் அவர்களைத் தலைவராக வைத்தால் நல்லது என்று சொன்னார்கள். அதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி இங்கே மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட பெருமக்கள் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்து, அவர் வந்து சொன்னதற்குப் பிறகுதான் தெரிந்தது இந்த 2 லட்ச ரூபாய் காணாது என்று!

கல்வி அமைச்சருடன், நிதிநிலைக்குழு கூடி, ஆலோசனை செய்து பார்த்தபோது ரூ.5 லட்சமென்றும் பிறகு ரூ. 7 லட்சம் என்றும் ஆகியது. பணத்தின் மதிப்பு குறையக் குறைய எண்ணிக்கையின் அளவு கூடுவது தவிர்க்க முடியாதது. எனவே ஒட்டுமொத்தமாகப் பார்த்து எவ்வளவு ஒதுக்கினால் நல்லது என்று பார்த்தபோது-இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவையும் சொல்லிவிடுகிறேன்-தோராயமாக ரூ. 9 லட்சம் வரை திட்டங்களைத் தயாரிக்கலாம் என்று, அதற்காக அரசு முன்கூட்டியே அனுமதி வழங்கியிருக்கிறது.

**உமறுப்புலவர் நினைவு நூலகம்**

இது தவிர, எட்டயபுரத்தில் புதிய நூலகக்கட்டடம் ஒன்று கட்டி, தற்போது இங்கு



இயங்கி வரும் கிளை நூலகத்தை விரிவுபடுத்தி உமறுப்புலவர் நினைவு நூலகமாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக சுமார் ரூ.3.5 இலட்சம் திருநெல்வேலி நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டுச் செலவு செய்து கொள்ளப் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**1000 உலமாக்களுக்கு ஓய்வூதியம்**

இது ஒரு மதச் சார்பற்ற நாடு; பல்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட ஒருநாடு; பல மதங்களை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு பூமி. இங்கே மைனாரிட்டியாக முஸ்லீம்கள் இருந்தாலும் அந்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு பிரச்சாரம் செய்து, அல்லது போதனா முறைகளைச் சொல்லிக் கொடுத்து, இறுதிக் காலத்திலே வறுமையிலே வாடிக் கொண்டிருக்கக்கூடிய உலமாக்களுக்கு ஏதாவது வழி வகை செய்ய வேண்டுமென்று சொன்னபோது அதையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 250 பென்ஷன் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

முதல்வர் புரட்சித் தலைவர், ''இந்தத் திட்டத்திற்கு ஒருகோடி ரூபாய்செலவானாலும் பரவாயில்லை, கொடுத்து விடலாம்'', என்று சொல்லியிருக்கிறார். மொத்தம் 450 விண்ணப்பங்கள்தான் வந்திருக்கின்றன. நான் 2000 விண்ணப்பங்கள் வரை எதிர்பார்க்கிறேன். மிகவும் ஒழுங்காகவும் சீராகவும் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளது மேலப்பாளையம் தான். அங்கிருந்து கிட்டத்தட்ட 9 உலமாக்களின் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய அளவில் இருக்கின்றன. காயல்பட்டினத்திலேகூட குறைந்த அளவு விண்ணப்பங்கள்தான் வந்திருக்கின்றன. மற்ற இடங்களிலே கொஞ்சம் கொஞ்சம்தான் வந்திருக்கின்றன.

உள்ளபடியே வறுமை இல்லாமலிருந்தால் மகிழ்ச்சி. ஆனால் ஒரு வேளை எப்படி மனுச் செய்வது, யாரிடம் கொடுப்பது என்று தெரியாமல் இருக்கலாம். தாசில்தார் மூலமாக கலெக்டருக்கு அனுப்பிவிடுங்கள் அல்லது வஃபு வாரியத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் வஃபு வாரிய இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கலாம். அல்லது என்னிடத்திலே நேரடியாகக் கொடுக்கலாம். அதன் அடிப்படை விதிகள் 60 வயதைக் கடந்தவராக இருக்க வேண்டும். 20 ஆண்டுகள் ஓரிடத்திலோ, பல இடங்களிலோ தொடர்ந்து பணியாற்றியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட சான்றிதழ்களோடு அவர்கள் அனுப்பி வைத்தாலும் அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதை அரசு பரிசீலிக்கும். அதே போல செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மண்டபங்கள் வேலை தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றன.



அது மட்டுமல்ல. இன்றைக்குத் தமிழ் நாட்டில் மட்டும் அல்லது இந்தியாவிற்குள்ளே மட்டும் மதச்சார்பற்ற தன்மையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

அதற்கு அப்பாலும் கூட, பாலஸ்தீன மண்ணிலே விடுதலைக்காகப் போராடி இரத்தத்தைச் சிந்திக் கொண்டிருக்கிற சுதந்தரப் போராட்ட வீரர்கள் சென்னைக்கு வந்த போது பாலஸ்தீன வீரர்களுடைய இயக்கத்திற்கு ஒரு லட்ச ரூபாயைத்தானே முன் வந்து அளித்த ஒரே முதலமைச்சர் நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவர் என்பதை மறந்துவிடக் கூடாது.

**மதம் வேறு, மொழி வேறு.**

சிலர், நீங்கள் தமிழர்களா என்று கேட்கிறார்கள். எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மதம் வேறு, மொழி வேறு. நாம் தமிழர்கள். மதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற முறையிலே நாம் முஸ்லீம்கள். இதை இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இன்றைக்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழையே கடைசி வரை தாய்மொழியாக வைத்துக் கொண்டு அதிலேயே சிந்தித்து, அதிலேயே படித்து எழுதி, அதிலேயே வளர்ந்து, வாழ்ந்து மடியக்கூடிய ஒரு வாழ்க்கையைத் தமிழ்நாட்டிலே மட்டும் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல கேரளாவிலும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு பூமிகளைத்தாண்டி நீங்கள் கடந்து செல்வீர்களானால் அங்கே முஸ்லீம்கள் இருக்கிறார்கள். கர்நாடகத்திலே முஸ்லீம்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கே அவர்களுடைய தாய்மொழி உருதுவாக இருக்கும். மாநில மொழி கன்னட மொழியாக இருக்கும்.

**தமிழகத்தில் தனித்தன்மை!**

ஆந்திராவிலே தெலுங்கு, மாநில மொழி ஆனால் அவர்களுடைய தாய் மொழி உருதுவாக இருக்கும். அப்படியே தாண்டி வடக்கே செல்லச்செல்ல அதே நிலைமைதான். ஆனால் தெற்கே வர வரத்தான் தாய் மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் ஏற்றுக் கொள்ளாத ஒரு தனித்தன்மையை இங்கே இஸ்லாமியர்கள் நிரூபித்திருக்கிறார்கள். வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கும் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த உணர்வின் அடிப்படையில் அதை வளர்த்தால் இந்து, முஸ்லீம் அல்லது கிறிஸ்தவர்கள் என்ற சாதிபேதங்களை உண்டாக்க விடாமல் எல்லோரும் ஒன்றுதான், அவரவர்களுடைய நம்பிக்கையில் சில வேறுபாடுகள் இருக்கலாமே தவிர அவர்கள் எல்லோரும் மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொண்டிருக்கக்கூடிய இந்த மண்ணிற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற கடமையுணர்வில்தான் நாம் இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

அப்படி ஒரு காரியத்தைச் செய்வது என்பது -திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். நமக்குக் கிடைத்த ஒரு பாக்கியம்.

**[எட்டயபுரத்தில் 1.2.83ல் நடைபெற்ற உமறுப்புலவர் நினைவுநாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...]**

## சத்துணவுத் திட்டம் குஜராத் முதல்வர் பாராட்டு!



**"தமிழ்நாட்டில் முதல்வர் குழந்தைகள் இலவச மதிய சத்துணவு வழங்கப்படுவதுபோல, குஜராத்திலும் சத்துணவுத் திட்டம் தொடங்கப் படும்" என்று மாண்புமிகு குஜராத் முதல்வர் திரு மாதவ்சின் சோலங்கி அவர்கள் அறிவித்துள்ளார்.**

குஜராத் அரசின் அழைப்பின்பேரில், தமிழ் நாட்டில் இருந்து செய்தியாளர்கள், குஜராத் மாநிலத்தில் ஆறு நாட்கள் (பிப்ரவரி 9 முதல் 14 முடிய) சுற்றுப்பயணம் செய்தனர். அப்போது செய்தியாளர்கள், மாண்புமிகு குஜராத் முதல்வர் அவர்களைச் சந்தித்தபோது, தமிழ்நாட்டில் முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது அவர் கூறியதாவது:

"அண்மையில் நான் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது, சத்துணவுத்திட்டம் பற்றி அதிகமாகத் தெரிந்து கொண்டேன். மற்ற மாநிலங்களும் பின்பற்றக்கூடிய பயனுள்ள திட்டம் இது. இந்தத் திட்டத்தைப் பின்பற்றி குஜராத்திலும் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்படும். முதல் கட்டமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படும். சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்துவது பற்றி அறிந்து கொள்ளுவதற்காக, குஜராத் அரசு அதிகாரிகளின் சிறப்பு நிபுணர் குழு ஒன்று தமிழ்நாட்டுக்கு விரைவில் செல்லும்" என்ற அவர், "தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் குஜராத் அரசில் பணிபுரிகிறார்கள். அவர்கள் அனைவரும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியுடன் திறமையாகக் கடமையாற்றுகிறார்கள்" என்றும் பாராட்டு தெரிவித்தார்.

தமிழக ஆளுநராக இருந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களையும் தமிழகச் செய்தியாளர்கள் சந்தித்தார்கள். சத்துணவுத் திட்டம் பற்றி அவரும் குறிப்பிட்டு வெகுவாகப் பாராட்டினார். "தமிழக அரசு விழாக்களுக்கு இன்னும் எனக்கு அழைப்பிதழ் வந்துகொண்டிருக்கின்றது. அதற்காக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# தொழில்வளம் பெருக்குவோம்!

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

## திரு. எஸ். திருநாவுக்கரசு

**பிரான்ஸ்**

நாங்கள் 13.6.1982 அன்று ஜூரிச்சை விட்டுப் பாரிசுக்குப் புறப்பட்டோம். இந்தியத் தூதரகத்திலிருந்து திரு. குப்தா விமான நிலையத்திற்கு வந்து எங்களை வரவேற்றார். பாரிஸிலேயே நிலையாகக் குடியிராத இந்தியர்கள் பலர் அங்கு உள்ளனர். அங்குள்ள பெரும்பான்மையான பிரான்சு நாட்டுக் குடிமக்கள் இவ்விரு நாடுகளுக்குமுள்ள பண்பாட்டுத் தொடர்புகளினாலும், பாண்டிச்சேரியில் அரவிந்த் ஆசிரமம் இருப்பதாலும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளனர். அங்கேயே நிலையாகக் குடியிராத இந்தியர்கள் 20-25 பேருடன் நான் பேசினேன். தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு உள்ள வசதிகளையும் அளிக்கும் உதவிகளையும் அவர்களுக்கு விளக்கினேன். இவர்களில் பெரும்பான்மையோர், நமது மாநிலத்தில் முதலீடு செய்வதில் பெரிதும் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால், நமது வரிவிதிப்புக் கொள்கை அரசியல் அமைப்பின் காரணமாக அம்முதலீடு குறித்து ஆதாயம் கிடைக்குமா என்று கவலைப்படுகின்றனர். அவர்களுடன் தொடர்பு கொண்டு, தமிழ் நாட்டில் உள்ள நல்ல வாய்ப்புகளைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக்கூறுவது அவசியமாகும்.

பாரிசுக்கு அருகேயுள்ள திருவாளர்கள் ஃபைவ்ஸ் கைல் பாப்காக் ( Fives cail Bascock ) தொழிற்சாலைகளில் ஒன்றினைப் பார்வையிட்டேன். இந்நிறுவனம் கொதிகலன்கள் செய்வதில் உலகத்தில் புகழ் வாய்ந்த முன்னோடி நிறுவனங்களுள் ஒன்றாகும். இது மணிக்கு 50 டன் முதல் 2,000 டன் வரை நீராவிக் கொதிகலன் திறனுடைய கொதிகலன்களைத் தயாரிக்கிறது. தமிழ்நாடு காகித நிறுவனம், தன்னுடைய செய்தித்தாள்களுக்கான காகிதத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பல எரிபொருள்களினால் இயங்கும் தனிவகைக் கொதிகலன்களை வழங்குமாறு இந்நிறுவனத்துடன் அண்மையில் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இக் கொதிகலன், நிலக்கரி, லிக்னைட் போன்ற பலவகை எரி பொருள்களைப் பயன்படுத்தும் திறனுடையது. தமிழ்நாடு காகித நிறுவனத்திற்குத் தேவைப்படும் பல எரிபொருள்களினால் இயங்கும் கொதிகலன்களை வழங்குவதில் அந்நிறுவனத்திற்குத் தடை ஏதுமிராது என்பது பாரிசுக்கு அருகிலுள்ள இந்த நவீன தொழிற்சாலையைச் சென்று பார்வையிட்ட போது தெரியவந்தது.

**இங்கிலாந்து**

பாரிசில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் சிலவற்றினைப் பார்வையிட்ட பின்னர் 15.6.1982 அன்று லண்டனுக்குப் பயணமானேன். இரவு 8.30 மணிக்கு நான் அங்கு சென்று சேர்ந்தவுடன் லண்டன், இந்திய தூதரகத்தைச் சேர்ந்த புரோட்டோகால் ( Protocol ) அதிகாரி ஒருவர் என்னை வரவேற்றார். இங்கிலாந்திலும், இந்தியாவிலும் மாக்னசைட் தொழிலில் முன்னோடி நிறுவனமான திருவாளர்கள் மாக்னசைட் விஸ்ஃபோகேட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பிராட் என்பவருடன் 16.6.82 அன்று நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். சேலம் மாக்னசைட் நிறுவனத்தை திருவாளர்கள் மார்ட்டின் பர்ன் கம்பெனி எடுத்துக் கொள்ளும் முன்பு மேற்சொன்ன நிறுவனம் இதில் பெரும் பங்கு வைத்திருந்தது. 1981 வரை நமது மாக்னசைட் உற்பத்திப் பொருட்களை அவர்கள் இறக்குமதி செய்து வந்தனர். ஆனால், நமது மாக்னசைட் உற்பத்திப் பொருளின் அதிக விலை காரணமாக இந்த வாணிபமும் தடைப்பட்டுப் போயிற்று. அதிக கப்பல் சரக்குக் கட்டணம் காரணமாகவும் இது தடைப்பட்டது. மாக்னசைட்டின் விலைகள் மற்ற நாடுகளின் விலைகளை விடக் குறைவாக இருந்ததால்தான் அவர்கள் நமது மாக்னசைட்டின் உற்பத்திப் பொருட்களை 20,000 டன் அளவுக்கு வாங்கத் தயாராயிருக்கின்றனர். தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் தனது உற்பத்திப் பொருளை மற்ற நாடுகளின் விலைகளுடன் போட்டி போடும் அளவுக்குக் குறைத்து, இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என நான் நம்புகிறேன்.

அதே நாளில் லண்டன் தமிழ்ச் சங்கத்தில் உரையாற்றுவதற்காக அச்சங்கம் என்னை அழைத்தது. அங்கு திரளான கூட்டம் கூடி இருந்தது. தமிழக முதல்வர் அவர்கள் என்னை அனுப்பியதன் நோக்கம் - நமது மாநிலத்தில் உள்ள தொழில் வளர்ச்சி, வருங்கால வளர்ச்சிக்கு நாம் வகுத்துள்ள திட்டம், தொழில்களை ஏற்படுத்த இந்தியரல்லாதவர்களுக்கு நாம் அளிக்கும் உதவி ஆகியவை பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறினேன். அவர்களிடையே ஓரளவு அக்கறை ஏற்படுத்த என்னால் முடிந்தது. இதனைத் தொடர்ந்து நாம் ஆவன செய்ய உள்ளோம்.

17.6.1982 அன்று லண்டனிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செம்ஸ்போர்டில் அமைந்துள்ள திருவாளர்கள் மாக்கோனி கம்யூனிகேசன்ஸ் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் பிரிவுகளை நாங்கள் சென்று பார்த்தோம். நிருவாக இயக்குநர் திரு. ராப்சன் அவர்களும் ஏனைய அலுவலர்களும் தொழிற்சாலையைச் சுற்றி அழைத்துச் சென்றுகாண்பித்தனர். மின்னணுவியல் செய்தித் தொடர்பு ஏற்பாட்டு முறையில் திருவாளர்கள் மார்க்கோனி நிறுவனம் தலைசிறந்த நிறுவனமாக விளங்குகிறது. இந்நிறுவனத்தின் ஆண்டு மொத்த வணிகத் தொகை ஏறக்குறைய 700 கோடி ரூபாய் ஆகும். நவீன முறையில் அமைந்த அவர்களது சிறந்த தொழிற்சாலையை நான் பார்த்து மிகவும் அதிசயப்பட்டேன். போக்குவரத்துக் கழகங்களுக்கும், சுகாதாரப் பணிகள், இரயில்வே, மீன்வளம், காட்டுவளம் முதலிய துறைகளுக்கும் தேவைப்படுகின்ற இரு வழிச் செய்தித் தொடர்புச் சாதனங்களைத் தயாரிப்பதற்கான திட்டத்தைத் தொடங்க 'எல்காட்' ( Elcot ) நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 2.5 கோடி ரூபாய் செலவாகும். திருவாளர் மார்க்கோனி கம்யூனிகேஷன்ஸ் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் தொழில் நுட்ப வகையில் ஒத்துழைப்புப் பெற மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர் மார்க்கோனி நிறுவனத்தைச் சென்று பார்த்தபோது அதனுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் குறித்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். 'எல்காட்' நிறுவனம் வெகு விரைவில் இதனை முடித்து வைக்கும். தொலைபேசித் தொடர்பகங்கள், 'சர்கியூட்' அறைகள் முதலியவை போன்ற வருங்காலத் திட்டங்களுக்காக ஒத்துழைப்புப் பெறுவதில் திருவாளர் மார்க்கோனி நிறுவனமும் அக்கறை காட்டியது. எல்காட்' நிறுவனம், தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

இலண்டனில் நிலையாகக் குடியிராத இந்தியர்கள் கூட்டம் ஒன்றை 'ஹைகமிஷன்' வளாகத்தில் நடத்த இலண்டனில் உள்ள இந்திய முதலீட்டு நிலையம் ஏற்பாடு செய்தது. இந்திய முதலீட்டு நிலைய நிருவாக இயக்குநர் திரு. ஹர்பான்ஸ்சிங் ஐ.ஏ.எஸ்., இக்கூட்டத்தில் அக்கறை எடுத்துக் கலந்து கொண்டார். தொழிற்சாலைகளைத் தொடங்கத் தமிழ்நாடு அரசு எடுக்கும் முயற்சிகள் 'சிப்காட்' 'டிட்கோ', டி.ஐ.ஐ.சி' முதலிய கழகங்கள் ஆற்றுகிற பங்கு ஆகியவை குறித்துத் தொழில் வல்லுநர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நடுத்தர அல்லது சிறிய அளவிலான தொழில்கள், குறிப்பாக மின்னணுவியல், இலேசான ரகப் பொறியியல் தொழில்களைத் தொடங்குவதில் ஒரு சில தனியார் நிறுவனங்கள் விருப்பம் கொண்டிருக்க நமது மாநிலத்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையே வணிகத் தொடர்புகள் ஏற்படுத்துவதில் பலர் அக்கறை காட்டினர். இடையறாத் தொடர்புகள் கொள்வதன் மூலம் அவர்களது ஆர்வத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

இலண்டனிலுள்ள பிரிட்டன் தகவல் ஒலிபரப்பு நிலையத்தைச் சேர்ந்த திரு ஜான் கிளாப்பன் என்பவரும் திரு சங்கரமூர்த்தி அவர்களும் அவர்களுடைய வானொலியில் ''தமிழ் ஓசை'' நிகழ்ச்சிக்கு பேட்டி அளிக்குமாறு என்னை அழைத்தனர். பேட்டியின் போது தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி முறை குறித்தும், இம் மாநிலத்தில் நிலவி வரும் தொழில், அரசியல் நிலை குறித்தும், தொழில் வளவாயில்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தேன்.

**அமெரிக்கா**

8.6.1982 அன்று ஏர் இந்தியா விமானம் மூலம் நியூயார்க் சென்றடைந்தோம், ஜூன் 19ஆம் தேதி நியூயார்க்கில் 445, பார்க் அவன்யூவிலுள்ள இந்திய முதலீட்டு மைய அலுவலகத்தில், அமெரிக்காவில் தங்கியிருக்கும் இந்தியர்களுடன் விவாதித்தேன். நியூயார்க்கில் வசிக்கும் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பகுதியினர் இக்கூட்டத்திற்கு வந்திருந்

பாரீஸ் நகரில்



தனர். இந்திய முதலீட்டு மையத்தைச் சேர்ந்த திரு ஆனந்த் என்பவர் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்வதற்கு இந்திய அரசும்., தமிழ்நாடு அரசும் அண்மையில் அளித்துவரும் உதவியும் ஊக்கமும் குறித்து எடுத்துரைக்க வாய்ப்புக் கிட்டியது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நம்முடைய மாநிலத்தில் வெவ்வேறு மின் அணுவியல் திட்டங்களிலும் புதிய தொழில்களுககு அவர்கள் தொழில் நுட்ப உத்திகளை அளிப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள்.

20,21-ஆம் தேதிகளில் வாஷிங்டனில் இருந்தோம். பால்டிமோர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பழனி ஜி.பெரியசாமி என்பவர் அமைத்துள்ள "தமிழ்நாடு அமைப்பு" உறுப்பினர்களுடன் கலந்து உரையாடினோம். இந்திய முன்னேற்றச் சங்க உறுப்பினர்களையும் நாங்கள் சந்தித்தோம். 22,23, 24 ஆம் தேதிகளில் முறையே பஃபலோ, சிக்காகோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய இடங்களிலுள்ள இந்தியர்களைச் சந்தித்துப் பேசினோம். லாஸ் ஏஞ்சல்ஸ் கூட்டத்திற்கு பாரத ஸ்டேட் வங்கி ஏற்பாடு செய்திருந்தது. இந்திய முதலீட்டு நிலையத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பல்வேறு சங்கங்களுடனும் தனியாருடனும் நடத்திய இந்தப் பேச்சு வார்த்தைகள் தமிழ்நாட்டின் தொழில் நுட்ப வளர்ச்சியில் அவர்கள் பெருமளவு ஆர்வம் காட்ட உதவின. நாங்கள் சந்தித்த இத்தகைய தனிப்பட்டவர்கள், மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்; தொழில் நுட்ப உத்திக்கும் நிதியுதவிக்கும் பேருதவியாக இருப்பர். நமக்குத் தேவையான இடங்களிலெல்லாம் தொழில் நுட்ப ஒத்துழைப்பு அளிக்க, அவர் தம் நிறுவனங்களைச் சம்மதிக்கச் செய்யும் அளவுக்கு அவர்கள் செல்வாக்குப் பெற்றுள்ளனர். எங்களுடைய பேச்சு வார்த்தைகளின் போது, மின்னணுவியல் துறையில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு நமது மாநிலத்தில் வாய்ப்பு இருப்பதாக எங்களுக்குத் தெரிய வந்தது. அவற்றில் குடியுரிமை பெறாது அமெரிக்காவில் வசித்து வரும் இந்தியர்களும் ஆர்வம் கொண்டுள்ளனர். அத்திட்டங்கள் வருமாறு.

தகவல் தொடர்பு சாதனம்,
விண்வெளிக் கண்காணிப்புப் பாதுகாப்பு சாதனம்,
மின்னணுக் கருவி உதிரி பாகங்கள்,
செமேகொடக்டர் - அனலிஸ்ட் சாலிட் ஸ்டேட் ட்வைசஸ்,
சிறு கணக்கீட்டுப் பொறிகள்,
மைக்ரோ - புராசஸ்ஸர்ஸ்,
மருத்துவ மனைகள், தொழிற்சாலைகள் முதலியற்றுக்கான சாதனம்,
ஒலி-ஒளி காஸட்டுகள்.
மின்னணு விளையாட்டுக் கருவிகள்.
களவு-தீவிபத்து எச்சரிக்கை ஒலிச் சாதனங்கள்
மருத்துவமின்னணுவியல் சாதனங்கள்.

இவற்றில் எந்தெந்தத் திட்டங்களைத் தொடங்கலாம்என்பதை முடிவு செய்து திட்ட அறிக்கைகள் தயாரித்து, இத்திட்டங்களில்



பாரிஸ் நகரில்

எவரெவர் பங்கு கொள்வது உகந்ததாக இருக்கும் என்பதையெல்லாம் அறிய "எல்காட்" நிறுவனம் உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம். கூட்டுத் துறையிலும், தனியார் துறையிலும் திட்டங்கள் தொடங்க இந்தியர்கள் ஆர்வமாயுள்ளனர்.

அமெரிக்காவில் கட்டுகின்ற தொழில் நுட்ப உத்தியைக் கொண்டு, உடனடி முன்னேற்றம் காண்பதற்குத் தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள துறைகளில் ஒன்று "சூரிய வெப்பத்திலிருந்து மின்சக்தி தயாரிக்கும்" துறையாகும். இவ்வகையில் தொழில் நுட்ப அறிவைப் பரிமாற்றம் செய்வது, சூரிய வெப்ப அணுக்களுக்கு சிலிகான் நாடாக்கள் தயாரிப்பது ஆகியவை தொடர்பாக, திரு கே. தங்கமுத்து, டாக்டர் ராஜகோபால் ஆகியோருடன் விரிவாக விவாதித்தோம். இவ்வாறு தயாரித்து, சேமித்து வைக்கப்படும் மின்சக்தியை, வீட்டு உபயோகத்திற்கும், கிராமப் பகுதிகளில் மின் விளக்குகள் அமைக்கவும், தொழிற்சாலைகள் மருத்துவமனை முதலியவற்றிற்கு மின்சக்தி பற்றாக்குறையை நிறைவு செய்யவும் பயன்படுத்தலாம். இது, நமது மாநிலத்தில் இவ்வகைத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தும் பல்வேறு நிறுவனங்களும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு துறையாகும்.

அமெரிக்காவில் கிராஃபைட் பொருட்களில் முக்கிய நிறுவனமாக விளங்கும் தாந்தோணி கார்பொரேஷன் என்னும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடனும் நாங்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். இந்நிறுவனம், ஆர்வத்துடன் செயல்பட்டுவரும் ஒரு சில இந்தியர்களிடத்தில் இருக்கிறது. அவர்கள், சிவகெங்கையில் கிடைக்கக்கூடிய கிராஃபைட்டைக் கொண்டு, கிராஃபைட் க்ருசிபில்ஸ் தயாரிக்கவும் தொழில் நுட்ப உத்திப் பரிமாற்றம் செய்யவும் தயாராக இருக்கின்றனர். சுமார் 2.5. கோடி ரூபாய் செலவில் கிராஃபைட் க்ருசிபில்ஸ் தயாரிக்கும் திட்டம் 'டாமின்' நிறுவனத்திடம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த இதழில் முடியும்



# அரசின் அரவணைப்பில் ஆதிதிராவிடர்-பழங்குடியினர்

தா.ம.ஆறுமுகம், இ.ஆ.ப.
இயக்குநர்
ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை
சென்னை-5.

தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் ஆண்டு தோறும் தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றிற்காக 1949ம் ஆண்டு ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை ஆண்டுதோறும் அதிகமாக்கி, பாரதப் பிரதமரின் 20 அம்ச திட்டத்தில் அடங்கியுள்ள தாழ்த்தப்பட்டவர்களின் தீவிர மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு மேலும் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியத்திற்காக பாடுபட்டு வரும் தமிழ்நாடு அரசு நடப்பு ஆண்டில் ரூ. 42.85 கோடி ரூபாய்க்கு நலப் பணிகள் செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1981ஆம் ஆண்டு மக்கள் கணக்கின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் (88.81 இலட்சம்) மற்றும் பழங்குடியினர் (5.20 இலட்சம்) 94.01 இலட்சம் பேர் அடங்குவர். மொத்த மக்கட் தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை முறையே 18.35, 1.07 விழுக்காடு ஆகும். இவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம் மற்றும் வீட்டு வசதி இவற்றில் மேம்பாடு அடைவதற்காக அயராது பாடுபடும் தமிழ்நாடு அரசு தீண்டாமை ஒழிப்பிற்காகவும் பல திட்டங்களை செயல்படுத்தி இவர்கள் மற்ற சமூகத்தவரோடு சரிசமமாக வாழ வழி வகை செய்திருக்கிறது. இவற்றில் சில் முக்கியமான திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின் வருமாறு:

## கல்வி

கல்லூரி/தொழிற் பயிற்சி/பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தனி ஒருவருக்கு உணவுக் கட்டணம் கணிசமான அளவு கீழ் கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

| | ரூ. 1977ல் | | ரூ. 1982ல் | |
|---|---|---|---|---|
| | சென்னை | வெளியூர் | சென்னை | வெளியூர் |
| கல்லூரி விடுதி | 80 | 65 | 95 | 80 |
| தொழிற் பயிற்சி விடுதி | 80 | 65 | 95 | 80 |
| பள்ளி விடுதி | 45 | 45 | 60 | 60 |

புதியதாக 105 விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. 214 விடுதிகள் கட்டப்பட அங்கீகரிக்கப்பட்டு74விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1982-83-ம் ஆண்டில் 1 ஆரம்ப பள்ளி நடு நிலைப் பள்ளியாகவும் 9நடு நிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டதோடு, 86 ஆசிரியப் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதர கல்விச் சலுகைகளைப் பொறுத்த மட்டிலும் ஆண்டொன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், அரசுப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படுவதோடு, முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தின் கீழ் இலவச மதிய சத்துணவும் வழங்கப்படுகிறது. 1.74 இலட்சம் மாணவ / மாணவியர்கள் இதனால் பயனடைகின்றனர்.

எல்லா ஆதி திராவிட பழங்குடி மாணவர்களும் மாணவியரும் விடுதிகளில் தங்கிப்படிக்க அரசு விடுதிகளில் சேர்க்கப்பட்டும், தனியார் விடுதிகளில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு விடுதிக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டும், இம் மாணவர்களுடன் இதர சாதி மாணவர்களும் சேர்க்கப்பட்டு தீண்டாமை எனும் உணர்வு ஏற்படாதவாறு விடுதிகள் நடத்தப்படுகின்றன.




இம் மாணவர்களுக்கு 10-ம் வகுப்பு வரை இலவச நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள், பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு இதனால் 7.80 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைகின்றனர். 1976 - 77ல் வழங்கப்பட்ட கடன் உபகாரச் சம்பளம் 11.24 இலட்சம் அதிகமான மாணவ மாணவியர் பயனடையும் வகையில் 1981-82-ல் 55·65 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1977-78 முதல் 81-82 முடிய 26, 248 மாணவர்களுக்கு கடன் உபகாரச் சம்பளமாக மொத்தம் ரூ. 203.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

படிப்புக் கட்டணச் சலுகை பெற வருமான வரம்பு நிர்ணயம் 1977-78ம்ஆண்டு முதல் நீக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு உபகாரச் சம்பளம் பெறுவதற்கான உச்ச வரம்பு பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் 1.7.81ல் ரூ. 9,000/- ஆக இருந்ததை ரூ. 12,000/- ஆக உயர்த்தப்பட்டும் மாநில அரசு உபகார சம்பளத்துக்கு தகுதிபெற பெற்றோரது வருமான வரம்பை ரூ.3000/விருந்து ரூ.6000/ ஆக் தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து உபகாரச் சம்பளத் தொகையை மாணவர்கள் விரைவில் பெற வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு கல்வி நிறுவனததின் முதல்வரே வழங்குவதற்கு அதிகாரமளித்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வியில் நல்ல ஆர்வம் காட்டும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு (1) ரூ. 300 தனித் தகுதி மானியமாகவும் 2) மாவட்ட அளவில் நல்ல மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ரூ. 800 லிருந்து ரூ. 960 வரையும் (3) காந்தி நினைவுத் தொகையாக முதலாண்டுக்கு ரூ. 1500ம் தொடர்ந்து மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1000 வீதமும் சேர்த்து வழங்கப்படுகின்றன. சட்டபபடிப்பு முடித்த மாணவர்களுக்கு தொழிலில் ஈடுபட கடன்/மானியத் தொகை வழங்கப்படுகிறது. பட்டதாரி மாணவர்கள். அகில இந்தியப் பணிகளில் சேர வாய்பபு ஏற்படுத்த சிறப்புப் பயிற்சி அளிக்கும் வகையில் அவர்களுககு முன்னோடிப் பயிற்சி நிலையம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## வேலை வாய்ப்பு:

தமிழக அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளில் இம்மக்களுக்கு 18 விழுக்காடு இடத்தை ஒதுக்கீடு செய்து அத்திட்டம் செயல்படுவதை ஆய்வு செயவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு மேல் மட்டக் குழு அமைக்கபட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## பொருளாதார மேம்பாடு

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்புடுகின்றன.

1. விவசாயத்துக்காக பாசனக் கிணறுக்காக ரூ. 5000/- வரையிலும், உழவு மாடுகள், விதைகள் வாங்க ரூ. 600ம் வழங்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்டு ரூ. 7.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு, கருமார், தச்சு, தையல், தோல் தைக்கும் தொழில் போன்ற இருபத்தொன்று வகையான தொழில்களுக்கு இலவசமாக தொழிற் கருவிகள் வழங்குவதற்காக ரூ. 6.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி கருவிகளை வாங்கி வழங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

3. சைக்கிள் கடைகள், ஒட்டல், மளிகை, அச்சகம் போன்ற 31கடைகள் மற்றும் தொழில்கள் நடத்துவதற்காக சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் 1968-69லிருந்து செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ. 11லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆதி திராவிடர் பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு அங்கத்தினர் பங்குக்காக உதவித் தொகை ரூ. 500லிருந்து ரூ. 1500 வரை மான்யம் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள், முதலிய கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்படுத்தி பெருமளவில் ஆதி திராவிட மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் அரசு நிலங்களை/உபரி நிலங்களை தகுதி பெற்ற ஆதி திராவிடர் மக்களுக்கு ஒப்படை செய்தும் அவர்களுக்கும் மற்றும் நிலமுள்ளவர்களுக்கும் விவசாயக் கிணறுகள் ஆழ்குழாய்க்கிணறுகள் முதலியன அமைத்து விவசாயத் துறையில் முன்னேறுவறுதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் செயற்படுத்தப்படும் பலவேறு திட்டங்களிலும் வேலை வாய்ப்புகள் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

## சுகாதாரம் மற்றும் ஏனைய திட்டங்கள் :

மனித சமுதாயத்திற்கு அடிப்படை வசதிகளாக வீட்டுமனை; வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், குடிநீர் கிணறு, மின் வசதி மற்றும் இணைப்புச் சாலைகள் இவைகளை எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் அமைத்துக் கொடுத்தல், தீண்



டாமை ஒழிப்புக்காக கலப்புத் திருமணங்கள், காவல்துறையில் கண்காணிப்புப் பிரிவுகள், நான்கு தனி நீதி மன்றங்கள் அமைத்தல் போன்ற பல சீரிய திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.



## வீட்டு வசதி

இத்திட்டத்தை விரைவு படுத்தும் பொருட்டு 1973-74ம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வளர்ச்சி கழகம் ஆரம்பிக்கப்பட்டு வீடு கட்டும் பணி இந்தக் கழகத்திடம் ஒப்படைத்து 1981-82 மற்றும் 1982-83ம் ஆண்டிற்காக ரூ.400 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கழகத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

சலவைத்துறைகளை கன்னியாகுமரி, செங்கோட்டை வட்டம் (திருநெல்வேலி மாவட்டம்) இவைகளில் வருடம் ஒன்றுக்கு இரண்டு வீதம் கட்டும் திட்டம் 1978-79லிருந்து செயல்படுத்தப்படுகிறது.

## தீண்டாமை ஒழிப்பு

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1976ம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதை கண்டிப்புடனும் தீவிரமாகவும் செயல்படுத்த காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, இருபது சுற்றுக் காவல் படைகள் அமைக்கப்பட்டு, 8500 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4045 வழக்குகளில் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.



கலப்பு மணம் புரிந்து கொண்ட ஆதி திராவிட மக்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 4000 ரொக்க மானியம், ரூ. 300 திருமணச் செலவுக்கு, பாராட்டு பத்திரம், 8 கிராம் தங்கப்பதக்கம் (14 காரட்) மற்றும் இதர சில சலுகைகளும் வழங்கப்படுகின்றன. சாதி ஒழிப்பிற்காக அரும்பாடுபட்ட நம் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நாளாகிய 18.9.78 அன்றும் பிற்பாடும் கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதியர்கள் மேற்படி சலுகைகளுககாக விண்ணப்பம் செய்து கொள்வதற்கான கால வரம்பை ஈராண்டு காலமாக அண்மையில் இந்த அரசு நீட்டித்துள்ளது.

## தன்னிறைவுத் திட்டம்

ஆதி திராவிடர் காலனிகள் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறவேண்டும் என்ற அடிப்படையில்

1. காலனி மற்றும் மயானத்துக்கு இணைப்புச் சாலைகள்.
2. குடி தண்ணீர் வசதி.
3. பள்ளிக் கட்டிடம் கட்டுதல் முதலியன பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக செயல் படுத்தப்படுகின்றன.

இத் திட்டம் இந்தத் துறையில் ஆரம்பிக்கப்பட்டு 1980-81 மற்றும் 81-82ல் 156.29 இலட்சங்கள் செலவிடப்பட்டு நடப்பு ஆண்டில் இந்தப் பணிகளுகாக 75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யபபட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன.

## சிறப்பு உட்பகுதித் திட்டம்

இச் சிறப்புத் திட்டத்தின் நோக்கம் தமிழ்நாடு அரசின் பல்வேறு வளர்ச்சித் துறைகளின் திட்டங்களின் மூலம் வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள ஆதி திராவிட மக்களை வறுமைக் கோட்டுக்கு மேலே கொணர்வதே ஆகும். 1980-81ல் ஆரம்பிக்கபபட்ட இத் திட்டம், வருடம் ஒன்றுக்கு 1.8 லட்சம் குடும்பங்கள் வீதம் 1980லிருந்து 1985 வரை மொத்தம் 9 லட்சம் குடும்பங்களை (அதாவது மொததத்தில் பாதி ஆதி திராவிட இன மக்களை) வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டுவர திட்டமிடப் பட்டு, இதுவரை 2,88,828 குடும்பங்களுக்கு உதவி செய்யப் பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சீரிய பல நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி, திறம்பட செயல் படுத்தி, அவர்கள் சமூக, பொருளாதார மேம்பாடு காணவும் ஏனைய மக்களுடன் சரி நிகர் சமானமாக நிமிர்ந்து நடைபோடவும் அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேதகார், பேரறிஞர் அண்ணா போன்ற சான்றோர்களின் கனவை நனவாக்கவும் தமிழக அரசு பாடுபட்டு வருகின்றது. தமிழக அரசின் இத் திட்டங்களை பயன்படுத்திக் கொண்டு ஆதி திராவிட மக்கள் விரைவிலேயே ஏற்றமிகு வாழ்வு காண்பார்கள்



# அறிவியல் கருத்து பரவ வேண்டும்!

தென்னிந்திய அறிவியல் கண்காட்சி ஜனவரி 19ஆம் நாளன்று சென்னையில் துவக்கம் ஆகியது. 23ஆம் நாளன்று, நிறைவு விழா நடைபெற்றது.

புதுவை மாநில கல்வித்துறை அமைச்சர் திருமதி ரேணுகா அப்பாதுரை அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார். அப்போது அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இன்றைய நவீன யுகம், அறிவியல் யுகம் ஆகும். முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் எல்லாம் வளர்ச்சி பெற்றிருக்கும் அளவுக்கு, நமது இந்திய நாட்டில் அறிவியல் வளர்ச்சி பெறவில்லை.

''நமக்கு அறிவியல் மிகவும் அவசியம்' என்று பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு இணங்க, அறிவியல் கண்காட்சிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக விளங்குகின்றன. இக் கண்காட்சிகளின் வாயிலாக - கல்வி, ஆர்வம், திறமை ஆகிய அனைத்தும் பெற முடிகிறது.''

நிறைவு விழா உரையாற்றிய அண்ணாபல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

''நமது நாட்டைப் பொறுத்த வரையில், அறிவியல், கல்வியின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது. அறிவியலும், தொழில் நுட்ப இயலும் நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்க உதவும் படைக் கலன்கள் ஆகும். 'கண்டு பிடிப்புகள்' என்பவை ஒரு காலத்தில் தற்செயலாக நேர்ந்திருக்கின்றன. திடீரென்று உதயமாகியிருக்கின்றன. தற்காலத்தில் 99 சதவிகிதக் கண்டு பிடிப்புகள் முறையான - திட்டமிட்ட செயல்களின் மூலம்தான் நிகழ்கின்றன.

''கடந்த பத்தாண்டுகளாக நோபெல் பரிசு பெறுபவர்களைச் சற்று கவனித்துப் பார்த்தால், பெரும்பாலும் விஞ்ஞான ஆய்வுக்காகப் பெறுபவர்களாகவே இருப்பர்.''

மாணவ, மாணவியர்க்குப் பரிசுகளையும் படிப்புதவித் தொகையையும் ஆசிரியர்களுக்கு ரொக்கத் தொகையையும் அளித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''சமுதாயத்தை அழிந்து போகவிடாமல் - பாதுகாப்பதற்காக நமக்கு இருக்கும் ஒரே ஒரு கதி-ஒரே ஒரு கருவி-ஒரே ஒரு துறை அறிவியல்தான். இதை விட்டால் நமக்கு வேறு எதுவும் கிடையாது. அறிவியல் இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்து கொண்டு, அதை எப்படி நாம் வாழ்க்கைக்குப் பயன்படுத்த இருக்கிறோம் என்பதை இந்த அறிவியல் கண்காட்சி எடுத்துச் சொல்கிறது.

''தங்கள் பிள்ளைகள் அறிவியலை ஆங்கில போதனா மொழியின் மூலமாகக் கற்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் ஆங்கில மீடியத்தில் கற்று, ஆங்கிலம் நன்றாகப் பேசக் கற்றுக் கொள்கின்றனர்; ஆனால் ஆங்கிலத்தின் மூலம் படித்த அறிவியல் கருத்துக்களை விட்டு விடுகின்றனர். குமாஸ்தா வேலை கிடைத்தால் போதும் என்ற நிலையில் அவர்கள் கல்வி கற்பதுதான் இதற்குக் காரணம்.

''விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும், நமது பிரச்சினைகளை , நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அறிவியலை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

'வேற்று மொழிப் படிப்பு,மூட நம்பிக்கையில் நாம் வைத்திருக்கும் ஆர்வம் ஆகிய இரு குறைபாடுகளை நாம் களைந்து, அறிவியலில் நம்பிக்கை வைத்தால், அறிவியலால் நமது நாட்டின் பிரச்சினைகளைத்தீர்க்க முடியும், மற்ற நாடுகளைவிட மிகச் சிறந்த வாழ்க்கையை நமது மக்களுக்கு நாம் வழங்க முடியும் என்பதை உணர்த்துவதற்காகவே இது போன்ற அறிவியற் கண்காட்சிகள் உருவாக்கப்படுகின்றன.

''இந்த அடிப்படையை நாம் உணர்ந்து, ஏற்று, விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞானக் கருத்துக்களை நாம் பொதுமக்களிடம் பரப்ப வேண்டும். சென்னையில் பெரியார் அறிவு மையம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. திருச்சி, கோவை ஆகிய மாவட்டங்களிலும் அறிவியல் மையங்கள் உருவாக்கப்படுகின்றன. திருநெல்வேலியில் மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றின் முயற்சியால் மாவட்ட அறிவியல் மையம் உருவாக்கப் படுகின்றது.

''அறிவியலில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கும் தமிழக அரசு, மக்களிடையே அறிவியல் கருத்துக்களைப் பரப்ப முடியும் என்ற நம்பிக்கையில் செயல் பட்டு வருகிறது.''

நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்





# பழமையில் புதுமை

பட்டுக்கோட்டை
எஸ். பாப்பையன்
துணைத் தலைவர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

பாரத நாடு பழம்பெரும் நாடு. பண்பாட்டால், கலைச்சிறப்பால் கைவினைத் தொழில்களால், சடுஇணையற்று விளங்கும் நாடு.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி" என்று தமிழ்க்குடியைப் பாராட்டுகிறோம். பழமை என்பது பெருமைக்குரியதே.

கால வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி ஆகியவற்றால், பழமையிலிருந்து புதுமை பூப்பது, இயற்கை விதி ஆகும்.

காந்தி அடிகளின் தத்துவ அடிப்படையில், எழுந்த கதர் கிராமத் தொழில்களும், இயற்கை விதிப்படி மாற்றங்களோடு வளர்ந்து வருவதை நடைமுறையில் நாம் காண இயலும்.

எந்தத் தத்துவமும், சமுதாயத்தின் அவசியம் கருதி, தேவைகள் கருதி, எதிர்பார்ப்புகள் கருதித்தான் நிலைத்து நிற்க முடியும்.

கதர் கிராமத் தொழில் தத்துவம்-அடிமைப்பட்ட இந்தியாவில் மட்டுமல்ல, உரிமை பெற்ற பாரதத்தில்கூட நிலைத்து நிற்கக் கூடிய தகுதி பெற்றது ஆகும்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியா எப்படி இருந்தது?

பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் வாழ்ந்தார்கள். ஆண்டில் ஆறுமாதம் கூட முழு வேலை வாய்ப்பு விவசாயத்தில் கிடைப்பதில்லை. பரம்பரைத் தொழிலாக கிராமங்களில் செய்து வந்த தொழில்கள் அந்நியர் ஆட்சியில் அழிக்கப்பட்டு சீரழிந்து விட்டன.

வறுமையும், பிணியும், அறியாமையும், அடிமைத்தனமும், மக்கள் வாழ்வைச் செல்லரிக்க வைத்துவிட்டன.

அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, இரண்டும் இணைந்து செல்வதுதான் இந்திய விடுதலைக்கு வழி என்று காந்தி அடிகள் கருதினார். அந்நிய ஆட்சியை எதிர்ப்பது அரசியல் விடுதலை ஆயிற்று.

வீழ்ச்சியுற்றுக் கிடந்த கிராமத் தொழில்களை எழுச்சி பெறச் செய்வது பொருளாதார விடுதலை ஆயிற்று.

விவசாய வேலைக் காலம் ஆறு மாதங்கள் போக வேலையற்று இருந்த எஞ்சிய ஆறுமாதங்களில், நாட்டின் ஆடைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதைப் பற்றி காந்தியடிகள் தீவிரமாகச் சிந்தித்தார். அதன் விளைவாக இராட்டை இயக்கம் தோன்றிற்று.

மற்றத் தொழில்களுக்கு நிகராக இராட்டைகளில் நூற்பவர்களுக்குக் கூலி தர இயலவில்லை. காந்தியத் தத்துவத்தில் வேலை வாய்ப்பு என்பது தான் முக்கியமான குறிக்கோள் ஆகும்.

எனவே, போதிய வருமானம் கிட்டும் வகையில், இந்த இராட்டையை மாற்றி அமைப்பவருக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசு அளிப்பதாக 1946ல் காந்திஜி அறிவித்தார்.

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த ஏகாம்பரம் என்ற தமிழர் நான்கு கதிர் கொண்ட இராட்டையைக் கண்டு பிடித்துப் பரிசைப் பெற்றார்.

இதில் நூற்பவருக்குக் கணிசமான வருவாய் கிடைத்தது. பழைய இராட்டை விடை பெற்றது. புதிய நான்கு கதிர் இராட்டை விரைந்து பரவியது.

வளரும் பொருளாதாரத்தில் விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாத ஒன்று.

எனவே நான்கு கதிர் இராட்டையில் கிடைக்கும் வருவாயை உயர்த்தும் வகையில் மேலும் ஆராய்ச்சிகள் துவங்கின.

இந்த ஆராய்ச்சியின் விளைவாக நான்கு கதிர், இராட்டை, ஆறு கதிர் இராட்டையாக மாறியது.

மேலும் இந்த இராட்டை முற்றிலும் உலோகத்தால் செய்யப்பட்டது. இந்த இராட்டையில் நூற்பது என்பது எளிது. சீரான முறுக்கும் வலிவும் உள்ள நூலை உற்பத்தி செய்ய முடிகிறது.

பன்னிரெண்டு கதிர் இராட்டையில் ஒரு நூற்பாளருக்கு ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் முதல் பன்னிரெண்டு ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம், இந்த நூற்பின் மூலம் முழு நேர வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. படித்த-வேலையற்றிருக்கும் பல பெண்கள் மிகுந்த ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். கைம்பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

நூற்பதற்குத் தேவையான பஞ்சு அடித்தல், பட்டை போடுதல் ஆகியவைகளிலும் புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன.

நூற்ற நூலை நெசவு செய்வது அடுத்த பணியாகும்.

முன்பெல்லாம், பழைய ஒரு கதிர் இராட்டையில் நூற்ற நூலைக்கொண்டு பழையமுறைத் தறியில் மிகுந்த சிரமத்துடன் நெசவு செய்து வந்தார்கள்.

ஒருநாளைக்கு ஒரு நெசவாளர் ஐந்து ரூபாய்தான் கூலியாகப் பெற முடிந்தது. நெசவு செய்யும் தறியிலும் நவீன ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன.

இன்று 'நேப்பாளித் தறி' என்ற புதுமைத் தறியைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம் தரமான துணி, நெசவு செய்யப்படுகிறது. நெசவாளர்களும் நாள் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை வருவாய் பெறுகிறார்கள்.

நாள்தோறும் புதிய, புதிய மாறுதல்கள் தோன்றுகின்றன.

மக்களின்-தேவை, விருப்பம் ஆகியவற்றிற்கேற்ப, கதர் கிராமத் தொழில்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பாலியஸ்டர் துணிகள் பெரிய அளவில் பயன்படுத்தப்படும் காலம் இது.

இதற்கு ஈடு கொடுக்கும் வகையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும், பாலியஸ்டர் கதரை உற்பத்தி செய்கிறது.



குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் பருத்தி இழைகளையும், பாலியஸ்டர் இழைகளையும் கலந்து, இராட்டையில் நூற்று, நெசவு செய்து விற்பனை செய்து வருகிறது.

மில் பாலியஸ்டர்களுக்கு இணையாக உழைக்கக்கூடியவை கதர் பாலியஸ்டர்கள். மில் பாலியஸ்டரை விடக் குறைந்த விலையில், விற்கத் தகுந்த வகையில், கதர் பாலியஸ்டர் மீது விதிக்கப்படும் 'கலால்' வரியை நீக்குமாறு மத்திய அரசை வாரியம் கோரியுள்ளது.

இந்த வரி நீக்கப்பட்டால், கதர்த்தொழிலில் பெரிய மாற்றம் உருவாகும் என்பது உறுதி.

இந்த வாரியம் மேற்கொண்டுள்ள பல்வேறு கிராமத் தொழில்களில் நாட்டுச் செக்கில் எண்ணெய் பிழிதலும் ஒன்று.

கிராமப் புறங்களில், நாட்டுச் செக்கை இயக்குவதற்கு மாடுகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இதனால், பராமரிப்புச் செலவு கூடுதலாக இருந்தது. திறந்த வெளியில் இயங்க வேண்டியிருந்ததால், மழைக் காலங்களில் அவை செயல்படவும் முடியவில்லை.

எண்ணெய் பிழியும் திறனும் குறைவாக இருந்தது. இந்தச் சிரமங்களை நீக்கும் வகையில், மாடுகளுக்குப் பதிலாக இரண்டு குதிரைச் சக்தியுள்ள மின் மோட்டார்களைப் பயன்படுத்தி, செக்கை இயக்கும் வகையில் புதுமையான மின் செக்குகளைத் தயார் செய்து, கடன் உதவியுடன் வழங்கப்படுகிறது.

இதனால் பழமையான முறையில் ஒரு செக்கு வைத்திருந்தவர், ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் கூட நிகர வருமானம் பெறமுடியாத நிலை இருந்தது. இது மாறி, புதுமை மின் செக்கு மூலம் ஒரு நாளைக்கு முப்பது முதல் நாற்பது ரூபாய் வரை வருமானம் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

இதிலே செய்யப்பட்ட புதுமையான மாற்றம் காரணமாக, புதிய மின் செக்கினை, படித்தவர்கள், பட்டதாரிகள், பெண்கள் யாவரும் பயன்படுத்தி வருமானம் பெற முடியும் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய முறையின் காரணமாக நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு உரிய தரம் எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை, என்பதையும் குறிப்பிட்டாக



## உடல் ஊனமுற்றோர் தொழில் தொடங்க...

தமிழ்நாட்டில் கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள உடல் ஊனமுற்றோர் சொந்த வேலை வாய்ப்புப் பெறும் வகையில் தொழில் தொடங்க உதவுவதற்காக, தமிழ்நாடு அரசு ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுபவர்களைத் தேர்வு செய்ய ஊராட்சி ஒன்றியங்கள் மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், குழுக்கள் அமைக்கப்படும்.

---

வேண்டும். காரணம், நாட்டுச் செக்கில் உள்ளவாறே எண்ணெய் பிழியும் பகுதியான உரல், உலக்கை இரண்டும் மின் செக்கிலும் மரத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பத்தாயிரம் மின் செக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 3000 மின் செக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதை அமைப்பதற்கு வேண்டிய கருவிகளையும் பணிக்கூடச் செலவுகளையும் இந்த வாரியம் கடனாக வழங்குகிறது.

அடுத்து சோப்புத் தொழிலையும் இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது. ஆரம்பகாலத்தில் வெறும் சலவை சோப் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தது. தற்போது குளியல் சோப்பும் தயாரிக்கப்படுகிறது.

உலகிலேயே தமிழகத்திற்கு மட்டுமே சிறப்புத் தருகிற பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் 'குறிஞ்சி' மலரின் பெயரால் குறிஞ்சி என்ற குளியல் சோப் தயாரிக்கப்படுகிறது. இதில் சந்தனம், மல்லிகை, ரோஜா என்ற தனித்தனிச்சிறப்பு மணம் மிக்க சோப்புகள் தயார் செய்யப்படுகின்றன. பொது மக்களிடம் இந்த ரக சோப்பிற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

உணவுக்குப் பயன்படாத வேம்பு, புன்னை, புங்கை போன்ற எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கும் எண்ணெய்யைக் கொண்டு இந்த சோப்புகள் தயார் செய்யப்படுகின்றன.

கிராமத்தொழில்களில் மிகவும் பழமையானது மண்பாண்டத் தொழில். இத்தொழிலையும் வாரியம் ஏற்று இதிலும் புதுமைகளைப் புகுத்தி வருகிறது. பழமையான முறையில் மண்பாண்டங்களை உருவாக்குவதற்குத் திருகை என்ற கருவி பயன்படுத்தப்பட்டு வந்தது. இதை இயக்குவதற்கு இரண்டு பேர் தேவை.

அத்துடன் கடும் உடல் உழைப்பும் தேவைப்பட்டது. தற்போது மின்சாரத்தால் இயங்கக் கூடிய 'ஜைஷலா வீல்' என்ற கருவி புகுத்தப்பட்டுள்ளது. அரைக் குதிரை சக்தியுள்ள இந்தக் கருவியின் மூலம் ஒரே நபர் மிக எளிதாக மண்பாண்டங்களை உருவாக்க முடிகிறது.

தனித்தனியாகத் தொழில் செய்பவர்கள் தங்கள் பொருட்களைத் தொலை தூரங்களில் உள்ள இடங்களுக்குக் கொண்டு சென்று விற்க முடியாத நிலை இருந்தது. இதனால் வசதி படைத்தவர்கள் இடைத் தரகர்கள் ஆனார்கள். இதனை மாற்றிட மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மானாமதுரை, போடி, சுங்காங் கடை போன்ற ஊர்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆயிரக்கணக்கான மண்பாண்டத் தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

பனைமரத் தொழிலிலும் புதுமை புகுத்தப்பட்டுள்ளது. மரத்தை மார்புடன் அணைத்து, காலால் உந்தி ஏறும் பழைய முறைக்குப் பதிலாக, "புல்லி சிஸ்டம்ஸ், மூலமாக முறுக்குக் கம்பியில் தொங்கிக் கொண்டு ஒரு சில வினாடிகளில் மரத்தில் ஏறி இறங்கும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்கள்கூட, பனைமரத்தில் ஏறிப் பதனீர் இறக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பனங்கற்கண்டு தயாரிக்கப் பதனீரை மண்பானையில் இட்டுப் புதைத்து வைத்துத் தயாரிக்கும் முறை இருந்தது. இதனால் பனங்கற்கண்டு கறுத்த நிறமாகவும், அசுத்தம் சேரும் தன்மையுடையதாகவும் இருந்தது.

இதற்குப் பதிலாக எளிய கருவிகள் மூலம் சுகாதார முறையில் பனங்கற்கண்டு தயாரிக்கும் புதுமை முறை புகுத்தப்பட்டது. இதன் மூலம் தூய்மையான, நல்ல நிறமிக்க பனங்கற்கண்டு கிடைக்கிறது.

இயந்திரங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படும் துடைப்பான்கள் தயார் செய்ய வெளிநாட்டார் நமது பனைத்தும்பினை வாங்குகிறார்கள். பல வண்ணங்களில் தும்புகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பனைமரம் ஒரு ஆண்டில் ஒரு பருவத்தில் மட்டும் காய்க்கிறது. தென்னையைப் போல ஆண்டு முழுவதும் பனையையும் காய்க்க வைக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

பனை ஆராய்ச்சிக்கு என ஸ்ரீவில்லிபுத்தூரில் 24 லட்ச ரூபாய் செலவில் ஓர் ஆராய்ச்சிக்கூடம் நிறுவப்பட்டுள்ளது.

பனையின் உயரத்தைக்குறைக்கவும், வளர்ந்த பனையின் மேல் பகுதியில் பதியன் முறையில் வேர்விடச் செய்து அத்துடன் மரத்தை வெட்டி எடுத்து வேறு இடத்தில் வைத்துக் குட்டையாக்கி வளர்க்கவும் இங்குச் சோதனை செய்யப்படுகிறது.

தேன் ஓர் அருமருந்து. தேன் சேகரித்து விற்பனை செய்யும் தொழிலை வாரியம் சிறப்பாகச் செய்து வருகிறது.

தீப்பந்தம் கொண்டு தேனைப் பிழிந்து எடுப்பது பழைய முறை. இதனால் தேன் கூடுகள் முற்றிலும் அழிந்து விடும். தேனீக்கள் இறந்து விடும். தொடர்ந்து உற்பத்திக்கான வாய்ப்பு இதில் இல்லை.

தேன்கூடு சிதறாமல், தேன் எடுக்கும் வகையில் புதிய கருவிகள் புகுத்தப்பட்டுள்ளன. தேனீக்குச் சிறிதும் இடையூறு இம்முறையில் இல்லை. சிதறாத தேன்கூட்டில் இயல்பாகத் தேனீக்கள் தேன் சேகரிக்க இந்தப் புதிய முறையால் இயலுகிறது. தேன் உற்பத்தியும் பெருகுகிறது.

கதரும் கிராமத் தொழில்களும் சீராக வளர்ச்சி பெறும்





## முதல்வரின் முத்துக்கள்

**தே**சியம் என்பது ஒரு தனி ஜாதிக்கோ, ஒரு மொழியினருக்கோ சொந்தமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் சொந்தம்.

**ச**மூகம் என்று வரும்போது அது பரவலாக இருக்க வேண்டும்; அனைத்துப் பிரிவிலே வாழும் மக்களுக்கும் அது வழிகாட்டுவதாக இருக்கவேண்டும். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும்.

**பொ**ருளாதார நிபுணர்களுடைய கண்ணோட்டம் வேறு; பாமர மனிதர்களுடைய வாழ்க்கைக் கண்ணோட்டம் வேறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் இந்தியத் துணைக் கண்டத்தில் என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்லுகின்றேன். எந்தப் பொருளாதார நிபுணர்கள் பேசினாலும் உச்சக் கட்டத்தில் நின்று கொண்டு பார்க்கின்றார்கள், சொல்லுகின்றார்களே தவிர, அடிமட்ட மக்களுடைய உள்ளுணர்வினுடைய பிரதிபலிப்பாக, எதிரொலியாக அது அமையாததன் காரணம்தான் இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பொருளாதாரப் பிரச்சினை என்பதை நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகின்றேன்.

**தே**சிய ஒருமைப்பாடு-தேசிய ஒருமைப்பாடு என்று சொல்கின்றார்களே இந்தத் 'தேசியம்' என்பதற்கு ஒட்டுமொத்தமாக உள்ள பொருளை நன்றாகப் பேசக்கூடியவர்கள் கூடப் புரிந்து கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது. 'தமிழ் தேசியம்' என்று இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழருடைய வளர்ச்சி, தமிழருடைய வாழ்வு, தமிழருக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற நிலம் இவைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து, அதற்காக ஒருவன் பாடுபடுகிறான்; உழைக்கிறான்—என்றால் அவன் தேசியவாதி இல்லையா? பல தேசியவாதிகள் ஒன்று கூடினால்தான் அனைத்திந்திய தேசியம் ஆக முடியும். பல மாநிலங்களுடைய தேசிய உணர்வுகள் ஒன்றுபடும்போதுதான் ஒருமைப்பாடு வரும்.

---

பொருட்டு, தனி நபருக்கு நிதி உதவும் திட்டம் அமலாக்கப்பட்டது.

இதுகாறும் கூறிவந்த தொழில்களிலும் இன்ன பிற கிராமத் தொழில்களிலும் ஈடுபட்டு வந்த தனி நபர்களுக்குக் கடனும் மானியமும் வாரியம் வழங்கி வருகிறது.

கடனுக்கு நான்கு சதவிகித வட்டிதான் வசூல் செய்யப்படுகிறது. ஐந்தாண்டுகளில் சுலபத் தவணைகளில் திரும்பச் செலுத்தலாம்.

சுண்ணாம்புத் தொழில், தச்சு, கொல்லுத் தொழில், காலணித் தொழில் போன்ற கிராமத் தொழில் செய்பவர்களுக்கு இலவசமாகத் தொழில் நுட்ப உதவியும், கடனுதவியும் மானியமும் அளிக்கப்படுகின்றன.

கதரும் கிராமத் தொழில்களும் பெரும் அளவு வளர்ச்சி பெற வேண்டும். கிராமங்களில் வேலைவாய்ப்பு, பன்மடங்கு பெருக வேண்டும் என்ற குறிக்கோளில் இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் மிக முக்கியமான அரசாணை ஒன்றினைப் பிறப்பித்தார்கள்.

அரசுத் துறைகளுக்கு வேண்டிய பொருட்களில் கதர் கிராமத்தொழில் வாரியத்தில் கிடைக்கும் பொருட்களை வாங்கவேண்டும். ஏனையவற்றை வேறு துறைகளில் வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது.

இவ்வாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு முன்னுரிமை வழங்கியதன் மூலம் உற்பத்தி, விற்பனை, வேலை வாய்ப்பு ஆகியவை பல்கிப் பெருகின.

1976-1977ல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் இரண்டு லட்சத்துப் பதினேழாயிரம் பேர்.

1981-82ல் வேலை வாய்ப்புப் பெற்றிருப்போர் நான்கு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் பேர்.

சகோதர நிறுவனங்கள் அளித்துள்ள வேலை வாய்ப்பையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் சுமார் ஏழு லட்சம் பேர் கதர் கிராமத் தொழில்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். பெயரளவு பழமையாகத் தோன்றினாலும், செயல் முறையிலும் தரத்திலும் நவீன முறைகள் புகுத்தப்பட்டதன் காரணமாக அனைத்திந்திய அளவில் தமிழக கதர் கிராமத் தொழில்கள் தலைசிறந்து விளங்குகின்றன.

கதர் கிராமத் தொழில் பொருட்களை வாங்குவதும், அத்தொழிலை வளர்ப்பதும் ஒரு சமூகப் பொறுப்பாகும். பொது மக்களில் ஒவ்வொருவரும் அன்றாடம் தாங்கள் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்றாவது கதர் கிராமத் தொழில்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற உறுதியை மேற்கொண்டால், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களில் மேலும் லட்சக் கணக்கானவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்க முடியும்.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றார் காந்தி அடிகள்.

கிராமங்கள் வாழவும் வளம் பெறவும் கதர்கிராமத் தொழில்களை ஆதரிப்போமாக!



# இலக்கியத்தில் வேளாண்மை


திரு இல. செ. கந்தசாமி,
தமிழ்ப் பேராசிரியர்,
வேளாண பலகலைக கழகம்,
கோவை.


வேளாண்மை உலகத் தொழில்கள் அனைத்திலும் மூத்த தொழில்; முதன்மையான தொழிலும்கூட. அத்தொழிலில் காலத்திற்குக் காலம் விரைவான பயனுள்ள முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. என்றாலும் பண்டைய வேளாண் பொறியியல் நுட்பங்களை இன்றைய வேளாண் பொறியியல் அறிஞர்கள் தெரிந்து கொள்வதால், அவற்றிலிருந்து சில புதிய நுட்பங்கள் தோன்றவும், பழமை நுட்பங்களே சிறப்பாக இருக்குமானால் அவற்றிற்குப் புத்துயிர் அளித்துப் புதுப்பிக்கவும் வாய்ப்பாக இருக்கும்.

**நான்கு பிரிவுகள் :**

நீர் நிர்வாகம், பண்ணைக் கருவிகள், கட்டமைப்புகள் வேளாண் பதனச் செய்தல் ஆகிய பிரிவுகள், வேளாண்மைப் பொறியியலின் இன்றியமையாத பிரிவுகளாகும்.

**நீர் நிருவாகம்:**

தண்ணீர் இயற்கை தந்த இனிய செல்வம். உணவை உண்டாக்கவும் உணவாகவும் அமைவது நீர். நீர் இன்றேல் இவ்வுலகம் இல்லை. 'நீரின்றி அமையாது உலகு' என்பது நம் முன்னோர் வாக்கு. நிலமும் நீரும் இயைந்தால் அன்றி உணவு இல்லை.

'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்' என்ற கருத்து நீர் வளம் சிறந்திருந்தால் விளைச்சல் சிறந்து விளங்கும் என்ற அடிப்படையில் தோன்றியதே ஆகும்.

எதற்கும் அளவாக நீர் பாய்ச்ச வேண்டும் என்பதை 'நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்' என்ற பழமொழியாலும், தண்ணீரை வீணாக்கினால் நமது பெருமை அழியும் என்னும் பொருள்பட 'நீரைச் சிந்தினாயோ சீரைச் சிந்தினாயோ?' என்ற பழமொழியாலும் அறியலாம்.

மழைக் காலத்து நீரை ஏரி குளங்களில் சேமித்துக் கொண்டு நீர் இல்லாக் காலத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். மழையிலும் தன் காதலியைக் காண வருகின்றான் ஒரு காதலன். பண்டை நாளில் மழைக் காலத்தில் குளம் நீர்நிறைந்து கரை உடைந்துவிடாமல் இருத்தற்பொருட்டு காப்பான் அமர்த்துவது உண்டு. அவன் தூங்காமல் மழையில் நனைந்து கொண்டே, குளத்தைச் சுற்றிச் சுற்றி கரை உடையாமல் பாதுகாப்பான். அவனைப் போன்று மழையில் நனைந்து இடுப்பிலே வாளும் காலிலே கழலும் மார்பிலே மாலையும் அணிந்த தலைவன் இந்த இரவிலும் வந்துள்ளான் என்ற தலைவிக்குச் சொல்கிறாள்-தோழி. இந்தப் பாடல் பண்டைய நாளில் மழை நீரைச் சேமித்துப் பாதுகாத்த பான்மையை விளக்குகின்றது.

> ''மாரிக் குளத்துக் காப்பான் அன்னன்
> தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்
> பாசி சூழ்ந்த பெருங்கழல்
> தன்பணி வைகியவரிக் கச்சினனே'

**ஐங்குறு-206**

இன்று கழனிகளைக் காப்பது போலவே காடுகளையும் உருவாக்குகின்றோம்; பாதுகாக்கின்றோம்.

**பண்ணைக் கருவிகள்:**

மனித உழைப்பே முதன்மையாகப் போற்றப்பட்டது. பண்டைநாளில் வேளாண்மைக் கருவிகளும் தனி மனித உழைப்புக்கு ஏற்பவே - அக்காலத் தேவைக்கு ஏற்பவே அமைந்திருந்தன. உழவுக் கருவிகள் நீர் இறைக்கும் கருவிகள், களை எடுக்கும் கருவிகள், பாதுகாப்புக் கருவிகள், அறுவடைக் கருவிகள் முதலியன பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

உழவுக் கருவிகள் நிலத்தை உழ 'ஏர்' என்ற கருவி பயன்படுத்தப்பட்டது. அதற்குக் கலப்பை, நாஞ்சில் என்ற வேறு பெயர்களும் உண்டு. ஏர் பெண் யானையின் வாய்போன்று வளைந்த வாயையும் உடும்பினது முகம் போன்று பெரிய கொழுவையும் உடையதாக இருக்கும். கொழு மறையும்படி அமுக்கி உழுவார்கள்.



> 'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
> உடும்புமுக முழுக்கொழு மூழ்கஊன்றி'

**—பெரும்பாண்-199-220**

நீர் இறைக்கும் கருவி கிணற்றிலிருந்தும் குளத்திலிருந்தும் நீர் இறைப்பதற்கு ஆம்பி (பன்றிப் பத்தர்) கிழார் (பூட்டைப் பொறி) ஏற்றம், பிழா, முதலாய கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர் முன்னவை இரண்டும் கிணற்றிலிருந்து நீரை இறைக்கப் பயன்படும் பறி போன்ற கருவிகள். பின்னவை: இரண்டும் இறைகூடை போன்று குளத்திலிருந்தும் ஏரியிலிருந்தும் நீர் இறைக்கப் பயன்படுத்தப் பட்டவை.

> ஆம்பியும் கிழாரும் வீங்கிசை ஏத்தமும்
> ஓங்கு நீர்ப் பிழாவும்

**—சிலம்பு-நாடுகாண்-110-111**

எந்திரங்கள் வைத்து நீர் இறைத்த செய்தியை மணிமேகலையில் 'எந்திரக் கிணறும்' (மணி. 19: 102) என்று கூறப்பட்டுள்ள தொடர் கொண்டு அறிய முடிகின்றது.

களை, காப்பு, அறுவடைக் கருவிகள் விதைப்பதற்கென்று தனிக் கருவிகள் இருந்தது பற்றிச் செய்தி இல்லை. எள்ளைக் கையில் எடுத்து விதைக்கும்போது 'வீச்சுக்கு ஏழு எள்'' இருக்க வேண்டும் என்ற குறிப்பைக் கொண்டு மற்ற தானியங்களையும், அனுபவத்தால் கை விதைப்பாகவும் நாற்று விட்டும் நட்டார்கள் என்பதை அறியலாம்.

களை எடுக்க 'துளர்' என்ற கருவியைப் பயன்படுத்தி உள்ளனர். அது இன்றைய களைக் கொத்தைக் குறிப்பதாகும்' துளர்படு துடவை' என்ற தொடருக்குக் களை வெட்டிய தோட்டம் என்பது பொருள்.

விளைந்த பயிர்களில் பறவைகள் விழாதிருக்கக் குளிர், தட்டை முதலாய கிளிகடி கருவிகளைப் பயன்படுத்தி உள்ளனர். பயிர்களைச் சேதம் செய்யும் - பன்றி முதலாய விலங்குகளைப் பிடிக்க 'கிடார்' என்ற பொறியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அறுவடைக்குக் குயம் (அரிவாள்) என்ற கருவியைப் பயன்படுத்தி உள்ளார்கள். அது இன்றைய கருக்கு அரிவாளைப் போன்றதாகும்.





பண்ணைகளில் வரப்பும் வாய்க்காலும் அமைப்பதையும் அதைப் போன்ற பல்வேறு பணிகளைச் செய்வதையும் கட்டமைப்புகள் என்கிறோம். பண்டைநாளில் ஒவ்வொரு தோட்டத்தைச் சுற்றியும் கரை அமைத்து இருந்ததை 'கரையுள்ளதே தோட்டம்' என்ற பழமொழி உணர்த்துகின்றது. அதனால் மழைநீரும் வீணாகாது; மழை நீரால் மண்ணரிப்பு ஏற்பட்டு நிலவளமும் கெடாது.

அதேபோல் தோட்டத்தைச் சுற்றி ஆடு மாடு புகாது, பாதுகாப்புக்காக வறட்சியான காலங்களிலும் காய்ந்து போகாத கள்ளிச் செடிகளை வேலியாக அமைத்துக் கொண்ட செய்தியையும் 'கள்ளிவேலியே வேலி கரிசல் நிலமே நிலம்' என்ற பழமொழியால் அறிய முடிகின்றது. பண்டைய இலக்கியங்களில், இடுமுள் வேலி என்றும் வாழ்முள்வேலி என்றும் இரண்டு வகையான வேலிகள் குறிக்கப்படுவதையும் அறியலாம்.

நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால்கள் புல்பூண்டு முளைக்காமல் நன்றாகச் செதுக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்போதுதான் தண்ணீர் வீணாகாமல் வயலுக்குப் போய்ச் சேரும். இல்லாவிடின், சிறு சிறு புற்கள் இருந்தாலும் அவை தண்ணீர் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்திவிடும் என்பதை 'முடப்புல்லும் முக்குறுணித் தண்ணீரைச் செறுக்கும்' என்ற பழமொழியால் அறியலாம்.

பெரிய நீர் நிலைகள் அமைக்கும் போதும் குளங்கள் அமைக்கும் போதும் குன்றுகளும் பாறைகளும் இடையிடையே இருக்கின்ற இடமாகப் பார்த்து நீர் வரத்துக்கு ஏற்ப மேற்புறம் எட்டாம்நாள் பிறைச் சந்திரன் போல் அகன்ற நிலையில் கரையமைத்து நீர்த் தேக்கங்களை உருவாக்கினார்கள் என்பதை

> அறையும் பொறையும் மணந்த தலைய
> எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
> தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ!

**—புறம் 118**

இத்தகைய கட்டமைப்பு முறைகளே பண்டை நாளில் இருந்தன என்பதை அறிய முடிகின்றது. இந்த அடிப்படைக் கருத்து இன்றும் பொருந்தி வருவதைக் காணலாம்.



# வைகை அணையில் சுற்றுலா விழா

திரு ப. சாமிநாதன், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

தமிழ்நாடு அரசின் சார்பில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும், உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் மதுரை மாவட்டம் வைகை அணையில் பொங்கல் சுற்றுலா விழாவின் தொடக்க விழா—திருவள்ளுவர் திருநாள் (15-1-83) அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டுதோறும் அரசின் சார்பில் நடைபெற்றுவரும் பொங்கல் சுற்றுலா விழா மாவட்டத் தலைமையிடத்திலேயே நடைபெறும். இந்த ஆண்டு முதல் முறையாக ஓர் சுற்றுலாமையத்தில்—வைகை அணையில் பொங்கல் சுற்றுலாவிழா நடைபெற்றது தனிச்சிறப்பாகும். இதன் மூலம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் வைகை அணையைச் சுற்றி உள்ள வண்ண மலர்களையும், எழில் கொஞ்சும் பூங்காவையும் கண்டு மகிழும் வாய்ப்பினையும் பெற்றனர்.

விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கு. ஆளுடைய பிள்ளை தொடக்கி வைத்தார். அண்மையில் டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலைநிகழ்ச்சி நடத்திய மதுரை வேலு குழுவினரின் கிராமியக் கலைநிகழ்ச்சிகளையும், கலைமாமணி உடையப்பா குழுவினரின் 'வள்ளி திருமணம்' நாடகத்தினையும் பெருந்திரளாகக் கூடியிருந்த சுற்றுலாப்பயணிகள் பார்த்துப் பரவசமடைந்தனர்.

16-1-83 அன்று, அலங்காநல்லூரில் கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்த தமிழர் வீரவிளையாட்டாம் 'ஜல்லிக்கட்டினை' வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கண்டு பாராட்டினர். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், ஜல்லிக்கட்டைக் காண அரசின் சார்பில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல 17-1-83 அன்று மதுரை - காந்தி மியூசியத்தில் நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

ஆண்டுதோறும் தமிழகஅரசின் சார்பில் தமிழகத்தினுடைய முக்கிய பகுதிகளில் பொங்கல் விழாவையொட்டி பொங்கல் நாளன்றும், அதற்கு அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகவும் அதற்கு அடுத்த நாளை உழவர் திருநாளாகவும் இந்த மூன்றையும் இணைத்துச் சுற்றுலாத் திருவிழாவாகவும் நடத்துகின்ற ஒருமுறையை மாண்புமிகு தமிழக முதல்வராகப் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்திலே மிகச் சிறப்பாக இதை நடத்திக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்ச்சிகள் நடத்துகின்ற நேரத்தில் இதற்கு முன்னாலே சென்னையில் சென்னையை ஒட்டிய மாமல்லபுரத்தில் மாத்திரம் இந்த நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்த நிலைமைகளை மாற்றி தமிழகம் முழுவதும் இந்த விழாக்களுக்கு உள்ள சிறப்பை மக்களுக்கு எடுத்து விளக்குகின்ற வகையில் மாவட்டங்களிலே இதை நடத்துகின்ற திட்டத்தை அறிவித்து, கடந்த 5 ஆண்டுகளாக இதை நடத்திக் கொண்டு வருகிறோம். அதையொட்டி மதுரை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக நடத்துகின்ற இந்த விழாவினுடைய இறுதி விழாவை மதுரை நகரத்திலே இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்திலேகூட-மதுரை நகரத்திலே மாத்திரம் இவ்விழாவை நடத்துவதிலே ஏற்படுகிற பயனைவிட-மதுரை மாவட்டத்தினுடைய சுற்றுலா மையங்கள் என்று அழைக்கப்படுகின்ற கிராமப் பகுதிகளில், புறப்பகுதிகளில் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பதை ஒட்டித்தான் நேற்று முன்தினம் இந்த விழாவினுடைய ஒருநாள் நிகழ்ச்சி வைகை அணைக்கரையிலே நடந்ததாக நான் நினைக்கிறேன். இதைப்போலவே நம்முடைய நாட்டில் வீர உணர்வை எடுத்துக்காட்டுகிற வீர விளையாட்டாக அழைக்கப்படுகிற 'ஜல்லிக்கட்டு' அல்லது 'மஞ்சு விரட்டு' என்று அழைக்கப்படுகிற இந்த மாடு பிடிக்கின்ற அந்த வீர விளையாட்டை நாம் மிகச் சாதாரணமாக தமிழகத்திலே நடத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய வீரர்கள் அதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலகத்திலே மாடுபிடிக்கின்ற இந்த விளையாட்டை, பல்லாயிரக் கணக்கானவர்களை அழைத்து வைத்து சுற்றுலாப் பயணிகளுக்குக் கவர்ச்சியளிக்கின்ற வகையில் மிகப் பெரிய நிகழ்ச்சியாக, கலைக்காட்சியாக நடத்துகிற நாடுகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை இவ்வளவு சிறப்பு மிக்க இந்த விளையாட்டு, சாதாரணமாக மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி அவர்கள் பார்த்து மகிழுகின்ற அளவிற்கு நாம் இதை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அலங்கா நல்லூரில் நடைபெற்ற அந்த விளையாட்டை, அந்த வீர விளையாட்டை வெளிநாட்டுப் பயணிகள் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். இன்று சுற்றுலா என்பது யாரோ சில பணக்காரர்களுக்கு வசதி படைத்தவர்களுக்கு மாத்திரமே என்ற நிலைமை மாறி உழைக்கின்ற மக்கள் எல்லோருமே ஓய்வு கிடைக்கின்ற நேரத்திலே - இந்த நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற உணர்வு வளர்ந்து கொண்டிருக்கிற காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியா சுற்றுலா துறையின் மூலம், சுற்றுலாப் பயணிகள் மூலம் சுமார் 750 கோடி ரூபாய் அந்நியச் செலவாணியாகப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்று அதிகார பூர்வமாகக் கணக்குத் தரப்படுகின்றது. ஆனால் வேறு சில கணக்குகளையும் சேர்த்தால் அது சுமார் 1,000 கோடி வரை இருக்கலாம் என்ற தகவலையும் தருகிறார்கள். ஆனால் ரூ. 1,000 கோடி அந்நிய செலவாணி என்பது இந்த நாட்டுடைய இயற்கைச் செல்வத்தைக் கொடுக்காமல், இந்த நாட்டிலே உற்பத்தியாகின்ற பொருளை அவர்களுக்கு வழங்காமல், இந்த நாட்டிலே உற்பத்தியாகிற மூலப் பொருளை அவர்களுக்கு எடுத்து கொடுக்காமல் ஒரு முதலீடும் செய்யாமல், வெளிநாட்டுக்காரர்கள் தாமே கொண்டு வந்து கொடுக்கிற அந்நியச் செலவாணி ரூ. 1,000 கோடி. இன்று உலகத்திலே பல நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் இந்தச் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து வருகின்ற வருவாயை வைத்தே மிகுந்த வளமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றன. இயற்கை நமக்கு வளத்தைத் தந்தும் பயன்படுத்தி கொள்ள முடியாதவர்களாக நாம் இருக்கின்றோம்.

உதாரணமாக நமது தமிழகத்தைப் பொறுத்தவரை மால்லபுரத்திற்கும், இராமேசுவரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் விரிவான திட்டங்களை நாம் இன்றைக்குப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இதை மத்திய அரசுக்கும் அனுப்பியிருக்கிறோம்.

ஒரு மாவட்டத்திற்குள் இருப்பவர்கள் மாவட்ட அளவிலாவது தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது பக்கத்து மாவட்டச் சிறப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். பலபேர் குற்றாலத்திற்குப் போகின்ற வழியிலே ராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற வத்திராயிருப்புப் பகுதியில் பிளவுக்கல் அணைக்கட்டு என்று இரண்டு அணைக்கட்டுகளை அரசு கட்டியிருக்கின்றன. அப்பகுதிக்குள் நீங்கள் யாரும்போய்ப் பார்த்ததில்லை. நீங்கள் பெரியாறைத் தெரிந்திருப்பீர்கள். பெரியாறு அணைக்கட்டைத் தெரிந்திருப்பீர்கள்; தேக்கடியை தெரிந்திருப்பீர்கள். அப்படி ஒரு அற்புதமான தேக்கடி இங்கே இருக்கிறது. அதைப்போலத்தான் இன்று தமிழகத்திலே கண்டுபிடிக்கப்படாத, மக்களுக்கு அறிமுகப் படுத்தப்படாத இயற்கைச் சூழ்நிலைகளைக் கொண்ட இடங்கள் இன்றைக்கு இருக்கின்றன. அவைகளை எடுத்து விளக்குவதுதான் இத்தகைய விழாக்களின் நோக்கம்.

சுற்றுலா விழா நடத்துகின்ற இந்த நேரத்தில் நம்முடைய நாட்டு மக்களுக்கு, சுற்றுலாச் செல்லவேண்டும் என்ற உணர்வையும் வளர்க்க வேண்டும். அந்த இடங்களை அதற்குரிய சிறப்புத் தருகின்ற அந்தக் கலைகளைக் காப்பாற்றவேண்டும். பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை இந்த நாட்டு மக்களுக்கு நாம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்குத்தான் இந்தச் சுற்றுலா விழாக்கள் நடத்தப்படுகின்றன என்பதைச் சொல்லி, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை அடுத்த ஆண்டு இந்த மூன்று நாள் விழாவுமே மூன்று இடங்களில் இந்த மாவட்டத்தின் வேறு இடங்களிலே அவர்கள் நடத்தத் திட்டமிட வேண்டும்''.



# தெருக்கூத்து என்னும் கலைக் கூத்து



தமிழகத்தில் உள்ள கிராமியக் கலைகளில் தெருக்கூத்துக் கலையும் ஒன்று. இது மிகவும் தொன்மையானது. பரம்பரை பரம்பரையாக நிலவி வருவது.

தமிழ்மொழி இயல், இசை, கூத்து என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள செய்தியும், நடன சபாபதி என்னும் இறைவன் கூத்தன் என்று அழைக்கப்பட்டு வரும் செய்தியும், கூத்துக்கலை தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ளது என்பதற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.



இன்றும் தமிழகத்தின் பல சிற்றூர்களில் தெருக்கூத்து அவ்வப்போது நடத்தப்படுகின்றது. அங்குள்ள மக்களுக்குச் சிறந்த பொழுது போக்கு வாயிலாகத் திகழ்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தெருக்கூத்துக் கலையை மிகவும் ரசித்துப் போற்றியிருக்கிறார்; வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அதனை ஆர்வத்துடன் சென்று பார்த்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

இன்று வளர்ந்திருக்கும் நாடகக் கலைக்கும், திரைப்படக் கலைக்கும் தெருக்கூத்துக் கலைதான் அடிப்படையாகும். எளிய இந்தக் கலை எண்ணற்ற கிராமங்களில் வாழ்ந்து வரும் ஏழை, எளிய மக்களின் மனமகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் வழிவகுக்கிறது; அருஞ்சுவையை அள்ளி வழங்குகிறது.

கிராமங்களில், ஆலய விழாக்கள் நடைபெறும் காலத்தில் தெருக்கூத்துக் கலை நடத்தப்படுகிறது. புராணங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் பற்பல நீதிக் கதைகளைத்

**தமிழ்ப்பித்தன்**

தேர்ந்தெடுத்து அவற்றை பாமர மக்களுக்குப் புரியு வண்ணம் எளிய முறையில் உ... வாக்கி அரங்கேற்றுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள வேறு ப... கலைகளைப் போல், தெரு... கூத்து இரவு முழுவதும் நடத்த... படும் கலையாக விளங்குகிறது. இதனை நடத்துவது மிகவு... எளிது. அரங்கமோ, மேடையோ இதற்குத் தேவையில்லை: தெரு... கோடியில் உள்ள திடல்-முச்சந்தி தானியம் பிரிக்க உதவும் வயல் காடுகள் ஆகிய இடங்களில் எல்லாம் இந்தக் கூத்தை மிகக் குறைந்த செலவில் நடத்து கிறார்கள். இரவு 10 மணிக்கு மேல் கூத்து தொடங்கப்படுகிறது; அதிகாலையில் - ஆதவன் உதிக்கும் வரை நடத்தப்படுகிறது.

கால ஓட்டத்தின் வேகத்தால் இக்கூத்து அண்மைக் காலத்தில் நகர்ப்புறங்களில் - அரங்குகளில் நடைபெற்று வருகின்றது. வானொலி நிலையங்களிலும் அடிக்கடி நடத்தப்படுகின்றது.

பொழுதுபோக்கிற்காக உருவாகிய இந்தக் கூததுக் கலை நாளடைவில் தொழில் முறைக் கலையாக மாறிவிட்டது. சில குறிப்பிட்ட குடும்பத்தினர், தலைமுறை தலைமுறையாக, இந்தக் கலையை வளர்த்து வருகின்றனர். தமது நடிப்புத் திறமையினால், கிராம மக்களின் ஆதரவையும் அன்பையும்பெற்று வருகிறார்கள். தானியங்கள், உடைகள் ஆகியவற்றை அன்பளிப்பாகப் பெறுகின்றார்கள்.





வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மட்டும் இக்கலை பரவியுள்ளது. இம்மாவட்டங்களில் தெருக்கூத்துக் கலைக் குழுக்கள் பல உள்ளன. என்றாலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள புரிசை என்னும் கிராமத்தில்தான் பல்லாண்டுகளாக இக்கலை, மரபும், பாரம்பரியமும் மாறாமல் இயங்கி வருகிறது. புரிசை ராகவத் தம்பிரான், நடேசத் தம்பிரான் போன்ற பல புகழ்மிக்க கலைஞர்கள் இந்தத் தெருக்கூத்தின் புகழையும் பெருமையையும் பேணிப் பாதுகாத்து வந்தனர். அந்த மரபில் தோன்றிய கண்ணப்பத் தம்பிரான், எண்ணற்ற இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, இந்தக் கலையை வளர்த்து வருகிறார். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலைமாமணி விருது பெற்ற இவர், தமது பெயரால் ஒரு மன்றத்தை உருவாக்கி இந்தக் கலையைப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்.

மத்திய சங்கீத நாடக அகாடமியின் அங்கீகாரம் பெற்ற இந்தக் கலைக் குழு, பல மாநிலங்களில் தனது நிகழ்ச்சியை நடத்தி வெற்றி கண்டுள்ளது.

'கீசகவதம்' என்னும் புதிய படைப்பைத் தயாரித்து அரங்கேற்றம் செய்ய, மத்திய சங்கீத நாடக அகாடமி, இக்குழுவிற்கு ரூ. 5,000 மானியம் அளித்துள்ளது. அரங்கேற்றம் 20-1-'83-ல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ஆதரவில் சென்னை வாணி மகாலில் நடைபெற்றது.



தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நாடகத் துணைப் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் எம். ராமசாமி இந்தக் கூத்தில் கீசகனாகத் திறம்பட நடித்தது பாராட்டுக்குரியது. ஒரு மாதப் பயிற்சியிலேயே அவர் பெருந்திறமை பெற்றிருக்கிறார் என்னும் செய்தியைக் கேள்வியுறும்போது - அவருக்குப் பயிற்சி தந்த கண்ணப்பத் தம்பிரானின் திறமை பளிச்சிடுகிறது.

பீமனாகப் பங்கேற்ற சம்பந்தன், விராடனாக நடித்த இராதாகிருஷ்ணன், மற்றும் பலரும் இந்தக் கூத்தில் திறம்பட நடித்தனர். கால்கள் எப்போதும் துரித நடைபோட்டுக் கொண்டே இருந்ததை மறக்க முடியாது. இந்தக் கூத்துக்கலையின் அருமையே, கால் அசைவில் தான் இருக்கிறது என்பதை அனைவரும் எடுத்துக் காட்டினர். 2½ மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அலுப்புத் தட்டவே இல்லை. பாத்திர அறிமுகங்கள் - கதைக் கோப்பு - உரையாடல் - பாடல் அனைத்திலும் விறுவிறுப்புக் காணப்பட்டது.

அரங்கேற்ற விழாவில் பங்கேற்ற நடிகர் எஸ். வி. சகஸ்ரநாமம் உரையாற்றுகையில், 'பழம்பெரும் கலைகளை விடாமல் கடைப்பிடித்துக் காப்பாற்றி வரும், தமிழக அரசைப்பாராட்ட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

சிறப்புரையாற்றிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் திரு ஏ. என். பெருமாள் குறிப்பிட்டார்:

''இந்தத் தெருக்கூத்து, உணர்ச்சியைக் காட்டி அறிவைக் கொடுக்க உதவுவது. பாமர மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க வல்லது. இதனைத் தெருக் கூத்து என்று சொல்வது தகாது. இது கலைக்கூத்து ஆகும். கலையின் சிறப்புகளைத் தக்க விதத்தில் மக்களுக்குக் காண்பிக்கும் இக்கூத்து கலைக்கூத்துதான்''.

முதலில் வரவேற்புரையையும் இறுதியில் நன்றி உரையையும் ஆற்றிய இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள், 'அருகி வரும் கலைகளுக்கெல்லாம் இயல் இசை நாடக மன்றம் புத்துணர்வு தந்து வருகிறது' என்று குறிப்பிட்டார்.

கீசகவதம் - 'தெருக்கூத்து— நகர்ப்புறச் சுவைஞர்களையும் மிகவும் கவர்ந்தது என்பதை அவ்வப்போது அரங்கில் எழுந்த கர ஒலி உணர்த்தியது.



# காடு வளர்ப்பில் கன்னியர்

சுவீடன் நாட்டு உதவியுடன் சமீபத்தில் தமிழகத்தில் துவங்கப்பட்டுள்ள சமூகக் காடுகள் திட்டம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இத்திட்டத்தில் ஆண்டு ஒன்றுக்குச் சிறு விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் சுமார் 25 இலட்சம் செடிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஓராண்டு முடிவிலும் ஈராண்டு முடிவிலும் சிறு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையும் தக்க விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் பயனடைவர். இத்திட்டத்தில் நபருக்குஐந்நூறுசெடிகள் வரை இலவசமாக வழங்கப்படும்.

இதில் பழக்கன்றுகளும் அடங்கும். மா, தென்னை ஆகிய மரங்கள் தவிர ஏனைய பழ மரக் கன்றுகளும், நிழல் தரும் மரங்களும், விறகுக் காடுகள் வளர்க்கத் தேவையான யூகலிப்டஸ், கூபாபுல், கருவேலம், வேம்பு முதலிய மரக்கன்றுகளும் மற்றும் பசுந்தாள் உரச் செடிகளும் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. பழக்கன்றுகள் 25 காசிற்கும் ஏனைய செடிகள் 10 முதல் 15 காசிற்கும் பாலிதீன் பைகளில் வளர்த்து வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் 375 இலட்சம் செடிகள் வளர்க்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

## இதர திட்டங்கள்

மேற்கண்ட இரண்டு திட்டங்கள் தவிர சாலை ஓரங்களில் மரம் வளர்த்தல், கண்மாய்களில் கருவேல் வளர்த்தல், காடுகளிலும் புறம்போக்கு நிலங்களிலும் விறகுக் காடுகள், வளர்த்தல் தீவனப்புல்லும், தீவனம் தரும் மரம் வளர்த்தல் ஆகியவை சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் அடங்கும். பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் மரம் வளர்ப்பதன் பயன்களை எடுத்துச் சொல்லவும், நாற்றங்கால்களிலிருந்து செடிகளைச் சரிவர வினியோகம் செய்யவும், பராமரிக்கவும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஆயிரம் சமூக வனப்பணியாளர்கள் நியமிக்கப்படுவர். அவர்கள் வனத்துறைக்கும், பொதுமக்களுக்கும் இடையில் ஒரு பாலம் போல் அமைவர்.

இத்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றத் தகுதி, பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். வயது 20 முதல் 30-க்குள் இருக்க வேண்டும். ஆண், பெண் இருபாலரும் எடுத்துக் கொள்ளப்படுவர். அவர்களுக்கு ஒவ்வொரு மிதி வண்டியும் துறையினரால் வழங்கப்படுகிறது.

## பள்ளிக் குழந்தைகளின் பங்கு

மேற்கண்ட திட்டத்தின்படி சமூகக் காடுகள் வளர்ப்பிற்காக ஒவ்வொரு ஆண்டும் கோடிக் கணக்கான செடிகள் தேவைப்படுகின்றன. அனைத்துச் செடிகளும் பாலிதீன் பைகளிலேயே வளர்க்கப்படுகின்றன. தண்ணீர் வசதியும், கொஞ்சம் இட வசதியுமிருந்தால் எங்குவேண்டுமானாலும் ஆயிரக்கணக்கான கன்றுகளை வளர்க்கலாம்.

இதைக் கருத்தில் கொண்டு தான் பள்ளிகளில் செடிகள் வளர்க்கும் திட்டத்தை முன் கொணர விரும்பினோம். காரணம், பொதுவாகப் பள்ளிகளில் தண்ணீர் வசதியுள்ளது. தேவையான இடவசதியுமுள்ளது.

சுமார் ஐந்து செண்ட் இடம் இருந்தால் ஐயாயிரம் செடிகள் வரை வளர்க்கலாம். யூகலிப்டஸ், கூபாபுல் முதலிய மரக் கன்றுகள் பைகளில் ஊன்றிய மூன்று மாதத்திற்குள் நன்கு வளர்ந்து விடும். இத்திட்டத்தில் மாணவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், பாலிதீன் பைகளில் மண்ணையும் உரத்தையும் நிரப்பி விதைகளைப் போட்டு மூன்று முதல் நான்கு மாதங்களுக்குத் தண்ணீர் ஊற்றுவதுதான். பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் செடிகள் வனத்துறையினராலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

மண் நிரப்புதல், தண்ணீர் ஊற்றிப் பராமரித்தல் ஆகிய 'வேலைகள் செய்வதற்காக வனத்துறையால் பள்ளிக் குழந்தைகளுக்குத் தக்க ஊதியம் வழங்கப்படும். காசோலை தலைமையாசிரியர் பெயரில் வழங்கப்படும். நாற்றங்காலில் செடிகள் பராமரிக்கப்படும் காலத்தைப் பொறுத்து ஒவ்வொரு செடிக்கும் 10 காசு வீதம் முதல் 12 காசு வரை ஊதியம் வழங்கப்படும். புளி போன்ற செடிகளையும் பலா எலுமிச்சை போன்ற பழக்கன்றுகளையும் நீண்ட நாட்களுக்கு வைத்து தண்ணீர் ஊற்றிவந்தால் ஒவ்வொரு நாற்றுக்கும் கொடுக்கும் தொகை கூடிவரும்.

சிறிய பள்ளிகளில் ஐயாயிரம் நாற்றுக்கள் முதல் பத்தாயிரம் நாற்றுக்கள் வரையிலும், வசதிகள் உள்ள பெரிய பள்ளிகளில் பத்தாயிரம் நாற்றுக்கள் முதல் இருபதாயிரம் நாற்றுக்கள் வரையும் சாதாரணமாக வளர்க்கலாம். குஜராத் மாநிலத்தில் இலட்சக் கணக்கான கன்றுகள் பள்ளிகளில் வளர்க்கப்பட்டு, வனத்துறைக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆகவே தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு கோடிக்கணக்கில் தேவைப்படும் செடிகளின் ஒரு பங்கை பள்ளிகள் மூலம் வளர்க்கலாம்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பள்ளிக்கும் வனத்துறை மூலம் ஒரு சிறு தொகையும் கிடைக்கிறது. அத்தொகையைக் கொண்டு, பள்ளிக் குழந்தைகளைச் சுற்றுலா கூட்டிச் செல்லல், பள்ளிக்குச் சில சிறிய வசதிகள் செய்தல், விளையாட்டு மைதானம் அமைத்தல், விளையாட்டுக் கருவிகள் வாங்குதல், நூலகம் அமைத்தல், கடிகாரம் வாங்குதல் ஆகியவை போன்ற இன்னும் பல சிறு சிறு வசதிகள் செய்யலாம்.

முதல் கட்டமாக இத்திட்டம் 1982-83-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் ராஜா பள்ளியிலும், புதுக்கோட்டை எஸ். பி. மேல்நிலைப் பள்ளியிலும், சிவகங்கை ஆர். ஆர். ஆர். கே. நடுநிலைப் பள்ளியிலும், மதுரையில் ஓ. சி. பி. எம். பெண்கள் பள்ளியிலும் துவங்கப்பட்டு, ஆயிரக்கணக்கான செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன. இன்னும் பல பள்ளிகளிலிருந்து வேண்டுகோள்கள் வந்துள்ளன.

ஆகவே இத்திட்டத்தில் தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான பள்ளிகளில் உள்ள மாணவமாணவிகள் சேர்ந்து பயனடையலாம். அருகிலுள்ள சமூகக் காடுகள் திட்டத்தைச் சேர்ந்த கோட்ட வன அலுவலர்களையோ அல்லது வனச்சரக அலுவலர்களையோ அணுகினால் அவன செய்வார்கள்.

**க. க. சோமசுந்தரம்,**
**வனப்பாதுகாவலர், ஐ.எப்.எஸ்.**
**சமூக நலக் காடுகள் மண்டலம்,**
**மதுரை.**



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

### 11—1—83

'தகிக்கும் வெயிலில் கொதிக்கும் தார் ஊற்றிச் சாலை அமைக்கும்சாலைப் பணியாளர்களின் துன்பத்தைத் துடைக்க அவர்கள் அனைவருக்கும் விரைவில் இலவசமாகக் காலணிகள் வழங்கப்பட உள்ளன' என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.பி.குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் இனி கலைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப் போவதில்லை - எதிர்காலத்தில், தொழில் நுட்பக் கல்விக்கோ, பாலிடெக்னிக் போன்றவற்றிற்கோதான் அனுமதி தருவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு எஸ்.வையாபுரி அவர்கள் அறிவித்தார்.

'ஆதிதிராவிடர் நலனுக்காகத் தமிழக அரசு ரூ.38 கோடி ஒதுக்கியுள்ளது, இதனை அவர்களின் நல்வாழ்வுக்குச் செலவு செய்வதற்காகத் தனி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம்.விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

### 12—1—83

தஞ்சை மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மற்றும் பயிற்சிக்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் தொழிலாளர்கள் மட்டுமின்றிப் பொது மக்களும் சிகிச்சை பெறும் வகையில் அவற்றைப் பொது மருத்துவ மனைகளாக மாற்றுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள அரசினர் மருத்துவ மனைகள் அனைத்திலும் படுக்கைகளை ஒதுக்குவதில், தியாகிகளுக்கும் அவர்களது வாரிசுதாரர்களுக்கும் சலுகை காட்டுமாறும், 'பி' வகுப்பு வார்டுகளில் படுக்கை ஒதுக்குமாறும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 13—1—83

தமிழக அரசின் முதியோர் உதவித் தொகை பெறும் 1 லட்சத்து 99 ஆயிரத்து 158 பேர்களுக்கும் 15.1.83 முதல் சத்துணவு வழங்க அரசு ஆணை யிட்டுள்ளது.

### 15—1—83

விட்டுக்கு ஒருவருக்கு வேலையளிக்கும் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

## ஓர் அறிவிப்பு !

'தமிழரசு' இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்பும் நண்பர்கள், வெளியிடப் பெறாதவற்றைத் திரும்பப் பெறுவதற்கு, உரிய அஞ்சல் தலைகளை இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

### 16—1—83

மாமல்லபுரத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள்எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து, மேலும் புதிதாக ரூ.51 இலட்சம் செலவில் விடுதிகள் கட்டப்படும் என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு எச்.ஜே. ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் தமிழ்படிக்க வீடியோ கேசட் மூலம் பாடம் அனுப்ப தஞ்சைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துவருகிறது என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வி. ஐ. சுப்பிரமணியம் அறிவித்தார்.

### 17—1—83

கொடைக்கானலில் டி.வி.நிலையம் அமைக்கத் தமிழக அரசு நிலம் ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு மேல்நிலைத் தொழிற் கல்வி கற்றுத் தருவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வி.சி.குழந்தைசாமி அவர்கள் அறிவித்தார்.

**19—1—83**

வைகைக் கால்வாய்ச் சீரமைப்புக்காக, ரூ.17 கோடியில் தமிழக அரசு ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தானம் இ.ஆ.ப. அவர்கள் அறிவித்தார்.

**20—1—83**

விவசாயத்திற்குக் குறுகிய காலக் கடனாக வரும் ஆண்டில் 100 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

**21--1—83**

திருச்சி மாவட்டத்தில், மருதையாற்றின் குறுக்கே 30 கோடி ரூபாய் செலவில் புதிய அணை கட்டப்படும் என்று மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அறி அவர்கள் அறிவித்தார்.

சத்துணவுத் திட்டத்துக்கு உதவியாக மாவட்டங்களில் காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்.

**22—1—83**

கோவையில் ரூ.1 கோடியே 17 இலட்சம் செலவில் புதிய கோர்ட் கட்டடம் கட்டப்படவிருக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

**23—1—83**

தஞ்சை மாவட்டத்தில் உபரி நெல் முழுவதையும் தமிழக அரசு கொள்முதல் செய்யும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

**24—1—83**

இஸ்லாமிய அறநிறுவனங்கள் தங்கள் மசூதிச் சொத்துக்களைச் செப்பனிடவும் புதுப்பிக்கவும் ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் அறிவித்தார்.

**25—1—83**

சென்னை மெரீனா கடற்கரை அருகே உள்ள தீவுத் திடலில் தமிழக சுற்றுலா வளர்ச்சி வாரியம் நிரந்தர நவீன ஓட்டல் ஒன்று கட்டும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

**29—1—83**

காசநோயை மிகவும் குறுகிய காலத்தில் குணமாக்க சென்னை காசநோய் ஆராய்ச்சி நிலையம் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளது என்று மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள சிறிய தொல்பொருள் தொழிற்சாலைகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் அவைகளை நவீனப்படுத்த மாநில நிதி நிறுவனங்கள் கடனுதவி வழங்கி வருகின்றன என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

**31—1—83**

தமிழ்நாட்டில் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி பெறும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்நாயகம் அவர்கள் அறிவித்தார்.



## பெண்களுக்கான முதல் தொழிற்பேட்டை

திருச்சியில் சிட்கோவின் சார்பில் பெண்களுக்கான முதலாவது தொழில் பேட்டை ரூ. 90 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

100 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் இத்தொழிற் பேட்டையில் எலக்ட்ரானிக் பொருள்கள், பென்சில்கள் போன்ற பொருட்கள் தயாரிக்கப்படும்



## வீட்டுவசதி வாரியத்திற்கு ஹட்கோ விருது

தமிழக வீட்டுமனைகள் தன்னிறைவுத் திட்டத்தைச் சிறப்பாக அமல் நடத்தியிருப்பதற்காக, தமிழக வீட்டுவசதி வாரியத்திற்கு ஹட்கோவின் விருதான சுழற்கோப்பையும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் கிடைத்திருக்கின்றன.



(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஆ) 1982-ஆம் ஆண்டில் 1124 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 29 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு நல்கும் பணிகள்.

**பெரியார் மாவட்டம்**

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 717.0 மி.மீ. 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 545.9 மி.மீ. இம்மாவட்டத்திற்கு அமராவதி அணை, உப்பாறு அணை, கீழ் பவானித் திட்டம் ஆகியவற்றிலிருந்து நீர் வழங்கப்படுகிறது. நீர்க்கோள் பகுதிகளில் மழை குறைவாக இருந்ததால் நீர்த் தேக்கங்களுக்கு வரும் நீர் குறைந்துவிட்டது. மேட்டூர் கால்வாய் திட்டத்திலிருந்து நீர் விடப்படவில்லை. இந்த வறட்சி நிலையால் 295 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அதிகமான வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை அளிக்கப்படவேண்டியிருக்கும். இம்மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது —

(அ) குடிநீர் கிணறுகளை ரூ. 20 இலட்சம் செலவில் ஆழப்படுத்துதல்.

(ஆ) 1982-ஆம் ஆண்டில் 325 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன.

(இ) ரூ. 11 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு நல்கும் பணிகள்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 711.3 மி.மீ. 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 556.2 மி.மீ. இம்மாவட்டத்தில் ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை போன்ற பல நீர்த்தேக்கங்கள் உள்ளன. இந்த நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. பாசனக் கிணறுகளிலும் நீர் குறைவாக இருந்தது. போதுமான அளவு மழை இல்லாததன் காரணமாக பயிர்களுக்கு நீர்ப் பாய்ச்சுதலும், ஏனைய இது தொடர்பான நடவடிக்கைகளும் மிகவும் குறைவாகவே இருந்தன. தோட்ட நிலங்களிலும் பயிர்கள் சாவியாகிவிட்டன. வறட்சியால் 310 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. சுமார் 14.0 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை கொடுக்கப்பட வேண்டும். இம்மாவட்டத்தின் கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது.

குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், வேலைவாய்ப்பளிக்கும் பணிகளுக்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது —

(அ) ரூ. 20 இலட்சம் செலவில், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982-ம் ஆண்டில் 322 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 11 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகள்.

**நீலகிரி மாவட்டம்**

இம்மாவட்டத்தில் இயல்பாகப் பெய்யும் மழை அளவு 1920.8 மி.மீ. ஆகும். 1982-ல் பெய்த மழையின் அளவு 1235.8 மி.மீ. ஆகும். இங்கு பயிர் விளைவிக்கும் முறை முழுவதும் மழையை நம்பியே உள்ளது. சில நகராட்சிகளுக்குச் சொந்தமான நீர்த் தேக்கங்களிலிருந்து இம்மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. நீர்த்தேக்கங்களில் குறைவான அளவு நீர் இருப்பதால், குடிநீர் பற்றாக்குறை உள்ளது. அன்றியும், ஈர்ப்பு சக்தியின் மூலம் இயற்கை நீரூற்றுக்களிலிருந்து குழாய்கள் மூலமாக கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பொது மக்கள் குடிநீர் பெற, பெரிதும் அவதிப்படுகின்றனர். குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசு ரூ. 4 இலட்சம் அனுமதித்துள்ளது.

**மதுரை மாவட்டம்**

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 854.8 மி.மீ. 1982-ல் பெய்த மழையின் அளவு 692.8 மி.மீ. ஆகும். பாசன ஏரிகளுடன் இம்மாவட்டத்தில் பெரியாறு, வைகை பாசன ஏற்பாடுகளும், மஞ்சளாறு திட்டமும், பாசன வாயில்களாக உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1982-ல் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. வறட்சியால் 731 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன; சுமார் 4.93 இலட்சம் வேளாண்மைத்தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட வேண்டியிருக்கும். பெரும்பாலான குடிநீர்க் கிணறுகளில் நீரின் மட்டம் குறைந்துவிட்டது. வரும் மாதங்களில் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாகலாம்.

குடிநீர் நிலைமையையும், வேலைவாய்ப்பளிக்கும் பணிகளையும் சமாளிக்க பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது —

(அ) ரூ. 20 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982-ல் 1815 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.





(இ) ரூ. 67 இலட்சம் செலவில் வேலை வாய்பளிக்கும் பணிகள்.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

இம்மாவட்டத்திற்குரிய ஆண்டு மழையளவு 842.6 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 592.0 மி.மீ. ஆகும். காவிரி, அமராவதி ஆகிய இவ்விரு பெரும் ஆறுகள் இம்மாவட்டத்திற்கு நீர் வழங்குகின்றன. 16-12-82-ஆம் நாளன்று இருந்த நிலவரப்படி, மேட்டூர் அணையில் மிக குறைந்த அளவே நீர் இருந்தது. எனவே பாசனத்திற்காக அதிலிருந்து நீர் வெளிவிடப் படவில்லை. இந்நீர்த்தேக்கத்தில்தொடர்ந்து குறைந்தளவேநீர் இருந்ததால் முறை வைத்து நீர் வழங்கும் ஏற்பாடு கொண்டு வரப்பட்டது பாசன ஏரிகளைப் பொறுத்த மட்டில், சாதாரணமாக, எந்த அளவிற்கு அந்த ஏரிகளுக்கு நீர் வழங்கப்படுமோ, அதற்குக் குறைந்த அளவிலேயே 896 ஏரிகளுக்கு நீர் கிடைக்கப் பெற்றது. 1484 ஏரிகளுக்கு நீர் கிடைக்கப் பெறவேயில்லை. வறட்சியால் 619 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இதனால், சுமார் 1.5 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பிற்கு வகை செய்ய வேண்டியுள்ளது. இம்மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை நிலவுகிறது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 22 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்

(ஆ) 1982-ம் ஆண்டில் 560 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 80 இலட்சம் செலவில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு நல்கும் பணிகள்.

### தஞ்சாவூர் மாவட்டம்

இம்மாவட்டத்திற்குரிய ஆண்டு மழை அளவு 1,168.4 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 775.2 மி.மீ. ஆகும். இம்மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தொடர்ந்து நீர் கிடைக்கப் பெற்றது. தமிழ் நாட்டிற்கு பாசனத்திற்கு நீர் நல்கும் பெரும் வாயிலான மேற்கூறிய இந்நீர்த்தேக்கம் 93.5 டி. எம். சி. கொள்ளளவு உடையதாகும். ஆனால், 1982-ஆம் ஆண்டில் இந்நீர்த்தேக்கம் முழு அளவும் நிரம்பவில்லை என்பதோடு இந்நீர்த்தேக்க வரலாற்றிலே என்றும் நிலவாத அளவிற்கு மிகக் குறைந்த அளவே நீர் இருந்தது. எனவே முறை வைத்து நீர் வழங்கும் ஏற்பாடு 8.4.'82-ஆம் நாளிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தில் இன்றுள்ள நீரின் அளவு 4.6 டி.எம்.சி. ஆகும். இம்மாவட்டத்தில் 1160 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. வரும் மாதங்களில் வேலை வாய்ப்பின்மை ஏற்படக்கூடும். கடற்கரையோரக் கிராமங்களிலும், இம்மாவட்டத்தின் உட்பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் குடிநீர் கிடைக்கப் பெறுவது கடினமாக உள்ளது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும், வேலைவாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது —

(அ) ரூ. 4 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்

(ஆ) 1982-ஆம் ஆண்டில், 105 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) 13 இலட்சம் ரூபாய் செலவில் வேலைவாய்ப்பு நல்கும் பணிகள்

(ஈ) சம்பா நெற் பயிரைப் பாதுகாப்பதற்காக, இம்மாவட்டத்தில் கடை மடைப் பகுதிகளில் உள்ள உழவர்கள், தங்களுடைய பாசன வாயிலுக்குத் துணையாக அமையும் வண்ணம் 1000 வடி முனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்ட அவர்களுக்கு 1.50 கோடி ரூபாய் கடன் உதவி வழங்குதல்

### புதுக்கோட்டை மாவட்டம்

இம்மாவட்டத்திற்குரிய ஆண்டு மழை அளவு 917.9 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 565.7 மி.மீ. ஆகும். இவ்வாறு, இம்மாவட்டத்தில் பெய்ய வேண்டிய மழையின் அளவு குறைந்ததால், பாசனம் பெறும் நெற்பயிர் சாகுபடிக்காக இம்மாவட்டத்திலுள்ள மானாவாரி ஏரிகளுக்குப் போதிய அளவு நீர் கிடைக்கப் பெறவில்லை. இம்மாவட்டத்தில் 5843 சிறிய, பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பாசன ஏரிகள் உள்ளன. வறட்சியால் இம்மாவட்டத்தில் 677 கிராமங்கள்பாதிக்கப்பட்டன. 67,238 வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு நல்கவேண்டியுள்ளது. தொடர்ந்து இம்மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததால் அடி நில நீர் மட்டம் மிகவும் குறைந்தது; எனவே, குடிநீர்ப்பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 12.85 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரிகள் மூலம் நீரை எடுத்துச் சென்று வழங்குதல், உறைக் கிணறுகளை அமைத்தல்.

(ஆ) 1982-ஆம் ஆண்டில், 170 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) 80 இலட்சம் ரூபாய் செலவில் வேலைவாய்ப்பு நல்கும் பணிகள்.

### இராமநாதபுரம் மாவட்டம்

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 839.5 மி.மீ. 1982-ஆம் ஆண்டில் 684.1 மி.மீ. மழை பெய்துள்ளது. இம்மாவட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் வருகிறது. இம்மாவட்டத்தில், நிலையான பாசன வாயில்கள் ஏதும் இல்லை. வைகை, பெரியாறு ஆற்றிலிருந்து நீர் பெற்று தேக்கி வைக்கப்படும் ஒரு சில ஏரிகள் தவிர ஏனைய ஏரிகள் மழை நீரை மட்டுமே நம்பியுள்ளவை. இம்மாவட்டத்தில் உள்ள எல்லா ஏரிகளும் வறண்டேயுள்ளன. வறட்சியின் காரணமாக 1417 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன; இதனால் சுமார் 1.7 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. குடிநீருக்கு மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது; 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு குடிநீர் பற்றாக்குறை மேலும் மோசமான நிலைக்குச் சென்று விடக்கூடும்.

குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகவும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையிலும் பின்வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

(அ) ரூ. 25 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரியில் குடிநீரை எடுத்துச் சென்று வழங்குதல், உறை கிணறுகளை தோண்டுதல் போன்ற பணிகள்;

(ஆ) 1982-ஆம் ஆண்டில் 203 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன;

(இ) ரூ. 100 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பணிகள்.

### திருநெல்வேலி மாவட்டம்:

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 814.0 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் 653.0 மி.மீ. மழை பெய்தது. இம்மாவட்டத்தில் பாபநாசம், மணிமுத்தாறு ஆகிய இரு பெரும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததின் விளைவாக இந்நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்தது. ஆனால், வடகிழக்குப் பருவ மழையின்போது இந்நிலையில் மேம்பாடு ஏற்பட்டது. இருப்பினும் 116 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன; 25,168 வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும். இம்மாவட்டத்தின் சில பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்று தோன்றுகிறது. குடிநீர்ப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்காகவும் வேலை வாய்ப்பளிக்கும் வகையிலும் பின்வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

(அ) ரூ. 13.50 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரிகள் மூலம் குடிநீரை எடுத்துச் சென்று வழங்குதல்;

(ஆ) 1982-ஆம் ஆண்டில் 521 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன.

(இ) ரூ. 20 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பணிகள் மேற்கொள்ளுதல் ;

### கன்னியாகுமரி மாவட்டம்

இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 1469.7 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில் 1099.7 மி.மீ. மழை பெய்தது. இம்மாவட்டத்தில் நான்கு நீர்த் தேக்கங்கள் உள்ளன. 1982-ஆம் ஆண்டில் அவையனைத்தினுடைய மொத்தக் கொள்ளளவு 3392 எம்.சி.டி. ஆக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் இக்கொள்ளளவு, மிகக் குறைந்த கொள்ளளவாகும். எனவே 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல், பாசனத்திற்காக நீர் வழங்குவதை முறைப்படுத்த மாற்று முறையில் நீர் வழங்கும் முறை செயல்படுத்தப்பட்டது. வறட்சியினால் 57 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பெருவாரியான வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள குடிநீர்க் கிணறுகளில் நீர்மட்டம் பெருமளவு குறைந்துள்ளது. குடிநீர்ப் பற்றாக் குறையைத் தீர்க்கவும், வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலும் பின் வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(அ) ரூ. 5 இலட்சம் செலவில், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல் ;

(ஆ) ரூ. 9 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

### சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் திட்டம்

இரு பருவ மழைகள் பொய்த்ததால், சென்னை மாநகரில் குடிநீர் வழங்குவதில் கடுமையான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல் நீர்த் தேக்கங்களில் 1-1-'83-ஆம் நாளன்று சுமார் 1251 எம்.சி.டி. நீர் மட்டுமே இருந்தது; இது இந்நீர்த் தேக்கங்களின் மொத்தக் கொள்ளளவில் 19 சதவீதம் மட்டுமேயாகும்; இவற்றில் இருந்த நீரின் அளவு 1-1-1982-ல் 3,621 எம்.சி.டி-ம்,1-1-1981-ல், 3,731 எம்.சி.டி-ம் ஆகும். இந்த மோசமான வறட்சி நிலையைச் சமாளிக்கும் பொருட்டு, நிலத்தடி நீர் வாயில்களிலிருந்து எடுக்க முடியுமளவிற்கு, நீரை எடுக்கக் கருதப்பட்டுள்ளது; கிணறுகளிலிருந்து நீர் எடுப்பதற்காகக் கூடுதல் டீசல் ஜெனரேட்டர் செட்டுக்கள் இயக்கப்பட்டு நீர் எடுக்கவும், சென்னை மாநகரில், இயன்ற அளவிற்குக் குழாய்க் கிணறுகள் தோண்டப்படவும், நிலத்தடி நீர் எடுக்க இயலாத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சுமார் 1200 குடிநீர்த் தொட்டிகளில் நீர் நிரப்புவதற்காக சுமார் 120 லாரிகள் ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவதற்காக 2.03 கோடி ரூபாய் செலவிட அரசு அனுமதித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் தணிப்பு அளிக்க அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வந்துள்ளது. இம்மாநிலத்தில் நிலவும் நிலைமைகளை அவ்வப்போது கண் காணித்தும் வந்துள்ளது. பருவமழை பொய்த்த தினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் குறித்து 18-8-1982 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அமைச்சர்கள் அளவிலும் அதிகாரிகள் அளவிலும் அவ்வப் போது நிலைமை பரிசீலிக்கப்பட்டு வந்தது. தலைமைச் செயலாளர் 26-8-1982 அன்று இந்நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட அதி காரிகளுடன் கலந்து பேசினார். இம்மாநிலத் தில் நிலவும் நிலைமை குறித்து இந்திய அர சுக்கு '27-9-'82 அன்று தெரிவிக்கப்பட்டது. 12-10-1982 அன்றும் தலைமைச் செயலாளர் ஒரு கூட்டம் கூட்டினார். 15-10-'82 அன்று மாநில அரசு மத்திய அரசுக்கு பின வரும் கோரிக்கைகளை விடுத்தது

(அ) சம்பாப் பயிர் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக 20 டி. எம். சி. கன அடி தண்ணீராவது உடனடியாக இம்மாநிலத் திற்குக் கொடுக்கக் கர்நாடக மாநில அரசை வலியுறுத்தலாம்;

(ஆ) இம்மாநிலத்தில் நிலைமைகள் குறித்து மதிப்பிட்டு, வடகிழக்கு பருவ மழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டால் பொய்த் தால் தேவையான பரிந்துரைகள் செய்யவும் மத்திய அரசின் குழு ஒன்றை இம்மாநிலத் திற்கு வருகை புரியத் தயார் நிலையில் இருக் கச் செய்யலாம் ;

(இ) மாவு ஆலைகளுக்கு மாதம் ஒன் றுக்கு 85,000 டன் அரிசியும், 60,000 டன் கோதுமையும் பொது விநியோக முறைக்கு திங்கள் ஒன்றுக்கு 10,000 டன் கோதுமையும் வழங்கலாம்.



(ஈ) 20 துளையிடு இயந்திரங்களை உடனடியாகப் பெற உதவி அளிக்கலாம்.

இது தொடர்பாக மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்து மேற்சொன்ன கோரிக்கைகளை வலி யுறுத்தி 17-10-'82 நாளிட்ட கடிதத்தைக் கொடுத்தார்.

இரண்டு பருவமழைகளும் உரிய நேரத் தில் பெய்தால் இம்மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தி பெருகும். உழவர்கள் தங்களது நிலங்களிலிருந்து நல்ல வருவாயைப் பெற்று நலமடைவார்கள். சில பகுதிகளில் மழையின் அளவு ஓரளவிற்குக் குறைவதினால் இம் மாநிலம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் பொருளாதார நிலையை அது பாதிக்காது. ஆனால், அடுத்தடுத்து இரண்டு பருவமழைகள் பொய்க்குமேயாயின் பொருளாதார நிலை முழுவதையும் அது பெரிதும் பாதிக்கும். எனவே, வடகிழக்குப் பருவகாலம் முழுவதை யும் (அதாவது 1982 டிசம்பர் இறுதி வரை) கண்காணித்து பருவ மழை பொய்த்ததின் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பிட்டு அந்த நிலையில் இந்திய அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும் என்று 12-1-'82 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறே, 6-12-'82 அன்று இந்திய அரசுக்குத் தெரி விக்கப்பட்டது. எனவே, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்களும் பாதகமான பருவ நிலைமை குறித்த தங்களது அறிக்கைகளை 7-1-'83-க்கு முன்னதாக அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப் பட்டனர்.

மாண்புமிகு வருவாய் அமைச்சர் தலை மையில் 12-1-'83 அன்று நடைபெற்ற கூட் டத்தில், வறட்சி நிலைமை குறித்து எடுக்கப் பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக ரூபாய் 190 கோடி தேவைப்படும் என முடிவு செய்யப் பட்டது. இவ்வாறு மதிப்பிடப்பட்ட தொகை குறித்து இந்திய அரசுக்கு 13-1-'83 அன்று டெலக்ஸ் மூலம் செய்தி அனுப்பப்பட்டது. 7-ஆம் நிதி ஆணைக் குழு பரிந்துரைத்த துக்கு இணங்க பயிரிடப்படாத நிலங்களின் பரப்பளவு, உற்பத்தி, பாதிக்கப்பட்ட மக்கட் தொகை, பாதிப்புக்குள்ளான கிராமங்கள் முதலியன குறித்த மாவட்ட வாரியான விவ ரங்கள் அடங்கிய இணைப்புக்களுடன் இந்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளுக்கு இணங்க விரிவான அறிக்கை ஒன்றை மாநில அரசு அனுப்ப வேண்டும். இந்த விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை 24-1-'83 அன்று இந்திய அரசுக்கு கொடுக்கப்பட்டது. நேரில் கண்டு நிலைமை யைக் கணிக்க, மத்தியக் குழுவின் வருகை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள பாதகமான பருவநிலை யின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக துயர் தணிப்புப் பணிகளை விரை வாக நிறைவேற்ற இயன்றதனைத்தையும் அரசு செய்து அவர்களுக்கு உரிய நேரத்தில் உதவிட முன் வரும்.

**[9.2.83 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையிலிருந்து]**



# பெரியார் நகரில் முப்பெரும் விழா

சென்னை அகரம் பெரியார் நகரில் சென்னை மத்திய கூட்டு றவு வங்கிக் கிளையின் கட்டட அடிக்கல் நாட்டுவிழா, பெரியார் நகர் நல்வாழ்வுச் சங்க மூன்றாம் ஆண்டு விழா, பெரியார் நகர் அரசு ஊழியர்கள் வீட்டுவசதிச் சங்கச் சார்பில் சமுதாயக்கூட அடிக்கல் நாட்டுவிழா ஆகிய முப் பெரும் விழாக்கள் 13-2-'83-ல் நடைபெற்றன.

விழாவிற்கு திரு. பி. கந்தசாமி இ. ஆ. ப. (பெருந்தலைவர், டான்சி நிறுவனம்) தலைமை தாங்கினார்.

விழாவிற்கு வந்திருந்தவர் களைப் பெரியார்நகர் நல்வாழ்வு சங்கத் தலைவர் திரு பிராங் மோசஸ் வரவேற்றார். விழாவில் வீட்டுவசதித் துணைச்செயலர் திரு. இராமன்பிள்ளை, கூட்டு றவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு. எஸ். டி. வைத் தியலிங்கம், கூட்டுறவுச் சங்கங் களின் கூடுதல் பதிவாளர் (கடன்) திரு. என். ஜெகநாதன் சென்னை. மாநகராட்சி ஆணையர் திரு. எஸ். ஆர். கருப்பண்ணன் இ. அ. ப., கூட்டுறவுப் பதிவாளர் திரு. கே. சந்திரசூடன் இ. ஆ. ப., சென்னை மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திரு. பெ. கன்னியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பெரியார் நகர் கார்த்திகேயன் சாலையில் ரூ. 7 இலட்சம் செல வில் சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக்கான இரண்டு மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி யும், பெரியார் நகர் அரசு ஊழி யர்கள் வீட்டுவசதிச் சங்கத்தின் சார்பில் சமூக நலக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டியும், மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னை யன் அவர்கள் உரையாற்றுகை யில் குறிப்பிட்டதாவது:

''அரசு இயந்திரத்தை ஓட்டு கின்ற ஊழியர்கள் நிறைந்த இந்தப் பகுதியில் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதில் பெருமையடைகின்றேன்.

நலிவுற்றவர்கள் அடகுக்கடைக் காரர்களிடம் அதிக வட்டியில் நகைக் கடன்களைப் பெற்று அல்லல்படும் நிலையில் இருக் கிறார்கள். இந்த நிலையில் இருந்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றது. கடந்த ஆண்டு கூட்டு றவுத்துறை மூலம் ரூ. 180 கோடி நகைக்கடனாக வழங்கி இருக் கின்றோம். வருகிற ஆண்டிலும் இந்த அளவிற்குச் சற்றும்குறை யாமல் நகைக்கடன்களை வழங்க யிருக்கின்றோம்.

நகைக்கடன்களை அதிக அள வில் தருவதற்கு மைய ரிசர்வ் வங்கி தடைக்கல்லாக இருக்கிறது. மொத்த டெபாசிட்டில் 10 சத விதத்திற்கு மேல் நகை மற்றும் தொழில் கடன் வழங்கக்கூடாது என்று மைய 'ரிசர்வ்' வங்கி உத் திரவிட்டு இருக்கிறது. இந்த உத் திரவை மீறிச் செயல்பட முடி யாத நிலையில் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. மைய 'ரிசர்வ்' வங்கியின் விதிமுறை களைத் தளர்த்தி வழிவகை செய் யும்படி கோரி தமிழக அரசு பெரும் முயற்சிசெய்து வருகின் றது.

**தொகுப்பு :**
**அ. மருதவிநாயகம்**

தமிழ்நாடு வீட்டுவசதிச் சங் கத்தின் சார்பில் ஏழை எளியவர் களுக்குத் தமிழ்நாட்டில் இரண்டு லட்ச வீடுகள் ரூ. 6 கோடி செல வில் கட்டித்தர உத்தரவிடப்பட் டுள்ளது. இதில் ஆதி திராவிடர் களுக்கு ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகின்றது. ஆதிதிரா விடர்களுக்கு மட்டும் 21 ஆயி ரத்து 924 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

சுய வேலை வாய்ப்புத் திட் டத்துக்குக் குறைந்த வட்டியில் சென்னை மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கி முதலிடத் தைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் ரூ. 1 கோடி கடன் வழங்கியுள்ளது.

விழா இறுதியில் திரு. பெ. தங்கராசு நன்றி கூறினார்.



# அஞ்சலக டைம் டெப்பாஸிட்களுக்குரிய வட்டி விகிதம் மேலும் உயர்ந்திருக்கிறது

1 வருட வடம் டெப்பாஸிட் ஆண்டுக்கு 9%
2 வருட டைம் டெப்பாஸிட் ஆண்டுக்கு 9.75%

3, 5 வருட அஞ்சலக டைம் டெப்பாஸிட்களுக்கு, முன் போலவே 10.5% வட்டி பெறுவீர்கள்.

வட்டி, அரையாண்டுக்குரிய விகிதப்படி கணக்கிடப்பட்டு, வருடந்தோறும் வழங்கப்படும்.

மற்ற வசதிகள்

ரூ. 50ஆல் பெருக்கக்கூடிய தொகையில், எவ்வளவு வேண்டுமானாலும் டெப்பாஸிட் செய்யலாம். வருடத்துக்கு ரூ. 4,000/- வரையிலுமான வட்டி வருமான வரி விலக்குக்குரியது. ஒரு வருடம் நிறைவுற்ற பின்னர், உரிய காலத்திற்கு முன்னர் கணக்கை முடித்து விடலாம். இவ்வாருயின் வட்டி 2% குறையும்.

விவரங்களுக்கு தயவு செய்து பின் வருபவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

- அஞ்சலகம்
- மாவட்ட சேமிப்பு அதிகாரி, தேசீய சேமிப்பு நிறுவனம்,
- அத்தாட்சி பெற்ற ஏஜென்ட்.
- உங்கள் மாநிலத்தின் பிராந்திய இயக்குனர், தேசீய சேமிப்பு நிறுவனம், இந்திய அரசு.
- சிறு சேமிப்பு டைரெக்டொரேட், மாநில அரசு.

அல்லது பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்

நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர்
12 ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.

davp 82/456





தமிழ்நாட்டிலேயே மிக அதிக வறட்சி பாதிப்பு உள்ள மாவட்டம் என்றால் அரசின் கவனத்திற்கும், குறிப்பாக எல்லோருக்கும் நினைவு வருவது இராமநாதபுரம் மாவட்டம்தான். எல்லா வகையிலும் பின்தங்கிய பகுதியாக இருப்பதும் இராமநாதபுரம் மாவட்டம் என்பதும் உண்மைதான்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 35 லட்சம் மக்கள் உள்ளனர். 13 லட்சம் எக்டேர் நிலப் பரப்பு உள்ளது.

''நிலத்துக்கொரு கிணறு வேண்டாம் - பலர் நிலத்துக்கொரு சமுதாயக் கிணறு ஏற்ற பலன் தரும்'' என்ற கொள்கைக்கு ஏற்ப வறட்சிக்கு இலக்காகும் எல்லாக் கிராமங்களிலும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறு சிறு கிராமங்களில் கூட சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டு, தண்ணீர் கொட்டப்படுவதை நாங்கள் கண்டோம்.

ஆம்! இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்ற பணிகளையும், மற்றும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றியும் அறிந்து கொள்வதற்காகச் சென்றபோது இந்தக் காட்சியைக் காண நேர்ந்தது.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றிப் பார்வையிட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சந்தானம் இ.ஆ.ப., மாவட்ட அலுவலர்களுடன் கடந்த 8-2-1983 அன்று சென்றபோது பத்திரிகை நிருபர்களையும் அழைத்துச் சென்றார்.

திருப்புவனம், மானாமதுரை, சிவகங்கை போன்ற ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடை பெற்று வரும் பணிகள், மற்றும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்தும் பார்வையிட்டோம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க 2 கோடியே 20 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் 203 சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

**வே. இராமநாதன்,**
**உதவிமக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 203 சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம் 7,000 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதிகிடைக்கிறது. 10,000 சிறிய, மிகச் சிறிய விவசாயிகள் பயன் அடைகிறார்கள்.

1983-84ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 100 ஆழ் குழாய்க் கிணறுகளும், 50 பெரிய கிணறுகளும் தோண்டப்பட இருக்கின்றன, என்று தகவலையும் மாவட்ட ஆட்சித் தலைவர் நிருபர்களிடம் கூறினார்.

தமிழக அரசின் வேளாண்மைப் பொறியியல் துறை இந்தத் திட்டத்தை-அதாவது சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்கும் வேலையைச் செய்து வருகிறது. இந்தக் கிணறுகளைப் பராமரிக்கும் பொறுப்பு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் என்ற கிராம மக்கள் கடின உழைப்பாளிகளாக இருந்தும் தண்ணீர் பற்றாக் குறை காரணமாக நிலத்தைப் பயிரிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தனர்.

இதையறிந்த மாநில வேளாண்மைப் பொறியியல் துறை அந்த கிராமத்தில் ஆழ்குழாய்க்கிணறு ஒன்றை அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது.

பூம்பிடாகை என்ற கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கிணறு தோண்டப்பட்டு தண்ணீர் ஊற்று சரிவர இல்லை என்பதால் கைவிடப்பட்டது.

அந்தக் கிணறு 10,000 ரூபாய் செலவில் மீண்டும் தூர் எடுக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, தண்ணீர் நிலத்துக்குப் பாயும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிணறு மூலம் வண்டு இடக்கும் சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பு பாசனவசதி பெறும் என்று அந்தக் கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்

தில் 417 கிணறுகள் முன்பு தோண்டப்பட்டன. இதில் 150 கிணறுகளில்தான் தண்ணீர் ஊற்று இருந்தது. மீதி உபயோகமில்லாத கிணறுகளை மீண்டும் தூர் எடுத்து புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இலந்தைகுளம், வளையராதனபட்டி, ராஜகம்பீரம், விசவம்பட்டி அழகுடையான், சங்கங்குளம் போன்ற கிராமங்களில் அமைக்கப்பட்டிருந்த சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகளையும், ஒவ்வொரு கிணறு மூலம் குறைந்தது 30 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதியைக் கொடுக்கக்கூடிய அளவு தண்ணீர் இருந்ததை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்த்தார்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்புப் பெற்று விளங்கும் பட்டுத் தொழிலின் வளர்ச்சி பற்றிப் பார்வையிட்டோம்.

பட்டு விவசாயக் கூட்டுறவுச் சங்கம் மூலம் 8 நாள் பட்டுப் புழுவை வளர்த்து விவசாயிகளிடம் தருகிறார்கள். அதைத் தனது வீட்டிலோ அல்லது காற்றோட்டமுள்ள இடத்திலோ வைத்து வளர்க்கிறார்கள்.

இந்தப் பட்டுப் புழு வளர மல்பரி இலை மட்டும்தான் தேவை. அதிகத் தண்ணீரும் தேவை இல்லை. ஓரளவு தண்ணீர் மட்டும் இருந்தால் மல்பரி செழிப்பாக வளரும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,300 ஏக்கர் நிலப்பரப்பில் மல்பரி பயிரிடப்பட்டு பட்டுப்புழு வளர்ப்புத்தொழில் நடைபெறுகிறது. இதன் மூலம் 7,000 சிறிய, நடுத்தர விவசாயிகள் பயனடைகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு பட்டுத் தொழில் துவங்கப்பட்டது. ஆனால் இப்போது இந்த மாவட்டம் பட்டுத் தொழிலில் மாநிலத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டுத்தொழில் வளர்ச்சிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

இலங்கை, பர்மா, கேரளா போன்ற நாடுகளில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகள் பட்டுத் தொழில் செய்து வருகின்றனர்.

ஒக்கூர் கிராமத்தில் பட்டுத் தொழில் பிரபலமடைந்து வருவதால் அங்கு வளர்ப்புப் புழு மையம் - அதாவது 8 நாட்கள் பட்டுப்புழுவை வளர்த்து, பட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கும் மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் பாண்டியூர், கல்குறிச்சி, மகராஜபுரம், முறையூர், ஈஞ்சார் ஆகிய 5 இடங்களிலும் பட்டுப்புழு வளர்ப்பு மையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



**18-2-1983 அன்று மண்டபம் முகாமில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் களை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பார்வையிட்டு குறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் கூறி மனுக்களைப் பெறுகிறார்.**

1983-84ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,300 ஏக்கர் என்பதை 1,800 ஏக்கராக உயர்த்தி மல்பரி இலை பயிரிட்டுப் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 364 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 65,384 லிட்டர் பால் நாள்தோறும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதில் 26,640 லிட்டர் பால் இராமநாதபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. மீதிப் பால் நகரங்களிலும் கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 74 இலட்சத்து 12 ஆயிரத்து 900 ரூபாய் வரை பால்வள திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1970-71ஆம் ஆண்டிலிருந்தே பண்ணைக்காடு வளர்க்கும் திட்டம் முக்கிய இடம் வகிக்கிறது.

இந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி பொதுப்பணித் துறைகளின் பெரிய - சிறிய குளக்கரைகளில் கருவேல மரங்கள் நடப்பட்டுள்ளன. 70-71-ஆம் ஆண்டில் இருந்து 81-82-ஆம் ஆண்டு வரையான காலத்தில் மொத்தம் 6,850 எக்டேர் நிலப்பரப்பில் கருவேல் மரங்கள் நடப்பட்டுள்ளன.

இந்தக் கருவேல் மரங்கள் விவசாயிகளுக்கு விறகாகப் பயன் தருவதுடன் கால்நடைகளுக்குத் தீவனமாகவும் உதவுகிறது. மேலும் இந்த மரத்தில் இருந்து கிடைக்கும் பசை வர்த்தக ரீதியில் பயன்படுகிறது.

முன்கூட்டியே திட்டமிட்டு வறட்சியைப் போக்கவும், கால்நடைகளை காக்கவும், தமிழ் நாடு அரசு பல திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருகிறது.



வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும்

# சிங்காரத் தோட்டம்!

பி. எல். ராஜேந்திரன்

சென்னை - தேனாம்பேட்டையில் உள்ள விவசாயத் தோட்டக் கலைக் கழகத்தின் 133-வது மலர்க் கண்காட்சி கவினுற நடைபெற்றது (4.2.83).

வசீகரம் மிக்க வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் சிங்காரத் தோட்டமாம் அங்கே, பத்து நாட்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார். நிறைவு நாள் விழாவில் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தலைமையில் திருமதி இந்திரா குரானா அவர்கள் சிறந்த காட்சி அமைப்பாளர்க்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் பாதுகாவலராக உள்ள இந்தக் கலைக் கழகத்தின் தலைவராக நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்களும் கௌரவச் செயலாளராகப் பேராசிரியர் திரு ஜே. இராமச்சந்திரன் அவர்களும் பொறுப் பேற்றுச் சிறப்புறப் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை மாநகரின் மையப் பகுதியான ஆயிரம் விளக்குப் பகுதி அண்ணா மேம்பாலம் அருகே பெரு நிலப்பரப்பில் பச்சென்று பரந்து கிடக்கும் இந்தத் தோட்டக்கலைக் கழகத்தின் பொருளாளராகத் திரு. ஜி. சீதாராமன் அவர்கள் இருக்கிறார். திருவாளர்கள் பி.எம். முத்துக்குமரப்பா, ஜி. நந்தகோபால், ஏ. முருகேசன், திருமதி அக்கம்மா கிருஷ்ணமூர்த்தி முதலான 25 பேர் உறுப்பினர்கள்.

இதன் முக்கியச் செயற்குழு உறுப்பினர்கள் யாரெல்லாம் தெரியுமா? தர்மபுரியில் உள்ள அரசு தோட்டக்கலைக் கழக இயக்குநர், அரசு வனத்துறைத் தலைமை அதிகாரி, சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோராவர்.



இவ்வளவு பெரியவர்களின அரவணைப்பிலே உள்ள இந்த விவசாயத் தோட்டக்கலைக் கழகம் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள நாம் முயல்கிறோம். 1976 முதலே இதன் கௌரவச் செயலாளராகஇருந்து வரும் திரு ஜே. இராமச்சந்திரன் அவர்கள் நமக்கு உதவுகிறார்.

1835-ல் உருவாக்கப்பட்டது இந்தவிவசாயத் தோட்டக்கலைக் கழகம். ஆண்டுதோறும் இது போன்ற கண்காட்சி நடத்தப் படுவதும், சிறப்புறப் பயிரிட்டிருப்போர்க்குப் பரிசு வழங்குவதும் தொன்று தொட்டு வரும் வாடிக்கை. 1937-ல் முதன் முதல் இந்த வகையில் பரிசு பெற்ற முதலாமவர் திரு, டாட் என்பவராவார்.

இத்தனையாண்டுக் காலத்தில் வறட்சி - புயல் போன்ற இயற்கைத் துன்பங்களால் இடையே பதினைந்தாண்டுக் காலம் மட்டுமே இதுபோன்ற கண்காட்சி நடைபெறாமல் இருந்தது. இந்த ஆண்டுகூட, தண்ணீர்த் தட்டுப் பாட்டின் காரணமாக மலர்க்









கண்காட்சி நடத்தலாமா வேண்டாமா என்ற வினா துவக்கத்தில் எழத்தான் செய்தது. ஆயினும் துணிந்து - நல்லபடி நடத்தி முடித்துப் பெருமை கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

அமைவிடப் பரப்பு 25 ஏகர் எனினும், 12 ஏகர் நிலப்பரப்பில் தான் விவசாயமும் தோட்டக்கலையும் விதம் விதமாக இப்பொழுது செய்யப்படுகின்றன இங்கே. உறுப்பினர் கட்டணம்-வாடகை வரவு ஆகியவைகளே நிதி ஆதாரங்கள்.

அடன்சோனியா டிஜிடேட்டா, கேலாபாஷ், குயாகம் அபிஸினாலே, கைஜிலியா பினேட்டா, கனாங்கா ஒடரேட்டா போன்ற பலவகை மரங்களும் அழகுற அணிவகுத்து நிற்க... அவற்றின் நிழலில் சிங்காரமாகச் சிரித்திடும் கண்ணைக் கவரும் வண்ணமலர்ச் செடிகளைக் காண முடிகிறது. கலியான்ட்ரா, ஹைபிஸ்கஸ், வெர்பினா, இக்ஸோரா, ஒலியாண்டர், லெகர்ஸ்டோமியா, முசாண்டா போன்ற வெளிநாட்டு ரகங்கள் மட்டுமல்ல, பலவகை ரோஜா, சிலவகை மல்லி போன்ற மலரினங்களும் இங்கே நமக்கு மகிழ்ச்சி தெரிவிக்கின்றன.

அங்கே சுற்றிப் பறந்திடும் வண்டுகளுக்கு மேலாக-தோட்டக்கலை நிபுணர் திரு என். இராகவன், கணக்காயர் திரு எஸ். சண்முகம், பயிற்சியாளர் திரு. கே. கணேஷ், செல்வி கே. உஷா, எஸ். மேகராஜ் ஆகியோர் சுறுசுறுப்போடு பணியாற்றுவதைக் காண நமக்கு வியப்பாக இருந்தது. துவளாத செடி கொடிகள், காய்கறித் தோட்டங்கள் ஆகியவற்றுக்கு இவர்களோடு இன்னுமுள்ள இருபதுக்கு மேலான ஊழியர்களும் காரணம் என்பது நமக்குப் பெருமையோடு தெரிவிக்கப்படுகிறது.

1816-ல் துவக்கப்பட்ட இலண்டன் மாநகரத் தோட்டக் கலைக் கழகம் உலகிலேயே மிகப் பழமையானது என்றால், இந்தவிவசாயத் தோட்டக் கலைக் கழகம்தான் அதற்கடுத்த பழமையுடையதாகும்.

'1954-ல், நாடகம் நடத்தி இக்கழகத்தின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்தவர்தான் தமிழகத்தின் இன்றைய முதல்வர் அவர்கள். எனவே, இதன் வளர்ச்சிக்கு அரசு இயன்றவரை உதவும்' எனத் திறப்பு விழா நாள் உரையில் குறிப்பிட்ட மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் ஆலோசனைப்படி விரைவில் இப்பகுதி சுற்றுலாப் பயணிகள் கலைக்காட்சி காணும் அளவில் சிறப்புடையதாக்கப் படும் என்றார் திரு ஜே. இராமச்சந்திரன். அதுமட்டுமல்லவாம். ''காலையில் வாக்கிங் செல்பவர்களுக்கு ஏற்ற விதமாகவும்'ஏஸி' வசதியுள்ள நூல் நிலையம் உடையதாகவும்கூட இதைச் செப்பனிடப் போகிறோம்'' என்றார் அவர்.

''இந்தத் தோட்டக்கலைத் துறை தமிழகத்தின் மாவட்டங்கள் தோறும் அமைக்கப்படவேண்டும்; அவற்றிற்கெல்லாம் இந்தக் கழகமே வழிகாட்டிட வேண்டும்'' என்று நிறைவுநாள் விழா உரையில் மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டாரென்றால்... இதற்கு மேல் என்ன வேண்டும் இந்த அமைப்பின் சிறப்பினைக் கூற?

தமிழ் வளர்த்த பெரியார்

# செந்தமிழ்ச் செல்வர்

# வ. சுப்பையா பிள்ளை

'முப்போதும் தமிழுக்கே உழைக்கத்தக்க பெருநல்லான் தமிழ்ப் புலவன் சுப்பையன்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போன்று, எப்போதும் தமிழுக்கு உழைத்தவர் செந்தமிழ்ச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை. 'கழகம் இல்லையேல் தமிழ் இல்லை' என்று கூறுமளவிற்குத் தரமான தமிழ் நூல்களை நூற்றுக் கணக்கில் உருவாக்கிய பெருந்தகை அவர்.

தமிழ் ஆய்வாளர்க்கு அருங் கருவூலமான 'மறைமலையடிகள் நூல் நிலையத்தை' அவர் தோற்றுவித்தார். வீதி தோறும் தமிழ் மணக்க இலக்கிய மாநாடுகளை அவர் கூட்டுவித்தார். மறைதிரு மறைமலையடிகளாரின் மாண்புமிகு மாணாக்கராய் நின்று, தனித்தமிழ் உணர்வைச் 'செந்தமிழ்ச் செல்வி'யின் வாயிலாக அவர் ஊட்டுவித்தார். தமிழன் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனிடமும் இருக்க வேண்டுமென்பதற்காக 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' வரவேண்டுமென்று அவர் பாடுபட்டார்.

தமிழ்நூல் பதிப்புத்துறையில் தன்னிகரற்று விளங்கும் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தம் தமையனாரும், மறைதிரு மறைமலையடிகளாரின் மருகருமாய திருவரங்கனாருடன் இணைந்து நிறுவி, ஏறத்தாழ 1750 அரிய நூல்களைத் தாமே ஆய்ந்தாய்ந்து வெளியிட்டுத் 'தமிழ்நூல் பதிப்புத் துறையின் இமயம்' எனத் திகழ்ந்தவர் அவர்.

வ.சுப்பையா பிள்ளை நெல்லை நகரின் ஒரு பகுதியான பாளையங் கோட்டையில் வயிரமுத்துப் பிள்ளை-சுந்தரத்தம்மை இணைந்து நடத்திய ஏற்றமிகு இல்லறத்தின் பயனாய்த் தோன்றிய நன்மக்களில் நான்காமவராகத் தோன்றியவர்; அவர் 1897 செப்டம்பர் 22-ல் பிறந்தார்.

மூன்று வயதில் தந்தையையும் இருபத்தைந்து அகவைக்குள் இரண்டு தமையனாரையும் ஒரே தங்கையையும் இழந்த வ. சு. அவர்களைத் தாயார் சுந்தரத் தம்மையாரும் தந்தையார் பொறுப்பில் நின்று தமையனார் திருவரங்கனாரும் வளர்த்தனர். 1917-ல் திருவரங்கனாரைக் காணக் கொழும்புவிற்குச் சென்றிருந்த வ. சு. அங்கு வருகை தந்த மறைமலையடிகளாரைக் கண்டு பழகினார். தமிழ் இருவரையும் இணைத்தது.

அடிகளார் நூல்களைப் பரப்ப வேண்டுமென்று அவற்றை வாங்கி விற்று வந்த திருவரங்கனார் எல்லா நூல்களையும் வாங்கி விற்பதற்காகவே 'திரு சங்கர்' நிறுவனத்தைத் தொடங்கினார். அதுவே பின்னர் கூட்டுப் பங்கு நிறுவனமாக, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமாக, உருவாகியது. 1920-ல் கழகம் தொடங்கப் பெற்றபோது, திருவரங்கனார் நெல்லையில் தலைமை நிலையத்தையும் வ. சு. பிள்ளை 1921 முதல் சென்னையில் கிளை நிலையத்தையும் பொறுப்புடன் நடத்தத் தொடங்கினர்.

சைவத்திற்கும் தமிழுக்கும் உழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தொடங்கப் பெற்ற கழகம் தமிழ் இலக்கிய, சமய நூல்களை அழகுற, செம்மையான முறையில் பதிப்பிக்கத் தொடங்கியது.

திருவரங்கனார் நெல்லையிலும், வ. சு. பிள்ளை சென்னையிலும் இருந்து கொண்டு 1920 முதல் 1944 வரை கால் நூற்றாண்டுக் காலம் மிக அரிய பதிப்புப் பணியைச் செய்தனர். எழுத்தாற்றலும் பதிப்பாற்றலும் பெற்றிருந்த அறிஞர்களையெல்லாம் தூண்டுதல் செய்து ஊக்கப்படுத்திப் பழந்தமிழ் இலக்கண, இலக்கிய, சமய நூல்களுக்கு உரை கண்டு-அவற்றைச் செம்மையாகப் பதிப்பித்தனர். 'கழகப் பதிப்பு' என்றாலே தரமான பதிப்பு, தனிச் சிறப்புடைய பதிப்பு என்ற பெயர் பெற்று நிலைக்கலாயிற்று. தனியார் வெளியிட்டு, விற்பனையாகாது முடங்கிக் கிடந்த அரிய தமிழ்நூல்கள் பலவற்றை, இவ்விருவரும் அவ்வவர் தம் வீடுகளை நாடிச் சென்று, பெற்று வந்து, அவற்றை விற்றுக் கொடுத்தது பெருஞ் செயலாகும். இவ்வகையில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் நூல்களை நிரம்ப விற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். வண்டி வசதிகள் இல்லாத அக்காலச் சென்னையில் ஏறத்தாழ, கால் நூற்றாண்டுக் காலம் வ. சு.

அட்டை சொல்லும் செய்தி

தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்பவர்கள் ஒரு முறை சைவ சித்தாந்தக் கழகத்திற்குப் போய் வந்தால் என்ன இருக்கிறது என்பது புரியும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய பெருமைக்குரிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை உருவாக்கி வளர்த்ததில் பெரும்பங்குக்கு உரியவரான செந்தமிழ்ச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் 24.1.'83-ல் மறைந்தார். அவரது வாழ்க்கை நிகழ்ச்சியினையும் தொண்டினை [illegible] விளக்குகிறது இக் கட்டுரை.



மாண்புமிகு முதல்வர் திரு. சுப்பையா பிள்ளைக்கு 'செந்தமிழ்ச் செல்வர்' பட்டம் வழங்கிய காட்சி (15-1-1979)

பிள்ளை சருருளை வண்டியில் தாமே நேரில் சென்று புத்தகங்களை வாங்கி விற்று வந்தார்.

கழக நூல்களை அச்சிடுவதற்குச் சொந்தத்தில் அச்சகம் வேண்டுமென எண்ணி, 1948-ல் 'அப்பர் அச்சக'த்தைத் தொடங்னார். இந்திய அரசின் பரிசுகளையும் அனைந்திந்திய அச்சக உரிமையாளர் சங்கத்தின் பரிசுகளையும் கழகம் பெற்றது. ஆங்கில நூல்களுக்கு இணையாகத் தமிழ் நூல்களை வெளியிட்ட பெருமை வ. சு. பிள்ளை அவர்களையே சாரும்.

நூல் வெளியீட்டுப் பணியிலும் அவர் தயங்கவில்லை. சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் ஓரிடத்தில் ஒருசேரக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரும் புலவர்களான நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், சித்தாந்தப் பெரும் புலவர் ஒளவை துரைசாமிப் பிள்ளை, பெருமழைப்புலவர் சோமசுந்தரனார் போன்றோரைக் கொண்டு உரை எழுதுவித்து அவற்றைப் பதிப்பித்தார். தொல்காப்பிய உரைகள் அத்தனையும் இதுவரை ஒருசேரக் கழகம் தவிர வேறு யாரும் வெளியிட்டதில்லை என்று கூறுமளவிற்கு அழகுறப் பதிப்பித்தார். ஐம்பெரு, ஐஞ்சிறு காப்பியங்கள் பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், புராணங்கள், நீதி நூல்கள், உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கிய நூல்கள், நன்னூல் யாப்பு முதலான இலக்கண நூல்கள், அகராதிகள், பழமொழிகள் போன்று தமிழுக்கு அடிப்படையாகத் தேவையான நூல்கள் அனைத்தையுமே அவர் வெளியிட்டார். இவற்றைக் கொண்ட 'இலக்கியப் பேழை'களையும் அவர் உருவாக்கினார்.

தமிழ்நூல் விற்பனையுலகில் பெரும் புரட்சியைச் செய்யும் வகையில் இதுவரை பத்து நூறாயிரம் படிகள் தமிழில் வேறு எந்த நூலும் விற்பனையாகவில்லை என்று கூறுமளவிற்குத் 'திருக்குறள் தெளிவுரை'யை முனைவர் மு. வரதராசனார் அவர்களைக் கொண்டு எழுதுவித்து விற்பனை செய்து அவர் வரலாறு படைத்தார்.

பல்வகையான நூல்களை உருவாக்கியதுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை., தமிழ்மக்களிடையே இலக்கிய, சமய உணர்வு பரவ வேண்டுமென்பதற்காகப் பேரறிஞர்களைக் கொண்டு இலக்கிய, சமய மாநாடுகள் நடத்தினார். எட்டுத்தொகை நூல்கள் எட்டுக்கும் தனித்தனியாக மாநாடு நடத்தினார். பத்துப் பாட்டு, பதினென் கீழ்க்கணக்குகளுக்கும் தனித்தனி மாநாடுகள், இவ்வாறே சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், வரலாற்று மாநாடு அரசியல் மாநாடு என்று பல்வேறு மாநாடுகளை அவர் கூட்டுவித்தார்.

கழக அறநிலையமான இரு சங்கங்களின் வழி நல்ல பயனுடைய நிலையங்களை அவர் தோற்றுவித்தார். நெல்லையில் தமிழறிஞர்கட்கு உதவுவதற்கு 1950ல் 'சிவஞான முனிவர் நூல் நிலைய'த்தைத்தோற்றுவித்தார். மறைமலையடிகளார் தம் விருப்ப ஆவணத்தின் வழி கழகத்திற்குக் கொடுத்த 4,000 நூல்களோடு வேறு பல நூல்களையும் சேர்த்து அவர்தம் பெயரிலேயே 'மறைமலையடிகள் நூல் நிலைய'த்தை 1958ல் வ. சு. நிறுவினார்.

இவ்விரு நூல் நிலையங்கள் மட்டுமின்றி நீலாம்பிகையார் பல்கலைப் பள்ளி, தட்டச்சுப் பள்ளி, தையற்கலைப் பள்ளி, குமர குருபரர் குழந்தைப்பள்ளி போன்றவற்றையும் தோற்றுவித்து நெல்லைவாழ் மகளிர்க்கும் சிறுவர்க்கும் அவர் பெருந்தொண்டாற்றி வந்தார்.

இவையனைத்துக்கும் மேலாக 1937-38 ஆண்டுகளில் இந்தியெதிர்ப்புப் போராட்டத்தின் போது, அதற்கெனத் தமையனாருடன் இணைந்து 'தமிழ்ப் பாது காப்புக் கழக'த்தை நிறுவியதும் இந்தியெதிர்ப்புப் பிரசுரங்கள் வெளியிட்டதும் ஊர்வலங்கள் நடத்தியதும்மறியல்கள் நடத்தத் தூண்டுதலாயிருந்தமையும் எல்லாமே பொன்னெழுத்துக்களில் பொறிக்க வேண்டிய பணிகளாகும். முதல் இந்தி எதிர்ப்புப் போரைப் பற்றி அவர் தொகுத்து வைத்துள்ளசெய்திகள் வேறு எங்கும் காணக்கிடைக்காதவை.

கழக ஆட்சியரின் பல்வேறு பணிகளையும் கண்டு மைய, மாநில அரசுகள் அவருக்குப் பட்டங்கள் அளித்துப் பாராட்டிப் போற்றின. 1969ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பரிந்துரையின் பேரில் இந்திய அரசு 'தாமரைத் திரு' (பத்மஸ்ரீ) என்ற விருதை வழங்கியது. அந்நாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சாகிர் உசேன் அவர்கள் புதுதில்லியில் அவ்விருதை வழங்கினார்.

செந்தமிழில் நாட்டம்கொண்டு அதன் வளர்ச்சிக்காகவே தம் வாழ் நாளை ஒப்படைத்த அப்பெருமகனார்க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 1979-ல் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்தையும் பொற்பதக்கத்தையும் வழங்கினார்.

தமிழ் ஆய்விற்கு நூல்கள் 'வெளியிட்டும் நூலகங்கள் வைத்தும் தொண்டாற்றியதைப் பாராட்டும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தார் பிள்ளையவர்கட்கு 1982-ல் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதினையும் ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொற்பதக்கத்தினையும் அதன் துணை வேந்தரான தனித் தமிழறிஞர் டாக்டர் வ. சு ப.மாணிக்கனார் அவர்கள் பரிந்துரையின் மேல் வழங்கிப் பாராட்டியது.

பல்லாண்டுகட்கு முன்னரே சென்னை மாணவர் மன்றம் 'செந்தமிழ் நூற்-காவலர்' என்ற பட்டத்தை அவர்கட்கு வழங்கியது. 'தமிழ்மொழிக் காவலர்' 'சைவநெறிக் காவலர்' என்ற பல்வேறு பட்டங்களும் அவர்கட்குப் பல்வேறு அமைப்புகளால் வழங்கப் பெற்றுள்ளன.

அவர்தம் உடலுடன் இரண்டறக் கலந்திருந்த சளிநோய் அவர்தம் இன்னுயிரை 24-1-'83 அன்று பிற்பகல் 2 மணிக்குக் கவர்ந்து சென்றது. தமிழையே எழுதி, தமிழுக்காகவே வாழ்ந்த அவர் உடல் உயிரற்று ஓய்ந்தது.



# அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி நிறைவு விழா

ஆ. மருதவிநாயகம்



பொருட்காட்சியின் மிகச் சிறந்த அரங்குக்குரிய பரிசை கல்வித்துறைச் செயலர் திரு இராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள் பெறுகிறார்.

சென்னைத் தீவுத் திடலில் கடந்த அறுபது நாட்களாக நடைபெற்று வந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியின் நிறைவு விழா 21.2.83 அன்று நடைபெற்றது.

செய்தி சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறைச் செயலர் திரு பி.பி. கிருஷ்ணசாமி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமையேற்று உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தெரிவித்ததாவது:

''இங்கு நடைபெற்ற பொருட்காட்சி மூலம் ரூ. 15 இலட்சம் இலாபம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ. 2 இலட்சம் அதிகம் ஆகும். மின்சாரத்தை ஜெனரேட்டர் மூலம் உருவாக்கி சிக்கனமாகப் பயன்படுத்தினோம். இந்த ஆண்டு முதல் பொருட்காட்சியில் மாவட்ட அரங்குகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டில் மேலும் முக்கியத்துவம் கொடுக்கப்படும்''.

சுற்றுலாப் பொருட்காட்சியில் சிறந்த அரங்குகள் அமைத்தவர்களுக்குப் பரிசுக் கேடயங்களை வழங்கி, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சுற்றுலாப் பொருட்காட்சிக்காக மின்சாரம் கேட்டபோது, அத்தியாவசிய தேவையில் குறைந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். சுற்றுலாத் துறையினர் எவ்வளவு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கின்றது. சென்ற ஆண்டு இதே பொருட்காட்சி 66 நாட்கள் நடந்தது. அப்பொழுது 3,29,155 யூனிட் மின்சாரம் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்று கூடுதலாக அரங்குகள் அமைத்துள்ளார்கள். அப்படிப் பார்த்தால் 3,97,729 யூனிட்டுகள் மின்சாரம் பயன்படுத்தியிருக்கலாம். இன்று 2,58,950 யூனிட்டுதான் பயன்படுத்தியிருக்கிறார்கள். 10·/. விதம் தான் மின்சாரம் சேமிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம் ஆனால் 35·/. விதம் மின்சாரம் சேமித்தது பாராட்டுக்குரியது.

மின்சாரப் பற்றாக் குறையைப் போக்க வேண்டும் என்பதற்காக சென்னையில், 1050 ''மெகாவாட்'' உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று மைய அரசை வற்புறுத்தி வருகிறோம்''.

விழா இறுதியில் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம். மாதவன்நம்பியார், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையைச் சார்ந்த மாவட்ட அரங்குகளுக்குரிய முதற் பரிசு சேலம் மாவட்டத்திற்கும், இரண்டாம் பரிசு மதுரை மாவட்டத்திற்கும், மூன்றாம் பரிசு புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் அளிக்கப்பட்டன.






வேளாண்மை விளை பொருள் வளர்ச்சியில் பயிர் பாதுகாப்பும் தாவரப் பாதுகாப்பும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எலி கட்டுப்பாடு, பயிரை நாசம் செய்யும் பூச்சிகள் கட்டுப்பாடு முதலியவை பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கியமானவை.

எலிகள் தொகையை பாம்புகளைக் கொண்டு கட்டுப்படுத்துவதும், பாம்பின் நச்சுப் பொருளிலிருந்து மனித நலத்துக்குரிய மருந்துகள் தயாரிப்பதும் நமது பழைய நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன.

ஜூலை ஆகஸ்டு ஆகிய நடவு பருவத்தில் கொண்டாடும் நாக பஞ்சமி திருவிழாவும், செப்டம்பரில் அதாவது அறுவடைப்பருவத்தில் வரும் ஆனந்த் சதுர்தஸி எனப்படும் விழாவும் பண்டைய காலத்தில், வழிவழியாக கொண்டாடப்படும் 'வேளாண்மை வழி' நடைமுறைகளை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

பம்பாய் நகரத்திலுள்ள எலிகளின் தொகை ஓராண்டுக்குக் கட்டுப்படுத்த முடிந்திருந்தால் 9 லட்சம் மனித உயிர்களுக்கு ஓராண்டுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் சேமிக்கப் பட்டிருக்க முடியும் என்று உலக சுகாதார நிறுவனம் 1967-ல் மதிப்பிட்டிருந்தது. சேமிப்புக் கிடங்குகளில் உள்ள தானியங்களும் வயல்வெளியில் உள்ள பயிர்களும் 7 முதல் 9 சதவீதம் வரை எலிகளால் நாசப்படுத்தப் படுவதாக தோராய மதிப்பீட்டிலிருந்து தெரிய வருகிறது.

பம்பாய் மருத்துவமனையில் 21,000 பேர் ஓராண்டில் எலிக் கடியினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டனர் என்றும் ஆனால் நான்கு பேர் மட்டுமே பாம்புக் கடி காரணமாக அனுமதிக்கப்பட்டனர் என்றும் பம்பாயில் உள்ள ஹாஃப்கின் நிலையத்தில் 1962-ல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பாம்புகள் எலிகளுக்குப் பகைவர்கள். எலித்தொகையை அவை பெருமளவில் அழிக்கின்றன. ஒரு பாம்பு ஒருவாரத்தில் நான்கு எலிகளைத் தின்கிறது. பாம்புகளை அழிப்பதன் மூலம் எலிகளின் தொகையைப் பெருக்குகின்றோம். எலிகள் பாம்புகளை விட மிக விரைந்தும், அடிக்கடியும் இனப்பெருக்கம் செய்கின்றன.

எலி பாஷாணம் வைத்து எலிகளைக் கொல்வது ஏழை விவசாயிகளுக்கு எளிதுமன்று உடல்நலத்துக்கு ஏற்றதுமன்று. மழைக்காலத்தில் வயல்களில் நீர் நிறைந்திருக்கும்பொழுது எவ்வளவுதான் 'எலிக்கொல்லி' மருந்தை இட்டாலும் எலிகள் பயிர்களை அழிப்பதினின்று தடுக்க முடிவதில்லை.

இந்த எலிக்கொல்லி மருந்துகளை விட இப்பருவ காலத்தில் பாம்புகளே எலிகளைக் கட்டுப் படுத்துகின்றன.

ஆஸ்திரேலியாவில் உணவு தானியக் கிடங்குகளில் உயிருள்ள பாம்புகளை உள்ளே போட்டு எலிகளைக் கொல்லுகிறார்கள் அல்லது எலிகளை விரட்டுகிறார்கள்.

1894 முதல் 1947-ஆம் ஆண்டு வரை எலிகளால் பரவும் ப்ளேக் நோயினால் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்தியாவில் இறந்துபட்டனர். எலித்தொகை பெருகுவதனால் உணவு தானியங்களுக்கு மட்டும் இழப்பு நேர்வதில்லை. அவைகளால் பரப்பப்படும் நோய்களால் மனித உயிர்களும் பலியாகின்றன. எனவே எலிகள் அழிக்கப்பட வேண்டும்.

எலிகள் தொகையைக் கட்டுப் படுத்த இயற்கை நமக்கு அளித்த வரப் பிரசாதமே பாம்புகள்.

நமதுநாடு வளர்ந்து வரும்நாடு. விரைந்து நகரமயமாக்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகையாலும், அவர்களுக்குத் தேவைப்படும் நிலத்தினாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன. வர்த்தக ரீதியில் காடுகள் அழிக்கப்படுவதாலும் இயற்கைச் செல்வங்கள் சீரழிக்கப்படுகின்றன. வனங்கள் இவ்வாறு அழிக்கப் படுவதினால் வனவிலங்குகள் உட்பட பல வனச்செல்வங்கள் சீரழிக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களின் பேராசையினால் இன்று வனஉயிர்களின் தொகைகுறைந்து வருகிறது.

காடுகளில் வன உயிர்கள் பாதுகாக்கப்பட பாம்புகள் காரணமாக அமைகின்றன. நாம் பாம்புகளை அழிப்பதன் மூலம் நம் நாட்டில் வன விலங்குகளுக்கே ஊறு விளைவிக்கின்றோம்.

பாம்புகளைப் பிடித்து வளர்ப்பது அவ்வளவு சுலபமல்ல. பாம்புத்தோலும் பாம்புத்தோல் பொருட்களும் உலகச் சந்தையில் மிகுந்த விலைக்கு விற்கப்படுகின்றன. அதனால் அவற்றை ஏற்றுமதி செய்யப் பலர் ஆர்வம் காட்டுகின்றனர். வெளிநாட்டில் அவற்றிற்குக் கிடைக்கும் விலை உள்நாட்டில் கிடைக்காது. வெளிநாட்டு ஏற்றுமதியை மீண்டும் ஆரம்பித்தால் அதன் விளைவாக நமது நாட்டிலுள்ள பாம்புகளின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துவிடும். அதன் விளைவாக வேளாண்மை, வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படும். இயற்கைச் சூழலும் பெரிதும் பாதிக்கப்படும்.

[பாம்புத் தோல் ஏற்றுமதி பற்றிய குழு அளித்த அறிக்கையிலிருந்து]-



# தந்தை பெரியார் நினைவுத் தூண்

பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியாரின் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் ஏற்கனவே பத்து மாவட்டங்களில் திறக்கப் பட்டுள்ளன. பதினோராவது தூண் 24.12.82-ல் தருமபுரியில் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது.

செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு எஸ்.டி.காசி ராஜன், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். வரவேற்புரையில் அவர் குறிப் பிட்டதாவது :

''தந்தை பெரியார் அவர்கள், தாம் எடுத்துக்கூறிய கொள்கைகளின்படி நடந்து காட்டினார். நாளையத் தலைமுறைக்கு இந்த நினைவுத்தூண் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களையும், அவற்றை அவர் செயல்படுத்திய வழிமுறைகளையும் நினைவுறுத்தும்''.

அடுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது;

''இன்றைக்கு தந்தை பெரியார் அவர்களுடைய நினைவுத் தூணைப் பார்க்கிறபோது, 95 ஆண்டுகள் நமக்காக வாழ்ந்து, நம் தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் ஆற்றிய அரும்பெருஞ் சாதனைகளின் பட்டியல்கள் நம்முடைய உள்ளத்திலே நின்று நிழலாடும்.''

பின்னர், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப் பிட்டதாவது:

''வேண்டாத - பயன்தராத - அறிவைக் கெடுக்கின்ற - ஆற்றலைக் கெடுக்கின்ற - உழைப்பைக் கெடுக்கின்ற பழமைகளையும், மூட நம்பிக்கைகளையும் தூள் தூளாக்கினார் தந்தை பெரியார். வேண்டாத-பயன்படாத பழைய உலகத்தைத் தகர்த்தெறிந்தவர் தந்தை பெரியார். வேண்டிய - பயன்தரக்கூடிய புதிய உலகத்தை உண்டாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா. காடுகளை அழிக்காமல் வயலாக்க முடியாது- காடுகளைஅழித்துவயலாக்கியவர் தந்தை பெரியார். அதிலே உழுது விதைத்து விளைவை உண்டாக்கி பயன் விளைத்தவர் பேரறிஞர் அண்ணா. தந்தை பெரியாரின் நினைவு நாளிலே இந்த நினைவுத் தூணை இங்கு நிறுவுவது பொருத்தமானது - பெருமைப் படத்தக்கது''

தொடக்கத்தில், பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் துணைத் தலைவர் திரு நெ.து சுந்தரவடிவேலு, திருவாரூர் திரு கே.தங்கராசு, திரு எம்.இராச கோபாலன், சட்டமேலவை உறுப்பினர்கள் திரு எஸ். அரங்கநாதன், திரு சமரசம், திரு பி. எஸ்.துரைசாமி, திரு சபாபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தருமபுரி மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூர சுந்தரபாண்டியன்,இ.ஆ.ப நன்றி கூறினார்.

விழா முடிவில் சட்டமன்ற உறுப்பினர் திரு சமரசம், ஜி.கே.எஸ். மற்றும் மஞ்சுளா குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு நினைவுத்தூண் 26.12.82ல் சேலம் அம்மாபேட்டையில் மாண்புமிகு சட்டமன்ற பேரவைத்தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு எஸ்.டி.. காசி ராஜன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அவர் தம் வரவேற்புரையில் குறிப் பிட்டதாவது:

''தந்தை பெரியார் அவர்களின் நினைவுச் சின்னம் எழுப் பப்பட்டுள்ள இந்த இடம், பிரிவுச்சாலை போடுவதற்காகப் பெரியார் அவர்கள் வழங்கிய இடமாகும். இங்கே வலது பக்கமிருக்கிற கடைகள் அதையொட்டியுள்ள சாலை ஆகியவையும் பெரியார் அவர்கள் கொடுத்தது தான். எந்த நிலத்தை தந்தை பெரியார் அவர்கள் ,மக்களின் நலனுக்காக அரசுக்குக் கொடுத்தாரோ அதே இடத்தை இன்று அரசு நன்றிக் காணிக்கையுடன் நினைவுச் சின்னமாகத் திருப்பித் தந்துள்ளது. நமக்கு எதிரேயுள்ள இதே தாதம்பட்டிதான் தந்தை பெரியார் அவர்களின் அன்னையார் சின்னதாயத்தம்மாள் பிறந்த ஊராகும். பெரியாரின் துணைவியார் திருமதி நாகம்மையார் பிறந்த இடமும் இதே தாதம்பட்டிதான் என்பது குறிப் பிடத்தக்கது!''



தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத் தலைவர் திருமதி ஈ.வெ கி. சுலோசனாசம்பத் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கையில் ஈரோடும் திருச்சியும் எப்படி ஒன்றிப்போன நகரங்களோ அதேபோன்று சேலத்தையும் சொல்லலாம்.

தந்தை பெரியார் அவர்களின் வரலாற்றில் சேலத்திற்கு மிகச் சிறப்பான இடம் உண்டு''.

திரு. எம். இராஜகோபாலன், திருவாரூர் திரு கே. தங்கராசு, திரு நெ. து. சுந்தரவடிவேலு, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி.பழனியப்பன், சேலம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எம்.ஆறுமுகம், சட்ட மேலவை கொறடா டாக்டர் திரு இரா. சனார்த்தனம், சட்ட மேலவை உறுப்பினர் திரு செ. முத்துசாமி ஆகியோர், தந்தை பெரியார் அவர்களின் சிறப்பியல் புகளை விளக்கி உரையாற்றினார்கள்.

அடுத்து மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியார் சேலம் தாதம்பட்டியில் சிறு வயதில் வளர்ந்தார். சேலம் மாவட்டமும் பெரியார் மாவட்டமும் பெரியார் வாழ்க்கையில் பல கால கட்டங்களில் கைகொடுத்து உதவியுள்ளன. ஆகவே, சேலம் அம்மாபேட்டையில் இந்த நினைவுக் கல்தூண்வைப்பது சிறந்த காரியமாகும்.

''பெண்களின் சொத்துரிமைக்காகவும் அவர்கள் முன்னேற்றத்திற்காகவும், சமஉரிமைதரப்பட வேண்டும்என்பதற்கும் பெரியார் போராடினார். விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளவும் பெரியார் பாடுபட்டார்."

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள், நினைவுத் தூணைத் திறந்து வைத்து உரையாற்றினார்கள். அவர்தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் தன்னுடைய 95 வயதிலும் கூட, உடலில் பலவித நோய்கள் வந்து கொண்டு இருந்த போதிலும் சளைக்காமல் தொடர்ந்து சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரம் செய்தார். இம்மாதிரி உலகில் வேறு எந்தத் தலைவரும் தன்னுடைய கடைசி நாளில் சுற்றுப்பயணம் செய்யவில்லை."

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. வரதராஜுலு, இ.ஆ.ப அனைவருக்கும் நன்றி கூறினார்.



**வ**ட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் நிறுவப்பட்டுள்ள பெரியார் நூற்றாண்டு நினைவு தூண் 13-வது தூண் ஆகும். இத் தூண் திறப்புவிழா 30-1-'83 அன்று நேஷனல் திரைப்பட அரங்கு அருகிலுள்ள வேலூர் காட்பாடி கிளை வழிச் சாலை சந்திப்பில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுச் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப. அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''புத்த மகானுடைய கருத்துக்களை அசோகர் கல் தூண்களிலே பொறித்தார். அதே போல் தந்தை பெரியாருடைய கருத்துக்களைக் கல்லிலே பொறித்து வருகின்றோம். தந்தை பெரியாரின் கருத்துக்களை இந்த ஊர் மக்கள் அறிய இந்தக் கல்தூண் பயன்படும்'

விழாவிற்குத் தலைமைதாங்கிய மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு எம். விஜய சாரதி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக கிணறு மற்றும் பலவற்றை வேறு வகைகளில் ஒதுக்கித் தரக்கூடாது என்று அன்றே பெரியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதே வழியில் இந்த அரசு, வீட்டு மனைகள், வசதிகள் செய்யும் போது மற்ற சமூகத்தினர் வசிக்கும் இடத்திற்குப் பக்கத்திலேயே (தற்பொழுது ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் ஆதி திராவிடர்களுக்கு வசதி செய்து தரப்படுகிறது) செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது."

தந்தை பெரியார் நினைவுத் தூணைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''வீழ்ச்சியுற்று இருந்த தமிழகத்தைத் தன்மானத்தோடு வாழவும், சுயமரியாதைக் கொள்கைகளுடனும் வாழவும் செய்தவர் தந்தை பெரியார்.

''பாரிசில் உள்ள ஈஃபில் போன்று தந்தை பெரியாரை நினைவு கூர்ந்திடும் வகையில் சென்னையில் 95 அடி உயர நினைவுத்தூண் வைக்கப்படும்.

"தந்தை பெரியாரின் கொள்கை முறைப்படி, அண்ணாவின் வழியில் நடப்பேன் என்று முதல்வர் எம். ஜி. ஆர். கூறினார். அந்த வழியில் நடந்து வருகிறார்."

விழாவில் காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். ஏ. பூங்காவனம், ஆர்க்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சேதுராமன், சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கோபால், மாநிலங்களவை உறுப்பினர் திரு ஏ. பி. ஜனார்த்தனம், கதர்கிராமத் தொழில் வாரியத் துணைத் தலைவர் திரு எஸ். பாப்பையன், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. விசுவநாதன், திருவாரூர் திரு. கே. தங்கராசு, முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு ஆகியோர் உரையாற்றினார்கள்.

இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ந. நாராயணன் இ. ஆ. ப. அவர்கள் நன்றி கூறினார்.

வேலூர் 'கீதாலயா' இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற, விழா இனிது முடிந்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


பதிவு எண் M. 8676
தமிழரசு
1-3-'83


தமிழரசு
OF TAMILNADU



மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 16.2.1983-ல் டெல்லியில் மைய அரசின் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்து உரையாடினார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 16.2.1983-ல் டெல்லியில் மைய அரசின் மாண்புமிகு எரிபொருள்துறை அமைச்சர் திரு சிவசங்கர் அவர்களைச் சந்தித்து உரையாடினார்.



மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களை 1.3.1983 அன்று அணுசக்திக் குழுவின் தலைவரும், அணுசக்தித் துறையின் முதன்மைச் செயலாளருமான டாக்டர் எச். என். சேத்னா அவர்கள் சந்தித்தார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் உடன் உள்ளார்.

# நடு நிலை நாடுகள் மாநாடு




101 நாடுகள் பங்கு பெற்ற நடுநிலை நாடுகள் மாநாடு டெல்லியில் 7-3-83ல் தொடங்கியது.

இது 7வது மாநாடாகும். இதற்குத் தலைவராக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள்.

முந்திய மாநாட்டின் தலைவரும் கியூபா அதிபருமான பிடல்காஸ்ட்ரோ அவர்களும் மாநாட்டு பொதுச் செயலாளர் திரு. நட்வர்சிங் அவர்களும் பிரதமருடன் உள்ளனர்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி - பங்குனி 2
மலர் : 13 இதழ்: 18
16-3-1983



# நல்வாழ்வை நோக்கி நமது பயணம்

## மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

**1983–84ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1983ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2014, துந்துபி, மாசித் திங்கள் 21ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1982–83ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1983–84ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க விழைகிறேன்.

'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி'

'மழை பெய்யாமல் பொய்த்துவிடுமேயானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தபோதிலும், பசியானது உயிர்களிடத்தே இருந்து வருத்தும்' என்பது திருவள்ளுவப் பெருந்தகையார் தேர்ந்து தெளிந்து கூறிய உலகியல் உண்மையாகும்.

2. சென்ற ஆண்டும், அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும், தமிழ்நாட்டில் பருவ மழைகள் பெருமளவுக்குப் பொய்த்துப்போனதன் காரணமாக உணவுப் பற்றாக்குறை, குடிநீர்ப் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை போன்றவைகள் தமிழ்நாட்டைப் பெரும் அல்லல்களுக்கு ஆட்படுத்தியிருக்கின்றன. தமிழக அரசு தன் அறிவாற்றல் திறன்களையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி ஒரு பக்கம் இயற்கையால் ஏற்படும் கொடுமைகளைச் சமாளித்தும், மற்றொரு புறம் செயற்கையால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளைச் சமாளித்தும் மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட அரும்பாடுபட்டு வருகின்றது.

3. கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பருவ மழைகள் தொடர்ந்து பொய்த்துவிட்டதன் காரணமாக இம் மாநிலம் முழுவதிலும் பாசனத்திற்கு மட்டுமல்லாமல், குடிநீருக்கும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரில் பல இலட்சக் கணக்கான மக்கள் வாழ்ந்து வருவதால், மாநகரமே இதனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது. எனவே, இரண்டு நாளைக்கு ஒருமுறை குடி தண்ணீர் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. சென்னை மாநகரில் குடிதண்ணீர் வழங்கலைப் பெருக்குவதற்காக நிலத்தடி நீர் வளத்திற்கு உறுதுணையாக, 22 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கத்தில் கிணறுகள் இருக்கும் பகுதியிலிருந்து புழலேரி இணைப்புக் குழாய்க்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல 2·3 கிலோ மீட்டர் தொலைவிற்கு இணைப்புக் குழாய் போடப்படும். சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 10,200 ஆகிவிட்டது. ஏறக்குறைய 130 தண்ணீர் லாரிகள் அன்றாடம் 1,585 உருக்குத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி வருகின்றன. இந்தத் தொட்டிகள் நலிவுற்ற பிரிவினர் வசிக்கும் பகுதிகளிலேயே முக்கியமாக அமைக்கப்பட்டுள்ளன.

திருவான்மியூருக்குத் தெற்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் சுமார் ரூ. 3 கோடி செலவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. சென்னை மாநகரில் குடிநீர் நிலைமை மிகக் கடுமையாக இருப்பதால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக்





குறைப்பதற்காக இம் மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவ்வண்ணமே, இம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள வெவ்வேறு நகரங்களிலும், பட்டணங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் குடிதண்ணீர் வழங்கல் அளவைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



4. பருவ மழைகள் பொய்த்ததன் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன ; இதன் விளைவாக, உணவு உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகம் உரிய நேரத்தில் போதிய அளவு தண்ணீரைக் கொடுத்து உதவியிருந்தால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டம்—சாதாரணமாக வறட்சி நிலைமை ஏற்படாத மாவட்டம்—இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதைப்போல் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்காது. இம் மாநில அரசு தொடர்ந்து பல வேண்டுகோள்கள் விடுத்திருந்தும் இவ்வகையில் கர்நாடக மாநிலத்திலிருந்து அதிக அளவு உதவி கிடைக்கவில்லை.

5. இம் மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. மத்திய அரசிடமிருந்து உணவு தானியங்களைப் பெறுவதற்கு இம் மாநில அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவரும் அறிவர். ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டுள்ளது போல் 1982 ஜூன் திங்களிலிருந்து இம் மாநில அரசுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி எதுவும் ஒதுக்கப்படவேயில்லை. இது தொடர்பாக மத்திய உணவு—வேளாண்மை அமைச்சர்களுடனும், பிரதம அமைச்சருடனும் நேரடியாகப் பேசுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் டில்லிக்குச் சென்று, நிலைமையை விளக்கிக் கூறிவிட்டு வந்தார்கள். தமிழகத்தின் பற்றாக்குறையைத் தீர்க்க மத்திய அரசு தன் தொகுப்பிலிருந்து திங்கள் தோறும் அரிசி 80 ஆயிரம் டன்னும் கோதுமை 40 ஆயிரம் டன்னும் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அரிசியை உபரியாகக் கொண்டுள்ள பிற மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அரிசியைத் தமிழக அரசு பெற முடியாமல் மத்திய அரசால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி கிடையாது. தமிழ்நாட்டு நுகர்பொருள் வாணிபக் கழகமோ அல்லது தமிழ்நாட்டு வியாபாரிகளோ வெளி மாநிலங்களில் அரிசியை அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. 1 கோடியே 17 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நியாயமான விலையில், லெவி விலையைவிடக் குறைந்த விலையில், அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு அதிக அளவு 20 கிலோ அரிசி என்று வழங்க வேண்டியிருக்கிறது. குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கும், ஓய்வூதியம் பெறும் நலிந்தோர் சத்துணவுத் திட்டத்திற்கும் சுமார் 17,000 டன் அரிசி திங்கள்தோறும் வழங்கவேண்டியிருக்கிறது. இந்த நெருக்கடி நிலையில் தமிழக அரசு தமிழகத்தில் லெவி கொள்முதல் மூலம் கிடைக்கும் அரிசியை இயன்றவரையில் பயன்படுத்திவருகிறது. தமிழகத்தின் இருப்பு ஓரிரு திங்கள்களுக்குமட்டுமே போதுமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கும் தமிழகத்தின் அரிசிப் பற்றாக்குறைகளைத் தீர்க்கத் தமிழக அரசு தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபடுகின்ற

நேரத்தில், தேவைப்படும் அளவுக்கு நிதி வசதிகளையும், உணவுப் பண்டங்களையும் அளித்து உதவிபுரிய வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை அனைவர்க்கும் நினைவூட்ட விரும்புகிறேன். எனினும், மத்திய அரசின் உதவியும், ஒத்துழைப்பும் இந்த வகையில் அண்மைக்காலத்தில் இதுவரையில் தமிழக அரசிற்குக் கிட்டாமல் இருப்பது பெரும் வருத்தத்தை அளிக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சரோடும், மத்திய உணவு அமைச்சரோடும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இனியேனும் மத்திய அரசு, தமிழகத்தின் உணவுப் பற்றாக்குறையை உரிய வகையில் நீக்கிட பேருதவி புரிய விரைவில் முன்வரும் என்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது. இந்த நாட்டில் உணவு தானியங்கள் எங்கெங்கு கிடைக்கினும் அங்கெல்லாம் சென்று, உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு இம் மாநில அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலர்கள் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்காக, பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இம் மாநில அரசு தன் பங்குக்கு, பொதுப்பங்கீட்டு ஏற்பாட்டினைச் செவ்வனே நடத்தவும், மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கப் பெருத்த செலவு ஏற்படும் என்றாலும் அவர்களுக்குப் போதிய அளவு உணவு தானியங்களை வழங்கவும் தன்னால் ஆனதையெல்லாம் செய்து வருகின்றதென மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதி கூற விழைகிறேன்.

**6.** பருவ மழை பொய்த்ததன் காரணமாக, இம் மாநிலத்தில் மின்சார நிலைமையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, எல்லா வகைப் பயனீட்டாளருக்கும் அதிக அளவில் மின்வெட்டு விதிக்க வேண்டி வந்துள்ளது. இந்த மின் வெட்டு உயரழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையில் 75 சதவீதமாகவும் மின்னழுத்தத்தில் 60 சதவீதமாகவும் தமிழ்நாடு மின்வாரியத்தால் விதிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேட்டூர் உள்பட புனல் மின்சார நீர்த் தேக்கங்கள் அநேகமாக வற்றிப் போய்விட்டதால், இம் மாநில மின் இணைப்பு ஏற்பாடு இப்போது அனல் மின் உற்பத்தியையே முழுவதும் நம்பியிருக்க வேண்டிய நிலையிலுள்ளது. தொழில்களையும், குடியானவர்களையும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மற்றவர்களையும் இது பெரிதும் பாதித்துள்ளது. இதன் காரணமாக, உற்பத்தி மிகவும் குறைந்துபோய் மாநில அரசுக்குப் பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களும் மின் சக்தி உற்பத்தியில் சிரமப்பட்டு வருவதால், அம் மாநிலங்களிலிருந்து முந்தைய ஆண்டுகளைப்போல், மின்சாரம் எதையும் தமிழ்நாடு பெற முடியவில்லை. ஜூன் மாதத்தில் பருவமழை பெய்யத் தொடங்கினால்தான், நிலைமை சீர்திருந்தும், அதுவரை இம் மாநிலத்தில் மின்வெட்டு இருக்கத்தான் செய்யும்.

**7.** தமிழக அரசு திட்டமிட்டுள்ள புதிய மின்சாரத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அனுமதிகளை வழங்கவும், அனல் மின்சார நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை அவ்வப்போது தட்டுப்பாடில்லாமல் அளிக்கவும் மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**8.** எதற்கெடுத்தாலும் மத்திய அரசை மாநில அரசு எதிர்பார்க்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள். தமிழக அரசு எதற்கெடுத்தாலும் மத்திய அரசை எதிர் பார்க்கவில்லை. எதெதற்கு மாநில அரசு, மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டும் என்று, அரசமைப்புச் சட்டமும், மத்திய அரசின் அதிகார ஆதிக்கவரம்புகளும் விதிமுறைகளை வகுத்துத் தந்திருக்கின்றனவோ, அது அதைப் பொறுத்துத்தான் தமிழக அரசு எதிர்பார்க்கிறது. அவை கிட்டாத நிலையில் வற்புறுத்தி வருகிறது. ஆட்சிமுறை, நிர்வாகம், சட்டம், நீதி, பொருளாதாரம் போன்ற பல துறைகளில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பல தகராறுகள் அவ்வப்போது எழுகின்றன. மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே இணக்கமான உறவு ஏற்பட, தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடுகூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும் என்பதை இந்த ஆட்சி அடிக்கடி நினைவு படுத்தி வருகிறது. பொதுக் கோட்பாடுகளில் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், மாநிலங்களுக்கு மட்டுமே சொந்தமான துறைகளிலும் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பெரிதும் பாதிக்கும்வகையில் மாநிலங்கள்மீது மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துதல், முன்னர் மாநிலங்கள் அனுபவித்துவந்த வரி விதிப்பு அதிகாரத்தையும் குறைத்தல் போன்றவைகள் மத்திய அரசை மாநில அரசுகள் எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையை உருவாக்கி வருகின்றன. உரிமையை வற்புறுத்துவது குற்றச்சாட்டாகாது.

**9.** 1967ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாளன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்ற மேலவையில் பொதுவிவாதத்திற்கு விடையளிக்கும் போது,

"மானியங்கள் என்ற போர்வையில் மத்திய அரசு அதனிடம் சாட்டையை வைத்துள்ளது; ஏனெனில், மத்திய அரசு அதன் உளத்தேர்வின்படி மானியங்களை வழங்குகிறது........ — திட்டத் தொகையைப் பொறுத்தவரையில் நிதித் தொடர்புகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்; மிக விரைந்து செய்யப்பட வேண்டும். நமக்குச் சேர வேண்டியது, நம்மிடமிருந்து கொள்ளை போகக் கூடாது. மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்" என்றும்




**10.** 1967ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17ஆம் நாளன்று சட்டமன்ற அவைகளில் வரவு-செலவுத் திட்டத்தை அளிக்கும்போது,

"திட்டத்திற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், ஒதுக்கீடு செய்தல், அதைப்பயன்படுத்துதல் சம்பந்தமாக மத்திய அரசு கொண்டுள்ள அதிகாரங்கள், மத்திய அரசிடம் உதவிக்காக இறைஞ்சி வேண்டுபவர்களின் நிலைக்கு மாநிலங்களின் தகுதியைக் குறைத்துள்ளன. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுச் சிலர் இச் சிக்கலை விவாதிக்காமல் ஒதுங்கியிருந்தாலும், பொருளாதார ரீதியில் இச் சிக்கலை நோக்குபவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே நிதித் தொடர்பு சம்பந்தப்பட்ட போக்குகள் குறித்துக் கவலை கொண்டுள்ளனர். மாநிலங்கள் அவற்றின் விருப்பப்படி நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் முழு உரிமையுடன் வருவாய்ப் பெருக்க வாயில்களை ஏற்படுத்திக் கொண்டும், ஒப்புக்கொண்ட அடிப்படையில் திட்ட ஆதாரங்களை ஒதுக்கீடு செய்தும், மாநிலங்களின் நிதி அடிப்படை பெருமளவு வலிவாக்கப்பட்டாலன்றிப் புதிய சமுதாயம் காண வேண்டும் என்னும் மக்களின் வளர்ந்து வரும் விருப்பத்தினை . சமாளிப்பதில், மாநில அரசுகள் அவற்றின் பொறுப்புக்களை நிறைவேற்றிட இயலாது என்பதைப் பல மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் உணர்ந்துள்ளனர்," என்றும் குறிப்பிட்டிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

மத்திய-மாநில அரசுகளின் உறவுமுறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப்பட வேண்டிய காலம் அவசரமாக வந்துள்ள நிலையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பது, எல்லாராலும் உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

### வறட்சி நிலை

**11.** இம் மாநில அரசு மோசமான பருவ நிலைமைகளை எதிர்த்துப் போராடுவதற்காகத் துயர் தணிப்பு நடவடிக்கைகளைப் பெரிய அளவில் மேற்கொள்வதற்காக இதுவரை ரூ. 45·63 கோடி அளவிற்கான செலவை அனுமதித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர்— வடிகால் வாரியம் கிராமப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் 1982 ஆகஸ்டு மாதத்திலிருந்து ஆயிரக் கணக்கான துளைக் கிணறுகளை அமைத்துள்ளது.



அதே நேரத்தில், சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமத்தினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தொழிலாளர் அதிகம் தேவைப்படுகிற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலே சொல்லிய அனுமதிக்கப்பட்ட செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்குத் தொடக்க நிலவள வங்கிகளுக்கு அரசு ஒப்புதலளித்த ரூ. 7·50 கோடி கடனும் அடங்கும். வரும் ஆண்டுகளிலும் வேளாண்மை நடவடிக்கைகளை உறுதிப்படுத்த இவை பெரிதும் உறுதுணையாக இருக்கும். நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் ஊராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் அமைப்புகளில் தனிப்பட்ட நீர்வரவுக் குழாய்கள் அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. பெரும் பாசன ஆதாரங்களையும் சிறு பாசன ஆதாரங்களையும் மேம்படுத்தவும், புதிய சாலைகள் அமைக்கவும் இன்னபிற பணிகளை மேற்கொள்ளவும் மாவட்டங்களில் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருந்தாலும் அச் செலவைச் செய்வதற்கு இவ்வரசு தயங்காது.

**12.** சில ஆண்டுகளாக இம் மாநிலம் மேலே விளக்கிக் கூறியுள்ளவாறு பல இடுக்கண்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பினும், பற்பல துறைகளிலும் கணிசமான முன்னேற்றத்தை இம் மாநிலம் எய்தியுள்ளது.

### வேளாண்மை

**13.** இம் மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறைக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. வேளாண்மை விரிவாக்கப் பணி வசதிகள், நல்ல விற்பனை வசதி, சேமிப்புக் கிடங்கு வசதிகள், மேம்படுத்தப்பட்ட தரமான விதைகளை வழங்குதல் முதலிய வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம், வேளாண்மை மேம்பாட்டிற்குச் சிறப்பு நடவடிக்கைகள் பலவற்றை அரசு மேற்கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் 1,000 மெட்ரிக் டன் திறனளவுள்ள கிராமப்புற கிடங்குகள் 89-ஐக் கட்டுவதற்கு இந்திய அரசு தரும் நிதியுதவியை, அரசு பெரிதும் பயன்படுத்தியுள்ளது. உழவர்கள் தங்களது விளைபொருள்களைக் கொண்டு வந்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில், அவற்றை உரியவாறு சேமித்து வைக்க இத் திட்டம் பெரிதும் உதவும். உழவர்களுக்குத் தரமான விதைகளை உற்பத்தி செய்து பகிர்ந்தளிப்பது மிகவும் அவசியமான பணியாக இருப்பதால், அடுத்த நிதியாண்டில் விதைகளைப் பதப்படுத்தும் பிரிவுகள் இரண்டு, ரூ.24 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடங்கப்படும். மொத்தம் 4 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு பயனடையும் வகையில், சிறிய அளவில் பாசன ஆதாரங்கள் 212-ஐ கட்டிப் புன்செய் பயிர்ச்சாகுபடி தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்தி, அவற்றை உழவர்களுக்குத் தெரியச் செய்வதில் வேளாண் பொறியியல் துறை முனைப்பாகப் பங்கு கொண்டுள்ளது. 1981-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் உழவர்களிடமிருந்து 1,000 டன் வேர்க்கடலையைக் கொள்முதல் செய்வதன் மூலம், தனது பணியைத் தொடங்கியுள்ளது. அரசு நடத்தி வருகின்ற செடிப் பண்ணைகளில், ரூபாய் 15 இலட்சம் மானிய உதவியுடன், பாசன வசதிகளை நடப்பு நிதியாண்டிலிருந்து மூன்றாண்டுக் கால அளவில் மேம்படுத்த, கொச்சி, தென்னை அபிவிருத்தி வாரியம் முன் வந்துள்ளது, எண்ணெய் வித்துக்கள் மாநில

இயக்ககம் தரமான விதைகளைக் கொள்முதல் செய்யும் தன்னுடைய பணியை முழுமூச்சுடன் மேற்கொண்டுள்ளது; மேலும், அடுத்த நிதியாண்டில், நிலப் பரப்பில் 4 சதவீதப் பகுதியில் மேம்படுத்தப்பட்ட விதைகளைக் கொண்டு உற்பத்தியை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. 1983–84ஆம் ஆண்டு, வேளாண்மைத் துறைக்காக, மொத்தம் ரூ. 88·87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கால்நடை வளர்ப்பு

**14**. நன்கு அமைக்கப்பட்ட கால்நடை மருத்துவ நிறுவனங்களின் மூலமாக, இம் மாநிலத்திலுள்ள கால்நடைகளுக்கு உரிய சுகாதார வசதிகளை வழங்குவதில் இவ்வரசு நாட்டம் கொண்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 31·08 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதிதாக மருந்தகங்கள் 25ஐத் தொடங்கியும், மூன்று மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தியும், கால்நடை மருத்துவமனைகள் 2ஐ மருத்துவச்சாலைகளாக நிலை உயர்த்தியும் அவற்றின் மூலமாக இத் துறை வலுப்படுத்தப்படும். இந்திய அரசின் நிதியுதவியுடன் அயலினக் கறவை மாடுகளைக் கொண்டு, கலப்பின கால்நடைகளை உருவாக்கவும் எருமை மாடுகளின் தரத்தை மேம்படுத்தவும், ரூ. 117·31 இலட்சம் செலவில் உறை விந்து வங்கித் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் ஏழு இலட்சம் கலப்பினக் கால்நடைகளும் எருமை மாடுகளும் பயனடையும். கால்நடை வளர்ப்புத் துறை நோய்த் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு, கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய் குறித்துக் கண்டறிவதற்காக, கால்நடை நோய் தகவல் சேகரிப்புப் பிரிவு ஒன்றை அடுத்த நிதியாண்டில் தொடங்க, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9·64 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 17·40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் செங்கற்பட்டு, தருமபுரி மாவட்டங்களில் செம்மறியாடு இன வளர்ச்சிக்காக முனைப்பு சுகாதாரத் திட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படும்.

### பால் பண்ணை வளர்ச்சி

**15**. பாலைக் கொள்முதல் செய்யும் பணியைப் பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்கிற அரசின் கொள்கை முடிவின்படி, கிராம அளவில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் கூட்டுறவு ஒன்றியமும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் ஆக மூன்று நிலைகளில் பால் பண்ணை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. '' ஆனந்த் '' முறையைப் பின்பற்றி, புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பால் வழங்கல் சங்கங்கள் அனைத்தும் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப் பட்டுள்ளன. 1983-84-ல் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 500 ஏற்படுத்தப்படும். நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பாலைக் குளிரூட்டும் வசதி பெற்ற பால் குளிரூட்டு நிலையம் ஒன்று அடுத்த நிதியாண்டில் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பட்டுக்கோட்டையில் தொடங்கப்படும். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் உதகமண்டலத்தில்




பால் பண்ணை ஒன்று தொடங்க ரூ. 55 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி வசதிக்காக, கிருஷ்ணகிரியில் சீர்நிலை கிளைப் பால்பண்ணை நிறுவுதல் தொடர்பான பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

### கூட்டுறவு

**16**. கூட்டுறவு நிறுவனங்களுக்கு வரவேண்டிய கடன்கள் தொடர்ந்து நிலுவையாக இருந்துவந்த போதிலும்கூட, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள், கடன் வழங்கு விதிகளுக்குட்பட்டு, உழவர்களுக்கும் ஏனையோருக்கும் இயன்ற அளவு கடன் வழங்கி வந்துள்ளன. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், தொடக்க நிலவள வங்கிகள், 1980–81, 1981–82 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 4.76 கோடியும் ரூ. 5.50 கோடியும் கொடுத்திருக்க, 1982-83ஆம் ஆண்டில் டிசம்பர் '82 வரையில் ரூ. 10.50 கோடி கொடுத்துள்ளன. தொடக்க வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், 1982ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் குறுகிய காலக் கடனாக ரூ. 53.64 கோடியும் நடுத்தரக் காலக் கடனாக ரூ. 10.36 கோடியும் கொடுத்துள்ளன. நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தோரின் பொருளாதார நிலையை மேம்படுத்த, கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து முயன்று வருகின்றன. கொடுக்கப்பட்ட குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களில் ஏறக்குறைய 64 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. பால் பண்ணை, செம்மறியாடு வளர்ப்பு முதலிய துணைத் தொழில்களுக்காக நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்கள், வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 98 சதவீதம் என்ற அளவுக்கு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சிறு தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு 4 சதவீதச் சலுகை வட்டிவீதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இந்தச் சலுகை வட்டிவீதங்கள், பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

**17**. கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அளவிலான நியாய விலைக் கடைகள் 11,159-ஐ நடத்துகின்றன; 1981–82ஆம் ஆண்டில் அவற்றின் வியாபாரத் தொகை ரூ. 85 கோடி ஆகும். இம்மாநிலத்தில் உள்ள மொத்த விற்பனைக் கடைகள் உட்பட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தின் ஆண்டு விற்பனைத் தொகை 1981-82ல் ரூ. 211 கோடிக்கு உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து, அச் சங்கங்கள் அளிக்கும் கடன் வசதியையும் ஏனைய பயன்களையும் அவர்கள் பெறும் வகையில் அமைந்துள்ள திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த நிதியாண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 20,000 உழவர்கள் அச் சங்கங்களில் சேர்த்துக்கொள்ளப் படுவர். 1983–84ஆம் ஆண்டில் நுகர்வோர், நல்ல தரமான உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் முதலியவற்றைப் பெறவேண்டி, தர சோதனை ஆய்வுக்கூடங்களை நிறுவ, மொத்த விற்பனைக் கூட்டுறவுக் கடைகள் நான்கிற்கு நிதியுதவி அளிக்கப் படும். மொத்தம் 25,000 டன் கொள்ளளவுள்ள 200 கிராமக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்குகளையும் கட்ட 1983–84-ல் அரசு நிதியுதவி அளிக்கும்.

### மீனளம்

**18**. மீனள மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டி என்னுமிடத்தில், பிடித்த மீன்களைக் கரை சேர்க்கும் தோணித் துறையை ரூ. 41 இலட்சம் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பினை இவ்வரசு அனுப்பியுள்ளது. இதற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது ; இப்பணி, மிக்க விரைவில் தொடங்கப்படும். செயற்கை முத்துக்களை உருவாக்கி, அவற்றை விற்பனை செய்வதற்காக, ' சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட் ' (ஸ்பிக்), என்ற நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காக, தமிழ்நாடு மீனள மேம்பாட்டுக் கழகம் அனுப்பிய செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ஏறக்குறைய ரூ.40 இலட்சம் ஆகும். முத்துச்சிப்பிகளைச் சேகரிப்பது, செயற்கை முறையில் அவற்றில் முத்துக்களை வளர்ப்பது, அவற்றை விற்பனை செய்வது ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும். அடுத்த நிதியாண்டில் சென்னை மீன்பிடி துறைமுகத்தில் பனிக்கட்டி (ஐஸ்) தயாரிக்கும் இயந்திரசாலை ஒன்று நிறுவுவதற்காக, அரசு மீனள மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ. 20 இலட்சம் பங்கு மூலதனம் அளிக்கிறது. தூயநீர் மீனளத்தை மேம்படுத்துவதற்காக, சில அணைக்கட்டுகளையும் குளங்குட்டைகளையும் பழுதுபார்ப்பதற்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 24·70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### காடு வளர்ப்பு

**19**. 'ஸ்வீடன் ' நாட்டைச் சேர்ந்த அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 1981, ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்ட சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென அடுத்த நிதியாண்டில் ரூ. 8·47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கள்ளத்தனமாக மரங்களை வெட்டியெடுப்பதைத் தடுப்பது, அனுமதியின்றி மரங்களை எடுத்துச் செல்வதைத் தடுப்பது ஆகிய பணிகளுக்காகத் தற்போதுள்ள சோதனைச் சாவடி முறையை வலுப்படுத்தவேண்டி, மாநிலத்திற்கிடையிலான சாலைச் சந்திப்புகளில் மேலும் 18 சோதனைச் சாவடிகள் 1983–84ஆம் ஆண்டில் ரூ. 13 இலட்சம் செலவில் தொடங்கப்படும். வனச் செல்வத்தின் முக்கியத்துவம், வனவிலங்குப் பாதுகாப்பின் அவசியம் குறித்து சிறு வயதிலிருந்து குழந்தைகள் அறியும் வண்ணம், வன விலங்கு, இயற்கைச் சூழலை எவ்வாறு பாதுகாப்பது என்பவை குறித்த புத்தகங்களைப் பள்ளி மாணவர்களுக்குக் கொடுப்பதென அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பள்ளி மாணவர்களுக்குக் காண்பிக்க, வன விலங்கு உய்விடங்கள் பற்றிய வண்ணப் படம் தயாரிக்கப்படும், வன விலங்கு உய்விடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லும் திட்டம், அடுத்த நிதி ஆண்டில் தொடங்கப்படும்.

**20**. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தனது தேயிலையை அண்மையில் ஏற்றுமதி செய்துள்ளது. இதுவரை,45,000 கிலோகிராமுக்கு மேல் இது ஏற்றுமதி செய்துள்ளது; இதன் மதிப்பு ரூ. 9.40 இலட்சம் ஆகும்.

### பாசனம்

**21**. நடப்பு நிதியாண்டில் ஆறு புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கோல்வார்பட்டி நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 597 இலட்சம்), 'ஆனைகுட்டம் நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 276 இலட்சம்), ஆனைமடுவு நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 554 இலட்சம்), குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 406 இலட்சம்), கரியகோவில் நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 576 இலட்சம்), சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 791 இலட்சம்) ஆகியவையே இத் திட்டங்களாகும். 11,656 ஹெக்டேர் பரப்பளவிற்குப் புதிதாகப் பாசனம் அளிக்கவும் பழைய பரப்பளவில் 144 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதியளிக்கவும் நன்செய் ஆயக்கட்டில் 1,766 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தவும் இத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 31,250 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுடன் நடப்பு நிதியாண்டில் 8 புதிய சிறு பாசனத் திட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றால் 330 ஹெக்டேர் பரப்பளவிற்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும். அடுத்த நிதியாண்டில் 30 சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதென இலக்கிடப்பட்டுள்ளது. இவற்றால், மேற்கொண்டும் 2,530 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதி கிடைக்கும்.






**22.** பெரியாறு-வைகை கால்வாய் அமைப்பை நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டம் நல்ல வகையில் நடந்தேறி வருகிறது. இத் திட்டத்திற்கென அடுத்த நிதியாண்டிற்கு ரூ. 10.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 1984க்குள் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரியாறு-வைகை கால்வாய் அமைப்பை நவீனப்படுத்தும் திட்டத்தின் 2ஆம் நிலையை மேற்கொள்வதற்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு துறைகளுக்காக அடுத்த நிதியாண்டில் ரூ. 105·16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### மின் உற்பத்தி

**23.** திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் பெறுவதில் மின்சாரத் துறையே தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. மாநிலத்தின் ஆறாவது திட்ட நிதி ஒதுக்கீட்டில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதி மின் உற்பத்தித் திட்டங்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் மின் உற்பத்திக்கென ரூ. 272.42 கோடி அளவிற்குச் செலவிட மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த நிதியாண்டுக்கான திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் இது 30 சதவீதத்திற்கு மேற்பட்டுள்ளது.

**24.** வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் இந்நாட்டிலேயே மற்ற எல்லா மாநிலங்களையும்விட இம்மாநிலமே சிறந்து விளங்கி வருகிறது. 31–12–1982 நிலவரப்படி 9.6 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 52,564 குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மின் வசதி பெற்றுள்ள குடிசைகளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சமாக உயரும். நடப்பாண்டில் 31–12–1982 வரை 17 குறு சிற்றூர்களும் 16 சிற்றூர்களும் மின்வசதி பெற்றுள்ளன. இன்னும் 353 குறு சிற்றூர்களுக்கும் 108 சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்க வேண்டியுள்ளது. 1984–85 இறுதிக்குள் அவற்றுக்கும் மின் வசதி அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**25.** பெரிய அளவில் மின் உற்பத்தித் திட்டங்களாகிய சேர்வலாறு (20 மெ.வா.), கீழ் மேட்டூர் (120 மெ.வா.), காடம்பாறை (400 மெ.வா.) குந்தா ஐந்தாவது கூடுதல் இயந்திரம் (20 மெ.வா.), பார்சன்ஸ் பள்ளத்தாக்கு (30 மெ.வா.), மேட்டூர் அனல்மின் திட்டம் (420 மெ.வா.) ஆகியவையும் சிறு அளவில் மேற் கொள்ளப்படும் புனல்மின் திட்டங்களாகிய பைகாரா, கீழ் பவானி, வைகை அணை திட்டங்களும் (16 மெ. வா.) நிறைவேறி வருகின்றன.

**26.** இம் மாநிலத்தில் அனல் மின் உற்பத்தி 1981–82-ல் 337·4 கோடி யூனிட்டாக இருந்தது. நடப்பாண்டில் 416 கோடி யூனிட்டாகவும் அடுத்த நிதியாண்டில் 500 கோடி யூனிட்டாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**27.** குறைந்த மின் கட்டணங்கள், கூடுதல் பராமரிப்புச் செலவு, திட்டங்களை நிறைவேற்றுவதற்காகும் செலவு உயர்வது ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கடுமையான நிதி இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நிலக்கரி விலையும் எண்ணெய் விலையும் ஏறிவிட்டதன் காரணமாக, நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. இரயில்வே சரக்குக் கட்டணத்தையும் டீசல் எண்ணெய் விலையையும் மத்திய அரசு அண்மையில் உயர்த்தி இருப்பதால், தமிழ்நாடு மின்வாரியத்தின் செலவு மேலும் உயரும். கப்பல் சரக்குக் கட்டணமும் நிலக்கரியை இறக்கி, கொண்டு வருவதற்கான செலவும் அண்மையில் கணிசமாக உயர்ந்துள்ளன. இவற்றின் காரணமாக மின் வாரியத்தின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நிதியாதாரத்திற்கும் செலவிற்கும் இடையிலுள்ள பற்றாக்குறையை ஓரளவேனும் நிறைவு செய்ய மின்வாரியத்திற்கு உதவும் பொருட்டு, மின் கட்டண வீதங்களை உயர்த்துவதைத் தவிர மாநில அரசுக்கு வேறுவழியில்லை.

**28.** மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேட்டூர் மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது (420 மெ.வா.), தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது (710 மெ.வா.), வடசென்னை மின் உற்பத்தித் திட்டம் (1050 மெ.வா.) முதலிய திட்டங்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேட்டூர் மின் உற்பத்தி நிலைய விரிவுத் திட்டத்திற்கு மத்திய மின் சக்தி அதிகார மன்றம் அனுமதியளித்துள்ளது. ஆனால், இத் திட்டத்திற்கும் மத்திய அரசின் பல்வேறு நிலைகளில் மேற்கொண்டும் அனுமதி கிடைத்தாக வேண்டும். ஏனைய திட்டங்களுக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

### தொழில் வளர்ச்சி

**29.** இன்றியமையாது தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாகவும் பெருந்தொழில்களையும், நடுத்தரத் தொழில்களையும், சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஏற்படுத்துவதற்காக எல்லா வகையான உதவிகளை அளிப்பதன் மூலமாகவும் இம் மாநிலத்தை விரைந்து மேலும் மேலும் தொழில் மயமாக்குவதே இவ்வரசின் கொள்கையாகும். இவ்வகையில் அரசின் பல்வேறு நிறுவனங்களும் தத்தம் துறைகளில் முனைப்பாகச் செயலாற்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக, நடப்பு நிதியாண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் இதுவரை 12,253 சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றின் மூலம் 43,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். இந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக வங்கிகளிலிருந்தும் நிதி உதவி அளிக்கும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் நடப்பு நிதியாண்டில் ரூ. 11·60 கோடி அளவுக்குத் தொழில் முனைவோருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத் தொழில் மையங்கள் பயிற்சித் திட்டங்களையும் நடத்தி வருகின்றன. இதுவரை 15,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



**30.** இம்மாநிலத்தில் சிறு தொழில்களை மேம்படுத்துவதற்கான பொறுப்பு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதி வகையில் நலிவுற்ற தொழில்களுக்குத் தொடக்க நிதியுதவித் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் இந்நிறுவனத்தின் மூலம் ரூ. 15·37 இலட்சம் அளவுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ரூ. 22.03 இலட்சம் அளவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலதன முதலீட்டு உதவித் தொகையையும், மாநில அரசின் மூலதன முதலீட்டு உதவித் தொகையையும், குறைவழுத்த மின்சக்தி உதவித் தொகையையும் பெறத் தகுதிபெற்ற தொழில் பிரிவுகளுக்கு இந் நிறுவனமே வழங்கி வருகிறது. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் குழந்தை நல நிலையச் சிறுவர்களுக்கு வழங்க வேண்டிய கல்வி சாதனங்களையும் இலவசமாக வழங்கப்படும் பல்பொடியையும் தயாரிப்பதற்காக சிறு தொழில் பிரிவுகள் மூலம் இந் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் கதர்-கிராமத் தொழில் வாரியம் பெரும் பயனுள்ள பணியாற்றி வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ.76 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்யும் திட்டமும் 33,000 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டமும் இவ்வாரியத்திடம் உள்ளன. இவ்வாரியம் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகள் காரணமாக, இவ்வாண்டில் கதர் பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தொழில் முறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பாலிஸ்டர் துணி உற்பத்தி செய்யும் பெரும் திட்டம் ஒன்றையும் இவ்வாரியம் வகுத்துள்ளது.





**31.** பெருந்தொழில் துறையில் அரசுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் தொழில் திட்டங்களை ஏற்படுத்தும் பணி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பலவகையான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அரக்கோணத்தில் உருக்கு மறு-உருளை ஆலை ஒன்று ரூ. 7 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகிறது. காட்பாடி வட்டத்தில் வெடிமருந்துத் தயாரிப்புச் சாலையொன்றை ஏற்படுத்தும் பணி ரூ. 19 கோடி மதிப்பீட்டுச் செலவில் 'டிட்கோ' நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் கூட்டுத் துறை திட்டமாகிய தூத்துக்குடி ஆல்கலி இரசாயனப் பொருள்கள்-இரசாயன உரங்கள் உற்பத்தி நிறுவனம் ரூ. 60 கோடி செலவில் அமைக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைட் ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டது. வேறு சில திட்டங்கள் குறித்தும் 'டிட்கோ' நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**32.** தமிழ்நாடு கனிம நிறுவனம், மாநில அரசின் தொழில் நிறுவனமாகும். மிகத் திறமையுடன் நடைபெற்றுவரும் நிறுவனம் என்ற நற்பெயரை இது தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. நடப்பு நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ. 35 இலட்சம் செயல் ஆதாயம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனம் நான்காவது ஆண்டாகத் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. இந் நிறுவனம் 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 98 இலட்சம் அளவுக்குக் கனிப்பொருள்களை விற்பனை செய்தது. இந்த விற்பனை, 1982–83-ல் ரூ. 150 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதியாண்டில் ரூ. 200 இலட்சம் அளவுக்கு விற்பனை நடைபெற வேண்டுமென இலக்கிடப்பட்டுள்ளது. விற்பனைத் தொகையில் 90 சதவீதம் அன்னியச் செலாவணி ஈட்டும். சென்னைக் கருகில் மணலியில் முற்றிலும் ஏற்றுமதி நோக்கிலான கறுப்புக்கல் மெருகேற்றும் பிரிவு ஒன்றை ரூ. 393 இலட்சம் செலவில் ஏற்படுத்தும் திட்டமும் இந் நிறுவனத்திடம் உள்ளது. சிவகெங்கையில் கிடைக்கும் கிராபைட் படிவங்களைப் பயன்படுத்தி, கனிப்பொருள் செறிவுச்சாலை-மூசை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை மொத்தம் ரூ. 258 இலட்சம் செலவில் ஏற்படுத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1983–84ஆம் ஆண்டின் முதல் பாதியில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுத் தொழில் நுட்ப உத்தி தேவைப்படும் கிராபைட் மூசைகள் தயாரிப்பு பின்னர் மேற்கொள்ளப்படும்.

**33.** தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம், தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கிற அரசு நிறுவனங்களில் ஒன்றாகும். நடப்பு நிதியாண்டில் 31—1—1983 வரை இந் நிறுவனம் ரூ 22.41 கோடி அளவுக்கு நிதியுதவி அளித்துள்ளது. இந்த நிதியாண்டு முடிவதற்குள் இத் தொகை ரூ. 25 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனம் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகிறது.

**34.** நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறனுடைய சர்க்கரை ஆலை ஒன்றைக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் திட்டத்திற்கும் அத்தகைய ஆலை ஒன்றைத் தனியார் துறையில் ஏற்படுத்த பொன்னி சர்க்கரை-இரசாயனப் பொருள் நிறுவனத்திற்கும் மத்திய அரசு அனுமதிக் கடிதம் அளித்துள்ளது. திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை குறித்த பணி தொடங்கப்பட்டுவிட்டது.

**35.** தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், மத்திய அரசிடமிருந்து ஊக்கம் அளிக்கும் பதில் கிடைக்கவில்லை. 1981ஆம் ஆண்டில் இம் மாநில அரசின் தொழில் துறை அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் வழங்கப்பெற 92 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்திருக்க, 1982-ல் 188 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு 1981-ல் 39 அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் வழங்கியிருக்க, 1982-ல் 37 அனுமதிக் கடிதங்கள்/உரிமங்கள் மட்டுமே வழங்கியுள்ளது. மாநில அரசிடமிருந்து வருகிற செயற்குறிப்புகளைப் பரிசீலனை செய்யும்போது, எதிர்காலத்திலாவது மத்திய அரசு மேலும் பரிவுடனும் நடைமுறை நோக்குடனும் நடந்துகொள்ளுமென நம்புகிறேன்.



**36.** கிராமப் பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் வேலைவாய்ப்பு வளத்தை ஏற்படுத்தியுள்ளதால், கடந்த சில ஆண்டுகளாகவே பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1983–84-ல் மூகக் கட்டைச் செடி சாகுபடிப் பரப்பளவை மேலும் 8,000 ஏக்கரில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனால், முசுக்கட்டைச் செடி வளர்க்கப்படும் பரப்பளவு மொத்தம் 63,000 ஏக்கர் ஆகும். தற்போது பட்டிழை சுற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 36 உள்ளன. அடுத்த நிதி ஆண்டில் மேலும் அத்தகைய 5 சங்கங்களை நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிராம நிலையில் 65 சௌக்கி சுற்றும் பிரிவுகள் இப்போது உள்ளன. 1983–84-ல் மேலும் 50 நிலையங்கள் ஏற்படுத்துவதென்று தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.



37. ஆண்டுக்கு இருமுறை முட்டையிடும் பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் 1981–82-ல் இம் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு இருமுறை முட்டையிடும் பட்டுப்புழு வளர்ப்புக் கட்புல விளக்க-பயிற்சிப் பிரிவு 1983–84-ல் ரூ. 10.68 இலட்சம் மொத்தச் செலவில் தொடங்கப்படக்கூடும். மகளிருக்கென இரு கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தின் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன ; இவற்றுள் ஒன்று கழிவுப்பட்டு நூற்புச் சங்கமாகும் ; மற்றொன்று பட்டு சரிக் கூட்டுப்புழு விற்பனைச் சங்கமாகும்.

### கைத்தறி

38. இந்தியாவில் 30.21 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ்நாட்டில் செயற்படுகின்றன. இவற்றால் 13.34 இலட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிட்டுகிறது. கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்க அமைப்பிற்குள் சேர்த்துக்கொள்வதன் மூலமாகவும், அரசு நிறைவேற்றி வரும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் கீழ் அவர்களுக்குத் தொடர்ந்து வேலையும், ஏனைய சலுகைகளையும் அளிப்பதன் மூலமாகவும் அவர்களைத் தறி முதலாளிகளின் பிடிகளினின்றும் விடுவிப்பதென்னும் கொள்கையை இவ்வரசு கொண்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை அளிப்பது, நிலையான வருமானம் கிடைப்பதை உறுதி செய்வது என்கிற இரண்டு நோக்கங்கள், கீழ்க்காணும் திட்டப் பணிகளின் வாயிலாக எய்தக் கருதப்படுகிறது..



#### (i) இடு பொருள்கள் வழங்குதல்

கூட்டுறவுத் துறையில் நூல் தேவை அதிகரித்து வருவதை ஈடுசெய்யும் பொருட்டு, அண்மையில் கூட்டுறவு நூற்பாலைகள் ஐந்து பதிவு செய்யப்பட்டுள்ளன. ரூ. 30.15 கோடி மூலதனச் செலவில் இந்த நூற்பாலைகள் நிறுவப்படுவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன், சேலம், வேலூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் ஒவ்வொன்றும் 12,500 கதிர்களுடன் தங்கள் உற்பத்தித் திறனை விரிவுபடுத்தும் திட்டத்தினை நிறைவேற்றி வருகின்றன. இவை, இவ்வாண்டு ஜூன் திங்கள் இறுதிக்குள் இப்பணியைச் செய்து முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஆலைகள் நிறுவும் திட்டத்தினாலும் தற்போதுள்ள ஆலைகளின் உற்பத்தித் திறனை விரிவுபடுத்துவதாலும், மேலும் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

#### (ii) கூட்டுறவு அமைப்பில் சேர்த்தல்

இம் மாநிலத்தில் பொருந்தியுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 3.24 இலட்சம் கைத்தறிகளைக் கொண்டு, இதுவரை 1,413 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் கூட்டுறவு அமைப்புக்குள் 67 சதவீத கைத்தறிகளைக் கொண்டு வருவதென இவ்வரசு இலக்கு கொண்டுள்ளது. தறியில்லாத நெசவாளர்களின் பயனுக்கென்று பொதுவான பணிக் கொட்டகைகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம், கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சிறப்பு மிக்க பணியாகும். இந்தத் திட்டப் பணியின் கீழ், 1983–84ல், பொதுவான பணிக் கொட்டகைகள் கொண்ட நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 22ஐப் புதிதாகத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இச் சங்கங்களில் இரு சங்கங்கள், 200 ஆதி திராவிடர் நெசவாளர்களின் பயனுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன.

#### (iii) கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவிப்பது

கைத்தறி நெசவாளர்கள், தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுபட்டு தாங்களே சுதந்திரமாகத் தொழிலை நடத்த இயலும்பொருட்டு, 104 கிராமங்களில் உள்ள ஏறக்குறைய 54,000 கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 நிதியுதவி அளிக்கப்பட வேண்டுமென துறை அதிகாரிகள் நடத்திய நேரிட ஆய்விலிருந்து தெரிய வந்தது. இதற்காக 4 சதவீத வட்டி வீதத்தில் கடன் கொடுக்குமாறு வணிக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால், தனியார் துறையில் கடன்பட்டுள்ள ஏறக்குறைய 10,000 கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவித்து, நடப்பு நிதியாண்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் அவர்களைக் கொண்டுவர முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

#### (iv) விற்பனை ஆதரவு

'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் மூலமாகத் தொடக்கக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு, பெருமளவு விற்பனை ஆதரவு அளித்து வருகிறது. 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்தின் மூலம் 1981–82ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 70 கோடி அளவுக்குக் கைத்தறித் துணிகள் விற்கப்பட்டன. அத் தொகை 1982–83ல் ரூ. 100 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

#### (v) உற்பத்தி நிதியுதவி

தமிழ்நாட்டில் உள்ள தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுதல் மூலதனத்திற்குச் சலுகை நிதியுதவி என்ற வகையில் வேளாண்மை கிராமப் பகுதி வளர்ச்சி தேசிய வங்கி 1982–83-ல் ரூ. 40·91 கோடி அளித்துள்ளது.





#### (vi) நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்

வீட்டுவசதி–நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் (ஹட்கோ) நிதியுதவியுடனும் மாநில அரசு அளிக்கும் நிதியுதவியுடனும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு ஆறாவது திட்டக் காலத்திற்குள் 5,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

### வீட்டு வசதியும் நகர்ப் பகுதி வளர்ச்சியும்

39. மாநில அரசின் வீட்டு வசதி நடவடிக்கைகள் முக்கியமாகத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. உலக வங்கி நிதியுதவியுடன் குடிசைப் பகுதி சீரமைப்பு விரிவுத் திட்டம் ஒன்று, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் ரூ. 250 இலட்சம் செலவில் இத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 12,000 குடும்பங்கள் பயனடையும். இதற்காகச் செய்யப்படும் முதலீடு, 1983-84ல் ரூ. 450 இலட்சம் ஆக உயர்த்தப்படும். சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர்களுக்கு மனைகளுக்கும், பணிகளுக்கும் வகை செய்யும் திட்டம் ஒன்றை உலக வங்கி நிதியுதவித் திட்டம் செயல்படுத்தக் கருதுவதோடு, முகைப்பேர் என்ற இடத்தில் 10,000க்கு மேற்பட்ட மனைப் பகுதிகள் சீரமைக்கப்படும் என்றும் அதற்கு ரூ. 1,608.40 இலட்சம் செலவாகுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 5,034 மனைப் பகுதிகள் அடங்கிய ரூ. 771·40 இலட்சம் செலவாகும் மனைகள்-பணிகளுக்கான மற்றொரு திட்டம், நெற்குன்றத்தில் தொடங்கப்படும்.

40. கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 40,000 வீடுகள் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும். இதுவரை ஏற்பட்டுள்ள பணி முன்னேற்றத்தைக் கவனித்துப் பார்க்கும்போது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2 இலட்சம் வீடுகள் கட்டுவது என்ற இலக்கை எய்துவது எளிதாகும்.

41. வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கென இந்த நிதியாண்டில் ரூ. 3.50 கோடி ஒதுக்கியிருக்க, 1983-84இல் இத்தொகை ரூ. 6.00 கோடியாக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுப் பணியாளர் பெரும் பயனடைவர்.

### சாலைகள், சாலைப் போக்குவரத்து, துறைமுகங்கள்

42. போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருவதைப் பார்த்தால், அவற்றின் சாதனை சிறப்பாக இருப்பது தெரியவரும். அவற்றில் பெரும்பாலானவை, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் ஆதாயத்தை ஈட்டக்கூடும்.

43. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், 1–12–1982ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. ஈரோட்டில் ஜீவா போக்குவரத்துக் கழகம், நாகர்கோயிலில் நேசமணி போக்குவரத்துக் கழகம், காரைக்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஆகிய ஏனைய மூன்று புதிய கழகங்கள், 1983ஆம் ஆண்டு ஏப்ரல் முதற்கொண்டு தனியே செயல்படத் தொடங்கும். திருச்சிராப்பள்ளியில் தற்போது செயல்பட்டு வருகின்ற சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாம் பிரிவு, அடுத்த நிதியாண்டில் தனிக் கழகமாகச் செயல்படத் தொடங்கும்.




44. ஏராளமான பயணிப் பேருந்துகளைச் செயல்படுத்துவதினின்று கிடைத்த சிறப்பான, பலதரப்பட்ட அனுபவத்தைக் கொண்டு, ஆலோசனை நல்கும் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதென அரசு கருதுகிறது. இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, வளர்ச்சியுறும் பிற நாடுகளுக்கும் பேருந்துப் போக்குவரத்துத் தொழில் நுட்பவியலில் ஆலோசனை நல்க வேண்டி, பல்லவன் போக்குவரத்து ஆலோசனைக் கழகம் வெகுவிரைவில் செயல்படத் தொடங்கும். இது, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வந்த காலத்திலும் நமது நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் வேண்டுகோளின் அடிப்படையில் போக்குவரத்துத் துறையில் இது பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

45. போக்குவரத்துக் கழகங்கள், மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வந்துள்ள போதிலும், மத்திய அரசு டீசல் எண்ணெய் விலையை 1983ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் முதல் மேலும் உயர்த்தியுள்ளதால், ஓராண்டில் ஏறக்குறைய ரூ. 9 கோடி அளவுக்குக் கூடுதல் செலவு ஏற்படுமெனத் தோன்றுகிறது. தொடர்ந்து சிறந்த முறையில் செயல்பட்டுவர எல்லா வகையான முயற்சிகளையும் இக் கழகங்கள் மேற்கொள்ளும்.

46. இம் மாநிலத்தின் சமூக-பொருளாதார ஒட்டுமொத்த வளர்ச்சியில் சாலைகளையும், சாலைப் போக்குவரத்து அமைப்பையும் மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. மக்களின் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வசிப்பதால், ஐந்தாவது, ஆறாவது திட்டக் கால அளவில் கிராமங்களின் சாலை மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம்

அளிக்கப்பட்டு, கிராமங்களில் சாலைகளின் சீரமைப்பு படிப்படியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழும் பேருந்து வழித் தடத்தை மேற்கொள்ளும் திட்டத்தின்கீழும் நடப்பு நிதியாண்டில் ரூ. 10 கோடி செலவில் 500 கிலோமீட்டர் கிராமச் சாலைகள் சீரமைக்கப்படும். இதனால், 320 கிராமங்களில் வசிக்கும் 4.50 இலட்சம் மக்கள் பயனடைவர். பேருந்து வழித்தடத்தை மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் ரூ. 29 கோடி செலவில் நடப்பு நிதியாண்டு முடிவுக்குள் ஏறக்குறைய 8,103 கிலோ மீட்டர் சாலைகள் சீரமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 4,052 கிராமங்களில் வசிக்கும் 41.34 இலட்சம் மக்கள் பயனடைவர். 1982 நவம்பர் திங்கள் வரையில் 25 ஆண்டுகள் பயனுள்ள வகையில் பணியாற்றித் தொடர்ந்து செயற்பட்டு வருகிற நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சாலை அமைப்பு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுப் பணிகளைக் கைவசம் வைத்துள்ளது.

**47.** இடைத்தர துறைமுகங்கள், சிறு துறைமுகங்கள் மேம்பாடு அரசின் கவனத்தைப் பெற்று வருகிறது. கடலூர் துறைமுகத்தில் அடிப்படை வசதிகளை அடுத்த நிதியாண்டில் மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்தவும், வாலி நோக்கத்தில் சிறு துறைமுகத்தை உப்பு ஏற்றுமதிக்காக ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டம் அடுத்த நிதியாண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

### அரசு தகவல் தொகுப்பு நிலையம்

**48.** அரசு தகவல் தொகுப்பு நிலையத்தில் இப்போதுள்ள கணக்கீட்டுப் பொறி மிகப் பழமையானதும் காலங்கடந்ததும் ஆகும். எனவே, இதற்குப் பதிலாக, புதிய, நவீன வகை கணக்கீட்டுப் பொறி வாங்குவது அவசியமாகியுள்ளது. இதனை வாங்குவதற்கு அடுத்த நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**49.** இம் மாநிலத்தின் அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்புள்ள தகவல்களைப் புள்ளி விவரத்துறை கணக்கீட்டுப் பொறியில் சேகரித்து வைத்து தலைமைச் செயலகத்தில் தகவல் தேவைப்படும்போது உடனடியாகப் பெறுவதற்காகத் தலைமைச் செயலகத்தில் நுண் அலை முறையில் தகவல் பெறும் ஏற்பாடு உருவாக்கப்படும்.

### கிராம வளர்ச்சியும் நன்னிறைவுத் திட்டமும்

**50.** 1980–81ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம், இந்த நிதியாண்டு இறுதிக்குள் நிறைவெய்தும். மூன்றாண்டுக் காலமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தின் மூலம் ஊக்கமளிக்கக் கூடிய வகையில் பயன்கள் கிட்டியுள்ளன. கிட்டத்தட்ட ரூ. 200 கோடி பெறுமானமுள்ள சொத்துக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை புறக் கணிக்கப்பட்ட ஊரகத் துறை இதனால் பொருளாதார வகையில் மொத்தத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இத் திட்டம் ஒருசில மாற்றங்களுடன் இந்த நிதி யாண்டில் பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 146 பேரூராட்சிகள் இத் திட்டத்தின்கீழ் பயனடையும். இதற்காக, ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம், ரூ. 10 கோடி ஒதுக்கீட்டுடன் அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து, விரிவுபடுத்தப்படும்.

**51.** குடிநீர் வழங்குவது, தமிழ்நாடு அரசின் மொத்த மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு, இருபது அம்ச பொருளாதாரத் திட்டத்தின் ஒரு கூறாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர் ஆதார ஆய்வுப் பிரிவு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியதோடு, கிராமக் குடியிருப்புகளுக்கு அருகில் கிடைக்கக் கூடிய குடிநீர் ஆதாரங்களைக் கணக்கில் கொண்டு, அவற்றின் குடிநீர்த் தேவைகளின் அடிப்படையில் கிராமக் குடியிருப்புகளை வகைப்படுத்தியது. இந்த குடிநீர் ஆய்வின் அடிப்படையில், குடிநீர் வழங்கு திட்டங்கள், கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்த நிதி ஒதுக்கீடு, அடுத்த நிதியாண்டில், ரூ. 60 கோடியாக உயர்த்தப்படும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஏறக்குறைய ரூ. 224 கோடி செலவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**52.** கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டம், கிராமப் பகுதிகளில் உள்ள பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பு அளிப்பதோடு, ரூபாய் 34·52 கோடி பெறுமானமுள்ள நிலையான சமுதாயச் சொத்துக்களையும் உருவாக்கியுள்ளது. 1982–83ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் ரூ. 2076·25 இலட்சம் ரொக்க மானியமும், 14,890 டன் அரிசியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு 1983–84-ல் ரூ. 32 கோடி ஒதுக்கப்படும்.

**53.** ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் முக்கியமாக வறுமைத் துயரினைத் தணிக்கும் திட்டமாகும். வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள 600 குடும்பங்களுக்கு ஒவ்வோராண்டும் உதவியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இக் குடும்பங்களுக்குக் கடன் இணைந்த உதவித் தொகை அடிப்படையில், வெவ்வேறு பணிகளின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1982–83-ல் வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்ட இலக்கு 2,25,600 குடும்பங்கள் என்று இருக்கையில் 1983 ஜனவரி முடிய ஏறத்தாழ 1,87,000 குடும்பங்களுக்கு உதவியளிப்பதில் ரூ. 22·7 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால் பயனடைவோரில் 36 சதவீதத்தினர் ஆதி திராவிடர்கள் ஆவர். 30 சதவீதத்தினர் மகளிர் ஆவர். சுய வேலைவாய்ப்புக்கான கிராம இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் பகுதியாக உள்ளது. இத் திட்டத்தின்கீழ் இது வரையில் 26,292 இளைஞர்கள் பயிற்சி முடித்தனர். 23,778 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி குறித்து ரூ. 4·3 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 5,821 இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் தொழில்களை அமைத்துள்ளனர். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தனி நபர் ஒவ்வொருவரும் வெற்றிகரமாகத் தொழில் நடத்தும் வசதிகளைப் பெருக்கக் கூடிய வகையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**54.** கிராமப்புறத்தில் வாழும் மகளிர்களுக்காக பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ. 22·56 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட திட்டம், அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

**55.** இம் மாநிலத்தில் கரிமவாயு உற்பத்திக்கான தேசியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1983 ஜனவரி முடிய கரிம வாயு உற்பத்தி இயந்திரங்கள் 2384 செயல்படத் தொடங்கியுள்ளன. மத்திய அரசுத் துறைத் திட்டமாகிய இத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 8000 உற்பத்தி இயந்திரங்கள் நிறுவ இலக்கிடப்பட்டுள்ளது.

### குடும்பத்தில் ஒருவருக்கு வேலை.

**56.** ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிப்பது குறித்து ஆளுநர் அவர்கள் இவ்வாண்டு தொடக்கத்தில் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். இத் திட்டத்தின் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த நிதியாண்டில் ரூ. 15 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சுற்றுலா

**57.** சுற்றுலா வளர்ச்சிக்கு வேண்டிய மகத்தான வாய்ப்பு வளத்தைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால், இந்திய நாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் பல்வேறு நாடுகளிலும் தமிழ்நாடு பற்றிய போதிய தகவலும், விளம்பரத் திட்டங்களும் கிடைக்கப் பெறாமை காரணமாக, நாம் இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்திய அரசு தென்னக மாநிலங்களில் சுற்றுலா வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் அளிப்பதில்லை என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகத் தமிழ் நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டுமோ அந்த அளவைவிட வெகு குறைவாகவே உள்ளது. இவ்வரசு தமிழ்நாட்டில் சுற்றுலா வாய்ப்பு பற்றிப் பரவலாக விளம்பரம் செய்வது பற்றி, பலமுறை இந்திய அரசுடன் விவாதித்துள்ளது. கல்கத்தா போன்ற முக்கியமான மாநகரங்களில் தகவல் நிலையங்களைப் புதிதாகத் தொடங்குவதுடன், புதுடில்லியில் தற்போது செயற்பட்டு வருகிற தகவல் நிலையத்தை விரிவுபடுத்தவும், இவ்வரசு தனது பங்கிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளும். சிறு கையேடுகள், மடிப்பிதழ்கள் போன்றவற்றைத் தயாரித்து வழங்கியும், விளம்பரங்களை வெளியிட்டும், எதிர் காலத்தில் சுற்றுலாப் பயணிகளைப் பெருவாரியாக ஈர்க்கக்கூடும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

**58.** இளைஞர்களையும், குறிப்பிட்ட தொகைக்குள் சுற்றுலா மேற்கொள்ள விழையும் பயணிகளையும்



ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வரசு மகிழ்வுலா நிலையம் தொடங்கி மேம்படுத்தும் திட்டத்தினைச் செயற்படுத்தவிருக்கிறது. இத்தகைய நிலையங்களின் வளர்ச்சிக்காக, அடுத்த நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய வசதிகளை அளித்து வருவதில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனிச் சிறப்புமிக்க பங்காற்றி வருகிறது. இக்கழகம், இளைஞர் இல்லங்கள், உணவகங்கள், சாலை-இடைவழி விடுதிகள் (மோட்டல்கள்), கடற்கரை மகிழ்வடங்கள் முதலியவற்றை நடத்தி வருகிறது. 1983–84ல் மாமல்லபுரம், இராமேசுவரம், பிச்சாவரம் ஆகிய இடங்களில் கூடுதலாகக் குடில்கள் கட்டுவதென்றும் இக் கழகம் திட்டமிட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில், சென்னையில் ஒன்றும் திருச்சியில் ஒன்றுமாக இளைஞர் இல்லங்கள் இரண்டும், திருத்தணியில் சாலை-இடைவழி விடுதி (மோட்டல்) ஒன்றும் கட்டப்படும். 1979–80-ல் இக் கழகம் நிதி வகையில் ஈட்டிய தொகை ரூ. 119.87 இலட்சமாக இருந்தது. 1981–82ல் இத்தொகை ரூ. 215 இலட்சமாக உயர்ந்துள்ளது. இவ்வரசு அளித்த ஆதரவினாலேயே இக் கழகத்தால் இச் சாதனையை எய்த முடிந்தது.

### தமிழ்க் கலைகளும் பண்பாடும்

**59.** தமிழர்களின் பெருமைவாய்ந்த மரபினையும் அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தை, கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டினையும் உலகறியச் செய்வதே இவ்வரசின் தலையாய கொள்கையாகும். கங்கைமுத்துப்பிள்ளை எழுதிய நாட்டியப் பாடல்களின் திரட்டு எனப்படுகிற '' நாட்டிய நன்னூல் '', சுவாமி விபுலானந்தா எழுதிய தமிழ், ஆங்கில நாடகங்கள் பற்றிய ஒப்பாய்வு நூலாகிய ' மதங்க சூளாமணி ' ஆகியவற்றை மீண்டும் அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் பண்பாட்டு மரபினைத் தெளிவுபடுத்தும் தகவல்களையும், விவரங்களையும், பொருள்களையும் '' கிராமக் களஞ்சியம் '' என்னும் நூலில் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அவை தீர ஆராய்ந்த பின் வெளியிடப்படும். தேவாரம், திருவாசக நூல்களினின்றும் தேர்ந்தெடுத்த தீஞ்சுவைப் பாடல்களும், இசை நுணுக்கங்களையும் ஓசை நயங்களையும் தெளிவுபடுத்துகிற நாட்டுப்புறப் பாடல்களும், உலகெங்கும் பரவும்படிச் செய்வதற்காகக் ' காஸெட்டுகளில் ' பதியப்பட்டுள்ளன. மகாகவி

(தொடர்ச்சி 41ஆம் பக்கம்)

சென்ற இதழ் தொடர்ச்சி

சிக்காகோவிலிருந்து, நாங்கள் நம்முடைய பத்திரிகை காகிதத் தயாரிப்பு நிறுவனத்துக்குத் தொழில் நுட்ப உத்திகளையும் சாதனங்களையும் வழங்கிவரும் திருவாளர்கள் பிலாய்ட் கார்ப்ரேஷன் லிமிடெட்டின் அலுவலகத்தையும் தொழிற்சாலையையும் பார்வையிடுவதற்காக கிலாய்ட் விஸ்கன்சினுக்குச் சென்றோம். காகிதத் தயாரிப்பு இயந்திரம், காகிதக்கூழ் தயாரிப்புச் சாதனம், கரும்புச் சக்கையிலிருந்து நேர்த்தியான காகிதத்தையும் பத்திரிகைக் காகிதத்தையும் தயாரிக்கச் செய்முறை, தொழில் நுட்ப உத்தி ஆகியவற்றை வழங்குவதற்கும் தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம் தயாரிப்பு நிறுவனம் இங்கிலாந்திலுள்ள திருவாளர்கள் பிலாய்ட் வாம்ஸ்லே, நிறுவனத்துடன் ஒப்பநதம் செய்து சொண்டுள்ளார். திருவாளர்கள் பிளாய்ட் வாம்ஸ்லே, பிலாய்ட் கார்ப்பொரேஷனைச் சேர்ந்தது. அமெரிக்காவில் மசாசூ செட்ஸின் டால்டனிலுள்ள பிலாய்ட் கார்ப்பொரேஷனின் ஜோன்ஸ்பிரிவு, திருவாளர்கள் பிலாய்ட் வாம்ஸ்லே நிறுவனத்திற்கு காகிதக்கூழ் செய்முறையையும் புதுவிதமான காகிதக் கூழ் தயாரிப்புச் சாதனத்தையும் வழங்குகின்றனர்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, திருவாளர்கள் பிலாய்ட் கார்ப்பொரேஷன், ஜோன்ஸ் பிரிவு தரும் காகிதக் கூழ்த் தயாரிப்பு முறையை அதற்கான சோதனைத் தொழிற்சாலையில் அம்முறை வணிகத் தன்மைக்கு உகந்ததா என்று சோதனை அடிப்படையில் செய்து பார்க்கப்படுகிறது. அத்தகைய சோதனை ஆய்வுகள் இரண்டு, 1981 ஜனவரி, மார்ச் திங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இந்தச் சோதனைகளையொட்டி இச் செய்முறை மேலும் சீரமைக்கப்பட்டது. இறுதிச் சோதனை ஆய்வுகள் 1982 மே/ஜூன் திங்களில் மேற்கொள்ளப்பட இருந்தன.

இந்தியாவிலிருந்து கரும்புச் சக்கையையும் மரக்கூழையும் (Hard wood pulp) கப்பலில் ஏற்றி அனுப்ப தமிழ்நாடு பத்திரிகைக் காகித நிறுவனம் ஏற்பாடு செய்த பின்னர், சோதனை ஆய்வுகளை ஜூன் 14 ஆம்நாள் தொடங்கி ஜூன் 23ஆம் நாளன்று முடிப்பதென முடிவு செய்யப்பட்டது. திருவாளர்கள் பிலாய்ட் கார்ப்பொரேஷன் ஜோன்ஸ் பிரிவு சோதனை ஆய்வுகளை 3 கட்டங்களில் நடத்தியது.

கரும்புச் சக்கையிலிருந்து இரசாயனக் கூழ், மெக்ஸிகோவில் உள்ள வணிக ஆலை ஒன்றில் தயாரிக்கப்பட்டது.

கரும்புச் சக்கை கூழ், அமெரிக்கா, மஸாசெட்ஸ், டால்டனில் உள்ள பெலாய்ட் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறந்த வசதியுடன் கூடிய முன்னோடி ஆலை ஒன்றில் தயாரிக்கப்பட்டது.

கரும்புச் சக்கை இரசாயனக் கூழும், கரும்புச் சக்கை இயந்திரக் கூழும் இந்தியக்




கடின மரக் கூழுடன் கலக்கப்பட்டு பெலாய்ட் விஸ்கான்சின் என்ற இடத்தில் (இராக்டோன் சோதனை ஆய்வுக்கூடம்) முன்னோடி காகித இயந்திரத்தில் செய்தித்தாள், காகிதம் தயாரிக்கப்பட்டது.

காகித இயந்திரம் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21,22,23 ஆம் நாட்களில் சோதனை அடிப்படையில் இயக்கப்பட்டது. ஜூன் 23ஆம் நாளன்று நான் சென்றிருந்த போது முன்னோடி காகித இயந்திரம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு ( TNPL ) வழங்கப்பட்ட இயந்திரத்தின் அமைப்பை ஒத்துள்ளது. இவ்வியந்திரம் சுமார் 700mpm-ல் இயக்கப்பட்டு ஏற்கத்தக்க தரமுடைய செய்தித்தாள் உற்பத்தி செய்தது.

இத்தகைய செய்தித்தாள் புகளூரில் செய்தித்தாள் காகித ஆலையில் பயன்படுத்தக் கருதியுள்ள மூலப் பொருட்கலவையைப் பயன்படுத்தி இத்தகைய மிகு வேகத்தை இயக்கி செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்ய இயலும் என்பதை அறிந்து நான் வியப்புற்றேன்.

இச்சோதனை நல்ல செயல்முறையைக் கண்டுபிடிக்க பெலாய்ட் நிறுவனத்தால் நடத்தக்கூடிய சோதனைகளின் ஒரு பகுதியாகும் என்பதையும், இதனால், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் தொடக்கம் செவ்விய வகையிலும் தங்கு தடையின்றியும் அமையும் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். சோதனையில் எடுக்கப்பட்ட செய்தித்தாளினையும் எடுத்து வந்தேன்.

**ஜப்பான்**

நாங்கள் 26.6.1982 ஆம் நாளன்று இங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு, 27.6.1982 ஆம் நாளன்று டோக்கியோவை அடைந்தோம். நாங்கள் 28.6.1982 ஆம் நாளளன்று டோக்கியோவிலுள்ள திருவாளர்கள் மிட்சுபிஷி கார்பொரேஷன், மிட்சுபிஷி ஹெவி இன்டஸ்டரிஸ் ஆகிய அலுவலகங்களைப் பார்த்தோம். தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் (TNPL) கரும்புச் சக்கை கடின மரக்கூழ்களிலிருந்து இரசாயனப் பொருள்களை வடிப்பதற்கான இரசாயனக் கொதிகலனை வழங்குவதற்காக திருவாளர்கள் மிட்சுபிஷி கார்பொரேஷனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. ஒப்பந்தத்தின் மதிப்பு ரூ.2.5 கோடியாகும். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் நிருவாக இயக்குநரும், திருவாளர்கள் மிட்சுபிஷி கார்பொரேஷனும் என் முன்னிலையில் கையொப்பமிட்டனா. இந்நிறுவனம் தமிழ்நாட்டுடன் மேலும் உடனுழைப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விழைகிறது என்பதை திருவாளர்கள் மிட்சுபிஷி கார்பொரேஷனின் இயக்குநர்களுடன் நடத்திய உரையாடல்களிலிருந்து அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

தமிழ்நாட்டிலிருந்து கருங்கல்லைப் பெரும் அளவில் பெறும் திருவாளர்கள் ஹேப்பி ஓர்ல்டு நிறுவனத்துடனும் நாங்கள் கலந்துரையாடினோம்.

டோக்கியோவில் உள்ள இந்தியர்களுடன் 28.6.1982 ஆம் நாளன்று உரையாடல் நடை-



மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

## திரு. எஸ். திருநாவுக்கரசு

பெற்றது. தமிழ்நாட்டில் புதிய தொழில்களைத் தொடங்குவதில் தனிப்பட்டவர்கள் சிலர் கொண்டிருந்த ஆர்வத்தை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. தமிழ்நாட்டிற்கு வந்து திட்டங்களைத் தொடங்குமாறு அவர்களை நான் அப்போது கேட்டுக் கொண்டேன்.

**சிங்கப்பூர்**

29.6.1982 ஆம் நாளன்று நாங்கள் சிங்கப்பூர் சென்றோம். இது எங்கள் உலகப் பயணத்தின் இறுதிக் கட்டமாகும். நான் அங்கு இருந்த இரண்டு நாட்களில் சிங்கப்பூரில் குடியமர்ந்துள்ள தமிழர்கள் சிலருடன் கலந்துரையாடினேன். கோ ஆப் டெக்ஸ் ஏற்றுமதி நிலையத்தை நான் சென்று பார்த்தேன். இந்தியன் வங்கி ஏற்பாடு செய்திருந்த முக்கிய இந்தியர்கள் கூட்டத்தின் போது. மின்னணுவியல் பிரிவில் சில திட்டங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டது. வருங்காலத்தில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இச்சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளஅனுமதித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய ஆசியால்தான் இப்பயணத்தை என்னால் வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. அருமையான ஏற்பாடுகள் செய்தமைக்காகவும் பல்வேறு நிறுவனங்கள், 'சங்கங்கள்' முதலியவற்றுடன் பயனுள்ள கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தமைக்காகவும் வெளிநாடுகளில் உள்ள பல்வேறு இந்திய அமைப்புகளுக்கு இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். பல்வேறு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்த நியூயார்க், இந்தியன் இன்வெஸ்ட்மென்ட் சென்டர் லாஸ் ஏஞ்செல்ஸ் இந்திய ஸ்டேட் வங்கி சிங்கப்பூர் இந்மயன் வங்கி ஆகியவற்றிற்க்கும் எனது நன்றியைத் 'தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் அலுவல்களுக்கிடையே, என்னைச் சந்தித்து, தாம் எண்ணியிருந்த திட்டங்கள் பற்றி விவாதித்து, பல்வேறு சங்கங்கள், நிறுவனங்கள் முதலியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்த, வெளிநாட்டில் குடியேறியுள்ள இந்தியர்கள் அனைவருக்கும் குறிப்பாபக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு அதிகாரிகளுடனும் வெளிநாட்டில் குடியேறியுள்ள இந்தியர்களுடனும் நான் பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது எனக்கு உதவி செய்த, 'எல்காட்' நிறுவனத்தின் தலைவரும், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் நிருவாக இயக்குநருமான திரு.சி.இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் 'டிட்கோ' வளர்ச்சி மேலாளர் திரு.என்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு.எஸ். சுபபிரமணியன் அவர்களுக்கும் எனது நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் மேலும் சில புதிய தொழில்கள் தொடங்கப்படவும், பல புதுத் தொழில் நுட்பங்களை (Technology) நடைமுறைப்படுத்தவும், ஏற்றுமதி விற்பனையை அதிகப்படுத்தவும் இப்பயணம் முதல் படியாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன். நான் சென்று வந்த வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைக் காணவும், முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் பயணம் அப்பகுதிகளுக்கு விரைவில் அமைய வேண்டும் என்ற ஆர்வமும், எண்ணமும் கொண்டிருப்பதை அவர்களிடம் உரையாடியபோது உணர முடிந்தது. தனிப்பட்ட முறையிலும், லண்டன், பாரிஸ், அமெரிக்கா, டோக்கியோ ஆகிய நாடுகள் - நகர்களில் உள்ள தமிழ்ச்சங்கங்கள், பல்வேறு அமைப்புக்கள் முதல்வர் அவர்களுக்கு விடுத்த அழைப்பை எடுத்துக் கூறுவதும் என் கடமையாகும். பயணத்திற்கு அனுமதித்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மைய அரசுக்கும் மீண்டும் நன்றி கூறுகிறேன்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் மாநில மாநாடு மதுரையில் மார்ச் 1,2. ஆகிய நாட்களில் நடைபெற்றது.**

**முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு 40 ஆயிரம் ருபாய்க்குரிய காசோலையை செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களிடம் அளித்தனர்.**




## 'தமிழரசு' இதழுக்கு குஜராத் முதல்வர் பாராட்டு!



'தமிழரசு' இதழ் மிக அருமையாக இருக்கிறது' என்று மாண்புமிகு குஜராத் முதல்வர் திரு மாதவ்சின் சோலங்கி அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

குஜராத் அரசின் அழைப்பின் பேரில், தமிழ்நாட்டுச் செய்தியாளர்கள் குஜராத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, அகமதாபாத் விருந்தினர் மாளிகையில் 10-2-'83 அன்று முதல்வர் அவர்களைச் சந்தித்தார்கள்.

அப்போது 'தமிழரசு' ஆங்கில இதழொன்று அவருக்குத் தரப்பட்டது. அதை வாங்கி அவர் பக்கம் பக்கமாகப் பார்த்தார். வண்ண முகப்பும், வடிவமைப்புகளும் அவரை வெகுவாகக் கவர்ந்தன.

ஒரு அரசு இதழ் இவ்வளவு அழகாக வெளிவருவதைப் பார்த்த அவர் "இதழ் மிகவும் அருமையாக இருக்கிறது. எனது பாராட்டுக்கள்!" என்றார்.

பேச்சுக்கு இடையிடையே "இது எவ்வளவு விற்பனையாகிறது? சந்தாதாரர்கள் எத்தனை பேர்?" என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார். 'தமிழரசு'க்குத் தனியே அச்சகம் இருப்பது அறிந்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

'தமிழரசு' தமிழ்ப்பதிப்பு பெருமளவில் விற்பனையாகிறது என்ற தகவலைத் தெரிந்து கொண்டதும் வியப்பு தெரிவித்தார்.

### கலாசாரங்களின் கோவை: குஜராத்!

குஜராத்தின் வரலாறும் மற்ற மாநிலங்களைப் போல மிகப் பழமையானதொன்றாகும்.

வேட்டையாடியும், மீன் பிடித்தும் மனிதன் இங்கு மணற் குன்றுகளில் வசித்து வந்தான். இருந்த போதிலும், சிந்து சமவெளி நாகரிகம் வெகு விரைவில் குஜராத்தில் பரவ இருந்தது.

2000 ஆண்டுகளுக்குள் அங்குச் சாலைகள், தனிக் குளியலறைகள், கழிவு நீர்க் கால்வாய்கள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், பண்டகச் சாலைகள் ஆகியவை இருந்தன. அங்கிருந்த மண் பாண்டங்கள், முத்திரைகள், அணிகலன்கள், பொம்மைகள், கருவிகள் முதலியவை மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகியவற்றில் உள்ளவற்றை ஒத்திருந்தன.

1297 வரை குஜராத்தை இந்து மன்னர்கள் ஆண்டு வந்தனர். அதற்குப் பிறகு அலாவுதீன் கில்ஜி, அவர்களது நாடுகளைப் பிடித்துக் கொண்டான். துருக்கியர்களும், ஆப்கானியர்களும் ராஜபுதனத்தின் பகுதிகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாகக் கைப்பற்றினர். பிறகு அவர்கள் முகலாயர்களால் கைப்பற்றப்பட்டனர். முகலாயர்கள் மராத்தியர்களால் தோற்கடிக்கப்பட்டனர். போர்த்துக்கீசியர்கள் டையூவையும், பாஸெயினையும் கைப்பற்றினர். 1657-க்குள் தெற்கே ஆங்கிலேயரின் குடியிருப்புகளின் முக்கிய வணிகத் தலமாக மாறிய சூரத், இந்தியாவின் மேல் அவர்களுக்கிருந்த தனிப்பட்ட ஆதிக்கத்தை எடுத்துக் காட்டியது. எனவேதான் குஜராத், பல்வேறு கலாசாரங்களின் திரட்டாக — கோவையாகக் காணப்படுகிறது.



# ஜம்பை ஜமுக்காளம்

திரு கே. எம். இராசு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'— என்றான் மகாகவி பாரதி.

அந்த மாகவிக்குத் தமிழக அரசு நூற்றாண்டு விழா எடுத்து முடித்துள்ள இந்த நேரத்தில் அவர் பாடலுக்குச் செயல் வடிவம் தரும் மக்களை நீங்கள் சந்திக்க வேண்டுமா?

வாருங்கள் பெரியார் மாவட்டத்திலுள்ள ஜம்பை கிராமத்திற்கு............

பவானி ஆற்றின் கரையில் இயற்கை எழில் குலுங்க அமைந்துள்ளதுதான் ஜம்பை கிராமம்.

உழவும், தொழிலும் வந்தனை செய்யப்படும் பாங்கினை அங்கே காணலாம்.

ஜம்பை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 8.3.1964ல் பதிவு செயயப்பட்டு 20.3.1964ல் செயல்படத் துவங்கியது.

இச்சங்கம் ஆதிதிராவிடர்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

51 உறுப்பினர்களையும், 41 தறிகளையும் ரூ.645 - மட்டும் பங்குத் தொகையாகவும் செலுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று 291 உறுப்பினர்களையும், 180 தறிகளையும் ரூ.1,10,663 பங்குத் தொகை உடையதாகவும், மிகப் பெரிய வளர்ச்சி பெற்றுள்ளது.

இச்சங்கத்தில் கெட்டிச்சாய ஜமுக்காளங்கள், அறைவிரிப்புகள் பந்தி ஜமுக்காளங்கள், ஈசிசேர் கேன்வாஸ்கள் தயார் செய்யப்பட்டு, சில்லரையாகவும் மொத்த வியாபாரிகள் மூலமாகவும், சூப்பர் மார்க்கெட் மூலமாகவும், மாநில சங்கம் மூலமாகவும், கைத்தறி மாளிகை மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சங்கத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சங்கம் ஆரம்ப காலம் முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. .சங்க உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும், டிவிடெண்டும், போனசும் வழங்கப்பட்டு வருகிறது.

சங்கத்திற்கு சொந்தமான 90 ஏக்கர் இடத்தில் தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை அல்லாமல் அரசின் உதவியுடன் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் தொழிற்கூட அமைப்பு பணிகள் முடிவடைந்து கடந்த 21.1.1983 ஆம் நாள் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.ந.தியானேசுவரன் அவர்கள் தலைமையில் தொழில் அதிபர் திரு.நா.மகாலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



மேலும் அரசு மானியம் ரூ. 1.80 இலட்சம் நிதி உதவியுடன் ரூ.2.51 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மேல்நிலை நீர்த் தொட்டி, சாயச்சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நடப்பு ஆண்டில் செய்யப்பட இருக்கின்றன.

சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் குழித்தறியில் ஜமுக்காளம் நெய்து பழக்கப்பட்டவர்கள். அவர்கள் வருமானத்தை அதிரிக்க மக்கள் தறிகளில் நவீன ரகங்களில் துண்டு மற்றும் 'பெட்சீட்' நெய்ய உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சங்கத்தின் உறுப்பினர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதிக்காகவும், அவர்கள் குடும்பத்தினர் மருத்துவ வசதிக்காகவும் ஆண்டுதோறும் சங்கத்தின் பொதுநல நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

சமூகத்தில் பணிபுரியும் உறுப்பினர்களின் 81 பேர் பெண்கள் ஆவர். இவர்கள் ஜமுக்காளம் நெய்தல், நார் சுற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். திரு எஸ்.ஆர்.பாட்டப்பன் தலைமையில் ஏழு பேர்கொண்ட நிர்வாகக் குழுவினால் சங்கம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

கைத்தறி வளரவும், நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் அரசு அளித்துவரும் அனைத்து நன்மைகளையும் பெற்று வரும் இச்சங்க உறுப்பினர்களின் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது.





# 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குகை ஓவியங்கள்

அ. மருதவிநாயகம்

கோவை மாவட்டம் ஆனைமலையிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது ஆளியாறு. இதன் மேற்குக் கரையில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அத்திகோத்தூர் கல்வெட்டாகும் இந்தக் கல்வெட்டுகளில் கலப்பை சூலம், கேடயம் போன்ற சின்னங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்கள் பற்றிப் 'பெருங்கதை'யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாமல் சத்தியமங்கலம் அருகே நல்லூரில் சேர மன்னன் ரவிகோதை காலத்திய கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை 1,500 ஆண்டுகளுக்கு முற்பட்டவைகளாகும். இதில் உள்ள எழுத்துக்கள் வட்டு எழுத்தில் உள்ளன். தமிழகத்தில் 3-வதாக ஆனைமலையில் இக்கல்வெட்டுகள் கண்டுபிடி.க்கப்பட்டுள்ளன.

கோவை நகரிலிருந்து 22 கி.மீ தூரம் உள்ள வெள்ளருகம்பாளையத்திற்கு வடக்கே உள்ளமேற்குத் தொடர்ச்சிமலையில் வெண்ணிறக் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 4,000 அடி உயரம் உள்ள மலை உச்சியில் குகை உள்ளது. இந்த குகையில் 4,000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட குகை ஓவியங்கள் உள்ளன. வெண்ணிறத்தில்உள்ள இந்த ஓவியங்கள் வரலாற்றைச் சொல்லும் வகையில் உள்ளன.

முதல் குகையில் ஆண் யானை பெண்யானை, மான், காட்டுப் பன்றி ஆகியவை ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

அடுத்து யானைகளைச் சுற்றி ஆறு பேர் நடனமாடும் காட்சியும் தீட்டப்பட்டுள்ளது. இது வேட்டைக்குப் புறப்படும் முன் ஆடிப்பாடி மகிழ்ந்துவிட்டுப் பிறகு வேட்டைக்குச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த குகைகளில் குதிரைச் சவாரி, யானைச் சவாரி, கையில் சட்டி வைத்திருப்பது போலப் போர்க் காட்சியும், சண்டைகளும் ஒன்று சேர வரையப்பட்டுள்ளன. 3-வது குகையில் இரு வீரர்கள் குதிரை மீது அமர்ந்து கையில் சட்டி கொண்டு போர் செய்வது போன்ற காட்சி, சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது.

குகையில் உடைந்து போன சரித்திரகாலப் பானைகளும் உள்ளன. குகைகளில் வரையப்பட்ட ஆண், பெண் ஆகியோர் ஆடை எதுவுமின்றி நீண்ட முடிகளுடனும் நகங்களுடனும் வரையப்பட்டுள்ளனர்.

கோவை மாவட்டம் அவிநாசி வட்டத்தில் உள்ள ஆலத்தூருக்கு அருகில் வீரசோழர் காலத்தில் கட்டப்பட்ட சமணர் கோயில் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் 10-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டிற்கு முதன் மந்திரியாக இருந்த ''வீர சங்காத சுற்றியதேவன்'' காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயிலுக்கு வீரசங்காதபள்ளி என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் மூன்று வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பழங்கால குகை ஓவியங்களில் கோவை மாவட்டம் நான்காவது என்றாலும் தமிழகத்தில் இது மிகப்பெரியது.

கள்ளிக் கோட்டையில் இருந்து தஞ்சாவூருக்கு 3 பெருவழிகள் இருந்ததாக ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. முதல் பெருவழி அவிநாசி, ஈரோடு, சேலம், ஆத்தூர், விழுப்புரம், மாமல்லபுரம் ஆகும்.

இரண்டாவது பெருவழி சூலூர் பல்லடம், காங்கேயம், கரூர், திருச்சி, பூம்புகார் ஆகும்.

மூன்றாவது பெருவழி ஆனைமலை, பொள்ளாச்சி, உடுமலை, பழனி, திண்டுக்கல், மதுரை ஆகும். தொழில் துறையில் தற்பொழுது கோவை மாவட்டம் சிறந்து விளங்குவதைப் போலவே, பண்டைத் தமிழர் காலத்திலும் சிறந்து விளங்கியது என்பதற்குரிய தடயங்கள் நிரம்பக்கிடைத்துள்ளன. ரோமானிய நாணயங்கள் மிக அதிக அளவில் இந்த மாவட்டத்தில் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.





# நூல் நயம்

## செம்மை தரும் சிந்தனைகள்

**ஆசிரியர் :**
எஸ். இராஜு செட்டியார், பி.ஏ.,
வெளியீடு : கம்பன் பதிப்பகம்,
16, டி. பி. கோவில் வீதி,
சென்னை-600 005.

விலை ரு. 7.00 பக்கங்கள் 120

மனிதனும் அவனது குடும்பமும், சமுதாயமும், நாடும், ஆட்சியும் செம்மையாக அமைவதற்குரிய சிந்தனைக் கட்டுரைகள் பலவற்றின் தொகுப்பு இந்நூல்.

பெரும்பாலும் திருக்குறளின் கருத்துக்களை எளிய - இனிய நடையில் - சான்றுகளுடன் விளக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

கல்வியின் பெருமையைப் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். சோம்பலை அகற்ற வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியுள்ளதுடன் அகற்றுவதற்குரிய வழி முறைகளையும் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது. சில கட்டுரைகள் நமக்குத் தெம்பூட்ட வல்லவையாக விளங்குகின்றன. மொத்தத்தில் இந்த நூல் செம்மையை மட்டுமல்ல சிறப்பையும் தெளிவையும் உள்ள உரத்தையும் படிப்போர்க்கு நல்குவது உறுதி.

## ஜீவாவின் புதுமைப் பெண்

**ஆசிரியர் :** ஜீவா,
**வெளியீடு:** நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098.

கடித இலக்கிய வரிசையில் தக்கதொரு இடத்தைப் பிடித்திருக்கிறது இந்நூல்.

பெண் இனத்தின் பெருமையை வழக்குரைஞரின் வழிநின்று நிறுவியிருக்கிறார் ஜீவா. தொல்காப்பியம், புறநானூறு போன்ற சங்க நூல்களில் அவருக்குள்ள பயிற்சியும், பாரதி கவிதைகளில் தோய்ந்துள்ள அவரது உள்ளமும் இந்நூலில் தெளிவாகத் தெரிகின்றன.

பெண்களுக்கு உரிமை தராத நமது முன்னோர்களைச் சாடுவதற்கு அவர் தயங்கவில்லை. இக்காலத்திலும் உரிமை மறுக்கப்படுவதை எண்ணி, வருந்துகிறார். மேலைநாடுகளிலும் கூட பெண் இனம் சில நேரங்களில் மதிப்பிழந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

புதுமைப் பெண்கள் புகழொளி வீசி விளங்கவேண்டும் என்ற பெருநோக்கம் - இந்த நூல் முழுதும் காணப்பெறுகிறது. ஜீவாவின் அழகுத் தமிழ்நடை படிப்போரைத் தன் வயப்படுத்துகிறது; சில இடங்களில் நம்மைச் சொக்க வைத்துவிடுகிறது.

**—தமிழ்ப்பித்தன்**

## ஒரு மைய வட்டம்

**ஆசிரியா :** செங்கை ஆழியான்,
**வெளியீடு:** நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 098.

விலை ரு. 6.00 பக்கங்கள் 112

இலங்கை-யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு செங்கை ஆழியான் எழுதிய முதலாவது நாவலாகும் இது.

ஈழத்தின் காட்டுப் பகுதிக் கிராமம் ஒன்றின் சம்பவங்களை மையமாக வைத்து இந்நாவல் உருவாக்கப் பட்டிருக்கிறது.

ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் அமைவதில் கிராமப்புற மக்கள் கொண்டுள்ள ஆர்வம், அவர்களுக்கு எத்தனையோ மனவிரிசல்கள் இருப்பினும் ஒருமைப்பாட்டில் உள்ள உறுதி ஆகியவை இந்நாவலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் நமக்குப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

விறுவிறுப்பான எழுத்தோட்டம், நம்மை மனமகிழ்வோடு படிக்கவைக்கிறது. தமிழர்-சிங்களவர் பிரச்சினையும் தொடப் பட்டிருக்கிறது. வெறும் கதைக்காக மட்டுமல்ல; ஈழத்தின் மண் மணத்தை அறிவதற்காகவும் இந்த நாவலைப் படிக்கலாம்.

**அ. மருதவிநாயகம்.**

### பெயருண்டு நூல் இல்லை

சேரமன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை, தகடூர் மீது படையெடுத்துச் சென்று அதியமானுடன போரிட்டான். இப்போரில் அதியன் உயிர் துறந்தான். அந்தப் போர் குறித்து ஒரு காப்பியம் உருவாக்கப் பெற்றது. 'தகடூர் யாத்திரை' என்னும் பெயர் பெற்றது அந்நூல். ஆனால் அந்நூல் கிடைக்கவில்லை! பெயர்மட்டும் தான் நிலைத்திருக்கிறதே தவிர அந்நூல் மறைந்துபோய் விட்டது.



# மறைமலை என்னும் தமிழ்மலை

சிறுவை நச்சினார்க்கினியன்

**1937**-சென்னைக் கடற்கரையில் ஒருநாள் மக்கள் கூட்டம் திரண்டெழுந்தது. தமிழகத்தை நோக்கி இந்தி மொழிப் படையெடுப்பினைத் தடுத்து நிறுத்த. இளைஞர்கள், தாய்மார்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள் கூட்டம் அணி அணியாய்த் திரண்டது. ஒரு பக்கம் மக்கள் அலை; மறுபக்கம் கடல் அலை.

கூட்டத்தில் கூடி இருந்தோர் அனைவரும் மேடையின் நடுவில் காவி உடை அணிந்த ஓர் உருவத்தையே உற்று நோக்கினர். மேடையில் அவருடன் தமிழினப் பெருந் தலைவர்கள் - மொழியியல் அறிஞர்கள் - தமிழ் இலக்கிய நெறியில் துறைபோய மூத்த தமிழ்க் காவலர்கள் - சிந்தனையாளர்கள் ஆகியோர் கூடி இருந்தனர். மகளிர் அணியும் பெருந்திரளாய் வந்திருந்தது.

மேடையின் நடுவில் உட்கார்ந்திருந்த காவி உடை அணிந்திருந்தவர் பேச எழுந்தார். பேரலையின் ஓசை தவிர, மக்கள் யாவரும் நிமிர்ந்து அமர்ந்து முக்காடிட்டுப் பேசும் அப்பெருமகனின் யாழனைய தமிழ் ஒலியினால் மயங்கி இருந்தனர். சிவந்த மலர் போன்ற மேனி. அழகிய, இனிய, அறிவொளிரும் முகம், திருநீறு அணிந்த நெற்றி, தலை வாரிச் சீவி முக்காடிட்ட தலை, இத்தோற்றப் பொலிவினைக் கண்டார் அனைவரும் தம்மை மறந்து வியந்தனர்.



அவர்தாம் -தனக்குவமை இலாப் பெரும் புலவர் சுவாமி வேதாசலம் எனும் மறைமலை அடிகள் எனக் கேட்டபோது மக்கள் அலையின் கையொலி ஓசை குறையச் சில மணித் துளிகள் ஆயின. அன்றைய அப் பெருங்கூட்டம் முடிய இரவு 1-30 மணி ஆயிற்று.

ஆசிரியர் மறைமலை எனும் இத் தமிழ் மலையை;

''ஆழ்ந்து கடலில் முத்தெடுப்
பார்போல்
அகன்ற உலக இலக்கியம்
அனைத்திலும்
வீழ்ந்து பொருளுண்மை
விளக்கும் ஆற்றலால்
வெல்ல முடியாத நல்லா
சிரியனை
வாழ்த்தாத நாளில்லை
வையகம்!

—எனப் பாவேந்தரும்

''தமிழ் வானத்தில் ஒரு தூய திங்களென அடிகள் திகழ்ந்ததைக் கண்டேன்''

—எனத் திரு. வி.க. வும்,

''எக்காலத்திலும் பயன்படக் கூடிய நூல்கள் தமிழில் ஏராளம் உண்டு. அவற்றில் எல்லாம் நல்ல புலமை பெற்றிருந்த மறைமலையடிகள், பல்வேறு கருத்துக்களை தமிழன், தனியானதோர் மாண்புக்கு - பண்புக்கு உரிமையாளன் என்பதை வலியுறுத்தும் கருத்துக்களை மிகத் துணிவோடு எடுத்துச் சொன்னார்.''

—என்றார் பேரறிஞர் அண்ணா.

''மறைமலையடிகளும் கா. சு. பிள்ளையும் எனக்கு வலக்கையும் இடக்கையும் போன்றவர்கள்''

—எனத் தந்தை பெரியார் கூறினர்.

''தமிழ்க் கடல்''

—என்பார் டாக்டர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

இவ்வாறு பலர் புகழ் தமிழ் ஞாயிறாய் - ஆராய்ச்சியாளராய் - அறிவாற்றல் மிக்கவராய்- சங்கப் புலவராய் - பாடலாசிரியராய் - உரையாசிரியராய் -உரை நடை வித்தகராய் - சொற்பொழிவாளராய் - மொழியாக்கம் வல்லவராய் - இதழாசிரியராய்-பகுத்தறிவாளராய் - தனித் தமிழ்த் தந்தையாய் - தமிழ் வாழ்வுக்குப் புத்துயிர் ஊட்டியவராய் - இத்தனைக்கும் மேலாக ஒரு தமிழ் மலையாய் விளங்கினார் மறைமலையடிகளார்.

இவர் நாகப்பட்டினம் -காடம்பாடி (காடவர்கோன் பாடி) என்ற பகுதியில் வேளாளர் குலத்தில் தோன்றி நாகப்பட்டினத்தில் அறுவை மருத்துவத் ( Surgeon ) தொழில் வல்லார் சொக்கநாதருப் பிள்ளைக்கும் - சின்னம்மையார் அவர்களுக்கும் மகனாய் 15-7-1876-ல் பிறந்தார்கள்.

நாகை வெஸ்லியன் மிஷன் கல்லூரியைச் சார்ந்த உயர்நிலைப் பள்ளியில் நான்காம் படிவம் வரை படித்தார். தமது 12-ஆம் வயதில் தந்தையை இழந்தார். ஒரே பிள்ளை யாதலால் தாய் அன்புடனும் அதே சமயம் கண்டிப்புடனும் வளர்க்கப்பட்டார்.

நாகை புத்தகக் கடை வே. நாராயணசாமி எனும் அறிஞர், புலவரேறு மீனாட்சிசுந்தரனாரின் மாணவர். 'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் (பிள்ளை) அவர்களுக்குத் தமிழ் கற்பித்தவர். இச்சான்றோரை அடுத்து தமிழ் நூல்கள் பலவற்றைப் பயின்றார். 15-ஆம் ஆண்டில் தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கினார். 21ஆம் வயதில் சிறந்த தமிழ் வல்லாராய் விளங்கினார். சைவ சமய கருத்துக்களை நாகை வீரப்பச் செட்டியாரிடம் கற்றுத் தெளிந்தார்.

மறைமலை அடிகளார் தம் 16 ஆம் வயதிலேயே தம்மை ஒத்த வயதுடையோர்க்கு தமிழ் அறிவு, சமய உணர்வு தழைக்கச் செய்ய ஒரு சங்கம் கண்டார்கள். இவ்

விளமைக் காலத்திலேயே உரை செய்யவும் பாடல் இயற்றவும் வல்லாராய்த் திகழ்ந்தமையால் ''திராவிட மந்திரி'', ''நகை நீல லோசனி'' ஆகிய இதழ்களுக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுத லானார்.

பின்னர் சைவ சித்தாந்த சண்டமாருதம் திரு.சோமசுந்தரரிடம் (நாயகரிடம்) முறையே சங்க இலக்கியப் புலமையும் சைவ சித்தாந்தப் புலமையினையும் பெற்றார், பேராசிரியர் 'மனோன் மணீயம்' சுந்தரம் (பிள்ளை) அவர்களின் முயற்சியால் திருவனந்தபுரத்தில் உள்ள ஆங்கிலப் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்தார். திருவனந்தபுரம் அடிகளது உடல்நிலைக்கு ஒத்து வராததால் அப்பணியை விடுத்தார்கள்.

அடிகளார் தம் பதினேழாம் வயதில் 1893-ல் தன் மாமன் மகள் சவுந்தரம் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர் 9-3-1898-ல் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பதவியை ஏற்றார். அப்பொழுது வயது 22. சென்னை அரண்மனைக்காரத் தெருவில் குடியிருந்தார். ''சித்தாந்த தீபிகை'' எனும் இதழுக்குத் துணை ஆசிரியராய் அமைந்து, பல சிறந்த கட்டுரைகளை எழுதி வந்தார்.

அடிகளார் சைவம் - தமிழ் இலக்கியம் பற்றிய சிறந்த ஆராய்ச்சி விரிவுரைகள் செய்ய அடிக்கடி வெளியூர் செல்வதுண்டு. தமிழகமெங்கும் இவர்தம் புலமையும் - பெருமையும் பரந்து சிறந்து விளங்கின. தென்னாட்டில் இவர்களுடைய அறிவுச் செல்வத்தை நுகர அக்காலத்திலேயே ஆயிரக் கணக்கில் கூடுவர் மக்கள். இவர்களது ஆற்றல் வாய்ந்த அறிவுச் செல்வத்தை தன் இனிய குரலோசையின் மூலம் வழங்கும் போது இது யாழிசையோ, குயிலிசையோ என மக்கள் மயங்கி அடிகளாரின் புலமை நலத்தைப் பாராட்டிப்போற்றி வாழ்த்தினர்.

பின்னர் 10-4-1911ல் தாம்பரம் - கிறித்துவக் கல்'லூரித் தமிழ் ஆசிரியர் பொறுப்பினின்று விலகினார்; சென்னைக்கு அடுத்துள்ள பல்லாவரத்திற்குத் (பல்லாவரம்) தம் குடியிருப்பை மாற்றிக் கொண்டார்கள். தமிழ் நூல்கள் எழுதுவதில் ஈடுபட்டார்கள். இவர்கள் 27-7-1911-ல் இல்லறத் துறவு நிலை பெற்று, சுவாமி வேதாசலம் எனும் பெயர் பூண்டார்.

இவர் 22-4-1911-ல் 'பொது நிலையக் கழகம்' என்ற அமைப்பினை ஏற்படுத்தி, மக்களிடையே




பரவி இருக்கும் சாதி வேறுபாட்டினைக் களைய முற்பட வேண்டி பிரசாரத்தில் ஈடுபட்டார். 'ஞான சாகரம்' எனும் திங்கள் இதழ் ஒன்றினைத் தொடங்கினார்.

அடிகளாருக்கு 1916-ல் தனித் தமிழ்ப் பற்று ஏற்பட்டு, சுவாமி 'வேதாசலம்' எனும் தம் பெயரை ''மறைமலையடிகள்' என மாற்றிக் கொண்டார். ''ஞான சாகரம்' என்ற இதழ் 'அறிவுக் கடல்' என மாற்றமடைந்தது.

நூல்கள் வாங்கிப் படிப்பதில் பெருவிருப்பம் உடையவர் இவர். ஆங்கில நூல்கள் படிப்பதில் மிகுதியான ஒரு தனி ஆர்வம் இவருக்கு உண்டு. நூல்களைப் படிக்குங்கால் குறிப்புக்கள் எடுப்பதில் வல்லவர். தம் கருத்துக்களை அப்புத்தகத்திலேயே பக்கவாட்டில் எழுதுவார்கள். அடிகளாரது கையெழுத்து முத்து முத்தாகக் கோவையாக இருக்கும்.

அடிகளார் தம் சொற்பொழிவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கேட்டுப் பெறுவதுண்டு. அங்ஙனம் பெற்ற பொருளில் ஆயிரக் கணக்கான நூல்களைத் திரட்டி, முறைப்படி தொகுத்து வைத்திருந்தார். இவர்களது நூல்கள் அனைத்தும் இன்று ''மறைமலையடிகள் நூலகம்' என்ற பெயரில் நூற்றுக் கணக்கான பட்டமேற்படிப்பு ஆய்வாளர்களுக்குப் பயன்படுகின்றன.

அடிகளாருக்கு நான்கு ஆண் மக்கள் இரண்டு பெண் மக்கள். ஆண்களில் பேராசிரியர் மறை திருநாவுக்கரசு அவர்கள் இந்தி எதிர்ப்பில் சிறை சென்றவர்கள்.

## திருச்சியில் மூலிகைப் பண்ணை

திருச்சியருகே ஸ்ரீரங்கத்தில், அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 5.5 ஏக்கர் பரப்பளவுள்ள நந்தவனத்தில் மூலிகைப் பண்ணை ஒன்றை அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அடிகளாரின் 'திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை' 'சோமசுந்தரக் காஞ்சி' ஆகியவை புதிய இலக்கியப் படைப்புகள். 'பட்டினப்பாலை ஆராய்ச்சி' - 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சி' — 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' முதலியன இலக்கிய ஆய்வுக்கு எடுத்துக் காட்டுகள்.

''சாகுந்தல நாடகம்', அமராவதி - அம்பிகாபதி' ஆகியவை நாடக நூல்கள். இவற்றில் சாகுந்தல நாடகம், அவர்கள் பெற்ற வடமொழிப் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மேலும், 'மத வேற்றுமையும் போலிச் சைவமும்', 'கடவுள் நிலைக்கு மாறான 'கொள்கைகள் சைவமாகா' முற்கால-பிற்காலத் தமிழ்ப் புலவர்கள்', 'பண்டைத் தமிழரும் ஆரியமும்; வேளாளர் நாகரிகம் அறிவுரைக் கொத்து, குமுதவல்லி, கோகிலாம்பாள் கடிதங்கள் எ௳ ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை வழங்கி 15-9-1950-ல் இயற்கை எய்தினார்கள்.

இன்று நாம் கையாண்டுவரும் திருவள்ளுவர் தொடர் ஆண்டிற்கு மூலவர் ஆசிரியர் மறைமலையடிகளார். இவர்கள் தமிழ்ச் சமுதாயம் சிறந்து விளங்கவும் சாதி வேற்றுமைகள், சமய வேற்றுமைகள் முதலிய வேற்றுமை உணர்வுகளைக் களைந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒருமைபாட்டு உணர்வினராய் வாழவும் தமிழ் மொழியும் தமிழ்நாடும் சிறந்து விளங்கவும் அயராது பாடுபட்டார்கள். இவர்களது இல்லம் பல்லாவரத்தில் பொது மக்கள் பார்வைக்காக ஒரு கலைக் கூடமாக விளங்குகிறது. மறைமலையடிகள் நூலகம், மறைமலையடிகள் பாலம், மறைமலையடிகள் நகரம், மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு, நாகப்பட்டினத்தில் மறைமலையடிகளார் சிலை என இங்ஙனம் தமிழ்நாடு முழுவதும் மறைமலையடிகளாரது புகழ் எங்கும் பரவி உள்ளது. இன்றைய தமிழ் இலக்கியப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் இவரும் ஒருவர்.



# நோய் தீர்க்கும் சந்தனம்

''திங்க ளமிர்த கிரணமிகச்
சீதளமே
திங்களினுஞ் சந்தனமே
சீதளமாம்-

என்று சந்தனத்தின் பெருமை குறித்து 'நீதி வெண்பா' தெரிவிக்கிறது.

வெயில்காலத்தில் சந்தனத்தை அரைத்து மேனி எல்லாம் பூசி வெம்மையைத் தணித்துக்கொள்ளும் வழக்கம் இன்றும் நிலவி வருகிறது.

பண்டைக் காலத்தில் பெண்கள் தங்கள் கூந்தலுக்கு அகிற்புகை-சந்தனப்புகை ஆகியவற்றை ஊட்டினர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

பழம்பெருமை மிக்க சந்தனம் நோய் தீர்க்கவும் பயன்படுகிறது.

சந்தனம் மர வகுப்பைச் சேர்ந்தது. தென்னிந்தியாவில் மைசூர் தமிழகம் முதலியஇடங்களிலுள்ள மலைகளில் வளருகின்றது. இதன் இலைவழவழப்பாயிருக்கும். இதில் செம்மை, மஞ்சள், வெண்மை என மூன்று வகையுண்டு. இந்த மூன்று வகையில், மருந்துகளுக்குச் சிவப்பு நல்லது. மஞ்சள், நடுத்தரமானது. வெண்மை பயனற்றது.

தீரும் வியாதி : உட்சூடு, ஒழுக்கு வெள்ளை, நாவறட்சி, வேர்க்குரு, முக்குற்றம், மனக் கலக்கம், நமைச்சல், மார்புத் துடிப்பு, சுரம், சொறி சிரங்கு, அக்கி, படர்தாமரை, தேமல், வீக்கம், தலைவலி, வயிற்றுப் பொருமல், சீதக்கழிச்சல், நீர் வேட்கை, முகப்பரு, மூலச்சூடு, பிரமேகம்.



**ஏ. ஆர். என். துரைராஜ்**
**ஆர்.ஐ.எம்பி.**

### உபயோகமும் செய்முறையும்

சிறிது சந்தனத்தூளை எடுத்து மை போல அரைத்துச் சூடான பசுப்பாலில் கலந்து, குடிக்கும் அளவுக்கு அருந்தினால், சீழ் வெள்ளை வரும் நோய்க்கு நல்லது. தொடர்ச்சியாக ஒரு வாரம் அருந்தி வரும் பட்சத்தில் குணம் காணலாம்.

நீர்வேட்கை உள்ள நோய் உள்ளவர்கள் இளநீரை வெட்டாமல், இளநீர் வாய் முனையில் ஒரு சிறிய பொத்தல் போட்டு, அதனுள் சந்தனத்தூளைப் போட்டு ஊறவைத்துப் பிறகு வடிகட்டி, அருந்தினால், நீர் வேட்கை குணம் காணலாம்.

சந்தனக் கட்டையைப் பொடி செய்து, நன்றாகக் காய்ச்சிய தண்ணீரில் கலந்து, பிறகு வடிகட்டி அருந்த, மாந்தம், சுரம், மார்புத் துடிப்பு இவைகளைப் போக்கும். மேலும் இந்தக் குடிநீரைச் சுரத்தில் கொடுக்க வியர்வை கண்டு, தீவிர நாடி நடையைத்தன்னிலைப்படுத்தும்.

கட்டையை, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, அந்தச் சந்தனச் சாற்றை மேலே பூச, நமைச்சல், சொறி சிரங்கு, அக்கி, படர்தாமரை, தேமல், வீக்கம் இவை நீங்கும், சுரத்தில் காணும் தலைவலி, புருவத்தில் வலி ஏற்பட்டால் இதை கட்டுத் தேனில் அரைத்து, நெற்றியில் பற்றுப் போட குணம் காணும்.

வேண்டும் அளவு சந்தனத்தை அரைத்து, அதற்குத் தகுந்தாற்போல் கொஞ்சம் தண்ணீர் கலந்து, 10 நிமிடம் கழித்த பிறகு அத்தெளிந்த நீரை ஒரு தம்ளரில் எடுத்துக்கொண்டு அதில் தேன், சர்க்கரை கலந்து உட்கொள்ள, வயிற்றுப் பொருமல், சீதக் கழிச்சல், வெப்பம், நீர்வேட்கை ஆகியவை தணியும்.

சுமார் இரண்டு தம்ளர் தண்ணீரை நன்றாகக் காய்ச்சி, காய்ச்சிய தண்ணீரில் சிறிதளவு சந்தனத்தூளைப் போடவும்;ஒரு மணி நேரம் ஊறிய பின் பிறகு வடிகட்டி சுமார் 1/8 அல்லது ¼ ஆழாக்கு வீதம் அருந்தினால், மூலச்சூடு, பிரமேகம், சுரம் ஆகியவை தீரும் (இதற்கு சந்தன ஊறல்நீர் என்று பெயர்).

இளநீரை வெட்டாமல் வாங்கி வந்து இளநீர் வாய்முனையில் ஒரு சிறிய பொத்தல்போட்டு அதனுள் சந்தனத் தைலம் நான்கு துளிவிட்டு, பிறகு நன்றாகக் குலுக்கி அருந்த வேண்டும். நாளடைவில் வெள்ளை, உட்சூடு இவை நீங்கும்.

சந்தனம், மிளகு, ஜாதிக்காய் இம்மூன்றையும் கூட்டியரைத்து முகத்தில் இருக்கும் முகப்பருவின் மீது லேசாகத் தடவினால் பரு நீங்கும். 10 நாட்கள் தொடர்ச்சியாகத் தடவி வந்தால் குணம் உண்டு.

வெயில் காலங்களில் வேர்க்குரு அதிகமாக இருப்பின் சந்தனத்தை அரைத்துத் தடவினால் எரிச்சல் அடங்கும். தேங்காய் நீரில் சந்தனத்தை இழைத்துப் பூசிவர வேர்க்குரு மறையும்.

செய்யுள்

நற்சந் தனமரத்தா னல்லறிவு
மின்புமெழிற்
பொற்செந் திருவருளும்
பூதலத்துள்—மெச்சுஞ்
சரும வழகுந் தனிமோ கமுமாம்
'பிரமிநோ யேகும் பிற்ழ்ந்து.....''
(அ.கு.)

பொருள்

சந்தன மரக்கட்டையை நன்முறையில் வழங்கின் அறிவும், மகிழ்ச்சியும், உடலழகும், ஒளியும், மாதரிடத்திச்சையும் உண்டாகும். வெள்ளை நோயும் நீங்கும்.

இவ்வாறு சந்தனம் அரிய தொரு மருத்துவப் பொருளாக விளங்கி வருகிறது.

தொன்றுதொட்டு எல்லா மதத்தினரும் ஒருங்கிணைந்து பயன்படுத்தி வரும் பெருமை இதற்கு உண்டு.



# பால்பண்ணைத் தொழில் மாநாடு

அனைத்திந்திய பால்பண்ணைத் தொழிலின் 19-வது மாநாடு சென்னை கலைவாணர் அரங்கில் பிப்ரவரி 11 முதல் 13 வரை நடைபெற்றது. பால்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு மாநிலத்தவர் இம்மாநாட்டுக்கு வருகை புரிந்தனர்.

முதல் நாள் (11-2-83) இந்திய பால்வளக் கழகத் தலைவர் திரு பி. எச். பட் தலைமை ஏற்றார்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சம்மேளனத்தின் இயக்குநரும் வேளாண்மைத் துறையின் ஆணையரும் செயலரும், வரவேற்புக் குழுவின் தலைவரும் ஆகிய செல்வி எம். எஸ். ரமேஷ், இ. ஆ. ப. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தலைமை வகித்த திரு. பி. எச். பட் தமது உரையில் தெரிவித்ததாவது:

''பால் பண்ணைத் தொழில் குறித்துப் பல்வேறு பரிந்துரைகள் இந்திய அரசிடமும் மாநில அரசிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளன; அவை நிறைவேற்றப்பட்டால் பால்பண்ணைத் தொழில் வளர்ச்சியுறும் என்பது உறுதி.''

இந்திய பால்வளக் கழகம்—தேசிய பால்வள வளர்ச்சி வாரியம் ஆகியவற்றின் தலைவர் டாக்டர் வி. குரியன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலை அவர்களே சந்தைக்குக் கொண்டு வந்து விற்கும் முறை வளர்க்கப்பட்டால் பாலின் விலையைக் குறைக்க முடியும்.

''செயற்கை முறைக் கருவூட்டல் நல்ல பலன்களை அளித்து வருகிறது. பசுக்களை மட்டுமே உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது.''

மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்து, உரையாற்றினார்

பால்வளக் கல்வியில் அனைத்திந்திய அளவில் உயர்ந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு முதற் பரிசாகத் தங்கப் பதக்கத்தையும் இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கத்தையும் வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மாநாட்டு மலரை வெளியிட்டும் மாநாட்டை ஒட்டி அமைக்கப் பெற்றிருந்த கண்காட்சியைத் திறந்து வைத்தும் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

''கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் பால் உற்பத்தி பெருகி இருக்கிறது. கால்நடைத் திட்டங்கள் சிறப்புப் பெற்றிருக்கின்றன.''

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சம்மேளனத்தின் நிருவாக இயக்குநர் திரு ஏ. எம். சாமிநாதன் இ. ஆ. ப. நன்றி கூறினார்.

**பால் பண்ணைத் தொழில் மாநாடுகள்**
**முன்னர் நடைபெற்ற**
**ஆண்டும் இடமும் பின்வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| முதல் மாநாடு | | — | பிப்ரவரி 1964—பெங்களூர் |
| 2வது | ,, | — | ஜனவரி 1965—கல்கத்தா |
| 3வது | ,, | — | ஜனவரி 1966—பம்பாய் |
| 4வது | ,, | — | ஜனவரி 1967—லக்னோ |
| 5வது | ,, | — | பிப்ரவரி 1968—ஐதராபாத் |
| 6வது | ,, | — | ஜனவரி 1969—சண்டிகார் |
| 7வது | ,, | — | பிப்ரவரி 1970—பரோடா |
| 8வது | ,, | — | பிப்ரவரி 1971—திருவனந்தபுரம் |
| 9வது | ,, | — | மார்ச் 1972—கௌகாத்தி |
| 10வது | ,, | — | மார்ச் 1973—சென்னை |
| 11வது | ,, | — | மார்ச் 1974—ஜெய்ப்பூர் |
| 12வது | ,, | — | ஜூலை 1975—டில்லி |
| அனைத்துலக மாநாடு | | | மார்ச் 1976 லூதியானா |
| 13வது மாநாடு | | — | ஏப்ரல் 1977—ஹிஸ்ஸார் |
| 14வது | ,, | — | பிப்ரவரி 1978 பெங்களூர் |
| 15வது | ,, | — | பிப்ரவரி 1979—ஐதராபாத் |
| 16வது | ,, | — | பிப்ரவரி 1980—புனா |
| 17வது | ,, | — | பிப்ரவரி 1981—அகமதாபாத் |
| 18வது | ,, | — | செப்டம்பர் 1982—இந்தூர் |





# அண்ணல் பிறந்த மண்ணில் ஆறு நாட்கள்

—பி. வி. கிரி

குஜராத்!

குவலயுமே கொண்டாடும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த புண்ணியத்தலம்!

பழமையும் புதுமையும் பூத்துக் குலுங்கும் பழத்தோட்டம்!

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து வைக்கும் கவின்மிகு நகரம்!

அந்த மண்ணில்தான் ஆறு நாட்கள் பயணம் - ஆறு ஆண்டுகள் இருந்தது போன்ற உணர்வுகள்!

ஆம். பிப்ரவரித் திங்கள் 7-ஆம் நாள் எங்கள் பயணம் தொடங்கியது.

குஜராத் அரசின் அழைப்பின் பேரில், தமிழகத்திலிருந்து செய்தியாளர்கள் பன்னிருவர் அடங்கிய குழு ஒன்று அங்குப் பயணம் மேற்கொண்டது. இந்த இனிய பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறை.

**புதிய பூமி!**

எங்களுக்கெல்லாம் குஜராத் புதிய பூமிதானே? அந்த மாநிலத்தைப் பார்க்கப் போகிறோமே என்ற குதூகலம் எங்கள் மனத்தில் நிறைந்திருந்தது.

அன்னை நாடு என்னும் பூங்காவில் தான் எத்தனை அழகிய மாநில மென்னும் மலர்கள்! அந்த மலரின் இதமான மணத்தை நுகர யாருக்குத்தான் ஆசை வராது!

சென்னை சென்ட்ரலிலிருந்து காலை ஏழுமணிக்குப் புறப்பட்ட நாங்கள் ஆந்திர - கர்நாடக -





காந்தியடிகள் பிறந்த இல்லத்துக்கு முன்னே செய்தியாளர்கள்

மகாராஷ்டிர மாநிலங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தோம். மறுநாள் காலை 'ஜல்கான்' ரயில் சந்திப்பில் வந்து ரயில் நின்றது. ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, ரயில் வந்த வழியே மீண்டும் கிளம்பியது. ஆம்! கிழக்கே போன ரயில் இப்போது மேற்கு நோக்கிச் சென்றது! இந்த ரயில் நிலையத்தில் காணப்பட்ட ஓர் அறிவிப்பு எங்களைக் கீழே இறங்கும்படி உந்தித் தள்ளியது, அது தான் 'அஜந்தாவுக்குப் போகிறவர்கள் இங்கே இறங்க வேண்டும்' என்பது. இங்கே இறங்கினால் 'வடோதரா'வுக்கு எப்படிப் போவது?

வடோதராவா?

ஆம். ரயில் ஜல்கானிலிருந்து சூரத் வழியாக அன்று மாலை 'வடோதரா' ரயில் நிலையத்தில் வந்து நின்றது. இந்த வடோதரா தான் பரோடாவாகும். பரோடா என்பது ஆங்கிலச் சொல் என்று, பிறகு அறிந்து கொண்டோம். ஆக, சென்னையிலிருந்து குஜராத் மாநிலத்தை அடைய இரண்டு பகல், ஓர் இரவு ஆனது.

**பரோடாவில்...!**

மறுநாள் காலை பரோடா நகரை ஒரு சுற்று சுற்றி வந்தோம்.

நகர வீதிகள் அழகாகவும், சுத்தமாகவும் இருந்தன. அதிகாலை முதலே மக்கள் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துவிடுகின்றனர். எங்கு பார்த்தாலும் கடைத் தெருக்கள். வேகமான போக்குவரத்து நடமாட்டங்கள்! இரண்டடுக்குப் பேருந்துகள் மனித பாரம் சுமக்க முடியாமல் செல்லும் காட்சியும், கண்ணில் புடுகிறது. படிக்கட்டுப் பயணம் இங்கும் உண்டு.

'அதோ, நியாய மந்திர்' என்று ஒரு கட்டடத்தைச் சுட்டிக் காட்டினார் எங்களுடன் வந்த குஜராத்செய்தித்துறை துணை இயக்குநர் திரு தாக்கர். ஆம். அதுதான் நீதி மன்றம்.

எங்களை ஏற்றிச் சென்ற குஜராத் அரசின் அழகிய சொகுசுப் பேருந்து விரைந்து செல்கிறது.

பொது மருத்துவமனை, மத்திய சிறைச்சாலை, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் எல்லாம் பார்த்துக் கொண்டே செல்கிறோம்.

''இதுதான் அல்காபுரி. வசதி படைத்தவர்கள் வாழும் பகுதி'' என்று அந்தப் பகுதியைக் காட்டினார் எங்களுடன் வந்த செய்தித் துறையைச் சேர்ந்த துணை ஆசிரியர் திரு சோனி. அது அண்ணா நகரை எங்களுக்கு நினைப்பூட்டியது.

பேருந்து, குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வளாகத்துக்குள் நுழைகிறது. வானம் போலப் பரந்து விரிந்து காணப்படும் இந்த ஆலையின் வேகமான முன்னேற்றம் நம்மையெல்லாம் வியக்க வைக்கிறது. 1,400 ஏக்கர் பரப்பளவில் காட்சியளிக்கும் இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இந்தியாவிலேயே மிகப் பெரியது என்ற தகவலைத் தெரிந்துகொள்கிறோம். இந்த ஆலையிலும் இதன் துணைத் தொழிலாக உள்ள தொழிற்கூடங்களிலும் பணி புரியும் தொழிலாளர்களுக்கான அழகிய குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள் எல்லாம் நம்மைக் கவர்கின்றன.

**ஒரு கிராமத்தில்!**

அங்கிருந்து நாங்கள், 'ஆனந்த்' தேசிய பால்வள வாரியத்துக்குச் ( NDDB ) சென்றோம்.

பச்சைப் படாம் விரித்தாற் போன்ற அழகிய புல்வெளிகளுக்கு மத்தியில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது இந்தக் கட்டடம். கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் அதன் வடிவமைப்பு திகழ்கிறது. நாங்கள் ஒருநாள் இரவு அங்குத் தங்கி இருந்து மறுநாள் அதன் தொடர்பான தொழிற் கூடங்களுக்கெல்லாம் சென்று பார்த்தது எங்களுக்கு ஒரு நல்ல அனுபவமாக இருந்தது.

குஜராத் மண்ணில் - காலடி வைத்தபோது – அங்குச் சுற்றிப் பார்க்கின்றபோது தமிழ் மக்கள் யாரேனும் தென்படமாட்டார்களா என்று கண்ணோட்டம் விட்டதுண்டு. எங்கள் எண்ணத்திற்கேற்ப, நாங்கள் போய்ப் பார்க்கிற பெரிய பெரிய தொழிற் கூடங்களிலெல்லாம் முக்கிய பதவிகளில் தமிழர்கள் இருக்கக் கண்டு பெருமிதம் கொண்டோம். ஏன், குஜராத் அரசில் முதல்வரின் செயலாளர் உட்பட, பல்வேறு துறைகளின் மேல்மட்ட அலுவலர்கள் எல்லாம் தமிழர்களே என்று அறிந்தபோது எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'குஜராத் அரசு தமிழ்நாட்டினால் நடத்தப்படுகிறது!' என்று மாண்புமிகு குஜராத் முதல்வர் திரு மாதவ்சின் சோலங்கி அவர்கள் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

ஆனந்த் பால்வள வாரியத்திலும் தமிழ்ப் பேச்சுகள் எங்கள் காதில் வந்து மோதின! ஆம். தமிழ்நாட்டிலிருந்து பதின்மூன்று இளைஞர்கள், இங்கு 40 நாட்கள் பயிற்சி பெற வந்திருந்தார்கள். அவர்கள் எங்களைப் பார்த்ததும் புதையல் கண்டது போலப் பூரித்துப் போனார்கள். தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் கழகத்தின் சார்பாக அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டோம்.



அன்று மாலை ஒரு கிராமத்துக்குச் சென்றோம். அதன் பெயர் மோக்ரி. அங்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தக் கிராமத்து ஆடவர், பெண்டிர், சிறுவர்கள் எல்லாம் பால் பாத்திரங்களை ஏந்திக் கொண்டு வரிசையாக நிற்கிறார்கள்.

ஒவ்வொருவராக வந்து பாலை அங்கிருக்கும் ஒருவரிடம் தருகிறார்கள். அவர் அதிலிருந்து ஒரு கரண்டி பாலை எடுத்துக் கொண்டு (இது பரிசோதனைக்காக) பாலை அளக்கிறார். பக்கத்திலிருப்பவர் அந்த அளவை அவர்கள் வைத்திருக்கும் அட்டையில் குறிக்கிறார். அட்டையை எடுத்துக் கொண்டு ஒரு 'கவுண்டரில்' கொடுக்கிறார்கள். அவர் அதற்குரிய காசு தருகிறார். காசைப் பெற்றுக் கொண்டவர்கள் தேவைப்பட்டால் மாட்டுத் தீவனத்தை அங்கேயே வாங்கிக் கொள்கிறார்கள்.

முதலில், மாதிரிக்குக் கொஞ்சம் எடுத்த பால் ஓர் அறையில் நவீன கருவி மூலம் சோதிக்கப்படுகிறது. இதன் மூலம் தரமான பால் சங்கத்துக்குக் கிடைப்பது மட்டுமல்ல, பாலில் கலப்படம் செய்வதும் தவிர்க்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒழுங்கு, வரிசை முறையையும் கூச்சல், வீண் பேச்சு இல்லாததையும் கண்டு வியந்தோம்.

**விஞ்ஞான விந்தை!**

அடுத்து நாங்கள் சென்று பார்த்தது, அமுல் பால் பண்ணை. அறிவியலின் விந்தையை அழகாகக் காண முடிந்தது இங்கே. மனிதனின் கைப்படாமலேயே, எல்லாம் இயந்திரங்களே செய்கின்ற இனிய காட்சியினை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். தரமான ஊட்டமான பால்பண்டங்கள் இங்கே தயாரித்து, இந்தியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாம் அனுப்பப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

அதோ! ஒரு தொலைக் காட்சி கோபுரம் தெரிகிறதே...

ஆம். பிஜ் ரயில்வே நிலையம் அருகில் உள்ளதுதான், பிஜ் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம். இது 1975 முதல் இயங்கி வருகிறது. 45 கி.மீ. தொலைவுக்குத் தெரியும் வண்ணம், குஜராத் கலாச்சார நிகழ்ச்சிகள் இந்நிலையத்தின் மூலம் ஒளிபரப்பாகின்றன. ஒரு மணி நேர அளவில் நிகழும் இந்நிகழ்ச்சியில் சமூகப் பொருளாதார மற்றும் குடும்பநல, கால்நடை வளம்போன்றவை இடம் பெறுகின்றன.

பேருந்தில் வழியெல்லாம் பார்த்துக்கொண்டேவருகிறோம். பல கிராமங்களை, சிறு நகரங்களை, வயல்வெளிகளைத் தாண்டி வருகிறோம்.

கிராம மக்கள் சிறு சிறு மண் குடிசைகளில் அல்லது பலகைகள் அடித்த வீடுகளில் வாழ்வதையும் பார்க்கிறோம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதுபோல, எங்கு பார்த்தாலும் சிறிய பெரிய கோயில்கள் தென்படுகின்றன. அதன் கோபுரத்தில் கொடி ஒன்றும் பறக்கிறது.

ஆடுமாடுமேய்க்கும் ஆடவர்கள் ஆயர்பாடிக் கண்ணன் போலக் காட்சியளிக்கிறார்கள். பயிர்த் தொழில், பால் கறத்தல், வீடு கட்டுதல், சாலை வேலை போன்றவைகளில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். வழியெல்லாம் எங்கு பார்த்தாலும் சிறுசிறு சிற்றுண்டிக் கடைகள், தேநீர்க் கடைகள் உள்ளன. குஜராத் மாநிலத்துக்கே உரித்தான இனிப்பு வகைகள், தின்பண்டங்கள் போன்றவை இக்கடைகளில் எல்லார் கண்களிலும் படும்படி வைக்கப்பட்டிருக்கின்றன. வழிப்போக்கர்கள் இந்தக் கடைகளுக்கு நிறைய வருகிறார்கள். விம்பிடி என்னும் ஊரில், பேருந்து நிலையத்துக்கு எதிரில் இதே போன்ற பெரிய கடை ஒன்று. அதில் நாங்கள் ஆசைதீர இனிப்பும் காரவகைகளையும் ஒரு கை பார்த்தோம்!

**ஒட்டக வண்டிகள்**

இங்கு எவரும் சும்மா இருப்பதில்லை. ஏதாவதொரு வேலை செய்கிறார்கள். மூலைக்குமூலை பீடா கடை இருக்கிறது. ஒருவர் ட்ரங்க் பெட்டியைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு மசாலா வேர்க்கடலை விற்பதைப் பார்க்க முடிந்தது. எல்லாம் சுய வேலை வாய்ப்பு; சொந்தக் காலில் நிற்கிறார்கள்.

கிராமமாகட்டும், ஆமதாபாத் போன்ற நகரமாகட்டும் சாதாரணமாக ஒட்டக வண்டிகளைப் பார்க்கலாம். நம் ஊரில் டிரக் வண்டிகளை மாடுகள் இழுத்து வருவதுபோல், அங்கு ட்ரக் வண்டியை ஒட்டகம் இழுத்துச் செல்கிறது. ஒட்டக வண்டியைக் 'கூட்காடி' என்கிறார்கள்.

இவையின்றி டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்களும் உள்ளன. இவற்றின் கட்டணம் குறைவு என்று சொன்னார்கள். மோட்டார் சைக்கிளோடு இணைந்த ட்ரக்

## குஜராத்
### சில தகவல்கள்

**1960**-ஆம் ஆண்டுமே மாதம் முதல் நாளன்று, பழைய பம்பாய் நகரத்தை மாற்றியமைத்ததன் விளைவாக, தற்போதுள்ள குஜராத் மாநிலம் உருவானது.

குஜராத்தை, (1) குஜராத் மாநிலம் (2) தீவுப் பகுதிகள் என்று இரு முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கலாம். இவ்விரு பகுதிகளை வட, மத்தி, தெற்கு குஜராத்திய பகுதிகள் என்றும், குஜராத் தீபகற்பத்தின் செளராஷ்டிர கட்ச் பகுதிகள் என்றும் மேலும் பிரித்துக் கூறலாம்.

குஜராத் மாநிலத்தின் பரப்பளவு 195,984 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 3.40 கோடியாகும். இது மொத்தம் 19 மாவட்டங்களைக் கொண்டதாகும்; இதில் 184 வட்டங்களும், 18,700 கிராமங்களும் உள்ளன.

'குஜராத்' என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்கு ஒரு வரலாறு சொல்கிறார்கள். பிராகிருத மொழியில் 'குஜ்ஜார் ரத்தா' அல்லது 'குஜ்ஜார் ராஷ்ட்ரா' என்றால் குஜ்ஜார்களின் பூமி என்று பொருள்படும். பழங்காலத்தில் ஹூணர்களோடு சேர்ந்து இந்தியாவுக்குள் நுழைந்த ஒரு வகைப் பழங்குடியினரே குஜ்ஜார் மக்களாவர். இவர்கள் பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய இடங்களில் சுற்றித் திரிந்து இந்தியாவின் மேற்குப் பகுதியில் நிலைத்து விட்டார்கள்.

குஜராத்தில் ஒரு பெரிய துறைமுகமும், 11 நடுத்தரத் துறைமுகங்களும், 35 சிறிய துறைமுகங்களும் உள்ளன.

இந்தியாவிலேயே மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, குஜராத்தில் உள்ள பரோடாவில் உள்ளது. அதன் பெயர் குஜராத் ரிபைனரி. ( Gujarat Refinery )

போன்ற வண்டியும் மக்களை ஏற்றிச்செல்கிறது.

ஆமதாபாத்!

சென்னை மாநகரைப்போன்று காட்சியளிக்கும்பரபரப்பு மிகுந்த பெரிய நகரம் இது. 'சர்சர்' என்று பேருந்துகளும், கார்களும், வாகனங்களும் செல்கின்றன. ஆடவர் பெண்டிர் சிறுவர் சாரிசாரியாகச் சாலையின் இருபுறமும் செல்கிறார்கள். பெரிய பெரிய கட்டடங்கள் எங்கும் தென்படுகின்றன. திரையரங்குகளும் ஆங்காங்கே உள்ளன. அவற்றில் திரளான மக்கள் கூட்டமும் இருக்கின்றது. பெரிய பெரிய அலங்காரமான துணிக்கடைகளும், சிறிய சிறிய சாலை ஓரக்கடைகளும் உள்ளன. இரவு நேர சிற்றுண்டிக் கடைகளும் உண்டு. சென்னையைப் போல நாகரிக மோகத்தை இங்கேயும் காணமுடிகிறது. ஆடவர் பெண்டிர் நாகரிக பாணியில் நடந்து செல்வதைப் பார்க்க முடிகிறது.

ஆமதாபாத்தை நகர்வலம் வரும்போது—குஜராத் வித்யா பீடம், வானொலி நிலையம், மிகப்பழமை வாய்ந்த அழகிய ஜம்னாமசூதி—இது 1423-ல் இந்நகரை உருவாக்கிய சுல்தான் அகமது ஷாவினால் கட்டப்பட்டது. இதுபோன்ற பல மசூதிகள் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. பத்ரா கோட்டை, மற்றும் முகமதிய மன்னர்களின் நினைவுச் சின்னங்களாக விளங்கும் கலை வண்ணம் மிக்க கட்டடங்கள், புகழ் மிக்க காலிகோ டெக்ஸ்டைல் மியூசியம், குஜராத்திய கலை, கலாச்சாரங்களை எடுத்துக்காட்டும் காட்சியரங்கு, கல்லிலும் மரத்திலும் வேலைப்பாடு மிக்க ஜைனக் கோயில்கள் ஆகியவை உள்ளன. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போன்று அண்ணல் காந்தியடிகளின் சாபர்மதி ஆசிரமம், சாபர்மதிநதிக் கரையில் அமைந்துள்ளது.

ஆமதாபாத் பெரிய தொழில் நகரமாய் விளங்குகிறது. இங்கு 64 மில்கள் உள்ளன. அவற்றிலிருந்து ஏராளமான துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதனால் ஆமதாபாத்தை 'இந்தியாவின் மாஞ்செஸ்டர்' என்று அழைக்கின்றார்கள். சூரத் பட்டுத்துணிகளுக்குப் பெயர்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமாகும். ஆமதாபாத்தில் மணிநகர் என்னும் பகுதியில் 10,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். இங்குத் தமிழ்ச்சங்கம் ஒன்றும்செயல்படுகிறது. தமிழ் அச்சகம் ஒன்றும் இப்பகுதியில் உள்ளது. சனி, ஞாயிறு காலைக்காட்சிகளில் தமிழ்ப்படங்கள் திரையிடப்படுகின்றன. மில்களிலும், வங்கிகளிலும் தமிழர்கள் பணிபுரிகிறார்கள். ஷாபூர் என்னுமிடத்தில் முஸ்லீம்கள் அதிகம் வாழ்கிறார்கள்.



ஒட்டக வண்டிகள்

**ராஜ்கோட்டில்**

அடுத்து, நாங்கள் சென்ற இடம் ராஜ்கோட். இதுவும் அழகிய ஒரு நகரம். காந்தியடிகள் பிள்ளைப்பருவ நிகழ்ச்சிகள் இங்குதான் நிகழ்ந்தன. இங்கு காபாகாந்தி இல்லம் ஒன்று நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளை இது வெகுவாகக் கவர்ந்து வருகின்றது.

ராஜ்கோட்டில் மருந்துக் கடைகளும், துணிக்கடைகளும் நிறைய உள்ளன. உலகப் புகழ்பெற்ற 'பட்டோலா' புடவைகள் இங்குதான் தயாரிக்கப்படுகின்றன. இதே போல வண்ண வண்ண வடிவமைப்புகளில் அச்சிடப்படும் புடவைகள் தயாரிக்கும் தொழிற்கூடங்களும் இங்கு உள்ளன.

குஜராத்துக்குப் பயணம் ஆகும் போதே அண்ணல் காந்தியடிகள் பிறந்த ஊருக்குப் போக வேண்டும், அவர் பிறந்த இல்லத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எங்கள் மனத்தில் நிறைந்திருந்தது. அந்த ஆவல் நிறைவேறும் தருணமும் வந்தது. ஆம். போர்பந்தரும் வந்தது.

**அண்ணல் பிறந்த இல்லத்தில்**

போர்பந்தர் குஜராத் மாநிலத்தின் மேற்குக் கடற்கரையில் உள்ள அழகிய ஊராகும். காந்தியடிகள் பிறந்த இந்த ஊரைச் சுதாமபுரி என்றும் அழைக்கிறார்கள். அதற்கேற்றாற்போல் சுதாமர் கோயிலும் இங்குள்ளது. சுதாமர் என்பவர் யார்? அவர்தான் குசேலர். கண்ணனோடு கல்வி பயின்றவர். சுதாமர் கோயிலைக் குசேலர் கோயில் என்றும் அழைக்கிறார்கள்.

காந்தியடிகள் பிறந்த இல்லத்துக்குள் நுழைகிறோம். எவ்வளவு எளிமையாக, அழகாக இருக்கிறது அந்த இல்லம்! காந்தி பிறந்த இடத்தை 'ஸ்வஸ்திக்' அடையாளம் போட்டு வைத்திருக்கிறார்கள். நம்மையறியாமலேயே அந்த இடத்தைத் தொட்டுக் கும்பிடுகிறோம்.

போர்பந்தரில் காணவேண்டிய இடங்கள் பல உள்ளன. அவை: பாரத் மந்திர், ராம் மந்திர், சுதாமர் மந்திர், கீர்த்தி மந்திர், பிளானடோரியம். காந்தியடிகள் பிறந்த இல்லத்துக்குப் பக்கத்தில் உள்ளதுதான் கீர்த்தி மந்திர்.

**தர்பாருக்குப் போவோமா!**

அரபிக்கடலோரத்தில், பொன்னிறக்கோபுரம் ஒன்று வானளாவ எழுந்து நிற்கின்றதே! அங்கே திரளான கூட்டம். அலைமோதுகின்றதே! ஆம். அதுதான் மிகப் பழமையான ,வரலாற்றுச் சிறப்பு மிக்க சோமநாத் கோயில். இந்தச் சிவன் கோயில் கோபுர அழகை அண்ணாந்து பார்க்கவேண்டும். சலவைக் கல்லால் சிற்ப வேலைப்பாடுமிக்க வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், கைவண்ணம் மிக்க கற்றூண்கள், வளைவுகள், சலவைக் கல்லாலான நந்தி, விநாயகர், ஆஞ்சநேயர் சிற்பங்கள் நம்மைக் கவருகின்றன. இந்தக் கோயில்தான், கஜினிமுகமதுவால் கொள்ளையடிக்கப்பட்டு, பிறகு இந்து மன்னர்களால் மீண்டும் கட்டப்பட்டு சுதந்திரத்துக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டது.



பரந்து விரிந்து கிடக்கும் அலைகடலோரம் அழகாக வீற்றிருக்கும் ஆண்டவனை வணங்கிவிட்டு, நேரே நாம் செல்வது அசோகச் சக்கரவர்த்தியின் கல்வெட்டினைக் காண! இது ஜூனாகத் மாவட்டத்திலுள்ள கிர்னார் மலைக்குப் போகிற வழியில் இந்தப் பெரிய பாறைக் கல்வெட்டு உள்ளது. இதைக் காணப் பலர் வருகிறார்கள். வருகிற வழியில் பல கோயில்கள் காணப்படுகின்றன. அங்கு இளந்துறவிகள் உட்பட நிறைய சாமியார்களும் காணப்படுகின்றனர்.



சரி, தர்பாருக்குப் போவோமா? இருபுறமும் வரிசையாக, கைவேலைப்பாடு மிகுந்த இருக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. நடுநாயகமாகப் பெரிய சிம்மாசனம், வெண்கொற்றக்குடை, செங்கோல் ஆகியவை காட்சியளிக்கின்றன. இவையெல்லாம் வெள்ளியால் ஆனவை!

1947க்கு முந்தி ஜூனாகத்தை நவாப்தான் ஆட்சி செய்துவந்தார். அவர் பாகிஸ்தானோடு சேர விரும்பியபோது, அவருடன் இருந்தவர்கள் செல்ல விரும்பவில்லை. அவ்வமயம் அவர் விட்டுச்சென்ற பொருள்களையெல்லாம் அப்படியே பாதுகாக்கப்பட்டன. 1964ல் அரும்பொருட்காட்சித்துறை இதனை மேற்கொண்டு பாதுகாத்து வருகிறது. 'தர்பார் ஹால் மியூசியம்' என்ற பெயரில் பெரிய கட்டடத்தில் அமைந்துள்ள இதில் வேலைப்பாடுமிக்க வெள்ளிப் பல்லக்கு, வெள்ளியாலான ரிக்ஷா, வெள்ளி உறையிட்ட வாள்கள், அக்கால மகாராணியின் ஆடை அணிகலன்கள், அக்கால நவாப்கள்-வீரர்கள் பயன்படுத்திய பல்வேறு துப்பாக்கிகள், கத்திகள், ஈட்டிகள் எல்லாம் காணக் கண்கோடி வேண்டும்!

**தமிழ்நாட்டுக்குப் பாராட்டு**

அடுத்து, எங்கள் பேருந்து சாசன் கிர் காட்டை நோக்கி 'கிர்'ரென்று விரைந்து செல்கிறது.

குஜராத் மாநில கிராமத்துப் பெண்கள்





அரபிக் கடலோரம் அமைந்துள்ள சோமநாத கோயில்

கிர் வன விலங்குச் சரணாலயத்தில் நிறைய சிங்கங்கள் உள்ளன. ஆசியாவிலேயே சிங்கங்கள் உள்ள ஒரே காடு, குஜராத்தில் உள்ள கிர் வனவிலங்குச் சரணாலயம் தான். இங்குள்ள சிங்கங்களைக் காண நாள்தோறும் ஏராளமானவர்கள் வருகிறார்கள். அவர்களோடு நாங்களும் அந்த 'வன ராஜா'வைப் பார்த்தோம்—எட்ட நின்று!

மறுபடியும் நாங்கள் அகமதாபாத்துக்கு வந்தபோது, முன்னாள் தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களைச் சந்தித்தோம். அவர் சமூகத்தொண்டுகளில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, காந்திய வழியில் பல நற்பணிகளை ஆற்றி வருகிறார். அவரை நாங்கள் சந்தித்ததுமே, தமிழ்நாட்டு மக்கள் நலம் விசாரித்தார்.

தமிழ்நாட்டில் நான் இருந்த காலத்தை என்னால் மறக்க முடியாதது என்றும், அந்த அருமையான அனுபவங்களை நூலாக எழுதிக் கொண்டிருக்கிறேன் என்றும் அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் குழந்தைகள் இலவச மதிய உணவுத்திட்டமும், இலவசப் பற்பொடித் திட்டமும் நல்ல திட்டம் என்று பாராட்டினார். பிறகு எங்களை, அரிசன மாணவிகள் பயிலும் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார். அந்த மாணவிகள் வெண் புறாக்களைப் போல அமர்ந்துகொண்டு பயபக்தியோடு இசையுடன் இறைவணக்கம் பாடியது இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

**தலைநகரில்**

காந்திநகர்!

இதுதான் குஜராத்தின் புதிய தலை நகரம்.

இங்குள்ள விருந்தினர் மாளிகையில் குஜராத் செய்தியாளர்கள் எங்களைச் சந்தித்தார்கள். அவர்களில் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையிலிருந்து இருநிருபர்கள் வந்திருந்தார்கள். அவர்கள்இருவரும்தமிழர்கள். ஆங்கிலப் பத்திரிகையைவிட, குஜராத்தி மொழிப் பத்திரிகைகள் தான் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகின்றன என்றும், செய்தியாளர்களுக்கான சங்கம் ஒன்று உள்ளது என்றும், பத்திரிகையாளர்களுக்கான காலனிகள் ஆமதாபாத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

குஜராத்தில் நாளிதழ்களுக்கும், வார இதழ்களுக்கும் குறைவில்லை. 'குஜராத் சமாச்சார்' 'சந்தேஷ்' போன்ற நாளிதழ்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன. 'டைம்ஸ் ஆப் இந்தியா' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய ஆங்கில நாளிதழ்கள் வெளிவருகின்றன. இரண்டே பக்கங்களில் 'பரோடா ஹெரால்டு' ஒன்று மாலைப் பதிப்பாக வெளிவருகிறது. இதன்விலை 25 காசு. இதன் ஒரு பக்கம் முழுவதும் விளம்பரம், ஒரு பக்கம் தான் செய்தி. அரசு இதழாகச் செய்தித்துறை சார்பில் 'குஜராத்' மாத இதழும் ,'ரோஜ்கார் சமாச்சார்' என்னும் வேலை வாய்ப்புகளை வெளியிடும் மாத இதழும் வெளிவருகின்றது.

ஆமதாபாத்திலிருந்து 32 கி. மீ. தூரத்தில் உள்ள காந்திநகரில் தான், சட்டப்பேரவைக் கட்டடமும், தலைமைச் செயலகமும் உள்ளது. சட்டப்பேரவைக் கட்டடம் ரூ. 6 கோடிச் செலவில் கட்டப்பட்டு, கடந்த ஆண்டுதான் திறந்து வைக்கப்பெற்றது. பிரமாதமாகக் காட்சியளிக்கும் இது அழகிய வடிவமைப்புடன் விளங்குகின்றது. சட்டப்பேரவை கூடுமிடம் எழில்மிக்கதாய் உள்ளது.

**இந்தியா என்னும் தோட்டத்திலே**

கடைசியாக நாங்கள் பார்த்த இடம், 'விமல்' துணி தொழிற்கூடம். நம் கண்களை நம்மால் நம்பமுடியாதபடி, இயந்திரங்களின் இந்திர ஜாலங்களை இங்கே நாம் பார்க்கலாம். பஞ்சைப் பிரித்து நூலாக்குவது, முறுக்கேற்றுவது, துணி நெய்வது, அதில் வடிவங்களை அச்சடிப்பது, வண்ணந்தருவது, மெருகேற்றுவது எல்லாம் இயந்திரங்களே! தொழிற்கூடத்தின் ஒவ்வொரு பிரிவும் எவ்வளவு அழகாக சுத்தமாக வைத்திருக்கிறார்கள்!

அண்ணல் பிறந்த மண்ணில் ஆறு நாட்கள் இருந்தோம்; பலருடன் பழகினோம்; அவர்கள் அன்பைப் பெற்றோம். மீண்டும் தாயகம் திரும்பும்போது ஆனந்தக் கண்ணீர் மல்க பிரியா விடை பெற்றோம்.

இந்தியா என்னும் தோட்டத்தில் குஜராத் ஒரு நறுமண மலர். அம்மலரின் மணம் நுகர்ந்தோம். மனத்திலேயும் அதைச் சூடிக் கொண்டோம். ஒருமைப்பாட்டு வண்டின் ரீங்காரம் எங்கள் காதுகளில் ஒலிக்கவும் கண்டோம்!

**[இனிவரும் இதழ்களில் இன்னும் சுவையான கட்டுரைகள்]**



**மாணவர் பக்கம்**



**விளையும் பயிர்**

மாணவர்கள் கல்வி கற்கும் வேளையில் வெறும் 'ஏட்டுக் கல்வி' மட்டும் கற்காமல் கூடவே 'சேவை வழிக் கல்வி' பயில வேண்டும் என்று கூறுவர்.

அங்ஙனம், சேலம் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா மேனிலைப் பள்ளியில் + 2 படிக்கும் மாணவன் இரா. இராஜேசுவரன் என்பவர், 1978-ஆம் ஆண்டு முதல் இன்று வரை பள்ளி இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தில் ( Junior Red cross Group ) உறுப்பினராக இருந்து வருகிறார்.

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற 'சேலம் அரசுப் பொருட்காட்சி'யில் இப் பள்ளி மாணவர்கள் செய்த அறிவியல் படைப்புகள் இடம் பெறத் தேவையான ஏற்பாடுகளை இவர் திறம்படச் செய்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெறும் அனைத்துச் செயலுக்கும் 'அணித் தலைவனாக' இருந்து வழி நடத்தியுள்ள இம் மாணவருக்கு, பள்ளியில் நடைபெற்ற சாரண - செஞ்சிலுவைச் சங்க ஆண்டு விழாவின் போது, செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் தரும் பெரும் சிறப்புப் பெயரான "சிறந்த இளைஞர்" (Best Junior) என்கிற விருது வழங்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற அனைத்துப் போட்டியிலும் வெற்றி பெற்று, பல சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுள்ள இம்மாணவனை நாமும் வாழ்த்துவோம்!



பல்நோய் மருத்துவம் செய்து பணம் செலவிட வேண்டாம்; பழைய கைப் பக்குவம் ஒன்று அந்தச் செலவை மிச்சமாக்கும்.

சோடா உப்பை பல்பொடியாகப் பயன்படுத்தியது உண்டு. அது ஈறுகெடாமல் காக்கும் குணம் உடையது என்பது இன்று விஞ்ஞானச் சோதனையில் வெளியாகியுள்ளது.

ஈறு கெடுவதைத் தடுக்கும் கைப்பக்குவ முறை ஒன்று இருக்கிறது என்று 1978ல் அமெரிக்க அரசின் தேசிய உடல் நலக் கழகங்கள் கண்டறிந்தன - பல் மருத்துவர்களுக்கு அதிர்ச்சி! அந்தக் கைப் பக்குவ மருந்தில் சாதாரண உப்பும், சோடா உப்பும் உள்ளன.

அண்மையில் கலிஃபோர்னியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள், உப்பு (சோடியம் குளோரைடு) எப்ஸம் உப்பு (மெக்னீஷியம் ஸல்பேட்), சோடா உப்பு (சோடியம் பைகார்பனேட்) ஆகியவைவாயில் உண்டாகும் பாக்டீரியா நுண்ணுயிர்களை எவ்வாறு அழிக்கின்றன என்பது குறித்து ஆராய்ச்சி நடத்தினார்கள்.

ஈறு கெடுவதோடு தொடர்புடைய நுண்ணுயிர்களை எடுத்து அவற்றை வெவ்வேறு உப்புக்களில் வைத்து அவை வளர்கின்றனவா என்று பார்த்தார்கள். ஏர்னஸ்ட் நியுபிரன், அவர் உதவியாளர் சார்லஸ் ஹூவர் ஆகிய இருவரும்.

வாய் நுண்ணுயிர்களை 'அழிக்கும் ஆற்றல் ஒவ்வொரு உப்புக்கும் எவ்வளவு உள்ளது என்று அடுத்தபடியாக ஆராய்ந்தார்கள். உப்பின் அளவைக் குறைத்துக் குறைத்துவைத்து, இதில், எப்ஸம் உப்பையும், சாப்பாட்டு உப்பையும் விட சோடா உப்புத்தான் அதிக வேகமுள்ளது என்பது தெரிந்தது.

கெடுதல் செய்யும் பாக்டீரியா கிருமிகள் ஈறுக்கும் பல்லுக்கும் இடையில் சேர்ந்து, உணவுப் பொருளோடு கலந்து பல்லின் மேல் காவியாகப் படிந்துவிடும்; அப்படியே விட்டுவிட்டால் அது கறையாக அப்பிக் கொள்ளும். இதனால் ஈறு வீங்கும், வீக்கம் கூடக் கூட, அருகிலுள்ள ஈறும் கெடும்; அங்கும் 'பாக்டீரியா' தங்கத் தொடங்கும். இப்படியே நோய் பரவிவிடும்.

**கருத்தரங்கில் பூத்த கட்டுரை மலர்கள்!**

கரந்தைப் புலவர் கல்லூரி பி. லிட். நான்காம் ஆண்டு வகுப்பறைக் கருத்தரங்கில் பங்கு பெற்ற பதினெட்டு மாணவ மாணவியரின் கட்டுரைகளைத் தாங்கிய, 'கருத்தரங்கக் கட்டுரைகள்' என்னும் தலைப்பில் 99 பக்க அளவில் மலர் ஒன்று வெளி வந்துள்ளது.

இந்த மலர், மாணவ மாணவியரின் எழுத்துத் திறமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. பல்வேறு தலைப்புகளில், பதினெட்டுப் பேர் கட்டுரை படைத்திருக்கிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் நாவல்கள், கவிதைகள், புதுக் கவிதைகள், இதழ்கள் முதலியன இலக்கிய உலகத்திற்குப் பயன்படும் விதத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் இம்மலரில் உள்ள கட்டுரைகள் மணம் வீசி மனத்தை மகிழ்விக்கின்றன.

முனைவர் பட்டத்திற்காகச் செய்யப்படும் ஆய்வுக்குரிய முழுமையான உழைப்பை இக் கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிந்தைக்கு விருந்தளிக்கும் வகையில் அமைந்துள்ள இச்செந்தமிழ்க்கட்டுரைகளை ஒரு சேரத் தொகுத்து, அழகிய மலராகக் கொணர ஆவன செய்த பேராசிரியர் மா. ரா. அரசு, பேராசிரியர் பா. மதிவாணன் ஆகியோரை நாம் பாராட்ட வேண்டும்.

# கம்ப்யூட்டரின் பயன்கள்

இரண்டாம் உலகப்போர் சமயம். அப்போது கம்ப்யூட்டரை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளும், முயற்சிகளும் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்தன. எனவே, முதல் கம்ப்யூட்டரே, இராணுவ நடவடிக்கைகளுக்குத்தான் பயன்படுத்தப்பட்டது. ஏவுகணைகளின் பாதையைக் கணக்கிடவும், அணுகுண்டு பற்றிய ஆராய்ச்சிகளிலும் உதவியது. இப்படித்தான் கம்ப்யூட்டர் முதன்முதலாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

வருங்காலத்தில் விவசாயிகள் கடும் வெயிலில் கழனிக்குச் சென்று ஏர் உழவேண்டியது இருக்காது. அலுவலகங்களில் பணிபுரியவர்களைப்போல் அறைகளில் அமர்ந்துகொண்டு விசைப் பொத்தான்களைத் ( Button ) தட்டிக் கொண்டிருந்தால் போதும்.

சுரங்கத் தொழிலில் 1960-ஆம் ஆண்டு கம்ப்யூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கிலாந்திலுள்ள லெய்-செஸ்டர்ஷயர் என்னும் பிரதேசத்திலுள்ள சுரங்கத்தில் கம்ப்யூட்டரால் கட்டுப்படுத்தப்பட்ட கம்ப்யூட்டர் காமா கதிரின் உதவியால் நிலக்கரி இருக்கும் இடத்தை உணர்ந்து, நிலக்கரி வெட்டு எந்திரத்தை இயக்கியது. சுரங்கத் தொழிலாளி அறையில் அமர்ந்து கொண்டு விசைப் பொத்தான்களைத் தட்டிக் கொண்டிருந்தால் போதும்!

கம்ப்யூட்டரால் முடிந்தது இவ்வளவுதானா? கம்ப்யூட்டரின் பயன்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதற்குப் பக்கங்கள் போதாது. எனவே, வருகைக்கு ஒன்றாய், ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

ஆட்களின் உதவியின்றி கம்ப்யூட்டரால் ஒரு பெரிய தொழிற்சாலையை நிர்வகிக்க முடியும். உற்பத்தி எந்திரங்கள், தொகுப்பு எந்திரங்கள், சோதனை எந்திரங்கள், உற்பத்திப் பொருட்களைப் பார்சல் செய்யும் எந்திரங்கள் என்று வகைவகையான எந்திரங்களுக்குத் தகுந்த ஆணைகள் பிறப்பித்து இயக்கி அவற்றை மேற்பார்வையிட ஒரு கம்ப்யூட்டரால் முடியும். அந்த எந்திரங்கள் அவற்றிற்கு இடப்பட்ட ஆணைகளை ஒழுங்காக நிறைவேற்றி விட்டனவா என்பதை அப்போதைக்கு அப்போது கம்ப்யூட்டருக்கு அறிவிக்கும். எங்காவது எப்போதாவது தவறு நேர்ந்தால், அந்தத் தவற்றை எவ்வாறு சரிசெய்வது அல்லது மனிதர்களின் உதவியை நாட வேண்டுமா என்பதைக் கம்ப்யூட்டர் தீர்மானித்து ஆக வேண்டியதைச் செய்யும்.



லாட்டரி சீட்டுக்களைக் குலுக்கிப் பரிசுபெற்ற எண்ணைத் தேர்ந்தெடுப்பது, அஞ்சல் குறியீட்டு எண்ணின் அடிப்படையில் தபால்களைப் பிரித்தெடுப்பது, அலுவலகப் பணியாளர்களின் சம்பளப் பட்டியலைக் கணக்கிடுவது-இவை கம்ப்யூட்டர் செய்யும் வேறு சில வேலைகள்!

'விண்வெளியுகம்' என்றும் கூறப்படும் இந்தக் காலத்தில் தான் மனிதன் விண்வெளிப் பயணத்தில் ஒவ்வொரு நாளும் புதுப் புது வெற்றிகளைச் சாதித்துக் கொண்டிருக்கிறான். சந்திரனில் காலடி பதித்த மனிதன், செவ்வாய்க் கோளுக்கு ராக்கெட் அனுப்பி, இன்று சனிக் கோளையும் தாண்டி அயல் உலகத்திற்கு 'ராக்கெட்' அனுப்பி வைத்திருக்கிறான். இந்த அபார சாதனைகளுக்கெல்லாம் காரணமாக இருப்பது என்ன தெரியுமா? கம்ப்யூட்டர்! ஆம், கம்ப்யூட்டர் இல்லையெனில் விண்வெளிப் பயணம் சாத்தியமாகி இருக்காது என்றே கூறலாம்.

விண்கலங்களை வடிவமைப்பதும், அவற்றினுடைய பாதைகளைக் கணக்கிடுவதும் கம்ப்யூட்டர்தான். விண்கலம் விண்ணில் பறக்கும்போது அதனுடைய பாதையைப் பரிசீலித்து, தேவையான திருத்தங்களைச் செய்கிறது. இவை தவிர, கோள்கள் முதலியவற்றைக் கவனித்து, தகவல்களைச் சேகரித்து வகை செய்து புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழி செய்கிறது. இப்படி, விண்வெளிப் பயணத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் கம்ப்யூட்டர் மனிதனுக்கு உதவுகின்றது.

ஆதாரம் :
—'வரலாறு படைத்த கம்ப்யூட்டர்' என்னும் நூலில் திரு. வே. தமையேந்திரன்.




- ☐ சீனாவிலுள்ள ஷான்சி மாகாண கவர்னராக இருந்த லீசுவாங்குக்கு ஒவ்வொரு கண்ணிலும் இரண்டு கரு விழிகள் இருந்தன.
- ☐ சூடான இரத்தமுள்ள ஆடு, புலி, குதிரை, இவைகட்கு கூட வெறி பிடிக்குமாம்.
- ☐ செவ்வாய் கிரகத்தில் தொடர்ந்து 250 நாட்களுக்குப் பகலாகவே இருக்கும். அங்கு ஒரு நாள் என்பது நமது 250 நாட்களுக்குச் சமம்.
- ☐ கொசுக்களில் 43 வகைகள் உள்ளன.
- ☐ பசுவின் கொம்பிலுள்ள வளையங்கள் அது ஈன்றுள்ள கன்றுகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன.
- ☐ 1872 – ஆம் ஆண்டு டிசம்பரில் அடித்த ஒரு புயல் 800 டன் எடையுள்ள கான்கிரீட் கல்லை கடலிலிருந்து தூக்கி தரையில் எறிந்தது.
- ☐ பூமியிலுள்ள மேடு பள்ளங்களைச் சமப்படுத்தினால் கடல்நீர் அதன் மீது 2.4 கி.மீ உயரம் வரை நிற்கும்.




இந்தியாவிலுள்ள பொருளாதாரப் பத்திரிகை எழுத்தாளர்கள் சிலர் வாஷிங்டனிலுள்ள அமெரிக்க உதவி வர்த்தகப் பிரதிநிதியை, இங்கு இருந்தபடியே பேட்டி கண்ட புதுமை ஒன்று அண்மையில் நிகழ்ந்தது.

நிருபர் மாநாடு என்றால் பத்திரிகை எழுத்தாளர்கள் பலர் ஒருங்கே ஓரிடத்தில் கூடியிருக்க, அதிகாரி அல்லது தலைவர் அவர்களிடையே நேரில் வந்திருந்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் விடையளிப்பார். ஆனால் இப்பொழுது நிருபர்கள் தங்களிடையே நேரில் வந்து தோன்றாமல், உலகத்தில் வேறு எங்கேயோ நெடுந்தொலைவுக்கு அப்பால் இருக்கும் ஒருவரைப் பேட்டி காணும் புதுமையான 'தொலைவு நிருபர் மாநாடு'' நிகழக் கூடிய வாய்ப்பு வந்திருக்கின்றது!

அமெரிக்கா முதலிய மேலை நாடுகளில் இது பெரிதும் பழக்கமாகிவிட்டது. இத்தகைய ஒரு தொலைவு நிருபர் மாநாடு இப்பொழுதான் இந்தியாவில் முதல் தடவையாக நிகழ்ந்தது.

வரலாற்றுச் சிறப்பான இந்த ஒரு மணி நேர தொலைவு நிருபர் மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள், புது டில்லியிலுள்ள அமெரிக்கத் தகவல் நிலையத்தார் (யு. எஸ். ஐ. எஸ்.) ஆவர். இதில் ஐந்து இந்தியப் பத்திரிக்கை எழுத்தாளர்கள் வாஷிங்டனில் இருக்கும் டோரல் கூப்பர் என்னும் அமெரிக்க உதவி வர்த்தகப் பிரதிநிதியைப்பேட்டி கண்டனர். நவம்பர் 24 முதல் 26 வரை ஜெனிவாவில் நடந்த ''காட்'' (சுங்கவரி, வணிகம் பற்றிய பொது உடன்பாடு) அமைச்சர்கள் மாநாட்டை ஒட்டி அவர்கள் அந்த அம்மையாரிடம் பல்வேறு பொருளாதார, வணிக விவகாரங்கள் குறித்துக் கேள்வி கேட்டனர். உலக வாணிக நிலைமை மேற்படி ''காட்'' மாநாட்டினால் ஏற்படக்கூடிய பலன்கள், வடக்கு, தெற்கு வணிக விவகாரங்கள், உயர்தரத் தொழில்நுட்பங்கள், ஏழை நாடுகளுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு, பணிகள், வணிகம், இந்தியாவில் அமெரிக்கத் தனியார் முதலீட்டுக்கான வாய்ப்பு, இந்திய யு. எஸ். வணிக உறவுகளில் எதிர்காலம் முதலியன அடிபட்டன.

பேட்டி கண்டவர்களுக்கும், பேட்டி அளித்தவருக்கும் இடையே 16,000 கிலோ மீட்டர் தொலைவு இருந்தாலும், ஒருவர் மற்றொருவருடைய பேச்சைத் தெளிவாகக் கேட்க முடிந்தது! எப்படி எனில், டில்லியிலுள்ள வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா நிலையத்திலிருந்து தொலைபேசிக் கம்பிகள் டில்லியில் இருக்கும் அயல் நாட்டுத் தகவல் தொடர்பு நிலையத்தோடும் (ஓ. ஸி. எஸ்.) அங்கிருந்து டேராடூனில் உள்ள தரை நிலையத்தோடும் இணைக்கப்பட்டன; தரை நிலையம் பூமிக்கு 36,000 கிலோ மீட்டர் மேலே விண்வெளியில் நிலை கொண்டுள்ள இந்தியப் பெருங்கடல் விண்வெளி கலத்தினோடு வானொலி அலைகள் மூலம் இணைக்கப்பட்டது. இந்த விண்வெளிக் கலம் ஐரோப்பாவிலுள்ள ஒரு தரை நிலையத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வாறு டில்லியிலிருந்து வானொலி அலைகளாகக் கிடைக்கும் தகவல்கள் இந்த ஐரோப்பியத் தரை நிலையத்திலிருந்து அப்படியே அட்லாண்டிக் பெருங் கடலுக்கு மேல், நிலை கொண்டுள்ள ஒரு விண்வெளிக் கலத்துக்கு அஞ்சல் செய்யப்பட்டன. அந்த விண்வெளிக் கலம், தான் பெற்ற தகவல்களை அப்படியே நியூயார்க் நகருக்கு அருகேயுள்ள தரை நிலையத்துக்கு அனுப்பி வைத்தது. இத்தரை நிலையம் வாஷிங்டனிலுள்ள வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா நிலையத்துக்கும் அங்கிருந்த கூப்பரின் அலுவலகத்திற்கும் தந்திக் கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டது!

அமெரிக்க அதிகாரி கூப்பரை இவ்வாறு இந்தியாவில் இருந்தவாறே பேட்டி கண்டவர்கள்; சுவாமிநாதன் (இந்தியன் எக்ஸ்பிரஸ்), ஜெய் துபாஷி (இந்தியா டுடே), ஏ. என், பிரபு (எக்கனாமிக் டைம்ஸ்), எம். எஸ். சேதுராமன் (பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா) விஸ்வநாத் (யுனைட்டெட் நியூஸ் ஆஃப் இந்தியா).

இந்தத் தொலைவு நிருபர் மாநாடு குறை ஏதும் இன்றி முழு வெற்றியாக அமைந்தது. எனவே, இனி இதுபோல் இந்தியப் பத்திரிகையாளர்கள் இங்கு இருந்தபடியே அமெரிக்க உயர் அதிகாரிகளைப் பேட்டி கண்டு இந்திய-அமெரிக்க உரையாடல்களைத் தொடர்ந்து நடத்தலாம் என்று யு. எஸ். ஐ. எஸ். மேலும் பல தொலைவு நிருபர் மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்ய ஊக்கம் கொண்டுள்ளது.

**எழுதுங்கள்!**

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் / மாணவி பற்றிய குறிப்பும், புகைப் படத்துடன்-ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

# "திருமணம் என்பது பொம்மைக் கல்யாணம் அல்ல"

## "திருமணம் என்ற பெயரில் விவரம் அறியா சிறுவன், சிறுமியை இணைக்கும் திருமணம் — கடவுளுக்கும், மனிதனுக்கும், எதிரான ஒரு குற்றமாகும்".

*— அண்ணல் காந்தியடிகள்*

சின்னஞ் சிறுவயதில் இளையோரை இணைத்து வைக்கும் திருமணத்தை ஒழிக்க காந்தியடிகள் முதலாக அறிஞர்கள் பலர் போராடினார்கள்.

உடலும், உள்ளமும் வளர்ச்சி பெறாத சின்னஞ்சிறு வயதில் திருமணம் செய்துவைக்கும் கொடிய பழக்கம்தான் "இளையோர் திருமணம்" கணவனை நம்பியே வாழும் நிலைக்கு இச்சின்னஞ் சிறுமியர் தொடக்கத்திலேயே ஆளாக்கப்படுகிறார்கள். இளம் வயதில் குழந்தை பெறுவது உடலுக்கும், உயிருக்கும் இடையூறானதாகும். இளம் வயதில் கைப்பிடித்த சிறுவன் இறக்க நேரிட்டால் வாழ்நாள் முழுவதும் விதவையாகவே அச்சிறுமி வாழ வேண்டும். அல்லது "சதி" என்னும் உடன் கட்டை ஏறும் கொடிய வழக்கத்திற்கு அவள் இறையாக வேண்டிய கட்டாயமும் அந்நாளில் இருந்தது.

இக் கொடிய வழக்கத்தை ஒழித்து மகளிர்க்குச் சமுதாயத்தில் உரிய இடத்தினை வழங்கிட "சதி ஒழிப்பு" என்னும் சீர்திருத்த இயக்கத்தினை இராஜாராம் மோகன் ராய் முன்னின்று நடத்தினார். "சதி" முறை 1829ல் ஒழிக்கப்பட்டபின்னர் விதவை மறுமணம் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திருமண வயதை உயர்த்திச் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

உரிமைகள் பல பெற்று உயர்வடையும் நிலையில் இன்று மகளிர் உள்ளனர்.



இந்து விவாக சட்டம், கிறிஸ்துவர் விவாக சட்டம், மற்றும் குழந்தைத் திருமணத் தடுப்பு திருத்தச் சட்டம் திருமணம் செய்து கொள்ளும் வயதை ஆடவர்க்கு 21 ஆகவும் மகளிர்க்கு 18 ஆகவும் உயர்த்தி உள்ளன. இச்சட்டங்களை மீறுவோருக்கு அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். இளையோர் திருமணத்திற்கு இன்று சமுதாயத்தில் இடமே இல்லை.

இன்றைய சமுதாயத்தில் மகளிர்க்கு உயர்ந்த கல்வியும் வேலை வாய்ப்பு வசதிகளும் அளிக்கப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டு முடிவதற்கு முன்னால் நம் நாட்டு மக்களின் எண்ணிக்கை நூறு கோடியை எட்டும் எனக் கருதப்படுகிறது. எனவே மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது அவசரமும், அவசியமும் ஆகும். தமிழ்நாட்டில் கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் 17.23 சதவீதமே உயர்ந்துள்ளது. இந்நிலையில் குடும்ப நலத்திட்டம் மக்கள்இயக்கமாகவே தமிழ்நாட்டில் செயற்பட்டு வருகிறது.

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உதவி புரியும் மற்றொரு திட்டம் சிறுவயது திருமணத்தைத் தடுப்பது ஆகும். மக்கள் பெருக்கத்தின் நெருக்கடி நம்மை வாட்டும் நிலையில் இளம் வயதுத் திருமணம் என்னும் கொடுமைக்கு இடமே இல்லை. இத்தகைய காரணங்களால்தான் குடும்ப நலத்திட்டம் நமது தேசியத் திட்டங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. இன்று அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய நெறி இதுவே

**இளம் வயது திருமணம் சட்டத்திற்கு எதிரானது.**
**ஆடவர்க்கு குறைந்த வயது 21. மகளிர்க்கு 18.**

m88 (S) DIPR 82709/82-1
மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

# தேசிய விருது பெற்ற கல்வி அலுவலர்

"பள்ளிகள்-கல்லூரிகள் எல்லாம் ஏட்டுக் கல்வியைக் கற்றுத் தந்து, பட்டதாரிகளைத் தயாரிக்கும் உற்பத்திக் கூடங்களாகத் திகழ்கின்றன. அங்கே தொழிற் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான், படிப்பை முடித்து வெளிவரும் மாணவர்கள், குமாஸ்தா வேலையை நாடிச் சென்று, அதுகிடைக்காமல் தவிக்கின்ற நிலைமை மாறும். அவர்கள் தொழிற்கூடங்களை உருவாக்கி, சொந்தக் காலில் நிற்பதற்குத் தொழிற் கல்வி உதவி செய்யும்" என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொழிற்கல்வியின் அருமையையும் பெருமையையும் நாடு நன்கு உணர்ந்து வரவேற்கத் தொடங்கிவிட்டது. இந்த உண்மைக்குச் சான்றாக விளங்குகிறது, புது டில்லியில் உள்ள தேசிய கல்வித் திட்டம் மற்றும் நிருவாக நிறுவனத்தினர், சென்னை செங்கற்பட்டு மாவட்ட மகளிர் கல்வி அலுவலர் திருமதி டி. இராசம்மாள் அவர்களுக்கு தேசிய விருது அளித்த நிகழ்ச்சி.

கல்வி நடைமுறைகளில் புதிய கருத்துக்களை ஆராய்ச்சி செய்வதற்காக மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு நாடு தழுவிய போட்டி ஒன்றினை மேற்படி நிறுவனம் உருவாக்கியது. மாநிலக் கல்வித் துறையின் மூலம் இப்போட்டி நடத்தப் பெற்றது.

மொத்தம் 10 தலைப்புகள் கொடுக்கப்பட்டு, அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, கட்டுரை எழுதி, டிசம்பர் (1982) மாத இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்று சுற்றறிக்கை தெரிவித்தது.

'மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் முறைக் கல்வி' என்னும் தலைப்பு திருமதி இராசம்மாள் அவர்களைக் கவர்ந்தது. இந்தத் தலைப்பின் கீழ் நிறையச் செய்திகளைத் தெரிவிக்கலாம் என்ற நம்பிக்கை எழுந்தது. உடனே ஒப்புதல் தெரிவித்துவிட்டு தான் எடுத்துக் கொண்ட பொருளுக்குரிய தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார்.

தலைமை ஆசிரியர்கள் உட்பட பல்வேறு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என மூவகையினருக்கு மூன்று வகையான வினாப் பட்டியல் தொடுத்து அனுப்பிப் பதில் பெற்று, திறனாய்வுக் கட்டுரையை "தொழில் நுட்பக் கல்வி புயிற்றுவிக்கும் மேல்நிலைப்பள்ளி, கிராம வளர்ச்சிக்கு ஒரு சமூக ஊழியன்" என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் எழுதி முடித்து, தட்டச்சுப் படிகள் 3 தயாரித்து, டில்லிக்கு அனுப்பி வைத்தார்.

**தமிழ்ப்பித்தன்**

இந்தியா முழுதும் மொத்தம் 21 கட்டுரைகள் அனுப்பப்பட்டன. அவை அனைத்திலும் இராசம்மாள் அவர்கள் எழுதிய திறனாய்வுக் கட்டுரையே விருதுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது. ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் சான்றிதழும் கொண்டது இந்த விருது.

பள்ளிகளில் ஆசிரியையாகவும், தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றி, தற்போது மாவட்ட கல்வி அலுவலராகவும பணியாற்றுவரும் இவர், 1981-ஆம் ஆண்டில், கருநாடக மாநிலப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். இவர் எடுத்துக்கொண்ட பொருள் 'தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு' என்பதாகும்

"இந்த விருது எழுத்துத்துறையிலும் ஆய்வுத் துறையிலும் எனக்கு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அளித்திருக்கிறது இனி மேல் இதுபோன்ற பணிகள் எத்தனை வந்தாலும் ஏற்று, நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன்" என்று ஆணித்தரமாகச் சொல்லும் இவரது பேச்சில் குமரி மாவட்ட மண்ணின் மணம் காணப்படுகிறது. ஆம். இவரது சொந்த ஊர் நாகர்கோயிலாகும்.

இவரது திறனாய்வுக் கட்டுரையில் தொழில்நுட்பக் கல்வியின் மேன்மைக்கு அரிய யோசனைகள் பலவற்றை வழங்கியிருக்கிறார்.

"மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் விரும்பிக் கேட்கும் பாடப் பிரிவு கிடைக்காததால்— இறுதியாக தொழில் கல்வி வகுப்பாவது கிடைத்தால் போதும் என்று எண்ணி, இடம் பிடிக்கின்றனர். அதனால் இயற்கையிலேயே அந்தப் பிரிவில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்படாமல், வேறு வழியில்லையே என்றுதான் சேருகின்றனர். உண்மையான ஆர்வம் மாணவர்களிடையே ஏற்பட்டால் இந்தத் தொழிற் கல்விப் பிரிவு பெருமை பெறும்.

"பள்ளிகளில் முதியவர்களுக்கு படிப்புச் சொல்லித் தரப்படுவது போல-தொழிற் கல்வியும் கற்றுத் தரப்படல் வேண்டும்.

"ஐ. டி. ஐ. போன்ற தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் கற்று வெளிவரும் மாணவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்துவதற்குக் கடன் உதவி கிடைக்கிறது. ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பிரிவில் படித்து வெளிவரும் மாணவர்களுக்கு இந்த அனுகூலம் இல்லை. இவர்களுக்கும் கடன் உதவி கிடைத்தால் இந்தத் தொழில் முறைக் கல்வியைப் பலரும் ஆர்வத்துடன் நாடி வருவர்"

இதுபோன்ற பல கருத்துமணிகளை இந்தத் திறனாய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ள இராசம்மாள் அவர்கள் 28-1-83-ல் டில்லியில் இந்த விருதைப் பெற்றார்.

**தேசிய கல்வித் திட்டம் மற்றும் நிருவாக நிறுவனத்தின் அமைப்பாளர் கனடா நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் திரு பெஞ்சமின் ஹிக்கின்ல் அவர்களிடமிருந்து விருது பெறுகிறார் திருமதி இராசம்மாள்.**





# கீழைக்கடம்பூரில் ஒரு கலைக்கோயில்

சிதம்பரத்துக்குப் பக்கத்திலுள்ள காட்டுமன்னார் கோயிலிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது மேலைக் கடம்பூர். இதற்குக் கிழக்கில் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவிலுள்ள கீழைக்கடம்பூரில் பழமையான சிவன் கோயிலொன்று உள்ளது. அழகான கட்டட வேலைப்பாடும் சிற்ப வடிவங்களையும் கொண்டுள்ள இக்கோயில் ஒரு கலைக்கோயிலாய்த் திகழ்கின்றது. இடிந்து பாழ்பட்டு, கவனிப்பாரற்ற நிலையில் கிடக்கும் இக்கோயிலின் கருவறையும் முன் மண்டபத்தின் ஒரு பகுதியுமே இப்போது எஞ்சியுள்ளன. துணைத்தளமும், தாங்குதளமும் மிக அழகாகச் செதுக்கப்பட்டு, எழிலார்ந்த தூண்களும், தெய்வப்புரைகளும் கொண்டு, அழகான யாளி வரிமானத்தோடு திகழ்கிறது கோயிலின் கருவறைப் புறச்சுவர்.

கருவறையின் மூன்று புறச் சுவர்களிலும் தெய்வப்புரைகள் உள்ளன. புரைகளின் கீழே, அங்கு வைக்கப்பட்டிருந்த சிலைகளின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அழிந்தன போக இன்று படிக்கத்தக்கனவாய் உள்ளன சில. அவை 1) ஆனை உரித்த தேவர், 2) லிங்க புராணத் தேவர், 3) சந்திர சேகர தேவர், 4) சந்தியா நிருத்த தேவர், 5) காலகாலதேவர், 6) அர்த்தநாரீச தேவர், 7) ஆனையாண்ட தேவர் 8) அறுவர் அமுதையாண்டார் (முருகன்), 9) உலகாண்ட மூர்த்தி, 10) முருகாண்டார், 11) திருக்குறிப்புத் தொண்டர் 12) தண்டிப் பெருமான் என்பன. இப்புரைகளிலுள்ள சிற்பவடிவங்கள் பலவற்றை இப்போது காணக் கூடவில்லை. இச் சிற்ப வடிவங்களைச் சிலர் திருடிக் கொண்டு போய்விட்டதாகவும், திருட்டுப் போனவற்றில் சிலவற்றை மீட்டு அம்மன் கோயிலில் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும் இவ்வூர் வாழ் மக்கள் தெரிவித்ததோடு திருடர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட திருமாலின் சிற்பத்தையும், சந்தியா நிருத்த தேவர் வடிவத்தையும் காண்பித்தனர்.

கோயிலைச் சுற்றிலும், கோயிலின் உள்ளும் செடி கொடிகள் காடாக மண்டியுள்ளன. கருவறையின் மேற்கூறை இடிந்து சின்னாபின்னமாயுள்ளது. இலிங்கத் திருமேனி உடைந்து கீழே விழுந்துள்ளது. கோயிலின் சுற்றுப்புறம் கழிவுக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இக்கோயிலிருந்து இடிந்து விழுந்த தூண்கள் அருகாமையிலுள்ள வீடுகளுக்கு

டாக்டர்
இரா. கலைக்கோவன்


கோயில் தூண் ஒன்றும் யாளி முகமும் குட்டையில் அடைப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் நிலை




இடிந்து கிடக்கும் முன் மண்டபம்

வாயிற்படிகளாகவும், ஊரிலுள்ள குட்டையொன்றின் கரைக்கு அடைப்பாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அழகான யாளித் தலையொன்று கரைக்கு அடைப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கொடுமையை படத்தில் காணலாம். தெய்வப்புரைகளின் எஞ்சி நிற்கும் சிற்பங்கள் கண்ணைக் கவரும் வடிவில் சிற்ப நுணுக்கங்களுடன் எழில் கொஞ்ச நிற்கின்றன. பிச்சையுகக்கும் பெம்மான், இலிங்கோத்பவர், அம்மையப்பர் சிற்பங்கள் காணக் காண மகிழ்விக்கும் எழில் படைத்தவையாகும்,

இவற்றின் கீழ் வெட்டப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்கள் முதலாம் இராசராசன் காலத்தவையாக இருத்தல் கூடும் என்று கல்வெட்டு அறிஞர்கள் கருதுகிறார்கள். இக்கோயிலை அப்பர் அடிகள் தன்னுடைய ஆறாம் திருமுறையில், திருத்தலக் கோவையில்,

''கடம்பை இளங்கோயில்
தன்னின் உள்ளும்
கயிலாய நாதனையே
காணலாமே'',

என்று பாடிப்பரவுகிறார். இக்கோயிலை வைப்புத்தலம் என்று தவறாக அழைத்து வருகிறார்கள். கோயில்களைப் புதுப்பிக்கும்போது அங்குள்ள தெய்வத் திருமேனிகளைத் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிறு கட்டடத்தில் வைத்திருப்பார்கள். இந்த தற்காலிகமான ஆலயத்திற்குத் தான் 'வைப்புத்தலம்' அல்லது 'பாலாலயம்' என்பது பெயர். அப்பர் அடிகள் இளங்கோயில் என்று கூறுவது பாலாலயம் என்ற பொருளில் அல்ல. கோயில் கட்டட அமைப்பு முறைகளில் ஒன்றைத்தான் இளங்கோயில் என்று கூறுகிறார். (மயிலை சீனி.வேங்கடசாமி). இதுபோல் அமைக்கப்பட்டுள்ள வேறு இளங்கோயில்களைப் பற்றித் தேவாரப் பதிகங்களிலும், கல்வெட்டுக்களிலும் கிடைக்கும் சான்றுகளே இக்கருத்தினை வலியுறுத்தப் போதுமானவையாகும்.

இக்கடம்பூர் இளங்கோயில் அப்பர் அடிகள் காலத்தில் மண்தளியாக இருந்திருக்க வேண்டும். இங்குள்ள தெய்வப்புரைகளில் காணப்படும் கல்வெட்டெழுத்துக்களின் எழுத்தமைதி முதலாம் இராசராசன் காலத்து எழுத்தமைதியை ஒத்திருப்பதாலும், முதலாம் இராசராசனின் தஞ்சைக் கல்வெட்டொன்றில் இக்கோயில் குறிக்கப் பெறுவதாலும், இதைக் கற்றளியாக்கி மகிழ்ந்தவன் முதலாம் இராசராசனே என்று துணியலாம்.

ஏறத்தாழ ஆயிரத்தைந் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வழகிய கோயிலைத் தமிழக அரசின் தொல்பொருள் துறையினர் ஏற்றிருக்கிறது. இக்கோயிலில் இருந்ததாகக் கருதப்படும் இலிங்கத் திருமேனிகளுள் சில இங்குள்ள கால்வாய்க் கரையிலும், சாக்கடைக்கு அருகிலும் வயல்களிலும் கிடப்பது வருத்தத்திற்குரியது. கோயிலையொட்டியுள்ள வயலில் ஒருவர் பயிரிடுவதற்காகத் தோண்டியபோது, அழகிய கருங்கல் சிற்பமொன்று கிடைத்ததாகக் குறிப்பிடுகிறார். இப்போது அந்தச் சிற்பம் அவரது வயலிலேயே நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கலைப்பேழைகளான இத்தகு வரலாற்றுப் புகழ் பெற்ற அருங்கோயில்கள் அழிந்து கொண்டிருக்கும் நிலை துன்பமானது! நம்மால் இனி இதுபோல் கோயில்களைக் கட்ட முடியாது; இருப்பனவற்றையாவது பேணிக்காக்க முயற்சிகள் எடுக்கலாமல்லவா!


பழுதடைந்த நிலையில் உள்ள கஜசம்ஹார மூர்த்தி



# இந்தியாவில் சிறந்த மிருகக் காட்சிசாலை



இந்தியாவிலேயே மிகச் சிறந்த மிருகக் காட்சிசாலையாக அமைய உள்ளது வண்டலூர் மிருகக் காட்சி சாலை. சென்னையிலிருந்து 32. கி.மீ. தொலைவில் உள்ள இதன் பரப்பு 1,265 ஏக்கராகும். ஏறத்தாழ 200 தினக் கூலிகள் இங்கு பணியாற்றுகின்றனர்.

3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மிருகக் காட்சி சாலை நிறுவப்பட்டு வருகிறது. இது ஒரு திறந்தவெளி மிருகக் காட்சி சாலையாகும். இதன் வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. பணிகள் எவ்வாறு நடந்து வருகிறது என்பதை நேரில் காண மாண்புமிகுசெய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 28-2-83-ல் வண்டலூர் உயிரியல் பூங்காவைப் பார்வையிட்டார்.

உயிரியல் பூங்காவில் தற்காலிக பணியாளராகப் பணியாற்றிய திரு. து. ஜீவநாதன் நீர்யானைக்கு உணவு வழங்கும்போது, நீர்யானையால் தாக்கப்பட்டுமரணம் அடைந்தார். அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000த்தை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஜீவநாதன் தாயாரிடம் வழங்கிஉரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''சென்ற அக்டோபர் 2-ஆம் நாள் நீர்யானைக்கு உணவு வழங்கும் நேரத்தில் அதன் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் உயிரை இழக்க[illegible] துயர நிகழ்ச்சி நடந்தது நமக்கு வருத்தத்தை அளிக்கிறது. இதனை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கலாம் என்று சொன்னார்கள்.

''இரக்க குணமும் அன்புள்ளமும் கொண்ட முதல்வர் அவர்களுக்கு இந்தக் குடும்பத்தோடு சேர்ந்து நானும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.''

**அ. ம. விநாயகம்**

''நடப்பட்ட ஒரு இலட்சம் மரங்களின் வளர்ச்சியில் இயற்கை ஏமாற்றியதால் சிறிது தேக்கம் ஏற்பட்டுள்ளது. இங்கேயே நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்தும் கடுமையான முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

''இந்தியாவிலேயே மிகச் சிறந்த உயிரியல் பூங்காவாக இது அமையும். இந்தியாவில் வேறு எங்கும் இத்தகைய பூங்கா அமைக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கு நேரில் வந்து பார்வையிட்ட பிறகு, அருகில் உள்ள குன்றுகளையும் சேர்த்து விரிவுபடுத்த ஆலோசனை சொல்லி, அனுமதியும் அளித்துள்ளார்கள். ஜப்பான் நாட்டைப் போல் கம்பியில் செல்லும் ஆகாயரெயில் பெட்டிகளையும் இங்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று யோசனை கூறினார்கள்.

''இங்குவாழும் விலங்குகளுக்கு தேவையான உணவுப் பொருட்களை பயிர்செய்ய 120ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட உள்ளது. வெளிநாட்டுக்காரர்களையும் கவரும் வகையில் இந்த உயிரியல் பூங்கா அமைக்கப்படுவதால் இந்தப் பகுதி அனைவரது கவனத்தையும் ஈர்க்கும்; பலருக்கு வேலைவாய்ப்பு உருவாகும். சுற்றுலாப் பயணிகள் வந்து போவதால் வியாபார ரீதியிலும் அபிவிருத்தி அடையும். எனவே, இந்த உயிரியல் பூங்கா சிறந்து விளங்க இந்தப் பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விழாவிற்கு, தமிழக வனத் துறைத் தலைவர் திரு. சி. அச்சைய்யா தலைமை தாங்கினார். கூடுதல் வனத்துறைத் தலைவர் திரு. ஜான்ஜோசப், வண்டலூர் திறந்தவெளி மிருகக் காட்சி சாலை இயக்குநர் திரு. சுப்பாநாயுடு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பத்திரிகை நிருபர்களும், வனத் துறை அலுவலர்களும் வருவாய்த் துறை அலுவலர்களும், உயிரியல் பூங்காவைச் சுற்றிப் பார்த்தனர்.





# வண்டலூர் உயிரியல் பூங்கா

1855-ல் முதன் முதலாக நமது நாட்டில் மிருகக் காட்சி சாலை அமைத்த பெருமை சென்னையைச்சாரும். இப்பொழுது வண்டலூரில் முற்றிலும் புதுமையான உயிரியல் பூங்கா ஒன்று 510 ஹெக்டேர் பரப்பளவில் உருவாகி வருகிறது. இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்தில், புகை வண்டி மூலமும், சாலை மூலமும் அணுகும் வகையில் அமைந்துள்ளது.

**சென்னையில் ஒரு நவீன உயிரியல் பூங்கா அமைய வேண்டியதன் அவசியம்**

தென்னிந்தியாவின் நுழைவாயிலாக அமைந்த தமிழகத் தலைநகராம் சென்னையில் உள்நாட்டு அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திழுக்கும் தொன்மையான பல இடங்கள் அமைந்துள்ளன. அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதியில் உள்ள விலங்கினங்களைக் காண மிக்க ஆவலுடன் வருகின்றனர். தற்போது சென்னை நகரத்தில் மத்திய இரயில்வே நிலையத்தின் அருகில் அமைந்துள்ள மிருகக் காட்சி சாலையினை இட நெருக்கடி காரணமாக, நவீன முறையில் விரிவாக்க முடியவில்லை. தமிழக அரசு நீண்ட ஆலோசனைகளுக்குப் பிறகு சென்னைக்கு அருகில் உள்ள வண்டலூரில் ஒரு நவீன உயிரியல் பூங்காவினை அமைக்க முடிவு செய்துள்ளது.

**உயிரியல் பூங்காவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தின் விவரங்கள்**

வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்று வண்டலூரில் உயிரியல் பூங்கா அமைக்க இடத்தைத் தேர்வு செய்தது. உயிரியல் பூங்கா அமைக்க ரூ. 3 கோடி மதிப்பீட்டில் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான அமைப்புக்கு 1980-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. உயிரியல் பூங்கா அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம், மேற்கில் சென்னை-திருச்சி நெடுஞ்சாலைக்கும் தெற்கில் வண்டலூர் - கேளம்பாக்கம் சாலைக்கிடையிலும் அமைந்த ஒரு காப்புக் காடு ஆகும்.

இங்குள்ள விலங்குகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பயிர் செய்ய 120 ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்பட்டு, அது விரிவுபடுத்தப்பட உள்ளது.

உயிரியல் பூங்காவினைப் பராமரிக்கவும், சுத்தமாக வைத்துக் கொள்ளவும், நிரந்தரமாகத் தண்ணீர் வசதி முக்கியம்.

தற்சமயம் 4குழாய்க்கிணறுகள் மூலமாக ஒரு நாளைக்கு 24,000 காலன் தண்ணீர் பெறப்படுகின்றது. விலங்குகள் இயற்கையோடு ஒன்றியிருக்குமாறு அகழியுடன் கூடிய இருப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அகழிகள், நீருடனோ, நீரில்லாமலோ அமையும். எனவே, பார்வையாளர்கள் விலங்குகளை அவற்றின் இயற்கையான சூழ்நிலையில், அவற்றிற்கு எவ்விதப் பாதிப்பும் இல்லாமல் பார்க்க ஏதுவாகும். மலைச் சரிவில் சிங்கம், புலி, அவைகளுக்கு இரையாகும் மான்கள் முதலானவை மேலும் கீழுமாக, ஒரு குறுக்கு அகழியினால் பிரிக்கப்பட்டு, ஒரே நிலையில் இருக்குமாறு அமைக்கப்பட்டுவருவது ஒருசிறப்புஅம்சமாகும். வரிக்குதிரை, நீர், யானை, தற்காலிக இருப்பிடம், மான், குரங்கு முதலிய இருப்பிடங்களும் பறவைகளுக்கு நான்கு கூண்டுகளும் கட்டப்பட்டுள்ளன. தற்போது நீர் யானை, வரிக்குதிரை யானை, கடமான், புள்ளிமான், ஹாக்மான், வெளிமான், தேவாங்கு, நீலகிரிக் கருங்குரங்கு, கருங்குரங்கு, ரீசஸ் குரங்கு, மலை அணில். குள்ள நரி முதலிய விலங்குகள் உள்ளன. பறவை இனத்தில் பஞ்சவர்ணக்கிளி, அலெக்ஸாண்ட்ரியன் கிளி, வர்ணக் கிளிகள், பச்சைக்கிளி, வாத்துகள், புறாக்கள், பனங்காடை, புல்புல், கல்பொறுக்கி. மைனாக்கள். கானாங்கோழி, கௌதாரி, மீன்கொத்தி முதலியவைபெறப்பட்டுள்ளன. குரங்கு, காட்டெருமை, யானை, காண்டா மிருகம், கரடி, சிங்கம், முதலியவற்றிற்குக் கூண்டுகள் தயாராகி வருகின்றன.

உயிரியல் பூங்கா 3.4 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு முக்கியச் சுற்றுச் சாலையும், இரண்டு இணை சாலைகளும் கொண்டது. இவை தவிர மற்றும் பல நடைபாதைகள், சிறு சாலைகள் இங்குள்ள கூண்டுகளுக்கு செல்ல அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பூங்காவில் மீன் காட்சிக் கூடம், இயற்கை வரலாற்றுக் கூடம் மற்றும் பழங்கால விலங்குகளின் மாதிரிகள் முதலானவையும் இடம் பெறும்.

இந்த உயிரியல் பூங்கா ஒப்பற்ற பூங்காவாகத் திகழப் போவது உறுதி.



# பி.சி.ராய் விருது!

மேற்கு வங்காள முதல்வராக இருந்த டாக்டர் பி. சி. ராய் புகழ்பெற்ற மருத்துவ நிபுணர். அவர் நினைவாக, மருத்துவத்துறையில் சிறப்பாகப் பணிபுரியும் டாக்டர்களின் சேவையைப் பாராட்டி, ஆண்டுதோறும் பி.சி. ராய் விருது வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டு இந்தியா முழுவதும் 15 டாக்டர்கள் விருதுகளைப் பெற்றுள்ளனர். அவர்களில் மூவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

விருதுபெறும் ஒவ்வொரு டாக்டருக்கும் ஐயாயிரம் ரூபாய் ரொக்கமும், பதக்கமும் வழங்கப்படுகின்றன. பரிசுபெற்ற மூன்று தமிழக மருத்துவ மேதைகள் பற்றிய விவரம் வருமாறு:


எம். விசுவநாதன்

டாக்டர் எம். விசுவநாதன், சென்னை ராயபுரத்திலுள்ள "எம்.வி. நீரிழிவு நோய் மருத்துவமனை-மற்றும் நீரிழிவு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின்" நிறுவன இயக்குநராக இருக்கிறார். நீரிழிவு நோய் பற்றி 35 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்துள்ளார். உலக அளவில் தனியார் மருத்துவமனை ஒன்று நீரிழிவு நோய் பற்றிய ஆராய்ச்சிக்கு அங்கீகரிக்கப்பட்டிருப்பது இது ஒன்றுதான்.


என். சங்கபாஷ்யம்

டாக்டர் என். சங்கபாஷ்யம், சென்னை பொது மருத்துவ மனையில் இரைப்பை-குடல்-மலக்குடல் அறுவைச் சிகிச்சைத்துறை தலைமை மருத்துவராகவும் சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவைச் சிகிச்சைப் பேராசிரியராகவும் உள்ளார்.

குடல் நோய் சிகிச்சைக்கு இந்திய டாக்டர்கள் சங்கத் தலைவராகவும், இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கச் செயலாளராகவும் உள்ளார். பெப்டிக் அல்சர் மற்றும் பெருங்குடல் அறுவைச் சிகிச்சை உள்பட, குடல் நோய் சம்பந்தமாகப் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து விருதுகள் பல பெற்றிருக்கிறார்

•


ஜே.ஜி. கண்ணப்பன்

பல் மருத்துவ நிபுணர் டாக்டர் ஜேனனிகுளம கங்காதரன் கண்ணப்பன். தமிழ்நாடு மருத்துவத் துறையில் பல் மருத்துவத் துறைத் தலைமை மருத்துவராக இருக்கிறார். இந்தியப் பல் வைத்திய சங்கத் தலைவராகவும் உள்ளார். 27 ஆண்டுகளாகத் தமிழக அரசில் பணியாற்றி வருகின்றார். சிறந்த எழுத்தாளர். தமிழில் பல நூல்கள் எழுதியுள்ளார். பல் பாதுகாப்புப் பற்றி 3 நூல்கள் எழுதியுள்ளார். 1975-ல் தமிழக அரசு இவரது 'வாயப் பல் மருத்துவம்' என்ற நூலுக்குப் பரிசு வழங்கியுள்ளது.

(13 ம பக்கத் தொடர்ச்சி)

பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடிய போது, புகழ் வாய்ந்த பாடகர்-இசைவல்லுநர் ஒருவர், பாரதியாரின் பாடல்களை இசை ஞானத்துடன் எடுத்துப் பாடின பாட்டுகள் இசைத் தட்டுகளில் வடிக்கப்பட்டன. இத்தகைய இசைத்தட்டு காஸெட்டுகள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்கள் பலவற்றுக்கும் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலையினைப் பாதுகாத்துப் பேணி வரவும், அதன் வளத்தையும் சிறப்பையும் அனைவரும் அறியச் செய்யவும், சென்னையில் நாட்டுப்புறக் கலை விழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கோயில்களில் காணும் புகழ் வாய்ந்த சிற்பங்களையும் சிலைகளையும் நிழற்படமெடுத்த பல்வண்ண வெளியீடு, அடுத்த நிதியாண்டில் வெளியிடப்படும்.

**60.** மேற்சொன்ன திட்டங்கள் அல்லாமல், தமிழ் மரபினை விளக்கிக் காட்டும் அரும்பொருள்காட்சியகம் ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய அரிய கலைப் பொருள்கள், நாணயங்கள், பாத்திரங்கள் முதலியவை சேகரிக்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்படும். சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள மலர்களும் செடிகளும் மூலிகைப் பண்ணையில் வளர்க்கப்படும். இம் மூலிகைப் பண்ணை அடுத்த நிதி ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. பண்டைய தமிழ் மன்னர்கள், புலவர்களுக்கும், இசை வல்லுநர்களுக்கும், ஓவியர்களுக்கும், ஏனைய கலைஞர்களுக்கும் அளித்து வந்த ஆதரவை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவற்றைப் பற்றிய திரைப்படங்கள் தயாரிக்கப்படும்.

**61.** பல்வகைக் கலைத் துறைகளில் திறமை பெற்று, ஆனால் தொழிலில் முன்னுக்கு வரவியலாத கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்கள் தொழிலுக்கு ஆதரவளிக்கவும், அவர்கள் தயாரித்த பொருள்களைப் பொருட்காட்சிகளில் வைக்க ஏற்பாடு செய்யவும், மாவட்டக் கலை மன்றங்களை ஏற்படுத்துவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

### கல்வி

**62.** இம் மாநில அரசின் வரவு-செலவுத் திட்டச் செலவில் பெரும் பகுதி கல்வித் துறைக்குச் செலவிடப்படுகிறதென்பது மிகவும் பெருமிதம் கொள்ளத்தக்கதாகும். கடந்த சில ஆண்டுகளாகவே, இத் தலைப்பின்கீழ் செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 6—14 வயதுள்ளவர்களைப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதில் சிறந்த சாதனையை இம் மாநிலம் எய்தியுள்ளது. நடப்பு நிதியாண்டில், 2·63 இலட்சம் மாணாக்கர்கள் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். முக்கியமாக முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின் காரணமாக இச் சாதனையை அடைய முடிந்தது. மாணாக்கர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டதன் காரணமாக,

கல்... கற்பிக்க வேண்டிய ஆசிரியத் தேவைகளை ஈடு செய்ய, அடுத்த நிதியாண்டில் ஆசிரியர் பதவிகள் பலவற்றை அனுமதிப்பதென்று திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர் பதவிகள் 1,250, தமிழ்ப் பண்டிதர் பதவிகள் 150, நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 100, மேல்நிலைப்பள்ளிகளில் பி.எட். ஆசிரியர் பதவிகள் 200, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 50 ஆகியவற்றிற்கு அனுமதி அளிப்பது அடங்கும். நடுநிலைப் பள்ளிகளில் பகுதி நேர கைத்திறப் பணி பயிற்சி ஆசிரியர் பதவி 100, 1983-84-ல் முழுநேரப் பதவிகளாக்கப்படும்.



**63.** 6—14 வயதுள்ள மாணாக்கர்களுக்காக, ஏட்டறிவுத் திட்ட நிலையங்களையும், முறைசாராக் கல்வி நிலையங்களையும் தொடங்குவதுடன் மொத்தம் ரூ. 100 இலட்சம் செலவில் அடுத்த நிதியாண்டில் முதியோர் கல்வி நிலையங்களை மேலும் தொடங்குவதன் காரணமாக, முதியோர்-முறைசாராக் கல்வித் திட்டம் மேலும் ஊக்கமும் ஆக்கமும் பெறும். இந் நிலையங்களில் ஏறத்தாழ 20 சதவீதம், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்படும். இவை ஆதி திராவிடர் பயன்பெறுவதற்கென்றே நடத்தப்படும்.

**64.** நடப்பு நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில், தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட புதிய பல்கலைக் கழகங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1983-84ல் கோடைக்கானலில் மகளிர் பல்கலைக் கழகம் தொடங்க ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மகளிர் பல்கலைக்கழகம் ஏற்படுத்துவது பற்றிய வல்லுநர் குழு அறிக்கையும், இது குறித்த வரைவு மசோதாவும் அரசிடம் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

**65.** இந்திய வழக்குரைஞர் மன்றம் கருத்துத் தெரிவித்ததற்கிணங்க (மேல்நிலைப் பள்ளிப் படிப்பு தேறியதிலிருந்து ஐந்து ஆண்டுகள்) ஐந்தாண்டுச் சட்டப் படிப்பு 1983-84ல் தொடங்கப்படும்.

**66.** இம் மாநிலத்தில் 1979-80லிருந்து 1982-83 வரையில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஏறத்தாழ 29 தொடங்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டி நுணுக்கங்கள்-செப்பனிடுதல் பற்றிய பாடமுறை, காகிதம் தயாரிப்பு, காகிதக் கூழ் தொழில் நுட்பவியல், செயற்கை இழைத் தொழில் நுட்பவியல், மின்னணுவியல், வண்ண ஓவியம் தீட்டுதல், வணிக ஓவியம் வரைதல் முதலியவற்றில் பட்டயப் பாடமுறைகள் அடுத்த நிதியாண்டில் பல்வேறு பல்தொழில் பயிற்சி நிலையங்களில் புதிதாகத் தொடங்கப்படும்.

**67.** அடுத்த நிதியாண்டில் கல்வித் துறைக்கு ரூ. 359·79 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.






சுகாதாரப் பணிகளும் குடும்ப நலனும்

68. கிராமப் பகுதிகளில் நல்வாழ்வு வசதிகள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. இந் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, கூடுதலாகத் தொடக்கச் சுகாதார நிலையங்களைத் தொடங்குவது, தற்போதுள்ள நிலையங்களின் தரத்தை உயர்த்துவது என்னும் கொள்கையை அரசு கடைப்பிடித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் தொடக்கத்திலிருந்து கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையங்கள் 22 தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த நிதியாண்டில் மேலும் 15 தொடக்கச் சுகாதார நிலையங்கள் தொடங்குவதென்று கருதப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்றுள்ளபடி, 385 தொடக்கச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகையில், அடுத்த நிதியாண்டு முடிவுக்குள், 422 தொடக்கச் சுகாதார நிலையங்கள் இருக்கும். வட்ட மருத்துவ மனைகளில் கிடைக்கப் பெறுகிற சிகிச்சை வசதிகளின் தரத்தினைக் கிட்டத் தட்ட எட்டுமளவுக்கு, தொடக்கச் சுகாதார நிலையங்கள் சிலவற்றில் தற்போதுள்ள வசதிகளைத் தரப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1983–84ல் 12 தொடக்கச் சுகாதார நிலையங்களில் அறுவை மருத்துவக்கூட வசதிகளுக்கு வகை செய்யவும் கருதப் பட்டுள்ளது.

69. 1983–84-ல், ரூ. 40 இலட்சம் செலவில், 50 படுக்கை கொண்ட மருத்துவமனை ஒன்று சத்தியமங்கலத்தில் கட்டப்படும், 50 படுக்கையேனும் இருக்கிற வகையில், வட்ட மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கைகளுக்கு அனுமதி அளிப்பதென்கிற கொள்கை முடிவையும் அரசு எடுத்துள்ளது. மாவட்டங்கள் அனைத்திலும், விபத்து-அவசர கால சிகிச்சைப் பணிக்கு வகை செய்யும் பெரிய திட்டம் ஒன்று சில ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பட்டது. இத் திட்டம் படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ. 85·86 இலட்சம் செலவில் இத் திட்டம் இரு மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். அடுத்த நிதியாண்டில் மேலும் இரண்டு மாவட்டங்கள் இத் திட்டத்தின்கீழ் வரும்.

70. மருத்துவக் கல்லூரிகளையும், கல்லூரி இணைந்த மருத்துவமனைகளையும் மேம்படுத்துவதற்கென உள்ள கட்டிடத் திட்டத்திற்காக, நடப்பு நிதியாண்டில் அரசு ரூ. 417.21 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. 1983–84-ல் மருத்துவ மாணவிகளுக்காக மாணவியர் இல்லங்கள் இரண்டு கட்டுவதென்று கருதப்பட்டுள்ளது. 1983–84-ல் ரூ. 60 இலட்சம் செலவில் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில், இதய நோயியல் துறைக்காக, கதீடரைசேஷன் ஆய்வுக்கூடம் ஒன்று புதிதாக அமைக்கப்படும்.



71. சித்தமுறை மருத்துவம் அரசிடம் தனி ஆதரவைத் தொடர்ந்து பெற்று வருகிறது. அடுத்த நிதியாண்டில் தொடக்க சுகாதார நிலையங்கள் 10-ல் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். சித்த மருத்துவம் சார்ந்த அரிய ஓலைச் சுவடிகளை வாங்கவும், சித்த மருத்துவ வளர்ச்சிக்குழு பாட நூல்கள் அச்சிடவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில், மொத்தம் சுமார் ரூ. 35 இலட்சம் செலவில், பட்ட மேற்படிப்புத் தொகுதி, விடுதி இல்லம், மருத்துவப் பிரிவு, சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவற்றிற்கான கட்டிடங்கள் கட்டப்படும்.

72. கடந்த நிதியாண்டில் குடும்ப நலத் திட்டத்தைச் சிறந்த முறையில் தமிழ்நாடு நிறைவேற்றியது. 1,82,200 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என்று திட்ட இலக்கு இருக்கையில், இவ்வரசு 1,88,828 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்து இலக்கினை விஞ்சியது. நடப்பாண்டில், 2,82,000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என்று இலக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்த இலக்கினை எய்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ. 9 இலட்சம் செலவில் 30 '' லேபரோஸ் கோப் '' கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. வழக்கப்படியான கருத்தடை அறுவை முறையுடன் ஒப்பிடுகையில் இக் கருவி மூலம் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சை விரைவில் நடத்தப்படுகிறது. இச் சிகிச்சை முறை இப்போது இம் மாநிலத்தில் பெரிதும் விரும்பப்படுகிறது. இது கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்வோரின் எண்ணிக்கை கூடவும் வழிகோலுகிறது. அடுத்த நிதியாண்டில் அரசு மேலும் சில ''லேபரோஸ்கோப்'' கருவிகளை வாங்கக் கருதியுள்ளது.

73. மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத் துறைக்காக அடுத்த நிதியாணடில் ரூ. 147.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக நலன்

74. ஆதி திராவிடர்கள், பின்தங்கிய வகுப்பினர் நலனைப் பேணிவரும் கொள்கையை அரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. இவர்களுக்குச் சிறந்த கல்வி வசதிகளையும் அதிக வேலைவாய்ப்பு வசதிகளையும் அளிப்பதன் வாயிலாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த பல நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1982–83ஆம் ஆண்டுக்கான சிறப்புக்கூறுகள் திட்டத்தில், 1·60 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைய ரூ. 105.85 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் 1.80 இலட்சம் குடும்பங்கள் பயனடைய இத் தொகை ரூ. 119.56 கோடியாக உயரும். ஆதி திராவிடர்கள் சமூக வகையிலும், கல்வித் தரத்திலும், பொருளாதார வகையிலும் உயருவதற்கு இத் திட்டத்தின்கீழ் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து முயற்சிகள் மேற்கொள்கின்றன.

75. ஆதி திராவிட மாணவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கு உதவியாக, அனைத்து வசதிகளும் கொண்ட மாணவரில்லக் கட்டிடங்களை அரசு கட்டி வருகிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ், தற்போது மாணவியர் இல்லங்கள் 101 கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மாணாக்கர் இல்லங்கள் 65 கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதி உதவி எதுவும் கிடைக்காது. கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர்க்கென்று வீட்டு மனைகள் வழங்குவதும், வீடுகள் கட்ட நிதி உதவி அளிப்பதும் குறித்த கொள்கை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

76. பின்தங்கிய வகுப்பினர்களும் குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பினரும் கல்வித் துறையில் முன்னேற்றமடைவதற்காக, பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை மாணவரில்லங்களை ஏற்படுத்திப் பராமரித்து வருகின்றது. முடிக்கப்பெறாத மாணவர் இல்லங்கள் 7 கட்டி முடிக்கவும், புதிய கட்டிடம் கட்டவும் நடப்பு நிதியாண்டில் ரூ. 70.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

77. இம் மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினர்களைக் கணக்கிட்டு வகைப்படுத்துவதற்காக, இம் மாநில அரசு, பின்தங்கிய வகுப்பினர் கமிஷன் ஒன்றை அமைத்துள்ளது. இக் கமிஷன் ஓராண்டுக்குள்ளாக தனது அறிக்கையை அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

78. ஆதி திராவிடர், பிற்பட்டோர் மற்றும் சமூக நலத்துறைக்கு, அடுத்த நிதியாண்டில் ரூ. 120·60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறை நிர்வாகம்

79. வறிய நிலையில் உள்ளவர்க்கு இலவசமாக வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. பயிரிடத்தக்க தரிசு நிலங்களை ஒதுக்குவதில், நிலமற்ற ஏழை மக்களில், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட உபரி நிலம், உரிய தகுதிபெற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டு வருகிறது. இந் நிதி ஆண்டில் தொடங்கப்பட்ட, நாளது வரையிலான நிலப் பதிவுத் திட்டம் 1983–84-ல் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

80. பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்காக அலுவலகம் இணைந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், அரசு, இதுவரையில் 858 குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அடுத்த நிதியாண்டில், ரூ. 66 இலட்சம் மொத்தச் செலவில், 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும். வட்ட அலுவலகங்கள் சிலவற்றுக்கும் வருவாய்க் கோட்ட அலுவலகம் ஒன்றுக்கும் அடுத்த நிதியாண்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

தொழிலாளர் நலன்

81. 1982-ல் தொழிற்சாலை உறவு நிலையில் அமைதியும் சுமுகமான சூழ்நிலையும் காணப்பட்டன. இழந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 1981-ல் 41,24,021 என்றிருந்தது ; இது 1982-ல் 18,05,976 மனித உழைப்பு நாட்களாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களின் உரிமைகளும் நலனும் கூடிய மட்டில் முற்போக்குக் கருத்துள்ள சட்டம் இயற்றுவதன் வாயிலாக உறுதியாகக் கிடைக்கப் பெறுவதில் அரசு கண்ணுங்கருத்துமாக உள்ளது. இக் கொள்கைக்கிணங்க, தொழிலாளர் நலனுக்கென்று பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்தி அவர்களின் நலனைப் பாதுகாத்து மேம்படுத்தத் தனிச் சட்டம் இயற்றுவது அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தினைச் செயல்படுத்தியதில் அடைந்த அனுபவத்தின் அடிப்படையில் மேற்சொன்ன சட்டத்தை ரத்து செய்து, தக்க மாறுதல்களுடன் மீண்டும் இயற்றுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், கம்பளி விரிப்புத் தயாரிப்புத் தொழில், கம்பளி சால்வை நெசவுத் தொழில், திரைப்பட அரங்குகள், உணவகங்கள் ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திரைப்படங்கள் தொழிலிலும் முந்திரித் தொழிலிலும் வேலை செய்வோருக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

82. தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தின்கீழ், நடைபெறும் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கும் பொருட்டு, இச் சட்டத்தில் தண்டனை பற்றிய பிரிவுகளைத் திருத்துவதற்காக மசோதா ஒன்றைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

காவல் துறையும் நீதி மன்றங்களும்

83. நடப்பு நிதி ஆண்டில் சட்ட-ஒழுங்கு நிலைமை பொதுவாக மனநிறைவை அளிப்பதாக உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் நடைபெற்ற ஒரு சில மோதல்கள் நீங்கலாக, கடுமையான வகுப்பு கலவரம் எதுவும் நடைபெறவில்லை.

84. கடந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, சென்னைப் பெருநகர் காவல்படையைச் சீரமைக்கும் பணி, நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பெருநகர் காவலர் சரகத்தை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்புக்குச் செயல் வடிவம் கொடுக்க அவசியமான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும். மதுரையிலும் கோயம்புத்தூரிலும் காவல் துறை ஆணையாளர் பதவி முறையைக் கொண்டு வருவதற்குரிய விரிவான திட்டத்தைத் தயாரிப்பதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். காவல்



படை விரைந்து செயல்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, பழைய மோட்டார் வண்டிகளுக்குப் பதிலாகப் புதியவற்றை வாங்கும் பணி, படிப்படியாக நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக, நடப்பு நிதியாண்டில் ரூ. 1·93 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 32 காவல் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்கும் பல்வேறு தரங்களில் 1,200 பதவிகளைப் புதிதாக உருவாக்குவதற்கும் நடப்பு நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காவல்துறைப் பணியாளர்க்கு வீட்டு வசதி அளிப்பதில், கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காவல் துறை கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 3,505 வீடுகளும், காவல் துறை மேல்நிலைப் பணியாளர்களுக்கு 524 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. 2,445 காவலர் குடியிருப்பு வரிசைகள் கட்டும் பணி, 1984ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடையும். '' சொந்தத்தில் ஒரு வீடு '' என்ற திட்டத்தின்கீழ் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் 720 வீடுகளைக் கட்டியுள்ளது.

**85.** ஈரோட்டில் வழக்குரைஞர் அறைகள் கட்டுவது, மாவட்ட முன்சீப் மற்றும் மாஜிஸ்ட்ரேட்டுகள் நீதிமன்றங்களில் குடிநீர் வழங்கு வசதிகளுக்கும் நீரடிக் கழிப்பிட வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வது, நாமக்கல்லில் சிற்றுண்டிக் கொட்டகை, பார்வையாளர் காத்திருக்கும் அறைகட்டுவது முதலியவை அடுத்த நிதியாண்டில் மேற்கொண்டு செயல்படுத்தவிருக்கும் ஒரு சில திட்டங்களாகும்.

## 20 அம்சத் திட்டம்

**86.** பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டம் இம்மாநிலத்தில் பயனளிக்கும் வகையிலும் முனைப்பாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம் (அம்ச எண் 3), உபரி நிலங்களைப் பகிர்ந்தளிப்பது (அம்ச எண் 4), பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி அளிப்பது (அம்ச எண். 7), வீட்டு மனைகள் ஒதுக்குவது (அம்ச எண் 9), தொடக்க நிலைக் கல்விக் கூடங்களில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பது (அம்ச எண் 16) ஆகியவற்றில் மத்திய அரசு நிர்ணயித்த ஆண்டு இலக்குகளை இம்மாநில அரசு விஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது (அம்ச எண் 6) என்பதன்கீழும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (அம்ச எண் 15) என்பதன்கீழும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் முழுமையாக எய்தப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதாரத் துணை நிலையங்கள் தொடங்குவதில் (அம்ச எண் 14 (ii) ) எய்திய முன்னேற்றத்தை மத்தியத் திட்டக் குழு பாராட்டியுள்ளது. 1982 ஏப்ரல்—1983 ஜனவரி கால அளவில் எய்திய சாதனையின் அடிப்படையில், இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்திய எல்லா மாநிலங்களிலும் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது.

## முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்

**87.** இத் திட்டம், திறமையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது ; இத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவது அனைவரின் பாராட்டினைப் பெற்றுள்ளது. ஆண்டின் ஒவ்வொரு நாளும் இம்மாநிலத்தில் உள்ள ஏறக்குறைய 65 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிப்பது, சாதாரணமான சாதனை அல்ல. முதியோர் உதவித் தொகை பெறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர்,





15–1–1983 முதல் இத் திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர். இத் திட்டத்திற்காகப் பொதுமக்கள் மனமுவந்து, தாராளமாகத் தொகை அளித்திருப்பதைக் கண்டு அரசு மகிழ்ச்சி அடைகிறது. இத் திட்டம் தொடர்ந்து சிறப்பாகவும், செம்மையாகவும் உறுதியாகவும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு, அடுத்த நிதியாண்டில் ஏறக்குறைய ரூ. 134 கோடி செலவாகக்கூடும். இத் திட்டம் சிறந்த பலன்களைத் தர, பொதுமக்களின் ஒத்துழைப்பு எல்லாவகையிலும் தேவைப்படுகிறது.

## ஆண்டுத் திட்டம்

**88.** மத்தியத் திட்டக் குழுவால், அனுமதி அளிக்கப்பட்ட திட்ட அளவைக் காட்டிலும், மாநில அரசின் திட்ட சாதனை, கடந்த சில ஆண்டுகளாகவே மிக உயர்வாக உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1980–81ல், மத்தியத் திட்டக் குழு ரூ. 4,08.25 கோடி செலவில் ஆண்டுத் திட்டத்தை ஒப்புதல் அளித்திருக்க, திட்டச் செலவு ரூ. 4,56·46 கோடியாக அமைந்தது. 1981–82ஆம் ஆண்டு மத்தியத் திட்டக் குழு ரூ. 514 கோடி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த போதிலும், திட்டச் செலவு ரூ. 619·54 கோடியாக அமைந்துள்ளது. வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட ரூ. 53·76 கோடி இதில் அடங்காது. நடப்பு நிதி ஆண்டில், ரூ. 711 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆனால், திட்டத்திற்கான செலவு, இந்த ஆண்டு ரூ. 795·93 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1983–84ஆம் ஆண்டிற்கு, மத்தியத் திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ரூ. 845 கோடியாக இருப்பினும், நடப்பில் இருக்கும் திட்டப் பணிகளுக்கான செலவு, அடுத்த ஆண்டில் புதிதாக மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டச் செலவு ரூ. 893·46 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளைப் போலவே, அடுத்த நிதி ஆண்டிலும் மின் துறைக்கு மிக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்ட ஒதுக்கீட்டில், சுமார் 30 சதவீதம் அதாவது, ரூ. 272·42 கோடி மின் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**89.** அடுத்த ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டில், பல துறைகளுக்கும் ஒதுக்கியுள்ள தொகை விவரம் வருமாறு. வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளுக்கும் கூட்டுறவுக்கும் ரூ. 138·20 கோடி ; கழிவு நீர் அகற்றலுக்கும், குடிநீர் வழங்கலுக்கும் ரூ. 97·15 கோடி ; வீட்டு வசதி, நகர்ப்பகுதி



வளர்ச்சிக்கு ரூ. 74·98 கோடி ; போக்குவரத்து , சாலைகள் ஆகியவற்றிற்கு ரூ. 63·87 கோடி; பாசனத்திற்கும் வெள்ளக்கட்டுப்பாட்டிற்கும் ரூ. 61·76 கோடி ; தொழில் துறைக்கு ரூ. 40·08 கோடி ; கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்விக்கு ரூ. 42·62 கோடி ; மருத்துவத்திற்கும், பொதுச் சுகாதாரத்திற்கும் ரூ. 38 கோடி ; ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலத்திற்கு ரூ. 22·61 கோடி ; பிற துறைகளுக்கு ரூ. 41·46 கோடி. மேலும், ரூ. 0·31 கோடி அளவுள்ள நிதி, எரிசக்தி திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

**90.** இந்த நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளை இந்த அவை முன் வைத்த போது, இட்டச் செலவுகளுக்கும் திட்டத்தின் கீழ் வராத செலவுகளுக்கும் போதிய ஒதுக்கீடுகள் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும், தொடக்கத்தில் ஒதுக்கியதைவிட ரூ. 300 கோடிக்கு மேலாக சில கூடுதல் செலவுகளை அரசு மேற்கொள்ள வேண்டி வந்தது. குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம், கிராமப்புறங்களில் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான திட்டம், கிராமப்பகுதிகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டம் ஆகியவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கீடு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட நிதி உதவி, மற்றும் கல்வி, காவல் துறை, சாலைகள் ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்ட கூடுதல் தொகை ஆகியவை இந்த அதிகப்படிச் செலவினத்திற்கு முக்கியமான காரணங்களாகும்.

## நிதி நிலைமை.

**91.** நடப்பு ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இந்த அவையின் முன் வைத்தபோது, 1981–82ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 17·77 கோடி அளவில் பற்றாக் குறை இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. கடந்த நிதி ஆண்டின் கடைசியில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற கூடுதல் நிதியுதவி காரணமாகவும், பொதுக் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட கூடுதலாக உபரி இருந்ததாலும், 1981–82ஆம் ஆண்டின் முடிவில் அரசின் கையிருப்பில் ரூ. 3·23 கோடி நிதி இருந்தது. தற்போது அவைமுன் வைக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1681·98 கோடியும், செலவுகள் ரூ. 1576·17 கோடியும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வருவாய்க் கணக்கில், ரூ. 105·81 கோடி உபரி இருக்குமெனவும், எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனக் கணக்கில் செலவு ரூ. 167·91 கோடியாகவும், பொதுக் கடன் கணக்கில் நிகர வருவாய் ரூ. 107·77 கோடியாகவும் இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகர செலவு ரூ. 260·26 கோடியாக இருக்கும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களால் தொகுநிதியில் ரூ. 214·59 கோடி அளவில் நிகர பற்றாக் குறை இருக்கும். பொதுக் கணக்கில் இருக்கிற ரூ. 122·34 கோடி உபரியைக் கணக்கில் கொண்ட பின், இப்பற்றாக் குறை, ரூ. 92·25 கோடியாகக் குறையும். 1982–83 ஆண்டு ஆரம்பத்தில் அரசின் கையிருப்பில் இருந்த ரூ. 3·23 கோடியைச் சேர்த்தோமானால், இந்தப் பற்றாக்குறை, மேலும் குறைந்து ஆண்டு இறுதியில் ரூ. 89·02 கோடி அளவிற்கு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**92.** 1983–84ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1774.88 கோடியாகவும், செலவுகள் ரூ. 1653.81 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன. இதனால் வருவாய்க் கணக்கில் உபரி ரூ. 121.07 கோடியாக இருக்கும். மூலதனக் கணக்கில் செலவு ரூ. 185·53 கோடியாக இருக்கும் எனவும் பொதுக்கடன் கணக்கில் நிகர வருவாய் ரூ. 119.30 கோடியாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடன்களும் முன்பணங்களும் என்பதன் கீழ் நிகர செலவு ரூ. 249.67 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதால், மேலே குறிப்பிட்ட அனைத்து செலவினங்களையும் கணக்கில் கொண்டால் தொகு நிதியில் நிகரப் பற்றாக் குறை, ரூ. 194.83 கோடியாக அமையும். தொகு நிதியில் உள்ள உயர்ந்த அளவு பற்றாக்குறையின் முக்கிய காரணம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 200 கோடி அளிக்க வகை செய்துள்ளதேயாகும். பொதுக் கணக்கில் கிடைக்கக் கூடிய உபரியான ரூ. 99.30 கோடியைக் கணக்கில் கொண்டோமானால், அடுத்த நிதி ஆண்டின் முடிவில் உள்ள பற்றாக் குறை ரூ. 95.53 கோடியாக இருக்கும். 1983–84ஆம் ஆண்டில், ஆரம்ப பற்றாக் குறை ரூ. 89.02 கோடியாக உள்ளதாலும், அடுத்த நிதியாண்டில் பற்றாக்குறை மட்டும் ரூ. 95.53 கோடியாக இருப்பதாலும், 1983–84ஆம் ஆண்டின் முடிவில் பற்றாக்குறை ரூ. 184.55 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**93.** அரசின் வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே உள்ள தொய்வைக் குறைக்கும் பொருட்டு சில புதிய வரிகளையும் கூடுதல் வரிகளையும் விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு



உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்களென்று நம்புகிறேன்; அவையாவன :—

(அ) மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளின் எல்லைக்குள் உபயோகத்திற்காகவோ, நுகர்விற்காகவோ, மற்றும் விற்பனைக்காகவோ கொண்டு வரப்படும் கீழே குறிப்பிட்ட பொருட்களின் விலை மதிப்பின் பேரில் இரண்டு விழுக்காடு வீதம் ஒரு "நுழைவு வரி" விதிக்கப்படும். இந்த வரி விதிப்பு ஏற்கெனவே நம் நாட்டில் பல மாநிலங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ் வரி விதிப்பு பொருள் நுழைவு இடத்தில் வசூல் செய்யப்படாமல், வணிகர்கள் அனுப்பும் விவர அறிக்கையின் அடிப்படையில் வசூல் செய்யப்படும். ஆதலால், வணிகர்களுக்கு இந்த வரி விதிப்பில் யாதொரு தொல்லையும் ஏற்படாது. நுழைவு வரி விதிப்பின் கீழ் வருகிற இனங்களாவன:—

(i) சர்க்கரை.
(ii) துணி வகைகள்.
(iii) புகையிலையும் அதன் உற்பத்திப்பொருள்களும்.
(iv) சிமென்ட்.
(v) பெட்ரோலியப் பொருட்கள்.
(vi) வனஸ்பதி.
(vii) மருந்துப் பொருள்களும் மருந்து வகைகளும்.
(viii) காகிதமும் காகித அட்டைகளும்.
(ix) இரும்பும் எஃகும்.
(x) நிலக்கரியும் கல்கரியும் (லீகோ உள்பட).
(xi) மின்சாரப் பொருட்கள்.
(xii) மோட்டார் வாகனங்கள்.
(xiii) வெட்டி எடுத்த கனிப் பொருள்கள்.

(ஆ) மாநகராட்சிகள், சிறப்பு நகராட்சிகள், தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் முதல் நிலை நகராட்சிகளில் உள்ள திரை அரங்குகளில் விளம்பரத்திற்காகத் திரையிடப்படும் ஒவ்வொரு சிலைடுக்கும் மற்றும் சிறிய திரைப்படத்திற்கும் ஒவ்வொரு காட்சிக்கும் முறையே 30 காசாகவும் 90 காசாகவும் குறைந்த அளவில் விளம்பர வரி விதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) மோட்டார் கார்கள் மற்றும் டீசல் வாகனங்கள் மீது தற்போதுள்ள வரி விகிதம் முறையே ஏழு விழுக்காடு என்றும் பத்து விழுக்காடு என்றும் இருப்பது புதுச்சேரி நீங்கலாக மற்ற அண்டை மாநிலங்களில் உள்ள வரி விகிதத்தைக்காட்டிலும் குறைவாக உள்ளதால், அவை முறையே ஒன்பது விழுக்காடு ஆகவும் பன்னிரண்டு விழுக்காடு ஆகவும் உயர்த்தப்படும்.

**94.** மோட்டார் வாகன வரி விதிப்புக்குப் பொதுச் சேவைக்கு அல்லாத (Non-transport vehicles) போக்குவரத்து ஊர்திகளான இரண்டு சக்கர வண்டிகள் மோட்டார் கார்கள், ஜீப்புகள், ஸ்டேஷன் வாகனங்கள் மற்றும் பள்ளிப் பேருந்துகள் ஆகியவை உள்ளாகின்றன. அதுவுமின்றி போக்குவரத்து ஊர்திகளான பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகள், சரக்கு ஊர்திகள் மற்றும் தனியார் போக்குவரத்து ஊர்திகள் ஆகியவையும் வரிவிதிப்புக்கு உள்ளாகின்றன. இந்த ஊர்திகள் மீதான வரி வீதங்கள் கடந்த சில ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. தற்போது, இவ்வூர்திகளில் சில பிரிவுகளின் மீதுள்ள வரிவீதங்களை உயர்த்துவது நியாயமானதே என்று கருதப்படுகிறது. மோட்டார் வாகனங்கள் குறித்து கீழ்க்காணும் வரி வீதமாற்றங்கள் செய்யக் கருதப்படுகிறது.






(i) பொதுச் சேவைக்கு அல்லாத போக்குவரத்து ஊர்திகள்

(அ) பரித்திறன் 3½க்குக் கீழுள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்கான காலாண்டு வரி ரூ. 10 என்பது ரூ. 15 என உயர்த்தப்படும்.

(ஆ) பரித்திறன் 3½க்கு மேலுள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்கு உரிய காலாண்டு வரி ரூ. 15 என்பது ரூ. 20 ஆக உயர்த்தப்படும்.

(இ) 700 கிலோ கிராம் எடைக்கு மேல் அல்லாத ஊர்தி எடையுள்ள மோட்டார் கார் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூ. 40லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்படும்.

(ஈ) 700 கிலோ கிராம் முதல் 1,500 கிலோ கிராம் எடை வரை ஊர்தி எடையுள்ள மோட்டார் கார் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூ. 50 லிருந்து ரூ. 60 ஆக உயர்த்தப்படும்.

(உ) 1,500 கிலோ கிராம் முதல் 2,000 கிலோ கிர்ாம் வரை ஊர்தி எடையுள்ள மோட்டார் கார்கள் மற்றும் ஜீப்புகளின் காலாண்டு வரி ரூ. 60 லிருந்து ரூ. 75 ஆக உயர்த்தப்படும்.

(ஊ) 2,000 கிலோ கிராம் முதல் 3,000 கிலோ கிராம் வரை ஊர்தி எடையுள்ள ஸ்டேஷன் வேகன்களுக்கு காலாண்டுக்கு ரூ. 70 என உள்ள வரி ரூ. 80 ஆக உயர்த்தப்படும்.

(எ) 3,000 கிலோ கிராம் எடைக்கு மேல் ஊர்தி எடையுள்ள ஸ்டேஷன் வேகன்களுக்கு, காலாண்டு வரி ரூ. 90 என்பது ரூ. 100 ஆக உயர்த்தப்படும்.

(ii) போக்குவரத்து ஊர்திகள்

(அ) தொழில் நிறுவனம் போன்ற அமைப்புகள் தங்களது ஊழியர்களின் போக்குவரத்துக்காகக் கொண்டுள்ள 3,000 கிலோ கிராம் எடைக்கு மேல் ஊர்தி எடையுள்ள வாகனங்களுக்கு காலாண்டு வரி ரூ. 90 லிருந்து ரூ. 150 ஆக உயர்த்தப்படும்.

(ஆ) வாடகைச் சுற்றுலா டாக்ஸிகளுக்கு காலாண்டு வரி ரூ. 90 லிருந்து ரூ. 120 ஆக அதிகரிக்கப்படும்.

(இ) நகரப் பணிப் பேருந்துகளுக்கு, இருக்கைக்கு காலாண்டு வரி ரூ. 115 ஆக இருப்பது ரூ. 150 ஆக உயர்த்தப்படும்.

(ஈ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு ஊர்தியில் (Public Carrier) ஏற்றப்படும் அனுமதி எடை ...000 கிலோ கிராம் முதல் 12,000 கிலோ கிராம் வரை உள்ளவற்றிற்கு காலாண்டு வரி ரூ. 1000லிருந்து ... 1100 ஆக உயர்த்தப்படும்.

(உ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள் 12000 முதல் 13000 கிலோ கிராம் வரை ஏற்றப்படும் அனுமதி எடை கொண்டவற்றிற்குக் காலாண்டு வரி ரூ. 1080லிருந்து ரூ. 1100 ஆக. அதிகரிக்கப்படும்.

(ஊ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள், ஏற்றப்படும் அனுமதி எடை 13,000 முதல் 15,000 கிலோ கிராம் வரை கொண்டவற்றிற்கு காலாண்டு வரி ரூ. 1260லிருந்து ரூ. 1300 ஆக அதிகரிக்கப்படும்.




(எ) வாடகைக்கு ஓட்டப்படும் சரக்கு வாகனங்கள், ஏற்றப்படும் அனுமதி எடை 15,000 கிலோ கிராமுக்கு மேலுள்ள ஊர்திகளுக்கு காலாண்டு வரி ரூ. 1260லிருந்து ரூ. 1300 ஆக அதிகரிக்கப்படும்.

**95.** சிரமமான பொருளாதார நிலையிலும், முக்கியமாக சமூகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் சிறிய ஊரகத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அரசு சில வரிச் சலுகைகளை வழங்க உத்தேசிக்கிறது; அவையாவன :—

(அ) எல்லா வகைப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகள், அதன் உதிரி பாகங்களான திரிகள், கண்ணாடி சிம்னி ஆகிய அனைத்திற்கும் முழு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (வாயு மற்றும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கு இவ் வரி விலக்கு பொருந்தாது). இந்த வரிச் சலுகையினால் சிற்றூர்களிலும் குடிசைகளிலும் வாழும் ஏழை மக்கள் பயன் அடைவார்கள்.

(ஆ) உள்நாட்டுப் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் கிடைக்கும் பொருட்கள் ஆன பட்டுப் புழுக்கள், ராட்டை மற்றும் வீட்டிலேயே எடுக்கப்படும் பட்டிழை, முறுக்கப்பட்ட பட்டுநூல் நூற்கப்பட்ட பட்டு மற்றும் கழிவுப் பட்டு, பட்டு நூற்புக்கு உபயோகப் படும் கூட்டுப் புழு மற்றும் பழுதான கூட்டுப் புழு ஆகியவற்றிற்கு விற்பனை வரி முழுமையாக விலக்கப் படுகிறது. இவ்வரி விலக்கினால் பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன் அடைகிறார்கள்.

(இ) வெள்ளிக் கொலுசு, வெள்ளி அரைஞாண் ஆகியவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் முக்கியமாக இவ் வரிவிலக்கினால் பயன் அடைவார்கள்.

(ஈ) குடிசைத் தொழில் முறையில் கையினால் செய்யப்படும் சலவை சோப்புக்கட்டிகள் மற்றும் கையினால் செய்யப்படும் டிடர்ஜென்ட் கட்டிகள் ஆகியவற்றிற்கு, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்ச ரூபாய்க்குக் குறைவான மொத்த விற்பனைத் தொகை (Turnover) உள்ளவர்களுக்கு இப்போது உள்ள விற்பனை வரி விதிப்பிலிருந்து வரி விலக்கு அளிக்கப் படுகிறது.

(உ) சலுகை அளிக்கும் பொருட்டு, மாட்டுத் தீவனமாக உபயோகப்படுத்தப்படும் மரவள்ளிக்



கிழங்குத் திப்பி மற்றும் ட... த்திக்கொட்டை பொட்டுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(ஊ) சேலம் மாவட்டத்தில் புதிதாகத் துவங்கியிருக்கும் சேலம் மாவட்ட சவ்வரிசி, மரவள்ளிக் கிழங்கு மாவு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அச் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கு மாவு, மற்றும் சவ்வரிசிக்கு ஒரு நிலைக்கு மேற்பட்டு ஏற்படும் விற்பனைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(எ) மோட்டார் வண்டிகளிலும் இணைந்துள்ள வண்டிகளிலும் உபயோகப்படுத்தப்படும் டயர்கள், ட்யூப்கள், பிளாப்களுக்கு விற்பனை வரி இப்போது உள்ள விகிதமான 12 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடு ஆகக் குறைக்கப்படுகிறது.

96. மேற்சொன்ன விற்பனைவரி மாற்றங்களும் மோட்டார் வாகனவரி மாற்றங்களும் 1983ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும். மேற்சொன்ன மாற்றங்களில், தேவை உள்ளவைகளுக்கு வகை செய்யும் சட்ட வரைவு சட்ட மன்றத்தில் கொண்டுவரப்படும்.

97. மேற்கூறிய வரி மாற்றங்களால், அரசுக்கு அடுத்த நிதியாண்டில் ரூ. 26 கோடி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள வரி குறைப்பு மற்றும் வரி விலக்குகளினால் அரசுக்கு நேரும் ரூ. 1 கோடி இழப்பைக் கருத்தில் கொண்டால், நிகர வருவாய் ரூ. 25 கோடியாக இருக்கும். இதனால், அடுத்த நிதியாண்டின் இறுதிப் பற்றாக்குறை, முன்னர் கூறிய ரூ. 184·55 கோடியிலிருந்து ரூ. 159·55 கோடியாகக் குறையும்.




தலைவர் அவர்களே,

98. தமிழகத்தின் முன்னேற்றம், தமிழக மக்களின் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான நற்பணிகள் பற்றியும், *1983–84*ஆம் ஆண்டைப் பொறுத்து மேற்கொள்ளப்பட இருக்கின்ற முக்கியமான சிறப்புக்குரிய பணிகள் பற்றியும் ஓரளவுக்குக் கோடிட்டுக் காட்டினேன்.

**99.** இந்த நிதிநிலை அறிக்கையையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்துடனும், நல்லநோக்கத்துடனும், நாட்டின் நலங்கருதியும், மக்களின் நல்வாழ்வு கருதியும் கூறும் சீரிய பரிந்துரைகள், நிலைமையை மேலும் செம்மைப்படுத்த பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன்.

**100.** சனநாயக மரபுகளையும், இந்த அவையின் பெருமையையும் புகழையும் காத்து, மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சித் திட்டங்களுக்கும், மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உறுதுணையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

**101.** இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும், ஒத்துழைப்பையும் அளித்த நிதித் துறைச் செயலாளர் திரு கே. ஜே. எம். ஷெட்டி அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று பணியாற்றிய அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோருக்கும், பல்வேறு துறையினர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**102.** *1983–84*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

# அரசின் அறிவிப்புகளும்- ஆக்கப் பணிகளும்

**3—2—83**

தோல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தமிழகத்தில் 10 கோடி ரூபாய் செலவில் "தோல் வளர்ச்சிக் கழகம்" ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

ஒழுங்காக வேலைக்கு வராமலிருக்கும் டாக்டர்கள் மீது தயவுதாட்சண்யம் இல்லாமல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

**5—2—83**

டெலிவிஷன் தயாரிக்கத் தேவையான 'பிக்சர் ட்யூப்' உற்பத்தி செய்ய 50 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் அமைக்கத் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்க 'எலக்ட்ரானிக் தொழிலில்' தமிழக அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் இனி தொடங்கப்படும் கல்லூரிகள் தொழிற் கல்லூரிகளாகவே இருக்கும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரம் உயர்ந்து வருகிறது; மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. ஆசிரியர்களும் நல்லாசிரியர் விருதுகளைப் பெற்று வருகிறார்கள் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

**7—2—83**

சிறுதொழில்கள், வர்த்தக நிறுவனங்கள் மருத்துவமனை, கோவில்கள் போன்ற பொது நிறுவனங்களுக்கு மின்சார வெட்டு அடியோடு ரத்து செய்யப்படுகிறது. இதன் மூலம் 3 லட்சம் சிறு தொழில் வணிக பொது நிறுவனங்கள் பயன்பெறும் என்று மாண்புமிகு மின் துறைஅமைச்சர்திருஎஸ்.இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

**8—2—83**

சென்னை கதீட்ரல்சாலை விவசாய-தோட்டக்கலைக் கழகத்தில் உள்ள தோட்டத்தில் பல்வேறு வகையான பூக்களை வளர்த்து, பெரிய சுற்றுலா மையமாக்க அரசு எந்த உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

சென்னை நகரில் 1972-ஆம் ஆண்டு 80 ஆயிரம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு, இது 3 லட்சத்து 30 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தொகுப்பு: சாமி பழனியப்பன்

**13—2—83**

தொழில் முறையில் அல்லாமல், ஓட்டுநர் உரிமம் வாங்கி வைத்திருப்பவர்கள் அந்த உரிம அட்டைகளில் அவரவர் புகைப்படங்களை ஒட்டி வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு புகைப்படம் ஒட்டப்பட்டிருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக் கையொப்பமிட சென்னையில் 13 இடங்களில் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் போக்குவரத்துத்துறை ஆணையர் திரு ஆர். ஏ. சீதாராமதாஸ், இ. ஆ. ப. அவர்கள் அறிவித்தார்.

**14—2—83**

இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் விறகின் விலை குறைவாக இருக்கிறது. வனப்பண்ணைக் காடுகள் மிகவும் செம்மையான முறையில் பயன்படுத்தப்படுவதே இதற்குக் காரணமாகும் என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

**16—2—83**

தென்மாவட்டங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், இப்பகுதி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும் ரூ 15 கோடி முதலீட்டில் புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலீட்டுக் கழக டயர் அலுவலர் திரு. பத்மநாபன், இ. ஆ. ப. அவர்கள் அறிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம். அரசினர் தோ...



# தமிழரசு

1-4-1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

துந்துபி — பங்குனி 18





ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொதுச் செயலாளர் திரு ஜேவியர் பெரேஜ் டி கியூலர் அவர்களும், திருமதி ஜேவியர் அவர்களும் (4-3-1983ல்) மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களைச் சந்தித்தனர்.

தமிழ்நாட்டில வறட்சி நிலையை மதிப்பிட வந்திருந்த மத்திய ஆய்வுக் குழுவினர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை ( 5-3-1983 ) தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், தலைமைச் செயலர் (பொறுப்பு) திரு கே. சொக்கலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.



மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு கேரள மாநிலம் கொச்சி மாநகராட்சி 3.3.83 அன்று வரவேற்பு அளித்துச் சிறப்பித்தது.



மக்கள் நல்வாழ்வுத்துறை ஆணையரும் செயலாளருமான திரு லட்சுமிகாந்தன் பாரதி இ.ஆ.ப., மருத்துவத்துறை அலுவலர்கள் சார்பாக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்திற்கு ரூ 2,36,894-94 நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 17.3.'83 அன்று அளித்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே உடனிருந்தார்.



# திராவிட மக்களின் கலைத்திறன்

**— மாண்புமிகு முதல்வர்**



பண்டைய தமிழகத்து மக்கள் தங்களுடைய கருத்துகளுக்கு உருக்கொடுக்க, வடிவம் கொடுக்க, தங்கள் கலை ஆர்வத்தையும், அமைதியையும் பயன்படுத்தினர். இலக்கியத்தின்பாலும், கலையின் மீதும், இயற்கைச் சூழ்நிலையின் பாலும் அவர்கள் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகக் கல்லிலும், செம்பிலும் கலை நுணுக்கம் வாய்ந்த படைப்புகள் தோன்றின.

சேரர், சோழர், பாண்டியர் முதலிய தமிழ்ப் பேரரசர்கள் கோயில் கலைக்கும், கட்டட வல்லமைக்கும் ஆற்றியுள்ள தொண்டு வரலாற்று அறிஞர்களாலும், கலை வல்லுநர்களாலும் பெரிதும் போற்றப்படுகின்றன. திராவிட மக்களின் கலை உணர்வுக்கும், திறனுக்கும், வெளித் தோற்றமாக இவை அமைகின்றன என்று அவர்கள் கருதுகின்றனர்.

சமுதாயத்தின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாகச் செம்பு போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி, நூற்றுக்கணக்கான சிலைகளை வடித்தெடுத்து அவற்றைப் போற்றி வணங்கவும், விழாக்கள் எடுக்கவும் மக்கள் போற்றும் கலையாக மிளிரவும் செய்தனர். சமுதாயத்திற்குப் பெரும் தொண்டாற்றும் நிறுவனமாக மலர்ந்த கோயில்கள், சிற்பத்துக்கும், இசைக்கும், நாட்டியத்துக்கும் பேருக்கம் அளித்தன.



மக்கள் ஊராட்சி முறை போன்ற தன்னாட்சி முறைகளையும், நிறுவனங்களையும் பெரிதும் விரும்பிப் போற்றினர். கிராமப்புற வாழ்க்கை மகிழ்வாகவும், அமைதியாகவும் திகழ்ந்தது. ஊர்ச்சபைகள் கோயில் சொத்துக்களையும், முறைகளையும், பண்பாட்டையும் பாதுகாத்தன.

இது போன்ற சமுதாய வாழ்வும், பற்றுதலுமே கோயில்கள் மலர்வதற்குக் காரணங்களாக இருந்தன.

அணி சேரா நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை யொட்டி தமிழ்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அரும் பெரும் சிலைகள் சிறப்புக் கண்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது - டெல்லியில்! கண்காட்சி தமிழகத்தின் ஒப்பற்ற கலைத் தொண்டையும், மரபையும் விளக்கிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக் குரியதாகும்.

[அணிசேரா நாடுகள் மாநாட்டினையொட்டி புதுடெல்லியில் அமைக்கப்பட்ட சிறப்புக் கண்காட்சி மலருக்கு அளித்துள்ள வாழ்த்துச் செய்தியிலிருந்து]

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி — பங்குனி 18
மலர்: 13 இதழ்: 19
1-4-1983

# உலகம் வியக்கும் உன்னதக் கலை!

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்



உலோகங்களினால் அழகிய உருவங்களைப் படைக்கும் கலை இந்திய நாட்டில் மிகவும் தொன்மையானது. கிறிஸ்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இக்கலை திகழ்ந்துள்ளது என, கிடைத்துள்ள பண்டைய பொருள்களில் இருந்து அறிய முடிகிறது.

''இந்தியாவில் வட மேற்குப் பகுதியில் சிந்து நதி ஆற்றங்கரையில், புகழ் மிக்க ஹரப்பா பண்பாடு திகழ்ந்த காலத்தில் செய்யப்பட்ட பொருட்களே இந்நாட்டில் கிடைத்துள்ள கலைப் பொருட்களில் மிகத் தொன்மையானவையாகும். ருஷ்ய நாட்டு வல்லுநர்களும், பின்லாந்து நாட்டு வல்லுநர்களும், இந்திய நாட்டு ஆராய்ச்சியாளர்களும் கம்ப்யூட்டர் உதவியைக் கொண்டு சிந்து சமவெளி நாகரிகம், திராவிடப் பண்பாட்டின் முன்னோடியே என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

பண்டைய உலகில் மொகஞ்சதாரோவில் கிடைத்த நாட்டியப் பெண்ணின் உருவமே ஈடு இணையற்ற கலைப்படைப்பு என்று கூறுவர். உலோகக் கலைக்குத் திராவிடப் பண்பு அளித்துள்ள ஒப்பற்ற தொண்டு இது எனலாம். அன்றிலிருந்து செப்புச் சிலைகளை வார்த்தெடுக்கும் கலைக்குத் திராவிடக் கலைஞர்கள் வெகுவாகத் தொண்டாற்றியுள்ளனர்.



இந்திய நாட்டின் தென் பகுதியில் தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் என்ற பண்டைய ஊரில் கிறிஸ்துவுக்கு 700 ஆண்டுகளுக்கு முன்னதாகவே செய்யப் பெற்ற ஒப்பற்றதாய் தெய்வத்தின் செப்பு வடிவமும், விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் உருவங்களும் கிடைத்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற பண்டைய தலைநகர்களில் சங்க காலத்திலேயே பல்வேறு பொருள்களால் கலைப் படைப்புக்களைச் செய்யும் வினைஞர்களுடன் உலோகத்தால் உருவம் செய்யும் சிற்பிகளும் இருந்தனர் எனச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். சிற்பங்களை வடித்தெடுக்கும் கலையிலும், கல்லிலே சிலைகளைச் செதுக்கும் கலையிலும், தமிழ்க் கலைஞர்களுடைய கைவண்ணத்தை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்து தொடர்ந்து காண இயலுகிறது.



மாமல்லபுரத்தில் மிகவும் கடினமான கருங்கல்லைச் செதுக்கி உருவாக்கிய ஒற்றைக் கற்கோயில் (பஞ்சபாண்டவர் ரதம்) என்று அழைக்கப்படும் கற்கோயில் போன்றவை தமிழ்க் கலைஞர்களின் திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. காஞ்சி போன்ற இடங்களில் பல்லவக் கலைஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட கோயில்கள்கூட அழகிய சிற்பம் போலக் காட்சி அளிக்கின்றன.



கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழப் பேரரசைத் தோற்றுவித்த மாமன்னர்களுடைய ஆட்சியில் 13-ஆம் நூற்றாண்டு வரையில் இலக்கியம், கலை, இசை, நாட்டியம் ஆகிய அனைத்துத் துறையிலும் ஒரு பெரும் மறுமலர்ச்சியைக் காண்கின்றோம். பெரும் கோயில்களில் 14 அல்லது 16 அடிக்கு மேல் உயரமான கருங்கல் சிற்பங்களைத் தோற்றுவிக்கும் அளவு அவர்கள் இக்கலையைப் போற்றியுள்ளனர். தமிழகம் முழுவதும் அழகே வடிவான சிற்பங்களை நூற்றுக்கணக்கான கோயில்களிலே வடித்துப் புகழ் ஈட்டியுள்ளனர்.

கங்கைகொண்ட சோழபுரம், இன்னும் பிற சோழர் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள் சிற்பக் கலையின் மகோன்னதத்திற்கு எடுத்துக் காட்டுகள். சோழர்கள் கல்லினால் சிற்பங்களை வடித்தெடுக்கும் முறையைப் போற்றுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கும் அப்பால் ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகளை உருவாக்கி, அளித்துள்ளனர்

எழில் வாய்ந்த இச்செப்புச்சிலைகள் தமிழ் மக்களுடைய திறனுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வதோடு மட்டுமின்றி, சோழ மாமன்னர்கள் அக்கலைஞர்களுக்கு அளித்த ஊக்கத்தையும் காட்டுகின்றன. உலகம் முழுவதும் இச்சோழர் காலத்துச் செப்புச் சிலைகளைக் கண்டு அவற்றின் கலை நுணுக்கத்தைப் பெரிதும் போற்றி வியக்கின்றது. தமிழகத்தின் ஒவ்வொரு சைவக் கோயில்களிலும் வழிபாட்டில் திகழும் நடராசருடைய சிறப்புத் திருமேனி உலகக் கலை வரலாற்றுக்குத் தமிழ்மக்கள் அளித்துள்ள ஈடு இணையற்ற படைப்பு

உருவின் அமைதியிலும், அங்கங்களின் நெளிவுகளிலும், அளவுகளிலும், அழகின் அமைதியிலும் இச்சிலைகளுக்கு ஈடு இணை ஏதும் இல்லை என்பது திண்ணம். 2,000 ஆண்டுகளுக்கும் மேலாகத்தொடர்ந்து பக்திப் பெருக்கோடு சிலைகளை வடித்தெடுத்து அமைக்கும் மரபு உலகின் வேறு எங்கும் காணக் கிடைக்காத கலை வரலாறு ஆகும்.

விழாக் காலங்களில் இச்செப்புத் திருமேனிகள் உலாவாக விழாக்கோலம் கொண்டு வெளிப் போகும் நாட்களில் இலட்சக்கணக்கான மக்கள் குவிந்து வழிபடுவது தமிழ் மக்களுடைய நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாகும். அணி சேரா நாடுகளின் உயர்மட்டக் கூட்டத்தினையொட்டி டெல்லியில் மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் காட்சியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த கலையழகு மிக்க செப்புச் சிலைகள் அருங்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது மகிழ்வுக்குரியதாகும். இதில் தமிழ்நாட்டுச் செப்புச் சிலைகள் பங்கு கொண்டுள்ளது பெருமைக்குரியதாகும்.

**[புது டெல்லியில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி மலருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலிருந்து.]**

# தென்மாநில முதல்வர்கள் மாநாடு உருவாக்கிய கருத்துகள்

**பெங்களூரில் 20-3-1983ஆம் நாளன்று நடைபெற்ற தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியைச் சேர்ந்த புதுச்சேரி ஆகியவற்றின் முதலமைச்சர்கள், நிதியமைச்சர்கள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட ஒருமித்த கருத்துகள்.**

**மத்திய-மாநில நிதியுறவுகள்**

தென் மாநிலங்களின் வரி விதிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மன நிறைவளிக்கத் தக்க வகையில் அமைந்துள்ளன. எனினும், இம்மாநிலங்களின் நோக்கங்களை அடைவதற்குத் தேவையானவற்றை நிறைவுசெய்ய அவை போதியனவாக இல்லை. தற்போது கிடைக்கப் பெறும் நிதி ஆதாரங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் ஆற்றவேண்டிய கடமைகளுக்கு நிகராக இல்லை. மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் மொத்த நிதி ஆதாரத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்காக அடிப்படை வருமான வரியுடன் மேல் வரியை இணைத்து, ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கினை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக அதிகரிக்க வகை செய்யலாம். மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் நிதி ஆதாரத்தில் கூட்டு நிறுவன (கார்ப்பரேஷன்) வரியையும் சேர்ப்பதோடு, மாநிலங்களுக்கு 60 சதவீதம் அத்தொகையிலிருந்து கிடைக்கச் செய்ய வேண்டும்.



பின்தங்கிய மாநிலங்களுக்கு உதவியாக அமைவதோடன்றி முன்னேறிய மாநிலங்களுக்கும் போதிய அளவிற்கு நிதி ஆதாரங்களுக்கு வகை செய்வதாகவும், நிதி ஆதாரக் கோட்பாட்டை வகுக்க வேண்டும். விருப்புரிமையின்படி அமையாமல், நிதி ஆதாரங்களில் பெரும்பகுதி சட்டரீதியில் அளிக்கப்பட வேண்டும். மேலும், விருப்புரிமையின்படி நிதி ஆதாரங்களை வழங்குவதற்குரிய நெறிமுறை, முதலமைச்சர்கள் குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

திட்டங்களுக்காக அளிக்கப்படும் மத்திய நிதி உதவியில் கடன் பகுதியாக அளிக்கப்படும் தொகையைக் குறைப்பதன் மூலம் மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க உதவும் வகையில், மத்திய-நிதி உதவி முறையை மாற்றியமைக்க வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 275ஆம் பிரிவின் கீழ் மத்திய அரசு வழங்கும் மானியங்கள், மாநிலங்களின் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்தின் குறிப்பிட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, வழங்கப்பட வேண்டும்.

**நிவாரணச் செலவு**

வறட்சியால்/வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தக்க நிவாரணம் அளிக்க மாநிலங்களுக்கு இயலும் விதத்தில் ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையைத் திருத்தியமைக்க வேண்டும். நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில வரவு -செலவுத் திட்ட மதிப்பீட்டில், தற்போது உள்ள அளவிலேயே துவக்க உதவித் தொகைக்கு (Margin Money ) வகை செய்யலாம். இருப்பினும், நிவாரணப் பணிகளுக்குரிய மத்திய உதவி, திட்டம் சாராப்பணிகளுக்கு வழங்கப்படும் முறையில் இருக்க வேண்டும். அப்போதுதான் திட்ட முதலீடு குறையாமல் இருக்கும். வறட்சி நிவாரணப் பணிகள் குறித்த நிதி உதவியில் 75 சதவீதம் மானியமாகவும், 25 சதவீதம் கடனாகவும் இருக்க வேண்டும். வெள்ளம்-புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்த மட்டில் வழங்கப்படும் மத்திய நிதி உதவியானது 100 சதவீதம் மானியமாக அமைய வேண்டும்.



**மிகைப்பற்று**

மிகைப்பற்று குறித்து மாற்றியமைக்கப்பட்ட ஒழுங்கு முறைகள், தங்களுடைய நிதி நிலைமையை முன்னரே நன்முறையில் நிருவகித்து வந்த மாநிலங்களுக்கு அநீதியை விளைவித்துள்ளன. மாநிலங்களின் பெருகி வரும் வரவு செலவினங்களையும் தேவைகளையும் நிறைவு செய்ய, கீழ்க்காண்பனவற்றைச் செயற்படுத்தலாம் :—

எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்படும் வழிவகை முன்பணங்களின் அளவினை மாநிலங்களுக்காக 1-7-'82-ஆம் நாளன்று வரையறுக்கப்பட்ட வழிவகை முன்பணங்களைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகரிக்கலாம்.

30—6—1982-ஆம் நாளன்றைய நிலவரப்படி மிகைப்பற்று வைத்துள்ள மாநிலங்களுக்கு, 31-3-1982-ஆம் நாளன்றைய நிலவரப்படி, மிகைப்பற்று வைத்திருந்த மாநிலங்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்கலாம்.

**மத்திய அரசு, திட்ட உதவி வழங்கும் முறை**

மத்திய அரசு திட்ட உதவி வழங்குவதற்குத் தற்போது வழக்கில் உள்ள 'காட்கில்' நடைமுறை மாற்றப்பட வேண்டும். மாநிலங்களின் நபர் வாரியான வருமானத்தைக் கணக்கிடுகையில், நிதி உதவி அடிப்படையைத் தீர்மானிப்பதற்கு, ஐந்தாண்டுக் கால சராசரிக் கணக்கைப் பின்பற்ற வேண்டும். இருப்பினும் மாநிலங்கள், அவற்றின் நிலை, தேவைக்கேற்ப நிறை முக்கியத்துவத்தைக் (weightage) கருத்தில் கொள்ளலாம்.

மாநிலங்களுக்குக் கணிசமான அளவு கூடுதல் வள வாயில்களை அளிக்கும் நோக்கத்துடன், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 269-ஆம் பிரிவின் கீழ் வரி விதிக்கப்படவேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாநில அரசுக்குச் சேர வேண்டிய நிகர சிறுசேமிப்புத் தொகைப் பங்கை, 75 சதவீதமாக அதிகரிக்க வேண்டுமென்று, நிதிக்குழு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். சிறுசேமிப்பைப் பொறுத்த மட்டில், திட்டம் சாராப்

தமிழரசு

16-4-'83 இதழ்
புதுக்கோட்டை
மாவட்டச்
சிறப்பிதழாக
வெளி வரும்





பணிகளுக்கான, மூலதனப் பற்றாக்குறைக்கு என வழங்கப்படும் நிதி உதவி, மானியமாகக் கருதப்பட வேண்டும்.

உருக்கு, பெட்ரோலியப் பொருள்கள் முதலியவற்றின் விலையை, மத்திய அரசு, பலமுறை அதிகரிப்பதன் காரணமாக, மாநிலத்தின் நிதி வாயில்கள் குறைந்து கொண்டே வருகின்றன. மாநிலத்திலிருந்து வளவாயில்களை மத்திய அரசுக்கு மாற்றுவது இவ்விலை உயர்வால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாகும். ஆகவே, மத்திய அரசு நிர்ணயித்த விலையில் பொருள்கள் விற்கப்படும் நிலைகளில், அதிகரிக்கப்பட்ட ஆயத்தீர்வை என்ற வகையில் இந்த விலை மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரைக்குமாறு எட்டாம் நிதிக்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்திய வருமான வரிச் சட்டத்தின் 35 (CC) 35 (CCa) பிரிவுகளின்படி, கிராம வளர்ச்சிக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்காகும் செலவுக்கு வரிக்குறைப்பு உண்டு. அண்மையில் கொண்டு வரப்பட்ட மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தின்படி, மேற்கூறிய பிரிவுகள் ரத்து செய்யப்பட்டன. மாறாக, வரி விலக்கு வேண்டுமெனின், இத்தொகை, பிரதமரின் கிராம வளர்ச்சி நிதிக்கு வழங்கப்படவேண்டும். சில மாநிலங்கள் ஏற்கனவே முன்னேற்றமடைந்து இருப்பதால், இந்நிதியால் பயன்பெறமாட்டா. ஆகவே, முன்னர் இருந்த அதே நிலையே தொடர்ந்து இருக்கலாம்.

மத்திய அரசின் வருவாய்க் கணக்கில் உள்ள வரவுகளிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படும் மொத்தத் தொகை குறைந்து கொண்டே வருகிறது. 1982-83-ல் இது 23.23 சதவீதமாகும். இத்தொகை வருங்காலத்தில் 40 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது.

**[தமிழ்நாடு சட்டப் பேரவையில் 23-3-'83 அன்று வைக்கப்பட்ட அறிக்கை]**


தமிழ்நாடு ரப்பர் தோட்டக் கழகம்



# தமிழ் முனிவர் திரு.வி.க


**எஸ்.டி.காசிராஜன் இ.ஆ.ப.**
இயக்குநர்,
தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்புத்துறை,




முல்லைக்குத் தேர் ஈந்து புகழ் பெற்ற மன்னன் என்றதும் வள்ளல் பாரியை உன்னுதல்போல், புலவர்க்குத் தலைகொடுக்க முன் வந்து மாட்சிபெற்ற புரவலன் என்றதும், ஈகைக்குணம் மண்டும் குமணனை எண்ணுதல் போல், தொழிலாளர்நலம், தொழிலாளர் இயக்கம் என்றதும் தமிழ்த் தென்றல் திருவாரூர் வி. கலியாணசுந்தரனாரைத் தமிழ் உலகு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி, தமிழக வரலாற்றில் பல்வேறு மாறுதல்களைக் கண்ட பெருமை பெற்றது. உறங்கிக் கிடந்த தமிழக மக்கள், மொழியுணர்ச்சியும் கலையுணர்ச்சியும் உரிமை எழுச்சியும் பெற்று வீறு பெற்றெழுந்த காலம் அது. அரசியலில் தமிழ் மொழிக்கு இடமில்லாதிருந்த நிலை மாய்ந்து, அரசியலிலும் செழுந்தமிழ் ஆட்சி பெறத் தொடங்கிய காலம் அது.

அக்காலத்தில் தமிழகம் தமிழ்த் தென்றல் திரு.வி.க. தொண்டினால் பல துறையிலும் சிறப்புற்று ஓங்கியது என்றால் மிகையன்று.

காலை மலர்ந்து மாலையில் வாட்டமடையும் மலர்போன்ற குறுகியகால வாழ்க்கையில் செயற்கரிய செய்யும் திறன்மிக்க பெரியோர்கள், தாங்கள் வாழ்ந்த வாழ்வின் அடிச்சுவட்டைப் பின் வரும் சந்ததியினர் பின்பற்றுமாறு விட்டுச் செல்கின்றனர். வாழும் நாளில் துன்பங்களைத் தாங்கி, வாழ்வின் பெருமையை நிலைநாட்டிச் செல்கின்றனர். அத்தகைய செயற்கரிய செய்த பீடு பெற்றவர், தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அவரது வாழ்வு, முழுவாழ்வு; அறவாழ்வு; அன்புவாழ்வு; எளிமை வாழ்வு; தூய்மை வாழ்வு.

திரு.வி.க. இல்லறத்தின் உயர்வை உணர்ந்தவர்; துறவறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர். அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு.

திரு.வி.க.வுடன் நெருங்கிப் பழகிய சிறப்பிற்குரிய டாக்டர் மு.வ. அவர்கள் அவரது வாழ்வு பற்றிச் சுருக்கமாக அழகுறத் தெரிவித்த கருத்து இங்கே நோக்குதற்குரியது.

> "அவர் தம் தனிவாழ்க்கை திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஒருவிளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு; துறவறம் உண்டு; ஊழ்வலியும் உண்டு" என்றார்.

திரு.வி.க.வின் இளமைப் பருவம், துடிப்பும் எழுச்சியும் மிக்கது. அக்காலத்தில் அவர் வாழ்ந்த இராயப்பேட்டை இயற்கையழகில் சிறந்திருந்தது. அதன் இயற்கைப் பசுமையழகில் மனம் கட்டுண்டார். அக்காலத்தில் இராயப்பேட்டை, தேனாம்பேட்டை, ஆழ்வார்ப்பேட்டை, மயிலாப்பூர் முதலிய இடங்கள் மயிலாப்பூர் ஏரியை மையமாகக் கொண்டு பசுமையும் இயற்கை எழிலும் மண்டிக் கிடக்கும் பகுதிகளாகத் திகழ்ந்தன. இராயப் பேட்டையிலிருந்து மயிலாப்பூர் செல்லும் வழியில் வெற்றிலைத் தோட்டமும், வாழைத் தோட்டமும், தென்னந்தோப்பும், கரும்புத் தோட்டமும், செந்நெல் மணி குலுங்கும் வயல்வெளியும் நெஞ்சை அள்ளும் காட்சியாய் அமைந்திருந்தன. இராயப்பேட்டையைச் சார்ந்த 'அட்லன் தோட்டம்' மரங்கள் செறிந்த வனமாகக் காட்சி தந்தது. திரு. வி.க. காலையில் ஆசிரியரிடம் பாடங்களைக் கேட்டுப் படித்த பின் பிறதோழர்களுடன் இத்தோட்டங்களில் திரிந்து, விளையாடிக் களிப்புறுவார். தென்னை

**சென்னை வானொலியில் ஆற்றிய உரை**



அம்பத்தூர் பால்பண்ணையில் புதிய கூடுதல் சிப்பக்கூடக் கட்டடத்தை 22.3.83 அன்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்து பால்பைகள் வழங்கும் கருவியை இயக்கி வைத்தார். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் சட்டப் பேரவை உறுப்பினர் திரு ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

மரங்களிலிருந்து அவரது நண்பர்கள் பறித்துப்போடும் இளநீரை அருந்துவார். இத் தோட்டங்களில் கிட்டும் வாழைப்பூ முதலியவற்றை ஆசிரியர் வீடுகளுக்குக் கொண்டு தருவார். அருகிலுள்ள கடலில் ஆடுவார்; கடலில் மூழ்கவிருந்த அவரது தோழர் இரத்தினசபாபதியைக் கடலில் இறங்கி மீட்டார். இவரது இளம்பருவத்தில், 'ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில்' இளமையில் சீரிய அனுபவம் பெற்றார். திரு.வி.க. பள்ளி இறுதிவகுப்பு-ஆறாம் படிவம்-படிக்கும்போது, அவர் மிகவும் விரும்பிப் போற்றிய ஆசிரியர் கதிரைவேலர் மேல் ஒரு வழக்கு, எழும்பூர் நீதிமன்றத்தில் தொடங்கப்பட்டது. மற்றொரு வழக்கு இராமலிங்க அடிகள் சார்பில் ஜார்ஜ்டவுன் நீதிமன்றத்தில் முன்னரே இருந்தது. இந்த வழக்குகளினால், கதிரைவேலருக்கு ஆசிரியர் பதவி போயிற்று. அச்சமயம் ஆறாம் படிவத்தேர்வு நெருங்கியது. திரு.வி.க. தனது ஆசான் கதிரைவேலர் வழக்கிலேயே கருத்தைச் செலுத்தியமையால் தேர்வு எழுதுவதற்கான வாய்ப்பில் தகுதி பெறவில்லை. அவரது படிப்பும் நின்றது. இவர் பள்ளிப் படிப்பை நிறுத்திய சில நாட்களில், 11.2.1905ல் இவரது தந்தையார் மறைந்தபின், இராயப்பேட்டை 'கமர்சியல் ஸ்கூலி'ல் சேர்ந்து வாணிகக் கணக்குப் பயின்று அதில் தேர்ச்சியும் பெற்றார். பின்னர் சில ஆண்டுகள் ஸ்பென்சர் கம்பெனியில் பணியாற்றினார். இவரது படிப்பை நிறுத்துமளவிற்குக் கதிரைவேலரிடம் திரு.வி.க. ஈடுபாடு கொள்ளக் காரணமென்ன? தமிழ்ப்பற்று! தமிழ்ப்பற்று! தமிழ்ப்பற்று! திரு.வி.க. தமிழ்ப்பற்றுக் கொண்டு தமிழ்த் தென்றலாகத் திகழ அடிப்படைக் காரணமாயிருந்தவர் யாழ்ப்பாணம் நா. கதிரைவேல். அவர் கல்லூரியில் தமிழ்ப் பாடம் கற்பிப்பதுடன், சென்னை கந்தசாமி கோயில் வசந்த மண்டபத்திலும், சிந்தாதிரிப்பேட்டை அங்காளபரமேஸ்வரி கோயிலிலும் புராணச் சொற்பொழிவு நிகழ்த்திவந்தார். இச்சொற்பொழிவுகள் அனைத்தையும் திரு.வி.க. தவறாது கேட்டுப் பயனடைந்தார். அவரது தமிழறிவை வியந்த திரு.வி.க. அவருடன் நெருங்கிப் பழகி, அவர் வழக்கில் சாட்சி சொல்லவும் சென்றார். 1907ல் ஆசிரியர் கதிரைவேலர் மறைந்தபின், 1908ல் அவரது வாழ்க்கை வரலாறு எழுதினார். இதுவே திரு.வி.க. வின் முதல் நூலாக அமைந்தது.

ஆறாம் படிவம் வரையில்தான் திரு.வி.க. ஆங்கிலத்தை முறையாகக் கற்றார் எனினும், பின்னர் 'மதராஸ் டைம்ஸ்' ஆங்கிலத் தினத்தாள் ஆசிரியராயிருந்த 'கிளின்பார்லோ' என்பார் நடத்திய 'ஷேக்ஸ்பியர் கிளப்பிற்கு'ச் சென்று ஷேக்ஸ்பியர், மில்டன், வோர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன், டென்னிஸன் முதலியோர் பற்றி, அவ்வப்போது நிகழ்ந்த சொற்பொழிவுகளைக் கேட்டு, அக்கவிஞர்களின் சிறப்புகளை உணர்ந்தார். பச்சையப்பன் கல்லூரி முதல்வராக அப்போதிருந்த ரோலோ, ஆங்கிலப் பேராசிரியராக இருந்த ரென் ஆகியோர் ஆற்றிய அருமை மிக்க சொற்பொழிவுகளையும் திரு.வி.க. கேட்டு, ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டார்.

1916ஆம்ஆண்டு ஜூன் திங்களில் வெஸ்லி கல்லூரியில் பணியாற்றப் புகுந்த இவர், கல்லூரி வகுப்பில் மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் ஊட்டினார். இவர் காலத்தில் அக்கல்லூரியில் தமிழ்ச் சங்கமொன்று முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய நாட்டில் உரிமை வேட்கைத் தீ பரவத் தொடங்கிய காலமாக அது அமைந்துவிட்டது. சுய ஆட்சிக் கிளர்ச்சி நாடெங்கும் முகிழ்த்தது. இராயப்பேட்டைச் சகோதர சங்கத்தின் அமைப்பிடம் அரசியல் கட்சியின் நிலைக்களனாகியது. 16.6.1917 ஆம் ஆண்டில் அன்னிபெஸன்ட் அம்மையார் சிறையில் அடைக்கப்பட்டார். கல்லூரிப் பணியை

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)



# வளமான வாழ்விங்கு...

எச்.பி.என். ஷெட்டி,
இ. ஆ. ப.
ஆணையாளர்-அரசுச் செயலாளர்
ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே வாழ்க்கை வசதிகள், வேலை வாய்ப்பு போன்றவற்றில் நிறைய இடைவெளி இருப்பதைப் போன்று, இவ்விரு பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கிடையே கூட, பெரிய வேறுபாடுகள் உள்ளன.

கிராமங்களில் உள்ளவர்களை எடுத்துக்கொண்டோமேயானால் அவர்களில் பெரும்பாலோர் போதிய பொதுக் கல்வி அறிவு இல்லாதிருப்பதுடன், சின்னஞ்சிறு தொழில்கள் கூட அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்களை ஒருமுகப்படுத்திப் பயிற்சியும் அளித்து, மூலதனமும் இன்ன பிற அடிப்படை வசதிகளும் அளித்தால், அவர்களின் வறுமை விலகி, வாழ்க்கை நிலை உயரும் அல்லவா? இதற்கெனவே உருவாக்கப்பட்டதுதான் ''இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்''. இது 1979-ஆம் ஆண்டு சுதந்திர நாளன்று தொடங்கப்பட்டது.

கிராமத்தின் சூழ்நிலைகள், அங்குள்ள வசதிகள், வாய்ப்புக்களை அடிப்படையாகக்கொண்டு தொழில் பயிற்சித் திட்டம் உருவாக்கப்படுகிறது. இப்பயிற்சியனைத்தும் செயல் முறையானவையே. படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதைவிட, செய்து கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே முக்கியமாகும். இதற்கெனப் பாடத்திட்டம் எதுவும் இல்லை. ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியம்கூடக் கிடையாது.

பயிற்சிக்குப் பிறகு வேளாண்மை, அதனைச் சார்ந்த தொழில்கள், சிறுதொழில்கள், கைவினைப் பொருள்கள் செய்தல் போன்றவற்றில், பிறரை எதிர்பாராது அவர்களாகவே வேலை வாய்ப்பினை உண்டாக்கி கொள்ளமுடியும். அதுவே இத் திட்டத்தின் நோக்கம் எனலாம்.

பயிற்சியில் அடங்கும் தொழில்கள் என்னென்ன? வீடுகளில் மின்சாரக் கம்பிகளை அமைத்தல், மின் கருவிகளைப் பொருத்துதல், அவற்றைச் செப்பனிடுதல், வானொலிப் பெட்டிகளைச் செப்பனிடுதல், தையல் பயிற்சி, பொம்மைகள் செய்தல், பம்பு செட்டுகள், டிராக்டர்கள், ஜீப் வண்டிகள், வேளாண்மைக் கருவிகள் போன்றவற்றைச் செப்பனிடுதல், கருமார், தச்சு, கட்டட வேலைகளில் பயிற்சி ஆகியவை இதில் இடம் பெறும்.

பயிற்சிக் காலத்தில், தங்குமிடம் இலவசமாக இல்லாதிருந்தால், ஒவ்வொருவருக்கும் ரூ. 125 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆனால், ஒருவர் அவருடைய கிராமத்திலேயே பயிற்சி பெறுவாரானால், அவருக்கு மாதம் ரூ. 50 மட்டுமே கிடைக்கும்.

தொழில் கூடங்களின் நிர்வாகிகள், உரிமையாளர்கள் மற்றும் தொழில் தெரிந்தவர்களைக் கொண்டு பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கள் தொழில் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமென்பதுடன், அதுபற்றித் தெளிவாக எடுத்துக்கூறும் தகுதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

பயிற்சிபெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 வீதம் கணக்கிடப்பட்டு, பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. மூலப்பொருள்கள், கருவிகள் போன்றவற்றை இவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இவற்றிற்கென ஒரு மாதத்திற்கு ரூ. 25 வீதம் கணக்கிடப்பட்டுக் கொடுக்கப்படுகிறது. ஆனால் பயிற்சி பெறுபவருக்கும் பயிற்சியாளருக்கும் ஏற்படக் கூடிய (மூலப் பொருள்கள் செலவு உட்பட) மொத்தச் செலவு ரூ. 200க்கு மேற்படக்கூடாது.

பயிற்சி பெற்று முடிந்த பின்னர், தாமாகவே தொழில்களைத் தொடங்கிக் கொள்ள அரசு உதவி செய்யும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் உள்ளது போல், இவர்களுக்கும் சலுகைகள் உண்டு. வங்கிகள் மூலமாகச் சலுகை முறையில் கடன் வசதி கிடைக்கும். உதவித் தொகையும் அளிக்கப்படும். அவற்றினைப் பெற்றுத் தொழில் தொடங்கி வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளலாம்.

1980-81ஆம் ஆண்டில் ரூ. 197.25 இலட்சம் செலவிட்டதில் 29,488 இளைஞர்கள் பயனடைந்தனர். அதற்கடுத்த ஆண்டில் இத் திட்டம் மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டதில் 59,802 பேர்கள் பயன்பெற்றனர். இதற்கான செலவு ரூ. 502 இலட்சமாகும்.

நடப்பாண்டில் இதுவரை ரூ. 527.58 இலட்சம் செலவாகியுள்ளது. சென்ற டிசம்பர் 82 வரை பயனடைந்தோர் 50,070 பேர்கள் ஆவர்.

கிராமங்களில் வேலை வாய்ப்புகளைத் துரிதமாக்கும் இத்திட்டத்தினால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், தகுதி, பயிற்சி, முதலீடு, உதவித் தொகை முதலியவற்றையும் பெற்று, தொழில்களை அமைத்துக்கொண்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முடியும்



## காஞ்சியில் தத்துவப் பள்ளி

சைவ சித்தாந்தம், வைணவ சித்தாந்தம் வேத இந்துமதம் ஆகிய முத்துறைகளைக் கொண்ட தத்துவ நிறுவனத்தினைக் காஞ்சியில் நிறுவுவதற்காகத் தமிழகத்தின் ஒன்பது திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 15 இலட்சத்திற்கு மூன்று 'பேராசிரியர் இருக்கை'களை உருவாக்குவதற்கென மூன்று கட்டளைகளை நிறுவத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இந்தத் தத்துவப் பள்ளியின் செயற்பாட்டிற்கு தமிழ்ப் பல்கலைக் கழகம் 4.40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

# சிட்டுக்குருவியின் முப்பதாவது கூடு!

ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறவும், நலிந்த பிரிவினர் நலம் பெறவும், வறுமைக் கோட்டிலிருப்போர் வளம் பெறவும் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உற்ற நண்பனைப் போல் உதவி வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, கடந்த 77 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறந்த சேவை செய்து வரும் தலைமைக் கூட்டுறவு நிறுவனமாக இயங்கி வருகின்றது.

சென்னை கே.கே.நகரில் இந்த வங்கியின் 30வது கிளையின் தொடக்கவிழா மார்ச் திங்கள் 7ஆம் நாள் நடந்தது.

இந்த வங்கி, நலிந்த பிரிவினருக்கு 4 சதவிகித வட்டிக்குக் கடன்களை வழங்கி, இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்தி வருகின்றது.

விழாத் துவக்கத்தில் வங்கியின் தனி அலுவலரும், நிர்வாக இயக்குநருமான திரு இரெ.ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு கே. சந்திரசூடன் இ.ஆ.ப., அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள், மிகச் சிறந்த இராயப்பேட்டைக் கிளைக்குச் சுழற்கேடயமும், வங்கியின் நீண்டகால வாடிக்கையாளர்களாகிய மாவட்ட மத்திய நூலகத்திற்கும், தென்னிந்திய விளையாட்டு வீரர்கள் சங்கத்திற்கும் சுவர்க் கடியாரங்களையும் வழங்கிப் பேசினார். அப்போது அவர் ''இந்தியாவில் பலதுறைகளிலும் தமிழ்நாடு வழிகாட்டியாக இருப்பதுபோல, கூட்டுறவுத் துறையிலும் தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு வேலூர் டி. நாராயணன் அவர்கள், பாதுகாப்புப் பெட்டக வசதியின் சாவியினை முதல் வாடிக்கையாளருக்கு வழங்கிப் பேசுகையில், ''தமிழகத்தைப் பொறுத்தவரை கூட்டுறவுத்துறை நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது'' என்றும், ''வீட்டு வசதி வாரியத்துக்குப் பணம் செலுத்துபவர்கள் இந்த வங்கி மூலமாகப் பணம் செலுத்தலாம். இதற்கு இந்த வங்கி முன்வந்தால் அதற்கு நாங்கள் தக்க ஏற்பாடு செய்வோம்'' என்றும் குறிப்பிட்டார்.

**பி. வி. கிரி.**

மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் கிளையைத் திறந்து வைத்து, நலிந்தோர் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கான கடன்களை வழங்கினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்த வங்கியைப் பொறுத்தவரை ஏனைய மாநிலக் கூட்டுறவு வங்கிகளைவிட உயர்ந்து வளர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். கூட்டுறவுத் துறையின் பல்வேறு பிரிவுகள் செழித்து வளர இது ஓர் அச்சாணியாக உள்ளது. விவசாயிகளுக்கும், நெசவாளர்க்கும் இவ்வங்கி கடன்கள் தந்து கை கொடுத்து வருகிறது. இவையன்றி, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, நூற்பாலை ஆகியவற்றுக்கும் கடன்கள் வழங்கி, தொழில் நசித்துவிடாவண்ணம் காப்பாற்றி வருகிறது.

''ஏழை எளிய மக்களுக்கு, வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், குறைந்த வட்டியில் நகைக் கடன்களையும் இவ்வங்கி வழங்கி வருகின்றது. எல்லாத் திறத்தாரும் பயனடையக் கூடிய புதிய சட்டம் ஒன்று விரைவில் வரவிருக்கிறது''.

வங்கியின் சின்னமான சிட்டுக்குருவி, தனது முப்பதாவது கூட்டினைக் கட்டியிருப்பது மட்டுமல்ல, மேலும் சில கூடுகளையும் கட்டவிருக்கிறதாம்.

அண்ணா நகர் (மேற்கு), பெரம்பூர், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் புதிய கிளைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன.





# பூம்புகார் கைவினைப் பொருள் கண்காட்சி

கைவினைப் பொருட்களின் விற்பனையைப் பெருக்கி, கைவினைஞர்களின் மேம்பாட்டுக்கு உதவும் பூம்புகார் 8-3-83 முதல் 16-3-83 வரை, சென்னை இராஜாஜி மண்டபத்தில் கண்காட்சி ஒன்றினைச் சிறப்பாக நடத்தியது.

முந்திய கண்காட்சிகளில் பஞ்சலோகச் சிற்பங்கள் மட்டுமே காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியில் ஐந்து உலோகங்களிலான (பஞ்சலோகச்) சிற்பங்களோடு, மாக்கல், கருங்கல் சிற்பங்களும், தேக்கு மரம், நூக்க மரம் மற்றும் சந்தன மரச் சிற்பங்களும் இடம் பெற்றிருந்தன. மேலும், இந்தக் கண்காட்சியில் சிற்ப சாஸ்திர முறைப்படி செய்யப்பட்ட சிற்பங்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கண்காட்சியில் 10 ரூபாயிலிருந்து 67,000 ரூபாய் வரை விலையுள்ள கலைப் பொருட்கள் இடம் பெற்றிருந்தன.

பஞ்சலோகச் சிற்பங்களில், சிவன், பார்வதி, மீனாட்சி கல்யாண சுந்தரேஸ்வரர், பிச்சாடனர், சிம்ம பஞ்சமுக கணபதி, நரசிம்மாவதாரம், நடராசர் சிலைகள் குறிப்பிடத்தக்கவை. இந்தப் பஞ்சலோகச் சிற்பங்கள் அனைத்தும், சுவாமிமலையிலுள்ள பூம்புகார் பஞ்சலோக சிற்பப் பயிற்சி வடிவமைப்பு நிலையத்தில் செய்யப்பெற்றவை.

புராணங்களில் கூறப்படுகிற காட்சிகளை மீண்டும் உருவகப்படுத்தி உருவாக்கப்பட்ட தனிச் சிறப்பு வாய்ந்த மரச் சிற்பங்களும், நுண்ணிய - கலை நுணுக்கம் செறிந்த பூவேலைப்பாடமைந்த மரச் சிற்பங்களும் சந்தன மரக் கலைப் பொருட்களும் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தம்பம்பட்டி, அரும்பாவூர் ஆகிய ஊர்களில் உள்ள பூம்புகார் சந்தர மரச் சிற்பப் பயிற்சி நிலையங்களில் தயாரிக்கப் பெற்றவை.

பானை சுமக்கும் பெண், தாயும் சேயும் முதலிய பல்வேறு கற்சிற்பங்கள் மாமல்லபுரத்திலுள்ள பூம்புகார் கற்சிலை வடிவமைப்பு நிலையத்தில் செய்யப் பெற்றவை.

இவற்றோடு, பண்டைக்கால தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் கண்ணாடி பதித்த கலின்மிகு மண்டபங்கள் ஆகியனவும் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

1982-83-ஆம் ஆண்டில் பூம்புகாரின் 17 விற்பனை நிலையங்கள் மூலமும், கண்காட்சிகள் மூலமும் சுமார் 2.2 கோடி ரூபாய் அளவிற்குக் கைவினைப் பொருட்கள் விற்பனையாகியுள்ளன. இராஜாஜி மண்டபத்தில் ஒருவாரம் நடைபெற்றது இந்தக் கண்காட்சி.

—சாமி பழ









# எளியவர்க்கு ஏற்றமளிக்கும் பனைத்தொழில்

**கூ. சம்பந்தம்**

எல்லாந் தரவல்ல தெய்வப்பனையில்
எடுக்கும் பொருளை விருத்தி செய்யச்
செல்வம் வளர்த்திடும் வல்லவர்க ளொன்றாய்ச்
சேர்ந்துவர வேண்டும் தோழர்களே

**—சோமசுந்தரப் புலவர்.**

மனிதன் கற்பனை செய்வதையெல்லாம் தரவல்லது பனைமரம். அதனால் அதனை கற்பகம் என்று பெயரிட்டுள்ளார்கள் பெரியவர்கள். 'பனைமரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே' என்ற பாட்டில் பனைதரும் உண் பொருள், உண்ணாப் பொருள்களைப்பற்றி புலவர் கூறுகிறார்.

பாலர் பெரியோர்களுக்குப்பனம் பதநீர்
நானாவேன்
சித்திரைக் கோடையிலே சிறந்த நல்லநுங்காவேன்
காளையர்க்கும் கன்னியர்க்கும் களை தீர்க்கும்
விசிறியாவேன்
கண்ட பிள்ளை தாய்மார்க்கு கற்பகக்கட்டி நான்
தருவேன்
(பாடல் 30)

எளிய மக்களின் வாழ்க்கை மலர, நடைமுறைக்கு எப்பிடி மத்திய அரசும் முக்கியமாய் தமிழக அரசும் பனைத் தொழிலை வளர்ச்சி செய்வதன் மூலம் பட்டி தொட்டிகளில் வாழ்பவர்களும், பட்டணங்கள், நகரங்களில் வாழ்பவர்களும் பனை மரப் பொருள்களைப்பயன்படுத்தி உடல் ஆரோக்கியம் பெறுவதுடன் வேலை வாய்ப்பையும் பெற்று, வறுமைக் கோட்டிலிருந்து மேலே வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

## பதநீர் தரும் பனையினம்

பனையினை மரங்களில் பனை, தென்னை, ஈச்சை, சாகோ பனை என்ற நான்கு இனங்களிலிருந்தும் சத்துள்ள, இனிப்பான, உயிர்ச்சத்தும், ஊட்டச் சத்தும் நிறைந்த பதநீர் இறக்கப்பட்டு பனைவெல்லம், (கருப்பட்டி) பனஞ்சீனி, கற்கண்டு முதலிய உண் பொருள்கள் ( Edible Products ) பாரத முழுவதும் செய்யப்படுகின்றன. ஓலை, மட்டை, பத்தல், நார் போன்ற பனை மரத்திலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களை, ( Non-Edible Products ) தயாரிப்பதில் கிராமங்களில் வாழும் நிலமற்ற, ஏழை எளிய மக்கள் வாழ்க்கை வளம் பெறுவதில் பாரதத்தில் தமிழகம் முன்னணியில் ஓடிக் கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழகத்தில் ஐந்து கோடி பனைகள் உள்ளன. இரண்டு கோடி பனைகள் இன்னும் பயன்படாமல் இருக்கின்றன. ஒரு கோடி மரங்கள் முற்றினவை தொழிலுக்குப் பயன்படாதவைகளாகும். பயன்படும் இரண்டு கோடி பனைகளிலிருந்து உண்ணும், உண்ணாப் பொருள்கள் ஆண்டுக்கு ரூ. 17 கோடி மதிப்பில் தமிழகத்தில் தயாரிக்கப்படுகின்றன. 3.5 லட்சம் ஏழைகள், வாழ்க்கைத் தரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள கிராம மக்களால் தயாரிக்கப்பட்டு, தேக்கமின்றி விற்பனையாகின்றன. உள்நாட்டில் மட்டுமின்றி, அயல் நாடுகளிலும் இப்பொருள்கள் விற்பனையாகின்றன. படித்துவிட்டு வேலையற்றோர், பாதியில் படிப்பை விட்டோர், வயோதிகர்கள், விதவைகள், வறுமையிலிருந்து மீள முடியாமல் தவிப்போர், கைவிடப்பட்ட பெண்கள், வேலைக்கு வேறு மூலதனமில்லாமல் அவதிப்படுவோர், பட்டி தொட்டிகளில், பசியால் வாடுவோர்களது வாட்டத்தை தவிர்த்து வாழ்வளிப்பது இனிய பனைத் தொழிலாகும்.

வறட்சிக்கு இலக்கான பகுதிகளை வளரச் செய்யும் பொருட்டு, இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களை அரசு தேர்ந்தெடுத்தபொழுது, அங்கு நடந்து கொண்டிருந்த பனைத்தொழிலைக் கொண்டு பாமர மக்களுக்குப்பணி கொடுத்து, பஞ்சம் தாங்கி மரமான பனையின் உற்பத்தியை பெருக்கி, ஏழைகளுக்குத்தமிழக அரசு உதவ ஆரம்பித்தது.

## மத்தூர் பனைப் பண்ணை

பனை ஏறும் பயிற்சியில் நவீன ஏணி முறையை எல்லா ஏழை வாலிபர்களும் கையாள 100 வாலிபர்களுக்கு, மத்தூரில் பயிற்சியளித்து, பயிற்சி முடிந்த பின் அரசுக்குச் சொந்தமானதும், சில குறிப்பிட்டவர்கள் அனுபவித்து வந்ததுமான, அரசாங்க பனைகளையும், முக்கியமாக 2 (சி) பட்டா பனைகளையும் அரசு, இந்த வாலிபர்களுக்கு வாங்கித் தந்து அவர்களது உற்பத்தி முழுவதையும் மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையத்தின் மூலம் கொள்முதல் செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

வறட்சியான மத்தூர் கிராமத்தில் 15.28 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 1979-80ல் பனைப் பண்ணை சென்னை மாநில பனை வெல்ல கூட்டுறவு இணையத்தால் ஆரம்பிக்கப்பட்டு பனை ஏறும் பயிற்சி, பனை வெல்ல உற்பத்தி பிரிவு, பனை





சுற்றுலாத்துறை
சுற்றுலாத்துணைவர் பயிற்சி
தொடக்கவிழா.. மதுரை. 2-3-83.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் சார்பில் "சுற்றுலாத் துணைவர் பயிற்சித் திட்டம்', மதுரையில் 2.3.1983 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு சுற்றுலாத்துறை, மற்றும் தொல் பொருள் ஆய்வுத்துறை ஆகியோருடன் இணைந்து 30 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற சுற்றுலாத் துணைவர்கள், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமேசுவரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் சுற்றுலாத் துணைவர்களாகப் பணியாற்றுவார்கள்.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஊதியத்தைச் சுற்றுலாப் பயணிகளிடம் பெற்று, வழித்துணைவராகச் செயலாற்ற இவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். சுற்றுலா, வரலாறு, பண்பாடு, தொல்பொருள், கலை முதலிய துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு இப்பயிற்சி ஆறு வாரங்களுக்கு மதுரையில் நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசுதான், இந்தியாவிலேயே முதன் முதலாக, மத்திய அரசுடன் இணைந்து, இது போன்றதொரு பயிற்சியை நடத்துகிறது. தென் மாவட்டங்களில் சுற்றுலாத் துணைவர்கள் போதிய அளவு இல்லை என்ற குறை இப்பயிற்சியால் நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓலை, நார், பிரஷ் பிரிவுகளும், பனங்கற்கண்டு, பாம் கூலா பானம் தயாரிப்பு, பனஞ்சீனி மிட்டாய் தயாரித்தல் போன்ற பிரிவுகளை ஆரம்பித்து அங்குள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்து பயிற்சி அளித்து ஆண்டுதோறும் 1,600 ஏழைகள் பயனடைவதை பார்த்தோர் பனையின் சிறப்பை புகழ்கின்றனர். மத்திய அரசு அதிகாரிகள் ஆச்சரியமடைந்து பாரத முழுதும் இத்திட்டத்தை மேற்கொள்ள ஆசைப்படுகிறார்கள்

வறட்சியால் வாடும் கிராம மக்கள், பனைகளைக் கொண்டு மத்தூர் பனைப் பண்ணையில் மட்டும் தயாரித்த பொருள்களின் மதிப்பு வருமாறு:

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை மதிப்பு |
|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் |
| 1979—80 | 7,923 | 3,977 |
| 1980—81 | 14,427 | 5,685 |
| 1981—82 | 3,04,067 | 2,10,123 |

தினக் கூலி தினம் 2 ரூபாய் கூட சம்பாதிக்க இயலாத வறண்ட மத்தூர் ஏழை மக்கள் பனைத் தொழில் மூலம் ஆண்கள் தலா தினம் ரூ. 6 வரையிலும், பெண்கள் தலா ரூ. 4 வரையிலும் சம்பாதித்து வாழ்கின்றனர்.

மாரியூர், சாயல்குடி, தரமான கருப்பட்டியும், ஸ்ரீவில்லி புத்தூர், பொடிவட்டும், செவலபட்டி அரிசன சங்கம் தயாரிக்கும் அருமையான வெல்லமும், தங்கச்சிமட சரகத்தில் சகல வகுப்பினர்களும் முடையும் சாரோலை பாய்களும், சித்தார்கோட்டை முஸ்லீம் சகோதரிகள் பின்னும் ஓலைத் தடுக்கும், இராமநாதபுரம் சதுர விசிறியும், திருப்புல்லாணி கூடைகளும், மானாமதுரை ஏற்றுமதி ஓலைச் சாமான்களும், சிவகெங்கை வர்ணக் கொட்டான்களும், முனைவென்றி நார்க் கடகமும், கமுதி கடகப் பெட்டிகளும், கேப்பனூர் குருத்தோலைப் பாயும், மேலப்பசுளை விதைப் பெட்டிகளும், இம் மாவட்ட மக்கள் தயாரிக்கும் கைவினை மிகுந்த பனைப் பொருள்களாகும். திருப்புல்லாணி பனை ஈர்க்கும், காளாப்பூர் கருப்பு தும்பும், மானாமதுரை, சிவகெங்கை ஓலைச் சாமான்களும் கடல் கடந்து சென்று அயல் நாட்டு செலாவணியை அள்ளிவரும் பனைப் பொருட்கள்.

தமிழக அரசு முனைந்து, டி. பி. எ. பி. திட்டத்தை செயல்படுத்தியது. பட்டிதொட்டிகளில் எல்லாம் படித்தும் வேலையில்லாதபெண்கள் அனாதைகள், விதவைகள் நலனுக்காக நூற்றுக்கணக்கான பயிற்சி முகாம்களை இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவுச் சம்மேளனம் நடத்தியது. சாதி, மத வேறுபாடின்றி சகலரும் பயிற்சி பெற்றனர். கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு, பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டு ஓலை, நார், தும்பு பொருள்களை தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மானியமும், கடனும் வழங்கப்பட்டு, தொழில் தொடர்ந்து பெறுகின்றனர். வேலையற்றவர்கள் வேலை பெற்றனர். நிதியில்லாதார் கடன் மானிய வசதி பெறுகின்றனர். இதுவரை,

லேவா தேவிகாரர்களிடம் கடன் வாங்கி, அதிக வட்டியும், குறைந்த விலையில் வெல்லமும், விற்ற ஏழை பனைத் தொழிலாளர்கள் 900 ரூபாய் வங்கிக் கடனும், 300 ரூபாய் மானியமும் பெற்றனர். இலகுவில் பனைகளை குத்தகைக்கு எடுக்கிறார்கள். விறகு சேமிக்கிறார்கள். நவீன பாத்திரங்களைக் கொண்டு பெண்கள் நயமான வெல்லம் செய்து கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்று நியாயமான விலை கூடிய ஊதியத்துடன் பெறுகின்றனர்.

ஏழைப் பனைத்தொழிலாளர்களை இதுவரை நம்பாத வங்கிகள் முன்னோடி பாங்குகள் ( Lead Banks ) பனைத் தொழிலாளர்களுக்குத்தாராளமாய்க்கடன் வசதி தருகின்றன.'மாவட்ட கூட்டுறவு சம்மேளனத்தின் உதவியால் வசூலிக்கிறது. வல்லுநர்களை வங்கிகளுடன் இணைத்து தொடர்ந்து தொழில் நடத்த தேவையான நிதி வசதி பெற்று, ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தும் ஒருநல்ல பழக்கத்தை உண்டு பண்ணி, 20 அம்ச திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு.

**ஊரக சமூகவியல் ஆய்வு**

**ஊ**ரக சமூகவியல் ஆய்விற்காக தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பாரத மாநில வங்கி ரூ. 5 இலட்சத்திற்கு 'பேராசிரியர் இருக்கை' நிறுவ இசைவு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் கோவை மற்றும் தஞ்சை மாவட்ட கிராமங்களின் ஊராய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 'பேராசிரியர் இருக்கை' யின் ஊரக சமூகவியல் திட்டத்தைப் பிற மாவட்டங்களில் விரிவுசெய்ய ரூ. 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும், பனைத்தொழிலும்

ஐ. ஆர். டி. பி. என்று சுருக்கமாய் சொல்லப்படும் இத்திட்டம் பனைத் தொழில் மூலம் கிராமங்களில் சமுதாய, பொருளாதாரப் புரட்சி செய்து வருகிறது.

சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ள ஒரு சில பிரிவினரால் மட்டும்கையாளப்பட்டு வந்த பனைப் பொருள் உற்பத்தித் தொழிலை பட்டிதொட்டிகளில் உள்ள ஏழை எளிய குடும்பங்கள் எல்லோரும் கையாளச் செய்தது இத்திட்டமாகும். மாதம் ரூ. 125 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. எல்லா இனத்தவரும், முக்கியமாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சுமார் 35 வயதிற்குட்பட்ட பெண்கள், ஆண்கள், படித்தவர், படிக்காதவர், தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்த கிராமத்திலேயே பனை ஓலைப் பொருள்கள், உற்பத்தி, பனந்தும்பு உற்பத்தி, பனை நார்ப் பொருள் உற்பத்தி ஆகியவற்றில் ஆறுமாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநிலப் பனை வெல்ல கூட்டுறவு சங்கம், நேரடியாகவும், மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள மூலமாகவும், தமிழகமெங்கும், பனைவளரும் இடங்களிலெல்லாம் பயிற்சி கூடங்கள் நடத்தி ஆயிரக்கணக்கான வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பையளித்து வருகிறது.

மூலப் பொருள் உள்ளூரில் கிடைப்பதால், கிராமத்தில் கிடைக்கும் 30 பேர் உட்காரும் ஒரு சாதாரண இடத்தை வாடகைக்கு எடுத்து பயிற்சி பெற்ற பெண் ஆசிரியர்களை நியமித்து, நவீன உற்பத்திக் கருவிகளைத் தந்து, பாடத்திட்டம் வகுத்து, பனைப் பொருள்கள் தயாரிப்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக்கான செலவு மாணவர்க்கு மாதம் ரூ. 50 வீதம் ஆறு மாதங்களுக்கு பயிற்சி தரும் நிறுவனங்கள் முக்கியமாக பனை வெல்ல கூட்டுறவு இணையங்கள் பெறுகின்றன. ஒரு யூனிட்டுக்கு அரசு தரும் உதவி

ஓலைப் பொருள் பயிற்சி

| | |
|---|---|
| பயிற்சி பெறுவோர் | 30 நபர்கள் |
| காலம் ... | 6 மாதம் |
| உபகாரச் சம்பளம் தலா மாதம் | ரூ. 125 |
| நபர் ஒன்றுக்கு இலவசக் கருவிகள் மதிப்பு ... | ரூ 100 |
| மூலப்பொருள் | ரூ. 200 |
| நடத்தும் நிறுவனம் பெறும் பயிற்சி மானியம் ... | ரூ. 9000 |

ஆக ரூ. 40,500 மானியத்தில் ஆறு மாதத்தில் 30 கிராம மக்கள் பயிற்சி பெற்று, பயிற்சி பெறறவுடன் தாங்கள பெற்ற கருவிகளைக் கொண்டு தினம் ரூ 4 சம்பாதிப்பதை கண்கூடாக கண்டு தெரியலாம். ஆகவே தலா ரூ 1350 செலவில் ஒரு கிராமவாசி பயிற்சி பெற்று வருமானம் பெறுவதில் பனைத்தொழில் இன்று தமிழகத்தில் முன்னோடியாக உள்ளது.

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் பணியில்லாமல் அவதிப்படும் வாலிபர்களுக்குள்ள பிரச்சனைகள்



இல்லை. பயிற்சி முடிந்தவுடன் அருகில் உள்ள பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களில் சேர்க்கப்படுகின்றனர். சங்கங்கள் இல்லாத ஊர்களில் குறைந்தது 100 பயிற்சியாளர்களை கொண்டு, பனைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உடனே நிறுவப்படுகின்றன. தாலுகா மட்ட சங்கங்கள் ஊராட்சி ஒன்றிய மட்டத்தில் சங்கங்கள் தனியான சங்கங்களும், கதர் வாரியத்தால் பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்குகின்றன. சங்கம் அமைக்க இயலாத பட்சத்தில் மாநில, மாவட்ட கூட்டுறவு இணையங்கள் நேரடியாக உற்பத்தி யூனிட்டுகளாய் நடத்துகின்றன. இதில் பயிற்சியாளர்கள் பெறும் உதவிகளாவன :—

| | |
|---|---|
| (1) 4 சதமான வட்டியில் — | ரூ. 300கடன் |
| (2) மானியம் ... | ரூ. 100 |
| (3) கருவிகள் மானியம் ... | ரூ. 100 |

(4) உற்பத்தி செய்யும் பொருள்களை உடனுக்குடன் சங்கத்தில் விற்று உடன் பணம் பெறும் வசதி.

(5) சங்கத்தை நடத்த ஒரு மேற்பார்வையாளரின் ஒரு வருட இலவச சேவை.

(6) உற்பத்திக்கு தேவையான மூலப் பொருள்களை சங்கத்தின் மூலம் பெறும் வசதி.

(7) தேசிய வங்கிகளுடன் நேரடி தொடர்பு.

### பனைப் பொருள் பெருவளத் திட்டம்

காவோலை தொங்கி, கவனிப்பாரற்று காட்டில் வளரும் சுமார் 10,000 பனை மரங்களைக் கொண்டு 10 ஏக்கர் நிலப்பரப்பில் 1,000 வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க, ' பனை பெருவளத் திட்டம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சென்னை குமரப்பாபுரத்தில் இயங்கும் பனை பெருவளத் திட்ட அடிப்படையில் ஆரம்பிக்கப்படுகின்றது. ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் பனைகளிலிருந்து உண் பொருள், உண்ணாப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் மதிப்புள்ள பனைப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு பட்டிதொட்டிகளிலும் பட்டணங்களிலும், நகரங்களிலும் நாகரிகப் பொருள்களாக விற்பனையாகின்றன.



## தமிழ்நாட்டில் 20,000 வீடுகள் கட்டத் திட்டம்

**த**மிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழ்நாடு முழுவதும் ரூ. 40 கோடி செலவில் 20 ஆயிரம் வீடுகள் கட்ட இந்த ஆண்டில் (1983-84) திட்டமிட்டுள்ளது. இதில் 10,604 வீடுகள் பொருளாதார ரீதியில் நலிந்தவர்களுக்காக ஒதுக்கப்படும். சென்னை நகரில் மட்டும் புதிய குடியிருப்புகள் கட்ட இதில் ரூ 20 கோடி ஒதுக்கப்படும். அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் பகுதியில் 96 "டி" டைப் வீடுகளும், 48 'பி' டைப் வீடுகளும் கட்டப்படும். இதற்கு ஆகும் செலவு ரூ. 91 இலட்சத்து 93 ஆயிரம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வியாசர்பாடி பாரதி நகரில் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு (எம்ஐஜி) 60 வீடுகளும், அதிக வருவாய் உள்ளவர்களுக்கு (எச்ஐஜி) 42 வீடுகளும் கட்டப்படுகிறது. ரூ. 72 இலட்சத்து 17 ஆயிரம் செலவில் இவை கட்டி முடிக்கப்படும்.

சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர், மடிப்பாக்கம் ஆகிய பகுதிகளில் மொத்தம் 785 ஏக்கர் நிலம் வாங்கி, புதிய குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் குண்டூர், நாவல்பட்டு உள்பட 3 கிராமங்களில், 998 ஏக்கர் நிலம் வாங்கி புதிதாக வீடுகள் கட்டவும், தர்மபுரியில் ரூ 22 இலட்சம் செலவில் நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு 95 வீடுகள் கட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சி வாரியம் (ஹட்கோ) நிதி உதவி செய்கிறது.

இதேபோல நீலகிரி மாவட்டம், குன்னூர் வண்ணாரப்பேட்டையில் ரூ. 28 இலட்சம் செலவில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு 160 வீடுகளும், ரூ. 33 இலட்சம் செலவில் நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு 60 வீடுகளும், அதிக வருவாய் உள்ளவர்களுக்கு 35 வீடுகளும் கட்டப்படுகிறது.

வீட்டுவசதித் திட்டங்களுக்கு இந்த ஆண்டு தமிழக அரசு ரூ. 22 கோடியே 85 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இது கடந்த ஆண்டில் கிடைத்ததைவிட, ரூ. 10 கோடியே 27 இலட்சம் அதிகமாகும்.

—1.3.83 அன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு வேலூர் நாராயணன் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து....

ஏற்கனவே கிராமங்களில் வாழும் தாழ்த்தப் பட்டவர்கள் மலைவாசிகள், பனை ஏற்றம், பனை ஓலைப் பொருள் உற்பத்தி, பனந்தும்பு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். திருநெல்வேலி, இராம நாதபுரம், தர்மபுரி, செங்கல்பட்டு மாவட்டங் களில், தாழ்த்தப்பட்டோர், பனை ஏறி, பதநீர் இறக்கி, வெல்லம் செய்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கம் பகுதியில் 12 பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் தாழ்த்தப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. சுமார் 2000-க்கு மேற்பட்ட வர்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினர்கள் 10 சங்கங்களில் தாழ்த்தப்பட்டவர்களே தலைவர் களாயிருந்து சங்கங்களை நடத்துகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம், செவல்பட்டி சங்கமும், தர்மபுரி மாவட்டம் கம்பைநல்லூர் சங்கமும், திருநெல்வேலி மாவட்டம் சிதம்பரம் நகர் சங்கமும் பாராட்டிற்குரியன. மாநில மாவட்ட கூட்டுறவு இணையங்கள் இந்தச் சங்கங்களுக்கு விசேட சலுகைகளை அரசிடம் வாங்கித் தந்து வருகின்றன.

**பசியைப் போக்கும் தும்பு**

பஞ்சம் வஞ்சம் தீர்த்தாலும், அஞ்சாது நிமிர்ந்து நிற்கும் பனைமரங்கள் தங்களை அண்டிய வர்களை காப்பாற்றுவதில் பின் வாங்குவதில்லை. ஆண்டு முழுவதும் பனந்தும்பை தந்து தாழ்த்தப் பட்டவர்களை வாழ வைக்கின்றன.

சேலம், திருச்சி, தர்மபுரி, செங்கல்பட்டு, மதுரை, முதலிய மாவட்டங்களில் வாழும் தாழ்த் தப்பட்டோ, முக்கியமாய் தோல் பதனிடும் தொழி லாளர் குடும்பங்கள், (அருந்ததியார்) பனந்தும்பு தயாரிப்பதில் கை தேர்ந்தவர்கள். வேடசந்தூர், ஏரிகோடு, கெ. பரமத்தி, மேச்சேரி, துளசம்பட்டி போன்ற இடங்களில் பெருமளவில், பனந்தும்பை தயாரித்து வாரச் சந்தைகளில் கொண்டு வந்து விற்கின்றனர். ஐ. ஆர். டி. பி. திட்டத்தினால் ஏராளமான பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு தும்பை சுத்தம் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டு, அதிக ஊதியம் கிடைக்க வழி வகை செய்யப்படு கிறது.

**ஸ்பெஷல் காம்போனென்ட் பிளான்**

பனைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மேலும் ஈடுபட வேண்டியவர்களுக்கும் ஸ்பெஷல் காம்போனென்ட் திட்டத்தை மத்திய மாநில அரசுகள் தமிழகத்தில் ஆரம்பிக்கின்றன. கதர் வாரியத்தின் கீழ் இயங்கும் மாநில, பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் இந்தப் பணியை சிறப்பாய் செய்து வருகிறது.






செங்கல்பட்டு மாவட்டம் பனைப்பொருள் வளர்ச்சியில் பின் தங்கியிருந்தமையாலும், பனைகள் பயன்படுத்தப்படாமலிருந்தமையாலும், இந்த மாவட்டம் 1981-82-ல் ஐ. ஆர். டி. பி. திட்டத்தை வைத்து வறுமைக் கோட்டின் கீழுள்ள வர்களை வாழ வைக்க வழிவகைகள் செய்ய மாதிரி மாவட்டமாய் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(1) 40 கிராமங்களில், தலா 30 பெண்கள் விதம் 1200 கிராமவாசிகளுக்கு, தும்பு சேகரித்தல், நார்ப்பொருள் செய்தல், ஓலைப்பொருள் செய்தல் ஆகிய தொழில் முறைகள் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

(2) 6 மாத பயிற்சிக்குப் பிறகு, இவர்கள் அருகில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் சேர்க்கப் பட்டனர்.

(3) இடைக்கழி நாடு மகளிர்பனைபொருள் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, 300 பெண்களும், கெ. ஜி. கண்டிகை என்ற சங்கம் அமைத்து 200 பெண்களும் உறுப்பினர்கள் ஆக்கப்பட்டனர்.

இந்த இரண்டு சங்கங்களுக்கும் ஒவ்வொரு செயலரின் ஓராண்டு இலவச சேவை தரப்படு கிறது.

(4) 1200 நபர்களுக்கும் இலவச உப கரணங்கள் வழங்கி உற்பத்தியை சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டது.

(5) இவர்கள் உற்பத்தி செய்யும் பனைப் பொருள்களை விற்க தலா ரூ. 22,000 மதிப்பில், சென்னை, மகாபலிபுரம், திருத்தணி, மேல்மருவத் தூர் போன்ற இடங்களில் விற்பனை நிலையங்கள் அமைத்து, விற்பனை செய்யப்படுகின்றன.

(6) கடப்பாக்கத்தில், இயங்காமலிருந்த பனஞ்சீனி ஆலையை இயங்க வைத்து, சுமார் 200 நபர்கள் பணி செய்ய ரூ. 3.82 இலட்சத்தில் ஏற் பாடு செய்யப்பட்டது.

(7) செங்கல்பட்டு, குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் மேலும் வேலை வாய்ப்பளிக்க தொழில் கூடம் அமைத்து, அதிகப்படியான இயந் திர சாதனங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளது.

எனவே அரசு அமல் நடத்தும், பல்வேறு திட் டங்களில் பனைத் தொழில் மூலம், வேலைவாய்ப் பளிப்பது முக்கியமாய் செயல்படுத்தப்படுகிறது. பசி போக்கும் பதநீர், வெல்லம் தருவதுடன் லட்சக் கணக்கான கிராம வாசிகளின் வறுமையை ஒழித்து எளியவர்களுக்கு ஏற்றமளிக்க பனைத்தொழில் உதவுகிறது என்பதை நாம் அறியலாம்.

# மனம் கவர் மலர்க் காட்சி

—சாமிபழ



நகரை அழகுபடுத்துவதிலும் நகர வாழ்க்கையின் சலிப்பைப் போக்குவதிலும் சிறப்பான பங்கு வகிப்பது பூங்காத்துறை.

சென்னை மாநகராட்சி 300 ஏக்கர் பரப்பில் 85 பூங்காக்களை நிறுவியுள்ளது. சாலைப் போக்கு வரத்துக்கென ஏற்பட்ட திடல் களில் தோட்டங்கள் அமைக்கப் பட்டு, 34 திடல்களில் தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள், நிறுவ னங்கள் மற்றும் தனியார் நிறு வனங்கள் பராமரித்து வருகின் றன.

மாநகராட்சி, பூங்காத்துறை யின் ஒரு முக்கிய அம்சமாக ஆண்டுதோறும் 'மலர்க் காட்சி' யை நடத்தி வருகிறது.

அண்மையில், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 'மைலேடி' பூங்காவில் 5-3-83-ல் 58-வது மலர்க்காட்சியை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு, மாநகராட்சித் தனி அலுவலர் திரு. தி. து. சுந்தர்ராஜ் தலைமை வகித்தார். ஆணையர் திரு கு. ர. கருப்பண் ணன் அனைவரையும் வரவேற் றார்.

மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா தமது தொடக்க உரை யில் குறிப்பிட்டதாவது:

''வளர்ந்து வரும் பெருநகரங் களில் இதுபோன்ற மலர்க் காட்சிகள் மக்களுக்குப் பெரிதும் பயன் உள்ளதாக அமையும். மலர்க்காட்சிகள் அழகுணர்ச்சி யைத் தூண்டும். இவை இளை ஞர்கள், தோட்டக் கலை வல்லு நர்கள், மாணவர்கள் போன்ற பலதரப்பட்டவர்க்கும் பயனுள்ள தாக இருக்கும்.

''மரங்கள் வளர்ப்பது, பூங் காக்கள் அமைப்பது ஆகியவற் றால்தான் ஒரு நகரம் பொலிவு பெறும். சென்னையில் பல பூங்காக்கள் இருப்பதால் அது அழகும் சிறப்பும் வாய்ந்ததாக விளங்குகிறது.

''பெருநகர வளர்ச்சியில் இது போன்ற பூங்காக்களைக்கூடச் சிலர் வீடுகளாக மாற்றிவிடு வார்கள். இதனை நன்கு கண் காணித்துத் தவிர்க்க வேண்டும். நகரைத் தூய்மையாக்கும் பணி யில் மாநகராட்சி இன்னும் தீவிர மாக ஈடுபட வேண்டும்''

பின்னர், சென்னை மாநகரில் சிறப்பான முறையில் நிர்வகிக்கப் படும் அழகிய பூங்காக்களுக்கான பரிசுகளை, அப்பூங்காக்களை நிர்வகிக்கும் நிறுவனங்களுக்கு மேதகு ஆளுநர் வழங்கினார்.



பரிசு பெற்ற சாலை மையப் பூங்காக்களும், அவற்றை நிர் வகிக்கும் நிறுவனங்களும் வரு மாறு:

முதற் பரிசு : அண்ணா மேம் பாலத்தின் கீழ் உள்ள பூங்கா, டி. ஐ. நிறுவனம்.

இரண்டாம் பரிசு : தியாகராய நகரில் பனகல் பூங்கா எதிரில் உள்ள பூங்கா, இந்தியன் ஓவர் சீஸ் வங்கி.

மூன்றாம்பரிசு: போர்நினைவுச் சின்னம் எதிரில் உள்ள பூங்கா, நியூ இந்தியா மாரி டைம் ஏஜன் ஸீஸ்.

சிறந்த பூங்காவுக்கான பரிசை பெரியார் நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்கா பெற்றது.

மாநகராட்சிப் பள்ளிகளுக் கிடையே நடைபெற்ற போட்டி யில் பரிசு பெற்ற பள்ளித் தோட் டங்கள் :

முதற் பரிசு : மாநகராட்சி நடு நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை.

இரண்டாம் பரிசு: மாநக ராட்சி நடுநிலைப் பள்ளி, ரங்க சாமி தெரு, பெரம்பூர்.

மூன்றாம் பரிசு: மாநகராட் சித் தொடக்கப் பள்ளி, சிவராஜ புரம்-சேத்துப்பட்டு.



# தமிழரசு

## இதழ் பற்றி ஆராய்ச்சி செய்தவர்

ஆராய்ச்சிகள் செய்வதற்குப் பல துறைகள், பல பொருள்கள் (Subjects) இருக்கின்றன. அவ்வாறு பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சிகள் செய்து, 'எம்.பில்.,' மற்றும் 'டாக்டர்' பட்டம் பெற்று வருகிறார்கள் மாணவ மணிகள்

ஒரு மாணவர் ஆராய்ச்சி செய்ய எண்ணினார் அவர் சிந்தனையில் பல 'பொருள்கள்' அலைமோதின. ஆனால், இறுதியில் வெற்றி பெற்றது 'தமிழரசு' தான்!

ஆம். தமிழக அரசின் அதிகாரபூர்வமான ஏடான 'தமிழரசு' இதழைப் பற்றி ஆராய்ச்சி செய்வதென முடிவுக்கு வந்தார். செயலிலும் முனைந்து நின்றார்.

அந்த மாணவர் யார்?

சேலம் மாவட்டம், சலகண்டபுரத்தைச் சேர்ந்த திரு ச. பெ. சிவலிங்கம்.

வேளாண்மைத் தொழிலில் தந்தைக்கு உதவி செய்து கொண்டே பள்ளி இறுதி வகுப்பை முடித்தார். அதன்பின் சேலம்-நேவலூர் கந்தசாமிக் கண்டர் கல்லூரியில் சேர்ந்து புகுமுக வகுப்பும், தமிழ் இளங்கலைப் பட்டமும் படித்து அக் கல்லூரியின் முதல் மாணவராகத் திகழ்ந்தார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைத் தமிழ் வகுப்பில் சேர்ந்து முதல் வகுப்பில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் தலைவராகவும் இருந்திருக்கிறார். அதன்பின் ஆராய்ச்சி செய்ய முனைந்து பச்சையப்பன் கல்லூரியிலேயே எம்.பில்., பட்ட ஆராய்ச்சி வகுப்பில் சேர்ந்தார்.

"என்னுடைய ஆய்வுக்குப் புதுமையான ஒரு தலைப்பினை எடுக்க முனைந்தேன். அதற்கேற்ப இதழ்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய எண்ணினேன். அதனிடையில் தமிழக அரசு மக்களுக்குச் செய்யும் பணிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் என் மனம் தூண்டியது. இரண்டினையும் ஏற்கும் வண்ணம், தமிழக அரசின் தனிப்பெரும் தரமுள்ள இதழான 'தமிழரசு' இதழினை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்.

"என் ஆய்வுக் காலப் பொழுதில் 'தமிழரசு' இதழ் அலுவலர்கள் அனைவரும், ஆய்வுக்குத் தேவையான அனைத்தையும் எந்த நேரத்திலும் மனங்கோணாது அளித்து உதவினார்கள். மேலும் அலுவலகத்தில் குறிப்பெடுக்க அனுமதித்து இடங்கொடுத்து உதவியதுடன் கிடைத்தற்கரிய பல செய்திகள் கிடைக்கவும் வழி செய்தனர். அவர்களின் உதவியினால்தான் இந்த ஆய்வையே நான் செம்மையாகச் செய்ய முடிந்தது" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் 29 வயதான இம்மாணவ மணி. —பி. வி. ஜி.

## கிராமங்களில் குடிநீர் வழங்க ரூ. 20 இலட்சம் அனுமதி

தமிழகத்திலுள்ள பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் உள்ள கிராமப்புறங்களில் குடிநீர் வழங்க - வறட்சியினைப் போக்க 1981ம் ஆண்டில் பாசனக் குளங்களின் அருகே தோண்டப்பட்ட 237 திறந்த கிணறுகள் மற்றும் சில சமுதாயக் கிணறுகள் ஆகியவற்றின் அருகே. நீர் இறைக்கும் இயந்திரம் நிறுவி, நீரை இறைத்துத் தொட்டிகளில் நிறைத்து நீர்வழங்குவது நல்லது என்று கருதப்படுவதால் சுமார் 200 டீசல் இயந்திரங்கள் வாங்குவதற்காக தமிழ்நாடு அரசு ரூ. 20 இலட்சம் அனுமதித்துள்ளது.



அது ஒரு பயங்கரக் காடு!

அந்தக் காட்டில் கொடிய விலங்குகள் நிறைய இருப்பதால், அந்தப் பக்கம் போகவே மக்கள் அஞ்சுவார்களாம்.

அந்தப் பயங்கரக் காட்டில்—
இருள் சூழும் நேரத்தில்—

ஒரு எருமை மாட்டுடன், இரண்டு பேர் சென்று கொண்டிருந்தால், எப்படி இருக்கும்....?

என்ன? தலை 'கிர்'ரென்று சுற்றுகிறதா?

வாருங்கள், 'கிர்' காட்டுக்குப் போவோம்!

குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிரா பகுதியில் உள்ளதுதான் சாசன் கிர் வனவிலங்குக் காப்பகம். இந்தக் காட்டில்தான் 'வன ராஜாக்கள்' நிறைய இருக்கிறார்கள்.

இந்தப் பெரிய காட்டுக்குப் போகிற பாக்கியமும், அங்குள்ள சிங்கங்களைத் தரிசிக்கிற நல்ல வாய்ப்பும் பத்திரிகை நிருபர்களாகிய எங்களுக்குக் கிடைத்தன.

நாங்கள் அந்தக் காட்டுக்குப் போன சமயம், நூற்றுக்கணக்கான கார்கள் அங்கு வரிசையாக நின்று கொண்டிருந்தன. ஏராளமான சுற்றுலாப் பயணிகள் சிங்கங்களைக் காணவே அங்கு வந்திருந்தார்கள். நாங்களும் சிங்கங்களைப் பார்க்கப் போகிறோமே என்ற பரவசத்தில் (பயத்திலும் கூட!) ஆயத்தமானோம். இவ்வாறு சுற்றுலாப் பயணிகளைக் காட்டுக்குள் அழைத்துச் சென்று சிங்கங்களை வரவழைத்துக் காட்டுவதை' Lion Show ' என்கிறார்கள்.

காட்டுக்கு உள்ளே இருக்கும் சிங்கத்தை எப்படி வரவழைப்பது?

பத்திரிகை நிருபர்கள் உட்பட எல்லாரும் நின்று கொண்டிருக்கிறோம். நாங்கள் நிற்கிற இடத்திலிருந்து 25 அடி தூரத்தில், ஒரு மரத்தில், ஒரு எருமைமாடு கட்டப்பட்டிருக்கிறது. அதன் இருபுறங்களிலும் வனப்பாது



அண்ணல் பிறந்த மண்ணில் ஆறு நாட்கள்!

# காடு ஒன்று சிங்கங்கள் இருநூறு!

பி. வி. கிரி



'வனராஜாக்கள்' யார் வரவை எதிர்பார்க்கிறார்கள்?

காவலர்கள் இருவர் கையில் தடியுடன் நிற்கிறார்கள்.

அதோ.....அதோ....

சிங்கம் ஒன்று வருகிறதே..ஆம் அது எருமை மாடு உள்ள இடத்திற்குச் சற்றுத் தள்ளி நிற்கிறது-படுக்கிறது, எழுகிறது-இருப்புக்.கொள்ளாமல் தவிக்கிறது....... எருமை மாட்டிற்கு இருபுறமும் காவலர்கள் வேறு.

அதோ! இன்னொரு சிங்கமும் வருகிறதே...அதுவும் இப்படியும் அப்படியும் உலவுகிறது. எருமை மாட்டைப் பார்க்கிறது. எங்களையும்தான்! இரண்டு சிங்கங்களும் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கின்றன. ஒன்று பொறுமையிழந்து எருமை மாட்டை நோக்கித் தாவ எத்தனிக்கிறது. உடனே வனப்பாதுகாவலர், தம் கையிலுள்ள தடியால் அதை அடிப்பது போல பாவனை செய்கிறார். அந்தத் தடிக்கு என்ன மந்திரச் சக்தியோ தெரியவில்லை, சிங்கம் 'கப்சிப்' பென்று சற்றுத் தள்ளிப்போய் அவரை முறைக்கிறது!

'ஒரே ஒரு காட்டில் ஒரே ஒரு சிங்கம் இருந்தது!' என்று கதையில் படிக்கிறோம், சொல்லக் கேட்கிறோம். ஆனால், நேருக்கு நேர், இயற்கைக் காட்டில், இயல்பாகத் திரியும் பெரிய பெரிய சிங்கங்களை அதுவும் 25 அடி தொலைவிலிருந்து ஏன், கொஞ்சம் குளோசப்'பில் கூடப் பார்ப்பது என்பது எவ்வளவு திரச் செயல்! உலகத்திலேயே 'கிர்' காட்டில்தான் சிங்கங்களை 10-15 மீட்டர் தொலைவிலிருந்தே பார்க்க முடியும்.

''மனித வாடை பட்டாலே, விலங்குகள் மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து பாயும்'' என்பார்கள். ஆனால் இவ்வளவு கூட்டம் அதன் அருகாமையில் இருந்துங்கூட அவை ஒன்றுஞ் செய்யவில்லையே எப்படி?'' என்று எங்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்டோம்!

''வனப் பாதுகாவலர்களை அது சிறு வயது முதலே பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டது. அதனால் அவர்களுக்கு மட்டுமே அது அஞ்சும், அவர்கள் பார்வையாளர்களுக்கு ஒரு எல்லைக்கோடாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தாண்டி அது போகாது. அப்படித் தப்பித் தவறிப் போனாலும், பார்வையாளர் பக்கம் பாதுகாப்புக்காகத் துப்பாக்கியுடன் ஒருவர் தயாராக இருப்பார்..'' என்று வனத்துறையைச் சேர்ந்த ஒருவர் சொன்னதும், பக்கத்தில் திரும்பிப் பார்த்தோம். அவர் சொன்னதுபோல, வனப்பாதுகாவலர் ஒருவர் கையில் துப்பாக்கியுடன் தயாராக அங்கு நின்று கொண்டிருந்தார்!

உடனே வன அலுவலர் எங்களை வேறொரு இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு சிங்கமும், இரண்டு குட்டிகளும் இருந்தன. எங்களுடன் ஏராளமானவர்கள் அதைப் பார்த்தார்கள்.

அன்று இரவு, நாங்கள் தங்குகிற சுற்றுலாப் பயணிகள் விடுதியில் ஓர் வண்ணப்படம் காட்டினார்கள். கிர் காட்டில் எடுக்கப்பட்ட இந்த அழகிய வண்ணப் படத்தில், சிங்கங்களின் வாழ்க்கை மிகத் தத்ரூபமாகச் சித்திரித்துக் காட்டப்பட்டிருந்தது. படம் பார்த்துவிட்டு இரவு தூங்கச் சென்றோம். எல்லாருக்கும்' சிம்ம சொப்பனம்' தான்!



அகமதாபாத்தில் உள்ள அசைந்தாடும் ஸ்தூபிகளே (Shaking Minarets) இவை. வரலாற்றுச் சிறப்புமிக்க இவை கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் மட்டுமல்ல, காண்போரை வியக்கவும் வைக்கின்றன.





'ஆள் பாதி ஆடை பாதி' என்பார்கள். ஆனால் குஜராத்திலுள்ள ஆதிவாசிப் பெண்களைப் பார்த்தால், 'ஆள்பாதி அணிகலன் பாதி' என்று சொல்லலாம் போலிருக்கிறது.

'கிர் காடு, சிங்கங்களின் வாழ்விடத்திற்கு மிகவும் பெயர் பெற்றது. ஏன், இது உலக நாடுகளையே கவர்ந்திருக்கிறது. இங்கு வசிக்கும் சிங்கமும், ஆப்பிரிக்கக் காடுகளில் வசிக்கும் சிங்கமும் ஒரே வமிசத்திலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. பண்டைக் காலத்தில் கிரீஸ் முதல் வடகிழக்குப் பகுதிவரை ஓரளவு வறண்ட பிரதேசமாக இருந்த நிலப்பரப்புகளில் சிங்கங்கள் வசித்து வந்தன. பரந்து விரிந்த மிகப் பெரும் கிர்காடு, இதற்கே உரிய விலங்கு இனங்களைப் பாதுகாப்பதற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில், இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியிலும், மத்திய பகுதியிலும் தெற்கே நர்மதை ஆறுவரை சிங்கங்கள் தன்னிச்சையாகத் திரிந்து கொண்டிருந்தனவாம். ஆனால் இப்பொழுது ஆசியா முழுவதையும் எடுத்துக் கொண்டால், குஜராத் காடுகளில் மட்டுமே சிங்கங்கள் காணப்படுகின்றன. மனிதன் வேட்டையாடியதால் இவற்றின் எண்ணிக்கை 15 ஆகக் குறைந்துவிட்டது என்றாலும், 'சிங்கங்களை வேட்டையாடிச் சுட்டுக் கொல்லக்கூடாது' என்ற கண்டிப்பான உத்தரவின் காரணமாக, இவற்றின் எண்ணிக்கை சுமார் 205 ஆக இன்று பெருகியிருக்கின்றது. அதாவது 52 ஆண் சிங்கங்களும், 68 பெண் சிங்கங்களும், 13 நடுத்தர வயது ஆண் சிங்கங்களும், 14 நடுத்தர வயது பெண் சிங்கங்களும், 58 சிங்கக் குட்டிகளும், இப்போது இருக்கின்றன.



ஆதிவாசி சிறுவர்கள்

இந்தக் காட்டில் 161 சிறுத்தைப் புலிகளும், 760 ஓநாய்களும், 2036 நீல எருமைகளும், 2365 காட்டுப் பன்றிகளும், 1042 நான்கு கொம்புகளுடைய கலைமான்களும், 6895 குரங்குகளும் உள்ளன.

கிர் வனவிலங்குக் காப்பகத்தில் 28 'சிகாரிகள்' உள்ளனர். வனப் பாதுகாவலர்கள்தான் சிகாரிகள். சுற்றுலாப் பயணிகளைச் சுற்றிக் காண்பிப்பதற்காக வனத்துறையின் சார்பில் 10 ஊர்திகளும் உள்ளன. சிங்கங்களைப் பார்ப்பதற்கு நுழைவுக் கட்டணம் என்றும், வாகனக் கட்டணம் என்றும் வசூலிக்கப்படுகிறது.

காட்டுக்குப் போகிற வழியில் சுற்றுலாப்' பயணிகளுக்கான

அழகிய விடுதிகள் உள்ளன. விடுதியிலிருந்து மலைத் தொடரும், மரஞ்செடி கொடி வகைகளும், புல்வெளிகளும் நிறைந்த ரம்மியமான காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!



# கிராமப் பொருளாதாரத்தில் பால் பண்ணையின் பங்கு

விவசாயத்தோடு இணைந்து நடத்தப்பட்டு வரும் துணைத் தொழில்களில் பால் பண்ணைத் தொழிலும் ஒன்றாகும். பால் பண்ணைத் தொழில் விஞ்ஞான முறையில் நடத்தினால் அதிக வருவாய் அன்றாடம் கிடைக்க வாய்ப்புள்ளது.

பால் பண்ணை என்றவுடன் குஜராத் மாநிலத்தில் 'ஆனந்த்' என்னுமிடத்தில் 'அமுல் முறையில்' நடைபெற்று வரும் கூட்டுறவு நிறுவனம் நமக்கு ஞாபகம் வருகிறது. இங்கிருந்துதான் புகழ்வாய்ந்த 'அமுல் பால் பவுடர்' 'அமுல் வெண்ணை' 'அமுல் நெய்' 'அமுல் சாக்லெட்' போன்ற பால்பொருட்கள் தயாரிக்கப்பட்டு நாடெங்கிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**அதிக முலதனம் இன்றி நிறுவும் தொழில்:**

எந்த தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் அதிக மூலதனம் போட்டுஆரம்பிக்கவேண்டியுள்ளது. இதனால் பொருளாதார வசதிபடைத்தவர்கள் மட்டுமே தொழிலை ஆரம்பிக்கவும், அபிவிருத்திச் செய்யவும் ஏதுவாகிறது. இந்நிலையை மாற்றி சாதாரணமக்களும் சிறு தொழில்களை ஆரம்பிக்க வகை செய்யும் வகையில் நமது பாரதப் பிரதமரின் 20 அம்ச திட்டத்தின் உதவியால் தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கிகள் உதவியுடன் மூலதனம் இன்றி கடனுதவி பெற்று


**டாக்டர் ந. மாரிமுத்து,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோயமுத்தூர்.**


சிறு விவசாயிகள், மற்றும் நிலமற்ற விவசாயக்கூலி வேலை பார்ப்போர் வரை பால்பண்ணை தொழிலை ஆரம்பித்து தங்களது அன்றாட வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழிவகை ஏற்பட்டுள்ளது.

**மத்திய மாநில அரசு சலுகைகள்:**

பொருளாதார நிலையில் நலிவுற்ற யாவரும், பயன்பெறும் வகையில் வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதன்படி வங்கிகள் மூலம் பெறப்படும் கடன் பளுவை குறைக்கும் நோக்கத்துடன் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய சலுகைகளினால் இறு விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள் ஆகியோர் கடனில் 25 சதம் மானியமும், நிலமற்ற விவசாய கூலி பார்ப்போர் 33 1/3 சதம் மானியமும், ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் 50 சதம் மானியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கும் மானியச் சலுகைகளினால் கிராமத்தில் வாழும் பெரும்பாலான ஏழை மக்களும் கடனுதவியால் பால்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு தங்களது வறுமைப் பிணியிலிருந்து விடுபட்டு பொருளாதார முன்னேற்றப் பாதையில் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தவிர வேலையின்றி வாழும் பெரும்பாலோர் பால்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு சுய வேலைவாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**தொடர்ந்து வருமானம் கிடைக்க:**

கிராமத்திலிருப்போர் பருவ நிலைக்கேற்ற ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு சாகுபடி செய்வதால் கிடைக்கும் வருவாயும் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் கிடைக்கும் நிலை உள்ளது. பால்பண்ணைத் தொழிலில் அந்நிலை மாறி தொடர்ந்து வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. எவ்வாறெனில் ஒரு நபர் வங்கி கடனுதவி பெற்று வாங்கிய கறவை மாட்டிலிருந்து உற்பத்தியாகும் பாலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுச் சங்கத்தின் மூலம் கடன்தொகை திருப்பிக் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் கடன் பளு எளிதில் குறைந்து விடுகிறது. இவ்வாறு ஒழுங்காக கடன் தொகையைத் திருப்பி கட்டும் ஒவ்வொருவருக்கும் 6 அல்லது 7 மாத இடைவெளிக்கு பின்னர்மேலும் இரண்டு கறவைமாடுகள் வாங்க வழியுள்ளது. இவ்வாறு வாங்கப்படும் மூன்று கறவை மாடுகளில் கன்றுகளும் சினைப்பிடித்து, கன்று ஈன்று, தாய்ப்பசுக்களும் கிடாரி கன்றுகளும் தொடர்ந்து வருவாய் கிடைக்க வழி வகிப்பதோடு பால்பண்ணையின் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகிறது.

பால் பெருக்குத் திட்டத்தின் மூலம் 1984-85-க்குள் 34,000 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நாடெங்கிலும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 14 மில்லியன் விவசாய நண்பர்களுக்கும் மேலாக பால் பண்ணையின் மூலம் பலன் பெறவுள்ளனர். இத்தகைய திட்டங்களினால் 32 மில்லியன் டன் பால் உற்பத்தி என்ற நிலையிலிருந்து மாறி 38 மில்லியன் டன் பால் உற்பத்தி குறியீட்டை அடைய வாய்ப்புள்ளது. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு பால் 132 கிராம் அளவுதான் தற்சமயம் கிடைக்கிறது. இந்நிலையிலிருந்து ஒரு நபருக்கு 144 கிராம் பால் தினம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் ஒவ்வொரு மனிதனின் தேக ஆரோக்கிய வாழ்க்கைக்குத் தேவையான பால் பொருட்கள் உற்பத்தியில் கணிசமான அளவை எட்ட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**கறவை மாடுகளில் இன்சூரன்ஸ் திட்டம்:**

நம் நாட்டுக் கறவை மாடுகளில் பால் உற்பத்தி திறன் குறைவாக உள்ளதால் அதிகம் பால்தரும் அயல் இன உயர்தர பொலி காளைக் கொண்டு செயற்கை இன அபிவிருத்தி செய்யப்படுகிறது. இதனால் நம் நாட்டு மாடுகளை விட நோய் தடுப்புத் திறன் செயற்கை இன அபிவிருத்தி மூலம் பிறக்கும் கலப்பின மாடுகளில் குறைவாகவே காணப்படுகிறது.

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்கள் கறவை மாடுகளுக்கு தேவையான கால்நடை மருத்துவ வசதி செய்து தரப்பட்டுள்ளது. தவிர அவசர சிகிச்சைக்காக டெலிபோன் செய்து தகவல் தெரிவித்தாலும் அல்லது நேரில் வந்து முறையிட்டாலும் அவசர சிகிச்சைப் பிரிவு கால்நடை மருத்துவர் அங்கு விரைந்து சென்று மாடுகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்திய விவசாயிகளின் உயிர் நாடி கால்நடைச் செல்வங்களே. நோயினாலோ அல்லது விபத்தினாலோ கடனுதவி மூலம் வாங்கப்பட்ட கறவை மாடுகள் இறக்க நேரிடின், இதன் இழப்பை விவசாயிகள் தாங்கிக் கொள்ள முடியாது. எனவேதான் மேற்கூறிய காரணங்களால் ஏற்படும் நஷ்டத்தினின்று விவசாயிகளைக் காக்கவும், கறவை மாடுகள் வாங்கக் கடனுதவி செய்த வங்கிகளில் நலனைப் பாதுகாக்கவும் கால்நடைப் பாதுகாக்கும் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

கால்நடை இன்சூரன்ஸ் தொகை ரூபாய் 1000-க்கு பிரிமியமாக ரூ. 32.50 ஆண்டுக்கு ஒருமுறை வசூலிக்கப்படுகிறது. கால்நடை இன்சூரன்ஸ் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட நாடுகள் நோயினாலோ அல்லது விபத்தினாலோ இறக்க நேர்ந்தால் நட்ட ஈடு வழங்கப்படுகிறது.

பால் உற்பத்தியில் ஈடுபட விரும்புவோருக்குப் பால் பண்ணை நிருவாகத்தில் ஊக்கமூட்டும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் அஞ்சல்வழிப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இது தவிர பால் பண்ணையில் அதிகம் ஈடுபாடு கொண்டுள்ள கிராம மகளிருக்கு, வேளாண் பொருளாதாரத்துறையின் மூலம் போர்டு அறக்கட்டளை நிறுவனநிதி உதவியுடன் கிராமிய மகளிர் பால்பண்ணைப் பயிற்சி கோவையில் 15 தினங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

விவசாயத்தை மட்டும் நம்பி இருந்த ஒரு கிராமத்தில் பால்பண்ணை துவங்கப்பட்ட பின்னர் எவ்வாறு பொருளாதார முன்னேற்றம் காண முடிகிறது என்பதைக் கவனிப்போம்.

மேலே கண்டுள்ள விவரப்படி ஒரு கிராமத்தில் உபரி தொழிலாக ஆரம்பிக்கப்படும் பால் பண்ணைத் தொழில் எவ்வளவு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெரிய வருகிறது.

கிராம வாழ்க்கைத்தரம் உயரவும் அதிக பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி செய்வதால் அதிக புரதச்சத்து கிடைப்பதன் மூலம் புரதச்சத்து பற்றாக் குறையைப் போக்கி மக்கள் ஆரோக்கியமாக வாழ வழி செய்து தரும் வகையில் பால் பண்ணைத் தொழில் பெரும் பங்கு வகிப்பதோடு கிராம பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது.



| | | | |
|---|---|---|---|
| கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை | — | 100 | |
| அங்கத்தினர்களிடமுள்ள கறவை மாடுகள் | — | 100 பசு/எருமை | |
| தினம் உற்பத்தியாகும் பால் அளவு (லிட்டரில்) | — | பசுமாட்டிலிருந்து 8—9 | எருமைமாட்டிலிருந்து 6—7 |
| தினம் 100 மாடுகளிலிருந்து உற்பத்தியாகும் பால் அளவு (லிட்டரில்) | — | பசுமாட்டிலிருந்து 800—900 | எருமைமாட்டிலிருந்து 600—700 |
| சராசரி ஒரு லிட்டர் பாலுக்கு கிடைக்கும் விலை | — | ரூ. 2.25 | ரூ. 3.00 |
| தினம் உற்பத்தியாகும் பாலுக்கு கிடைக்கும் விலை | — | ரூ. 1800-2025 | ரூ. 1800-2100 |
| ஒரு மாதத்தில் கிடைக்கும் வருவாய் | — | ரூ. 54,000-60,750 | ரூ. 54,000-63,000 |
| ஆண்டு வருவாய் | — | ரூ. 6,48,000-7,29,000 | ரூ. 6,48,000-7,56,000 |

இக் கிராமத்தில் உற்பத்தியாகும் பாலிலிருந்து சுமார் ரூ. 6,48,000 லிருந்து ரூ.7,56,000 வரை ஆண்டு வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது.

# படமும் செய்தியும்



ரிசர்வ் வங்கி கவர்னர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களை 7-3-83-ல் சென்னையில் சந்தித்தார்.



சென்னைக்கு 6-3-'83-ல் வந்த மலாயா பிரதமர் டாக்டர் மகதீர் முகமது அவர்களுக்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தஞ்சாவூர் தட்டு ஒன்றினை வழங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. டாக்டர் எச். வி. ஹண்டே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன், தலைமைச் செயலர் (பொறுப்பு) திரு கே. சொக்கலிங்கம் ஆகியோர் உடன் உள்ளனர்.



வட சென்னை - தண்டையார்ப் பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அரிசி வழங்கினார். குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் உடன் உள்ளார்.



மாலத்தீவு அதிபர் திரு அப்துல் கரீம் அவர்கள் சென்னைக்கு வந்த போது (10.3.83) மாண்புமிகு தமிழகத் தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் விமான நிலையத்தில் வரவேற்றார்.

# நூல் நயம்



### அறநெறி அறுபது

**ஆசிரியர் : எஸ். நடராசன்,**

**வெளியீடு :**

**சுசி பதிப்பகம்,**
**6, இப்ராகிம் சேட் தெரு,**
**கொண்டித் தோப்பு,**
**சென்னை - 600 001.**

**விலை ரூ 6-00 பக்கம் 178**

ஏத்தி ஏத்தித் தொழுகின்ற ஆத்திசூடியை, புதிய சிந்தனையின் வார்ப்படமாக அமைத்துப் புதுநெறிகளை உலாவரச் செய்தார் பாரதியார்

அறநெறியை வலியுறுத்திய போதிலும் அதிலே 'அறத்திற்கு அன்பு சார்பென்பர் அறிவிலார், மறத்திற்கும் அஃதே துணை' என்ற வள்ளுவரின் வாக்கை மறக்கவில்லை அவர்.

அவரது புதிய ஆத்திசூடிக்கு அறிவுலகம் ஏற்றுக் கொள்ளும் வகையிலே சிறப்பான உரையை நூலாசிரியர் உருவாக்கியுள்ளார். தமிழ்ப் புலவர்களின் கருத்துரைகளையும் மேல்நாட்டு அறிஞர்களின் சிந்தனைகளையும் மேற்கோள்களாக எடுத்துரைத்து - சொல்ல வந்த பொருளைச் சிறப்பாகச் சொல்லியிருப்பது பாராட்டுக்குரியது.

வேற்றுமை இருக்குமே தவிர உள்ளத்தில் -உணர்வில் வேற்றுமை இருக்க முடியாதல்லவா? அதைப் போல வள்ளுவரின் இன்பத்துப் பாலில் காணப்படும் சங்ககாலத் தலைவனும், தலைவியும் இந்த நூலில் காணப்படும் தலைவன் தலைவியும் சமமாகவே திகழ்கிறார்கள்.

சில கவிதைகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன; சில நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கின்றன; சில தேம்பியழவைக்கின்றன. சில நம்மைத் திரும்பத் திரும்பப் படிக்க வைக்கின்றன. பழச்சாற்றுக் கலவை எனத் திகழும் இந்நூல்-புதுக்கவிதை வரிகளால் உருவாக்கப்பட்டிருப்பினும் மரபுக் கவிதைகளுக்கு இணையான செறிவு இதில் காணப்படுவது பாராட்டுக்குரியது. உயர்ந்த தாளில் சிறந்த முறையில் அச்சிடப்பட்டிருப்பது நூலிற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

**—தமிழ்ப்பித்தன்**

இந்நூலில் பதினான்கு கட்டுரைகள் உள்ளன. பண்டைப் புலவர்களான நாகனார், நரிவெரூஉத் தலையார், பிசிராந்தையார், பரணர், ஔவையார் போன்றோரின் சிறப்பியல்புகள் இந்நூலில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

### இன்று வந்த இறந்த காலம்

**ஆசிரியர் : கவிஞர் நாவேந்தன்**

இப்பகுதிக்கு இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். அரசியல் தொடர்பான நூல்கள் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

— ஆசிரியர்

**வெளியீடு :**

**நாயகி பதிப்பகம்,**
**4, அருணாசலம் தெரு,**
**சிந்தாதிரிப் பேட்டை,**
**சென்னை-600 002.**

**விலை ரூ. 4-00 பக்கம் 64**

தலைவன் தலைவி இருவரின் ஏக்க உணர்வுகளை இதயக் குமுறல்களை-புதுக்கவிதையின் வடிவில் ஆனால் - ரத்தினச்சுருக்கமான முறையில் ஒலிபரப்புகிறது இந்நூல்.

60 கிலோ எடை உள்ளவருக்கும் 40 கிலோ எடை உள்ளவருக்கும் வடிவத்தில்தான்

### பண்பு வளர்த்த பாவலர்

**ஆசிரியர் : பூவை அமுதன்**

**வெளியீடு :**

**மயிலவன் பதிப்பகம்,**
**7, எம்.கே. அம்மன் கோயில் தெரு, சென்னை-600 004.**

**விலை ரூ 6-00 பக்கம் 96**

பண்டைப் புலவர் பெருமக்கள் பைந்தமிழில்பாடல்களை மட்டும் பாடவில்லை, மன்னர்கள் மனம் போன போக்கில் நடந்த போதெல்லாம் இடித்துக் கூறியும், இன்னுரை புகன்றும், நாட்டைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

இந்தச் செய்திகளையெல்லாம் புறநானூற்றுப் பாடல்கள் பறைசாற்றுகின்றன. அவற்றை மாணவர்க்கேற்ற வகையில் சுவை படத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

### நவயுக நவமணிகள்

**ஆசிரியர் : வித்துவான் எம். நாராயணவேலுப் பிள்ளை**

**வெளியீடு :**

**மயிலவன் பதிப்பகம்,**
**7, எம்.கே. அம்மன் கோயில் தெரு, சென்னை-600 004.**

**விலை ரூ 7-00 பக்கம் 116**

தாய்நாட்டிற்காக உழைத்த-உழைத்துக் கொண்டிருக்கிற ஒன்பது பெண்மணிகளைப் பற்றிய வாழ்க்கைச் சித்திரமே இது.

கஸ்தூரிபாய் காந்தி, சரோஜினி நாயுடு, முத்துலட்சுமி ரெட்டி, இந்திரா காந்தி, சௌந்திரம் இராமச்சந்திரன், சரோஜினி வரதப்பன், சௌந்தரா கைலாசம், ருக்மிணிதேவி அருண்டேல், இராஜம்மாள் தேவதாஸ் ஆகியோரின் சிறப்பியல்புகள், தொண்டுகள் முதலானவை தன்னமகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இளைய தலைமுறையினர் ஊக்கம் பெற இந்நூல் பெரிதும் உதவும்.

**—பி. வி. கிரி**



# மாணவ மணிகளால் மாண்புறும் கிராமம்!

—இல. இராசேந்திரன்



நகர்ப்புறங்கள் காணும்பெரும்பாலான வசதிகள் வாய்ப்புகள் கிராமப்புறங்களை எட்டுவது அவ்வளவு எளிதில்லை. இதற்குக் காரணமே கிராமப்புற மக்கள் போதுமான படிப்பறிவோ, பலவகை முன்னேற்றங்கள் குறித்த அனுபவமோ பெறாதது மட்டுமல்ல; போதுமான படிப்பறிவும், பலவகைப்பட்ட அனுபவ அறிவும் பெற்றவர்கள் கிராமங்களோடு தொடர்பு கொள்ளத் தயங்குகிறார்கள். நம்நாட்டுக் கிராமங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஆமைவேகத்தில் இருப்பதற்கு இதுதான் காரணமென்றால் தவறில்லை.

இந்த அடிப்படைக் காரணத்தைத் தகர்க்கும் விதத்திலான விழிப்புணர்ச்சி இன்றைய இளம் நெஞ்சகளிலெல்லாம் ஏற்பட்டு வருகிறது என்றால், அது வியந்து பாராட்டத்தக்க ஒன்றுதானே?

சென்னை அரும்பாக்கத்திலுள்ள துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள் கிராமப்புற வளர்ச்சியில்-கிராமப்புற மக்கள் நலனில் பெரிதும் ஆர்வம் கொண்டுவருகிறார்கள்.

அக்கல்லூரியைச் சேர்ந்த தேசிய சேவை சங்கத்தில் (National Social Service) மூன்று குழுவினராக முந்நூறு மாணவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். இக்கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் அவர்கள் வாட்டமின்றித் தொண்டாற்ற வழிகாட்டும் திட்ட அலுவலர்களாகத் (Programme Officers) திருவாளர்கள் டாக்டர் பி.சோமசுந்தரம், பி.சடகோபன் பி.எஸ்.மணி மூவரும் பொறுப்பேற்றுள்ளனர். எல்.பிரசாத்.



எம்.வெங்கடேஸ்வரலு, ஏ. கிருஷ்ணாஜி மூவரும் அவர்கள் பணிக்கு உதவியாயுள்ள மாணவமணிகளாவர்.

சென்னையிலிருந்து, ஸ்ரீபெரும்புதூர் செல்லும் வழியில், நாற்பதாவது கிலோ மீட்டரில், இடது பக்கம் ஓடியும் செங்கப்பிச்சாலை போய்ச்சேரும் சிவன்தாங்கல் கிராமத்தில் அவர்கள் ஆற்றிடும் நலம் மிகு பணிகள் பற்றி நேரில் கண்டறிய நாம் சென்றிருந்தோம்.

நூற்றுக்குக் குறைவான மிகச் சிறு வீடுகளே உள்ள அந்தச்சாதாரண கிராமத்தில் ஒரு ஊருணி. அதாவது குடி நீர்க் குளம். மாதிரிக்குக்கூட கிணறில்லாத அந்தக் கிராமத்தில், இந்தக் குளத்து நீர்தான் குடிநீர். மழைக் காலத்தில் ஊரின் பலவழிகளிலும் வரும் நீர்தான் இதில் தேக்கி வைக்கப்படுமே தவிர, வேறு வகை நீர் வரத்துக்குவழியில்லை.

ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொருவர், இந்தக் குளத்தில் ஆடுமாடு இறங்கிவிடாமலும் யாராவது அசிங்கம் பண்ணிவிடாமலும் காவல் காத்து வருகிறார்கள்.



பருவமழை தவறி, ஆறுஏரியெல்லாம் அடியோடு வறண்டு போய்க் கிடக்கின்ற இந்நாளில் அந்தக் குளம் எப்படியிருக்கும் என்று ஒரு வினாடி கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கற்பனையில்ஒருசிறுதிருத்தம். அந்தக் குளத்தில் இப்போது ஓரளவுக்குத் தண்ணீர் இருக்கிறது-கிணற்று நீரைப்போலத் தெளிவாக.

அந்த நீரைப் பாதுகாக்க மௌனம் சாதிக்கும் இன்னும் பல ஊற்றுக் கண்களைத் திறக்க தூர் எடுக்கும் பணி துவக்கிடாகவேண்டும் என்ற நிலை வந்தபோது 'உங்களுக்கு உதவநாங்கள் இருக்கிறோம்' என்று முன்வந்திருக்கிறார்கள், டி. ஜி. வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள்.

சிவன்தாங்கல் கிராம மக்களும் அந்த மாணவமணிகளுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் இந்தத் தூர் எடுக்கும் பணியில் பங்குகொண்டு வருகின்றனர்.

வேளாண்மைத் தொழிலே முக்கியத் தொழிலாகக் கொண்ட இந்தக் கிராமத்தார்க்கு ஸ்ரீபெரும்புதூர் ஏரிதான் அவ்வப்போது உதவி வருகிறது. அங்கே நீர் குறைந்தால் இங்கே திண்டாட்டம்தான்.

ஐந்தாவது வகுப்பு வரையுள்ள ஆரம்பப்பாடசாலை ஒன்று மட்டுமே இந்தக் கிராம மக்களுக்கு எழுத்தறிவு ஊட்டி வருகிறது. அதற்குமேல் படிப்பதானால் ஐந்தாறு மைல் தாண்டி ஸ்ரீபெரும்புதூர் சென்றாக வேண்டும். ''இந்தச் சிரமம் காரணமாக இங்கே பெரிய படிப்புப் படித்தவர்கள் இரண்டொருவரே இருக்கிறார்கள்'' என்றார் சிவன்தாங்கல் வாசியான திரு. பாஸ்கரன்.

இப்படிப்பட்ட கிராமத்து மக்கள் தகுந்த மருத்துவ வசதி பெறக்கூட ஸ்ரீபெரும்புதூர் தான் செல்லவேண்டியிருக்கிறது.

எனவே, டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள் அக் கிராமத்தில் அண்மையில் ஒரு இலவச மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு



செய்திருந்தனர். 'தலைமுதல் கால்வரையான மருத்துவப் பரிசோதனைமுகாம்' அறுவைச் சிகிச்சை நிபுணரான டாக்டர் திரு. ஆர். நஞ்சுண்டராவ் தலைமையில் குறிப்பிட்ட நாளில்சிவன்தாங்கல் கிராமத்திற்கு வருகை தந்தது.

டாக்டர்கள் டி. குணசாகரன், ஆர். ஸ்ரீதரன், பி.மகேந்திரன், ஜி.வெங்கடேசுவரன், எம். சிவசுப்பிரமணியம், டி.பரமேஷ்குமார், கே. அருண்மொழி, மணி, எம். இளங்கோ எஸ். ரகுநந்தனன், ஜி.மருதகுமார், பரிமளாகுமார், பி. இன்பச்செல்வி, ஜெயந்தி ராஜசேகரன், கே.ரேகா,







ஜெயந்திகல்யாணி, எல். குமுதா, எஸ்.செல்வகுமாரி ஆகிய சென்னை மருத்துவக் கல்லூரி டாக்டர்கள் இந்தக் கிராமப்புற இலவச மருத்துவமுகாமில் பங்கேற்றனர். பல்வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர்கள் சி.வி.சுப்பாராவ், எஸ்.மாலினி, ப்ரவீன், சுனில்குமார், ஸ்ரீமதி, ஜெயராமன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். 'சர்வீஸ் பிரிகேடை'ச் சேர்ந்த திரு ஏ.சி. சாமுவேல் உள்ளிட்ட சிலரும் இந்த முகாமில் பங்கேற்றனர்.

மருத்துவமுகாம் நடப்பதற்கு முதல் நாளே டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள் அந்தக் கிராமத்தின் அத்தனை வீடுகளுக்கும் போய், செய்தி தெரிவித்திருந்ததால் பெரும்பாலான கிராம மக்கள் சிறுவர் சிறுமியரும் ஆடவர் மகளிர் முதியோருமாக வந்து திரண்டிருந்தனர் அந்த ஊருணி அருகிருந்த புளியமரத்தடியில். ஆம்; அங்கேதான் மருத்துவமுகாம்!

அவ்வளவு பேரையும் வரிசைப்படுத்தி, வகைப்படுத்திச் சோதிப்பதை முறைப்படுத்திவதில் தன் வயதையும் மறந்து உற்சாகத்தோடு ஈடுபட்டார் டாக்டர் நஞ்சுண்டராவ். எதிர் வந்து நின்றாரையெல்லாம் நிறுத்தி முறைப்படி பரிசோதித்தார்.





பயன் கருதாமல், பொதுமருத்துவமனையில் பார்க்கிற பணிக்கும் பழுதில்லாமல் அத்தனை டாக்டர்களும் ஆர்வத்தோடு சிவன்தாங்கல் மக்களுக்கு நலன் சேர்ப்பதில் மனப்பூர்வமாக ஈடுபட்டார்கள். உடனடிச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. மருந்து மாத்திரைகள் அளிக்கப்பட்டன. பிணியுற்றார் முகமெல்லாம் அப்போதே நோய் தீர்ந்தது போன்ற பெரு மகிழ்வு தேங்கியதை நம்மால் காணமுடிந்தது.

இந்த முகாம் துவக்கத்தில் நடைபெற்ற விளக்கக் கூட்டத்தில் தேசிய சேவைசங்க மாணவர்கள் சார்பில் டாக்டர் பி. சோமசுந்தரம் வரவேற்றார். மருத்துவமுகாம் செயல் முறை பற்றி விளக்கிப் பேசிய டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ் பேசுகையில் ''மாணவர்களின் இது போன்ற நல்ல மாதிரியான பணிகள் பாராட்டப்பட வேண்டும்; ஊக்குவிக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சிவசங்கரன், சுகாதார அலுவலர் திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மருத்துவநிவாரணப் பிரிவின்





செயலாளர் டாக்டர் டி. குணசேகரன் அவர்கள் தெரிவித்த சில செய்திகள் பயன் மிகுந்ததாக இருந்தன. அதன் விவரம் வருமாறு ''கிராம மக்களும் நன்முறையில் இலவச மருத்துவம் பெறவேண்டும் என்பதுமட்டுமல்ல; மருத்துவப் படிப்பு இறுதியாண்டு மாணவ மாணவிகள் கிராமப் புறங்களில் சென்று பணியாற்ற ஆர்வம் கொள்ளச் செய்வது என்ற நோக்கத்தோடும்தான் இந்த முகாம் நடத்துகிறோம். இத்தகைய பணிகளுக்காகத் தமிழக அரசு மருத்துவ நிவாரணப்பிரிவுக்கென (Medical Relief wing) மூவாயிரம் ரூபாய் ஒதுக்குகிறது. தஞ்சை மருத்துவக் கல்லூரி போன்ற சில கல்லூரிகளுக்குப் போல இங்கும் அதைப் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தால் நல்லது என்று அரசுக்கு எழுதியிருக்கிறோம். விரைவில் அதற்கு அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்''.

கிராமப்புற மருந்து நிவாரணப் பிரிவின் பொருளாளராக டாக்டர் சி.சின்னசாமி பொறுப் பேற்றுள்ள இம்முகாமின் தலைவர் டாக்டர் திரு.ஆர். நஞ்சுண்டராவ் சில செய்திகளை நம்மிடம் மனம் விட்டுச் சொன்னார். ''எந்த உதவியையும் எதிர்பார்க்காமல் கிராமப்புறங்களில் நடத்தப்படும் இது போன்ற முகாம்களுக்கென சென்னை மருத்துவக் கல்லூரியின் பிரம்மாண்டமான நடமாடும் மருத்துவ வண்டியை எங்களால் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால் இது போன்ற தூரக் கிராமங்களுக்கு வர மருத்துவர்களுக்கென தனி





வண்டி வாகன வசதி இல்லை என்றொரு குறை இருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் இது பற்றிக் கூறியிருக்கிறோம். அதுவும் கிடைத்துவிட்டால் இம்மாதிரி முகாம்களை இன்னும் வெற்றிகரமாக எங்களால் நடத்திக்காட்ட முடியும்.''

முகாம் முடிவில்— ''இது போன்ற உதவிகளைச் செய்ய இங்கு வந்த அத்தனை பேருக்கும் சிவன்தாங்கல் கிராமவாசிகளாகிய நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்றார் அந்தக் கிராமவாசியான திரு. எம். இராசேந்திரன்.



## 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வண்ணக் கல்மணிகள்-ஓடுகள்

புதுச்சேரியை அடுத்த அரிக்கமேடு என்னும் பகுதியில் கிடைத்த அழகிய பானைகளும், சிவப்பு, கறுப்பு வண்ணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ரோமானியரின் சிறப்புமிக்க 'அரிட்டைன்' என்ற மென்மையான சிவப்பு ஓடு ஒன்று கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல வெண்படிகக் கற்களுடன் நீலம், பச்சை, கருமை, இளஞ் சிவப்புக் கற்களும் அங்குக் கிடைத்துள்ளன. வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, காவி வண்ணக் கல்மணிகள் பலவற்றுடன் இரண்டு பதக்கம் போன்ற அணிகலன்களும் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் உயர் வேலைப்பாட்டுடன் விளங்கி 2000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்நாட்டின் அணிகலன் செய்யும் சிறப்பையும், அக்காலத்திய பண்பட்ட நாகரிகத்தையும் நமக்குக் காட்டுகின்றன.

மேற்குறித்த பொருள்கள் அனைத்தும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் அருங் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.






## மாணவர் பக்கம்

### தெரிந்து கொண்டால் நல்லது...!

1. இந்தியாவின் மேற்குவாயில் —பம்பாய்
2. தமிழ்நாட்டில் உள்ள அணு மின் சக்தி நிலையம்— கல்பாக்கம்
3. தென்னிந்தியாவின் மான் செஸ்டர்—கோயமுத்தூர்
4. இந்தியாவில் அதிக அளவில் நிலக்கரி தோண்டி எடுக்கப் படும் இடம்— தாமோதர் நதிப்படுகை
5. இந்தியாவில் துத்தநாகத் தகடு எடுக்கப்படும் ஒரே இடம்— உதயபூரியில் உள்ள ஜாவார் சுரங்கங்கள்
6. இந்தியாவில் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி—கர்நாடகத்தில் உள்ள ஜோக்ஸ் நீர்வீழ்ச்சி
7. நீலகிரி மலைகளில் மிக உயர்ந்த சிகரம்— தொட்டபெட்டா (2,677 மீட்டர்)
8. தென்னிந்தியாவின் மிக உயர்ந்த சிகரம் —ஆனைமுடி (2,695 மீட்டர்)
9. 'ஏரி மாவட்டம்' என அழைக்கப்படும் மாவட்டம் —செங்கல்பட்டு
10. இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தியில் முதலிடம் பெறும் மாநிலம்—பீகார்.

**எம். பி. சுப்பிரமணியன்,**
அரசர் மேநிலைப்பள்ளி,
சிவகங்கை,
இராமநாதபுரம்மாவட்டம்.



**திருச்சி** மாவட்டம் ஈச்சம்பட்டி ஆதிதிராவிடர் நலப் பள்ளித் தலைமையாசிரியர் திரு எம். குழந்தைசாமி அவர்களுக்கு 'தேசிய நல்லாசிரியர் விருது' வழங்கப்பெற்றிருக்கிறது இவர் 36 ஆண்டுக் காலமாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் நாட்டில் உள்ள மொத்தம் 843 ஆதி திராவிடர் பள்ளி ஆசிரியர்களில், தேசிய விருது பெற்றவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

☀ காரியங்களை கடினமாக்குவது சோம்பேறித்தனம். அதை சுலபமாக்குவது உழைப்பு.

— பிராங்களின்

## நேர்வழி நடப்பாய்

**வெ**ள்ளி முளைத்திடும் வேளையிலே—நீ
துள்ளி எழுந்திடு காலையிலே!—தினம்
பள்ளிப் பாடங்களைப் படித்திடுவாய்—இந்தப்
புவியினிலே பின்னர் உயர்ந்திடுவாய்!

செல்வத்துள் செல்வமாம் கல்விச் செல்வம்
—அதைச்
சேர்ப்பதிலே ஆர்வம் காட்டிடுவாய்!
நல்லதை எண்ணுவாய் செய்திடுவாய்—நீ
நித்தநிதந்தம் புகழ் சேர்த்திடுவாய்!

அன்பும் அடக்கமுமே உயர்வுதரும்—பெரும்
ஆசைக ளாலே இகழ்ச்சி வரும்!
அன்னைநாட்டின் மேலே பாசம்வைப்பாய்
—யார்க்கும்
அஞ்சாமல் நேர்வழி நீநடப்பாய்!

—ச. சங்கரசுப்பிரமணியன்,
பத்தாம் நிலை, 'அ' பிரிவு,
முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி,
புதுக்கோட்டை-622004.





### புதுமையான கிளைடர்

கலிபோர்னியாவில் உள்ள கென் பிராக் மெனுபாக்சரிங் நிறுவனம் (Ken Brock Mfg.) உருவாக்கியுள்ள இப்புதுமைமிகு KB-28 என்ற கைரோ-கிளைடரை (gyro-glidur) ஒரு காரின் மூலமாக இழுத்துச் செல்வதன் மூலம் பறக்க வைக்க இயலும். இருவர் அமரக் கூடிய இக்கிளைடருக்கு இணைக்க ஆணை (licence) எதுவும் தேவையில்லை; 40 அடி உயரம் வரை பறக்கக் கூடியது; தானாக இயங்கக் கூடியதாகவும் மாற்ற வசதியுள்ளது.

## இதோ ஒரு செய்தி :



**மா**ணவ மணிகளின் அறிவுத் திறனை வெளிப்படுத்தவும், தமிழில் அறிவியல் கருத்துக்களைக் கூறமுடியும் என்பதை எடுத்துக் காட்டிடவும் தமிழ் மன்றங்கள் பெரிதும் உதவுகின்றன. அந்த வகையில் கோவையில் உள்ள பூ.சா.கோ. பொறியியல் பல்தொழிற் கல்லூரி பயனுள்ள வகையில் செயலாற்றி வருகின்றது.

இக்கல்லூரித் 'தமிழ் மன்றம்' பிப்ரவரி 27-28 தேதிகளில் இரு அறிவியல் கருத்தரங்குகளை நடத்தியது. முதல் நாள் அறிவியல் தமிழாக்க நெறிமுறைகள் குறித்து அறிஞர்களின் கருத்தரங்கு நடைபெற்றது. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இக் கருத்தரங்கு அமைந்தது. டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் தலைமை யேற்று, அறிவியல் தமிழ் வளர வேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறினார். சிறப்புரை ஆற்றிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் அறிவியல் தமிழ் வளர பல வழிமுறைகளை எடுத்துக் கூறினார். பொறியியற் பேராசிரியர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும் தங்கள் பரிந்துரைகளை வழங்கினர்.

28ந் தேதி அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான - டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் அவர்களின் சுழற்கேடயத்திற்கான அறிவியல் கருத்தரங்கு நடைபெற்றது. ஏழு கல்லூரிகளைச் சேர்ந்த பதினைந்து மாணவர்கள், 20ஆம் நூற்றாண்டில் அறிவியல் புதுமைகள் என்ற தலைப்பில் கருத்துக்களைப் படைத்தனர். பூ.சா.கோ. அறநிலைய நிர்வாக அறங்காவலர் திரு ஜி. வரதராஜ் அவர்கள் தலைமை வகித்தார். சென்னை மருத்துவக்கல்லூரி இறுதியாண்டு மாணவி செல்வி சுதா சேஷய்யன் இலக்கிய நடையில் அறிவியல் கட்டுரைகளைப் படைத்து, முதற் பரிசையும் டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் சுழற் கேடயத்தையும் பெற்றார். கருத்தரங்கின் இறுதியாக, மாணவர்களும், வந்திருந்த பார்வையாளர்களும் தங்கள் கருத்துக்களைப் பயனுள்ள வகையில் பரிமாறிக் கொண்டார்கள்.

மின்னல் ஒரு வினாடிக்கு 45,600 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியை நோக்கிப் பாய்கிறது.

சர் ஐசக் நியூட்டன் தன் கணிதப் பிரச்சினைகளுக்கெல்லாம் வழி (Formula) கண்டுபிடித்தது பெரும்பாலும் கனவுகளின் மூலம்தான்.

விலங்குகளில் அதிக வருடம் உயிர் வாழ்வது எது தெரியுமா? திமிங்கலம். 500 வருடம்.

யானை நீரில் 405 மீட்டர் ஆழத்திலும் மூழ்கிச் செல்லும்.

### உடலமைப்பு

மனித உடலின் பெரும்பாகம் 55% முதல் 65% வரை நீரால் ஆக்கப்பட்டிருக்கிறது. இரசாயன ரீதியாக, மனித உடல் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு பிராண வாயுவாலும், ஐந்தில் ஒரு பங்கு கரி பொருளாலும், பத்தில் ஒரு பங்கு நீரகத்தாலும் நிரப்பப்பட்டிருக்கிறது.

### எலும்புகள்

நாம் பிறக்கும்போது 270 எலும்பு களுடன் பிறக்கிறோம். ஆனால், இறக்கும்போது நமது உடலில் மொத்தம் 206 எலும்புகள்தான் இருக்கும். மீதி எலும்புகள் நாம் வளர வளர ஒன்றோடு ஒன்று இணைந்து விடுகின்றன.

### மனிதனின் மூச்சு

24 மணி நேரத்தில் ஒரு ஆரோக்கியமுள்ள மனிதன் 2,000 தடவைகள் மூச்சு விடுகிறான். 2 லிட்டர் உமிழ் நீரை உற்பத்தி செய்கிறான். ஒரு லிட்டர் வியர்வையை வெளியேற்றுகிறான்.

### மனிதனின் மூளை

சராசரி மனிதனின் மூளையின் எடை 1½ கிலோ. ஆண்களைவிட பெண்களின் மூளையின் எடை குறைவாகும். நமது மூளையில் உள்ள செல் அணுக்கள் நிமிடத்திற்கு 100 வீதம் இறந்து கொண்டிருக்கின்றன.

எம். எம். இப்ராஹிம்

நன்றி: கல்கதிர்




# தமிழரின் தத்துவ மரபுச் செல்வம்

தொகுப்பு: இந்திரன்

தமிழின் செழிப்பிற்கும், பல்வேறு துறைகளிலும் தமிழ் பெற வேண்டிய வளர்ச்சிக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆற்றி வரும் பணிகள் அளவிடற்கரியன. அவ்வகைப்பட்ட பணிகளில் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள்-அவை தொடர்பான நூல்வெளியீடுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

அத்தகையதோர் கருத்தரங்கும் அரியதோர் நூல்வெளியீடும் அண்மையில் (11.3.83) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்புற நடைபெற்றன. மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இந்தக் கருத்தரங்கின் முதல் நாளன்று, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு, செ.அரங்கநாயகம் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. டாக்டர் ம. பொ. சிவஞானம் இருவரும் பங்கேற்றனர்.

'தமிழரின் மரபுச் செல்வங்கள்' வரிசையில் 'தமிழரின் தத்துவ மரபுச் செல்வம்' எனும் இந்த ஆறாவது கருத்தரங்கத்திற்கு மாண்புமிகு மேலவைத்தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், கருத்தரங்க நூலை வெளியிட்டுத் தொடக்க உரை ஆற்றினார்.

தத்துவப் பேராசிரியரான டாக்டர் தேவசேனாபதி அவர்கள் சிறப்புரையாற்றிய இந்தக் கருத்தரங்கில் வரவேற்றும் நன்றி தெரிவித்தும், சார்லஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் யரோ வசேக், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

**யரோ வசேக்**

செக்கோஸ்லவகியாவைச் சேர்ந்த பிராகாவில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவரான டாக்டர் யரோ வசேக் (தமிழில்) பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்ப் பண்பாட்டை என் போன்ற பிற நாட்டினரும் எளிதில் அறிந்து கொள்ள இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெரிதும் உதவுவது பாராட்டத் தக்கதாகும்.

நான் ஓரளவுக்கே தமிழ் நூற்களைப் படித்திருக்கிறேன். வெளிநாட்டுக் காரர்களுக்குத் தமிழைக் கற்பிக்கப் பொறுமை இருக்க வேண்டும். அயல் நாட்டுக் காரர்கள் தமிழினம் பற்றியும் தமிழகம் பற்றியும் எளிதாகத் தெரிந்து கொள்ளத் தக்க வகையில் -தமிழில் நல்ல பாடநூல்கள் தயாரிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால் உலகமே இந்த நாட்டு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவை பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பேற்படும்.

**கல்வி அமைச்சர்**

கருத்தரங்க நூலை வெளியிட்டு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழக அரசின் நிதியுதவி பெறும் இப்படிப் பட்ட நிறுவனங்கள், எடுத்துக் கொண்ட பணியில் வெற்றிபெறவேண்டுமானால், முக்கியப் பொறுப்பில் இருக்கிறவர்களுக்குச் சிறந்த ஈடுபாடு இருக்கவேண்டும். இந்த அமைப்பு அந்த வகையில் சிறந்து விளங்குகிறது.

தமிழுக்கு நாம் செய்யத் தவறியதை வெளிநாட்டுக்காரர்கள் ஆர்வத்தோடு செய்து வருகின்றனர். அதைப் பார்த்தாவது நாமும் அப்படிச் செயல்பட-அவற்றைச் செய்திட முன்வர வேண்டும்.

தமிழரின் மரபுச் செல்வங்களைத் தமிழர்களாகிய நாம் முதலில் உணர்ந்து கொண்டாக வேண்டும். அதற்கு இத்தகைய கருத்தரங்குகள் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

பகுத்தறிவு வாதிகளாகிய எங்களுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் என்ன தொடர்பிருக்க முடியும் எனச் சிலர் நினைக்கலாம். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எங்களுக்கு ஏற்றாற்போலவே தான் இருக்கின்றன.

சமுதாயத்திலுள்ள பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கவேண்டும் என்ற கருத்திலே தான் அந்தத் தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. அந்தவகையிலே நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ஆகவே, பதிபசுபாசம் என்று கூறப்படுவதன் அடிப்படை நோக்கத்தை நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன்.

ஒழுக்கக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்று கூறப்பட்டது. நாங்களோ அது மட்டும் போதாது எனக் கருதி சமூகக் கல்வியும் அளித்து வருகிறோம். ஒருவன் ஒழுக்கத்தோடு இருந்தால் மட்டும் போதாது; அவன் மற்றவர்களுக்குப் பயன்படுகிறவனாகவும் இருக்கவேண்டும். அதுதான் சமூகக் கல்வி. ஏறத்தாழ இதுதானே சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை?



தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவரும் தங்களுடைய மரபுச் செல்வங்களை உணரும் போதுதான் திறமை வாய்ந்தவர்களாக, சக்திவாய்ந்தவர்களாக இருக்க முடியும்.

**மேலவைத் தலைவர்**

விழாத் தலைமையேற்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பேசியதாவது:

பகுத்தறிவுக் கொள்கைகளுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் வேறுபாடில்லை என்று பேசிய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது நீங்கள் மிகவும் எங்களை நெருங்கி வந்துவிட்டீர்கள் என்பதுதான்.

இத்தகைய தத்துவங்களையெல்லாம் எடைபோடக் கூடிய திறன் பெற்றவர்கள் ஐரோப்பிய நாட்டினர்தான் என்பதை நாம் மறுக்கமுடியாது. நமக்குள் இப்போதுள்ள பல்வேறு சண்டைகளைப் பார்க்கிறவர்கள்-'இவர்களுக்கிடையில்தானா வள்ளுவன் பிறந்தான்?' என்று கேட்கிற அளவுக்கு நாம் வாழ்ந்து வருகிறோம்; இது தவறு.

உடை, உணவு, கல்வி எல்லாமே சுதேசியாக இருக்கவேண்டும் என்று நாம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் நினைத்திருந்தோமே தவிர, சுதந்திரம்பெற்ற பிறகு அந்த எண்ணமெல்லாம் எங்கோ போய் விட்டது. அந்த அளவுக்கு நம்மை நாமே தாழ்த்திக்கொண்டிருக்கிறோம்.

வள்ளுவன் கூறியுள்ள பண்பாட்டு முறைகள் பண்டைத்தமிழரின் தன்னிகரற்ற வாழ்வை நமக்கு உணர்த்தக் கூடியவைகளாகும். அதற்குச் சிறிதும் தொடர்பில்லாமல், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற அளவில் வந்துவிட்ட இப்போதைய நிலைமாறியாக வேண்டும். பண்டைய இலக்கியங்கள் பாதுகாக்கப்படவேண்டும்; அந்த இலக்கியங்கள் உருவாகக் காரணமாக இருந்தமொழி பாதுகாக்கப்படவேண்டும்.

காப்பியத்தில் வந்தால் கதாநாயகி கண்ணெதிரே வந்தால் பஜாரி என்ற அளவில் காலம் போய்க் கொண்டிருக்கிறது. கணவனுக்காக வழக்காட கண்ணகி சென்றதை மதிக்கிற நாம்-அதே காரணத்திற்காக இப்போது ஒரு பெண் வீதியிலே சென்றாளென்றால் ''போயி போலீஸ்ல கம்ப்ளெயின்ட் குடுப்பியா.. இப்பிடி அழுதுகினே போனா என்ன ஆயிரும்?''.என்கிறோம். இதைக் கேட்க மறுப்பவள் பஜாரி எனப் படுகிறாள். ஏன் இந்த நிலைமை என்றால், அடக்கப்பட்ட நிலையிலேயே நீண்ட நெடுங்காலம் நாம் வாழ்ந்து விட்டதுதான். இனியேனும் இந்த நிலை மாறவேண்டும்.

வேப்பிலை அடிப்பது, விபூதி போடுவது எல்லாம் மூடத்தனம் என்கிறோம். விஞ்ஞானமும் மருத்துவமும் பெரிய அளவில் வளர்ந்திருக்கும் இந்நாளில் அப்படிச் செய்வது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது என்கிறோம். வேப்பிலை அடிப்பது விபூதி போடுவதெல்லாம் சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களிடம் தானே அதிக அளவில் காணப்படுகிறது? மருத்துவம் மகத்தான வளர்ச்சி பெற்றிருப்பது உண்மைதான்: நானும் ஏற்கிறேன். ஆனால் அந்தச் சாதாரண மக்கள் அத்தகைய மருத்துவ உதவியைப் பெற முடிகிறதா? அது முடியாத பட்சத்தில் வேப்பிலையும் விபூதியும் நாடும் அவர்களைப் பகுத்தறிவு வாதிகள் அல்ல என்றால் எப்படி?

தமிழர்களுக்கென்று ஒரு பண்பாடு இருக்கிறது; அது புத்தகத்தில் இருக்கிறது; அது அழிந்து விடவில்லை; தேய்ந்து போயிருக்கிறது. அதற்கு உயிரூட்டவேண்டும்.

—இவ்வாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் அவர்கள் கூறினார்.

விழா இனிது முடிந்தது.

## சிறுசேமிப்பில் தமிழகத்தின் சாதனை

**1981-82**-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.213.52 கோடி வசூல் செய்து, இதுவரை இவ்வளவு அதிகத் தொகை வசூல் செய்தது கிடையாது என்ற ஒரு சாதனையை உருவாக்கியுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் ரூ. 188.80 கோடிதான் வசூல் செய்யப்பட்டது. 1981-82ம் ஆண்டில் வசூல் 1970-71ஆம் ஆண்டில் வசூலித்த ரூ. 42.29 கோடியைவிட ஐந்து மடங்குக்கு மேல் அதிகமாகும்.

இந்த அளவு அதிக வசூலுக்கு முக்கியக் காரணம் வீட்டுக்கு ஒன்று அல்லது அதிகக் கணக்குகள் துவக்க நடவடிக்கை மேற்கொண்டதுதான்.



## தொழில் வளர்ச்சிக்கு தனிக் குழு

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்காக 42 பேர் கொண்ட குழு ஒன்றைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. குழுவின் தலைவராக, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இருப்பார்.

## சிறு கிராமங்களுக்கு 'டில்லர்' வண்டிகள்

'மினி' பஸ்கள் செல்ல முடியாத—போக்குவரத்து வசதியில்லாத—மாட்டு வண்டிகள் மட்டுமே செல்லக்கூடிய குறுகலான மண் சாலைகள் உள்ள குக்கிராமங்களுக்கு 10 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய 'டில்லர்' வண்டிகள் விட்டுப் புதிய முறையில் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தத் திட்டத்தை வடஆர்க்காடு, சேலம், திருச்சி, பெரியார் மாவட்டங்களில் 12 வழித்தடங்களில் முதலில் நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

# புதிய ரகங்கள்

வேளாண்மை வளர்ச்சிக்கு அடித்தளம் நல்ல இரகங்கள் நிறைந்தமகசூல் ஆகும், குறைந்த வயதும், பூச்சி பூஞ்சாளங்களின் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்கக்கூடியதும், நல்ல தன்மைகளும் கொண்ட இரகங்களைக் கண்டெடுத்து வேளாண் பல்கலைக் கழகம் தொடர்ந்து மக்களுக்கு வழங்கி வருகிறது. அப்பணியின் ஒரு கட்டமே இப்புதிய 11 இரகங்களாகும்.

சம்பா, தாளடி பட்டங்களுக்கு, உகந்ததும், ஐ. ஆர். 20 நெல்லைவிட அதிக மகசூலும் தரவல்ல கோ. 44 நெல்லை மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதைப்போலவே அதிக மகசூலும், விரும்பத்தக்க தன்மைகள் கொண்டதுமான எக்ஸ். 5 கம்பு, கோ. 4 தட்டைப் பயறு, கோ. 10 அவரை இரகங்களையும் வெளியிட்டுள்ளது.

எண்ணெய்த்தட்டுப்பாட்டை அகற்றும் முயற்சியின் விளைவாக அதிக மகசூல் தரவல்ல கோ. 1 என்ற எள் இரகத்தையும், கோ. 1 என்ற சூரியகாந்தியையும் கண்டெடுத்து மக்கள் மத்தியில் வைத்துள்ளது.

பழ அபிவிருத்திக்காகப் பப்பாளி இனத்தில் இரண்டு இரகங்களையும், மாதுளையில் ஒரு இரகத்தையும்வெளியிட்டுள்ளது. மாட்டுத் தீவனத்திற்கு ஏற்ற வேலி மசால் இரகம் ஒன்றையும், பசுந்தழைக்கு ஏற்ற சணப்பு இரகம் ஒன்றையும், நலம் தந்திடும் மஞ்சள் இரகம் ஒன்றையும் மக்களுக்குத் தந்துள்ளது.

இந்த இரகங்களைப் பற்றிய விவரங்களைக் காண்போம். இந்த இரகங்களைக் கண்டெடுத்துத் தந்த விஞ்ஞானப் பெருமக்கள் பாராட்டுதலுக்குரியவர்கள், அவர்கள் பணி தொடர்ந்து பெருகி நன்மை பயக்கட்டும்.




## கோ. 44 நெல்

**பாரம்பரியம்** : ஏ. எஸ்டி. 5 (கார்த்திகைச் சம்பா) ஐ. ஆர். 20 ஆகும்.

**தானிய மகசூல்** : எக்டேருக்கு 3,169 கிலோ முதல் 6453 கிலோ வரை கிடைக்கும்
ஐ. ஆர். 20ஐக் காட்டிலும் 7.1 சதம் முதல் 54.7 சதம் வரை உயர்வு.

எட்டு மாவட்டங்களில் அனுசரணை ஆராய்ச்சியின் மூலம் தானிய மகசூல் எக்டேருக்கு, 3,495 கிலோ முதல் 5,298 கிலோ வரை கிடைக்கும். ஐ. ஆர். 20ஐக் காட்டிலும் 10.2 முதல் 52.3 சதவீதம் வரை உயர்வு.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களாகும்.

**பருவம்** : சம்பா, பின்சம்பா. பின்தாளடி, பிஷாணம்.

**சிறப்புத் தன்மைகள்** : நடுத்தர உயரமுடையது.

மொத்த வயது130 முதல் 135 நாட்கள் (கார்த்திகைச் சம்பாவை விட 15 நாட்களும் ஐ. ஆர். 20ஐ விட ஒரு வாரம் குறைந்த வயது.)

இலைப்புள்ளி நோய், குலைநோய் மற்றும் இலைக்கருகல் நோய் ஆகியவை தாக்காது.

பச்சைத் தத்துப் பூச்சி மற்றும் ஆனைக் கொம்பன் ஆகிய பூச்சிகளில் தாக்குதலைத் தாங்க வல்லது.

மிகத் தரமான வெள்ளை அரிசி, பச்சரிசியாகவும், புழுங்கலரிசியாகவும் பயன்படுத்தலாம்.

## வீரிய ஒட்டு கம்புX-5.

வீரிய ஒட்டு கம்பு × 5ன் தோற்றம் :




**மகசூல் திறன்** : எக்டேருக்கு இறைவையில் 3,041 கிலோவும், மானாவாரியில் 1,070 கிலோவும் கிடைக்கும்.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாட்டில் கம்பு பயிரிடப்படும் எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது. சிறப்பாக, கோயம்புத்தூர் பெரியார், தென்ஆர்க்காடு, திருச்சி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றது. இராஜஸ்தான், மகாராட்டிரம், குஜராத், ஆந்திரா, கர்நாடக மாநிலங்களிலும் பயிரிட ஏற்றது.

**பருவம்** : இறவை : தைப்பட்டம் (பிப்ரவரி-மார்ச்) மானாவாரி: ஆடிப்பட்டம் (ஜூன்-ஜூலை) புரட்டாசிப் பட்டம் (செப்டம்பர் - அக்டோபர்).

**சிறப்புத் தன்மைகள்** : அதிக மகசூல் திறன் (எக்டேருக்கு இறைவையில் 5,000 கிலோ வரையும், மானாவாரியில் 1,700 கிலோவும் கிடைக்கும்) பசுங்கதிர் நோய் எதிர்க்கும் சக்தி உண்டு. நெருக்கமான மணிகள் கொண்ட நீண்ட பெரிய கதிர்களாக இருக்கும்.

## அவரை கோ-10.

**தோற்றம்** : கோ. 6 அவரையில் 'காமா' கதிரியக்கத் தூண்டுதலால் சடுதி மாற்றம் செய்யப்பட்டது.

**மகசூல் திறன்** : எக்டேருக்கு பச்சைக் காய் 7,200 கிலோவாகவும், உலர்ந்த அவரை விதை 1,200 கிலோவாகவும் கிடைக்கும்.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்** : இறைவை - தைப்பட்டம் (பிப்ரவரி-மார்ச்) ஆடிப்பட்டம் (ஜூன்-ஜூலை), மானாவாரி - ஆடிப்பட்டம் (ஜூன்-ஜூலை).

**சிறப்புத் தன்மைகள்**: அடர்ந்த நேரான செடிகள் : 6-7 கிளைகள் குத்துச் செடி.: பந்தல் தேவையில்லை.

பூக்கள் ஊதா நிறம் கொண்டவை.
வெளிர்பச்சை நிறம்கொண்ட வளைந்த உருண்டைக் காய்கள்.

எல்லாப் பருவங்களிலும் பயிர் செய்ய ஏற்றது.

கோ. 9ஐ விட புரதச்சத்து மிகுந்தது.

## கோ 4 தட்டைப் பயறு.

**தோற்றம்**: ருசிய இனத்திலிருந்து இனவழி தேர்வு செய்யப்பட்டது.

**மகசூல் திறன்** : எக்டேருக்கு இறைவையில் 1,572 கிலோவாகவும், மானாவாரியில் 916 கிலோவாகவும் கிடைக்கும்.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்**: இறைவை-தைப்பட்டம் (பிப்ரவரி-மார்ச்)
மானாவாரி - ஆடிப்பட்டம் (ஜூன்—ஜூலை)
புரட்டாசிப்பட்டம் (செப்டம்பர்-அக்டோபர்)




## சிறப்புத் தன்மைகள்

அடர்ந்த நேரான செடிகள், நீண்ட காய்கள், பெரிய விதைகள் கொண்டது.
வறட்சி தாங்கும் தன்மை.

வேரழுகல் நோய் தாக்காதது. தண்டு ஈ மற்றும் இலைத் தேமல் நோயால் குறைந்த அளவே பாதிக்கப்படுகிறது.

விதைகள் குறைந்த நேரத்தில் சமைக்கப்படுகிறது. சுவை, மணம் பொதுவாக ஏற்கப்படுகிறது.

இளங்காய்கள் பொரியலுக்கு ஏற்றவை.




## கோ—1 எள்

**தோற்றம்** : டி. எம். வி. 3 ரகத்துடன் எஸ். 1 1878 இனத்தை இனக்கலவைசெய்து தேர்வு செய்தது.

**மகசூல் திறன்** : இறைவையில் 734 கிலோ, மானாவாரியில் 586 கிலோ. அனு சரணை ஆராய்ச்சியில் எக்டேருக்கு இறைவை யில் 516 கிலோ.

**அதிக மகசூல்** : டி.எம்.வி.3ஐ வி. 18. டி. எம். வி. 4ஐ. விட 23 சதம். டி. எம். வி. 6ஐ விட 18 சதம்

மானாவாரி : 370 கி. (டி. எம். வி. 3ஐ விட 18 சதம் அதிகம்) எக்டேருக்கு.

**பயிரிட ஏற்றபகுதிகள்** : இறைவை : கோயமுத்தூர், பெரியார், திருச்சி, மதுரை, மானாவாரி, தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு, மதுரை.

**பருவம்** : இறைவை : தைப்பட்டம் (தென் ஆர்க்காடு).

மானாவாரி : மார்கழிப்பட்டம் ஆடிப் பட்டம் (மதுரை) புரட்டாசிப் பட்டம் (வட ஆர்க்காடு).

**சிறப்புத் தன்மைகள்** : அதிக மகசூல் தரும். காய்கள் தாமதமாக வெடிக்கும். எல்லாக் காய்களும் ஒரே சமயத்தில் முதிர்ச்சி யடையும். மேல்சாம்பல் நோயை ஓரளவு எதிர்க்கும் திறனுடையது. வயது 85-90 நாட்கள்.

## கோ—1 சூரியகாந்தி

**தோற்றம்** : 'பெனியாங்கா' என்றரஷ்யா இனத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது.

**மகசூல் திறன்** : இறைவையில் எக்டேருக்கு 1,000 கிலோ. மானாவாரியில் எக்டேருக்கு 700 கிலோ(ஒருநாள் உற்பத்தி 15.8 கிலோ).

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : கோயமுத்தூர் திருச்சி, சேலம், தர்மபுரி, மதுரை.

**பருவம்** : ஆடிப்பட்டம், புரட்டாசிப் பட்டம், தைப்பட்டம்(மானாவாரி,இறைவை).

**சிறப்புத் தன்மைகள்** : மிகக்குறைந்த வயது 60-65 நாட்கள், குட்டையான, செடி, இடைப் பயிராக (Catch Crop) பயிரிடலாம், ஒரு நாள் உற்பத்தித் திறன் (Per Day Production) அதிகம்.




## கோ—1 மஞ்சள்

**தோற்றம்** : ஈரோடு ரகத்திலிருந்து எக்ஸ்ரே கதிர்கள் ஊடுருவல் மூலம் சடுதி மாற்றத்தால் உருவான ரகம்.

**மகசூல் திறன்** : 35 டன் பச்சை மஞ்சள். இது ஈரோடு ரகத்தைவிட 71 சதம் அதிகம். பவானிசாகர் மற்றும் கொடுமுடி மையங்களில் ஈரோடு ரகத்தைவிட முறையே 47 சதம், 69 சதம் அதிகம் மகசூல் தரும்.

**பருவம்** : ஆகஸ்ட்-அக்டோபர் மார்ச்-மே.

**சிறப்புத் தன்மைகள்** : இரண்டு ஆண்டு களிலேயே காய்க்க ஆரம்பிக்கும். நடுத்தர அளவுடைய பழங்கள் சராசரி எடை 340 கிராம் உள்ளதாக இருக்கும். உட்புற வெளிப்






புறத் தோற்றம் அழகானதாக இருக்கும். மிருதுவான, இனிப்பான சதைப்பற்றுள்ள விதைகள், கடித்து உண்ணச் சுவையானவை யாக இருக்கும்.

## கோ—3 வீரிய உயர்ரகப் பப்பாளி

**தோற்றம்** : கோ. 2 பப்பாளியை சன்-ரைஸ் சோலோ பப்பாளியுடன் இனக்கலவை செய்து உருவாக்கப்பட்டது.

**மகசூல் திறன்** : மரத்திற்கு இரண்டு ஆண்டுகளில் 100-120 பழங்கள் (எக்டேருக்கு 150 டன்கள்.)

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்** : நட்டபின் 9-10 மாதங்கள் (பருவ மழை ஆரம்பிக்கும்பொழுதோ அல்லது முடியும் பொழுதோ நடலாம்).

**சிறப்புத் தன்மைகள்** : சன்ரைஸ் சோலோ ரகத்தைக் காட்டிலும் பெரிய பழங்கள்.

ஒரு பழத்தின் எடை 880 கிராம். அதிக இனிப்பான சிவப்பு நிறச் சதை கொண்டது. பெண் பூக்களும், இருபால் பூக்களும் ஒரே மரத்தில் முறையே 55 சதம், 45 சதம் இருப்ப தால் 1 குழிக்கு ஒரு செடி நட்டால் போது மானது.

## கோ—4 உயர்ரகப் பப்பாளி

**தோற்றம்** : கோ. 1 வாஷிங்டன் இனங் களின் ஒட்டுச் சேர்க்கைக்குப் பின் இனவிருத்தி செய்யப்பட்டது.




**மகசூல் திறன்** : எக்டேருக்கு 200 டன் கிடைக்கும். மரத்திற்கு இரு ஆண்டுகளில் 80 பழங்கள் கிடைக்கும்.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்** : நட்டபின் 9-10 மாதங்களில் காய்க்க ஆரம்பிக்கும். . பருவ மழை ஆரம் பிக்கும் பொழுதோ அல்லது முடியும் பொழுதோ நடலாம்.

**சிறப்புத் தன்மைகள்** : நடுத்தர அள வுள்ள உருண்டைப் பழங்கள் (சராசரி எடை 1.3 கிலோ), பழத்தில் சதை 4 செ. மீ. பருமனும், பழுப்பு கலந்த மஞ்சள் நிற முடையது. கோ-1, வாஷிங்டன் ரகங்களை விடச் சுவையானது. வீட்டுத் தோட்டங் களுக்கு ஏற்றது. ஒவ்வொரு 20 பெண் மரங் களுக்கு ஒரு ஆண் [illegible] என [illegible] விகிதத்தில் இருக்க வேண்டும்.






**மகசூல் திறன்** : சராசரி பசுந்தழை மகசூல் 18 டன், இது ஒரு எக்டேருக்கு 99 கிலோ தழைச்சத்து கொடுக்கும்.

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்** : ஆண்டு முழுவதும்.

**சிறப்புத் தன்மைகள்**: இதனைப் பயிரிடுவதால் நிலத்திற்கு நாட்டு இரகத்தைவிட அதிக தழைச்சத்து கிடைக்கிறது.

## வேலி மசால்

**தோற்றம்:** தாய்லாந்து நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பயிர் இனம்.

**மகசூல் திறன்** (எக்டருக்கு): தனிப்பயிர் 125 டன்.

கம்பு-நேபியர் புல்லுடன் கலவைப் பயிராக 225 டன்கள் (வேலி மசால் புல்).

**பயிரிட ஏற்ற பகுதிகள்** : தமிழ்நாடு முழுவதும்.

**பருவம்** : ஆண்டு முழுவதும்.

**சிறப்புத் தன்மைகள்** : குறைந்த வளம் உள்ள பூமியிலும் பயிரிடலாம். கால்நடைகளுக்குத் தேவையான தினப்படி உணவில் 20-25 சதம் இதிலிருந்து பெறலாம். மென்மையான சிறிய காய்களும் தீவனமாகப் பயன்படும்.

**எச்சரிக்கை** : விதைகளை விதைப்பதற்கு முன்பு நீர்த்த கந்தக அமிலத்திலோ (இரண்டு நிமிடங்கள்) அல்லது 80 சென்டிகிரேடு சூடுள்ள வெந்நீரிலோ (நான்கு நிமிடங்கள்) வைத்து விதைப்பது சிறந்தது.

## கோ—7 சணப்பு

**தோற்றம்** : பாபட்லா இனத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது.



## வறட்சிப் பகுதி வளம் அடைகிறது

விசுவம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கிராமம். இது திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்படி, ஆழ்கிணறு ஏறத்தாழ ரூ. 1 இலட்சம் செலவில் தோண்டப்பட்டது. 30 ஏக்கர் நிலபரப்பு இதனால் பாசன வசதி பெறும்.

தண்ணீர் வீணாகாமல் இருக்க, குழாய்களைப் பயன்படுத்தி இந்தப் பகுதியில் நீர் பாய்ச்சுகிறார்கள். வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் அமைககப்பட்ட 203 கிணறுகள் இந்த மாவட்டத்தில் 7000 ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி அளிக்கின்றன.



(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்து திரு.வி.க. அரசியலில் புகுந்தார். காங்கிரஸ் அரங்கில் பேசத் தொடங்கிய இவரது அரசியல் நுழைவிற்கு எஸ். சீனிவாச ஐயங்கார், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ராஜாஜி ஆகியோர் ஆதரவு அளித்து ஊக்கமூட்டினார்கள். திரு.வி.க. அரசியலில் ஈடுபாடு கொண்ட பின்னர், தமிழ் முழக்கம் அரசியல் மேடைகளில் கேட்கத் தொடங்கியது. பத்திரிகைகளில் செந்தமிழ் ஆட்சி புரியத் தலைப்பட்டது. 1917ஆம் ஆண்டில் 'தேசபக்தன்' அரசியல் இதழுக்கு ஆசிரியரான பின்னர் இவர், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் விடுதலை வீரர்களைப் போற்றியும் ஆற்றல்மிக்க வகையில் எழுதினார். இவரது உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க கட்டுரைகள், ஆங்கில அரசின் பகைமையை உருவாக்கியது. இரண்டரை ஆண்டுக் காலத்தில் அப்பத்திரிகையை விட்டு வெளியேறினார்.

தமிழ்நாட்டை ஆற்றல் செறிந்த எழுத்தாலும் சிந்துபாடும் சிற்றருவி ஒழுக்குப் பேச்சாலும் வளர்த்த பெருமை மிக்கவர்களில் திரு.வி.க. தலை சிறந்தவர். அரசியலில் காந்திய நெறிகளைப் பரப்பி, காந்தியக் கொள்கைகளுக்கு வெற்றி தேடித் தந்தார். எழுத்து ஆற்றலால் சாதிக்க முடிந்ததைப் பேச்சுத் திறத்தாலும் சாதித்துக் காட்டினார்.

தமிழ் இலக்கிய மேடைகளில் தண்டமிழின் சீர்மையை விளக்கிப் பேசினார். தொன்மைத் தமிழின் சீரிளமைத் திறனை அறியாது சிதைந்து கிடக்கும் தமிழர் தம் நிலையை எடுத்துக் காட்டித் தாழ்ந்த தமிழர் நிலையை மேம்படுத்த முயன்றார். 1925ஆம் ஆண்டு 31ஆவது தமிழர் மாநாட்டில் திரு.வி.க. ஆற்றிய உரை, எத்தகைய எழுச்சியைத் தமிழர்களுக்கு ஊட்டிய தென்பதை வரலாறு அறியும். தமிழர்களின் சிறப்பைக் குறிப்பிட்டு உரையாற்றிய பின், அவர் கூறுகிறார்:

''இத்துணைச் சிறப்பு வாய்ந்த நமது அருமைத் தமிழ் நாடெங்கே? தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கமெங்கே? அன்பெங்கே? அரசெங்கே? வீரத் தாய்மாரெங்கே? தமிழ்த் தாயெங்கே? தமிழர்களே! உங்கள் தொன்மை என்ன? உங்கள் பெருமை என்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்களுக்குள் இதுபோது எத்துணைப் பிளவு! எத்துணைப் பிரிவு! தமிழ்த் தாய், கால்வேறு-கைவேறு - தலைவேறு வேறாகக் கூறுபட்டுக் கிடப்பதைக் காண உங்களுக்குக் கண்ணில்லையா? நினைக்க மனமில்லையா? மீண்டும் நீங்கள் பண்டைய நிலை எய்த வேண்டாவா? வேண்டுமேல் பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து, உண்மைத் தமிழ்நாட்டைக் காண எழுங்கள்! எழுங்கள்!''

இத் தமிழ்நாட்டவராகிய நாம் பலப்பல சாதியினராகப் பலப்பல சமயத்தினராய்ப் பிரிந்தும் பிளவுபட்டும் கிடக்கின்றோம் என்று மனம் வருந்திய திரு.வி.க., அந்த வேறுபாடுகளை வீழ்த்தி, ஒருமைப்பாட்டை உண்டாக்கும் கருவி ஒன்று உண்டென்று நம்பினார்-அது எது? அதுதான் நமது அருமைத் தமிழ்!

தமிழர்களின் முன்னேற்றத்துக்குத் தீண்டாமையெனும் நோய் பெரும் தடையெனக் கருதினார் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. தீண்டாமைக் குற்றம் எல்லோர்பாலும் உண்டு என்று நம்பியவர் திரு.வி.க. தீண்டாமை உள்ள மட்டும் நாட்டுக்கு உய்வில்லை; தீண்டாமை உன்னும் மனநிலை மக்களிடை மாற வேண்டும் என்பதற்கு திரு.வி.க. சன்மார்க்கச் சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார். தீண்டாமை ஒழிய கலப்பு மணத்தைப் பெரிதும் ஆதரித்து வந்தார். கலப்பு மணம் பெருகினால் பிறப்பு வேற்றுமை ஒழியும் என்று நம்பினார்.

அண்ணல் காந்தியடிகளின் அறவழியிலும் அன்புவழியிலும் அளவிட முடியாத அசைவிலா நம்பிக்கை கொண்டிருந்த திரு.வி.க. உடையிலும் காந்தியத்தைப் பின்பற்றத் தொடங்கினார். கல்லூரி தமிழாசிரியராய், தேசபக்தன் இதழ் ஆசிரியராய் இருந்த காலை, திரு.வி.க. தலையில் சரிகைக்கரைபோட்ட வெள்ளைத் தலைப்பாகையும் விலையுயர்ந்த நீண்ட அங்கியும் அணிவார். கழுத்தில் பட்டு அல்லது சரிகைக் கரைத் துணி அணிவார். இடுப்பில் எட்டு முழவேட்டி கீழ்ப் பாய்ச்சாய்க் கட்டியிருப்பார். காந்தியடிகளின் கதர் இயக்கம், உள்ளத்தைக் கவர்ந்ததுடன் போக்கையும் மாற்றி விட்டது. இடுப்பில் கதர் வேட்டியும் ஒரு வெள்ளைச் சட்டையும் மேலே வெள்ளைத் துண்டும் அணிந்து, வாழ்நாள் முழுவதும் எளிமையின் உருவாய் இருந்துவிட்டார். உடையில் மேற்கொண்ட அவரது எளிமைப் பண்பு, பின்பு அவரது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஆட்சி செலுத்தியது.

திரு.வி.க.வின் வாழ்வு, தன்னலம் கருதாத தொண்டு வாழ்க்கை. அவரது நேரமும் நினைப்பும் தமிழகத்திற்கு, தமிழர்களின் நல்வாழ்விற்குப் பயன்பட்டது. அவரது இல்லற வாழ்வு

குறுகிய காலம் தான். 1912ல் கமலாம்பிகை எனும் அம்மையாரை மணந்து அவருடன் ஆறு ஆண்டுகளே இல்லறம் நடத்தினார். அவர் பெற்றெடுத்த ஆண் குழந்தையும் பிறந்த ஒரு வாரத்தில் மறைந்தது. பெண் குழந்தை ஓராண்டு இருந்து இயற்கையெய்தியது. இவரது துணைவியாரும் 1918ஆம் ஆண்டில் நோய்வாய்ப்பட்டு மறைந்தார். தன் துணைவியார் பிரிவாற்றாமையால் அன்புள்ளம் கொண்ட தமிழ்முனிவர் பெரிதும் துயரடைந்தார்.

''யான் நீரில் மூழ்கினேன். என் மனைவி நினைவு ஒழியவில்லை. அந்நினைவு அன்றும் ஒழியவில்லை; இன்றும் ஒழியவில்லை. எதை இழந்தாலும் எளிதில் பெறலாம். காதலியை இழந்தால் அரிதிலும் பெற இயலாதே'' என்று வருந்தி உருகியுள்ளார்.

''என் வாழ்க்கைத் துணைக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? பெண்ணின் பெருமை விளங்க-இவ்வுலகில் நன்கு விளங்கப் பாடுபட உறுதி கொண்டேன். அதற்கென்று என்வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளேன்'' நெஞ்சைப் பிழியும் அவரது துயரம் இன்றும் நம்மைக் கலங்க வைக்கிறது.

குறுகிய காலமே தன் துணைவியாருடன் வாழ்ந்தாலும் பெண்ணின் பெருமையை உணர்ந்து போற்றுதற்கு அவருக்கு அது வாய்ப்பாக அமைந்துவிட்டது. துணைவியாரை தமது முப்பத்தைந்தாவது வயதிலேயே இழந்தும் வாழ்வின் இறுதி வரையில் தனிமை வாழ்வை ஏற்றுக்கொண்டார்.

''ஆண்மை பெண்மையாக மாறினாலன்றி இறைமைபெற இயலாதென்று யான் பேசியும் எழுதியும் வருவது நாட்டுக்குத் தெரியும். என்னுடைய பேச்சும் எழுத்தும் தமிழ்ப் பெண்ணுலகில் அமைதி முறையில் அறப்புரட்சியை ஓரளவில் நிகழ்த்தி வருகின்றன. அப்புரட்சி முழுநிலை எய்தல் வேண்டுமென்பது என் வேட்கை'' என்று பெண்ணின் பெருமையை நிலைநாட்ட உறுதிகொண்டார் திரு.வி.க.

வாழ்க்கையில் வழி தவறிய பெண்டிர் நலத்துக்காக உழைத்தார். மாநாடுகளிலும் சீர்திருத்தக் கூட்டங்களிலும் பெண்டிர் நலம்பேணும் கருத்துரைகளை முழக்கினார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்பதை வலியுறுத்தினார். விதவைகளின் கண்ணீர் துடைக்குமாறு மக்களை வேண்டிக் கேட்டுக்



டாக்டர். மு. வ

கொண்டார். இவரே முன்நின்று விதவைத் திருமணங்களை நடத்தி வாழ்த்தி அருளினார்.

அச்சமயம், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சென்னை சட்டசபையில், வழக்கி வீழ்ந்தவரின் முன்னேற்றத்திற்காக ஒரு மசோதா கொண்டு வந்தார். அம்மசோதாவுக்கு எதிர்ப்புகள் எழுந்தன. எதிர்ப்புக்களை உடைத்தெறிந்து திரு.வி.க. 'நவசக்தி' வாயிலாக மசோதாவுக்கு வரவேற்புக் கூறினார். கூட்டங்களிலும் இம்மசோதாவை ஆதரித்து முழக்கினார். பெண்ணுலகில் படிந்துள்ள மாசுகளைச் சமூகமே களைய முற்படுதல் நன்று; ஆனால் சமூகம் முற்படாத நிலையில் சட்டங்களால்தான் தீமைகளைக் களைதல் வேண்டும் என்று நம்பியவர் திரு.வி.க. அக்காலக் கட்டத்தில் நடைபெற்ற அருண்டேல்-ருக்மணி கலப்புத் திருமணத்தை திரு.வி.க. ஆதரித்து எழுதியதுடன் பாராட்டிப் பேசியும் வந்தார். இளமை மணத்தை ஒழிப்பதற்கான சாரதா மசோதாவுக்கும் எதிர்ப்புகள் மேலிட்டன. இம்மசோதா நிறைவேற்றத்தையும் திரு.வி.க. முழுமனதுடன் ஏற்றுப் பேசினார்.

''பெண்மணிக்கு இழிவு நேருமாயின் அதைப் போக்க ஆண்மகன் விரைதல் வேண்டும். இல்லையேல் அவன் ஆண்பிறவி எய்தியவனாகான். பெண் இழிவு காண என் மனம் பொறாது''

என்று அறுதியிட்டு உரைத்த பெருந்தகை திரு.வி.க.

'பெண்ணின் பெருமை' என்ற நூலில் இவர் வலியுறுத்தும் கூற்றின் சாரத்தைத் தெரிவிக்கின்றார்:

''பெண்ணலன் உங்கள் நலன்; உங்கள் நாட்டு நலன்; பெண் கண்ணீர்விடும் நாடு வறுமை நாடாகும். அடிமை நாடாகும். அஃது எரிந்துபோகும். கரிந்து போகும். ஒரு பெண்ணுக்கு ஸ்ரீராமபிரான் எவ்வளவுழுயன்றார்! எத்துணைப் போர் புரிந்தார்! ஒரு பெண்ணின் பொருட்டு பாரதப் பெரும்போர் நடந்தது! அவளது பெருமை காக்கவே ஆண்மகன் பிறந்திருக்கிறான். பெண்ணில்லையேல் உயிரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணால்; எல்லாம் பெண்ணில்; அத்தகைய பெண்ணைத்-தாயை - தெய்வத்தைப் போற்றுங்கள்; போற்றுங்கள்''

இப்பூவுலகில் பெண்ணின் பெருமையை இதைவிட வலியுறுத்திக்கூற இயலுமோ?

தமிழ் முனிவரின் வாழ்க்கையில் பெரும்பகுதி செலவிடப்பட்ட காலம், தொழிலாளர் நலனிற்கும் தொழிலாளர் இயக்கத்திற்கும் எனலாம். இவர் உள்ளத்தில் தொழிலாளர் இயக்கத்தின் கனல் 1908-ஆம் ஆண்டிலேயே 'ஸ்பென்ஸர்' கம்பெனியில் இவர் கணக்கராக இருந்தபோதே வீசத் தொடங்கியது. இந்தியாவிற்கு வந்த தொழிற்கட்சித் தலைவராகிய 'கீர் ஹார்டி' என்பவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றார். இவர் கல்லூரித் தமிழாசிரியர் பணியை விடுத்து தேசபக்தனில் ஆசிரியரான பின்னர் திவான்பகதூர் கேசவப்பிள்ளை அவர்களுடன் தொடர்பு கொண்டகாலையில் மில் தொழிலாளர்களின் குறைகளை உணரலானார். 'இந்தியன் பேட்ரியட்' என்ற பத்திரிகையில் திரு. கேசவப்பிள்ளை தொழிலாளர்களின் துயரங்களை எழுதிவந்தார். அவற்றில் சிலவற்றை திரு.வி.க. மொழிபெயர்த்து 'தேசபக்தன்' இதழில் வெளியிட்டும் வந்தார். தேசபக்தனில் கடிதங்கள் வாயிலாகத் தொழிலாளர்களின் அவலநிலையைப் பலர் எழுதியும் வந்தனர். இவ்வாறு இவரது உள்ளத்தில் அரும்பிய தொழிலாளர் இயக்கப் பணி, 1918 ஏப்ரல் 27ஆம்நாள், செயல்வடிவம் பெற்றது. சென்னைத் தொழிலாளர் சங்கம் 1918ஆம்ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)

அறிவியல்-வாழ்வியல் கலைக் களஞ்சியம்

தமிழ்ப்பல்கலைக் கழகம் அறிவியல் மற்றும் வாழ்வியல் கலைக் களஞ்சியங்களை வெளியிட உள்ளது. அதற்காக ரூ. 13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



அட்டை சொல்லும் செய்தி

# அயல்நாட்டவர் போற்றிய அற்புதப் படைப்புகள்!

டாக்டர் இரா.நாகசாமி
இயக்குநர்,
தொல் பொருள் ஆய்வுத்துறை

புது டில்லியில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் தலைவர்களின் மாநாட்டின்போது டில்லி தேசிய அருங்காட்சியகத்தில் தமிழ்நாட்டுச் செப்புக் கலை உருவங்கள் ஒரு சிறப்புக் காட்சியாக மத்திய அரசு பண்பாட்டுத் துறையினால் அமைக்கப்பட்டது. அக்காட்சியில் சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட-கலையிலே மிகச் சிறந்தசிலைகள் இடம் பெற்றன.

இவை பெரும்பாலும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவை. நமது ஆலயங்களிலே பின்னமாகவும், பல ஆண்டுகளாக வழிபாடின்றியும், சேமித்து வைக்கப்பட்டிருந்த சிலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை இவை. இவற்றுடன் தஞ்சைக் கலைக்கூடம, மாநிலத் தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை அருங்காட்சியகம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் சில சிலைகள் இக்காட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இவை பெரும்பாலும் கலை நுணுக்கத்திற்காகவும், அவற்றின் சிறப்புத் தன்மைக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவை மிகவும் பாதுகாப்பாகப் பிரத்தியேகப் படை விமானம் மூலமாக டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவற்றில் பல சிலைகள் பல ஆண்டுகளாக வழிபாடின்றிப் பாசி படிந்து இருந்த காரணத்தால் நவீன இரசாயன முறையில் தூய்மை செய்யப்பட்டுக் காட்சியில் வைக்கப்பட்டன. இவற்றிற்குப் பல்வேறு நவீன பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டு மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. காட்சி ஏப்ரல் 30-ஆம் தேதி வரையில் டில்லியில் நடைபெறும். பின்னர் இவை அனைத்தும் உரிய இடங்களுக்குத் திரும்ப அனுப்பப்படும்.

இங்கு மொத்தம் எண்பதுக்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இருந்து 13-ஆம் நூற்றாண்டுக்குள்ளாகச் செய்யப்பட்ட பல்லவர், சோழர் காலச் செப்புச் சிலைகள் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன. பல்லவர் காலச் சிலைகள் - செப்புச் சிலைகள் மிகவும் அரிதாகவே கிடைக்கின்றன. இவற்றுள் மிகவும் தொன்மையான திருமால் சிலை இங்கு இடம் பெற்றுள்ளது. இது கி.பி. 750-ஆம் ஆண்டைச்சார்ந்





தது. பல்லவர் காலத்தின் இறுதியில் மிக அழகிய செப்புச் சிலைகள் வடித்தெடுக்கப்பட்டன. அவற்றில் ஒப்பரும் படைப்பு என்று கருதப்படும் கல்யாண சுந்தரர் திருமேனி இங்கு காட்சியில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்துச் சிலைகளைக் காட்டிலும் மிகவும் எழில் வாய்ந்தது. பார்ப்போர் அதைக் கண்டு பரவசம் அடைகின்றனர். இதன் அழகில் மெய் மறந்து நிற்கின்றனர். சிவபெருமான் பெருமிதத் தோற்றத்தோடு மணக்கோல நாதராக, நாணமே உருவாகி நிற்கும் நங்கையான உமையைக் கைப்பிடிக்கும் காட்சி. தேவியின் அங்க அமைப்பும், அழகிய தோற்றமும் மிகச் சிறப்பாகக் கலை அழகை எடுத்துரைக்கும் வகையில்-ஒப்பரும் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. இதைப் பார்க்கின்ற மேலை நாட்டினரும், இந்திய நாட்டுச் சான்றோரும் இது உலகக் கலைப் படைப்புகளில் தலையாயது என்று ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

சற்றேறக்குறைய கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடித்து எடுக்கப்பட்ட அழகிய கல்யாண சுந்தரர் வடக்காலத்தூர் என்ற இடத்தில் கிடைத்தது. சோழர் காலத்தில் ஆதித்ய சோழன் காலம் தொடங்கிச் சற்றேறக்குறைய 13-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் சோழர்களுடைய சைவண்ணம் கலைப் படைப்புக்களில் காணலாயிற்று. ஆதித்ய சோழன் கி.பி. 875-ல் இருந்து 906 வரையில் சோழர் அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிந்தான். பல்லவ சாம்ராஜ்ஜியத்தை வீழ்த்திய பெரும் புகழ் இவனுக்கு உண்டு. சோழர் காலத்துக் கலைக்கெனத் தனித்ததொரு வடிவவத்தை அமைத்து முதன் முதலில் உருவாக்கிய பெரும் மன்னன் ஆதித்ய சோழன் என்பர். இவனே கோயிற் கலைகளில் ஈடுபாடு கொண்டு பல வடிவங்களை வடித்து எடுத்திருப்பதால் இவன் பெயரால் ஆதித்தன் கலை எனச் சோழர் கலையின் முதல் பகுதி அழைக்கப்படுகிறது. ஆதித்யனுக்குப் பின்னர் வந்த பராந்தகச் சோழனும் ஏராளமான பணிகளில் ஈடுபட்டு இருக்கிறான். இருப்பினும் இவன் காலத்துச் சிலைகளும் வடிவத்திலும், அமைதியிலும் ஆதித்ய சோழன் காலத்தைப் போன்றே இருக்கின்ற காரணத்தால் ஆதித்தன கலை என்றே கொள்ளலாம்.

சற்றேறக்குறைய 970-ல் அரியணை ஏறிய உத்தம சோழனின் தாயும், கண்டராதித்த சோழனின் தேவியுமான செம்பியன்மாதேவி, இராஜராஜசோழன் காலம் வரையில் தமிழகத்தில் பல்வேறு பாடல் பெற்ற தலங்களுக்குத் தாமே சென்று கோயில்களைப் புதுப்பித்து ஏராளமான செப்புத் திருமேனிகளை வடித்து எடுத்து, பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலும் ஆன உருவங்களைச் செய்து அளித்திருக்கிறார் எனப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இப்புகழ் வாய்ந்த சோழ மாதேவியால் செய்தளிக்கப்பட்ட அற்புதச் செப்புத் திருமேனிகள் கோனேரி ராஜபுரம் என்ற ஊரில் இன்றும் வழிபாட்டில் உள்ளன. இவ்வம்மையார் தாமே நேர்முகமாக ஈடுபட்டு வளர்த்த கலை தொன்மை வாய்ந்ததாக ஆதித்தன் கலையைக் காட்டிலும் சிறந்து நிற்பதாக, மூன்று வளைவுகள் இரு வளைவுகள் போன்றவைகளை நுணுக்கங்களைச் சேர்ந்த அமைப்பு உடையதாகத் தோற்றுவிக்கப்பட்ட சிலைகளைக் கொண்டுள்ளது. ஆதலின் செம்பியன் மாதேவியார் கலை என்றே ஒரு சோழர் காலக்கலை மரபைக் கூறுவர். செம்பியன் மாதேவியார் கலைக்கு எடுத்துக்காட்டாகக் கும்பகோணத்திற்கு அருகில் நல்லூர்க் கோயிலில் கிடைத்த அழகிய பார்வதியின் சிலை இக்காட்சியில் இடம் பெற்றுள்ளது. ஆதித்ய சோழன் காலக் கலைக்கு எடுத்துக்காட்டாகப் பல எழிலார்ந்த சிலைகள் இடம் பெற்றுள்ளன.





ஆதித்ய சோழனாலும், செம்பியன் மாதேவியாலும் கலை எவ்வாறு தனித்தன்மை கொண்டு விளங்குகின்றதோ அதைப் போன்று தஞ்சையில் ஒப்பரும் கோயிலைத் தோற்றுவித்த ராஜராஜ சோழனும் ஏராளமான செப்புத் திருமேனிகளைத் தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் செய்தளித்திருக்கிறான். இவன் காலத்துக் கலைக்கு எடுத்துக்காட்டாக திருவெண்காட்டிலிருந்து அளிக்கப்பட்ட விருடபவாகன தேவர் செப்புத் திருமேனியும், அவரது தேவி உமா பரமேசுவரி உருவமும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இராஜ ராஜ சோழனின் கலையின் உன்னத நிலைக்கு இவை எடுத்துக்காட்டுகள். திருவெண்காடு கோயிலில் கி.பி.1011ல் ஒரு பெரும் மகானால் விருடபவாகனர் சிலை தோற்றுவிக்கப்பட்டது. அதற்கடுத்துச் சில பெரியோர்களால் தேவியாகிய உமா பரமேசுவரி சிலை தோற்றுவிக்கப்பட்டது.

இதைப் போல வெண்காட்டு உடைய இக்கோயிலில் அழகிய அர்த்தநாரி தேவர் சிலையும், பிச்சாடனர், கல்யாணசுந்தரர், க்ஷேத்திரபாலர், சோமாஸ்கந்தர்



ஆகிய பல செப்புத் திருமேனிகள் இக்காலத்தில் செய்தளிக்கப்பட்டவை பூமிக்கடியில் இருந்து கிடைத்துள்ளன. இவற்றில் சில தஞ்சைக் கலைக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. சில சென்னை அருங்காட்சியகக் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. விருடபவாகனர் சிலையும் தேவியின் சிலையும் தஞ்சைக் கலைக் கூடத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு இக்காட்சியில் இடம்பெற்றன. இவை லண்டனில், சென்ற ஆண்டு நடைபெற்ற 'இந்தியக் கலை விழா'வில் காட்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டவை. உலகம் முழுவதிலிருந்தும் வந்த கலை ரசிகர்கள் இச் சிலையின் அழகில் மெய் மறந்து பாராட்டியிருக்கிறார்கள்.

இந்தியக் கலையை மிகச் சிறந்த கலையாகக் கருதுபவர் டாக்டர் ஸ்டெல்லா காம்ரிஷ் என்ற அம்மையார். 84 வயது முதிர்ந்துள்ள இந்த அம்மையார் இந்தியக் கலையைப் பற்றி சிற்பங்களின் சிறப்பைப் பற்றி-எடுத்துரைப்பதில் ஈடு இணையற்றவர். இவ்வம்மையாரை மாநாட்டில் நடைபெற்ற காட்சியில் நான் கண்டேன். அப்போது இவ் வம்மையார் இந்த ஒரே ஒரு சிலையைப் பார்ப்பதற்காகவே இந்த உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும் ஓடி வந்து எவ்வளவு முறை வேண்டுமானாலும் பார்க்கலாம். அவ்வளவு மகோன்னதப் படைப்பு, என்று இதைக் கண்டு வியந்து பாராட்டினார். அப்புகழ் வாய்ந்த விருடபவாகனர் சிலை இக் காட்சியிலும் டெல்லியில் வைக்கப்பட்டுள்ளது.





இவை தவிர அடியார்களின் அழகு மிகுந்த செப்புச் சிலைகள் பல இக்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் திருவெண்காட்டில் கிடைத்த கண்ணப்பரின் சிலை ஒன்று அனைவரின் கருத்தையும் கவரும் வகையில் சிறந்ததாகக் கருதப்பட்டது. இதைப் போலவே சோழ அரசர்களின் தானைத் தலைவர்களாகப் பணி புரிந்தவர்களில் ஒருவரது வடிவம் ஒன்றும் அழகுடன் காணப்படுகிறது. இறுதியில் மிகச் சிறந்த ஆடவல்ல பெருமானின் செப்புத் திருவுருவங்கள் ஏழு, சிவகாமி அம்மையுடன் அருகருகே வைக்கப்பட்டு அழகுடன் மிளிர்கின்றன.



நடராஜப் பெருமானின் உருவத்தைப் பார்க்க வந்த ஒரு வெளி நாட்டுத் தலைவரின் மனைவியார் மெய் மறந்து தாமே அங்கே ஆடத் தொடங்கினார். அந்த அளவுக்கு அவை அங்கு வருவோர்களைக் கவருகின்றன. மற்றொரு நாட்டுத் தலைவரின் மனைவியார் இந்தக் காட்சியைக் காண்பதற்குத் திரும்பத் திரும்ப வந்து மூன்று முறை பார்த்துக் களித்தார். இத்தகைய கலைச் சிறப்பு மிக்க படைப்புக்கள் தமிழகத்தில் இருக்கின்றன என்பதை, கலை வரலாற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பல நாட்டு மக்களும் கண்டு போற்றும் பெரும் வாய்ப்பாக இது அமைந்துள்ளது.



# வடஆர்க்காடு மாவட்டத்தில் வறட்சிநிவாரணப் பணிகள்


**அ. பன்னீர் செல்வம்**
மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர். வடஆர்க்காடு மாவட்டம்.


**வ**ட ஆர்க்காடு மாவட்டம் 12,265 ச.கி.மீ பரப்பளவு கொண்டதாகும். மொத்தம் 44,02,087 மக்கள் தொகை கொண்ட மாவட்டமாகும். தமிழகத்தின் நெற்களஞ்சியமாகிய தஞ்சைக்கு அடுத்தபடியாக அதிக நெல் விளைச்சலைக் கொண்டது வட ஆர்க்காடு மாவட்டம். இம் மாவட்டத்தில் 6½ லட்சம் விவசாயிகளும், 5½ லட்சம் விவசாயத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.

இம்மாவட்டத்தில் நடைபெறும் விவசாயம் ஏரிப்பாசனத்தையும், நிலத்தடி நீர்ப்பாசனத்தையும் நம்பியே உள்ளது. கடந்த 1982ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு மிகவும் குறைவானது. மழைக் குறைவின் காரணமாக இம்மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் 13 வட்டங்களில் 1,912 கிராமங்கள் உள்ளன. அவற்றில் 13 கிராமங்களைத் தவிர மற்ற எல்லாக் கிராமங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்கியதில் இம்மாவட்டத்திற்கு ரூ. 1 கோடியே 40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதைக் கொண்டு, 50 ஏக்கருக்கு மேல் பாசனவசதி பெறும் (ஆயக்கட்டு) பெரும் பாசனத் திட்ட அபிவிருத்திக்காக ரூ. 70 லட்சமும், 50 ஏக்கருக்குக் குறைவான பாசனவசதி உள்ள பாசனத் திட்ட அபிவிருத்திக்காக ரூ. 35 இலட்சமும், புதிய மண் சாலைகள் போடுவதற்காக ரூ.35 இலட்சமும் பகிர்ந்தளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடிதண்ணீர்த்திட்டத்திற்காக நடைமுறை ஆண்டுக்குத் தமிழக அரசு ரூ. 3 கோடியே 80 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இதைக் கொண்டு 650 குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 1984 மார்ச் மாத இறுதிக்குள் குழாய்க் கிணறு வேலைகள் முடிவடையும்.

இதுதவிர குடிதண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்த, தமிழக அரசு ரூ. 10 இலட்சம் வழங்கி உள்ளது.

இம்மாவட்டத்தில் 10 ஆயிரத்து 500 கிணறுகள் உள்ளன. அவற்றில் 4 ஆயிரம் கிணறுகளை ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

வறட்சி நிவாரணப்பணி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு ஆகிய திட்டங்களின் கீழ் தினசரி ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் இந்த மாவட்டத்துக்கு ரூ. 40 லட்சமும், 430 டன் அரிசியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு திட்டப் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலமாக, இம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியை விரட்டுவதற்கும், வறட்சிக் காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் அரசு ஆர்த்தெழுந்து பணியாற்றி வருகிறது.



# திருட்டா...ஜாக்


**தெய்வ. சுப்ரமண்யம் ராஜதேவன்**
காவல் துறை கண்காணிப்பாளர்






**கு**ற்றங்கள் நடந்த இடங்களைப் பார்வையிட்ட பிறகு ஒரு சில உண்மைகள் மேலோங்கி நிற்கின்றன. ஒரு திருட்டினைச் செய்வதற்கு முன், அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு, அதன் பின்னரே அந்தத் திருட்டினைச் செய்யும் நபர், தன் தொழிலில்இறங்குகிறார். அது ஒரு வீடாக இருந்தாலும் சரி, அல்லது கடையாக இருந்தாலும் சரி, அல்லது ஓர் உந்து வண்டியோ, புகை வண்டியோ அல்லது நெடுஞ் சாலையோ எதுவானாலும் திருட்டினைச் செய்ய எண்ணியுள்ள நபர் முதலில் வேவு பார்க்கிறார். யார் யார் அங்கு வருகிறார்கள், எப்போது கூட்டம் அதிகமாக இருக்கிறது; அல்லது எப்போது கூட்டமே இல்லை; எங்கு இருள் அதிகமாகச் சூழ்ந்துள்ளது, குற்றம் செய்வதற்கு முன்னர், தான் எந்த வழியாகப் போக வேண்டும்; செய்த பிறகு எப்படித் தப்பித்து வெளியேற வேண்டும் என்றெல்லாம் பலவாறுயோசித்து வழிமுறைகளை ஆராய்ந்த பின்னரே அவன் குற்றங்களைச் செய்கிறான். பொது மக்களாகிய நாம் சிறிது கவனமாக இருந்தால் திருட்டுக்கு இலக்காகாமலும், பொருட்களை இழக்காமலும் இருக்க முடியும். அது எப்படி முடியும் என்பது பற்றி உங்கள் சிந்தனைக்குச் சில யோசனைகள்:

முதலில் நம் வீட்டிலிருந்து ஆரம்பிப்போம். வீடு கட்டும் போதே ஒரு சில பந்தோபஸ்து ஏற்பாடுகளை நாம் செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக புகைக்கூண்டு வைப்பதில் கவனம் செலுத்துவது. ஏனென்றால் ஒரு சில வழக்குகளில் திருடன் புகைக் கூண்டு வழியாக ஒரு கயிற்றினைக் கட்டி உள்ளே இறங்கித் திருட்டினைச் செய்துள்ளான். எப்படி என்றால், புகைக் கூண்டு மீது வைக்கப் பட்டிருக்கும்சிமிண்டுபலகையைத் தூக்கித் தூர வைத்துவிட்டு ஒரு கழியையோ இரும்புச் சட்டத்தையோ குறுக்கேவைத்து, அதன் மீது கயிற்றினைப் போட்டுக் கயிறு வழியாக உள்ளே இறங்கிப் பொருட்களைக் கைப்பற்றி, வீட்டின் பின்புற வழியாகக் கதவைத் திறந்து கொண்டு ஓடிப்போன வழக்குகள் உண்டு.

வீட்டின் முன்பக்க, பின் பக்கக் கதவுகளின் குறுக்கே சட்டம் வைத்து, வீட்டின் உள்ளேயிருந்து பூட்டிக் கொள் ளும் சாதனம் வைத்துக் கொண் டால் பிளஷ் கதவுகளைத் திருடன் எளிதில் நெம்பி வீட்டினுள் வருவதைத் தடுக்க முடியும். பழைய கால வீடுகளில் "அடிதண்டா" என்று சொல் லப்படும் இரும்புக் குறுக்குச் சட்டத்தினை வைத்துப் பூட்டிக் கொள்ளும் முறை இருந்து வந் ததைக் காணலாம். இதனை ஏன் சொல்கிறேன் என்றால் ஒரு சில வழக்குகளில் பிளஷ் கதவு மீது கடப்பாரை போன்ற ஆயுதத்தை வைத்து நெம்பியவுடன், கதவு தானாகத் திறந்து விடுகிறது. அதன் வழியாகத் திருடர்கள் திருட்டினைச் செய்துள்ளனர்.

மற்றும் ஒரு யோசனை. வெளியே யார் கதவைத் தட்டு கிறார்கள் என்பதை வீட்டினுள் இருக்கும் நபர்கள் கவனிக்க 'கண் துவாரம்' ஒன்றினை ஏற் படுத்திக் கொள்வது. இதன் மூல மாக வீட்டினுள்ளிருந்து கதவைத் திறக்காமலே பார்க்கலாம். அப் படிப் பார்த்து நமக்கு வேண்டி யவர்கள்-தெரிந்தவர்கள் மட்டும் இருந்தால் கதவைத் திறக்கலாம். இது மட்டுமின்றி அந்தக் கதவுக் கும் வாசற் காலுக்கும் சிறிய இடைவெளி வைத்து ஓர் இரும்புச் சங்கிலியால் பிணைத்துக் கொள் வது. கதவினை ஓரளவுக்கு மட்டும் திறந்து அந்த இடுக்கு வழியாக யார் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். வெளியேயுள்ள நபர் கதவைத் திறந்து உள்ளே சடாரென்று நுழையாமல் இம்முறையால் தடுக்க முடியும்.

முக்கியமாக வீட்டில் ஆட வர்கள் அனைவரும் வேலைக்குச் சென்ற பிறகு ஒரு சில நபர்கள் மின்சார-டெலிபோன் தொழி லாளி என்று சொல்லிக்கொண்டு வீட்டினுள் நுழைந்து ரிப்பேர் செய்வது போல் பாசாங்கு செய்து, பெண்டிர் நகைகளைப் பறிப்பது போன்ற குற்றங்கள் நடவாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இது எப்படி என்றால் வீட்டிலுள்ள பெண்டிர் அது போன்று வரும் நபர்களை வீட்டினுள் நுழைய விடக் கூடாது. அவர்கள் உண்மையாகவே டெலி போன் அல்லது மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தீர விசாரித்து யாருக்காவது டெலிபோன் செய்து அல்லது அந்த நபரையே தீர விசாரித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு சில வீடுகளில் காம்பவுண்டுக்கு உள்ளே வைத்திருக்கும் வெந்நீர் அடுப்பு, வெந்நீர் பாய்லர் போன்ற பொருட்களும் துவைத்துக் காய வைத்துள்ள துணிகளும் திருடுபோய்விடும். இதனைத் தடுக்க வீட்டில் வளர்த்து வரும் நாய் இருந்தால் அதனை அவிழ்த்து விட்டுக் கண் காணிக்கச் செய்யலாம். அல்லது வெந்நீர் அடுப்பு, பாய்லர் போன்ற பொருட்களை உள்ளே எடுத்து வைத்துக் கொள்ளலாம். துணிகள் காய்ந்தவுடனே அவற்றை உள்ளே எடுத்து வைத்துவிட வேண்டும். ஒரு சில வீடுகளில் ஜன்னல் வழியே கழியினை உள்ளே விட்டுக் கொடியில் தொங்கும் சேலை, பாண்டு, ஷர்ட் போன்ற துணிகளை லாவகமாக உருவி வெளியே எடுக்கும் திருட்டு முறையும் உள்ளது. அதனை எப்படித் தடுப்பது? கிரில் அல்லது சிறு சிறு வலைகளால் பின்னப்பட்ட சாதனங்களை ஜன்னல்களுக்குப்பொருத்தி விட்டால் இது போன்ற திருட்டினைத் தவிர்க்கலாம்.

நாம் வீட்டை விட்டு வெளியே செல்கிறோம். சந்தடி மிகுந்த புகைவண்டி அல்லது பேருந்துகளில் ஏறும்போதோ, இறங்கும் போதோ நம் 'பாக்கெட்டுக்கள்' பறிபோகின்றன. நாம் ஓரளவிற்கு உஷாராக இருந்தால் இதிலிருந்து தப்ப முடியும். முக்கியமாக மேல் பக்கவாட்டில் வைத்திருக்கும் பர்ஸ் முதலியவை திருடுபோகிறது கூடுமானவரையில் பணத்தை உள்பக்க பாக்கெட்டிலோ அல்லது பாண்ட் பாக்கெட்டிலோ வைத்துக் கொள்ளவும். கைப்பையில் வைப்பது சிறந்த முறை. நாம் உஷாராக இருந்தால் நம்பொருள் திருடுபோகாமல் தடுப்பது மட்டுமின்றி, பிறர் பொருளும் திருடு போவதைக் கண்காணித்துத் தடுக்க முடியும்.

புதிதாக ஏற்பட்டுவரும் குடியிருப்புச் சாலைகளில் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை மக்கள் நடமாட்டம் அதிகமிராது.

**தமிழரசில் இல்லாத
தொன்றில்லை:
எல்லாம் இதிலுண்டு! பல்சுவையும்
பெற்றிலங்கும் பெட்டகம் இது!**

— கவிஞர் அ. சுப்பையன்,
செட்டிக்குறிச்சி.

தமிழரசு இதழ் குறைந்த விலையில் ஏராளமான அரசுச் செய்திகளுடனும், சாதனைப் பட்டியலுடனும் வருவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

— பெ. சு. தியாகராசன்,
அருப்புக்கோட்டை.

தமிழரசு இதழ்கள் (1-2-83, 16-2-83) இரண்டும் நெல்லை மாவட்டத்தின் பெருமையைப் பறைசாற்றும் மலர்களாக அமைந்துள்ளன. மாதந்தோறும் இவ்வாறு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைப் பற்றி அறிவிக்கும் பணியில் -தமிழரசு' இதழ் ஈடுபட விரும்பி வேண்டுகிறேன்.

— பேராசிரியர் பா. வளன் அரசு
பாளையங்கோட்டை.

1-3-83 இதழின் அட்டைப் படம் (செந்தமிழ்ச் செல்வர் திரு வ. சுப்பையா பிள்ளை) மிகவும் அருமை! கடைசி அட்டையில்




உள்ள மலர்க் கண்காட்சியின் படமும் கண்ணைக் கவருவதாக அமைந்துள்ளது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களின் உரையான 'பிஞ்சுக் குழந்தைகளை வாழ வைக்கும் பெருந்திட்டம்' மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

— க. பாண்டியன்,
போரூர், சென்னை.

'மாணவர் பக்கம்' பொது அறிவுத் தகவல்களைத் தரும் பல்சுவைப் பக்கமாக விளங்குகிறது. அது எங்களைப் போன்ற மாணவர்களை மகிழ்வித்து வருகின்றது.

— ஜி. திருமலை, டி. பாபு,
அகரம், சென்னை-82.

சிறுகதைகளும், கவிதைகளும் ஒவ்வொரு இதழிலும் இடம் பெறச் செய்ய வேண்டுகிறேன். படமும்-செய்தியும் நல்ல பகுதி.

— எஸ். வெங்கடேசன்,
பேரணாம்பட்டு.

1-3-83 இதழில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராசாமுகமது அவர்களின் 'உமறுப்புலவருக்கு ஒரு கோடி வணக்கம்'-திரு இல. செ. கந்தசாமி அவர்களின் 'இலக்கியத்தில் வேளாண்மை' ஆகிய கட்டுரைகள் எங்களைக் கவர்ந்தன.

— எஸ். விவேகானந்தன்,
எஸ். சாந்தகுமார்,
கும்பகோணம்.

அப்போது சைக்கிளில் பின்னால் வந்து கழுத்தில் உள்ள செயினை அறுப்பது போன்ற திருடுகள் நடக்கக்கூடும். அதுபோன்ற சந்தர்ப்பத்தில் யாருடைய துணையுடனாவது செல்வது நல்லது. அல்லது ஜனநடமாட்டமில்லாத போது நம் நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

வங்கியின் முன்னோ வங்கியின் உள்ளேயோ, பணம் பட்டுவாடா செய்யும் கஜானா போன்ற இடங்களிலோ ஒரு சில நூதன திருட்டுகள் நடக்கின்றன. வங்கியிலிருந்து அல்லது கஜானாவிலிருந்து பணத்தினை எடுத்துச் செல்லும் நபரை ஏமாற்றிப் பணத்தைத் திருடிக் கொள்வதற்காக ஒரு சில முறைகள் கையாளப் படுகின்றன. உதாரணமாக உங்கள் முதுகில் ஏதோ பறவையினது எச்சம் விழுந்துவிட்டது என்று சொல்ல, உடனே அந்த நபர் தன் கைப்பையினைக் கீழே வைத்து என்னவென்று கவனிப்பார். கண்மூடிக் கண் திறக்கு முன் பணப்பை மாயமாய் மறைந்து விடும். இதேபோன்று அய்யய்யோ நீங்கள் நரகலை மிதித்து விட்டீர்கள் என்று ஒரு நபர் சொல்ல, பணம் ஏந்தி வரும் நபர் தன்னை மறந்து பணத்தினைக் கோட்டை விட்டு விடுவார்.

ஒரு சில வழக்குகளில், கீழே சில்லறை கிடக்கும். பணம் கொண்டு போகும் நபரைப் பார்த்து, "சார் உங்கள் சில்லறை விழுந்துவிட்டது" என்று ஒருவர் சொல்ல, உடனே அவர் குனிந்து அதனைப் பொறுக்குவார். அந்தக் கணமே, பணம் வைத்துள்ள பை அபேஸ்! இது போன்ற சந்தர்ப்பங்களில் யாராவது உங்கள் கவனத்தைத் திசை திருப்ப முயற்சித்தால், நீங்கள் யோசிக்க வேண்டும். நீங்கள் ஏமாந்து விடக் கூடாது.

கூட்டம், நெரிசல் அதிகமாக உள்ள திருமணவீடு, விழாக் கூடங்கள் இவற்றிலும் ஒரு சில திருடுகள் நடக்கக்கூடும். அவற்றைத் தடுக்க விலை மதிப்புள்ள பொருட்களைப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துப் பூட்டி, அறைக்கும் பூட்டுப் போட வேண்டும். அல்லது அதற்கெனப் பொறுப்புள்ள ஒரு நபரை நியமித்து அவரிடம் பொறுப்பினை ஒப்படைக்க வேண்டும்: இல்லையென்றால் அழகாக உடை அணிந்து நாசூக்காக நுழைந்து பெண் வீட்டார்-அல்லது மாப்பிள்ளை வீட்டார் என்றுசொல்லி நகைகளையோ மற்ற விலை மதிப்புள்ள பொருட்களையோ நைசாகத் தூக்கிச் செல்லக்கூடிய நபர்கள் இருக்கிறார்கள்.

தேர்த் திருவிழா போன்ற திருவிழாக் காலங்களிலும், கோவில் கும்பாபிஷேகம் போன்ற திருவிழாவிலும் நாம் மிகவும் விழிப்புடனிருக்க வேண்டும். அங்கும் பக்தர்கள்போல வந்து, நாம் மெய் மறந்து ஆண்டவனைத் தரிசிக்கும்போது நம் பொருட்கள் பறிபோகும்.

மேலே சொல்லிய யோசனைகள் ஒரு சிலவே. இதைவிட நல்ல யோசனைகள் உங்களிடமிருந்தால் அதனையும் பயன்படுத்திக் கொள்ளவும். ஒரு திருட்டு நடப்பதற்கு முன் நாம் இங்கு சொல்லியபடி எச்சரிக்கையுடன் இருந்தால் நம் பொருளும் போகாது; நமக்கு விபத்து நடக்கு முன்பு தடுத்தல் சாலச் சிறந்தது. வருமுன் காப்பது நம் தலையாய கடமை!

"வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை செருமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற வள்ளுவர் வாக்கு எக்காலும் எத்துறைக்கும் பொருந்தும் பேருண்மையாகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

1-4-1983





வளமான
எதிர்காலத்திற்கு....

# புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

- இதர வங்கிகளைவிட ½ சதம் கூடுதல் வட்டி
- பல்வேறு கவர்ச்சி மிக்க டெபாசிட் திட்டங்கள்
- புதுக்கோட்டை மாவட்டத்தில் மற்ற எந்த வங்கியையும் விட அதிக அளவு "டெபாசிட்" பெற்று மக்களின் மகத்தான பேராதரவுடன் சேவை புரிந்து வருகிறது எங்கள் வங்கி
- மாவட்டம் முழுவதிலும் 15 கிளைகள் உள்ளன



கூடுதல்
வட்டி தரும்
சிறப்பு டெபாசிட்
கற்பகதரு

எஸ். நடராஜன்
செயலாளர்

எம். சுவாமிதாஸ்
தனி அலுவலர்



## வறட்சிப் பகுதியில் பிரதமர்

தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட (28-3-83) சென்னை வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வந்தவாசி, திருவண்ணாமலை ஆகிய ஊர்களின் வறண்ட பகுதிகளையும் அங்கு நடக்கும் நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டார். சென்னையிலுள்ள மேற்கு மாம்பலம், ஆயிரம்விளக்குப் பகுதிகளையும் அவர் பார்த்தார்.

சென்னையிலிருந்து அவர் டில்லி திரும்புமுன்-தமிழக வறட்சி நிவாரணத்திற்காகப் பத்தாயிரம் டன் அரிசி, ஆறாயிரம் டன் கோதுமை, பத்துக் கோடி ரூபாய் நிதியுதவி ஆகியவை மத்திய அரசால் வழங்கப் படுமெனத் தெரிவித்தார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமரின் இந்தப் பயணத்தில்-மேதகு ஆளுநர் திரு.எஸ்.எல்.குரானா, மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர்., மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ஆர்.வெங்கட்ராமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழரசு
மலர்: 13 இதழ்: 20
16-4-1983
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — சித்திரை 3



# சட்டப்பேரவையில் எழுப்பப்பட்ட உரிமைப்பிரச்சினையும் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பும்.

I

24 - 3 - 83

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் மீது நீதி மன்றத்தில் தொடரப்பெற்றுள்ள வழக்கு குறித்து.

**திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு தலைவரவர்களே, நீங்களும் நம்முடைய அவையும் அவசரமாக முடிவெடுக்க வேண்டிய ஒரு பிரச்சினையைப் பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதியன்று நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே நீதிமன்றங்கள் சம்பந்தமாகப் பேசியதைப்பற்றி, விமர்சனம் செய்தது சம்பந்தமாக ஒரு ரிட் மனு சமீபத்தில், நேற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அனுமதிக்கப்பட்டு, வக்கீல் மூலமாகவோ, அல்லது நேராக வந்தோ முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லி நோட்டீஸ் அனுப்புவது பற்றி நேற்று ஹைகோர்ட் உத்தரவிட்டிருக்கிறது.

ஆனால், நான் ஜாக்கிரதையாகப் பார்த்தேன். இங்கே பேசியது சம்பந்தமாகவா அல்லது கவுன்சிலில் பேசியது சம்பந்தமாகவா என்று. ஏனென்றால் கவுன்சிலில் பேசியது சம்பந்தமாக என்றால் அதுபற்றி நாங்கள் ரெய்ஸ் செய்ய முடியாது. ஆனால், அஃபிடவிட் இந்த அவையிலே பேசியதன் எக்ஸ்ட்ராக்ட் பைலாகிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் சொல்வது வெறும் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று இதைக் கருதாமல் முதலமைச்சரும் இந்த அவையின் ஒரு அங்கத்தினர் என்ற முறையில் பார்க்கவேண்டும். அங்கத்தினராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும் இங்கே பேசுவது சம்பந்தமாக ஒரே உரிமைதான் இருக்கிறது சட்ட அம்சத்தைப் பொறுத்தவரைக்கும். ஆகவே, முதலமைச்சர் என்ற அந்த முறையில் பார்க்காமல், கட்சி பேதம் இல்லாமல், இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களின் அடிப்படை உரிமையைப் பாதிப்பது என்கிற முறையில் பார்க்கவேண்டும். ஆகவே, இதுபோன்ற பிரச்சினையில் ஏதாவது கோர்ட் நோட்டீஸ் வந்தால் அதை முதல்வரவர்கள் பெற்றுக்கொள்ளலாமா, பதில் கூறலாமா, வக்கீல் மூலம் தன்னுடைய சமாதானத்தைச் சொல்லலாமா என்பதைக் குறித்து அவை முடிவெடுக்கவேண்டும். அவையின் சார்பாக நீங்கள் முடிவு கூற வேண்டிய விஷயம் இது.

என்னுடைய கருத்து என்னவென்றால், முதலமைச்சர் நோட்டீசைப் பெற்றுக்கொள்ளக்கூடாது; சமாதானமும் கூறக்கூடாது; அதை இக்னோர் செய்யவேண்டுமென்பதுதான். கான்ஸ்ட்டிடியூஷனலாகவே சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறார். இதில் ஜுடிஷியரிக்கும் லெஜிஸ்லேச்சருக்கும் மாறுபாடு உள்ளது மாதிரியான பிரச்சினை இதிலே தெரிகிறது. நோட்டீஸ் வந்ததா, இல்லையா என்ற பிரச்சினை இருக்கிறது. இது குறித்து அவை முன்னவரவர்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க வேண்டுமென்றால் தெரிவிக்கலாம். அதற்குப் பிறகு நாம் முடிவெடுக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** எங்கள் கருத்தையும் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதை விவாதமாக ஆக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் கூறியபடி இப்பொழுது இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கில்லை. ஆனால், ஒன்றை மட்டும் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதைப் பற்றித் தாங்கள் சிந்தித்து இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 194-வது விதியில்—

Powers, Privileges and Immunities of State Legislatures and their Members ;

என்று இருக்கிறது. அது சட்டமன்றத்தில் இருக்கின்ற, பாராளுமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களின் உரிமைகள் எந்தெந்த வகைகளில் காப்பாற்றப்பட வேண்டுமென்ற விதியாகும்.

அரசியலமைப்புச் சட்டம் 194 - ஆவது பிரிவின் கீழ்—

(1) Subject to the provisions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.

(2) No member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legislature or any committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings.

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த அவையின் உறுப்பினர்தான்; இந்த அவையில் உள்ள 234 உறுப்பினர்களின் உரிமைகளையும் இந்த அவை காப்பாற்ற வேண்டும். இம்மாதிரி வழக்குகள் வேறு சிலபல மாநிலங்களிலும் எழுந்திருக்கின்றன. ஆகவே அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பெற்றுள்ள இந்தப் பாதுகாப்பு விதியைக் கவனித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் அடிப்படையில், பாராளுமன்ற நடவடிக்கைகள், மற்றபிற மாநில சட்டமன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றையெல்லாம் பார்த்து எந்த வகையில் இந்த அவையின் உரிமைகள் காப்பாற்றப்படவும், இந்த அவை உறுப்பினர்களின் உரிமைகள் காப்பாற்றப்படவுமான வகைகளில் தாங்கள் அதற்கேற்றபடி ஒரு அறிவுரையைக் கூறலாம். எப்படியும் இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரது உரிமைகளையும் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது; இந்த அவைக்கும் இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் தாங்கள் இந்த அவைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் டைரக்ஷன் கொடுத்தால் அதற்கேற்றபடி நடந்து கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் பிரச்சினையாக்க விரும்பவில்லை. நான் எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்த்தாகவேண்டும். ஆய்வு செய்த பிறகு இதைச் சபையிலே எடுத்துக் கொள்வதாக இருந்தால் தான் எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) திரு உமாநாத் என்ன சொல்ல வருகிறார் என்று எனக்குத் தெரியாது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** எங்களுடைய கருத்துக்களையம் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திடீரென்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இப்பிரச்சினை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு. கிருஷ்ணமூர்த்தி ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தால் சொல்லலாம்.

**திரு வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகைகளிலே நாங்கள் பார்த்தோம். சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்யப்பெற்றுள்ளது. சட்டமன்றத்திலே உயர்நீதிமன்ற நீதிபதிகளைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் பேசிய கருத்துக்கள் சம்பந்தமாகப் போடப்பட்ட அந்த வழக்கில், அந்த நீதிமன்ற நீதிபதி திரு. சத்தியதேவ் அவர்கள் ஐந்து கேள்விகளை - முடிவாக அல்ல - அந்த ரிட் பெட்டிஷனை ஏற்றுக் கொண்டு, இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா, இந்தப் பிரச்சினையிலே இந்த 5 கேள்விகளுக்கும் தங்களுடைய மேலான பதிலை ஏப்ரல் மாதத்திலே சொல்லவேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் ஆர்டர் பண்ணியிருப்பதாக பத்திரிகையிலே நாங்கள் பார்த்தோம் அவ்வளவுதான் சமாச்சாரம். கான்ஸ்ட்டிடியூஷனில் ஆர்ட்டிகிள் 211-ல்

"No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties."

என்று சொல்லப் பெற்றுள்ளது. அரசியல் சட்டத்ினுடைய 211 என்ற விதியானது, 194 (1)-ல் அரசியல் சட்டத்தில் கூறியிருக்கிற உரிமைகள் இருக்கிறதே, அந்த உரிமைகளுக்குக் கட்டுப்பட்டதா? அல்லது அந்த உரிமைகளில் எது பெரியது என்கிற பிரச்சினை உள்ளது. விதி 212-ஐப் படிக்கிறேன்.

"The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure."

என்று உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தாங்கள் தான் சுப்ரீம் அத்தாரிட்டி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களால்தான் அது அடிக்கடி எனக்கு மறந்து போய்விடுகிறது.

**திரு வி. கிருஷ்ணமூர்த்தி:** அதற்கு நான் காரணமாக இருக்க மாட்டேன். சட்டமன்றத்தின் உள்ளே சபாநாயகர் அவர்களுக்குத்தான் முடிவெடுக்கிற அதிகாரம் இருக்கிறது. அவர்தான் சுப்ரீம் அத்தாரிட்டி. இங்கே என்ன நடைபெறுகிறது, எப்படி நடைபெற வேண்டும் என்பவைகளை நீங்கள் தான் முடிவு செய்யவேண்டும். அசெம்பிளி விதிகளில் 90-வது விதியில் 6-வது பிரிவில்

(vi) reflect upon the conduct of the President or any Governor or any Court of Justice, or irregularly use the Governor's or President's name for the purpose of influencing a debate ;

என்று உள்ளது. தலைவர் அவர்களே இவைகளைச் சொல்வதற்குக் காரணம் ஃபீரிடம் ஆப் ஸ்பீச் என்கிற உரிமை நமக்கு 194 (1)-ல் கிடைத்திருக்கிற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு, நான் உங்களிடத்திலே கேட்க விரும்புவதெல்லாம், உயர்நீதிமன்றத்தில் இருக்கிற ஜட்ஜையெல்லாம் சென்று தாக்க வேண்டுமென்று நான் பேசினால் அதை அனுமதிக்க முடியுமா? அதைக் கேள்வி கேட்பதற்கு தமிழ்நாட்டில் இருக்கிற பிரஜைகளுக்கு அதிகாரம் இருக்கிறதா? இல்லையா? உயர்நீதிமன்றத்தில் இப்படித்தான் முடிவு செய்ய வேண்டுமென்று நாம் சட்டமன்றத்தில் விவாதிக்க முடியுமா? இந்தச் சட்ட மன்றத்திற்கு எவ்வளவு உரிமைகள் இருக்கிறதோ அதைப் போல உயர்நீதி மன்றத்தில் அல்லது சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற நீதிபதிகளுக்கும் இன்டிபென்டன்ஸ் இருக்கிறது. ஆகவே அவர்கள் தீர்ப்பு இப்படிச் செய்யவேண்டும்- இப்படிச் செய்கிறார்கள் என்று சட்டமன்றத்தில் பேசியது குறித்து ரிட்-பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலைச் சொல்லலாம். அட்வகேட்-ஜெனரலை வைத்து வாதாடலாம். வாதாடி அவர் பேசியது என்ன என்ற விளக்கத்தைச் சொல்லலாமே தவிர, இங்கே இந்தச் சட்டமன்றத்திலே விவாதித்து, உரிமை பாதிக்கிறது என்ற நிலை இங்கே வருவது துரதிர்ஷ்டவசமானது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையிலே இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்ற பிரச்சினை எழுப்பப்படவில்லை. மாண்புமிகு உமாநாத் அவர்கள் அதை எழுப்பவில்லை. இப்படி அரசியல் சட்டம் சம்பந்தமாக ஒரு பிரச்சினை எழும்பியிருக்கிறதே இந்த அவையினுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்ற கருத்தைத் தான் எடுத்துச் சொன்னார்கள்.

நான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவைச் சொன்னேன். மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 211, 212 ஆகியவைகளைச் சொன்னார்கள். ஆகவே 194, 211, 212 ஆகிய மூன்று பிரிவுகளையும் தாங்கள் ஆராய்ந்து பார்த்து, மற்றைய சட்டமன்றங்களில், நாடாளுமன்றங்களில் முன் நடவடிக்கைக் குறிப்புகளையும் ஆராய்ந்து பார்த்து முடிவு கூறவேண்டும். இந்த அவையில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் விரும்புவது அதுதான். இன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் இப்பேரவையின் உறுப்பினர் என்ற முறையில்தான் இப்பிரச்சினையின் கீழ் வருகிறார்கள். எனவே இந்த அவையினுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை அதற்காக வைக்கிறோம்.

தாங்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து எப்படி நடந்து கொள்வது நலமாக இருக்கும் என்பதைத் தங்கள் அறிவுரையாக தனிப்பட்ட உறுப்பினர்களுக்கும், சபைக்கும் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இந்தப் பிரச்சினையை விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள செய்தியைக் கொண்டு உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்றினை எழுப்பியுள்ளார்கள்.

நீதிமன்றங்கள் எந்த வழக்குகளையும் ஏற்கக் கூடாது என்று சொல்வதற்கு நமக்கு உரிமையில்லை. ஆனால், தொடரப்பெறும் வழக்கு பேரவை உரிமைகளைப் பாதிப்பதாக இருப்பின், மன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் முழு உரிமையோடு கலந்து கொள்வதற்கான உரிமைகளைப் பாதிப்பதாக இருப்பின், நீதி மன்றங்களால் விடுக்கப்படும் சம்மன்களுக்குக் கீழ்ப்படிந்து கோர்ட்டில் ஆஜர் ஆக வேண்டாம் என்றும், நீதிமன்றங்களின் ஜூரிஸ்டிக்ஷனுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும், அரசின் மூலம் பேரவைக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி உள்ள அதிகாரங்களை நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றும் பேரவைத் தலைவர் அறிவுரை வழங்குவது இதுவரை மரபாக உள்ளது.

இப்பிரச்சினையில் வழக்கு மன்றத்திலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் அறிவிப்பு அல்லது சம்மன் வந்துள்ளதா என்ற தகவல் இல்லை. அம்மாதிரி ஏதாவது சம்மன் வந்து, அது அவரால் அவைக்கு அறிவிக்கப்படுமானால், மேற்கொண்டு நமது சட்டமன்றத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## II — 30-3-83

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *24.3.83* அன்று எழுப்பப்பெற்ற உரிமைப் பிரச்சினை மீது கடைசியில் நான் கீழ்க்கண்டவாறு அவைக்கு அறிவித்தேன்.

''இப்பிரச்சினையில் வழக்கு மன்றத்திலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் அறிவிப்பு அல்லது சம்மன் வந்துள்ளதா என்று தகவல் இல்லை. இம்மாதிரி ஏதாவது சம்மன் வந்து, அது அவரால் அவைக்கு அறிவிக்கப்படுமானால், மேற்கொண்டு நமது சட்டமன்றத்தின் உரிமைகளைப் பாதிப்பதாக இருப்பின் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.''

நேற்று பிற்பகல் முதலமைச்சரிடமிருந்து இதுபற்றி இணைப்புக்களுடன் கடிதம் ஒன்று வந்துள்ளது. அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

" I enclose herewith the notice in W. P. 2074/83 on the file of the High Court Madras addressed to me, and delivered to the Chief Secretary. The notice and the affidavit filed by the petitioner sent to me are enclosed. I am placing this before the Hon. Speaker in pursuance of the observation made by you on 24-3-83 and for suitable direction to me in the matter."

இணைப்புகள்: நீதிமன்றத்திலிருந்து தலைமைச் செயலாளரின் வழியாக முதலமைச்சருக்கு, நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகத் தொடங்கப்பெற்ற ரிட் (Writ) வழக்குத் தொடரப்பெற்றவர் பிரமாணம் செய்து கூறிய தகவல் ஆவணமும், அதன் மீது உயர் நீதிமன்றத்தின் ஆணையும் ஆகும்.

ரிட் மனு தாக்கல் செய்தவர், மேலவை உறுப்பினரும் நமது பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமையகத்தின் செயலாளருமான திருவாளர் என். வீராசாமி அவர்கள் ரிட்மனு 1) முதலமைச்சர் 2) தமிழக அரசு 3) மைய அரசு மீது தொடரப் பெற்றுள்ளது.

இதன்மீது நீதிமன்றத்தின் உத்தரவு ரிஜிஸ்ட்ராரிடத்திலிருந்து அரசுக்கு வந்துள்ள கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

" The above said petitioner has presented the above said W. P. No. 2074 of 1983 praying this Court to issue a Writ of Quo Warranto, directing you, the first respondent to show cause by what authority you claim to have, use, enjoy and perform the rights and duties and privileges of the office of the Chief Minister of the State of Tamil Nadu.

" I am to inform you that this Court has directed issue of notice to you on 23-3-83, and the said petition has set down for hearing on Monday, the 4th April, 1983. If you desire to oppose the petition, arrangements may be made for your representation."

" I am enclosing herewith a copy of petition and affidavit filed in support of the said W. P. 2074 of 1983."

நீதிமன்றத்தில் தொடங்கப்பெற்ற ரிட் மனு இப்பேரவையில் முதலமைச்சர் *2.2.83* அன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் அளித்த பதிலுரையின் ஒரு பகுதியின் மீதான நடவடிக்கையாகும். எனவே, இப்பேரவையின் உறுப்பினராக முதலமைச்சர் இப்பேரவையில் பேசப்பட்ட பேச்சின் மீது கொடுக்கப்பெற்ற வழக்காகும்.

ரிட் மனுவில் கோரப்படும் பரிகாரம், பேரவையில் பேசப்பட்ட பேச்சினால் இப்பேரவையின் உறுப்பினரான முதலமைச்சர்-முதலமைச்சர் பதவியை எந்த ஆதாரத்தில், வகிக்கின்றார் என்ற தகவலை மேலவை உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் நீதிமன்றமும் தெரிந்துகொள்வதற்காகத் தொடங்கப் பெற்றுள்ளது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது கூட, நமது பேரவையின் உரிமைகளைப் பாதிப்பதோடு சில அடிப்படை அரசியலமைப்புச்சட்ட விதிகளே கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

அரசியலமைப்புச் சட்டத்தின் VI பகுதி ( Part VI ) அத்தியாயம் II ( Chapter II-ல் ) ஒரு மாநிலத்தின் அரசமைப்பு (Executive) பற்றியதாகும். அத்தியாயம் மாநில சட்டமன்றங்களின் அமைப்பையும் அவற்றின் அதிகாரங்களைப் பற்றியதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் *163/164* விதிகள் மாநில அமைச்சர் அவையின் அமைப்பையும் அதன் முதலமைச்சரைப் பற்றியதாகும். அதில் *164*வது பிரிவின் *2*-வது உட்பிரிவு பின்வருமாறு —

"(2) The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State."

எனவே, இப்பேரவையின் ஆதரவும் நம்பிக்கையும் இருக்கும் வரை மாநில முதலமைச்சரும் அவரது அமைச்சரவையும் அதிகாரம் அல்லது பதவி வகிக்கத் தகுதியுள்ளவர்கள். முதலமைச்சர் இப்பேரவையில் பேசின பேச்சிற்காகவோ அல்லது அரசியலமைப்புச் சட்டத்தினை எந்த வகையிலும் மீறுவதால் அத்தகுதியிழந்தவராகக் கருதப்படுவார் என்று எந்தச் சட்டத்திலுமிருப்பதாகவும் தெரியவில்லை. அம்மாதிரி இந்தப் பேரவையின் தனி அதிகாரம் வேறு எந்த அமைப்பிற்கும் மாற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

இப்பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆராயச் சிறிது அவகாசம் தேவைப்படுவதால் எனது முடிவை இந்த அவைக்குத் தெரியப்படுத்தும்வரை இந்த அவையின் உறுப்பினராக மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தனக்கு உயர்நீதிமன்றத்திலிருந்து வந்த அறிவிப்பிற்குப் ( Notice ) பணிந்து நீதிமன்றத்தின் அறிவிப்பை ஏற்று நீதிமன்றத்தில் தொடுக்கப் பெற்ற ரிட் மனுவிற்குப் பதில் கூற வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பிரச்சினையின் மீதான எனது முடிவை இன்னும் ஒரு வாரக்காலத்தில் பேரவைக்கு அறிவித்து, பேரவையின் முடிவிற்கு வைக்கின்றேன். இந்த ரிட் மனுவில் இரண்டாம் பிரதிவாதியாக தமிழக அரசு சேர்க்கப்பட்டுள்ளதால், தமிழக அரசு நீதிமன்றத்தின் அறிவிப்பை ஏற்பதைப்பற்றி நான் ஒன்றும் கூற இயலாது. அரசு என்ற முறையில் அரசு என்ன முடிவு வேண்டுமானாலும் எடுக்க உரிமையுண்டு என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

## III — 5-4-83

# மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்பு

*30.3.'83* அன்று முதலமைச்சர் அவர்கள் மீது மேலவை உறுப்பினர் திரு. என். வீராசாமி அவர்கள் தொடுத்த 'ரிட்' மனுவின் மீதான பிரச்சினையில் எனது இடைக்காலத் தீர்ப்பு ஒன்றினை அவைக்கு அறிவித்தேன். இப்பிரச்சினையில் தீர ஆராய்ந்ததன் பயனாகப் பின்வரும் முடிவுக்கு வந்துள்ளேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் *194*-வது பிரிவின் *2*-வது உட்பிரிவின் முதல் பகுதி பின்வருமாறு —

"194(2) No member of the Legislature of a State shall be liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature........" [1]

எனவே, மாநிலச் சட்டமன்ற அவைகளில் எந்த அவைகளிலானாலும்சரி உறுப்பினர்களால பேசப்படும் பேச்சின் மீது அல்லது அந்த அவையின் முன் இருக்கும் பிரச்சினையில் எவ்விதமாக வாக்களித்திருந்தாலும் அதற்காக எந்த நீதிமன்றத்திலும் அந்த உறுப்பினர் மீது எந்தவிதமான நடவடிக்கை அல்லது வழக்குத் தொடர இயலாது என்பதே மாநிலப் பேரவை, மேலவைகளுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இவ்வுரிமையை ஏற்று மதிக்காது எவ்விதத்திலேனும் குலைக்க அல்லது இதனைக் குறைப்பதற்கு எவரேனும் எவ்வித முயற்சி எடுத்துக்கொண்டாலும் அல்லது உள்ள அதிகாரத்தை, பிரச்சினைக்கு உரிய தாக்கினாலும் அவர் பேரவையை அவமதித்த குற்றத்திற்கு உள்ளாவார். இதை எந்த நீதிமன்றமும் தடை செய்வதற்கான உரிமை கிடையாது.



எந்த ஒரு சட்டமன்றமோ, பாராளுமன்றமோ சுதந்திரமாக இயங்குவதற்கு உறுப்பினர்கள் அவையில் சுதந்திரமாக எந்தவித பயமுமின்றிப் பேசுவதற்கு உரிமை வேண்டும். இதை *1688*-ல் பிரிட்டனில் அடிப்படை உரிமைகளை வழங்கிய சாசனத்தில் Bill of

1. ''*194 (2)* மாநில சட்டமன்றத்தில் பேசிய எந்தப் பேச்சிற்காகவோ அல்லது கொடுத்த வாக்கிற்காகவோ சட்டமன்ற உறுப்பினர் எவரும் எந்த நீதிமன்றத்திலும் எவ்வித நடவடிக்கைக்கும் உள்ளாக மாட்டார்.''

Rights-ல் 9-வது பிரிவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"That the freedom of speech and debates in proceedings in Parliament, ought not be impeached or questioned in any Court or place out of Parliament." (May 19th Edition page 76-77). 2.

Proceedings in Parliament என்பது அவையில் பேசப்படும் பேச்சுக்கள் மட்டுமின்றி இன்னும் விரிவானதாகும்.

சட்டமன்ற அவைகளின் நடைமுறைகளைப்பற்றிப் பொதுவாக அரசியலமைப்புச் சட்டத்தில் 208-வது பிரிவிலிருந்து 212-வது பிரிவுவரை கூறப்பட்டுள்ளது. 211-வது பிரிவு பின்வருமாறு —

"211. No discussion shall take place in the Legislature of a state with respect to the conduct of any judge of Supreme Court or of a High Court in the discharge of his duties." 3.

என்று அறிவுரை கூறப்பட்டுள்ளது. இதற்கேற்ப நமது பேரவை விதிகளிலும் 90 (vi) வது விதிகளில் நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தாற்போல் "Courts not to inquire into proceedings of Legislature"

"212 (1) The validity of any proceedings in the Legislature of a State shall not be called into question on the ground of any alleged irregularity of procedure."

எனவே அவையின் நடைமுறைகளில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருப்பினும் அவையின் நடவடிக்கைகளின் ( Validity ) செல்லும்தன்மையைப் பற்றி எந்த ஒரு நீதிமன்றத்திலோ அல்லது வேறுவிதமாகவோ அவைக்கு வெளியிலே எவராலும் கேட்க இயலாது.

ஆகையினால் அவையின் நடைமுறைகள், அரசியலமைப்புச் சட்ட 211-வது பிரிவு உட்பட, மீறப்பட்டன அல்லது கடைப்பிடிக்கப்படவில்லை என்பதற்காக எவரும் எந்த வழக்கு மன்றத்திலோ அல்லது வேறுவிதமாகவும் மேல்முறையீடு செய்யவோ அல்லது அவைகள் இம்மன்றத்தின் மேல்முறையீடு மன்றமாக இயங்கவோ இயலாது.

மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் விதியை எவரேனும் பேரவையில் பேசும் பொழுது மீறினார் என்ற செயலுக்காக அவர் மீது எவ்வித வழக்கும் தொடர இயலாது.

இது குறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் இருப்பதோடு பல்வேறு உயர்நீதி மன்றங்களும் உச்ச நீதிமன்றமும் ஏற்றுத் தெளிவுபடுத்தியுள்ளன. அவற்றில் ஒருசிலவற்றை எடுத்துவைப்பது தேவை என்பதால் ஒரு சிலவற்றை மேற்கோள் கூற விரும்புகின்றேன்.

1958-ஆம் ஆண்டில் ஒரிஸா மாநிலத்தில் சுரேந்திரா Vs நபகிருஷ்ணா என்ற வழக்கில் ( AIR 1958 Orissa 168) ஒரிஸா முதலமைச்சர் ஒரிஸா நீதிமன்றத்தைக் குறித்துக் குறைவாகப் பேசியதற்காக அவர் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக வழக்கு ஒன்று தொடரப்பட்டது. முதலமைச்சர் ஒரிஸா மாநிலத்தின் சட்டப் பேரவையில் ஒரியா மொழியில் பேசிய,- பிரச்சினையாக்கப்பட்ட பேச்சின் - ஆங்கில மொழி பெயர்ப்பு பின்வருமாறு —

"I cannot say definitely. Even if we validate past actions yet in connection with what is likely to happen in future there may be necessity of going to the Supreme Court. At present our Constitution is new, the High Court is new. In many instances (Aneka kshetrate) the immaturity of the High Court is apparent. In many instances, the decision given by the High Court has been corrected by the Supreme Court. The Supreme Court also held that in many instances the High Court has abused (apa byabahar) ) the powers given to it." *

இது ஒரிஸா உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் என்றாலும் முதலமைச்சர் பேசிய பேச்சு பேரவையில் பேசப்பட்டது என்பதால் அரசியலமைப்புச் சட்டத்தின் 194 வது பிரிவு, 2வது உட்பிரிவின்படி முழுமையான பாதுகாப்பு உரிமை பெற்றது என்றும் அது நீதிமன்றத்தை அவமதிப்பதாக இருப்பினும் கூட எவ்வித நடவடிக்கையும் அவர் மீது எடுக்க இயலாது எனத் தீர்ப்புக் கூறியது. அந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பில் பாரா 20-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"Whatever that may be, the language of clause (2) of Art./194 is quite clear and unambiguous, and is to the effect that no law Court can take action against a member of the Legislaature for any speech made by him there. That immunity appears to be absolute." 4.

1964-ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச

2. (உரிமை சாசனத்தின் 9-வது பிரிவு)

பாராளுமன்றத்திற்கு வெளியே எந்த ஒரு நீதிமன்றத்திலோ அல்லது எந்த வெளி இடத்திலோ பாராளுமன்ற நடவடிக்கை குறித்த பேச்சுக்களுக்கும் விவாதங்களுக்கும் உள்ள சுதந்திரம் கேட்கப்படவோ குற்றமாக்கப்படவோ கூடாது.

3. (அரசியலமைப்புச் சட்டத்தில் 211-வது பிரிவு)

"211. உச்சநீதிமன்றத்தின் அல்லது ஓர் உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஒருவர் அவர் கடமையாற்றும்பொழுது அவரது நடத்தையைக் குறித்து, எந்த ஒரு மாநில சட்டமன்றத்திலும் விவாதிக்கப்படலாகாது."

சட்டமன்றத்தின் நடவடிக்கைகளைக் குறித்து நீதிமன்றங்கள் விசாரித்தல் கூடாது.

(அரசியலமைப்புச் சட்டத்தின் 212 (1)-வது பிரிவு)

"நடைமுறையில் முறை தவறியுள்ளது என்பதற்காக மாநில சட்டமன்ற நடவடிக்கைகளின் செயல்திறன் ஆட்சேபிக்கப்படலாகாது."

* முந்தைய நடவடிக்கைகளை செல்லத்தக்கதாக ஆக்கினும், வருங்காலத்தில் என்ன நடக்கக்கூடும் என்பது குறித்து "நான் நிச்சயமாகச் சொல்ல இயலாது; உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படலாம். தற்பொழுது நமது அரசியலமைப்புச் சட்டம் புதியது; உயர்நீதிமன்றமும் புதியது. பல சமயங்களில் உயர்நீதி மன்றத்தின் அறிவு முதிர்ச்சியடையாத நிலை வெளிப்படை. பல நேரங்களில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் உச்ச நீதிமன்றத்தால் திருத்தப்பட்டு உள்ளன. உயர்நீதிமன்றம் அதற்கு அளிக்கப் பெற்றுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி உள்ளதாக உச்சநீதிமன்றம் பல சந்தர்ப்பங்களில் கருத்துத் தெரிவித்துள்ளது."

4. எப்படி இருப்பினும், "அரசியலமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவு, 2-4வது உட்பிரிவின் வாசகம் மிகத் தெளிவாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும் உள்ளது. அதாவது எந்த நீதிமன்றமும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்மீது, அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க இயலாது. அந்தப் பாதுகாப்பு முழுமையானதாகக் காணப்படுகிறது.



மாநிலத்தின் சட்டப்பேரவைக்கும் அம்மாநில உயர்நீதிமன்றத்திற்கும் ஏற்பட்ட மோதலின் விளைவாக, அப்பிரச்சினையை அரசியலமைப்புச் சட்டத்தின் 143-வது பிரிவின் கீழ், குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கும் ஆலோசனைக்கும் அனுப்பி வைத்தார். (Special reference No. 1 of 1964) இதற்காக உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமைப்பில் ஆறு நீதிபதிகள் ஒருமித்த ஒரு கருத்தையும், நீதிபதி சர்க்கார் அவர்கள் பெரும்பான்மையான நீதிபதிகளின் கடைசி முடிவில் ஒருமைப்பாடு தெரிவித்தாலும், தனது முடிவிற்கு வேறு ஆதாரங்களையும் தெரிவித்துள்ளார். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் சட்டமன்றங்களின் உரிமைகளை அரசியலமைப்புச் சட்டத்தில் கூறியுள்ளதுபோல் முழுமையாக ஏற்றுக்கொண்டு கருத்து தெரிவிக்காவிட்டாலும் கூட அக்குறிய கருத்திலே சில பகுதிகள் பின்வருமாறு:

"(32) Having conferred freedom of speech on the legislators, clause (2) emphasises the fact that the said freedom is intended to be absolute and unfettered. Similar freedom is guaranteed to the legislators in respect of the votes they may give in the Legislature or any committee thereof. In other words, even if a legislator exercises his right of freedom of speech in violation, say, of Art. 211, he would not be liable for any action if any court, Similarly if the legislator by his speech or vote, is alleged to have violated any of the fundamental rights guaranteed by Part III of the Constitution in the Legislative Assembly he would not be answer able for the said contravention in any court.

If the impugned speech amounts to or becomes actionable or indictable under any other provisions of the law, immunity has been conferred on him for any action in any court by this clause. He may be answerable to the House for such a speech and the Speaker may take appropriate action against him in respect of it ; but that is another matter. *It is plain* that the *constitution* makers *attached so much* importance to the necessity of absolute freedom in debates within the Legislative chambers that they thought it necessary to confer complete immunity on the legislators from any action in any court in respect of their speeches in the Legislative Chambers in the wide terms prescribed by clause (2). Thus, Clause (1) confers freedom of speech on the legislators within the legislative chamber and clause (2) makes it plain that the freedom is literally absolute and unfettered.

"65. We are not impressed by Mr. Seervai's arguments. The fact that Art. 211 appears under a topic dealing with 'Procedure Generally', cannot mean that the prohibition prescribed by it is not mandatory. As we have already indicated, in trying to appreciate the *full significance of this prohibition*, we must read Articles 211 and 121 together. It is true that Art 194 (2) in *terms* provides for immunity of action in any court in respect of a speech made by a member or a vote given by him in the Legislative Assembly. But this provision itself emphatically brings out the fact that the Constitution was anxious to protect full freedom of speech and expression inside the legisative Chamber, and so, it took the precaution of making a specific provision to safeguard this freedom of speech and expression by saying that even the breach of the Constitutional prohibition prescribed by Article 211 should not give rise to any action. Undoubtedly, the Speaker would not permit a member to contravene Article 211 ; but if, inadvertently or otherwise, a speech is made within the legislative chamber which contravenes Article 211- the Constitution-makers have given protection to such speech from action, in any court. The House itself may and would, no doubt, take action against him. 5.

5. "32 அரசியலமைப்புச் சட்டம் 194-வது பிரிவில் பேச்சு உரிமை மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய பின் 2-வது உட் பிரிவு அச்சுதந்திரம் முழுமையானதென்றும், எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதை மேலும் வலியுறுத்துகிறது. அதே சுதந்திரம், உறுப்பினர்கள் மன்றத்திலோ அல்லது குழுவிலோ அவர்கள் அளிக்கும் வாக்குகளுக்கும் பொருந்தும்படி அமைக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், ஒரு மன்ற உறுப்பினர் தம்முடைய பேச்சு சுதந்திரத்தை, உபயோகிப்பதில் 211-வது விதியை மீறினாலும்கூட எந்தவொரு நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு அவர் ஆளாகமாட்டார். அம்மாதிரியே ஒரு உறுப்பினர் தன் பேச்சாலோ அல்லது வாக்களிப்பினாலோ அரசியலமைப்புச் சட்டத்தில் 3-வது பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை (ஃபண்டமென்டல் ரைட்ஸ்) பேரவையில் மீறியதாகக் கூறப்பட்டாலும் எந்தவொரு நீதிமன்றத்திலும் அம்மாதிரி மீறியதற்காக விளக்கம் சொல்லக் கடமைப்பட்டவர் அல்லர்.

பிரச்சினைக்குரிய பேச்சு வேறு எந்தச் சட்டத்தின் கீழாவது நடவடிக்கை எடுக்கத் தகுந்ததாக இருந்தாலும்கூட அந்நடவடிக்கையை எந்த நீதிமன்றத்திலும் எடுக்கவொண்ணாது அவ்வுறுப்பினருக்கு இந்தப் பிரிவின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரியான பேச்சுக்குப் பேரவைக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவராகலாம்; அல்லது பேரவைத் தலைவர் அதற்காக அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அது வேறு பிரச்சினை. அரசியல் அமைப்புச் சட்டத்தினை இயற்றியவர்கள் பேரவைக்குள் முழுமையான பேச்சு சுதந்தரம் இருக்கவேண்டுமென்பதில் வெளிப்படையாகவும் மிகவும் உறுதியாகவும் கூறியுள்ளபோது அம்மாதிரி அவர்கள் பேச்சுக்களின் மீது எந்தநீதிமன்றத்திலும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க இயலாதவாறு, மிகவும் பரந்த, விரிவான முறையில் 2-வது விதியில் முழுப் பாதுகாப்பு கொடுத்துள்ளார்கள். 1-வது உட்பிரிவு மன்ற உறுப்பினர்களுக்கு அவையினுள் பேச்சு சுதந்தரத்தை அளிக்கிறது. 2-வது உட்பிரிவு அம்மாதிரியான சுதந்தரம் முழுமையாக்கி எதனாலும் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

திரு சீர்வையினுடைய வாதங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் 211-வது பிரிவு, 'பொதுவான நடைமுறை விதிகள்' என்ற தலைப்பின் கீழ் வருவதால், அது விதித்துள்ள தடை முழுமையானது அல்ல என்று சொல்ல இயலாது. நாங்கள் ஏற்கெனவே எடுத்துக் கூறியவாறு, 211-வது பிரிவில் விதிக்கப்பட்டுள்ள தடையின் முக்கியத்துவத்தை, அரசியலமைப்புச் சட்டத்தின் 121-வது பிரிவோடு 211-வது பிரிவையும் இணைத்துப் படிப்பதன் மூலமாகவே உணர முடியும். 194-வது பிரிவு, 2-வது உட்பிரிவு உறுப்பினர் ஒருவரது பேச்சிற்கும் அவையில் அவர் அளிக்கும் வாக்கிற்கும் முழுப் பாதுகாப்பு அளித்துள்ளது. மன்றத்திற்குள் பேச்சு சுதந்தரமும் நடத்தைச் சுதந்தரமும் முழுமையாக அளிக்கப்பட வேண்டுமென்று அரசியலமைப்பு விரும்பியது என்பதை இப்பிரிவு அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்துகிறது. எனவே, இப்பேச்சு சுதந்தரத்தையும் நடத்தையையும் பாதுகாக்கும் வகையில் தான் 211-வது பிரிவில் பொறிக்கப்பட்டுள்ள தடையை மீறினாலும்கூட எவ்வித நடவடிக்கைக்கும் உறுப்பினர்கள் ஆளாக்கப்பட மாட்டார்கள் என்று குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரவைத் தலைவர் எந்த உறுப்பினரும் 211-வது பிரிவை மீற அனுமதிக்கமாட்டார் என்பது தெளிவு. இருப்பினும் கவனக் குறைவாகவோ அல்லது வேறு விதத்திலோ பேரவையில் ஒரு சொற்பொழிவு 211-வது பிரிவை மீறியதாக அமைந்து இருப்பினும் அந்தப் பேச்சு எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். என்றாலும் பேரவையே அவ்வுறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கலாம், எடுக்கவேண்டும்.

"66. It is also true that if a question arises as to whether a speech contravenes Article 211 or not, it would be for the Speaker to give his ruling on the point. In dealing with such a question, the Speaker may have to consider whether the observations which a member wants to make are in relation to the conduct of a Judge in discharge of his duties, and that sense, that is a matter for the Speaker to decide. But the significant fact still remains that the Constitution makers thought it necessary to make a specific provision by Article 194 (2) and that is the limit to which the Constitution has gone in its objective of securing complete freedom of speech and expression within the four-walls of the legislative Chamber." ✱

எனவே, அரசியலமைப்புச் சட்டத்தின் 211-வது பிரிவில் பேரவையில் உயர்நீதிமன்ற அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரின் அலுவல் குறித்த நடத்தையை விவாதிக்கக் கூடாது என்ற தடை இருப்பினும் அதை மீறி எவரேனும் பேரவையில் தவறாக விவாதிக்க நேரிடுமானாலும் கூட அதைப் பேரவைத் தலைவர்தான் தடுக்கவேண்டுமேயன்றி எந்த நீதிமன்றத்திலும் அதனைப்பற்றி வழக்குத் தொடரவோ தடுக்கவோ இயலாது என திட்டவட்டமான கருத்தினைத்தெரிவித்துள்ளார்கள்.

நீதிபதி சர்க்கார் அவர்களும் ஆங்கிலேய பாராளுமன்றத்தில் உள்ள சிறப்பு உரிமைகள் எல்லாம், நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவின் கீழ் இந்தியப் பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பதனைப் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள்:

(174) Before I part with the present topic. I will take the liberty of observing that it is not for us to start new ideas about the privileges of the House of Commons, ideas which had not ever been imagined in England. Our job is not to start an innovation as to privileges by our own researches. It would be unsafe to base these novel ideas on odd observations in the judgments in the English cases, torn out of their context and in disregard of the purpose for which they were made. What I have quoted from these cases will at least make one pause and think that these cases can furnish no sure foundation for a novel theory as to the right of the House of Commons to commit by a general warrant.........." 6.

## அட்டையில்

புதுக்கோட்டை மாவட்டம் 14.1.1974ல் தனிமாவட்டமாக மலர்ந்தது. 99.4 ஏக்கர் பரப்பில் புதுக்கோட்டை சமஸ்தான மன்னரின் புதிய அரண்மனையாக விளங்கிய கட்டடத்தைத் தமிழக அரசு, 32 இலட்ச ரூபாய்க்கு விலைக்கு வாங்கி, அதை மாவட்ட ஆட்சியாளர் அலுவலமாக மாற்றியது. அந்தக் கட்டடத்தின் தோற்றமே, இந்தச் சிறப்பிதழின் அட்டைப் பக்கத்தை அலங்கரிக்கிறது.

வண்ணப்படங்கள் : திரு ஆர். ஜெயபாஸ்கரன்
திரு டி.பி.எஸ். சுந்தரநாதன்

மேலும் 1979-ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் திரு சுப்பையாவுக்கும் கர்நாடகச் சட்டமன்ற மேலவைக்குமிடையே இவ்வாறு ஒரு பிரச்னை எழுந்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முயற்சி எடுக்கப்பட்டு ஆரம்பத்திலேயே அந்த மனுவை ஏற்றுக்கொள்ளாது, தொடரப்பட்ட வழக்கு பேரவை நடவடிக்கையின் மீது தொடரப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. (Subbiah Vs Karnataka Legislative Council AIR 1979 Karnataka 24) அந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதியின் தீர்ப்பின் ஒரு சில பகுதிகளை எடுத்துக் கூறுவது இப்பிரச்சினைக்கு உகந்ததாக இருக்குமென்று நினைக்கிறேன்.

"........The Presiding Officer of the House is the supreme authority with regard to the regularity or otherwise of the proceedings. The question whether a member while exercising his freedom of speech has contravened Article 211 or any other provision of the Constitution is a matter which falls within his exclusive jurisdiction as observed by the Supreme Court and that the Courts have no say in the matter. This Court cannot go into that question and express any opinion on it. Hence, the question of sending for the records and quashing any such proceedings does not arise. 7.

✱ 66. ஏதேனும் ஒரு சொற்பொழிவு 211-வது பிரிவை மீறுகிறதா அல்லவா என்ற ஒரு பிரச்சினை எழுமானாலும் பேரவைத் தலைவரே அதைப் பற்றி முடிவு செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்பது நியதி. இம்மாதிரியான பிரச்சினையை ஆய்வு செய்யும்போது உறுப்பினர் கூற விரும்பியது, நீதிபதியின் தனி நடத்தையைப் பற்றியதா அல்லது அலுவல் பற்றியதா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அது பேரவைத் தலைவரால்தான் முடிவு செய்யப் பெற வேண்டிய ஒன்று. இருப்பினும் அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் குறிப்பிட்டு 194-வது பிரிவின் 2-வது உட்பிரிவைத் தனியாக இயற்றியதன் நோக்கம் என்னவென்றால் பேரவையின் நான்கு சுற்றுச் சுவர்களுக்குள் வழங்கப்பட்ட பேச்சு சுதந்திரம் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற சிறப்பான அம்சமே ஆகும்.

6. 174. "இப்பிரச்னையை விட்டு நான் மறு பிரச்சினைக்குப் போவதற்கு முன், இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சிறப்பு உரிமைகள் பற்றிப் புதுக் கருத்துக்களை நாம் இனிமேல் உருவாக்குவது என்பது சரியல்ல என்று கருதுகிறேன். மேலும் அம்மாதிரியான கருத்துக்களை இங்கிலாந்தில் கற்பனைகூட செய்து பார்த்திருக்கமாட்டார்கள். புதிதாக கருத்துக்களை உருவாக்குவதோ அல்லது சிறப்பு உரிமைகளைப் பற்றி தீவிர ஆராய்ச்சியை மேற்கொள்வதோ நமது பணியல்ல. இங்கிலாந்து பாராளுமன்றத் தீர்ப்புகளில் புதுமையான கருத்துக்களைப் புகுத்தி வேறு ஒரு கண்ணோட்டத்தோடு பார்ப்பதோ அல்லது குறிப்பிட்ட சூழ்நிலையிலிருந்து விலகிச் சென்று எந்தக் காரியத்திற்காக அது இயற்றப்பட்டதோ அந்த நோக்கத்தை முறியடிக்கும் முறையில் புதிய கண்ணோட்டத்தோடு நோக்குவதோ ஊறு விளைவிக்கும். நாம் எடுத்துக் காட்டிய மேற்கோள்களிலிருந்து இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சிறப்பு உரிமையைப் புதிய கண்ணோட்டத்தோடு நோக்குவதற்கான சரியான ஆதாரம் இல்லாததோடு பொது வாரண்டில் ஒருவரைத் தண்டிக்கத் தகுதியுள்ளதா என்று ஆராய தகுந்த ஆதாரம் இல்லை என்பதையும் தெளிவாக்கும்."

7. "........அவைக்குத் தலைமை வகிப்பவர் அவை நடவடிக்கைகள் முறையாக நடைபெறுகின்றனவா அல்லது வேறுவிதமாக நடைபெறுகின்றனவா என்பதை முடிவு செய்வதற்கு முழு அதிகாரமும் படைத்தவர். ஒரு உறுப்பினர் தம்முடைய பேச்சு சுதந்தரத்தைக் கொண்டு பேசும் எந்தப் பேச்சும் 211-வது பிரிவையோ அல்லது வேறு எந்தப் பிரிவையோ மீறுகிறதா என்று பார்க்க வேண்டிய முழுப் பொறுப்பும்—உச்ச நீதிமன்றம் கூறியதாவது—அவருக்கே உரித்தானதாகும். அதில் நீதிமன்றங்கள் எவ்விதத்திலும் தலையிட இயலாது.

எனவே இந்த நீதிமன்றம் இப்பிரச்சினைக்குள் நுழைந்து ஆய்ந்து தன்னுடைய கருத்தை வெளியிட இயலாது. எனவே அவையின் ஆவணங்களை வரவழைத்து அதைச் செல்லுபடியாகாதவாறு தகர்த்தெறிவது என்ற பிரச்சினையே எழவில்லை.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)





# வளரும் புதுக்கோட்டை மாவட்டம்

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் வாயிலாகப் புதுக்கோட்டை மாவட்டத்தை முன்னேற்றும் வகையில் ஆக்கப்பூர்வப் பணிகளை நிறைவேற்றி வருகிறது தமிழக அரசு. வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் வியக்கத்தக்க மாறுதல்களை இம்மாவட்டம் பெற்று வருகிறது.

**திரு எம். ஏ. கௌரிசங்கர்,**
இ.ஆ.ப.,
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**புதுக்கோட்டை.**

**வரலாற்றுச் சிறப்போடு தொன்மைக் கலை நிறைந்த மாவட்டம் புதுக்கோட்டை. மாமன்னர்கள் ஆண்ட இப்பூமியில் புராதனச் சிற்பங்களும் ஓவியங்களும் மிகப் பரவலாக இம்மாவட்டத்தின் தொன்மைச் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.** சுற்றுலாப் பயணிகளுக்கு மகிழ்வூட்டக் கூடிய இடங்கள் பல உள்ளன. திருமுருகன் திருத்தலமாக விளங்கும் விராலிமலை வண்ணத் தோகை விரித்தாடும் மயில்களுக்குச் சரணாலயமாகவும் அமைந்து கண்ணுக்கு நிறைந்த விருந்தளிக்கிறது. யாகிகள் இருப்பிடமாகக் கொண்டிருந்த சித்தன்னவாசலில் மனதைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள் இப்பகுதிக் கலைஞர்களின் திறமைக்குச் சான்றாக இன்றும் மங்காது காட்சியளிக்கின்றன. கலை நுணுக்கச் சிற்பங்களை ஆவுடையார் கோவில், குடுமியாமலை, கொடும்பாளூர் போன்ற பல்வேறு இடங்களில் அமைந்துள்ள ஆலயங்களில் காணலாம். ஆவுடையார் கோவில் விதானக் கொடுங்கைச் சிற்ப வேலை உலகில் வேறெங்கும் காண இயலாத ஒன்று. இதுபோன்ற பலவித இடங்களைக் கொண்ட புதுக்கோட்டை மாவட்டம், தற்போது வளர்ந்து வரும் மாவட்டமாகத் திகழ்கின்றது.

### தன்னிறைவுப் பாதையில்

தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களினால் புதுக்கோட்டை மாவட்டம் புதுமை பெற்று வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகின்றது. இங்குள்ள கிராமங்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னிறைவுத் திட்டம் புதிய பொலிவினை உருவாக்கியுள்ளது. மூன்று கட்டங்களில் நிறைவேற்றப் பட்டுவரும் இத்திட்டத்தில் முதல் இரண்டு கட்டங்களில் 10 ஒன்றியப் பகுதிகளில் 2,878 வேலைகள் ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தைந்து லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கடைசிக் கட்டமாக இந்த ஆண்டில் 3 ஒன்றியப் பகுதிகளில் 949 வேலைகள் ரூபாய் ஒரு கோடியே அறுபது லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுவரை ஒரு கோடியே 24 லட்ச ரூபாய் செலவில் 800 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.



### வயிற்றுக்குச் சோறிட வேண்டும்

"நம்முடைய குழந்தைகள் நாட்டின் பொதுச் சொத்து. அக்குழந்தைகளின் வாழ்வை வளமாக்க நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் நம் நாட்டின் எதிர்கால நலத்திற்கு நாம் செய்யும் முதலீடாகும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார்கள்.

ஏழை எளிய குழந்தைகள் உணவின்றி வாடுதலைத் தவிர்த்து அவர்தம் உடலும் உள்ளமும் வலுவடைய தமிழக முதலவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இம் மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 1,118 மையங்களும், கல்வித் துறையின்மூலம் பள்ளிகளில் 1,136 மையங்களும், நகராட்சிப் பள்ளிகள் மூலம் 58 மையங்களும், ஆதிதிராவிட நலத் துறை மூலம் 10 மையங்களும் இயங்கி வருகின்றன. இம்மையங்களின் மூலம் பயன்பெற்றுவரும் குழந்தைகளின் எண்ணிக்கை 2,05,774. இம்மையங்களில் பணிபுரிய வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை 3,394 ஆகும். ஆதரவற்ற விதவைகளும், ஆதிதிராவிடர்களும் புதிய வாழ்வு பெற்றுள்ளனர்.

14.11.82 முதல் கிராமப் புறங்களில் செயல்பட்டுவரும் முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமூலம் குழந்தைகள் நல நிலையங்களிலும், பள்ளிகளிலும் முறையே சராசரியாக 73,606 குழந்தைகளுக்கும் 98,720 குழந்தைகளுக்கும், சத்துணவு வழங்கப்படுகின்றது. மற்றும் மாதம் ஒன்றுக்கு தலா 30 கிராம் பற்பொடி பொட்டலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### வறுமைக்கோடு வளர்ச்சிக் கோடானது

ஏழை எளிய மக்கள் - குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடைய பலவகை நலத்திட்டங்களை மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் வகுத்து உதவிகளை வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களில் சுமார் 600 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை முன்னேற்ற மடையச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் சுமார் 7,800 குடும்பத்தினர் நடப்பாண்டில் பயன் பெற ஒவ்வொரு ஒன்றியத்திலும் ரூபாய் எட்டு லட்சம் செலவிடப்பட அரசு நிதி ஒதுக்கியது. அதில் 31.3.83 முடிய 101.04 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு அதன் மூலம் 7,250 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

### பெருகும் வேளாண்மை

வேளாண்மைத் தொழில் மேலும் பெருகும் விதத்தில் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள் உருவாகி வருகின்றன. ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் பணி துவங்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 5,000 ஏக்கர் நிலம் நீர் வசதி பெறும். மேலும் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல திட்டங்களை நிறைவேற்ற அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மிகப் பெரிய தோட்டப் பண்ணை உருவாக்கப்பெற்று பல்விதச் செடிகள், மரங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. **தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையுள்ள மாமரச் செடி வகைகளை இத்தோட்டப் பண்ணை உருவாக்கியுள்ளது தனிச் சிறப்பாகும்.**

### வளரும் தொழில்கள்

பொருளாதார வளர்ச்சிக்குத் தொழிற்சாலைகள் பெருகுதல் அவசியம். புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் புதிய தொழில் துவங்க வருவோருக்குப் பலவிதச் சலுகைகளை அரசு வழங்க முன்வந்துள்ளது. **புதிய சிப்காட் தொழில்கள் இணையம் புதுக்கோட்டைக்கு அருகே ரூ.2.50 கோடி செலவில் உருவாகி உள்ளது.** பெருந்தொழில்கள் பல இங்கே துவங்கப்பட உள்ளன. சிட்கோ நிறுவனம் இரண்டு தொழிற் பேட்டைகளை நிறுவியுள்ளது. ஏழு கோடி ரூபாய் முதலீட்டில் புதிய கூட்டுறவு நூற்பாலையும், சர்க்கரை ஆலையும் விரைவில் துவங்க உள்ளன. சிறு தொழில்களை இம்மாவட்டத்தில் அதிக அளவில் துவங்க தொழில் முனைவோர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வளர்ச்சிப் பாதையிலும் வள வாழ்வுத் திட்டங்களிலும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு இம்மாவட்டத்தை முன்னேற்றம் கொண்ட மாவட்டமாக மாற்றி அமைத்திடும் வகையில் அரசு பல சீரிய திட்டங்களை வழங்கி வருகின்றது. வறுமை அகன்று வளமை நிறைந்திட புதுகை மாவட்டம் பல்வேறு திட்டங்களின் வாயிலாக விரைந்து முன்னேறி வருகின்றது. வளரும் தமிழகத்தில் மலரும் மாவட்டமாக புதுகை மாவட்டம் மலர்ந்து விரைவில் மணம் வீசத் தொடங்கும். **மனம் கவரும் இம்மாவட்டத்தைக் கண்டு மகிழ, புதுக்கோட்டை மாவட்டம் உங்களை அன்புடன் வரவேற்கிறது.**

## தீரர் சத்தியமூர்த்தி



**இந்திய சுதந்தரப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத் தக்கவரும், அந்நாளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் துடிப்புமிக்க பேச்சாளராகத் திகழ்ந்தவருமான தீரர் சத்தியமூர்த்தி, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருமயத்தில் பிறந்தவரே. புதுக்கோட்டையில் இவரை நினைவுபடுத்தும் வகையில் நகர்மன்ற சத்தியமூர்த்தி தங்கும் விடுதி, சத்தியமூர்த்தி நகர், சத்தியமூர்த்தி சாலை ஆகியவை உள்ளன.**

**திருமயத்தில், சத்தியமூர்த்தி நினைவகம் ஏற்படுத்த, தமிழக அரசு திட்டமிட்டு அதற்கான நிலத்தை வாங்கியுள்ளது. நினைவகம் ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.**



## சமூக சேவகி டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி

**தமிழகத்தில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்று, சட்டசபையில் உதவி சபாநாயகராகப் பதவியேற்ற முதல் பெண்மணி டாக்டர் திருமதி முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள். அவர், சமுதாய சேவையில் ஈடுபட்டு தேவதாசி முறையை எதிர்த்து முதற் குரல் கொடுத்தவர்; பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு நல்வாழ்வு தந்தவர். 'பத்மபூஷணம்' என்னும் பட்டம் பெற்றவர். அடையாற்றில் புற்றுநோய் மருத்துவமனை உருவாவதற்குக் காரணமாக இருந்தவர். இவர் பெயரில், புதுக்கோட்டை மச்சுவாடியில் உள்ள 'முத்துலெட்சுமிரெட்டி மகளிர் இல்லம்' சிறந்து விளங்குகிறது. இத்துணைப் புகழ் பெற்ற டாக்டர் திருமதி முத்துலெட்சுமி ரெட்டி, புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.**

# புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்கள்

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பல்லவர்கள், பாண்டியர்கள், சேதுபதிகள், விஜயநகர மன்னர்கள், முத்தரையர் ஆகியோர் புகழ்மிக்க பல திருக்கோயில்களை எழுப்பியுள்ளனர். சமண, புத்த மதங்களும் ஒரு காலத்தில் இங்கே சிறப்புற்றிருந்தன. பள்ளிகள், (படுக்கைகள்) குகைச் சிற்பங்கள் பாங்குறத் திகழ்கின்றன. தொண்டைமான் ஆட்சிக்காலத்தில் இவை யாவும் பேணிப் பாதுகாக்கப் பெற்று வந்துள்ளன.

சமஸ்தானமாக இருந்த புதுக்கோட்டைத் தனியரசு, இந்தியா விடுதலையடைந்தபிறகு தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டது. அதுகாறும், மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஆலயங்கள் ,1.4.'53ல் இந்து சமய அறநிலையத்துறையின் ஆட்சியில் கொண்டுவரப்பட்டன. அரசின் நேரடிப் பார்வையில் இருந்துவந்தமையால் அவை யாவும், ''புதுக்கோட்டை தேவஸ்தானம்'' என்ற ஒரே நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு -அரசு நிதியிலிருந்து பராமரிக்கப்படுகின்றன.

இப்போது புதுக்கோட்டை தேவஸ்தானத்தின்கீழ் 117 திருக்கோயில்களும் உட்கிடையாக் 83 சிறுகோயில்களும் அவற்றோடிணைந்த 139 கட்டளைகளும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு, இவற்றின் நிருவாகச் செலவிற்காக ரூ. 5 இலட்சமும், சுவாமி தூக்குவதற்காக ரூ. 30 ஆயிரமும் ஆக ஆண்டொன்றுக்கு 5,30,000 ரூபாய் வழங்கி வருகிறது.



## அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை கோகர்ணேஸ்வரர் கோயில்

புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் சிறப்பாக விளங்குவது திருக்கோகர்ணத்தில் உள்ள அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை கோகர்ணேஸ்வரர் திருக்கோயிலாகும். இது மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் கி.பி. 600-630ல் குகைக் கோயிலாக கட்டப்பட்டுள்ளது. திமிரி நாதஸ்வரம் இக்கோயிலுக்கு தனிச் சிறப்புடையதாகும். மிருதங்கம் பிடில், வீணை, திமிரி, டங்கா, டமாரம், முகவீணை, நகரா, வாங்கா, கர்ணா, தவளைச்சங்கு, தம்புரா, முதலிய கர்நாடக இசைக்கருவிகள் இசைப்பது மற்ற திருக்கோயில்களில் இல்லாத சிறப்பு நிகழ்ச்சியாகும். கல்லில் செதுக்கப்பட்டுள்ள கொடுங்கைகள் அழகு பொருந்தியவை யாகும். இங்குள்ள சிற்பங்கள் சிறப்பானவை.

திருக்கோகர்ணம் கோயில் கடந்த 500 ஆண்டுகளாகத் திருப்பணி செய்யப்படாமல் இருந்தது. புதுக்கோட்டையை ஆட்சி புரிந்த பிரகதாம்பாள்தாஸ் ராஜராஜ கோபாலதொண்டமான் பகதூர் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக்குழு ஒன்றினை அமைத்து, 3,00,337 ரூபாய் செலவில் எல்லாக் கோபுரங்களையும், விமானங்களையும் புதுப்பித்தும், முகப்பு மண்டபம் அமைத்தும் 23.6.1982ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

## அருள்மிகு தண்டபாணி திருக்கோயில்

நகரத்தின் மத்தியில் உள்ள அருள்மிகு தண்டபாணி திருக்கோயில் 1,20,000 ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பெற்று, 12.2.82ல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மூலவருக்குத் தங்கக் கவசம் செய்யப்பட இருக்கிறது.

## அருள்மிகு சாந்தநாதசுவாமி திருக்கோயில்

அருள்மிகு சாந்தநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, ரூ. 1,75,000 செலவில் திருப்பணி துவங்க உள்ளது. இதனருகில் ரூ. 3 லட்சம் செலவில் ஒரு கல்யாண மண்டபம் கட்டுவதற்கான மதிப்பீடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## அருள்மிகு அரங்குளநாத சுவாமி ஆலயம்

திருவரங்குளத்தில் உள்ள சிவஸ்தலம் இது. தமிழக அரசு நிதி உதவியுடன் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு ரூ. 85,000- செலவில் இராஜகோபுரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.1,50,000 செலவில் மற்ற அனைத்து விமானங்களையும் புதுப்பித்து மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கோவில் அமைப்பும், எதிரே உள்ள பெரிய குளமும் கண்ணுக்கு விருந்தளிப்பவை.

## அருள்மிகு திரௌபதியம்மன் மற்றும் தருமர் திருக்கோயில்

வல்லத்திராக் கோட்டையில் எழில்மிக்க வெள்ளாற்றங் கரையில் அருள்மிகு திரௌபதியம்மன்-தருமர் திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு, புதிதாக அர்த்த மண்டபமும் மகா மண்டபமும் எழுப்பப்பட்டன. விமானம்கட்டியும் சுற்றுச்சுவர் எடுப்பித்தும் 96,691 ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பட்டு, 2.6.82ம் நாள் குடமுழுக்குச் செய்யப்பட்டது. கோயிலின் எதிரில் ரூ. 1,00,000 செலவில் திருக்குளம் அமைக்கப்பட்டுள்ளது. 3,00,000 ரூபாய் செலவில் கல்யாண மண்டபம் ஒன்றும் கட்டப்பட இருக்கிறது.





அருள்மிகு திரௌபதியம்மன் மற்றும் தருமர் திருக்கோயில்

## அருள்மிகு மலையப்பசாமி திருக் கோயில்

பெருங்களூரில் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட கோயில் இது. தொல்பொருள் துறையினர் பட்டியலில் இருக்கிறது. மலையப்பசுவாமிகோயில் பூஜை ஆதிதிராவிட வகுப்பினரால் செய்யப்பட்டு வருகிறது. சிவவாக்கியர் என்ற தமிழ் முனிவர் இங்குதான் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. வற்றாத தீர்த்தக்குளம் ஒன்றும் இருக்கிறது.

## சத்தியமூர்த்திப் பெருமாள் ஆலயம் மற்றும் சத்திய கிரீஸ்வரர் ஆலயம்

திருமயத்தில் மலையைக் குடைந்து அருள்மிகு சத்தியகிரீஸ்வரர், ஸ்ரீரெங்கநாதர் பள்ளி கொண்ட காட்சி மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரெங்கநாதர் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருப்பதும் சுவரில் கருடன், சித்ரகுப்தன், மார்க்கண்டேயன், பிரும்மா ஆகியோர்களின் சிலைகளும் மிக அழகாக உள்ளன. இது திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற தனிச் சிறப்புடையதாகும். முன் மண்டபத்தில் தூண்களில் உள்ள சிலைகள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இது பல்லவர்களால் கட்டப்பட்டது. 1687ல் தென்பாண்டி நாட்டின் வரலாற்றில் முக்கிய இடம் வகித்த ஏழு சுற்று மதில்களுடன் கூடிய கோட்டை சேதுபதி விஜயரெகுநாத தேவனால் கட்டப்பட்டுள்ளது.



## அருள்மிகு அரியநாச்சியம்மன் ஆலயம்

கீழாநிலைக் கோட்டையில் உள்ள இந்த ஆலயம் தஞ்சை மன்னரின் ஆளுகைக்குட்பட்டது என்றும் நாயக்க அரசர்களில் கடைசி அரசராகிய விஜயராகவன் இங்குள்ள பாறை மீது கீழாநிலைக்கோட்டையைக் கட்டியதாகவும் சொல்லப்படுகிறது. கடைசியாக புதுக்கோட்டை மன்னர் ஆளுகைக்கு வந்தது. இத்திருக்கோயிலில் ஆடிச் செவ்வாய், ஆனித் திருவிழா, மகர்நோம்பு, சித்திரையில் பூச்சொரிதல் ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

தமிழக அரசு 1,00,000 ரூபாய் மானியம் கொடுத்துள்ளது. ரூ. 1,50,000 மதிப்பீட்டில் இராஜகோபுர கருங்கல் திருப்பணி நடைபெற்று வருகிறது.

## அருள்மிகு நாகநாதசுவாமி ஆலயம்

பேரையூர் நாகநாதசுவாமி திருக்கோயிலில் உள்ள சுனையில் பங்குனி மாதத்தில் ஒரு நாள் சுனை முழங்கும் ஒலி கேட்கும் என்கின்றனர்.

## அருள்மிகு வில்வவனேஸ்வரர் ஆலயம்

விரையாச்சிலையில் உள்ள அருள்மிகு வில்வவனேஸ்வரர் கோயில், சோழர் காலத்தில் கட்டப்பட்டது. பிற்காலத்தில் நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பட்டது. கோயில் மிகவும் சிறப்பாகவும் அடக்கமாகவும் அமையப்பெற்றதாகும். ஆனி மாதத்தில் திருவிழா நடைபெற்று வருகிறது. இவ்வட்டாரத்திற்கு இது ஒரு சிறப்பு வாய்ந்த தலமாகும்.

## அருள்மிகு குடுமிநாதர் ஆலயம்

குடுமியான்மலையில் உள்ள குகைக் கோயில் இது. இங்கு ஆயிரம்கால் மண்டபம் உள்ளது. மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் கட்டப்பட்டது. ஏழிசை பற்றிய கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இங்குள்ள சிற்பங்கள் பார்க்கப் பரவசமூட்டுவனவாகும்.

## அருள்மிகு சுப்ரமணியசுவாமி ஆலயம்

விராலிமலையில் உள்ள இத்திருக்கோயில் பழஞ்சிறப்பு வாய்ந்தது. குமாரவயலூரில் தங்கி இருந்த அருணகிரிநாதரை விராலிமலைக்கு வா என்றழைத்து அஷ்டமாசித்திகளை அருளிய

தாகக் கூறப்படுகிறது. இயற்கையாக மயில்கள் இங்கு மிகுந்து காணப்படுகின்றன. இங்கு மயில் சரணாலயம் அமைக்கப்பட்டு, அதை அபிவிருத்தி செய்ய தமிழக அரசு ரூ. 75,000- மான்யமாக வழங்கி இருக்கிறது. ரூ. 1,50,000- செலவில் புதிய மயில் சரணாலயமும், சாலை விருந்தினர் விடுதியும் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இவை விரைவில் கட்டி முடிக்கப்படும். இங்கு ஆண்டுதோறும் படி விழாவும், அருணகிரி ஜெயந்தி விழாவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. தைப்பூசத்தன்றும், பங்குனி உத்திரத்தன்றும்,





அருள்மிகு சுப்ரமணியசுவாமி ஆலயம்

வைகாசி விசாகத்தன்றும் பெருவிழாச்கள் நடைபெறுகின்றன. ரூ. 45,000- செலவில் திருப்பணி செய்யப்பெற்று 23-6-80ம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இறைவன் பவனிவர தங்கரதம் ஒன்று செய்யவும் ஏற்பாடாகி வருகிறது.

## அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்

நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில் சமயபுரம் மாரியம்மன் கோயிலைப் போன்று புகழ்பெற்றது. பங்குனி மாதம் நடைபெறும் தேர்த்திருவிழா சிறப்பான பெருவிழா. அன்று அரசு விடுமுறையாகும். சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அன்று கூடுகிறார்கள். தேவஸ்தான தங்கும் விடுதியும், கல்யாண மண்டபமும் இருக்கின்றன.

## அருள்மிகு உத்தமனார் கோயில்

கீரனூரில் உள்ள அருள்மிகு உத்தமனார் கோயில், சோழ மன்னர்களால் கட்டப்பட்டது. தொல்பொருள் துறையினர் பாதுகாப்பில் இருந்து வருகிறது. இப்போது, திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய 1,50,000 செலவில் திருப்பணி செய்யப்பட உள்ளது.

## அருள்மிகு மார்க்கபுரீஸ்வரர் ஆலயம்

கீரனூரில் அருள்மிகு மார்க்கபுரீசுவரர் ஆலயம் சோழர்காலத்தில் கட்டப்பட்டது. இங்கு பொதுமக்கள் வசதிக்காக ஒரு கல்யாண மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. இது தொல்பொருள் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

## குன்னாண்டார் கோயில் அருள்மிகு பர்வதகிரீஸ்வரர் ஆலயம்

முத்தரைய மன்னர்களால் கட்டப்பட்ட குகைக் கோயில். மலையின் மீது முருகன் கோயில் உள்ளது. விஜயநகர அசரர்களால் தேர் போன்ற நூற்றுக்கால் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அண்மையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இது தொல்பொருள் துறையின் கண்காணிப்பில் இருந்து வருகிறது.

## திருக்களம்பூர் அருள்மிகு கதலி வனேஸ்வரர் ஆலயம்

இது பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். இத்திருக்கோயிலின் பிரகாரத்தில் வாழைகள் சூழ்ந்துள்ளன. எனவே இங்குள்ள இறைவனுக்கு கதலிவனேஸ்வரர் எனப் பெயர் வந்தது என்பர்.

## அருள்மிகு அடியார்க்கு எளியனார் ஆலயம்

மிரட்டுநிலை அருள்மிகு அடியார்க்கு எளியனார் கோயிலுக்கு ரூ. 60 ஆயிரம் மதிப்பீட்டில் திருப்பணி செய்யப்பட இருக்கிறது. திருப்பணி செவ்வனே நடைபெற அரசு ரூ. 4,86,000 மான்யமாகக் கொடுத்து உதவி இருக்கிறது.

## ஆவுடையார் கோவில்—ஆத்மீக நாதர் ஆலயம்

புதுக்கோட்டையிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நால்வரில் ஒருவராகிய



மாணிக்கவாசக சுவாமிகள், பாண்டிய மன்னரிடம் அமைச்சராக இருந்த பொழுது கட்டப்பட்ட கோயிலாகும். தமிழர்களின் கட்டடக் கலைக்கு - வல்லமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கொடுங்கையின் அமைப்பு கல்லில் கவிபாடுகிறது. சிலைகள் உயிருள்ளன போல் அணிகலன்களோடு விளங்குகின்றன. தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் இதில் மட்டுமே அருவ வழிபாடு உள்ளது. கருவறையில் எந்தவிதச் சிலையும் இல்லை. ஆனித் திருமஞ்சன விழாவும், மார்கழித் திருவாதிரையும், கந்தசஷ்டியும் இங்கே முக்கியமானவை. இக்காலத்திலும் கோயில் கட்டுமானப் பணியை ஒப்புக்கொள்ளும் ஸ்தபதிகள் தாங்கள் எழுதிக் கொடுக்கும் ஒப்பந்தப்பத்திரத்தில், ஆவுடையார் கோவில் கொடுங்கை நீங்கலாக மற்ற திருப்பணிகளைச் செய்து தருவதாக எழுதிக் கொடுக்கிறார்கள் என்றால் இக்கால ஸ்தபதிகளுக்கு அது ஒரு சவால்தானே! இதன் நிருவாகம் திருவாடுதுறை ஆதீனத்திடம் இருந்து வருகிறது.

## பொது

புதுக்கோட்டைத் திருக்கோயில்களுக்குச் சொந்தமானது என்று தற்பொழுது நஞ்சை 34.56 ஏக்கரும், புஞ்சை 9.89 ஏக்கரும், கட்டளைக்கு நஞ்சை 39.16 ஏக்கரும், புஞ்சை 4 ஏக்கரும் இருக்கிறது.

சுமார் 29 இலட்சம் மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள் புதுக்கோட்டை, கீரனூர், திருமயம், ஆலங்குடி ஆகிய கருவூலங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன



# அன்னைத் தமிழ் வளர்க்கும் அமைப்புகள்






புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னைத் தமிழ்வளர்க்கும் அமைப்புகளும் அவை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டுகளும்.

## புதுக்கோட்டையில்

| | |
|---|---|
| திருக்குறள் கழகம் | 1924 |
| கம்பன் கழகம் | 1976 |
| இலக்கியக் கழகம் | 1974 |
| இந்தியப் பண்பாட்டுக் கழகம் | 1979 |
| தமிழ் இலக்கிய வட்டம் | 1970 |
| திருமுருகன் திருவருள் திருப்புகழ் மன்றம் | 1975 |
| புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் | 1968 |
| எழுத்தாளர் பேரவை | 1972 |
| வள்ளுவர் கலா மன்றம் | 1957 |
| கலை இலக்கியப் பெருமன்றம் | 1966 |
| புதுகைக் கவிஞர் மன்றம் | 1966 |
| பாரதி நற்பணி மன்றம் | 1982 |
| இளம் எழுத்தாளர் கூட்டுக்குழு | 1979 |
| முத்தமிழ்க் கலா மன்றம் | 1983 |
| கோயில்பட்டி பாரதி மன்றம் | 1973 |
| தெய்விகப் பேரவை | 1970 |
| புத்தாண்டு விழாக்குழு | — |

## மேலைச் சிவபுரி

| | |
|---|---|
| சன்மார்க்க சபை | 1909 |
| வள்ளுவர் மன்றம் | 1956 |
| நற்பணி மன்றம் | 1982 |

## குருவிக்கொண்டான்பட்டி

| | |
|---|---|
| கவிமணி மன்றம் | 1958 |

## குழிபிறை

| | |
|---|---|
| மீனாட்சி இலக்கியக் கழகம் | 1970 |

## விராலிமலை

| | |
|---|---|
| அருணகிரிநாதர் மன்றம் | 1981 |
| முத்தமிழ் மன்றம் | — |

## ஆலங்குடி

| | |
|---|---|
| கந்தசஷ்டிக் கழகம் | 1976 |

## அரிமளம்

| | |
|---|---|
| இளங்கோ தமிழ் மன்றம் | 1972 |
| தமிழ் இலக்கியக் கழகம் | 1972 |

## திருமயம்

| | |
|---|---|
| தமிழ் எழுத்தாளர் மன்றம் | 1972 |

## கீரனூர்

| | |
|---|---|
| தமிழ் மன்றம் | 1974 |
| மாவட்ட இலக்கிய அணி | 1980 |

தகவல்: குன்றக்குடி பெரியபெருமாள்



# வளம் பெருக்கும் திட்டங்கள்

**பு**திய 20 அம்சத்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர சில திட்டங்கள் மத்திய-மாநில அரசுகளால் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கான செலவுத் தொகையில் மத்திய, மாநில அரசுகள் சம அளவில் பங்கு கொள்கின்றன. **அவை:**

1. வறட்சிப் பகுதி வளர்ச்சிச் செயல் முறைத் திட்டம்.
2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.
3. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்.

இம் முன்னேற்றத் திட்டங்கள் மூன்றும் ஒன்றுடன் ஒன்று சார்ந்திருப்பவை. இத்திட்டங்களைப் பற்றிக் காண்போம்.

### வறட்சிப் பகுதி வளர்ச்சிச் செயல் முறைத் திட்டம்

இத்திட்டம் அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படும் வட்டாரங்களில் நிரந்தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி. அதன் மூலம் வாழ்க்கை வசதி வாய்ப்புகளை உயர்த்தி மக்களுக்குச் சேவை செய்வதாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் இம்மாதிரியான பகுதிகளிலிருந்து புதுக்கோட்டை, திருவரங்குளம், கந்தவர்க்கோட்டை, கறம்பக்குடி ஆகிய நான்கு வட்டாரங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முதல் ஆண்டான 1982-83-ல் ஒரு வட்டாரத்திற்கு ரூ. 10 இலட்சம் விதம் பற்பல திட்டங்களுக்காகச் செலவிட ரூ. 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கக் கூடிய மழையையும், இருக்கும் தண்ணீரையும் நன்றாகச் சேமித்துப் பயிர் சாகுபடிக்கு உபயோகித்து உற்பத்தியைப் பெருக்க வழி வகை செய்வதாகும். நீர் வடியும் நிலையை மையமாகக் கொண்டு பற்பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய செயல் திட்டங்கள் சிறுபாசன நீர்த் தேக்கங்கள் கட்டிப் பராமரித்தல், மண்வளப் பாதுகாப்பு, நிலத்தடி நீர்ப்பெருக்கம், காடுகள் வளர்த்தல் மற்றும் பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

வரும் ஆண்டுகளில் இதே மாதிரியான செயல் திட்டங்கள் தீட்ட ஒரு வட்டாரத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 இலட்சம் விதம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உழன்று கொண்டிருக்கும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு சிறந்த திட்டமாகும். தமிழ்நாட்டில் கிராமங்களில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து உழன்று கொண்டிருக்கின்றன என்ற நிலை தெளிவாக உள்ளது. இக்குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை 2 அல்லது 3 ஆண்டுகளில் உயர்த்தி-அக்குடும்பம் முன்னேற வழிவகை செய்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிதி ஒதுக்கீடு செய்கின்றன. 6-வது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 35 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் நலனுக்குச் செலவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வட்டாரத்திற்கு 600 குடும்பங்கள் என்ற அடிப்படையில் தேர்வு செய்து அக்குடும்பங்களுக்கான செயல் திட்டங்களைத் தேர்வு செய்து அந்தச் செயல்படுத்த வங்கிகளிலிருந்து நிதி வழங்கிக் கடனுதவி செய்வதாகும்.

**வ**றட்சி நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆய்வு செய்கிறார். (20·3·1983.)





கிராமப்புற மக்களிடம் தொழில் நுணுக்க ஆற்றல் போதுமானதாக இல்லாமல் இருக்குமாதலால் அவ்வாறான அறிவினைப் பெற உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு அதற்கேற்றாற்போல் செயல் திட்டங்கள் சிபாரிசு செய்யப்படுகின்றன.

ஒரு சில பயிற்சிகள் ஒரு சில நாட்கள் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக ஆடுகள் வளர்த்தல், பால் மாடுகள் பேணுதல் போன்றவை. ஒரு சில பயிற்சிகள் 3 மாதங்கள் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, அப்பளம் செய்தல், வடகம் போடுதல் போன்றவை. மற்றும் சில பயிற்சிகள் 6 மாதங்கள் கொடுக்கப்படுகின்றன. அவை ரேடியோ, பராமரிப்பு, பாய் முடைதல், பனை நார்ப்பொருள்கள் செய்தல் போன்றவை.



சாத்தூர் போன்ற இடங்களில் மட்டும் சிறப்பாகத் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளைப் போல் இங்கும் செய்யப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.



### பஞ்சமும் நிவாரணப் பணிகளும்

**பு**துக்கோட்டையில் 1876 முதல் 1878 வரை பெரும் பஞ்சம் நிலவியது. பஞ்சத்தின் கொடுமையைக் குறைக்க அரசு நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்குச் செல்ல, சாலைபோடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சையிலிருந்து மொத்தமாக அரிசி வாங்கி, அடக்க விலைக்கே மக்களுக்கு விற்கப்பட்டது. கஞ்சித் தொட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன. ரூபாய் எட்டுக்குக் குறைவாக ஊதியம் பெற்றவர்களுக்கு, கூடுதலாக ஒரு ரூபாய் கொடுக்கப்பட்டது.

ரேடியோ நுண்மின் தொழில்கள் பயிற்சி: புதுக்கோட்டையில் ரூ. 100. கோடி செலவில் ஒரு பிரம்மாண்டமான நுண் மின்

1982-83-ஆம் ஆண்டில் 20 துறைகளில் 1,737 பேர்களுக்கு ரூ. 18.77 இலட்சம் செலவில் பயிற்சி தரப்பட்டுள்ளது. இவர்களில் 966 பேர் ஆதிதிராவிடர்கள்ஒரு சில தொழில்களில் ஒரு குறிப்பிட்ட வகையினர் செய்துவந்தனர்.

சில தொழில்கள் குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் நடைபெற்று வந்தன. இப்பயிற்சிகள் மூலம் இந்நிலையை மாற்ற மாறுபட்ட இப்பயிற்சிகள் உதவுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில வற்றைக் கூறலாம்

அப்பளம் செய்தல்: இதில் ஆதிதிராவிட மக்களுக்குப்பயிற்சியளிக்கப்பட்டு அவர்கள் இதனைச் செவ்வனே செய்கிறார்கள்.

தீப்பெட்டி செய்தல் சிவகாசி



தொழிற்பேட்டை வரும் என்பதை எதிர்பார்த்து இப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏற்றுமதிப்பொருள்கள்: இம் மாவட்டத்தில் பெருமளவில் உள்ள பனை மரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பு தயாரித்தலில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இன்னும் இதுபோன்ற தேவைக்கு ஏற்பப் பற்பல பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இதன் விவரம் கீழே தரப் பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் டிரைசம் மற்றும் ஐ. எஸ். பி. திட்டங்களின் கீழ் 20 வகையான தொழில்களில் 1,752 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள நபர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன் அவர்கள் செயல்படுத்த ஏற்கெனவே குறிப்பிட்டபடி பற்பல திட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டங்களை செயல்படுத்த வணிக வங்கிகளிடம் இருந்தும் கூட்டுறவுத் துறை வங்கிகளிடமிருந்தும் முதலீடு செய்யக் கடன் உதவி பெற்றுத்தரப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. சிறு விவசாயி, 2. குறு விவசாயி, 3. விவசாயக் கூலி, . விவசாயத் துறையில் அல்லாத கூலி, 5. கிராமக்கை வினைஞர்கள்.

இச்செயல் திட்டத்தின் மூலம் முதலீடு செய்வதற்குக் கடன் உதவி அளிக்கப்படும் போது முன்னதாகவே மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் வழங்கும் கடன் தொகையில் 25 சதவிகிதத்தை சிறு விவசாயிகளுக்கும், $33\frac{1}{3}$ சதவிகிதத்தை இதரர்களுக்கும் மானிய முன் பணமாக வங்கிகளுக்கு வழங்கிவிடுகிறது. திட்ட முதலீட்டுத் தொகையில் மானியம் கழிந்தது போக, பாக்கி தொகையையே வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள தேர்தெடுக்கப்பட்ட நபர்கள் நிர்ணயிக்கப்பட்ட தவணைகளின் வங்கிகளுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும். பால் மாடுகள் வழங்குவதில் ஆதிதிராவிட மக்களுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கும் மானியம் போக மீதித்தொகை ஆதிதிராவிடர் சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி 50 சதவிகித கிராமக் குடும்



பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வதாலும், ஆண்டுக்கு ஒரு வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் 600 மட்டுமேயாதலாலும், நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 8 இலட்சமேயானதாலும் இம்மாதிரியான திட்டத்தைச் செயல்படுத்தக் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட வேண்டியது அவசியம் ஆகிறது.

ஆண்டு வருமானத்தில் 'கடையனுக்குக் கடையனான' குடும்பம் முதலாவதாகவும், அதற்கு அடுத்து வருபவர் இரண்டாவதாகவும் ஆக இதே முறையில் தொடர்ந்து வரிசைப்படுத்த வேண்டும். இம்மாதிரி வரிசைப் படுத்தப்பட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள முதல் 60 குடும்பங்கள் ஒரு கிராம நல ஊழியரின் பகுதிக்குத் தேர்வு செய்யப்படும். ஒரு வட்டாரத்தில் 10 கிராம நல அலுவலர்கள் பகுதிக்கு மொத்தமாக 600 குடும்பங்கள் தேர்வுசெய்யப்படும். ஆண்டு வருமானம் ரூ. 3,600க்கு கீழ் உள்ள குடும்பங்களே இத்திட்டத்தின் கீழ் உதவிக்கு உரியவை. ஒரு குடும்பம் என்பது சாதாரணமாக 5 நபர்கள் கொண்டதாகவும் ஒரே சமையலில் சாப்பிடுபவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது தனி நபர் ஒருவரின் ஒருநாள் சராசரி வருமானம் ரூ. 2 எனக் கொள்ளலாம்.

இவ்வாறு மாநில அரசின் உத்தரவு பெற்றுத் திட்டங்கள் அந்தந்த வட்டாரத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்டத்தின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் . வழி நடத்திச் செல்லவும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் 'ஆட்சிக்குழு' ஒன்று செயல்படுகிறது. இதுபோக, மாவட்டத்திலுள்ள வங்கியர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக்கொண்டு 'மாவட்ட ஆலோசனைக் குழு' ஒன்றும் உள்ளது. இந்தக் குழுவின் மூலம் வங்கிகளும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் அலுவலர்களும் பங்கு கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்திடவும் உதவுகிறது.

**தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் (1982-83) கூலியாக வழங்கப்பட்ட அரிசி 1,151 மெட்ரிக் டன். பணச்செலவு ரூ. 140 இலட்சம், ஈடுபடுத்தப்பட்ட மனித சக்தி நாட்கள் 13,76,945, வேலைகளின் எண்ணிக்கை 2,937.

ஆகவே, இந்த மூன்று திட்டங்களும் மத்திய, மாநில அரசாங்கங்களின் சமமான நிதி ஒதுக்கீட்டினைப் பெற்று மாநில அரசின் மூலம், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட முகமையால், திட்ட அலுவலரைச் செயலராகக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டங்களைச் செயல்படுத்தக் கூட்டுறவுத் துறை மற்றும் வணிக வங்கிகள் பேருதவியாக உள்ளன. மாவட்டத் தொழில் மையமும், இதர துறையினரும் தொழில் நுணுக்க உதவியைச் செய்கின்றன. ஆகவே, இத்திட்டங்களின் செயலால் இம் மாவட்டம் முன்னேற்றப் பாதையில் பீடு நடை போட்டு வருகிறது என்று பெருமிதம் கொள்ளலாம்.





# கீர்த்திமிகு கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்



**கி**ராமங்கள் அனைத்தையும் மின்சார மயமாக்கும் தேசியத் திட்டத்தில் முக்கிய அங்கம் வகிப்பன கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்.

கிராமங்களில் உற்பத்தியைச் சீராக்கி வளமாக்குவதற்குவேண்டிய மின்சாரத்தை வழங்குதல்.

விவசாயத்திற்கும் தொழில் நிறுவனங்களுக்கும் உத்தரவாதத்துடன் நல்ல முறையில் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்தல்.

மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு வேண்டிய மின் சாதனங்கள், கருவிகள் முதலியவற்றைச் சங்கத்தின் கருவிக்கூடத்தின் மூலம் பழுது பார்த்துக் கொடுத்தல்.

மின் நுகர்வாளர்களுக்குப் பாதுகாப்புடனும் சிக்கனத்துடனும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறைகளைப் படிப்பித்தல், தீவிரமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி, முன்னேற்றப் பணிகளை மேற்கொள்ளுதல்.

ஆகிய நோக்கங்களையும் செயல்முறைகளையும் கொண்டவை இக்கூட்டுறவுச் சங்கங்கள்.

மத்திய அரசு நிறுவனமான கிராமிய மின்சாரக் கழகத்தின் நிதியுதவியுடன் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. . இந்தியாவில் இதுவரை அங்கீகரிக்கப்பட்டுள்ள 22 சங்கங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 2 சங்கங்கள் உள்ளன. ஒன்று தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் 1980-ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்னொன்று புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் 6-3-82-ல் தொடங்கப் பட்டது.

திருமயம் வட்டத்திலுள்ள பொன்னமராவதி, திருமயம், அரிமளம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் 144 கிராமங்களில் இச்சங்கம் விரைவில் தன் பணியைத் தொடங்க இருக்கிறது. இதற்குரிய பணிக்காலம் 5 ஆண்டுகள். திட்ட மதிப்பீடு ரூ. 2.97 கோடி.

''புதுடில்லி கிராமிய மின்சாரக் கழகத்திலிருந்து கட்டுமான முன்னோடிக் கடனாக ரூபாய் 1 லட்சமும் திட்டக் கடனாக ரூ. 172.40 லட்சமும், தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூ. 35 லட்சமும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பங்குத் தொகையாக ரூ. 80.540 லட்சமும், பொதுமக்கள் பங்குத் தொகையாக ரூ. 10 லட்சமும் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கம் விரைவில் தனது பணியைத் தொடங்க இருக்கிறது.

**நில அளவைப் புள்ளியியல் கணக்கு [illegible] சுவடி!**

[illegible] ஒழுங்காக அளக்கப் [illegible] பிரிக்கப்பட வேண் [illegible] யமையாமையை [illegible] அரசாங்கத்தார் [illegible] அறிவுறுத்தினர். [illegible] ஒரு [illegible] அளவை எடுக்கப் [illegible] அளவையின் [illegible] ல். ஒரு நில அளவைப் [illegible] கணக்கு சமஸ்தான [illegible] வெளியீடாக வெளியிடப்[illegible] ஓலைச்சுவடி [illegible] இவ்வாக [illegible] ஓலைச் சுவடிப் [illegible] இன்றும் புதுக் [illegible] அருங்காட்சி [illegible] பெற்றுள்ளது.

[illegible] தன்மை, [illegible] பொருட் [illegible]

# தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய பழப் பண்ணை

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற சுமார் 30,000 ஏக்கர் நிலங்கள் தரிசாக உள்ளன. இந்நிலங்கள் பெரும்பாலும் செம்புறை மண் வகையைச் சேர்ந்தவை. இவற்றில் நீண்ட காலம் நிலைத்து நின்று பலன் தரக்கூடிய பழ மரங்களை நட்டால் விவசாய மக்களுக்கு ஆண்டு முழுவதும்வேலைவாய்ப்பு அதிகரிப்பதுடன், அவர்களுக்கு நிரந்தர உயர் வருவாய் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. வளம் குறைந்த மண்ணிலும் முந்திரி செழித்து வளர்ந்து பலன் கொடுக்கும். மேலும், இம்மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் பரவலாகப் பெய்கின்ற மழை (970 மி.மீ) பழவகைச் சாகுபடிக்கு மிகவும் அனுகூலமாக அமைந்துள்ளது.

மேற்கூறிய அடிப்படையிலும் இம்மாவட்டத்தில் தமிழக அரசு பெரிய பழப்பண்ணைகளைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

புதுக்கோட்டைக்கருகில் குடுமியான்மலையில் உள்ள வெப்ப வட்டாரப் பழப்பண்ணை 26.9.1974 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் பரப்பளவு 296 ஏக்கர்.



மேலும், இப்பண்ணையில் வளம் குறைவாக உள்ள நிலப் பகுதிகளில் பயன் தரக்கூடிய மரங்களான புளி, நாவல், விளாம்பழம், யூகலிப்டஸ், பனை போன்ற மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பண்ணை சுற்று வட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்துப் பல தரப்பட்ட நல்ல உயர் ரகப் பழச்செடிகளையும், காய்கறி விதைகளையும், பூச்செடிகளையும் உற்பத்தி செய்து விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**மகாத்மா காந்தி கிராமிய பழப் பண்ணை**

இப்பண்ணை சுமார் 1,000 ஏக்கரில் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள வல்லத்திராக்கோட்டைக் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு மாபெரும் பழத்தோட்டமாகும். இதனைத் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய பழப் பண்ணை என்று கூறலாம். இப் பண்ணை தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் 21.10.'77முதல் துவங்கிச் செயல்பட்டு வருகிறது.



தற்போது இப்பண்ணையில் 48 மா ரகங்களும், 37 ஆரஞ்சு ரகங்களும், 15 சப்போட்டா ரகங்களும், 16 கொய்யா ரகங்களும் மற்றும் இலந்தை, மாதுளை, நெல்லி, சீதா, நாவல், பப்பாளியில் பல்வேறு ரகங்களும் பயிர் செய்யப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகின்றன.

விவசாயிகளுக்குப் பழ வகைப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள் பயிரிடுவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அனுசரணை ஆராய்ச்சி நடத்தப்பட்டு அவற்றில் வரும் நல்ல முடிவுகள் அவ்வப்போது விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.



இப்பண்ணையில் மா வகைகள் 750 ஏக்கரிலும், கொய்யா வகைகள் 50 ஏக்கர்களிலும், சப்போட்டா 25 ஏக்கர்களிலும், எலுமிச்சை 25 ஏக்கர்களிலும், இதர பழ வகைகள் 150 ஏக்கர்களிலும் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இதுவரையில் சுமார் 800 ஏக்கர்களில் பழ மரங்கள் நடப்பட்டுள்ளன. இவ்வாண்டு மேலும் மீதமுள்ள 200 ஏக்கர்களில் பழ மரங்கள் நடப்பட்டுத் தோட்டம் அமைக்கும் பணி விரைவில் நடைபெறும்.



இதுபோன்ற மாபெரும் பழப் பண்ணைகளை அரசே நல்லமுறையில் அமைத்துச் செயல்படுத்திக் காட்டுவதன் மூலம் இப்பகுதி விவசாய மக்களுக்கு ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து, அவர்களும் தரிசாகக் கிடக்கும் அதிக அளவில் நிலங்களில் பழப் பயிர் சாகுபடி செய்ய ஊக்கம் அளிக்க வாய்ப்பாக அமைகிறது.

பழ உற்பத்தியை அதிக அளவில் அதிகரிப்பதால், இப்பகுதி மக்களின் சுய தேவைப் பூர்த்தியை நிறைவு செய்து அண்டை மாவட்ட மக்களின் பழப் பற்றாக் குறையைப் பூர்த்தி செய்யலாம்.

அதிக அளவில் உற்பத்தியாகும் பழங்களை நல்ல முறையில் பதப்படுத்த பழம் பதனிடும் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது.

பெருமளவில் பழத்தோட்டங்கள் அமைப்பதன் மூலம், இப் பகுதி ஏழை, எளிய மக்களுக்கு ஆண்டு முழுவதும் நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்

தரிசு நிலங்களில் அதிக வருவாய் தரக்கூடிய பழ மரங்கள் நடுவதால் மக்களின் பொருளாதார நிலை உயர்ந்து வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும்.





**முந்திரி விதைப் பண்ணை**

இந்த முந்திரி பழப்பண்ணை இம்மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கிக்கு அருகில் நாட்டுமங்கலத்தில் சுமார் 90 ஏக்கர் நிலப் பரப்பில் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் முந்திரிச்சாகுபடிக்கு ஏற்ற செம்புறை மண் நிலங்கள் சுமார் 50,000 ஏக்கர்களுக்கு மேல் தரிசாக உள்ளன. இந்நிலங்களில் பயிரிட அதிகப் பலன் தரும் உயர்ரக முந்திரி விதைகளையும், ஒட்டுச் செடிகளையும் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகிறது. உழவர் பெருமக்களுக்கு முந்திரிச் சாகுபடியில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டும் இப்பண்ணை ஒரு மாதிரிப் பண்ணையாகச் செயல்படுகிறது. சாதாரணமாக முந்திரிப் பழங்கள் பெரும் அளவில் உபயோகம் இன்றிச் சேதம் அடைகின்றன. இதனைத் தவிர்க்க முந்திரிப் பழங்கள் கிடைக்கும் பருவத்தில் அவற்றில் இருந்து பலவகைப்பழரசங்கள் பதனிடப்பட ஆலோசனை வழங்கப்படுகிறது.

**மரவள்ளி விதை உற்பத்தி நிலையம்**

மேற்கூறிய முந்திரிப் பழப் பண்ணையின் ஒரு பகுதியில் சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் தரமான மரவள்ளி விதைக் கரணைகளை உற்பத்தி செய்யும் திட்டம் செயல்பட்டு வருகிறது. பெருமளவில் பயிரிடப்படும் - வருமானம் குறைவாய் உள்ள மானாவாரிப் பயிரைத் தவிர்த்து, அதிக வருமானம் தரும் மரவள்ளியைப் பயிரிட ஊக்கம் அளிக்கப்படுகிறது.



# தொழில் தொடங்க முனைவோருக்கு...

இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி) 1949ஆம் ஆண்டு சென்னையில் துவக்கப்பட்டது. தொழில் முனைவோருக்காக நிதி உதவி வழங்கும் நிறுவனமாகும் இது.

புதுக்கோட்டை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, இதன் கிளைக் கழகம் புதுக்கோட்டையில் 1979ஆம் ஆண்டு இறுதியில் துவக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு நிதி ஆண்டுத் துவக்கத்திலிருந்து, கிளை மேலாளருக்கு ரூ. 25,000-வரை நிதி வழங்கும் அதிகாரத்தை அளித்தது. அவ்வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்பம் முதல் இந்நாள் வரை சிறு வகைக் கடனாக சுமார் 300க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 325க்கு மேற்பட்ட சிறு வாகனப் போக்குவரத்து ஊர்திகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

1982 நிதி ஆண்டுத் துவக்க முதல், கிளை மேலாளருக்கு ரூ.1 இலட்சம் வரையில் நிதி உதவி வழங்கும் அதிகாரத்துடன் ரூ. 5 இலட்சம் வரை கடன் பட்டுவாடா செய்யும் அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.4.'82 முதல் சுமார் 65 விண்ணப்பங்களுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் வரையில் நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 தொழிற்சாலைகளுக்கு ரூ. 30 இலட்சம் வரை நிதியுதவி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக ஏற்பட்டுள்ள கடுமையான மின் வெட்டுகள் காரணமாக, இக்கிளை அலுவலகம் சுமார் 15 தொழிற்சாலைகளுக்கு ஜெனரேட்டர் மற்றும் ஆயில் என்ஜின்கள் வாங்குவதற்குச் சுமார் 4½ இலட்சம் ரூபாய் வரையில் நிதியுதவி அளித்துள்ளது.

தலைமை அலுவலகம் மூலம் புதுக்கோட்டை மாவட்டக்கிளை அலுவலகத்தின் மூலமும் 31.3.'82 முடிய சுமார் 209



தொழிற்சாலைகளுக்கு ரூ. 1,96,64,000 வரையில் நிதியுதவி அனுமதிக்கப்பட்டு அவற்றில் 178 தொழிற்சாலைகளுக்குச் சுமார் 88,90,000 ரூபாய் வரையில் நிதிஉதவி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

தொழில் துவங்க முனைவோருக்கு இக்கழகம் பல திட்டங்கள் வகுத்துள்ளது. அவை வருமாறு:

1. சிறு தொழில்கள் (எஸ்.எஸ்.ஐ) 2. தொழில் நுட்ப வினைஞர்கள் திட்டம் (டெக்னோகிராப்ட்) 3. போக்குவரத்து வாகனம் (டிரான்ஸ்போர்ட்) 4. பதிவு பெற்ற மருத்துவர்கள் (ஆர்.எம்.பி.ஸ்கீம்) 5. தொழில் நுட்ப வினைஞர்களுக்கு -சீட் கேப்டல். 6. அந்நியச் செலாவணி (ஐ.டி.ஏ.லைன் ஆப் கிரடிட்) 7. மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் (டிராலெர்ஸ்)

இந்தத் திட்டங்களுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட காலத் தவணைச் சலுகைகளில் எளிதான நிபந்தனைகளின் பேரில் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

## கடியாபட்டி மின் அணை

புதுக்கோட்டை மாவட்டம் கடியாபட்டி எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் தயாரித்த டெலிவிஷன், டிரான்ஸிஸ்டர்கள், இதர மின்னணுத் தொழிற் கருவிகளை, மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பார்வையிட்டார்.





# மீன் வளம்



மனிதன் உடல் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் புரதச் சத்து இன்றியமையாதது. மிகவும் மலிவான விலையில் மீன் மூலம் நமக்குப் புரதச் சத்து கிடைக்கிறது. மீன் வளம், உணவுப் பற்றாக்குறையை ஈடுகட்ட காரணமாக இருக்கிறது.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்குத் தீவிர மீன் வளர்ப்புத் திட்டங்களைப் பிரபலப்படுத்தி, அதன் மூலம் ஏராளமாக உற்பத்தியாகும் மீன்களை பொதுமக்களுக்கு எளிதில், மலிவாகக் கிடைக்கும்படி செய்தல் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பொதுவான நோக்கமாகும்.

கவனிக்கப்படாமல் விடப்பட்ட நீர்நிலைகளைச் சிறிது சிறிதாக நாளடைவில் மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்து குறியளவு மீன் உற்பத்தியைப் பெருக்குதல், மீன் வளர்ப்பில் பொதுமக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுதல், வேலையில்லாப் பிரச்சினையைப் போக்க மீன் வளர்ப்பில் பயிற்சி கொடுத்தல், மீன் வளர்ப்பை இலாபகரமான தொழிலாக ஏற்றுக்கொள்ளவும், அதன் மூலம் கிராமப்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வகை செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள பதினோரு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளில், இம்முகமையும் ஒன்றாகும்.

மீன்பிடி தொழில் ஒரு பிற்பட்ட தொழிலாகச் சமீப காலம் வரை கருதப்பட்டு வந்தது. முறையான மீன் வளர்ப்பைப் பற்றி அறியாததால் மீன் வளர்ப்பை ஒரு இலாபகரமான தொழிலாக ஏற்றுக் கொள்ள யாரும் முன் வரவில்லை. குளம் குட்டைகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு எக்டேருக்குச் சுமார் 300 கி. கிராம். மீன் பிடிக்கப்பட்டு சுமார் ரூ. 600 மட்டுமே வருவாயாகக் கிடைத்து வந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மிகக் குறைவான மீன் உற்பத்திக்கும் குறைந்த வருவாய்க்கும் காரணம் பொதுமக்களுக்கு மீன் வளர்ப்பில் போதிய பயிற்சியின்மையும், தேவையான பொருளாதார வசதியின்மையும், குறுகிய காலத்திற்கு மட்டுமே நீர்நிலைகளின் மீன்பிடி உரிமை கிடைத்ததுமே யாகும். மேலும், தேவையான உயரின மீன் குஞ்சுகள் உரிய காலங்களில் சுலபமாகக் கிடைக்காததாலும், மீன் வளர்ப்பை ஏற்று நடத்த அனைவரும் தயக்கம் காட்டினர். இத்தகைய இடர்களைக் களைய கீழ்க்கண்ட நோக்கத்தோடு அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது:



1. மீனவர்களுக்கு அல்லது மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு நீர் நிலைகளை நீண்டகாலக் குத்தகைக்கு (10 ஆண்டுகளுக்குக் குறையாமல்) எடுத்துத் தருதல்.

2. குளங்களின் மராமத்துச் செலவுகளுக்கு அரசுமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி செய்தல்.

3. முறையின மீன் வளர்ப்பில் பயிற்சி அளித்தல்.



4. உயரின மீன் குஞ்சுகளை வரவழைத்துக் குளங்களில் இருப்புச் செய்தல்.

5. மீன் பண்ணையைச் செவ்வனே நடத்த உதவித் தொகையும், கடனும் அளித்தல்,

ஊராட்சி ஊராட்சிஒன்றியங்கள் நகராட்சி, திருக்கோயில்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களைப்பார்வையிட்டுப் பொருத்தமான குளங்களை மீன் வளர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும். நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் 10 ஆண்டுக் காலத்திற்குக் குளங்களை இம் முகமையின் பொறுப்பில் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களை இத்தொழிலுக்கு அறிமுகப்படுத்தவும், கலப்பின மீன் வளர்ப்பு, தூண்டுதல், இனவிருத்தி ஆகியவற்றில் முறையான பயிற்சி வழங்கவும் பொருத்தமான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். குளங்கள் அமைந்துள்ள பகுதிகளில் வாழும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள 35 வயதுக்கு மிகைப்படாதவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று நேர்முகத் தேர்வு மூலம் தகுதியான நபர்களை இம்முகமையின் தேர்வுக்குழு தேர்ந்தெடுக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இம்முகமையின் செலவில் 15 நாட்கள் மீன் வளர்ப்பு, தூண்டுதல் முறை இனவிருத்தி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

மீன் வளர்ப்பில் ஆர்வமிக்கவர்கள் அரசாங்க நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு உள்நாட்டில் தற்சமயம் கவனிக்கப்படாமல் இருக்கும் குளம் குட்டைகளிலும் இதர நீர் நிலைகளிலும் மீன் வளர்க்க ஊக்கத்தோடு முன்வர வேண்டும். இது விவசாயத்தை விட இலாபகரமான தொழிலாகும்.

மீன் எளிதில் ஜீரணிக்கக் கூடிய புரதச் சத்தும் வைட்டமின் 'ஏ' யும் அதிக அளவில் கொண்டுள்ள எளிமையான உணவு. ஆகவே பொதுமக்கள் மீன் வளர்ப்பை ஒரு இலாபகரமான, அத்தியாவசியமான தொழிலாக ஏற்றுச் செய்தால் நாட்டில் உணவுப் பற்றாக்குறை தீர்வதோடு, கிராமப் பொருளாதாரம் சீரடையும். வேலையில்லாப் பிரச்சினை நீங்கிடவும் பெருமளவில் வழி வகுக்கும். விவசாயத்தில் பசுமைப் புரட்சியைப் போல், மீன் உற்பத்தியைப் பலவகையில் முனைப்போடு பெருக்கி நீலப் புரட்சியை உருவாக்கி வருகிறது அரசு.

## புதுக்கோட்டையில் மண் உப்பு

கடற்பகுதியைப் பெற்றிராத புதுக்கோட்டை சமஸ்தானத்தில், உப்புக் காய்ச்சும் தொழில்,தொன்று தொட்டு நடந்தது என்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம். அங்கு, விவசாயத்திற்கு உபயோகமற்ற காடுகளிலிருந்து மண் எடுத்து, அந்த மண்ணைத் தண்ணீரில் நன்றாகக் கரைத்து, தெளிந்த நீரைச் சட்டியில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். பால் போன்ற வெண்மை நிறம் வந்ததும் இறக்கி, ஒருவாரம் வைத்திருப்பார்கள். பின்னர், அந்த உப்பு நீர் கெட்டியாகிவிடும். பிறகு அதை எடுத்துத் தூளாக்கிவிடுவார்கள். இதற்குப் பெயர்தான் மண் உப்பு. இந்த மண் உப்புக் காய்ச்சும் பழக்கம் மோரையாறு, கள்ளக்கோரைக்காடு, சின்னத்துரப்பாகுளம், உள்வாய்ப்பகுதி முதலிய இடங்களில் நடைமுறையில் இருந்தது.

மண் உப்பின் விலை, பிரிட்டிஷ் பகுதிகளில் தயாரிக்கப்படும் கடல் உப்பைவிட மலிவாக இருந்தது. எனவே புதுக்கோட்டையிலிருந்து பிரிட்டிஷ் பகுதிக்கு மண் உப்புக் கடத்தப்பட்டு வந்தது. இதைக் கண்ட ஆங்கிலேய அரசு, மண் உப்புத் தயாரிப்பதைத் தடை செய்யுமாறு சமஸ்தான அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. 1887ல் மண் உப்புத் தயாரிப்பதைத் தடை செய்வது பற்றி ஆங்கிலேய அரசுக்கும் புதுக்கோட்டை சமஸ்தான அரசுக்கும் ஒப்பந்தம் [illegible] ஆங்கிலேய அரசு புதுக்கோட்டை [illegible] அரசுக்கு [illegible]



[...]டோரியா பேரரசி[...]ின் முடிசூட்டு [...]ா நினைவு வளை[...] முன் பேரறிஞர் [...]ண்ணா உருவச் [...]ல [...]க்கோட்டை)

## புதுக்கோட்டை மாவட்டக் காட்சிகள்



சுற்றுலாப் பயண[...]களைக் கவரும் விராலிமலை முருகன் திருக்கோயில்.



அண்ணா பண்ணையில் (குடுமியான் மலை) உள்ள பேரறிஞர் அண்ணா உருவச் சிலையும் அவர் நட்ட தென்னை மரமும்.



சத்துணவு மையத்தில் மலர்முகம் காட்டும் மழலைகள்.

தன்னிறைவுத் திட்டத்தினால் உருவாக்கப்பட்ட பாலம்.



விராலி மலையில் உலாவரும் மயில்.





வளர்ந்து வரும்
சிறு தொழில்கள்.







# அறந்தாங்கியில் கூட்டுறவு நூற்பாலை

தமிழ்நாட்டில் தற்போது 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் இயங்குகின்றன; வளர்ந்துவரும் கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தமிழகத்தில் மேலும் புதிதாக 5 கூட்டுறவு நூற்பு ஆலைகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தில் அறந்தாங்கி ஆவுடையார் கோயில் சாலையில் உள்ள மருதக்குடியில் 23.47 ஏக்கர் நிலப்பரப்பில் துரிதமாகக் கட்டப்பட்டுவரும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலை. இதற்கான நிலம், கட்டடம், இயந்திரங்கள், இதரக்கருவிகள் ஆகியவற்றிற்கு மொத்தச் செலவு ரூ. 750 லட்சம் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு அரசு 325 லட்சம் ரூபாய் முதலீடு செய்யத்திட்டமிட்டுள்ளது. உறுப்பினர்களிடமிருந்தும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் 35 லட்சம் ரூபாய் மூலதனப்பங்காக எழுப்ப ஆலை முடிவு செய்துள்ளது. இதுதவிர, இந்திய தொழில் கடன் மேம்பாட்டு வங்கி, இந்திய தொழில் நிதிக்கழகம் ஆகியவற்றின் உதவியோடு, இந்திய தொழில் கடன் முதலீட்டுக்கழகம் 375 லட்சம் ரூபாய் ஒதுக்கித்தர இசைவளித்துள்ளது. மேலும், தொழில் துறையில் பின்தங்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆலை அமைக்கப்படுவதால், 15 இலட்சம் ரூபாய் 'சிப்காட்'டின் உதவித்தொகையாகக் கிடைக்கும்.

ஆலையின் கட்டுமானப்பணிகள், டிசம்பர் 1983க்கு முன்னால் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலை நிறுவப்படும் இந்தப் பகுதியில் இயற்கை நீர்வள வாய்ப்புகள் இன்மையால், வேளாண் பொறியியல் துறையின் உதவியோடு 800 அடி ஆழத்திற்கு 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஆழ்துளைக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கிணறு, மணிக்கு 23,000 காலன் தண்ணீர் கொடுக்கும் ஆற்றலுடையதாக விளங்குகிறது.

1984ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஒருபகுதி உற்பத்தி தொடங்கிவிடுமென்றும் ஜூன் 84ல் முழுஉற்பத்தி அளவை எட்டிப்பிடித்துவிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலையில், பல்வேறு வகையிலுமாக 900 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள்.

இந்தக்கூட்டுறவு நூற்பாலை ஆண்டொன்றுக்கு 586 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நூலை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய பகுதியில் அறந்தாங்கியும் ஒன்று என்பதால், இங்கு வேலை வாய்ப்புப் பெறுகிற கிராம மக்களின் பொருளாதார நிலை ஏற்றமடையும். கூட்டுறவு துறையைச் சேர்ந்த இந்த ஆலையினால் கைத்தறி நெசவாளர்கள்-குறிப்பாக கூட்டுறவின் அமைப்பில் இணைந்துள்ள நெசவாளர்கள் சலுகை விலையில் நூல்பெற வாய்ப்பு ஏற்படும்.



# பொதுப்பணித்துறை உருவாக்கும் அணைக்கட்டுகள்



அறந்தாங்கிக் கோட்டத்தில் பாசனவசதிப் பராமரிப்பின் கீழ் 16 அணைக்கட்டுகள் உள்ளன. 100 ஏக்கருக்கு மேலும், அணைக் கட்டினால் பயன் அடையும் கண்மாய்கள் மொத்தம் 340, இக் கோட்டத்தின் பராமரிப்பில் உள்ளன. 100 ஏக்கருக்குக் குறைவாக உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ள கண்மாய்களும் விரைவு மராமத்துத் திட்டம் ஊராட்சி ஒன்றியம் தலைப்பின் கீழ் தரப்பட்டு வருகின்றன.

ரூ. 5 இலட்சம் செலவில் ஆலங்குடி வட்டத்தில் வள்ளிப்





பட்டி வாரி அணைக்கட்டும், ரூ. 3 இலட்சம் செலவில் ஆலங்குடி வட்டத்தில் வடவாளம் அணைக் கட்டும் இக்கோட்டத்தினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பாம்பன் ஆற்றின் குறுக்கே குருந்தூர் கிராமத்தில் ரூ. 33 இலட்சம் செலவில் அணை கட்டப்பட்டு வருகிறது. மேற்கூறியவை தவிர, சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தில் கீழ்க்கண்ட அணைக் கட்டுத் திட்டங்களுக்கு ஆய்வுகள் முடிக்கப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் ஒப்புதலுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ஆவுடையார்கோயில் வட்ட ரேனூர் கிராமத்தில், வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல் ரூ. 38.15 இலட்சம். ஆவுடையார்கோவில் வட்ட விளானூர் கிராமத்தில் மேட்டுத் தச்சமல்லி கண்மாய் அமைக்கும் பணி ரூ. 2.10 இலட்சம். அறந்தாங்கி வட்ட நரசிங்கக்காவேரி மேம்படுத்தும் வேலை ரூ. 10.25 இலட்சம்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதியின் கீழ் செய்யப்படும் திட்டப் பணிகளுக்காக (DPAP) ரூ. 22 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டிற்கு விரைவு மராமத்துத் திட்டத்தின் கீழ், குளங்களைத் தரப்படுத்துவதற்காகப் பொதுப்பணித்துறை தலைப்பில், 60 குளங்களும், ஊராட்சி ஒன்றியத் தலைப்பில் 44 குளங்களும், முன்னாள் ஜமீன்தார் தலைப்பில் 4 குளங்களும் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அங்கீகாரம் பெற்ற பிறகு, குளங்கள் தரப்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் அரசு அறிவித்துள்ளபடி, வறட்சி மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டம் உள்ளது. இக்கோட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் தூர் எடுக்கவும் மற்ற வேலைகளுக்காகவும் சுமார் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



## செட்டிப்பட்டி அணை

பாம்பாற்றின் இருபுறமும் உள்ள குளங்களின் ஆயக்கட்டுதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆற்றின் குறுக்கே மண் அணைகளை எழுப்பி, வாய்க்கால் மூலமாகத் தங்களது குளங்களுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்வது வழக்கமாக உள்ளது. வெள்ளக் காலங்களில் இந்த மண் அணைகள் அடித்துச் செல்லப்படுவதோடு ஏராளமான தண்ணீர் பயனில்லாமல் வீணாகி விடுகிறது. இதை நிரந்தரமாக நீக்கப் பனங்குடி கிராம எல்லையில் ராயவரம்-கொத்தமங்கலம் சாலைக்கு மேற்புறம் பாம்பாற்றின் குறுக்கே 84 மீட்டர் நீளமுள்ள கல்லணை கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் பாசன மடையும் நிலங்களின் பரப்பளவு 310.96 ஏக்கர் ஆகும். இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ. 13.33 இலட்சங்களாகும். இதன் மூலம் கூடுதலாக 161.78 டன் உணவு உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

## கலபம் அணை

ஆவுடையார்கோவில் வட்டத்தைச் சேர்ந்த குருந்தூர் மற்றும் கலபம் விவசாயப் பெருங்குடியினரால் பாம்பாற்றின் குறுக்கே மண் அணை அமைக்கப்பட்டு அருகில் உள்ள ஏரிகளுக்கு நீர் ஏற்றிப் பாசனம் நடைபெறுகிறது. இது தற்காலிகமாகவும், நிலையற்றதாகவும் செயல்படுவதால் இதனை நிரந்தரப் பயன் அளிக்கும் வகையில் 122 மீட்டர் நீளமுள்ள அணைக்கட்டும், இடது புறத்தில் தேவையான தலைப்பு மதகுகளும், அமைப்பதற்கான திட்டம் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆற்றின் இருபுறங்களிலும் மேல் புறத்தில் கரைகளைப் போதுமான அளவில் பலப்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.



தலைப்பு மதகிலிருந்து தாய் வாய்க்கால் 1829 மீட்டர் நீளத்திற்கு கலபம், காய்குடி ஆகிய ஏரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மொத்தம் 19 ஏரிகளுக்கு நீர் விநியோகம் செய்ய ஏதுவாகிறது. இத்திட்டத்தினால் பாசனம் அடையும் பரப்பளவு 2590.69 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தியில் 1346.59 டன்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 33 இலட்சங்கள் ஆகும்.

## திருப்புனவாசல் அணை

ஆவுடையார்கோவில் வட்டம் பறயத்தூர் கிராமத்திற்கு அருகில் உள்ள பாம்பாற்றின் குறுக்கே மண் அணை அமைக்கப்பட்டு ஆற்றின் இருகரைகளிலும் உள்ள ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டுப் பாசனம் நடைபெறுகிறது. இது தற்காலிகமாகவும், நிலையற்றதாகவும் செயல்படுவதால், இதனை நிரந்தரப் பயனளிக்கத் தக்கவாறு 150 மீட்டர் நீள கல்லாலான அணைக்கட்டும், இருபுறங்களுக்கும் தேவையான தலைப்பு மதகுகளும் அமைப்பதற்கான திட்டம் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வலது கரை வாய்க்கால் மூலம் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்தைச் சேர்ந்த புதுவயல், மருங்கூர், எட்டிச்சேரி, சோனார் கோட்டை ஆகிய நான்கு ஏரிகளும் இடது கரை வாய்க்காலின் மூலம் புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் வட்டத்தைச் சேர்ந்த திருப்புன்வாசல், பூவாடியேந்தல், ஏனாதி, சுக்காநேந்தல் என்ற அழமஞ்சக்காடு ஆகிய நான்கு ஏரிகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் பயன்பெறும் மொத்த ஆயக்கட்டு 1114.89 ஏக்கர்கள் ஆகும். இத்திட்டத்தினால் கிடைக்கும் கூடுதல் உணவு உற்பத்தி 561.11 டன்கள். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 52.88 இலட்சங்கள்.

## குலமங்களம் அணை

ஆலங்குடி வட்டம் குலமங்களம் கிராமத்திற்கு அருகில் வில்லுனியாற்றின் குறுக்கே மண் அணை அமைக்கப்பட்டு ஐந்து ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டுப் பாசனம் நடைபெறுகிறது. நிரந்தரப் பயனளிக்கும் வகையில் 68 மீட்டர் நீளமுள்ள அணையும், வலது புறம் தலைப்பு மதகும் அமைக்கத் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் குலமங்களம் கிராமத்தில் உள்ள 3 ஏரிகளும் பனங்குளம் கிராமத்தில் உள்ள 2 ஏரிகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் பாசனம் பெறும் மொத்தப் பரப்பளவு 354.20 ஏக்கர்கள் ஆகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 11.15 இலட்சங்கள் ஆகும்.

மச்சுவாடிப் பண்ணை புதுக்கோட்டை நகரினின்றும், தஞ்சை செல்லும் பாதையில் 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

இந்தப் பண்ணையின் பரப்பு 990.57 ஏக்கர். இங்கு சிந்திப் பசு, முர்ரா, ஜெர்சிந்து இனங்களும் சிந்தி, முர்ரா, ஜெர்சிந்து இனவிருத்திக் காளைகளும் கீழக்கரிசல், மாண்டிய இனச் செம்மறி ஆடுகளும், தலைச்சேரி வெள்ளாடுகளும், வெள்ளை யார்க்ஷயர் இனப் பன்றிகளும், முட்டையிடும் வீரிய வெள்ளை இனப் போந்தாக்

* உயர் ரகக் கலப்பினக் கிடேரிக் கன்றுகளை வாங்கி வளர்த்து, கன்று ஈன்ற பிறகு சிறப்புத் திட்டங்களின் கீழ் உள்ள சிறு விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

* உயர் ரக தலைச்சேரி வெள்ளாடுகளைக் கேரள மாநிலத்திலிருந்து வாங்கி, வளர்த்துப் பின் சிறப்புத் திட்டங்களின் கீழ்உள்ள சிறு விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

* பண்ணையில் கால்நடைகளுக்குப் போதுமான அளவிற்கு,

* பண்ணையிலுள்ள தீவனப் பயிர் விதை உற்பத்திப் பிரிவில் பண்ணைக்குத் தேவையான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுதல்.

பண்ணைக்குப், பரந்த நிலப் பரப்பிருந்தும் தண்ணீர் வசதி மிகக் குறைவாக உள்ளது. அண்மையில் சோதனை நடத்திய நில நூல் வல்லுநரின் அறிக்கையின்படி இப்பகுதியில் நிலநீர் மிகவும் குறைவாக உள்ளது. தண்ணீர்ப் பற்றாக்குறையால் போதுமான நிலம் சாகுபடி செய்து போதுமான அளவு தீவனப் பயிர் பெற இயலவில்லை. தற்போது



கோழிகளும் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலேயே இந்த மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தான், கால்நடைப் சம்பந்தப்பட்ட எல்லாப் பகுதிகளும் ஒருங்கே அமைந்துள்ளன.

இப்பண்ணையின் நோக்கங்கள் வருமாறு:

* உயர்ந்த இனக்காளைகள், பசுக்கள், ஆடுகள், பன்றிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து, சிறப்புத் திட்டங்களின்கீழ் உள்ள சிறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

* பொதுமக்களின் பெருகி வரும் தேவைக்கேற்ப பால், முட்டை ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரித்தல்.

* பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் சிந்திப் பசுக்களையும், ஜெர்சிக் காளைகளையும் சேர்த்துக் கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்தல்.

சத்துள்ள தீவனப் புல வகைகளையும், பயிர் வகைகளையும் பயிரிட்டு அவற்றின் உற்பத்தியைப் பெருக்கி, இப்பண்ணையிலுள்ள கால்நடைகளுக்கும், மற்றும் தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உயர்ரக தீவனப் புல் நாற்றுக்கள் மற்றும் சூபா புல் நாற்றுக்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

17 கிணறுகளும் 9 குளங்களும் இருக்கின்றன.

இங்கு 112 கறவைப் பசுக்களும், 23 எருமை கறவை மாடுகளும், 114 கன்றுகளும் பராமரிக்கப்படுகின்றன.

# ஈடு இணையற்ற கால்நடைப் பண்ணை



தற்போது 811 கீழக்கரிசல், 40 மாண்டியா, கலப்பினம் 50 ஆகிய இன ஆடுகள் பராமரிக்கப் படுகின்றன.

1980-81ல் 5 யூனிட்களுக்கும் 1981-82ல் 14 யூனிட்டுகளும், 1982-83ல் 5 யூனிட்டுகளும் வழங்கப் பட்டுள்ளன.

இப்பிரிவில் தற்போது 140 உயரின வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாட்டுப் பன்றிகளின் தரத்தை உயர்த்தவும், இறைச்சிக்

தமிழ்நாட்டிலுள்ள பண்ணைகளில், புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில்தான் முதன் முதலாக இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதற்கான கட்டடச் செலவுகள் கிணறு உட்பட சுமார் 5 இலட்சமாகும். கட்டடங்கள் முடியும் தறுவாயில் உள்ளன.

ஒவ்வொரு விவசாயிக்கும் 2 பெட்டை ஆடுகளும் 1 பொலி கிடாயும் வழங்கப்படும். தற்போது 304 தலைச்சேரி பெட்டையாடுகளும், 97 கிடாரி ஆடுகளும் பராமரிக்கப்பட்டு வரு

டிற்குக் கீழ் உள்ள சிறு விவாசயகளுக்கு கன்று ஈன்ற பிறகு ஊரக (IRDP) வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்பட இருக்கிறது. இதற்கான கட்டடச் செலவுகள், கிணறு உள்பட சுமார் ரூ. 6 இலட்சமாகும். இதற்கான கட்டடமும், கிணறும் கட்டப்பட்டு வருகின்றன.

மழைத்தண்ணீரைத் தேக்கி வைக்கும் பொருட்டுப் புதிதாக ரூ. 25,000 செலவில் கசிவு நீர்க் குட்டை வெட்டப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையிலிருந்து தஞ்சை செல்லும் பாதையில்,



காகவும் பன்றிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

1980-81ல் 13யூனிட்டுகளும், 1981-82ல் 7 யூனிட்டுகளும், 1982-83ம் ஆண்டுகளில் மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் கால்நடை பராமரிப்புச் சிறப்புத் திட்டத்தின்கீழ் மதுரை விரிவிற்கு ஐந்து யூனிட்டுகளும் வேலூர் பிரிவிற்கு 5 யூனிட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

வீரிய இன வெள்ளை போந்தாக் கோழிகள் முட்டைக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தின் நோக்கம்—இப்பண்ணையில் 400 எண்ணிக்கை உள்ள தலைச்சேரி வெள்ளாடுகளை, கேரள மாநிலத்திலிருந்து வாங்கி, அவற்றை இனப் பெருக்கம் செய்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய வங்கி உதவியுடன் வழங்கப்படுகிறது.

கின்றன. மேற்கண்ட வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தில் தற்பொழுது மலைவாழ் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கூடமலை, கல்ராயன்மலை, கொல்லிமலை ஆகிய இடங்களுக்கு 55 கிடாய் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிடேரி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 200 கலப்பினக் கன்றுகள் வாங்கி வளர்த்து, தக்க பருவத்தில் செயற்கை முறை கருவூட்டல் மூலம் சினைக்குக் கொண்டு வந்து, அவற்றை வறுமைக்கோட்

பண்ணையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அக்கினி ஆற்றிலிருந்து ஆழ் குழாய்க் கிணறு அமைத்துக் குழாய்களின் மூலமாக இப் பண்ணைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படித் திட்டங்களை மேற்கொள்வதனால், இப்பண்ணையைச் சுற்றி அமைந்துள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பெரிதும் உதவும்.

## நீதிமன்றத்தின் ஆதார நூல்கள்

விக்னேஸ்வரியர், ஸ்மிருதி சந்திரிகா இவை இரண்டும், புதுக்கோட்டை சமஸ்தான நீதிமன்றத்தில் ஆதார நூல்களாக விளங்கியவை.

# எளியோரை வாழவைக்கும் ஏற்ற மிகு வங்கி

**வி**வசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் வறியவருக்குக் கடன் உதவி செய்து அவர்களை வாழவைக்கும்பெரும் பணியினை ஆற்றி வருவது புதுக்கோட்டை மத்தியகூட்டுறவு வங்கி.

இவ்வங்கி இம்மாவட்ட மக்களிடம் வைப்புநிதி திரட்டி ரூ.12 கோடி மூலதனத்துடன் இயங்கி வருகிறது. தற்சமயம் இவ்வங்கியின் வைப்புத்தொகை ரூ. 6 கோடியாகும். இம்மாவட்டத்திலேயே எந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கியையும் விட அதிக வைப்பு நிதி பெற்றுள்ள வங்கி இந்த வங்கியேயாகும்.

சிறு தொழில் செய்ய 4 சதவிகித வட்டியில் கடனுதவி செய்யத்திட்டமிடப்பட்டு இதுவரை 105 நபர்களுக்கு ரூ. 2.69 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

இவ்வங்கியோடு இணைந்த 136 கிராமக் கூட்டுறவுச் சங்கங்களினால் நடத்தப்படும் 691 கிராம அங்காடிகள் ஆண்டொன்றுக்கு ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்களை விநியோகித்து வருகின்றன. இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட இவ்வங்கி ரூ. 87 இலட்சம் கடனுதவி செய்கிறது.

## கொத்தடிமைகளுக்குப் புனர்வாழ்வு!



மத்திய பிரதேசத்தில் கொத்தடிமைகளாக இருந்த 25 பேர் அண்மையில் மீட்கப்பட்டனர். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு திருமயம் அண்ணா கல் உடைக்கும் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இவர்கள், நாளொன்றுக்குப் பத்து ருபாய்க்குக் குறையாமல் கூலி பெற்று வருகின்றனர். இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கி நடுத்தரக் காலக் கடனாக ரூபாய் 1½ இலட்சம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்குத் தங்களது வேளாண்மை சிறக்க ரூ. 3 கோடி அளவுக்கு இந்த ஆண்டு கடன் வழங்கத் திட்டமிட்டு, போதுமான மழை பெய்யாததன் காரணமாக, ரூ. 1½ கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு நிலவும் வறட்சியினைக் கருத்தில் கொண்டு ரூ. 123 இலட்ச அளவுக்குக் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி, விவசாயிகளுக்கு உதவுகிறது இவ்வங்கி. ஏழை எளிய விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர உழவு எருதுகள், கறவைமாடுகள், ஆட்டுப்பட்டிகள் அமைத்தல் போன்ற பல்வேறு காரியங்களுக்கு இவ்வங்கி,, இந்த ஆண்டு ரூ. 30 இலட்சம் கடன் வழங்குகிறது.

சென்ற ஆண்டு இப்பணிகளுக்காக வழங்கப்பட்ட கடன் ரூ.56 இலட்சமாகும்.

விவசாயிகள் தங்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் இவ்வங்கியின் இதர 15 கிளைகள் மூலமாகவும் இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய் அளவுக்கு நகை ஈட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வங்கி இவ்வாண்டு 24.07 இலட்சம் ரூபாயை இலாபமாக ஈட்டி, அதன் உறுப்பினர்களுக்கு 10½ சதவிகிதம் பங்கு ஈவுத் தொகை வழங்குகிறது. வங்கியின் ஊழியர்களுக்கு உயர்ந்த பட்ச ஊக்கத்தொகையாக 20 சதவிகிதம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கட்டடத்தை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் இலுப்பூரில் 21.3.83 அன்று திறந்து வைத்தார்கள்.





இத்தனைக்கும் சிகரம் போல் அமையும் வண்ணம் இவ்வங்கி சமூகநலப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு முதலமைச்சர் சத்துணவுக்கூடம் அமைக்க ரூ. 50,000 நன்கொடையாகவும் வழங்கியுள்ளது.

அறந்தாங்கியைச் சேர்ந்த விவசாயி சம்பைத் தொழிலுக்காக இவ்வங்கியில் ரூ. 2500 கடனாகப் பெற்று, முறையாகச் செலுத்தி சொந்தத்தில் நிலம் வாங்கியுள்ளார். தான் செய்த பொருட்களை வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்துள்ளார். இதே போன்று ஆவுடையார்கோவில் அருகில் உள்ள அம்மாபட்டினத்தைச் சேர்ந்த திரு ம.சிங்காரப் பத்தர் என்பவர் தஞ்சாவூர்த் தட்டுத் தொழிலுக்குப் பணம் கடன் பெற்றுச் சிறப்புடன் தொழில் நடத்தி வருகிறார்.



விரைவில் நேசி(NAESEY) மூலம் பெட்டிக்கடைகளை இவ்வங்கி வழங்க உள்ளது.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் இலக்கியப் புகழ்பெற்ற ஊர்கள்.

**சங்க** இலக்கியமான அகநானூற்றில் 25–வது பாடலைத் தந்த ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனும், 279–ஆம் பாடலைத் தந்த இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனாரும், புறநானூற்றில் "குடவாயிற் கீரத்தனார்" என்னும் புலவர் பாடிய "இளையோர் சூடார்" என்னும் பாடல் பெற்ற மன்னன் ஒல்லையூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனும் ஒல்லையூரைச் சேர்ந்தவர்களே என்பர் சான்றோர். அந்த ஒல்லையூர்தான் இன்று புதுக்கோட்டைத் திருமயம் வட்டத்தில் உள்ள ஒலியமங்கலமாகும்.

குடவாயிற் கீரத்தனார் என்னும் புலவர் குறிப்பிடும் 'அழும்பில்' என்னும் ஊர் இப்போது 'அம்பு கோயில்' என்னும் பெயரில் ஆலங்குடி வட்டத்தில் உள்ளது.

மதுரைக் குமரனார் என்னும் புலவர் பிறந்த எறிச்சலூரே, இப்போது அறந்தாங்கி வட்டத்திலுள்ள 'எறிச்சி'யாகும். வேள் எவ்விக் குரியதாகக் கூறப்படும் மிழலைக் கூற்றத்தில் உள்ள மணமேற்குடி, பொன்பற்றி ஆகிய ஊர்கள் அறந்தாங்கி வட்டத்தைச சார்ந்தவை; பராந்தக நல்லூர், வானவர் மாணிக்கம் ஆகியன திருமயம் வட்டத்தைச் சார்ந்தவை.

குலச்சிறை நாயனாரின் ஊர் மணமேற்குடி. வீரசோழியத்தின் ஆசிரியராகிய புத்தமித்திரனாரின் ஊரே பொன்பற்றி.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் வரலாற்றுப் புகழ் மிக்க கொடும்பாளூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளதேயாகும்.



### முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி !

புதுக்கோட்டையில் சிறப்பாக இயங்கிவரும் அரசு முன்மாதிரிப் பள்ளி 4.9.1972 அன்று திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் தம் திறத்தை வளர்த்துக் கொள்ள முன் மாதிரியாக விளங்கும் இந்த முன்மாதிரிப் பள்ளி அரசின் சார்பில் ஆண்களுக்கென்று நடத்தப் பெறும் ஒரே முன்மாதிரிப் பள்ளியாகும். சுமார் 30 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் இந்தப் பள்ளி [illegible] மேல்நிலைப் பள்ளியாக [illegible] துள்ளது.



# சமஸ்தான மக்களின் நண்பர் டாட்டன்ஹாம்

இன்றைய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் நடைமுறையிலுள்ள நிருவாக விதிமுறைகளும் கோப்பு வைப்பு முறைகளும் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திவானாக இருந்த (1934-1946) அலெக்ஸாண்டர் லோஃப்டஸ் டாட்டன்ஹாம் என்பவரால் உருவாக்கப்பட்டனவே யாகும். இந்தியாவில் 50 ஆண்டுகள் பணி புரிந்த அவர், எளிமையானவராகவும், மிகச்சிறந்த நிருவாகியாகவும் திகழ்ந்தார். குறைந்த பேச்சும், நிறைந்த செயலும் உடைய அவர் ஆங்கிலேயராக இருந்தாலும், 12 ஆண்டுகள் சமஸ்தானத்தின் முன்னேற்றத்திலும் சமஸ்தான மக்களின் நல்வாழ்விலும் மிகுந்த அக்கறையுடையவராக விளங்கினார். நன்றாகத் தமிழ் பேசக் கற்றுக் கொண்டிருந்த அவர், சமஸ்தான மக்களின் நண்பராகவே திகழ்ந்தார்.

டாட்டன்ஹாம் ( King ) ('ராஜா') என்று ஒரு நாய் வளர்த்தார். அவர், சமஸ்தானத்தின் திவானாகப் பொறுப்பேற்றதும், 'King' என்ற பெயரை 'Ring' என்று மாற்றி வைத்துவிட்டார்.

1946ல் அவர் தமது சொந்த நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே பெரிதும் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் அவர் புதுக்கோட்டைக்குத் திரும்பி வந்துவிட்டார். அப்போது, அவரது நண்பர்களிடம் 'உடலை இங்கே கிடத்துவதற்காகவே வந்தேன்'' என்று அவர் கூறியது நண்பர்கள் மனத்தை இளக வைத்துவிட்டது. அவர் இறக்கும் போது, தன் சொந்தப்பணத்தில் 6000 ரூபாயை மன்னரிடம் கொடுத்து, அதனை ஏழை எளியவர்களுக்காகப் பயன்படுத்தும்படி கூறினார். அதன்படி, முன்னாள் வழக்கறிஞரும், டாட்டன் ஹாமின் நண்பருமான திரு. நாகராஜ அய்யர், ஆண்டுதோறும் டிசம்பர் 13ல் (டாட்டன்ஹாம் மறைவு நாள்) தமது வீட்டிலேயே ஏழைகளுக்குச் சோறுபோடும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.



திரு. நாகராஜ அய்யர்

**சாமி பழனியப்பன்**



டாட்டன் ஹாமின் இறுதி ஊர்வலத்தில் கண்ட பெரும் மக்கள் கூட்டத்தைத் தாம் இதுவரை கண்டதில்லை என்கிறார் திரு. நாகராஜ அய்யர்.

புதுக்கோட்டையில் உள்ள, பிரபலமான பிராட்டஸ்டண்ட் தேவாலயத்தைச் சேர்ந்த புதைகுழியில் டாட்டன்ஹாமின் உடல் நல்அடக்கம் செய்யப்பட்டது. அவரது கல்லறையில் Write me as one that loves his fellowmen, என்று பொறிக்கப்பட்டிருப்பது, அவர் இந்த நாட்டுமக்களிடம் கொண்டிருந்த பேரன்பைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை!






# அவனிபோற்றும் அண்ணா பண்ணை

புதுக்கோட்டை - மணப்பாறை நெடுஞ்சாலையில் புதுக்கோட்டையிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் பாதுகாக்கப்பட்ட காட்டுப் பகுதியாக இருந்த ஒரு பெரும் நிலப்பரப்பு, 1967-ஆம் ஆண்டு முதல், சீர்திருத்தப்பட்டு 'அண்ணா பண்ணை' யாகத் திகழ்கிறது.

பாதுகாக்கப்பட்ட காடுகளில் முதல் கட்டமாக 1,012 ஏக்கர் பரப்பில் புல்டோசர் மூலம் காடுகள் அழிக்கப்பட்டுப் பண்படுத்தப்பட்டு, பயிரிட வகை







மக்கள் விரும்பும் மாபெரும் பண்ணையாக இது விளங்கி வருகிறது. **தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பண்ணைகளில், அண்ணா பண்ணைதான் மிகப் பெரிய பண்ணையாகும்.**

ஆரம்ப கட்டத்திலிருந்து நிலம் திருத்தி, பாசன வசதிகள் செய்து, சாலைகளும் அமைத்து, மண் வளம் பாதுகாத்து, தேவைக்கேற்ற இயந்திரச் சாதனங்களும் பெற்றுத்தர அரசு நிரந்தர மூலதனமாக இதுவரை சுமார் 27.87 இலட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளது. ஆனால், செலவு போக நிகர இலாபமாக இதுவரை 36.46 இலட்ச ரூபாய் சம்பாதித்துக் கொடுத்து தன்னிறைவு பெற்றுத் திகழ்வது இப்பண்ணையின் மிகச் சிறந்த சாதனையாகும்.

ஆண்டுதோறும் இலாபகரமாகச் செயல்படும் இப்பண்ணையில் ஏறக்குறைய ஐம்பது வகையான வெவ்வேறு பயிர் ரகங்கள் இலாபகரமாகப் பயிர் செய்யப்பட்டு வருவது இப்பண்ணையின் சிறப்பு அம்சமாகும். அரசுப் பண்ணைகளில் இவ்வளவு அதிகமான பயிர் வகைகள் சாகுபடி வேறு எங்குமில்லை.

நெல், சிறுதானிய வகைகள், காய்கறி மற்றும் பயிர் வகை போன்ற அனைத்து வகைப் பயிர்களையும் இங்கு சிறப்பாகப் பயிரிட இயலுகிறது. இது தவிர, மலைப் பிரதேசப் பயிர்களான உருளைக்கிழங்கு, முட்டைக் கோஸ், பூக்கோசு, பீட்ரூட் காரட், நூல்கோல் முதலியனவும் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டுள்ளது என்பது பலரையும் வியப்பில் ஆழ்த்தும்.

பலதரப்பட்ட விதைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும், இந்தியாவின் பல பகுதிகளுக்கும் - குறிப்பாக குஜராத், மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கும் வழங்கியதன் மூலம் அண்ணா பண்ணை - விவசாயிகள் கண்டு, கற்று, மகிழ்ந்து பயன்பெறும் ஓர் பயிற்சிக் களமாகவும் திகழ்கிறது.

விளை நிலம் முழுதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தோட்ட நிலங்களில் ஆண்டிற்கு மூன்று பயிர்களும், மானாவாரி நிலங்களில் இரு போகச் சாகுபடியும் இப்பண்ணையின் மற்றுமொரு சிறப்பு அம்சமாகும்.

இப்பண்ணை முக்கியமாக, புதிய வீரிய ஒட்டு சிறு தானிய விதைகள் உற்பத்திக்குத் தேவையான-தாயின விதைகளைப் பெருமளவில் விளைவித்து, தமிழகத்தின் எல்லா அரசுப் பண்ணைகளுக்கும், தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கி வருகிறது.

தக்காளி, வெண்டை, கத்தரி, கீரை, கொத்தவரை, மிளகாய், பீன்ஸ் போன்ற காய்கறிகளின் தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் எங்கும் விநியோகம் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் மூன்று இலட்சத்திற்கும் கூடுதல் மதிப்புள்ள பல்வேறு வகையான காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பல புதிய பயறு வகைகளை அறிமுகப்படுத்தி அவற்றின் விதைகளைப் பெருமளவில் வழங்கி தமிழ்நாடு பயறு உற்பத்தியில் தன்னிறைவு பெற













இப்பண்ணை சீரிய முறையில் உதவி வருகிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் துணை கொண்டு பயறு வகைகளின் கரு வித்துகள் விளைவிக்கப்படுகின்றன. பயறு வகைகளில் 'கரு வித்து' உற்பத்தி இப்பண்ணையின் பிறிதொரு சாதனையாகும். **வேறு அரசுப் பண்ணைகளில் இக் கருவித்துக்கள் உற்பத்தி செய்யும் பணி மேற் கொள்ளப்படவில்லை.**

பலதரப்பட்ட - ஆண் தன்மை இழந்த கம்பு இனங்களையும், மகரந்தம் அளிக்கும் இனங்களையும் இனக் கலப்புச் செய்து பல சோதனைகள் இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தாருடன் இணைந்து நடத்தி, இறுதியில், கே. எம். 1 மற்றும் கே. எம். 2 என்னும் இருவகை புதிய வீரிய ஒட்டுக் கம்பு ரகங்களைக் கண்டு பிடித்துத் தமிழக விவசாயிகளுக்கு அளித்துள்ளது இப்பண்ணையின் மிகப் பெரிய சாதனையாகும். இந்த இரு புதிய ஒட்டு ரகங்களும் 'பசுங் கதிர்' என்னும் மிகக் கொடிய நோயை எதிர்க்கும் திறன் படைத்தவையாகும்.

ஆறே மாதத்தில் பலன் தரக் கூடிய செடி முருங்கை என்று புதிய ரகத்தைத் தமிழ்நாட்டிற்குத் தந்துள்ளது இப்பண்ணை.

**இப்பண்ணையில் முதல் முதலாகக் கொண்டைக் கடலைச் சாகுபடி புகுத்தப்பட்டுள்ளது.** தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும் சரி, மத்திய மாவட்டங்களிலும் சரி ஏன், வட மாவட்டங்களிலும் கூட கொண்டைக் கடலைச் சாகுபடி இதுவரை புகுத்தப்படவில்லை. ஆனால் அண்ணா பண்ணையில் இப்பயிர் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டு, விவசாய மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. வயதோ 90 நாட்கள்தான். ஏக்கருக்குச் சுமார் 400 கிலோ வரை மகசூல் தரும் திறன் கொண்டுள்ள இப் புதிய பயிர், பெரிய அளவில் எல்லா மாவட்டங்களிலும் புகுத்தப்படுமாயின் கொண்டைக் கடலை உற்பத்தி கணிசமான அளவில் பெருகப் பெரியதொரு வாய்ப்பு காத்திருக்கிறது. குளிர் காலப் பயிரான இக்கொண்டைக் கடலை பனிக் காலத்தில் செழித்து வளர்கிறது. இப்பயிரைப் புதிதாகச் சாகுபடியில் புகுத்தி இலாபகரமாகப் பயிரிட்டு இப் பண்ணை மற்றுமொரு சாதனையைப் புரிந்துள்ளது.

பண்ணையில் மானாவாரி நிலப் பகுதிகளில் பெய்யும் மழை நீரை வீணாக்காமல் முற்றிலும் உபயோகப்படுத்தி, மண் அரிப்பைத் தடுத்து மழை நீர் வீணாகாமல் பராமரிக்கப்பட்டுப் பயிர் வளர்ச்சிக்கு உதவ ஏதுவாக 'அகலப்பாத்தி ஆழச்சால்' என்னும் புதிய முறை இப்பண்ணையில் கையாளப்பட்டு வருகிறது.

இப்பண்ணையில் விதை பதனிடுதலும், சுத்திகரித்தலும், மேற்கொள்ளப்பட்டுச் சிறப்புப் பணி நடைபெறுகிறது. சற்றேறத்தாழ ஆண்டிற்கு 300 டன் விதைகள் சுத்திகரிக்கப்படுகின்றன. இதற்கான இயந்திரச் சாதனங்களும், விதை சுத்திகரிப்பு நிலையமும் இப்பண்ணையில் நிறுவப்பட்டுள்ளன. திருச்சி, தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் பெருமளவில் இப்பண்ணையில் சுத்திகரிக்கப்பட்டு, தரமான விதைகள் தமிழ்நாடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையிலுள்ள வயலோகம், புல்வயல், விசலூர், நிலையப்பட்டி, குடுமியான்மலை போன்ற கிராமங்களிலிருந்தும் நாள் தோறும்சுமார் 120 பெண்களும் 70 ஆண்களும் சாகுபடிப் பணிகளுக்கு அமர்த்தப்படுகின்றனர். பண்ணை ஆரம்ப காலத்தில் 12 பெண்களும் 27 ஆண்களும்தான் பணி புரிந்தனர். தற்போது வேலை வாய்ப்பு, அதிகரிக்கப்பட்டு இப் பகுதி வாழ் மக்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று வருகின்றனர்.

தொழிலாளர்களின் வருங்கால நலனை முன்னிட்டு, தொழிலாளர்களின் சேமநிதித் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருவது இப்பண்ணை, விவசாயத் தொழிலாளர்களின் மேல் கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாகும்.

விவசாயச் சுற்றுலா என்றவுடன், விவசாயிகளும் மாணவர்களும் பிற அலுவலர்களும் முதற்கண் அண்ணா பண்ணையை மனத்தில் நிறுத்தித் திட்டம் தீட்டும் அளவில் இன்று இப் பண்ணை பெருமையடைந்திருக்கிறது என்பதே இதுவரையில் இங்கு வளர்ந்திருக்கிற வளர்ச்சிப் பணிகளுக்குப் போதுமான எடுத்துக்காட்டாகும்.





அண்ணா பண்ணை, மாநில அரசுப் பண்ணைகளில் தனிச் சிறப்பை இன்று அடைந்துள்ளதற்கு அதன் சாதனைகளே காரணமாகும். விவசாயிகளுக்கு ஒரு மாதிரிப் பண்ணையாகவும் திகழ்ந்து வருகின்றது. மாநிலத்திலுள்ள அரசு விவசாயப்பண்ணைகளுக்கெல்லாம் திறமையான உற்பத்திக்கும், நிருவாகத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளது. வீரிய ஒட்டு வித்துத் தயாரிப்பாளர்களுக்கு, தாய் விதை வழங்கும் தனிச் சிறப்புடைய பண்ணையாகவும் இருக்கிறது.

# இன்பச் செலவுக்கு ஏற்ற இடங்கள்

புதுக்கோட்டை மாவட்டம் தொன்மையான வரலாற்றுப் புகழ்மிக்கது. அங்குள்ள புராதனமான கோயில்கள், கோட்டைகள், சிற்பங்கள் முதலியன சுற்றுலாப் பயணிகளின் காட்சிக்கும் கருத்துக்கும் விருந்தாகும்.



அருங்காட்சியகம்: தமிழகத்தில் இரண்டாவதாகக் கருதப்படும் கவின்மிகு கலைக்கூடம்.



ஆவுடையார் கோவில்: கதை சொல்லும் சிற்பங்களும், புகழ்மிகு கொடுங்கையும் கொண்ட கலைக்கோவில்.



ஆவூர்: வீரமாமுனிவர் தங்கித் தமிழாய்ந்த புகழ்மிக்க மாதா கோயில்.



குடுமியான்மலை: இயற்கை எழில் கொழிக்கும் சிற்பங்களும், ஏழிசை நுணுக்கங்களைப் பற்றிய இசைக் கல்வெட்டும் கொண்ட எழில்மலை; அண்ணா பண்ணை அரியதொரு விருந்து.





கொடும்பாளூர்: தென்னிந்திய சிற்பக்கலையிலும் கோயில் கட்டடக் கலையிலும் உன்னத இடம் வகிக்கும் மூவர் கோயிலைக் கொண்டது மூதூர்.





சித்தன்னவாசல்: அழகொழுகும் வண்ண ஓவியங்களும் குடவரைக்கோயில்களும் கொண்ட தென்னகத்து அஜந்தா.



திருமயம்: 39.36 ஏக்கர் பரப்பில், ஏழு சுற்று மதில்களுடன் 1678-இல் கட்டப்பட்ட இக்கோட்டை, சிதைவுற்றிருந்தாலும் இன்பச் செலவுக்கு ஏற்ற இடம்.



விராலிமலை: அருணகிரிநாதரின் அழகொழுகும் பாடல் பெற்ற இத் திருத்தலம் 'மயில்கள் சரணாலய'மாக மலர்கிறது.

குன்னாண்டார் கோயில்: குடவரைக் கோயில்களும் தேர்போல் அமைக்கப்பட்ட நூற்றுக்கால் மண்டபமும் கொண்டு விளங்குவது.

நார்த்தாமலை: பல்லவர், சோழர் காலக் கட்டடக் கலையமைப்பில் அமைந்த விஜயாலய சோழீச்சுரம் இம் மலைமீது உள்ளது.

காட்டுபாவா தர்கா: திருமயம் வட்டத்தில் உள்ள சையது பாவா பக்ருதீன் அல்லியா என்னும் இந்தக் காட்டு பாவா தர்கா, வரலாற்றுப் புகழ்படைத்த பள்ளி வாசல்.

கோகர்ணீஸ்வரர் ஆலயம்: மகேந்திர வர்மன் காலத்துக் குடவரைக் கோயில்.

*With best compliments :*

**SRF**

**SRF INDUSTRIAL FABRICS**

Sales Office : 4, Promenade, TRICHY-620001
Tel : 29559 Tlx : 0455-273
Gram : INDFAB

Works : Viralimalai, 621316
Pudukottai Dist. Tel : 47/57

Regd. Office : "GOPALA", 25, Rajendra Place,
New Delhi-110008.

# வளநாடு கண்மாய் புதிய பாலம்



ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குச் சாலைப் போக்குவரத்து இன்றியமையாத தேவையாகும். விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட பெரும் பகுதி மக்கள் வாழும் கிராமப்புறங்களில் விளையும் பொருட்களை நகர்ப்பு அறங்காடி நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல, சாலை வசதி செய்து தருவது இன்றியமையாப் பணியாகும். சாலை அமைப்பு கிராம முன்னேற்றத்தின் ஆரம்பப் பணியாகும். பிற வளர்ச்சியெல்லாம் இதன் தொடர்பேயாகும். கிராம வளர்ச்சிக்கான உயிர்நாடி சாலை அமைப்பே. ஆகவே இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிராமச் சாலைத் திட்டங்கள் தீட்டப்பட்டு எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச்சாலை போடும் பணி சீரிய முறையில் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டம் வல்லத்திராகோட்டை அருகிலுள்ள வளநாடு கண்மாயில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள இப்பாலம் 1978-79ஆம் ஆண்டு இரண்டாவது பகுதி புறச்சாலைகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகும். இதற்கான அடிக்கல் நாட்டுவிழா 18.5.1978 அன்று நடைபெற்றது. 6 மீட்டர் நீளமுள்ள மூன்று கண்களைக் கொண்ட இப்பாலம் ரூ. 2.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் மேல்தளம் 7.5 மீட்டர் அகலம். ஆதலால் பேருந்துகள் போக்குவரத்துத் தடையின்றிச் செல்லலாம்.

பொதுப்பணித்துறையின் பராமரிப்பிலுள்ள இக் கண்மாயில் சாதாரணமாக அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை பாசனத்திற்காக நீர் தேக்கப்படுகிறது. இக் கண்மாயில் நீர் தேங்கியுள்ள காலங்களில் நேரிடையாக வல்லத்திராகோட்டைக்கோ, புதுக்கோட்டை அறந்தாங்கிச் சாலைக்கோ கிராம மக்களோ, வாகனங்களோ செல்லவியலாத நிலைமை யிருந்தது. அதுசமயம் திருவுடையாபட்டி, வாண்டான் கோட்டை வழியாக சுமார் 2 கி.மீ. தூரம் அதிகத் தொலைவு சென்று, சுற்றி வரவேண்டியிருந்தது. நீர் மட்டம் குறைந்த காலத்திலும் மிகவும் இன்னல்பட்டு சுமார் மூன்று அல்லது நான்கு அடி தேங்கியுள்ள நீரில் கண்மாயைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. கிராம் மக்கள் நலன் கருதியும் விவசாயப் பொருட்களின் துரிதப் போக்குவரத்திற்காகவும் இக்கண்மாயின் குறுக்கே பாலம் கட்டப்பட்டுள்ளது.

இப்பாலத் திறப்பு விழா 5.8.'79 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் உரையாற்றினார்.

பாலத்தினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜீ. ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

இப்பாலத்தைக் கட்டி முடித்ததனால் இப்பகுதி மக்களின் நீண்ட நாளைய தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது என்பதை பெருமையுடன் குறிப்பிட வேண்டும்.

## சமணர்கள் உறைவிடங்கள்



புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாகச் சமணர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை அங்குக் கிடைத்துள்ள சமணர் சிலைகள், கோயில்கள், கல்வெட்டுகள் உணர்ந்துகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் சமணர்கள் உருவங்கள் கிடைத்த இடங்களாவன.

1. தெம்பத்தூர்
2. புத்தம்பூர்
3. திருக்கோகர்ணம்
4. வல்லம்பட்டி
5. அன்னவாசல்
6. சித்தன்னவாசல்
7. வீரக்குடி
8. அம்மா சத்திரம்
9. திருப்பூர்
10. தெக்காட்டூர்
11. கன்னங்குடி
12. விரஹூர்
13. திருவெண்ணாயில்

# மருந்தகங்கள் பல மருத்துவமனைகள் ஆயின

புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக்கப்படுவதற்கு முன்னாலே போதுமான மருத்துவ வசதிகள் இருந்ததாகச் சொல்ல முடியாது. மருந்தகங்களும், மருத்துவமனைகளும் அங்கே மிகக் குறைந்த அளவிலேயே இயங்கி வந்தன. புதுக்கோட்டை தனி மாவட்டம் ஆன பின்னாலே மருந்தகங்கள் பல, மருத்துவமனைகள் ஆயின. மருத்துவமனைகள்யாவும்வசதியுடையவைகளாக்கப்பட்டன. புதிய பல மருந்தகங்களும், மருத்துவமனைகளும் உருவாக்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதிதாக-கோனாபட்டு, கோட்டைப்பட்டினம், அம்மாபட்டினம், மேற்பனைக்காடு, ஏம்பல், இராயவரம் ஆகிய் ஊர்களில் மருந்தகங்கள் துவக்கப்பட்டுள்ளன.

இராங்கியம் மருத்துவமனை, அரசால் ஏற்கப்பட்டு அரும்பணியாற்றி வருகிறது.

கந்தர்வகோட்டையிலும், கீரமங்கலத்திலும் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வந்த மருத்துவமனைகள் இப்போது அரசு மருந்தகங்களாக்கப்பட்டுள்ளன.

அறந்தாங்கி, ஆலங்குடி, கீரனூர், திருமயம் ஆகிய வட்டங்களில் (தாலுகா) உள்ள அரசு மருத்துவமனைகள் வகையுற இயங்கி வருகின்றன.

இவை தவிர-அரசினர் டாக்டர் முத்துலட்சுமி நினைவு தலைமை மருத்துவமனை, அரசினர் ராணி மகப்பேறு மருத்துவமனை ஆகியவையும் புதுக்கோட்டையில் நற்பணியாற்றி வருகின்றன.

இவைதவிர புதுக்கோட்டையில் அரசினர் மருத்துவமனைகள் 13, அரசினர் மருந்தகங்கள் 16, அரசினர் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் 2, அரசினர் ஆயுர்வேத மருந்தகம் ஒன்றும் இயங்கி வருகின்றன.

அரசினர் மருந்தகமொன்று மணல்மேல்குடியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

கீரமங்கலத்திலுள்ள அரசினர் மருந்தகம், பத்துப் படுக்கைகள் கொண்ட அரசினர் மருத்துவமனையாக ஆக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு, மருத்துவ சிறப்புப் பிரிவு, அறுவைச் சிகிச்சைச் சிறப்புப்பிரிவு, கண் சிறப்புப் பிரிவு, தோல் சிறப்புப் பிரிவு, காது-மூக்கு-தொண்டை சிறப்புப் பிரிவு, பால்வினைநோய் சிறப்புப் பிரிவு, பல் சிறப்புப் பிரிவு, மனநோய் சிறப்புப் பிரிவு, அரசு அலுவலர் சிறப்புப் பிரிவு, சித்த மருந்தகப் பிரிவு, ஓமியோபதி மருந்தகப் பிரிவு, நுண்கதிர்ப் பிரிவு, இரத்தம்-மலம் சோதனைப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, காசநோய் சிறப்புப் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு ஆகிய சிறப்புப் பகுதிகள் சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருகின்றன.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை மெய்ப்பிப்பதில் புதுக்கோட்டை மாவட்டம் புதுவேகத்தோடு செயல்பட்டு வருவது போற்றத்தக்கது; புகழத்தக்கது.

ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத் திடலில் நடைபெற்ற பெருவிளக்கப் பொருட்காட்சியில் பல்வேறு மூலிகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. திருப்புனவாசல் டாக்டர் எஸ். சந்திரசேகரன் பொது மக்களுக்கு மூலிகைகள் குறித்து விளக்குகிறார். சித்த மருத்துவ மனைகள் புதுக்கோட்டை, திருப்புனவாசல் ஆகிய இடங்களில் உள்ளன.



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

14. It is *unfortunate* that an occasion has arisen in this Court to hear a case of this nature. But at the same time the Court cannot take any action *which interferes* with the immunity which a member has been granted under Article 194 (2) of the Constitution merely because what he may have said is in violation of Article 211 of the Constitution. Was it not Voltaire who said like this "I do not agree with you but I will fight for upholding your right to disagree with me till the end of my life." In the same spirit, this Court which has a special obligation to uphold Article 194 (2) of the Constitution and the immunity guaranteed to the *members* of the Legislature there under, leaving it to them to uphold Article 211 of the Constitution in their deliberations. I am of the view that no *action* is called for in this case. The petition is dismissed". 8.

இதைவிட என்னால் இந்தப் பிரச்னையைத் தெளிவுபடுத்த இயலாது.

இதே மாதிரி 1970-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒரு வழக்கினை Tej Keran Vs, Sanjeeva Reddy and others-AIR 1970 SCP 1573 ஆராயவேண்டியிருந்தது. அவ்வழக்கில் பாராளுமன்றத்தில் பூரி சங்கராச்சாரியாரைப் பற்றி அவதூறாகப் பேசப்பட்டதாகக்கூறி அவரது சீடர்கள் பாராளுமன்றத் தலைவர் திரு. சஞ்சீவரெட்டி மீதும் உள்துறை அமைச்சர் திரு. ஒய்.பி.சவான் மீதும் மற்றும் சில உறுப்பினர்கள் மீதும் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பின் மீது பேசியதற்கான நடவடிக்கையின் மீது நீதிமன்றத்தில் இருபத்தி ஆறாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று வழக்குத் தொடரப் பெற்று டில்லி உயர்நீதி மன்றம் அவ்வாறான வழக்கு தொடர இயலாது என்று தள்ளுபடி செய்து அதன் மீது மேல் முறையீடாக உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கினைத்தள்ளுபடி செய்யும் வகையில் கீழ்க்கண்டவாறு 8வது பாராவில் கூறப்பட்டுள்ளது.

8. In our judgment it is not possible to read the *provisions* of the Article in the way suggested. The article means what it says in language which could not be plainer. The article confers immunity *inter alia* in respect of "anything said......in parliament". The word 'anything' is of the widest import and is equivalent to 'everything'. The only limitation arises from the words in Parliament which means during the sitting of Parliament and in the course of the business of Parliament. We are concerned only with speeches in Lok Sabha. Once it was proved that Parliament was sitting and its business was being transacted, anything said during the course of that business was immune *from* proceedings in any court. This immunity is not only complete but is as it should be. It is of the essence of Parliamentary system, of Government that people's representatives should be free to express themselves without fear of legal consequences. What they say is only subject to the discipline of the *rules* of Parliament, the good sense of the members and the control of proceedings by the Speaker. The Courts have no say in the matter and should *really* have none." 9.

இது மாநில அவைகளுக்கும் அவ்வாறே பொருந்தும்.

எனவே, இந்த நீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து தெரிவது என்னவென்றால் இரு அமைப்புகளும் — அதாவது நீதிமன்ற அமைப்புகளும் பேரவைகளும் ஒன்றுக்கொன்று மரியாதை கொடுப்பதோடு ஒன்றின் உரிமைகளை மற்றொன்று காப்பாற்ற வேண்டும். அவ்வாறு ஏதேனும் பேரவையில் தவறாக நடப்பினும் கூட நீதிமன்றங்கள் பேரவை நடவடிக்கைகள் மீது வழக்குகளை ஏற்றுக்கொள்வது முறையாகாது என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

2.2.1983 அன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது நீதிமன்றங்கள் இயங்கும் விதத்தைத்தான் குறைபட்டுக் கொண்டுள்ளாரே அன்றி நீதிபதிகள் அவர்களது கடமையாற்றும் நடத்தையைப் பற்றிக் குறை கூறியதாக எடுத்துக்கொள்ள இயலாது.

உயர்நீதி மன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் மற்ற இதர இனங்களின் செலவுகள் எல்லாம் இந்த அவைதான் வழங்குகிறது. அம்மாதிரி வழங்கினாலும் அவைகள் சாட்டப்பட்ட (Charged) தொகை ஆகும். எனவே அவைகளை, அவை நிராகரிக்க உரிமை

8. 14. இந்நீதிமன்றம் இம்மாதிரியான ஒரு வழக்கை விசாரிக்க நேர்ந்தது மிகவும் துரதிருஷ்டவசமானதாகும். அதே சமயத்தில்—211-வது பிரிவு மீறப்பட்டது என்ற காரணத்தால்—194-வது பிரிவு 2-வது உட்பிரிவில் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பில் நீதிமன்றம் தலையிடுவது முறையற்றது. வால்டேர் என்பவர் இம்மாதிரிக் கூறினார்: ''உன்னுடைய கருத்துக்களோடு நான் ஒன்றிப் போக இயலவில்லை. ஆனால் என்னுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்துச் சொல்வதற்கு உனக்கு உரிமை உண்டு என்பதை நிலை நாட்டுவதற்காக என்னுடைய வாழ்நாள் இறுதிவரைப் போராடுவேன்.''—அதே உணர்வோடு அரசியலமைப்புச் சட்டத்தின் 194-வது பிரிவு 2-வது உட்பிரிவை நிலைநாட்டவும் அதன்படி உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பது இந்த நீதிமன்றத்தின் கடமை. அதே மாதிரி 211-வது பிரிவில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் பாதிக்கப்படாத அளவில் பாதுகாக்கும் பொறுப்பினை அந்த அமைப்புக்கு விட்டுவிடலாம். இப்பிரச்சினையில் எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்று நான் கருதுவதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.''

9. 8. எங்களுடைய கருத்தில் இந்தப் பிரிவை அவர்கள் சொல்வதற்கு ஏற்ப வியாக்கியானம் செய்வது இயலாது. இப்பிரிவின் வாசகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை தற்போது இருப்பதைவிட எளிமையாகவும், நேர்முகமாகவும் கூற இயலாது. இப்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பாராளுமன்றத்தில் கூறப்பட்ட அனைத்திற்கும் பொருந்துகிறது. 'அனைத்திற்கும்' என்ற சொல் பரந்த பொருளுடன் 'எல்லாவற்றிற்கும்' என்பதற்குச் சமம். ஒரே ஒரு கட்டுப்பாடு என்னவென்றால் அது பாராளுமன்றத்திற்குள் நடந்ததாக இருக்க வேண்டும். அது பாராளுமன்றம் கூடும் பொழுதும் மேலும் பாராளுமன்ற அலுவலிலே கூறியதாக அல்லது நடந்ததாக இருக்க வேண்டும். இங்கே எங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அப்பேச்சு லோக் சபாவில் பேசியதாக இருக்க வேண்டும். பாராளுமன்றம் நடப்பிலிருந்து, பாராளுமன்ற அலுவலிலே பேசப்பட்டது என்று ஏற்படுமேயானால் அவை நீதிமன்றத்தின் நடவடிக்கைகளிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கப்படும். இப்பாதுகாப்பு முழுமையாக இருப்பதுதான் சரியானதாகும். இப்பாதுகாப்புத்தான் பாராளுமன்ற அமைப்பின் முக்கிய மையக் கருத்தாகும். மேலும் மக்கள் பிரதிநிதிகள் எவ்வித அச்சமோ அல்லது சட்ட பின் விளைவுகள் பற்றிய உணர்வோ இல்லாது தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்க வேண்டியது பாராளுமன்ற முறையின் சாராம்சம் ஆகும். அவர்கள் கூறுவது பாராளுமன்ற விதிமுறைகளுக்கும் அதன் கட்டுக்கோப்புக்கும் மட்டுமே தான் உட்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் தங்களது நல்லெண்ணத்திற்கும் பேரவைத் தலைவரின் ஆளுகைக்கும் மட்டுமே உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அதில் நீதிமன்றங்கள் எவ்விதமாகவும் தலையிட முடியாது. அவ்வாறு தலையிடுவதற்கு வழியேதுமில்லாதிருப்பது தான் நன்றாகும்.

இல்லை என்றாலும், அவ்வினங்களைப் பற்றி
பேசுவதற்கு இந்த அவைக்கு முழு உரிமை
யுண்டு. ஆயினும் இவைகள் இரண்டிலும் சிறி
தும் அத்துமீறி விடக்கூடாது என்பதற்காகவே
விவாதங்கள் முழுமையாகத் தவிர்க்கப்படு
கின்றன. அவ்வாறு தவிர்க்கப்படுவது இப்
பேரவை தனக்குத் தானே கட்டுப்படுத்திக்
கொள்கிறதே அன்றி அவற்றைப் பற்றி வரம்
புகளுக்கு உட்பட்டு விவாதிக்க உரிமையில்லை
என்ற கருத்தின் அடிப்படையில் இல்லை என்
பதை மட்டும் நான் இத்தருணத்தில் தெளிவு
படுத்த விரும்புகிறேன்.

எனவேதான் பாராளுமன்றத்தில் 1973-
ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தலைமை
நீதிபதியை நியமிப்பதில் பிரச்சினை எழுந்த
போது அந்த நியமனத்தைப் பற்றி 1973-ஆம்
ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி விரிவாக விவா
தம் நடைபெற்றது. அதில் கூறியவற்றைப்
பார்த்தால் பல்வேறு உறுப்பினர்கள் நீதி
மன்றங்கள் எவ்வாறு பாராளுமன்றம் இயற்
றும் சமுதாய நலச் சட்டங்களையும் மற்றவற்
றையும் முட்டுக்கட்டை போடும்வகையில்
இயங்குகிறது என்பதைப் பற்றிப் பேசியுள்
ளார்கள். அவ்விவாதத்தில் பங்குகொண்ட
திரு எச்.என்.முகர்ஜி அவர்கள் பின்வருமாறு
கூறியுள்ளார்:

The alacrity with which the Courts admit writ petitions against Government measures of take-over, the way dishonest employers are treated leniently for attacking the workers and are given back factories inspite of proved fraud and misdemeanour of different descriptions, the way their dishonesty is sugarcoated when their cases are pleaded by black money-grabbing and eminent jurists-some are occasionally found even in this House all these vividly show that atlast class policies are being cleverly quoted in velvet legal phrases and are being assisted by the judicial process as is administered in our country to-day (Col. 362-363 LS Debates May 2 1973) 10.

மேலும் அப்போதிருந்த எஃகு, இரும்பு,
சுரங்க அமைச்சர் காலஞ்சென்ற மோகன்
குமாரமங்கலம் அவர்கள் அரசின் கொள்கை
களும், நடவடிக்கைகளும் எவ்வாறு தடை
செய்யப்படுகின்றன என்பதைக் குறித்து கீழ்க்
கண்டவாறு பாராளுமன்றத்தில் கருத்தைத்
தெரிவித்துள்ளார்கள்:

"......Let us not forget the last six years of background of what can only be discribed as a confrontation between Parliament and the Government on the one hand and the Court on the other. I do not think we should forget that fact. Some Hon. Members may feel that the Court was right and we were wrong. That is not the point. The point is that there has been an atmosphere of confrontation. There has been an atmosphere in which the Court looked at things in one way and we looked in another way........" Col. 370)

"Therefore the experience in the last six years has been an unfortunate one ; in these six years we have had this conflict throughout step by step in which there are two aspects which we have to bear in mind; one the uncertainty which was introduced into the very interpretation of the Constitution, so that we did not know whether tomorrow something else we did would or would not be set aside even where we proceeded on the very basis of the judgments of the Court itself; and secondly, major decisions of the Government and of Parliament in relation to major economic matters being set aside by the Court one after the other........"(Col. 372)

அம்மாதிரியே அமெரிக்காவில் ரூஸ்வெல்ட்
ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ
ருடைய New deal சட்ட அமைப்புகள்
அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் தகர்த்
தெறியப்பட்டன. இது குறித்து அமெரிக்க
ஜனாதிபதி Franklin D Roosewelt மார்ச்
9,1937-ல் கூறியதை நினைவுபடுத்துவது
ஏற்றதாகயிருக்கும்:

" When the Congress has sought to stabilise national agriculture to improve the conditions of labour, to safeguard business against unfair competition, to protect our national resources and in many other ways to serve our clear national needs, the majority of the Court has been assuming the power to pass on the wisdom of these Acts of Congress and to approve or disapprove the public policy written into these laws......The court in addition to the proper use of its judicial functions has improperly set itself as a Third House of the Congress a super legislature as one of the justices has called it-reading into the Constitution words and implications which were not there and which were never intended to be there. We have therefore reached the point as a Nation, where we must take action to save the constitution from the Court and the Court from itself......We want a Supreme Court which will do justice under the Constitution not over it. In our courts we want a government of laws and not of men."

எனவே உச்ச நீதி மன்றங்களின் ஆணை
களின் விளைவுகளைப் பற்றியோ அல்லது
இயங்கும் முறைகளைப் பற்றியோ பேரவை
யில் பேச உரிமையுண்டு. அனுமதிப்பதும்
அனுமதிக்காததும் பேரவைத் தலைவர் அவர்
களைப் பொறுத்ததே அன்றி அவைகளைப்
பற்றி எந்த நீதி மன்றத்திலும் எவ்வித நட
வடிக்கையும் எடுக்க இயலாது. மேலும் பேர
வையில் பேசப்பட்ட பேச்சுக்காக ஒரு உறுப்
பினர் மீது எந்தவித நீதி மன்றத்திலும்
வழக்கு தொடர இயலாது என்றால் அவ்வாறு
பேசப்பட்ட பேச்சுக்கு அரசியலமைப்புச் சட்
டம் 211-வது விதியின் படியும் வேறு விதி
களையும் மீறப்பட்டது என்று கூறி ஒரு
அமைச்சர் அல்லது முதலமைச்சர் பதவி ஏற்
கும்போது அரசியலமைப்புச் சட்டத்தின்படி
நடப்பேன் என்றும் பாதுகாப்பேன் என்றும்
எடுத்த உறுதிமொழிக்கு மாறானது என்று
மறைமுகமாக எவ்வித நடவடிக்கையும்
எடுக்க இயலாது. எவ்வாறு அமைச்சர்கள்
அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்று
வதற்கும் பாதுகாப்பதற்கும் உறுதிமொழி
எடுத்துக் கொள்கிறார்களோ அவ்வாறே
உயர் நீதிமன்ற - உச்சநீதிமன்ற நீதிபதிகளும்
உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்.
எந்த உறுதிமொழியைக் காரணம் காட்டி
முதலமைச்சர் பதவி வகிக்கத் தகுதி இழந்த
வராகின்றார் என்று கூறப்படுகிறதோ அம்
மாதிரியே இப்பேரவைக்கு அரசியலமைப்புச்
சட்டத்தினால் கொடுக்கப்பட்ட உரிமைக
ளான 194-வது விதியின் 2-வது உட்பிரிவில்
உள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நிலை
நாட்டுவதற்கும் நீதிபதிகள் எடுத்துக்கொண்ட
உறுதிமொழிக்கேற்ப அவைகளை நீதிமன்றங்
கள் நிலைநாட்டவேண்டும், பாதுகாக்கவேண்
டும். எனவே எவரேனும் ஒருவர் நீதிமன்றங்
களில் இம்மாதிரி பிரச்சினைகளில் அணுகும்
போது அப்பொருள் பேரவையில் பேசப்
பட்டது என்றோ அல்லது பேரவை நடவ
டிக்கை என்றோ நீதிமன்றத்திற்குத் தெரி
யுமே ஆனால் உடனடியாக அந்த
நீதிமன்றங்கள் இப்பேரவை உறுப்பினர்களது
உரிமைகளுக்கு எதிராகப் பயன்படுத்த அனு
மதிக்காது வழக்கினை முதல் கட்டத்திலேயே
நிராகரிக்கவேண்டும். அவ்வாறுதான் 1979-
ஆம் ஆண்டு கர்நாடக நீதிமன்றத்தில் திரு
சுப்பையா என்பவர் தொடுத்த வழக்கின் மீது
தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்
வதன்மூலம் நீதிமன்றங்கள் - சட்டமன்றங்கள்
ஒன்றின் மீது மற்றொன்றுக்கு உள்ள மரி
யாதையும் சகிப்புத் தன்மையும் வளர்வ
தோடு மக்களிடையே இரு அமைப்புகளுக்
கும் உள்ள மரியாதையும் மதிப்பும் உயரும்.

அவ்வாறன்றி இரு அமைப்புகளும் ஒன்றோ
டொன்று மோதல் கொள்கையைக் கையாளு
மேயானால் அதனால் இரு அமைப்புகளுக்கு
முள்ள மரியாதையும் மதிப்பும் மக்களிடையே
மட்டுப்படும் என்பதை நான் கூறவேண்டிய
தில்லை. இவைகள் எல்லாம் நீதிமன்றங்களுக்
குத் தெரிந்திருந்தாலும் அவ்வப்போது பேர
வைக்கு உரிமைகள் உள்ளனவா என்ற பிரச்
சினைகளை ஆய்வதற்குச் சில வழக்குகள் எடுத்
துக் கொள்ளப்படுவது வருந்தத் தக்கதாகும்.

முதல் அமைச்சர் மீது தொடுக்கப்பட்ட
வழக்கில் இப்பேரவையில் அவர் பேசிய பேச்சு
என்னைப் பொறுத்தமட்டில் அது அரசியல
மைப்புச் சட்டம் 211-வது பிரிவை மீறுவதாக
இல்லையென்றாலும் - அவ்வாறு மீறுவதாக
இருப்பினும் கூட அவர் மீது எந்த நீதிமன்றத்
திலும் நடவடிக்கை எடுப்பது அரசியல் சட்
டத்திற்கு விரோதமானது. இந்த அவையின்
உரிமைகளைப் பாதிப்பதோடு அவையைத்
துச்சமாக மதித்த குற்றத்திற்குச் சம்மந்தப்
பட்டவர்கள் ஆளாவார்கள்.

மாநில சட்டமன்றம் அல்லது பாராளு
மன்றம் ஒரு சட்டத்தை இயற்றி அது இந்
திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முர
ணானது, எனவே, அந்தச் சட்டம் செல்லுபடி
யாகாது என்று ஒரு நீதிமன்றமாவது தீர்ப்
பளித்தால் அதன்பின் அந்தச் சட்டத்தினை
எந்தச் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றம்
இயற்றியதோ அது அரசியலமைப்புச் சட்டத்
தினை மீறியதினால் சட்டமன்ற உறுப்பினர்
கள் பதவிப் பிரமாணத்தில் அரசியல் சட்ட
டத்தை நிலைநாட்டுவதற்குப் பிரமாணம்
எடுத்துக் கொண்டதிலிருந்து தவறி
விட்டார்கள். எனவே அவர்கள் எல்லாம்
மன்ற உறுப்பினர்களாக இயங்குவதற்கு
என்ன உரிமை இருக்கிறது என்று கேட்க
ஆரம்பித்தால் என்ன நிலை ஏற்படுமோ அந்த
நிலைதான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்
தின் 211-வது பிரிவினை மீறியதற்காக, மீறி
யது என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டா
லும் கூட, முதலமைச்சர் பதவி வகிக்கத்
தகுதியில்லை என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

மேலும் நான் ஏற்கெனவே 30.3.1983
அன்று கூறியவாறு அமைச்சரவை இந்தப்
பேரவையின் நம்பிக்கையும் ஆதரவும் இருக்
கும்வரை பதவி வகிக்கலாமே அன்றி, அரசியல்
சட்டத்தை மீறியகுற்றத்திற்காகப்பதவி விலக
வேண்டுமென்று நீதிமன்றங்கள் பேரவையாக
மாறினாலன்றி இயலாது. எனவே, இம்மாதி
ரியான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்திலும்
மற்ற பேரவைகளிலும் கையாளப்படும் மரபு
களுக்கும் மன்ற உரிமைகளுக்கும் ஏற்ப
முதல்வர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி
வழக்கினை வாதாடக்கூடாது என்று
தீர்ப்பளிக்கிறேன். ஆனால் அரசின்
சார்பில் அரசின் வழக்கறிஞர்கள் நீதி
மன்றத்தில் சட்டமன்ற அவைகளுக்குள்ள
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்
கப்பட்டுள்ள தனி உரிமைகளை நீதிமன்றங்
களுக்கு எடுத்துரைத்து முதலமைச்சர் மீதுள்ள
வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று
நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கலாம்.

10. ரிட் மனுக்கள் நீதிமன்றங்கள் அரசின் செயல்களுக்கு எதிராக சர்வசாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தொழிலாளர்களை அடக்கியாளும் நாணயமற்ற தொழிலதிபர்கள் தாராள மனப்பான்மையோடு நடத்தப்படுவதும் தொழில் அமைப்புகளில் அவர்கள் செய்த வெவ்வேறு பித்தலாட்டங்களும் மோசடிகளும் நிரூபிக்கப்பட்டிருப்பினும் தொழிற்சாலைகள் மீண்டும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் நிலை இருக்கின்றது. அவர்களது நாணயமற்ற நடத்தைகளுக்குச் சர்க்கரை பாகு பூசப்படுகிறது. மேலும் அவர்கள் வழக்குகளில் கள்ள நாணய ஆசைகொண்ட பெயர் பெற்ற வழக்கறிஞர்களால்—சில சமயங்களில் இந்த அவையிலேகூட இருக்கிறார்கள்—வாதாடப்படுகிறது. இதனால் என்ன தெரிகிறது என்றால் வகுப்புவாதங்கள் எவ்வாறு மென்மையான சட்ட நுணுக்கங்கள் கொண்டவார்த்தைகளால் பூசி மெழுகப்படுகின்றன என்பதும் நீதி நிர்வாகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதும் தெரிகிறது.

11. "......கடந்த ஆறு ஆண்டுகளில் பின்னணியை நாம் மறந்துவிட வேண்டாம். அப்பின்னணி பாராளுமன்றமும் அரசும் ஒரு பக்கமாகவும், நீதிமன்றங்கள் மற்றொரு பக்கமுமாக இருந்து எதிரும்புதிருமாக மோதல் கொள்கையை அனுசரித்து வருகின்றன. இதை நாம் மறக்கக் கூடாது. சில உறுப்பினர்கள் நீதிமன்றங்கள் செய்வது சரியென்றும் நாம் செய்வது தவறு என்றும் சொல்லலாம். ஆனால் அதுவல்ல பிரச்சினை. பிரச்சினை என்னவென்றால் இரு அமைப்புகளும் ஒரு மோதல் சூழ்நிலையிலே எதிரும்புதிருமாக உள்ளதால் நீதிமன்றங்கள் ஒரு கண்ணோட்டத்துடனும் நாம் வேறு ஒரு கண்ணோட்டத்துடனும் பிரச்சினைகளை அணுகுகிறோம்.

எனவே டந்த 6 ஆண்டுகளின் அனுபவம் மிகவும் வருந்தத்தக்க ஒன்று. இந்த ஆறு வருடங்களில் இம்முரண்பாடு படிப்படியாக வளர்ந்துகொண்டே வந்துள்ளது. அதில் இரண்டு அம்சங்களை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஒன்று, அரசியலமைப்புச் சட்டத்தில் வியாக்கியானம் செய்வதில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மை; நாம் செயல்படுவது சரியா அல்லவா என்று நாளை ஏதேனும் நிலையற்ற தன்மை ஏற்படுமா என்று சொல்ல இயலாத நிலை இருக்கிறது. நம்முடைய செயல்கள் ஏற்கப்படுமா அல்லது நிராகரிக்கப்படுமா என்ற சூழ்நிலை ஒவ்வொரு கட்டத்திலும் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின்படி நீடிப்பினும் இந்த நிலையற்ற தன்மை படிப்படியாக வளர்ந்துகொண்டே வருகிறது. இரண்டாவதாக, பாராளுமன்றமும் அரசும் சேர்ந்து எடுக்கிற முக்கிய பொருளாதார முடிவுகள் நீதிமன்றங்களால் ஒன்றன்பின் ஒன்றாக தகர்த்தெறியப்படுகின்றன.

12. "நாட்டில் வேளாண்மை, தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்துதல், வணிகத்தில் நேர்மையற்ற போட்டியிலிருந்து பாதுகாத்தல், நமது தேசிய சொத்துக்களைப் பாதுகாத்தல், மற்றும் வேறு வகைகளில் நம் தேசத்தை மேம்படுத்தக் கூடிய தேவைகளில் நீதிமன்றத்தில் பெரும்பான்மையோர் இப்பொருள் பற்றி உள்ள சட்டங்களில் உள்ள விவேகத்தை காங்கிரசினால் ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக் கொள்ளாதது......நீதிமன்றங்கள் இயல்பாக சரியான முறையில் தங்களது நீதி அலுவல்களை பயன்படுத்துவதோடு தன்னை காங்கிரசின் 3-வது அணியாக மாற்றி கொண்டு பேரவைக்கும் மேலான பேரவை என்று—ஒரு நீதிபதி கூறும் வகையில்—அமைத்துக் கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லாதவைகளைப் பேசுவது நினைத்துக்கூட பார்க்காதபடி கேள்விகளை எல்லாம் எழுப்பும்படியான வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. நமது தேசத்தில் நாம் நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தை, நீதிமன்றங்களை அவைகளிடமிருந்தேகூட காப்பாற்ற வேண்டிய ஒரு கட்டத்திற்கு வந்துவிட்டோம். உச்ச நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நீதியை வழங்க வேண்டுமே அன்றி, அதற்குப் புறம்பாக வழங்க இயலாது. நமது நீதிமன்றம் ஆணைகளுக்கு உட்பட்ட அரசை விரும்புகிறதே அன்றி சட்டத்தினால் அமைக்கப்பட்ட அரசை விரும்புகிறதே அன்றி மனிதர்களை அல்ல.

அமோக விளைச்சலுக்கு !!!




ராஜா

உரங்கள்

தயாரிப்பாளர்கள் :

குரோவெல் பெர்டிலைசர்ஸ்,

புதுக்கோட்டை.

Phone : Offi. : 2955, 2655; Fac. : 2712



Phone : {Off : 2752
Res : 2669

**Krishna Fertilizer Company**

சங்கு
KFC
SANGU

**SANGU BRAND MIXTURE MANUFACTURER**

*Office* :
2402, SOUTH MAIN STREET,
PUDUKKOTTAI - 1.

*Factory* :
1924, PUDUTHERU, MAIN ROAD
PUDUKKOTTAI - 2.


சென்னைத்தொழிலாளர் சங்கத்தின் தலைவராக திரு. வாடியாவும் துணைத் தலைவராக திரு.வி.க.வும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆசியாவிலேயே தொழிலாளர்களுக்கென்று முதன் முதலில் தொழிற்சங்கம் கண்ட, பெருமைக்கும் சிறப்பிற்கும் உரியவர் நமது திரு.வி.க. இவரது முயற்சியால் சென்னையில் துவங்கிய இப்பணி வெளியூர்களிலும் தொடர்ந்தது. எம்.அண்டு.எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், மின்சாரத் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், நெசவுத் தொழிலாளர் சங்கம், முதலிய பல சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இங்கு எழுந்த தொழிலாளர் எழுச்சி இந்தியாவின் பல பகுதியிலும் பரவியது. அங்கும் தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1920ஆம் ஆண்டு தொழிலாளர் மத்திய சங்கம் அமைக்கப்பட்டபோது திரு.வி.க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கவிக்குயில் சரோஜினியின் தங்கை மிருணாளினி அதன் செயலாளராகப் பணியாற்றினார். அப்போது ஆளுநராக இருந்த லார்டு வில்லிங்டன், தொழிலாளர் இயக்கம் எழுச்சி பெறுவதைக் கண்டு அஞ்சினார்.

*சென்ற இதழ் தொடர்ச்சி*

இந்திய நாட்டில் தொழிலாளர்களின் நலனில் முதன் முதலில் முழுமையாக நாட்டம் செலுத்திய பெருமகனார் திரு.வி.க. ஆவார். செல்வம் தொழிலதிபர்களிடம் பெருகுவதும், உழைக்கும் தொழிலாளர்களிடம் அருகுவதும், ஒருடம்பில் ஒரு பக்கம் பருத்துமற்றொருபக்கம்சூம்புவது போல், நாட்டில் தீங்கை விளைவிக்குமென்பதைத் திரு. வி. க. விளக்கி விளம்பி வந்தார். தொழிலாளர்கள் கூலிகளாய் உழைத்துச் சம்பளம் பெறும் நிலை மாறி, தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும் பொருளாதார உரிமை அளிக்கப்பட வேண்டும்; தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் தங்களுக்கும் உரிமையுண்டு என்ற உணர்வு உருவானால், நாட்டில் தொழிலாளர் உயர்வு பெறுவர். நலம் வளரும். இக்குறிக்கோளை எய்திடத் தொழிலாளர் கிளர்ச்சியும் செய்யலாம் என்று கருதினார் திரு.வி.க. இலக்கியங்களை ஆய்ந்த - தமிழ் அறிவு செறிந்த தமிழ்த் தென்றல், தொழிலாளர் நலனில் நாட்டம் கொண்டு தொழிலாளர் கிளர்ச்சியில் புயலாகக் காட்சியளித்தார். தொழிலாளர் இயக்கத்தின் தந்தை திரு.வி.க. என்பதை தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் ஒப்பிப் போற்றுதல் உண்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

பொருட்படுத்தாது தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்ட மாமனிதர் திரு.வி.க. தொழிலாளர் கூட்டங்களுக்குச் செல்லும்போது தானே செலவு செய்து அருஞ்சொற்பெருக்கு ஆற்றித் திரும்புவார். பயன்கருதாத தொண்டு அவருடையது.

டாக்டர் மு.வரதராஜன் ஒரு நாள் மாலை சாது அச்சுக்கூடத்திற்குத் தமிழ் முனிவரைக் காண வருகிறார்.

''பெரம்பூர் போகவேண்டும். தொழிலாளர் சங்கக் கூட்டம் இருக்கிறது. நேரம் ஆகிறது. போய்க்கொண்டே பேசலாம்'' என்றார் திரு.வி.க; மு.வ.வும் உடன் சென்றார். திரு.வி.க. யாரையோ எதிர்பார்த்து வாசல் பக்கமாக வந்தார். தோட்டத்திலிருந்து திரு.வி.க.வின் தமையனார் பரபரப்பாக வந்தார். வந்ததும் தம்பியாரைப் பார்த்து ''என்னைத் தேடிக் கொண்டிருக்கிறாயா? எங்காவது கூட்டமா?'' என்றார்.

''பெரம்பூர் தொழிலாளர் சங்கம்'' என்றார் திரு.வி.க.

தமையனார், இரண்டு ரூபாய் எடுத்துவந்து தம்பியாரின் கையில் கொடுத்தார். திரு.வி.க.வும், மு.வ.வும் பேருந்துக்கு வந்து காத்து நின்று, பெரம்பூர் சென்றனர். அப்போது மு.வ., திரு.வி.க விடம் பணிவுடன் கேட்டாராம்.



# தமிழ் முனிவர் திரு.வி.க


எஸ்.டி.காசிராஜன். இ.ஆ.ப.,
இயக்குநர்,
தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்புத்துறை


தொழிற்சாலை வேலை நிறுத்தம் நடைபெற்ற காலத்தில் திரு. வி. க. வெண்குதிரை பூட்டிய வண்டியொன்றை வாடகைக்கு எடுத்துச் சென்னை நகரைச் சுற்றிவந்து, கண்துஞ்சாது, பசி நோக்காது, தொழிலாளர் நடப்புகளைக் கண்டறிந்து வந்தார். தன்னுடல் நிலை குன்றி வருவதையும்

''உங்களைப் போல் உள்ள தலைவர்கள் பஸ்ஸுக்குக் காத்திருந்து போவதில் காலம் வீணாகிறது'' என்றார்.

''என்ன செய்யலாம். நான் ஏழை. ஏழைகளுக்காகத் தொண்டு செய்கிறவன். ஏழ்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும். எனக்கு இதுவே போதும்'' என்றார் திரு.

வி.க. நின்றார் மு.வ., மேற்கொண்டு பேசமுடியாமல். பின்னர் இவர்கள் ஏறிச் சென்ற பேருந்து பெரியமேட்டைக் கடக்கும்போது திரு.வி.க.வின் முகத்தைப் பார்த்து ''உங்கள் உடம்புக்கு இப்படிப் பயணம் செய்வது நல்லது அல்ல'' என்றார் மு.வ.

''மற்றவர்களைப் போல் வாழ்ந்து - மற்றவர்களுக்காக வாழ்ந்து செத்துப்போவதில்தான் உண்மையான அமைதி இருக்கிறது. அதுதான் உண்மையான வாழ்க்கை'' என்றார் திரு.வி.க.

மற்றவர்களுக்காக வாழ்தல் என்ற காந்தியடிகளின் தத்துவம் திரு.வி.க வின் வாழ்க்கையில் ஊறிப்போயிற்று. காந்தியடிகள் முழங்காலுக்கு மேல் உடுத்து, சட்டை அணியாமல் அருந்தொண்டாற்றி, எளிய வாழ்வு நடத்தியதுபோல் திரு.வி.க. தன் வாழ்நாள் எல்லாம் பிறர்நலம் நாடி உழைத்தார். ஓய்வு ஒழிவின்றி உழைத்தார்.

*1908*ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட கதிரைவேற் பிள்ளை சரித்திரம் தொடங்கி *1953*ஆம் ஆண்டு வாழ்வின் இறுதிக் காலத்தில் வெளிவந்த 'வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்' வரையில் ஐம்பத்து ஐந்து நூல்கள் வெளியிட்ட பெருமைக்குரிய தமிழ்ச்சான்றோர் திரு.வி.க. சைவசித்தாந்தம் பற்றிய வாழ்க்கை நெறிக்கு வழிகாட்டும் நெஞ்சைத் தொடும் நூல்களும் தமிழகத்தின் தொன்மைச் சிறப்பும் இன்றைய நிலையும் எடுத்துக் காட்டும் செந்தமிழ்த் தேன் சிந்தும் சீரிய படைப்புகளும், பெண்ணின் பெருமை கூறும் உயரிய கருத்துக் கருவூலமும் அவர் யாத்து, என்றும் அழியாத தன்மை பெற்றுள்ளார். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களை யாத்த வள்ளுவன் தன்னையும், பன்னீராயிரம் பாடல்களைப் பாடிய கம்பநாட்டாழ்வாரையும் நினைவில் வைத்துப் போற்றுவது போன்றே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறப்பாடலை நல்கிய கணியன் பூங்குன்றனாரையும் மறவாது போற்றுகின்றோம். தமிழ்ச் சான்றோர்கள் அளித்த சிறப்புமிக்க இலக்கியக் கருவூலங்களைத் தமிழகம் என்றென்றும் கண்ணெனப் போற்றத் தவறுவதில்லை. தமிழ்த் தென்றலின் இலக்கியப் பெட்டகங்கள், தமிழர்களின் உள்ளத்தில் இன்றும், வருங்காலத்திலும் நின்று நிலைபெற்றிலங்கும் பெற்றி பெற்றவை; அவர் யாத்த கவிதைகளும் சுவையும் பயனும் மிக்கவை.

பரந்த நோக்கம் கொண்ட தமிழ்ச் சான்றோரான இவர், உலகில் பல்வேறு தன்மைகளை, வாழ்வின் பல்வேறு கூறுகளை, ஒழுக்க நெறிகளை, உய்யும் வழிகளை நமக்கு எடுத்துச் சொல்லியுள்ளார். அவர் தொட்டுக்காட்டாத கருத்து இல்லையென்று இயம்பிடலாம்.



## கோழி வளர்ச்சி ஆய்வு நிலையம்

**புதுக்கோட்டையில் கோழி வளர்ச்சி ஆய்வு நிலையம் ஒன்று தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ளது.**

**பல்வேறு வகையான ஆய்வுக் கூடங்கள் இங்கு அமைக்கப்பட உள்ளன. கோழி வளர்ப்புக் குறித்து இங்கு இலவச ஆலோசனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

தேவை எது?-கேட்கிறார் திரு.வி.க; அவரே பதில் பகர்கிறார்.

''வறுமை செல்வம்
இரண்டும் அற்ற
வாழ்க்கை தேவை;
வாழ்த்துக அதனை''

இஃது அவருடைய நோக்கு. தேவை எது என்றால்-செல்வம் நிறைந்த வளமான வாழ்க்கை வேண்டுமென்றே எவரும்கூறிடும் உலகில்-வறுமையும் இல்லாத, செல்வமும் பெருகிடாத வாழ்க்கை தேவை என்று கூறிடும் திரு.வி.க.வின் பெருநோக்கை எண்ணி வியந்திடுவதுடன் -அவரது பொதுவுடைமை உள்ளத்தையும் காண்கிறோம்.

திரு.வி.க. அவர்கள் பொதுவுடைமைப் பூங்காவில் சிந்தனையை உலவவிட்டு, மனித வாழ்க்கையில் பணம் படைத்தோன், ஏழை மகன் என்ற நிலை இருக்கும் வரையில் சமத்துவம் தோன்றிட இயலாதென்பதைப் பலவாறு வலியுறுத்தியுள்ளார். ஒருபக்கம் இல்லாமை கோலோச்சும் போது ஒழுக்க நெறியை எவ்வாறு வற்புறுத்திட இயலும்? ஆகவே, அடிப்படைக் காரணமான இல்லாமையைப் போக்க முயலவேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

''இங்கே கொள்ளை அங்கே கொல்லல்
இங்கே 'பொய்ம்மை' என்று முழங்கல்
வீணே; மூலம் காண எழுக!
மூலங் களைந்தால் சீலம் சிறக்கும்;
ஒருபால் செல்வம் மறுபால் வறுமை
உள்ள இடங்களில் நல்ல ஒழுக்கம்
நிலவல் அரிதே! குலவல் அரிதே!
செல்வச் செருக்கும் அல்லல் வறுமையும்
வழுக்கல் நிகழ்த்தும்; ஒழுக்கம் கெடுக்கும்''.

சமுதாய ஏற்றத்தாழ்வுகள் போக்கப்பட வேண்டுமென்பதில் திரு.வி.க. காட்டும் நாட்டம், சமுதாய மறுமலர்ச்சிக்கு இடப்பட்ட வித்தாகும்.

திரு.வி.க. அவர்கள் தனது கொள்கை என்ன என்பது பற்றி *1949* ஆம் ஆண்டில் வ.உ.சிதம்பரனார் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது தெளிவுபடுத்தியுள்ளது நாம் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

''சிலர் நினைக்கிறார்கள். திரு.வி.க.வுக்கு ஒரு கட்சி கிடையாது. ஒரு கொள்கை கிடையாது-என்று. எனக்குக் கொள்கையுண்டு. என் கொள்கை என் கையில் இருக்கிறது. ஏழை மக்கள் கையில் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது. நான் சாதி, மத, நிற, மொழி, நாடு முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்தவன். பொதுமக்களின் சுய வாழ்வுதான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சையுடன் வாழ, உயர்ந்த எக்கட்சி பாடுபட்டாலும் அங்கெல்லாம் நான் போவேன், வருவேன், பாடுபடுவேன்.''

இதுதான் தமிழ்த் தென்றல் கடைப்பிடித்த கொள்கை. தனி மனிதனும் நாடும் உரிமையுடன் வாழ அவர் மேற்கொண்ட நோன்பு.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் ஒப்பரிய வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். தொண்டு செய்யும் வாழ்வே தூயவாழ்வெனக் கொண்டு வாழ்நாள் முழுவதும் அரிதின் முயன்று அயராது உழைத்திட்ட உத்தமர், திரு.வி.க; நாட்டுத் தொண்டு, பெண்கள் விடுதலைத் தொண்டு என்று அவர் ஆற்றிய பணிகள் பல்திறத்தன.

அவரது வாழ்வைச் சுருங்க உரைத்திட வேண்டுமெனில்புறப் பாடல் ஒன்றே அவரது வாழ்விற்கு உரையாகத் திகழ்கிறது.

**உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமிய ருண்டலும் இலரே; முனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர்; அஞ்சுவ தஞ்சிப்**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்**
**அன்ன மாட்சி யனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே**

இப்பூவுலகு அழிந்து ஒழியாமல் நிலைபெற்றிருக்கக் காரணம் என்ன? தன்னலம் கருதாத மேன்மக்கள் சிலர் வாழ்வதனாலே, இவ்வுலகு சிறப்புடன் திகழ்கிறது என்றார் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. ''இந்திரர் உண்ணும் அமுதமே கிடைத்தாலும் அதை இனியதென்று கருதித் தாமே தனித்து உண்ண மாட்டார்கள். சினம் அற்றவர்கள். மற்றவர்கள் அஞ்சும் செயலுக்கு தாமும் அஞ்சி வாளாது சோம்பியிருந்து வாழ்க்கையைக் கடத்த மாட்டார்கள். புகழுக்குரிய செயல் என்றால் உயிரையும் கொடுப்பார்கள். பழிவரும் செயல் என்றால் இவ்வுலகம் முழுவதுமே பெறுவதாக இருந்தாலும் மேற்கொள்ளமாட்டார்கள். அயர்வு என்பதை அறியார்கள். அத்தகைய மாண்புடைய மக்கள் உயர்ந்த பண்பாளர்களாவர். அவர்கள் தமக்கெனத் தன்னலம் கருதிக் காரியம் எதுவும் ஆற்றாது பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்புடையவராக இருப்பது, அவர்களின் பெருமைமிக்கதகுதிப்பாட்டிற்குக் காரணமாகும். இத்தகைய சான்றோர்களாலேயே சிறப்புடன் வாழ்கிறது இவ்வுலகம்'' என்ற புறநானூற்றுப் பாடலின் ஒவ்வொரு கருத்துக்கும்விளக்கமாகத் திகழ்ந்தவர், திரு.வி.க.

பொருளீட்டும் பணிகளை விடுத்து, தனித்த வாழ்க்கை மேற்கொண்டு, சமுதாயத்தின் நலனே பெரிதெனக் கொண்டு இறுதிவரை உழைத்தவர், தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. எந்த உதவியையும் பிறரிடம் பெறாது, உயரிய வாழ்க்கை நடத்தியவர். பிறரிடம் அன்பும் அளவற்ற கருணையும், பிறர் வாழ்விலும் வளத்திலும் நாட்டமும் கொண்டு நாடு போற்றும் வாழ்வை மேற்கொண்ட பெருமகனார் திரு.வி.க.



மகாகவி பாரதியாரின் நாட்டுத் தொண்டிலும் நாட்டுப் பற்றிலும் பெருமதிப்புக் கொண்டிருந்தார். ''தேச பக்தி இஃது என்னும் உண்மை கண்டவருள் பாரதியாரும் ஒருவர். செந்தமிழ்ப் பாக்களைப் பாடி அவர் தேசத்தின் கண்ணைத் திறந்தார். தேசத்தின் பல கலைகளாம் பயிர்களை வளர்க்கச் செய்யும் உரிமைப் பாடல்களாம் அருவி, பாரதி எனும் மலைவாயினின்றும் இழிந்தது'' என்று சொல்லுகிறார்.

பாட்டுத் திறத்தால் இவ்வுலகைப் பாலித்திடவந்த பாரதியாரின் சீரிய தொண்டை திரு.வி.க. பலவாறு பாராட்டி வந்ததுடன் அவரது தேசபக்திக் கனலின் சீற்றத்தை நாட்டு மக்கள் உணர்ந்திடச் செய்ய முயன்றார்.

பாரதியாரின் மீது திரு.வி.க. கொண்ட அன்பு போன்றே பாரதியாரும் திரு.வி.க.வின் தமிழ்ப் பேச்சில் மெய்மறந்து போயிருக்கிறார்.

ஒரு சமயம் திரு.வி.க. புதுவையில் சிலப்பதிகாரம் பற்றி விரிவுரை நிகழ்த்தினார். அச்சொற்பொழிவைக் கேட்க பாரதியாரும் பாரதிதாசனாரும் போயினர். பாரதியார் உள்ளம் பரவசம் அடைந்து பேச்சில் திளைத்தார்.

**புதுவையில் கலியாண**
**சுந்தரனார் ஆற்றியசொற்**
**பொழிவில் தூய**
**மதுவையுள்ளி மலர்தேக்கி**
**வண்டுகட்கு விருந்தாக்கி**
**மயக்கு தல்போல்**
**பொதுவினர்க்குச் சிலப்பதிகா**
**ரச்சுவையை நடையழகைப்**
**புகழும் போதில்**
**இதுவையோ பேச்சென்பேன்!**
**பாரதியார் கைகொட்டி**
**எழுவார் வீழ்வார் !**

என்று, பாரதியார் தமிழ் முனிவரின் பேச்சை ரசித்துக் கேட்ட காட்சியை அழகுபடக் கூறியுள்ளார் பாரதிதாசன.

இராமபிரான் வில்லை முறித்து விட்டார். இந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ஓடுகிறாள் தோழி நீலமாலை. சீதையைக் காண்கிறாள். ஆனால் சீதையின் பாதமலரை எப்போதும்போல் வணங்கவில்லை. மாறாக ஆடுகிறாள். பாடுகிறாள். மகிழ்வுப் பெருக்கில் ஆரவாரம் செய்கிறாள் என்று கரையிலா மகிழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவார் கம்பர். அந்தச் சேடியைப் போல், தமிழ்த் தென்றலின் பேச்சைக் கேட்டு ரசித்து பரவசமடைந்து பாரதி அளப்பிலா உவகைக் கடலில் மூழ்கியிருக்கிறார்.

''தேனருவி திரு.வி.க.
செந்தமிழ்ப் பேச்சும்
எழுத்தும்
இன்பத் தேனருவி''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியிருப்பது எவ்வளவு பொருத்தம் பாருங்களேன்!

திரு.வி.க அவர்கள் தமிழ் உணர்வில் மேம்பட்டு நின்ற பெருந்தகை எனினும் பரந்த நோக்கமும் தெளிந்த சிந்தனையும் பிறநாட்டு நல்லறிஞர் இலக்கியங்களைப் போற்றும் திறனும் கொண்டு திகழ்ந்தார்.

*1942*ஆம் ஆண்டு புரசைவாக்கத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் கம்பர் விழாவில் திரு.வி.க.

தலைமை ஏற்றார். கல்வியிற் பெரிய கம்பரின் காவியத்தை உலக இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பேசி அமர்ந்தார் திரு.வி.க. பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள், ''கம்பனைக் கம்பனாகவே பார்க்க வேண்டும்'' என்று குறிப்பிட்டு அமர்ந்தார்; திரு.வி.க. அவர்கள், 'இந்தவகையில் நான் ரா.பி. சே. அவர்களுடன் சேர விரும்பவில்லை. இலக்கியத்தை அணுகுவதில் உலகப் பார்வை வேண்டும்' என்று கூறி, சேக்ஸ்பியர், மில்டன், கதே ஆகிய மகாகவிஞர்களின் கருத்துக்களை அரைமணி நேரத்திற்கு எடுத்துச் சொல்லி-ரா.பி. சே. அவர்களுக்கு பதிலளித்தார் திரு.வி.க.

தமிழகத்தில் திரு.வி.க. வாழ்ந்த காலத்தில் அவர் பேச்சுக்கு இருந்த செல்வாக்கைப் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளதை நோக்குவோம்.—''அந்தக் காலத்தில் அவர் பேசுகிறார் என்றால் தான் கூட்டம் வரும். நாடெங்கும் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்தார். அந்தக் காலத்தில் தமிழில் பேசுவதற்கு ஆளே கிடையாது. திரு.வி.க. அவர்கள் தான் தமிழில் மிக அருமையாகப் பேசுவார். அவரை முன்மாதிரியாக வைத்து அவருடைய நடையில் பலர் பேசவேண்டும் என்கிற அளவுக்கு அவர் பேச்சில் மக்களுக்கு உணர்ச்சி உண்டாயிற்று.''

திரு.வி.க.வின் பேச்சு, மக்களைக் கவர்ந்த தன்மை புலப்பட இதைவிடச் சான்றும் வேண்டுமோ?

திரு.வி.க. மிகச் சிறந்த ஆங்கில அறிவு படைத்திருந்தார் என்பது, அண்ணல் காந்தியடிகளின் பேச்சை மொழிபெயர்த்துப் பாராட்டப் பட்டதிலிருந்து அறிந்து கொள்ள முடியும். 18.3.1919ல் முதன் முதலில் திரு.வி.க. காந்தியடிகளை அரக்கோணம் ரயிலடியில் சந்தித்தார். விஜயராகவாச்சாரியார் அளித்த அறிமுகக் கடிதத்தை அண்ணலிடம் தருகிறார்.

காந்தியடிகள் கேட்கிறார்-''நீங்கள் பட்டதாரியா?'' அதற்கு திரு.வி.க. பதிலளிக்கிறார்—

''யான் பட்டதாரியல்லன். எனது ஆங்கில அறிவுமொழி பெயர்ப்பளவில் பயன்பட்டு வருகிறது. தொழிலாளர் கூட்டங்களில் பெஸண்ட் அம்மையார், வாடியா முதலியோர் பேச்சுக்கள் என்னால் மொழிபெயர்க்கப் படும்.''

அண்ணல் கேட்கிறார்-''என் பேச்சை மொழி பெயர்ப்பீரோ?''

''தொழிலாளர் சார்பில் கூடும் கூட்டங்களில் யானே மொழி பெயர்ப்பாளனாக இருப்பேன்''-என்று கூறிப் பின்னர் காந்தியடிகளின் பாராட்டைப் பெற்றதுடன் திரு.வி.க.வை அண்ணல் காணும் போதெல்லாம் 'மொழி பெயர்ப்பாளரே' என்று அழைப்பது வழக்கமாகி விட்டது.

1943-ஆம் ஆண்டில் திரு.வி.க. அறுபது ஆண்டு நிரம்பப் பெற்ற போது, அவருக்கு மணி விழாக் காணும் முயற்சியில் ஈடுபட்ட நண்பர்களைத் தடுத்து, அச் செயலைக் கைவிடும்படி கூறினார்.

'கொண்டாட்டம் பேராணவமாகும். அவரவர் வாழ்த்திலே புகழுரைகள் பொங்கும். அவை நம் மனநிலையைக் குறைத்து விடுமோ?' என்று எண்ணி, மணி விழா நிகழ்ச்சியைக் கைவிடுமாறு பணித்தார். எனினும் மணி விழாக்காண முயல்பவர்களின் பேரார்வத்திற்கு இறுதியில் பணிந்தார்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர் நிலைப் பள்ளியில் 25.3.1943 முதல் ஐந்து நாட்கள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தொழிற் சங்கங்களும் மாதர் சங்கங்களும் சமய நிறுவனங்களும் கல்விக் கழகங்களும் அவரது மணிவிழாவைக் கொண்டாடி மகிழ்ந்தன.

மணிவிழாவிற்குப் பின்னர் பத்து ஆண்டுகள் வாழ்க்கையைத் தமது தமையனார் வீட்டில் தமக்கென்று ஒரு வீடும் இல்லாத நிலையில்-துறவிபோல்கழித்தார். காலுக்குச் செருப்பும் இல்லாது பல கூட்டங்களில் கலந்து கொண்டு அறிவுரை நல்கி வந்தார். அவரது எழுபதாம் ஆண்டு நிறைவு விழா 24.8.1953 முதல் 15.9.1953 வரையில் தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

பகலெல்லாம் கருத்துரைகள் வழங்குவதிலும் இரவில் சிந்தனை செய்வதிலும் எழுதுவதிலும் நேரம் கழிப்பார். உணவு சுருங்கி உறக்கம் இல்லாமையால் உடல் நலிவுற்றது. கண்பார்வை அற்றநிலையில் படுக்கையானார்.

திரு.வி.க. அவர்கள் இவ்வாறு நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோது, டாக்டர். மு.வ. உடனிருக்குங்கால், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் திரு.வி.க.வைக் காணச் சென்றார். அப்போது மு.வ. கூறினாராம். ''காலமெல்லாம் தமிழுக்குத் தொண்டு செய்துள்ள இந்தத் தமிழ் உடல் தங்கியிருக்க ஒரு சொந்த வீடு இல்லை. வாடகை வீடு. அதிலும் வீட்டைக் காலி செய்யுமாறு வீட்டுக்காரர், வழக்கறிஞர் மூலம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். நாமெல்லாம் சேர்ந்து நிதிதிரட்டி ஒரு வீடுவாங்கி வைப்பது நலம்'' என்று கூறினார். திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் உடனே வேண்டிய ஏற்பாடுகளை செய்தார். சில நாட்கள் சென்ற பின்னர் கருமுத்து தியாகராச செட்டியார் அவர்களிடமிருந்து கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. கருமுத்து அவர்கள் திரு.வி.க. அவர்களுக்கு அனுப்பியிருந்த பெருந்தொகைக்கான காசோலையைத் தமிழ்த்தென்றல் ஏற்க மறுத்துத் திருப்பி அனுப்பியதுடன் ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார். அதில் திரு.வி.க. குறிப்பிட்டிருந்தார்.—

''நான் வாழ்நாள் எல்லாம் செய்யாத ஒரு தவறை இக் கடைசி நாளில் செய்யும்படி என்னை வற்புறுத்த மாட்டீர்களென நம்புகிறேன்''

என்று உறுதியுடன் உதவியை மறுத்துவிட்டார் சீலர் திரு.வி.க.

உடல் மெலிந்து கண்பார்வை இழந்த நிலையில் புதிய வாடகை வீட்டில்-பழக்கப் படாத வீட்டில் படுத்த படுக்கையானார். தேவாரம், திருவாசகப் பாடல்களைக் கேட்டுக்கொண்டு துயரத்தை மறந்திருந்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொன்மைமிக்க தண்டமிழ் மண்ணில் ''தமிழ்! தமிழ்!'' என்றும் ''தமிழர்களே-விழித்தெழுங்கள்'' ''தமிழர்களே - விழித் தெழுங்கள்'' என்றும் ஓயாது ஒழியாது பாட்டிசைத்த இனிமைக் குயில் -1953 செப்டம்பர் 17ஆம் நாள் இரவு பாட்டிசைத்த முடியாது ஓய்ந்தது. தமிழ்நாடு தமிழ் முனிவரை இழந்தது.

வாழ்க திரு.வி.க.வின் புகழ்!

நன்றி: சென்னை வானொலி

புதுக்கோட்டை மாவட்டச் செய்திகள் அடுத்த இதழிலும் இடம் பெறும்

வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

85341



தமிழரசு
6 - 4 - 1983

Licence No. TN/MS(C) ...
பதிவு எண். M. 8676


# NIZAM

## PAPER AND BOARD MILLS LIMITED

MANUFACTURERS OF QUALITY PAPERS (PRINTING & WRITING)



*FACTORY:*

**Pullanviduthi**
**622 304**
**Alangudi Taluk,**
**Pudukkottai Dist.**

*REGISTERED OFFICE:*

Post Box No: 56
Old Palace Buildings
Pudukkottai 622 001
Phone: 2890.